
“சட்டமன்ற நாயகர் – கலைஞர்”

நூற்றாண்டு விழா

சிறப்பு மலர் – 2024





அய்யன் **திருவள்ளுவர்**


“நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.”

அதிகாரம் - 24 - புகழ்

துன்பங்களுக்கிடையேகூட அவற்றைத் தாங்கும் வலிமையால் தமது புகழை வளர்த்துக் கொள்வதும், தமது சாவிலும்கூடப் புகழை நிலை நாட்டுவதும் இயல்பான ஆற்றலுடையவருக்கே உரிய செயலாகும்.


— கலைஞர் அவர்கள் உரை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



“சட்டமன்ற நாயகர் - கலைஞர்”


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்

தமிழ்நாடு முதலமைச்சர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் தலைவர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு திரு. துரைமுருகன்

பேரவை முன்னவர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்

துணை முதலமைச்சர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

பேரவைத் துணைத் தலைவர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்

அரசுத் தலைமைக் கொறடா

(7-5-2021 முதல் 29-9-2024 வரை)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்

அரசுத் தலைமைக் கொறடா

(29-9-2024 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



திரு. எடப்பாடி கே. பழனிசாமி

எதிர்க்கட்சித் தலைவர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



முனைவர் கி. சீனிவாசன்

முதன்மைச் செயலாளர் சட்டமன்றப் பேரவை

‘சட்டமன்ற நாயகர்-கலைஞர்’ விழாக் குழு

தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் தலைவர்

இணைத் தலைவர்கள்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்

அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

திரு. ஆர். ஆவுடையப்பன்

முன்னாள் பேரவைத் தலைவர்

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்

தலைவர், மாநில சிறுபான்மையினர் ஆணையம் மற்றும்
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

திரு. சி. ஞானசேகரன்

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

திரு. ப. டில்லிதுரை

முன்னாள் பேரவைச் செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

முன்னாள் பேரவைச் செயலாளர்

திரு. DER. சுகுமார்

நிர்வாக ஆசிரியர், தினத்தந்தி

உறுப்பினர்–செயலர்

முனைவர் கி. சீனிவாசன்

முதன்மைச் செயலாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம்

“சட்டமன்ற நாயகர் – கலைஞர்”
நூற்றாண்டு விழா
சிறப்பு மலர் – 2024

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்க எண்
1.	அன்னைத் தமிழகத்தை ஐந்து முறை ஆண்டவர்	1
2.	முத்தமிழறிஞருக்கு தலைவர்களின் பாராட்டுரைகள்	2–6
3.	முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்று, உறுப்பினர் பதிவேட்டில் கையெழுத்திட்டது	7–8
4.	முக்கிய பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள்	
	மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்	9–10
	மாண்புமிகு திரு. ஓம் பிர்லா, மக்களவைத் தலைவர்	11
5.	**கட்டுரைகள் வழங்கியோர்**	
	மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்	13–19
	மாண்புமிகு திரு. பினராயி விஜயன், முதலமைச்சர், கேரளா	20–23
	மாண்புமிகு திரு. மு. அப்பாவு, பேரவைத் தலைவர்	24–26
	மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்	27–29

	மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்	30–32
	மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்	33–37
	மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்	38–39
	மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்	40–43
	மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்	44–46
	மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, பேரவைத் துணைத் தலைவர்	47–48
	முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா	49–52
	டாக்டர் எச்.வி. ஹண்டே, முன்னாள் அமைச்சர்	53–54
	திரு. ஆற்காடு நா. வீராசாமி, முன்னாள் அமைச்சர்	55–60
	திரு. பொன். முத்துராமலிங்கம், முன்னாள் அமைச்சர்	61–65
	திரு. மு. கண்ணப்பன், முன்னாள் அமைச்சர்	66–69
	திரு. தி. வேல்முருகன், சட்டமன்ற உறுப்பினர், தலைவர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி	70–75
	திரு. கி. பாரிமோகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	76–77
	பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	78–79
	திரு. அ. அசோகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	80–81
	திரு. எம். அப்பாத்துரை, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	82–83
	திரு. இராம. அருணகிரி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	84–87
	திரு. பால. ஆனந்தன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	88
	திரு. பி. இராசமாணிக்கம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	89–90
	திருமதி இரா. இராணி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	91

	திரு. சோ.மா. இராமச்சந்திரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	92–93
	டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	94–97
	டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	98–102
	திரு. மிசா. ஆர். கணேசன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	103–104
	திரு. எம். கந்தசாமி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	105–107
	திரு. S.V. கிருஷ்ணன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	108
	திரு. எஸ்.எஸ். குருசாமி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	109–110
	திரு. டி.எஸ்.ஏ. சிவப்பிரகாசம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	111–113
	திரு. எஸ்.வி. சேகர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	114–115
	திரு. சி. ஞானசேகரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	116–119
	திரு. எம். தமிமுன் அன்சாரி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	120–121
	திரு. அ. தமிழரசு, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	122–124
	திரு. சு. துரைசாமி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	125–127
	திரு. A. நாராயணன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	128–132
	திரு. எம்ஜிகே. நிஜாமுதீன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	133–135
	செல்வி பாலபாரதி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	136–138
	திரு. சா. பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	139–143
	திரு. இரா. பெர்னார்டு, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	144–147
	திரு. E. முத்துராமலிங்கம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	148–150
	திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	151–153
	திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	154–156
	திரு. N.R. ரெங்கராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	157–158

	திரு. கு. வடிவேல், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	159–160
	திரு. A.C.N. விஜயபாலன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	161–162
	திரு. மீ.அ. வைதியலிங்கம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்	163–165
	திரு. கே. சந்துரு, மேனாள் நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்	166–168
	திரு. பழ. நெடுமாறன், தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு	169–172
	திரு. கோ. விசுவநாதன், நிறுவனர் & வேந்தர், வி.ஐ.டி. பல்கலைக்கழகம், வேலூர்	173–176
	திரு. ப. திருமாவேலன், தலைமை செய்தி ஆசிரியர், கலைஞர் தொலைக்காட்சி	177–183
	திரு. நக்கீரன் கோபால், ஆசிரியர், நக்கீரன் இதழ்	184–187
	Thiru R. Bhagwan Singh, Former Executive Editor, Deccan Chronicle, Chennai	188–191
	Thiru Manoj Bhattacharya, General Secretary, Revolutionary Socialist Party	192–193
	முனைவர் கி. சீனிவாசன், முதன்மைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம்	194–197
	திரு. த. பா. டில்லி துரை, மேலான் செயலர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை	198–201
	திரு. மா. செல்வராஜ், சட்டப் பேரவை முன்னாள் செயலாளர்	202–205
	ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாயப் பரம்பரைத் தருமை ஆதீனம்	206–207
	பால பிரஜாபதி அடிகளார்	208–209
6.	**‘சட்டமன்ற நாயகர்–கலைஞர்’ விழாக் குழுமூலம் பள்ளிகள்/ கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சிகள் குறித்த ஒரு பார்வை**	210–222
7.	**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முக்கிய உரைகள்**	223–248

	சட்டமன்றத்தில் ஆற்றிய முதல் உரை – 4–5–1957	223–226
	சட்டமன்றப் பேரவையில் இந்திய விடுதலை வெள்ளி விழாவில் ஆற்றிய உரை – 14–8–1972	227–229
	புனித ஜார்ஜ் கோட்டையில் முதன்முதலில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை – 15–8–1974	230–233
	சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா–சட்டப் பேரவை வைர விழாவில் ஆற்றிய உரை – 14–7–1997	234–240
	புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில் சட்டமன்ற வரலாறு குறித்து ஆற்றிய உரை – 11–1–2010	241–248
8.	**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் ஆற்றிய முக்கிய உரைகள்**	249–257
	மேலவையில் ஆற்றிய முதல் உரை – 21–2–1969	249–251
	மேலவையில் ஆற்றிய இறுதி உரை – 13–5–1986	252–257
9.	**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட முக்கிய அரசினர் தனித் தீர்மானங்கள்**	258–266
	காவிரி நீர்த் தகராறுகளை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுதல் குறித்தும், மைசூர் அரசு தொடர்ந்து திட்டங்களை நிறைவேற்றுவதைத் தடை செய்வதன் அவசியம் குறித்தும் – 8–7–1971	258–263
	மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல் – 12–5–1989	264
	மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து – 16–4–1974	265
	கச்சத் தீவு பற்றி மத்திய அரசு இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்து திருத்தியமைக்க வேண்டுமென்பது குறித்து – 21–8–1974	266

10.	**சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய முக்கிய தீர்மானங்கள்/ சட்டங்கள் மற்றும் நிகழ்வுகள்**	**267–289**
	நான்காவது பேரவை (1967–1971)	267–268
	ஐந்தாவது பேரவை (1971–1976)	269–271
	ஒன்பதாவது பேரவை (1989–1991)	272–273
	பதினோராவது பேரவை (1996–2001)	274–278
	பதின்மூன்றாவது பேரவை (2006–2011)	279–289
11.	**சட்டமன்றப் பேரவை தொடர்பான முக்கிய நிகழ்வுகள்/ விழாக்கள்**	**290–295**
	இந்திய விடுதலை வெள்ளி விழா நிகழ்ச்சி – 14–8–1972	290
	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொன் விழா – 5–5–1989	291
	தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா, வைர விழா – 14–7–1997	292
	சட்டமன்றப் பேரவையில் கலைஞர் பொன் விழா – 11–5–2007 மற்றும் 12–5–2007	293–294
	சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் கலைஞர் திருவுருவப் படத் திறப்பு விழா – 2–8–2021	295
12.	**சட்டப் பேரவையில் கலைஞர்–பொன்விழா – முக்கிய உரைகள்**	**296–319**
	மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னலா அவர்களின் சிறப்புரை – 11–5–2007	296–300
	முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏற்புரை – 11–5–2007	301–306
	மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களின் சிறப்புரை – 12–5–2007	307–313
	முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏற்புரை – 12–5–2007	314–319
13.	**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக பதவி வகித்த அமைச்சரவை பட்டியல்/ புகைப்படங்கள்**	**320–332**


	நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின் 6–3–1967 மற்றும் 10–2–1969 அன்று அமைந்த அமைச்சரவை (1967–1971)	320–322
	ஐந்தாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 15–3–1971 அன்று அமைந்த அமைச்சரவை (1971–1976)	323–324
	ஒன்பதாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 27–1–1989 அன்று அமைந்த அமைச்சரவை (1989–1991)	325–326
	பதினோராவது பொதுத் தேர்தலுக்குப் பின் 13–5–1996 அன்று அமைந்த அமைச்சரவை (1996–2001)	327–329
	பதின்மூன்றாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 13–5–2006 அன்று அமைந்த அமைச்சரவை (2006–2011)	330–332
14.	பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (முதலாவது பேரவை முதல் பதினைந்தாவது பேரவை வரை)	333–383
15.	பதினாறாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 7–5–2021 அன்று அமைந்த அமைச்சரவை (2021–2026)	384
16.	பதினாறாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 14–12–2022 அன்று அமைந்த அமைச்சரவை (2021–2026)	385–388
17.	பதினாறாவது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (27–5–2024 அன்றுள்ளவாறு)	389–391
18.	பதினாறாவது சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய முக்கிய தீர்மானங்கள்/ சட்டங்கள் மற்றும் நிகழ்வுகள்	392–404
19.	சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா – 2–8–2021	405
	மேதகு குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்கள் உரை	406–409
	மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உரை	410–413
20.	சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்ட திருவுருவப் படங்கள்	414–418
21.	சட்டமன்றப் பேரவை நடைபெற்ற இடங்கள் (புகைப்படங்களுடன்)	419–425

22.	**மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் முக்கிய சட்டமன்ற உரைகள்**	426–527
	சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய முதல் உரை – 1–4–1989	426–430
	அமைச்சராக ஆற்றிய முதல் உரை – 11–8–2006	431–463
	துணை முதலமைச்சராக ஆற்றிய முதல் உரை – 29–6–2009	464–490
	எதிர்க்கட்சித் தலைவராக ஆற்றிய முதல் உரை – 3–6–2016	491–494
	முதலமைச்சராக ஆற்றிய முதல் உரை – 12–5–2021	495–501
	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் ஆற்றிய பதிலுரை – 24–6–2021	502–519
	முதலமைச்சராக முதன்முதலில் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரை – 15–8–2021	520–530
23.	**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முக்கிய உரைகள்**	531–562
	சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய முதல் உரை – 18–8–2021	531–546
	அமைச்சராக ஆற்றிய முதல் உரை – 30–3–2023	547–562
24.	**வரவு–செலவுத் திட்டம் – மானியக் கோரிக்கைகள்மீது விவாதம்**	563–570
25.	**டிஜிட்டல் தமிழ்நாடு சட்டமன்றம்**	571–577
	காகிதமில்லா சட்டமன்றம்	571–574
	சட்டமன்றப் பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு	575–576
	சட்டமன்ற ஆவணங்களின் மின்னுருவாக்கம்	577
26.	**சென்னை அரசு மைய அச்சகத்திற்கு வாழ்த்துகள்**	578
27.	**நன்றி**	579

அன்னைத் தமிழகத்தை ஐந்து முறை ஆண்டவர்



















முத்தமிழறிஞருக்கு தலைவர்களின் பாராட்டுரைகள்

குடியரசுத் தலைவர்கள்

திரு. சஞ்சீவ ரெட்டி

கலைஞர் கருணாநிதி துணிச்சலானவர்

திரு. கியானி ஜெயில் சிங்

திறமைக்கும், வேகத்திற்கும், அன்புக்கும், அருளுக்கும், நல்ல நிர்வாகத் திறமைக்கும், பிரச்சினைகளை அணுகுவதற்கும் உரிய ஒரு மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க மனிதர் கலைஞர் கருணாநிதி.

திரு. வி.வி. கிரி

கருணாநிதியின் திறமையான நிர்வாகத்தின்கீழ் தமிழ்நாட்டு அரசாங்கம் மக்களுக்கு முன்னேற்றத்தையும், செழுமையையும் தரும்.

திரு. சங்கர் தயாள் சர்மா

டாக்டர் கருணாநிதி அவர்கள் தமிழ் இலக்கியத்தின் சிரஞ்சீவி. அவரை முத்தமிழ் அறிஞர் என்று பட்டம் சூட்டி அழைக்கலாம்.

திரு. ஆர். வெங்கட்ராமன்

அரசியலில் இலக்கியத்தை இணைத்து இரண்டிலும் புகழ் பெற்றவர். அரசியல்வாதிகளும், கலைஞர்களும் மதிக்கத்தக்க அளவுக்கு உள்ளவர். நல்ல சேவை மனப்பான்மை கொண்டவர். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நண்பர்களோடு பழகுவதில் இனிய சுபாவமுடையவர்.

திரு. ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்

ஓர் அறிஞர். ஒரு கவிஞர். இரண்டும் இணைந்தவர் கலைஞர்.

திரு. கே.ஆர். நாராயணன்

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை கைதூக்கி விட இட ஒதுக்கீடு, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை என்பன

போன்ற எண்ணிறந்த சட்டங்களை நிறைவேற்றி தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரது கொள்கைகளுக்கு வலிவு சேர்க்கும் விதமாய் கலைஞர் அவர்கள் ஆற்றி வரும் பணிகள் மிகுந்த சிறப்புக்குரியவை.

திருமதி பிரதிபா பாட்டில்

கலைஞர் கருணாநிதி சிறந்த கவிஞர். பன்முகத்திறன் படைத்த எழுத்தாளர். ஆட்சி வல்லுநர்.

பிரதமர்கள்

திருமதி இந்திராகாந்தி

தி.மு.கழகத்தின் தலைவர் கருணாநிதி அவர்கள், நண்பராக இருந்தாலும், விரோதியாக இருந்தாலும் இரண்டிலும் உறுதியாக இருப்பவர்.

திரு. சரண்சிங்


திரு. அண்ணாதுரை உருவாக்கிய உயர்ந்த மரபுகளைப் புகழத்தக்க விதத்தில் திரு. கருணாநிதி கையாண்டு வெற்றியும் பெற்றுள்ளார்.

திரு. வி.பி. சிங்

எனக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் என் பக்கத்தில் இருந்து கலைஞர் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். தனது ஆட்சியைப் பற்றிக்கூடப் பொருட்படுத்தாமல் ஒரு கொள்கைக்காக இலட்சியத்திற்காக என்னோடு ஒன்றுபட்டிருக்கிறார்.

திரு. தேவேகவுடா

தமிழகத்துக்கான நிதி, திட்டங்களைக் கூடுதலாகப் பெறுவதில் கலைஞர் அதிக அக்கறை காட்டுவார். வி.பி. சிங், குஜ்ரால், வாஜ்பாய், மன்மோகன்சிங் எல்லோரிடமுமே தமிழகத்துக்கான திட்டங்களைப் பெறுவதில் அவர் அழுத்தம் கொடுத்தார் என்பது எனக்குத் தெரியும். இதனால்தான், ஒரு கட்டத்தில் வட இந்திய ஊடகங்கள் 'இந்தியாவின் தலைநகரம் இப்போது டெல்லி அல்ல; சென்னை' என்றெல்லாம் எழுதின.







திரு. ஐ.கே. குஜ்ரால்

தமிழ் மக்கள் இந்தியாவில் ஒரு பகுதியில் மட்டும் வாழ்பவர்கள் அல்ல–உலகமெங்கும் வாழ்கிறார்கள். அந்தத் தமிழர்கள் டாக்டர் கலைஞர் அவர்களுடைய எழுத்துகளை, திரைப்படங்களை ரசித்து மகிழ்கின்றார்கள்; போற்றிப் புகழ்கின்றார்கள்.

திரு. ஏ.பி. வாஜ்பாய்

கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள், மக்கள் தொண்டில்–குறிப்பாக நமது சமுதாயத்தின் நலிந்த பிரிவினரை முன்னேற்றுவதற்காகத் தம் வாழ்வைத் தந்துள்ளார். இந்த நலிந்த பிரிவு மக்கள் சமூக, பொருளாதார அரசியல் துறைகளில் எழுச்சி பெறுவதற்காகப் போராடும் ஒரு மாபெரும் வெற்றி வீரர்!

திரு. மன்மோகன்சிங்

இந்திய நாட்டின் வரலாற்றிலும் தமிழ்நாட்டின் வரலாற்றிலும் கலைஞர் அவர்களின் பெயர் பொன்னெழுத்துகளால் நிரந்தரமாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.

ஆளுநர்கள்

திரு. கே.கே. ஷா

அரசியல்வாதிகள் இடையில் மறைந்து விடலாம். ஆனால், எழுத்தாளராக–மனிதத் தன்மை உள்ளவராக இருக்கும் கருணாநிதி, என்ன நேர்ந்தாலும் சரித்திரத்திலிருந்து மறைய மாட்டார்.

திரு. சி. சுப்பிரமணியம்

அரசியல் மட்டுமின்றி, கலைத் துறையில் மட்டுமின்றி, நிர்வாகத் துறையிலும் கலைஞர் சிறந்து விளங்குபவர். இந்திய துணைக் கண்டத்தில் ஒரு எடுத்துக்காட்டான தலைவராகத் திகழ்கிறார்.

திரு. கோபாலகிருஷ்ணகாந்தி

கருணாநிதியின் அரசியல், அண்ணாவின் அரசியலை அடியொற்றியதாக அமைந்தது. ஏழைகளுக்கு ஆதரவான, விவசாயிகளுக்கு ஆதரவான, சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதியத்துக்கும், மதவாதத்துக்கும் எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது அந்த அரசியல். தேசிய அரசியல் சதுரங்கத்தால் தவிர்க்கவே முடியாதவராகத் திகழ்ந்த ராஜதந்திரி கருணாநிதி.

திரு. சுர்ஜித்சிங் பர்னாலா

திரு. முத்துவேல் கருணாநிதி அவர்கள் இந்திய அரசியலில் அருகிக் காணப்படும் பன்முகத் திறன்கள் கொண்ட தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர். கலைஞர் முதலமைச்சராக–நலிந்த பிரிவு மக்களை எண்ணி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

திரு. பி.சி. அலெக்சாண்டர்

புலமை செறிந்த அறிஞர். மிகச் சிறந்த பேச்சாளர். இனிய பாணியில் எழுதும் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர். எளிய சமுதாயத்தினருக்காக அரை நூற்றாண்டுக்கும் மேலாக இடையறாது பணியாற்றி வருபவர். மிகச் சிறந்த நிர்வாகி. விரைந்து முடிவெடுக்கும் திறமை படைத்தவர். அவருடன் பணியாற்றுவது மிகபெரிய பேறு.

திரு. சென்னாரெட்டி

இந்தியாவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலைஞரைப்போலச் செயல்பட்டால் நாடு நன்றாக இருக்கும். தேசிய ஒருமைப்பாடு வளரும்.

செல்வி பாத்திமா பீவி

புகழொளி பரப்பும் தமிழக முதலமைச்சர் கலைஞர் எவரும் வெற்றிகொள்ள முடியாத ஒரு சமூகச் சீர்திருத்தவாதி; ஆற்றல்மிகு எழுத்தாளர். சொல்லேருழுவர், ஆட்சிக்கலையில் மிகச் சிறந்த நிர்வாகி, அவர்தம் வாழ்வை பல்வேறு சாதனைகளும், பெருமைகளும் அணி செய்கின்றன.

ஆளுமைகள்

மூதறிஞர் ராஜாஜி

கலைஞர் கருணாநிதி முழுக்க முழுக்க அரசியல்வாதி, இலக்கியவாதி, பத்திரிகைக்காரர். தமிழ்நாட்டின் எதிர்காலம் இந்தப் பிள்ளையாண்டான் (கலைஞர்) கையிலிருக்கிறது

பெருந்தலைவர் காமராசர்

கருணாநிதி என்னைப் போலவே பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்தவர். அவர் இல்லாவிட்டால் இந்த சமுதாயத்திற்கு வேறு யார் இருக்கிறார்கள்?

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண்

தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், உடனுக்குடன் துணிகரமாக நீண்ட காலப் பயனளிக்கக் கூடிய முடிவுகளை எடுக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்.

திரு. வினோபா பாவே

அண்ணாதுரையின் கருத்துக்கு மாறாக திரு. கருணாநிதி ஒருபொழுதும் நாட்டை நடத்திச் செல்ல மாட்டார். ஏனெனில் அவர் பெயரே கருணையும் நிதியும் சேர்ந்தது.

எல்லைக்காந்தி திரு. கான் அப்துல் கபார்கான்

இறைவனுக்குப் பிடித்த பணிகளைச் செய்து வருபவர் கருணாநிதி.

திரு. பாபு ஜெகஜீவன்ராம்

திரு. கருணாநிதி அவர்கள் எந்த நாற்காலியில் அமருகிறாரோ அதன் காரணமாக அந்தப் பதவி நாற்காலிக்குப் பெருமை கிடைக்கும். அத்தகைய மனிதர்தான் கருணாநிதி.

திரு. எம். பக்தவச்சலம்

கலைஞர் கருணாநிதியின் அரசியல் வாழ்க்கை தி.மு.கழகத்தின் தொடர்போடுதான் தொடங்கியது. ஆனால், அவருடைய சிறிய வயதில் தானாகவே உழைத்துத் தம்முடைய ஆற்றலிலேதான் அவர் முன்னுக்கு வந்தார். அவரது ஆற்றலை அவரது இளமைக் காலத்திலேயே நான் பார்த்தேன்.


எம்.ஜி.ஆர்.

பேரறிஞர் அண்ணா இருந்த இடத்தில் அமர்ந்து, அண்ணா வகித்த பொறுப்பினை ஏற்று, அண்ணா வழியில் நடந்து அவர் ஆளாக்கி விட்ட இளவல் அருமைச் சகோதரர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சோடை போகமாட்டார். சொக்கத்தங்கமெனப் பிரகாசிப்பார்







என்று நாடும் நாமும் எதிர்பார்த்ததை கலைஞர் நிரூபித்து வருகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன்

தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றங்காண்!
திருவாரூரின் புலி இளைஞர் காண்!

நாமக்கல் கவிஞர்

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை
உயிரெனக் காக்கும் ஒரு பெரும் பக்தன்

பேராசிரியர் சி. இலக்குவனார்.

முன்னேற்றக் கழகத்தின் முடிசூடா மன்னன் நீ
இன்னினிய பலநூல்கள் எழுதுகின்ற அறிஞன் நீ
பன்னரிய நாடகங்கள் பரவுகின்ற நடிகன் நீ
கன்னல் எனும் நற்பாக்கள் கட்டுரைக்கும் புலவன் நீ!

புலவர் ச. தண்டபாணி தேசிகர்
(கலைஞரின் ஆசிரியர்)

தமிழினம் எங்கு துன்புற்றாலும், மொழியும் தமிழரும் எங்கு துன்புற்றாலும் ஓடிப்போய் அபயம் நல்கும் தலைவராக இருக்கிறார் கலைஞர்.

டாக்டர் மு. வரதராசனார்

தமிழ்ச் சமுதாயத்தின் தனிநிதி அனையவன்
தமிழ்த் தொண்டாற்றலில் தலைமைச் சான்றோன்
தமிழ் மேடைகளில் தலைமை ஏற்போன்
தமிழ் வரலாற்றில் தனிமகிழ் கொள்வோன்

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

திருக்குறளின் செயல் திறன் கலைஞர். கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைசிறந்து விளங்குவதற்குக் காரணம் அவர் திருக்குறளைப் படித்திருப்பதனால்தான்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

ஒரு போர் வீரருக்குரிய மனத்திண்மையும் மதிநுட்பமும் கலைஞர் கருணாநிதி பெற்றிருக்கிறார். அத்துடன் ஒரு சிறந்த ராஜதந்திரிக்குரிய அடக்கத்தையும் ஆழ்ந்து சிந்திக்கும் திறமையையும் பெற்றிருக்கிறார்.

கவியரசு கண்ணதாசன்

நிதான புத்தி நேரிய பார்வை
நின்று கண்டறிந்து நெடுவழி செல்லல்
சதாவதானத் தனிப்பெரும் திறமை
தன்னையறிந்து பிறர் உள்ளம் நோக்கல்
நதியென ஓடி நாளெல்லாம் உழைத்தல்
நாடும் மக்களும் நலம்பெற நினைத்தல்.

குன்றக்குடி அடிகளார்

வள்ளுவன் நெறியும் அண்ணா நெறியும்
வாழும் வகைக்கிரு கால்களாம் என்றே
கொண்ட கொண்டல் கொழிதமிழ்க் கலைஞர்
புதிய புறநானூற்றைப் படைக்கும் புரவலர்!

திரு. எம். கல்யாணசுந்தரம்

கலைஞர் கருணாநிதி தமது அரசியல் வாழ்க்கையில் செல்வாக்கின் உச்சியை எட்டிப் பிடித்துள்ளார். துன்பத்தின் எல்லையையும் அடைந்துள்ளார். துன்பத்தை அனுபவிக்க நேரும்போது துவண்டுவிடாமல் கட்சியைக் காப்பாற்ற அவர் காட்டிய மனோபலமும் துணிச்சலும் வியப்பைத் தருவதாகும்.

திரு. ஆர். நல்லக்கண்ணு


சிலர் தீவிர கிளர்ச்சிக்காரர்களாக இருந்திருக்கலாம். ஆனால் நிர்வாகத் திறமை இருக்காது. சிலர் சிறந்த நிர்வாகியாக இருப்பார்கள். மக்களைப் புரியாத வெறும் அதிகாரிகளாக இருப்பார்கள். கலைஞர் மக்களின் நாடிபிடித்துப் பார்த்து மக்களையும் தமது கட்சி நடத்தும் இயக்கங்களில் ஈடுபடுத்தும் திறன் படைத்தவர்.

தியாகி செங்கல்வராயன்


டாக்டர் கலைஞருடன் 50 ஆண்டு காலமாக நன்றாகப் பழகி வந்திருக்கிறேன், மாறுபட்ட கருத்துக்கள் மட்டுமல்ல வேறுபட்ட கட்சிகள் சார்ந்து இருந்தாலும் அவருடைய சீரிய பண்புகள் குணங்கள், அரசியல் போக்கு காரணமாகப் போற்றுகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்று, உறுப்பினர் பதிவேட்டில் கையெழுத்திட்டது


29-4-1957




29-3-1962




15-3-1967




22-3-1971




4-7-1977



19-6-1980




23-4-1984




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


6–2–1989




6–2–1996




23–5–2001




17–5–2006



30–5–2011



25–5–2016



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

10.06.2024

வாழ்த்துச் செய்தி

தலைவர் கலைஞரின் குரல் கேட்கிறது!

எத்திசையும் போற்றும், எக்காலமும் போற்றும் தலைவர் கலைஞருக்கு இது நூற்றாண்டு நிறைவு விழா ஆண்டு. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், தலைவர்களிலே முதல்வர்; முதல்வர்களிலே தலைவர்; கவிஞர்களுக்கெல்லாம் கலைஞர்; நவீனத் தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி; இந்த பூமிப்பந்தில் வாழும் தமிழருக்கெல்லாம் குடும்பத் தலைவர்; இந்திய நாடே அண்ணாந்து பார்த்த அரசியல் ஞானியாகத் திகழ்ந்தவர். இத்தகைய சாதனைத் தலைவர் கலைஞர். அவரை ஒரு சிமிழுக்குள் அடக்க முடியாது. பன்முக ஆற்றல் கொண்ட திறன்மிகு ஆளுமை அவர். தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடெங்கும் 2023 ஜூன் 3–ஆம் நாளன்று தொடங்கி, கடந்த ஓராண்டு முழுவதும் தமிழ்நாடு அரசின் சார்பில் நடத்தினோம்.

தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள் தலைமையில் "சட்டமன்ற நாயகர்–கலைஞர்" என்ற குழு அமைக்கப்பட்டது. ஐந்து முறை பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு ஆட்சி செலுத்தியவர் தலைவர் கலைஞர். 13 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கலைஞர். நின்ற தேர்தல்கள் அனைத்திலும் வென்றவர் அவரைப் போல இந்தியாவில் இல்லை என்று சொல்லத்தக்க வெற்றி வீரர் கலைஞர். தமிழ்நாட்டில் அதிக ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் கலைஞர். அதிகக் கோப்புகளில் கையெழுத்திட்டவர். அதிகமான திட்டங்களை, சட்டங்களை, சாதனைகளைச் செய்தவர். சட்டமேலவை உறுப்பினராகவும் இருந்தார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். 1957 முதல் 2018 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பணிகளோடும் – ஆட்சி நிர்வாகத் தொடர்புகளோடும் இருந்தவர் கலைஞர். இந்தச் சிறப்புகளைக் கொண்டாடும் குழுவாக 'சட்டமன்ற நாயகர் – கலைஞர்' குழு அமைக்கப்பட்டது.

அக்குழுவினர் மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, "நூற்றாண்டு நாயகர் கலைஞர் – சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் கருத்தரங்கங்கள் நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுத் தொகைகளும் வழங்கிச் சிறப்பித்தனர் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தகைய கருத்தரங்குகள் மூலம் மாணவ, மாணவியரின் பேச்சாற்றல், எழுத்தாற்றல், அவர்களது தனித்திறமை, நமது அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த தெளிவு

போன்ற விஷயங்கள் அனைவரும் பாராட்டத்தக்க அளவிற்கு வெளிப்பட்டன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய கருத்தரங்குகள் மிகச் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த இக்குழுவின் உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் அனைவருக்கும் நான் மனமார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற நாயகராய் என்றென்றும் நம் மனதில் நிலைத்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பணியை எடுத்தியம்பும் வகையில், சட்டமன்ற நாயகர்– கலைஞர் குழுவின் சார்பில் வெளியிடப்படும் இந்த மலரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பணியினைப் பாராட்டியும், நினைவுகூர்ந்தும், அவரோடு பயணித்த அமைச்சர்கள், பேரவை, மேலவை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள், ஆன்மீக ஆளுமைகள் – ஆகியோரின் கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரியது ஆகும்.

கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய முக்கிய உரைகள், அவர் நிறைவேற்றிய முக்கியச் சட்டங்கள், திட்டங்கள் மற்றும் சட்டமன்ற முக்கிய நிகழ்வுகள் குறித்த விவரங்களும் இடம்பெற்றிருப்பதும் சிறப்புக்குரிய ஒன்று. இவை தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வருங்காலத் தலைமுறையினருக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கண்கவர் வண்ணத்திலும், மிகுந்த பயனுள்ளதாகவும் இம்மலர் வெளிவர அடித்தளம் அமைத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், விழாக் குழுவினர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அலுவலர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் ஒவ்வொரு பக்கத்தையும் திருப்பும்போது, சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்களோடு பணியாற்றிய காலங்கள் என் நினைவுகளில் நிழலாடுகின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் தலைவர் கலைஞர் அவர்களது குரல் ஒலிப்பதை உணர்கிறேன். அறிவும், உணர்வும், வரலாறும், அரசியலும், ஆளுமைத் திறனும் கொண்டதாக இந்த மலர் அமைந்துள்ளதை உணர்ந்து மகிழ்கிறேன்.

அன்புடன்,



(மு.க.ஸ்டாலின்)

सत्यमेव जयते

अध्यक्ष, लोक सभा
SPEAKER, LOK SABHA
INDIA

MESSAGE

I am pleased to learn that the Tamil Nadu Legislative Assembly is bringing out a souvenir to commemorate the Centenary Celebrations of the veteran Legislator and former Chief Minister of Tamil Nadu, Dr. Kalaignar M. Karunanidhi.

Dr. Karunanidhi was a towering figure in Tamil Nadu's political landscape, who dedicated his entire life to the welfare of the people of the state. His remarkable contributions left an indelible mark on the history of Tamil Nadu.

I hope that this publication will vividly portray his vision, leadership and lasting impact on Tamil Nadu, inspiring people for generations to come. This tribute is a fitting homage to his extraordinary life and numerous accomplishments.

I wish the publication of souvenir all success.

(Om Birla)



சட்டமன்ற நாயகர்–கலைஞர் ஒரு கலங்கரை விளக்கம்

திரு. மு.க. ஸ்டாலின்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல; இந்திய அரசியல் வரலாற்றிலேயே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் போன்று பொது வாழ்வில் சளைக்காமல் உழைத்து, சாதனைகள் பல படைத்த தலைவரைக் காண்பதரிது. நம் இதயத் துடிப்பாகவும், குருதி ஓட்டமாகவும் இருந்து, ஒவ்வொரு நாளும் நம்மை இயக்கிக் கொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், தாம் களமாடிய இடமெல்லாம் தமிழர் தம் நலம் நாடியே வாழ்ந்திருந்தார். நாடகம், திரைக்களம், அரசியல் களம் என எதுவாக இருந்தாலும், தமிழினம், தமிழ் மொழி, தமிழர் நலம் இவையே அவர் நெஞ்சில், நினைவில் என்றென்றும் நிலைத்தோங்கி இருந்தது. பல்வேறு தளங்களில் அவர் இயங்கினாலும், அரசியல் களத்தின் மூலமாகவே சமுதாய மாற்றங்களை முன்னெடுக்க முடியும் என்பதையுணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், தான் நம்பியதை நடத்தியும் காட்டிய பெருமைக்குரியவர்.

நூற்றாண்டு விழா:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பாதையில் பயணிக்கும் நமது அரசும், சாதனைத் திட்டங்களை நாளும் நாளும் படைத்து, **'எல்லார்க்கும் எல்லாம்'** என்ற கருத்தியலை அடிப்படையாக வைத்து, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது. சாதனைத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வண்ணம், தமிழ்நாடெங்கும் 2023 ஜூன் 3 ஆம் நாளன்று தொடங்கி, கடந்த ஓராண்டு முழுவதும் பல்வேறு சாதனைத் திட்டங்களாலும், மக்களுக்குப் பயனளிக்கும் செயல்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்" என்ற அரசியல் இலக்கணத்தை வகுத்துத் தந்து, ஆட்சி நெறியை உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, பொதுக் கூட்டங்கள், கருத்தரங்குகள், பேச்சுப் போட்டிகள், கண்காட்சிகள் என பல்வேறு வடிவில் மாநிலமெங்கும் கொண்டாடப்பட்டன.

சமூகநீதி, மத நல்லிணக்கம், எளிய மக்களின் வாழ்வுரிமை, மாநில சுயாட்சி, ஆதிக்க மொழிகளிடமிருந்து தாய்மொழியைப் பாதுகாத்தல், இந்தியாவிற்கே முன்னோடியான திட்டங்கள் என்ற தன் எண்ணங்களை செயல்களால் நிறைவேற்றிக் காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட சாதனைத் தலைவர், சட்டமன்ற நாயகர்–கலைஞர்

அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆற்றிய அரும்பணிகள் பாராட்டுக்குரியவை; வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

தேர்தல் வெற்றிச் சாதனைகள்:

முதன்முதலாக தேர்தல் களம் கண்ட 1957 முதல், இறுதியாக தேர்தல் களம் கண்ட 2016 வரை, 13 சட்டமன்றத் தேர்தல்களில் தொடர் வெற்றியைப் பெற்ற இந்திய அரசியல் தலைவர் கலைஞர் அவர்கள் மட்டுமே. 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர்; அளப்பரிய திட்டங்கள்; இந்தியாவிற்கே முன்னோடியான சாதனைகள்; இந்திய அரசியலில் முக்கியப் பங்காற்றி, பல குடியரசுத் தலைவர்களையும், பிரதமர்களையும் தேர்ந்தெடுக்கத் துணை நின்ற அரசியல் ஆளுமை. இத்தனை திறமைகளும், இவ்வளவு சாதனைகளும் ஒருங்கே பெற்ற ஒரே தலைவர் நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் காலத்தால் அழியாத காவியமாக, நம் வழிகாட்டியாக நிலைத்திருக்கிறார்.

கலைஞர் எனும் இந்த முத்தமிழ், மூத்த தமிழ், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கன்னித் தமிழாய்க் காலடி எடுத்து வைத்த நாள்தான் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் வைரநாள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் என்றென்றும் மறக்கமுடியாத கலைஞர் அவர்களது உரைகள், நிறைவேற்றிய திட்டங்கள், எப்படி ஆளும் அரசுகளுக்கு வழிகாட்டியாக திகழ்கிறதோ, அதுபோல தமிழ்நாடு சட்டமன்றத்திலும் அவரது திருவுருவப்படம், அங்கு அமர்ந்திருக்கும் உறுப்பினர்களுக்கும், எதிர்காலத்தில் அங்கு அமரப்போகும் உறுப்பினர்களுக்கும் நல்ஆசானாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

சட்டமன்றத்தில் கலைஞர்:

தலைவர் கலைஞர் அவர்களுடைய பொது வாழ்விலும், அரசியல் பணியிலும், ஜனநாயகக் கடமை ஆற்றுவதிலும், சட்டப் பேரவைப் பணி முக்கியப் பங்கு ஆற்றியிருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. சட்டமன்றத்தில் விவாதிப்பதிலும், விடையளிப்பதிலும், மாநிலத்தின் உரிமைகளைக் காப்பதிலும் அனைவரையும்விட மேம்பட்டவராகவே தன் வாழ்நாள் முழுதும் விளங்கினார் அவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எத்தனையோ அனல் பறக்கும் வாதங்களை சட்டமன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறார்; இயக்கத்தின்மீது சுமத்தப்படும் அவதூறுகளுக்கு ஆணித்தரமாக பதில் அளித்திருக்கிறார்; அவர்மீது கோபத்துடன் வீசப்பட்ட கணைகளுக்கு புன்சிரிப்புடன் நகைச்சுவையாகப் பதில் தந்திருக்கிறார். இத்தகைய பெருமைகள் வாய்ந்த அவரை சட்டமன்ற நாயகர் என்று அழைப்பது சாலப் பொருந்தும்.

முதன்முதலில் வெற்றிபெற்ற குளித்தலை தொகுதியைச் சேர்ந்த **நங்கவரம் உழவர்களின் உரிமைப் போராட்டத்தில்** அவர்களுடன் நேரடியாகக் களத்தில் பங்கேற்றதுடன், அது

தொடர்பாக சட்டமன்றத்தில் குரல் கொடுத்து ஆட்சியாளர்களின் கவனத்தை அதன்பக்கம் திருப்பியவர் கலைஞர் அவர்கள். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையிலும் ஆளுங்கட்சி வரிசையிலும் மாறி மாறி அமர்ந்தபோதும், தன் சிந்தனையால், சொல்லால், செயல்திறத்தால் சட்டமன்ற வரலாற்றில் தனித்துவமான முத்திரைகளைப் பதித்தவர். எதிர்க்கட்சியாக இருந்தால், ஆளுந்தரப்பின் கவனத்திற்கே வராமல் இருக்கும் மக்கள் பிரச்சினைகளை முன்வைப்பதும், ஆளுங்கட்சியாக இருந்தால் மக்களின் கோரிக்கைக்கு முன்பாகவே அவர்களின் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதும் தலைவர் கலைஞர் அவர்களின் தனிச்சிறப்பு. அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் பொதுப் பணித் துறை–போக்குவரத்துத் துறைக்கு அமைச்சராக தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

வரலாற்றுச் சாதனைகள்:

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு கட்சியும் ஆட்சியும் அவரது தோளில் சுமத்தப்பட்ட நிலையில், குடிசைமாற்று வாரியம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, கை ரிக்ஷா ஒழிப்பு, கண்ணொளித் திட்டம், தொழுநோய் மறுவாழ்வு இல்லம் என பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தினார். ஆட்சி செய்யும் வாய்ப்பு அவருக்கு வாய்த்த காலங்களில் பெண்களுக்கான சொத்துரிமை, சமத்துவபுரம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கான சட்டம், 69% இட ஒதுக்கீடு, சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு, அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு, ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கட்டணமில்லாத் தொழிற்கல்வி, நுழைவுத் தேர்வு ரத்து, மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென தனித் துறை, திருநங்கைகளுக்குத் தனி வாரியம், விவசாயிகளின் பயிர்க் கடன் முழுவதும் தள்ளுபடி என அனைத்துத் தரப்பு மக்களின் உரிமைகளையும் நிலைநாட்டும் திட்டங்களைச் செயல்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

வழிகாட்டும் பேராசான்:

தமிழ்நாடு சட்டமன்றத்தில் திருவுருவப் படங்களாக வீற்றிருக்கும் தலைவர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் போன்ற பெருமக்களுக்கெல்லாம் நினைவு மண்டபங்கள், நினைவிடங்கள் கட்டி வரலாறு படைத்ததோடு மட்டுமல்லாமல், பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள முக்கியமான அரசுக் கட்டடங்களுக்கு, தமிழறிஞர்களின் மற்றும் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி அவர்களுக்கெல்லாம் பெருமை சேர்த்தவர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கலைஞரின் சட்டமன்றப் பணி என்பது மகத்தான ஒன்று; மற்ற உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய ஒரு சட்டமன்றப் பிதாமகர் அவர். அடுத்த

தலைமுறையினருக்கும் வழிகாட்டியாகத் திகழும் அவர், 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் மக்களுக்காக ஆற்றிய மகத்தான உரைகள், பன்னிரெண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டு காலத்தால் அழியாத கல்வெட்டுகளாக இன்றைக்கும் நிலைத்து நிற்கின்றன. பன்முகத் திறமைகள் பெற்று, பார் போற்றும் புகழ்பெற்ற தலைவராக விளங்கிய கலைஞர் அவர்களின் திறமைகளில் ஒளிவீசும் அகல்விளக்காய் விளங்கிக் கொண்டிருப்பது சட்டமன்றப் பணி என்பதை யாரும் மறுத்திட முடியாது. கலைஞரின் அரசியல் சிந்தனைகள், சட்டமன்றப் பணிகள் ஏழையெளியோர்க்கு ஏற்றம் தரும் ஏணிகளாயின. உழைத்துழைத்து உருக்குலைந்த போதும், ஒப்பற்ற தமிழினத்திற்காக உயிரனைய வாழ்ந்து வந்த அத்திருமகனார்க்கு தமிழ்நாடு சட்டப் பேரவையில் பொன்விழா கொண்டாடப்பட்ட நிகழ்வு இன்றைக்கும் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

கலைஞரின் சொல்லாட்சி:

மக்களுக்குப் பணியாற்றும் ஒரு சிறந்த சட்டமன்றம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்கள் குறிப்பிடும்போது, "சட்டமன்றம்–நெஞ்சம் இடித்துரைக்கும் நீதியினை மறந்துவிட்டுச் சொல்லம்புகளைத் தொடுத்துக் களித்திடும் வில்பயிற்சிக் கூடமல்ல; விளையாட்டரங்கமல்ல. எரிந்த கட்சி, எரியாத கட்சி பேசிடும் வேடிக்கை மேடையல்ல. ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ– எதனைச் சார்ந்திட்ட போதிலும், பொது மக்கள் நலனைக் காத்திடும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்களால், பொறுப்புள்ள கருத்துகளை, பொருத்தமான சொற்களை, பொறுப்போடு பேசவேண்டிய பொறுப்பு மிகுந்த இடமே சட்டமன்றம்" என்று பளிச்சென வார்த்தைகளால் பதிவு செய்திருந்ததை, இன்றைக்கு அவர் அடியொற்றி நடக்கும் நாங்கள் மனதிலே நிறுத்தி, சட்டமன்றப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

கலைஞர் அவர்கள் பன்முகத் திறன் பெற்றவர் என்பதை அனைவரும் அறிவர். அவரது சட்டமன்றப் பணியைப் பற்றி அறிந்துகொள்ளும் வகையில், எதிர்கால சமுதாயத்திற்குச் சட்டமன்றக் குறிப்பேடுகள் சரித்திரப் பொன்னேடுகளாக இருந்து வருகின்றன என்றால் மிகையல்ல. சட்டமன்றத்தில் சுவையாக, சுருக்கமாக, ஆழமாக, அளவாக, சாதுர்யமாக சங்கிலித் தொடர்போல் காலங்கருதிப் பேசத் தலைப்படுதல் வேண்டும் என்கிற சட்டமன்ற வித்தைகளை அழகாகக் கற்றுத் தேர்ந்தவர் கலைஞர் அவர்கள். அரிய, பெரிய கருத்துகளையெல்லாம் குறளைப்போல் கூறி விளக்குவதில் வல்லவர் அவர். சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சியளிக்கும் சட்டமன்றப் பல்கலைக்கழகமாக கலைஞர் அவர்கள் திகழ்ந்து வந்துள்ளார். கொள்கைத் தெளிவும், நினைவாற்றலும், புள்ளிவிவரங்களுடன்

துல்லியமாக விடையளித்தலும் அவரின் இயல்பான அடிப்படை குணங்கள் என்பதால், எவரும் அவரிடத்தில் சொல்வலை வீசி வெற்றி மீன்களைப் பிடித்துவிட இயலாது.

'மாட்டுக்கு மூக்கணாங்கயிறு எப்படி அவசியமோ, ஆற்றுக்கு அணை எப்படி அவசியமோ, காருக்குப் பிரேக் எப்படி அவசியமோ, அதுபோல ஓர் ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சி அவசியம்' என்றார் பேரறிஞர் அண்ணா. ஆளுங்கட்சியின் தவறுகளை எடுத்துக்காட்டும் விதத்தில் எதிர்க்கட்சியிலிருந்தபோது கலைஞர் அவர்கள் தமது வாதத்திறமையினால் பேச்சில் வலிமை காட்டி, ஆட்சியின் தவறுகளைத் திருத்த உதவியுள்ளார். எதிர்க்கட்சிகளைப் பற்றி எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடுவதும், அலட்சியப்படுத்துவதும் எந்தக் காலத்திலும் ஓர் ஆளுங்கட்சியின் இலக்கணமாக அமைந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர் கலைஞர் அவர்கள்.

கலைஞரின் மாண்பு:

கலைஞர் இலக்கியத் துறையிலும், நிருவாகத் துறையிலும் எப்படி நிமிர்ந்து நின்றாரோ, அதைப்போல் சட்டமன்றப் பணிகளில் வல்லாண்மை மிக்கவராக வழிகாட்டுவதுடன், எங்கேயும் அவர் இடறி விழுந்ததில்லை. ஆளும் அதிகாரம் கிடைத்தது என்பதற்காகக் கலைஞரிடத்தில் ஒருபோதும் அதிகார போதை ஏறியதில்லை. தாம் ஆளுங்கட்சி வரிசையில் முதலமைச்சராக இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் சட்டமன்ற மாண்புகளைக் காத்திட்டவர் கலைஞர் அவர்கள்.

நான் சட்டமன்றத்தில் உறுப்பினராக நுழைந்த காலந்தொட்டே, தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்றப் பணிகளைக் கண்டு வியந்திருக்கிறேன்; அவை நடவடிக்கைகளில் உறுப்பினர் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை ஒரு மாணவனைப் போல அவரிடமிருந்து நான் கற்றிருக்கிறேன். சட்டமன்றத்தில் விவாதங்களில் கலந்துகொண்டு பேசும் நேரங்களிலெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள், அதற்கான உரையைத் தயாரிப்பதில், அதிகாரிகளோடு கலந்துபேசி விவரங்களைத் தெரிந்துகொள்வதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வார். தான் தயாரித்து வைத்திருக்கும் அனைத்தையும் அவையில் பேசிவிடமாட்டார். அவையின் நேரத்தையும், தேவையையும் கருதி, பேசி சுவையேற்றி உரையை முடிப்பதில் கைதேர்ந்தவர் அவர். சட்டமன்றத்திற்குப் போவதற்கு முன்பு தன்னை முழுமையாக தயார் செய்து கொள்வார் அவர். நான் அமைச்சராக, துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில், சட்டமன்றத்தை ஒருபோதும் இலேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று எனக்கு அறிவுரை வழங்குவார். சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் உரையாற்றுகையில், அதைக் குறித்து வைத்துக்கொண்டு உடனுக்குடன் பதிலளிக்க வேண்டும் அல்லது அந்தக் குறையை சரிசெய்ய வேண்டும்; சட்டமன்ற நடவடிக்கைகளில் குறிப்பிட்ட

நேரத்திற்கே வந்து அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு அறிவுரை வழங்குவார். உறுப்பினர்கள் யாராவது குறை சொல்லிப் பேசினால், அதைக் குறித்துக்கொண்டு உடனே சரிசெய்ய வேண்டும்; கோபப்படக் கூடாது என்பார். எதிர்க்கட்சி உறுப்பினர் யாராவது தரக்குறைவாகவோ, இடித்துரைத்தோ பேசினால், "எதிர்க்கட்சிக்காரங்க நம்மை இந்திரன் சந்திரன் என்றா பாராட்டுவாங்க! கோமாளி, ஏமாளி, வெட்டிப்பய என்றுதான் பேசுவாங்க. ஜனநாயகத்தில் அதெல்லாம் அனுமதிக்கப்பட்டதுதான்" என்று சொல்வார்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

இது வள்ளுவருடைய வாக்கு. கேட்போரைக் கவரும் தன்மையுடைதாகவும், கேட்காதவரும் தேடிவந்து விரும்பிக் கேட்கக் கூடியதாகவும் அமைவதே சொல்வன்மை எனப்படும் என்பதே இதன் பொருளாகும். இந்தக் கருத்திற்குப் பொருத்தமானவர் கலைஞர் அவர்கள். ஏனெனில், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினர் எதிரிக்கட்சியாக மாறி சொற்கற்களை வீசிய போதெல்லாம், அவர்கள்மீது கலைஞர் பூக்களைத்தான் வீசியிருக்கிறார். கசப்பாக மாறியவர்க்குத் தம் கனித்தமிழ்ச் சொற்கொண்டு கற்கண்டாக இனித்திருக்கிறார். புயலாகச் சீறிய தோழர்கட்கெல்லாம் பூந்தென்றலாகக் குளிர்ச்சியூட்டியிருக்கிறார் என்பதனை சட்டமன்றக் குறிப்பேடுகள்மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். ஆலயங்களுக்குள் அனைவரும் வரலாம் என்பது பற்றி கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசியபோது, "கோவிலுக்கே செல்லாத கலைஞர் இதைப்பற்றிப் பேசலாமா?" என்று காங்கிரஸ் உறுப்பினர் அனந்தநாயகி கேட்டபோது, "கொலை செய்தவர்கள்தான் கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்பது இல்லை. வாதாடுபவர்களும் கோர்ட்டுக்குப் போகலாம்" என்று சொல்லி வாயடைக்க வைத்தவர் அவர்.


கலைஞர் அவர்களின் சட்டமன்ற உரைகளில் நகைச்சுவைக்கு என்றைக்கும் பஞ்சம் இருந்ததில்லை. இடைத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக சட்டமன்றத்தில் பேசிய ஆளுந்தரப்பு உறுப்பினர், "சிலர் திருச்செந்தூர் வரை நடைபயணம் சென்றார்கள். ஆனால் இடைத்தேர்தல் வெற்றியின்மூலம் திருச்செந்தூர் முருகனே எங்கள் பக்கம்தான் இருக்கிறார் என்பது தெரிந்துவிட்டது" என்றார். அதற்கு பதிலளித்த தலைவர் கலைஞர் அவர்கள், "முருகனின் வேல் மட்டும்தான் காணாமல் போனது என்று நினைத்தோம். முருகனே காணாமல் போய்விட்டார் என்பது இப்போது தெரிகிறது" என்று பதிலளித்து ஆளுந்தரப்பினரையும் சிரிக்க வைத்தார். சட்டப் பேரவையில் மட்டுமின்றி, சட்ட மேலவையிலும் உறுப்பினராக இருந்த சிறப்பு தலைவர் கலைஞர் அவர்களுக்குண்டு. எந்த அவையில் இருந்தாலும் அவருடைய சட்டமன்றப்

பணிகள் மக்கள் நலன் சார்ந்தும், ஜனநாயகத்தின் மாண்புகளை மதிக்கும் வகையிலும் இருக்கும்.

கொள்கைகளைக் காத்தவர்:

அதேபோன்று, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, எண்ணங்களை நிறைவேற்றும் விதத்தில் கலைஞர் சட்டமன்றத்தை சாதனைக் கூடமாக்கிக் காட்டினார். 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்ற தத்துவத்தை வலியுறுத்தி, இராஜமன்னார் கமிஷன் பரிந்துரைகள்மீது ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியவர் கலைஞர் அவர்கள். அவர் தமது ஆட்சியில் அளித்த நிதிநிலை அறிக்கைகள் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி. தொழில்வளத்தில் பொருளாதாரத்தைப் பூத்துக்குலுங்க வைத்துள்ளார். 'ஆலயத்தில் அனைவரும் அர்ச்சகராகலாம்' என்று சட்டம் கொண்டு வந்து தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் விதத்தில் நிறைவேற்றினார். அவரின் சாதனைப் பூக்களை நூலில் சரமாகத் தொடுக்கவியலாது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு ஊன்றுகோலாக இருந்து, அளப்பரிய சாதனைகளை நிகழ்த்த சட்டமன்றத்தைப் பயன்படுத்தி சரிதம் படைத்தவர்தாம் முத்தமிழறிஞர் கலைஞர்.

கலைஞர் அவர்கள் தமது இறுதி மூச்சுவரை மற்ற எல்லாத் துறைகளிலும் வரலாறு படைத்து வந்ததைப் போல, சட்டமன்றப் பங்களிப்பிலும் சிறந்த உத்திகளையும் தன் பங்களிப்பையும் செலுத்தி இன்றைக்கும், என்றைக்கும் சட்டமன்ற நாயகராக நம் மனதில் நடைபோடுகிறார்.



கலைஞர் புகழ் வாழ்க! கன்னித்தமிழ் புகழ் வாழ்க!!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

Kalaignar Karunanidhi : Defender of Social Justice and Federal Structure

Pinarayi Vijayan

It is indeed in the fitness of things that the birth centenary of Kalaignar Karunanidhi is being celebrated and that a Special Souvenir is being released to commemorate it. It is a matter of great privilege for me personally, to pen down a few thoughts about Karunanidhi in this Souvenir.

What sets Karunanidhi apart from many other political leaders was that he was able to combine the ideas of both his predecessors - Periyar and Anna - the stalwarts of Dravidian politics before him and carry it forward to further heights of social relevance. His interventions upholding social justice and the federal structure of our country are clear markers of the lineage of thoughts he imbibed and developed. Only a statesman of extraordinary caliber of Karunanidhi's stature could intertwine them both.

Even though his primary arena of intervention was Tamil Nadu, his initiatives left their imprints across the country, paving the way for Indian society's development as a whole. His exceptional oratorical skill combined with his administrative acumen made him special to the marginalised and dispossessed. That is where his true mettle was reflected, thus leaving an indelible imprint on Indian democracy.

As I mentioned, Karunanidhi's extraordinary statesmanship was evident in how he combined his struggle for social justice and his struggle to maintain India's federal structure. The beauty of it lies in the fact that he was able to present Dravidian politics - which upheld the ideas of self respect, both for individuals and for the entire Dravidian culture - as an integral part of the Republic of India. To me, that is his greatest contribution to modern India.

As we celebrate his centenary, I think it would be appropriate to highlight a few of his initiatives - which serve as models for the rest of us even today. In 1944, even at the very young age of 20, when conservatives organised a Varnashrama Conference in Chidamabaram, Karunanidhi wrote an obituary and a requiem to celebrate the death of Varnashrama. This bend towards social justice which was evident from his early age, was prevalent all through his later life.

The bifurcation of Backward Caste Reservation to make special allocation for

Most Backward Castes and the reservation he ensured for minorities in the State as part of the Backward Caste reservation need special mention. It was the Karunanidhi Government which took a leaf from a passing reference by the Supreme Court on 50% cap in reservations in education and employment - in the Balaji case - and accordingly, pushed the reservations in Tamil Nadu to 50%.

Karunanidhi's commitment to social justice is even more prominent in his interventions for the scheduled caste communities in the State. It is well known that elections for the scheduled caste reserved seats in Pappapatti and Keeripatti villages could not be properly conducted since 1996. It was only ten years later in 2006, after sustained struggles conducted by the left and progressive forces in the state and with the support of the newly formed DMK Government under Karunanidhi, that panchayat leaders from scheduled caste communities could get elected there.

Far more transformative was his approval in 2009, of the long term demand of the Arunthathiyars spearheaded by the left, to provide a sub-quota within the scheduled caste reservation. It enabled one of the most extremely discriminated communities in the state to enter the mainstream. Just before the sub-quota was granted, in 2008 only 17 medical and 681 engineering seats were occupied by this community. However, with the sub-quota which came into effect in 2009, 86 medical seats and 4000 engineering seats were occupied by students of the community. Kalaignar's single act created such a drastic social change.

Understanding the importance of settlements in structuring caste relations, Karunanidhi attempted to bring various castes together through Samathuvapurams - habitations of equality - by providing housing for the economically weaker sections belonging to different castes and religions.

The fact that it was Karunanidhi who enabled the elevation of a district judge from the scheduled caste community as a judge in the High Court of Tamil Nadu - making him the first scheduled caste judge of a High Court in India - needs to be stressed. Subsequently, the very same judge went on to become the first scheduled caste judge in the Supreme Court of India.

The LDF Government in Kerala has implemented a radical decision to appoint, non-

brahmins including dalits as priests in temples under the Dewaswom Boards in Kerala. But, as far back as 1970, during Karunanidhi's Chief Ministership, a bill was passed in Tamil Nadu to enable non-brahmins to become 'archakars' or priests in temples. When the bill was opposed in courts and the honourable Supreme Court opined that aspirants have to be well-versed in the performance of worship and rituals, it was the DMK Government under Karunanidhi in 2006, that established training centres to train 'archakars' from all castes.

A product of the Dravidian Movement, Karunanidhi could never overlook the self-respect movement, which was an integral part of it. It was reflected in his efforts to realise social justice, no doubt. But, to me, it was all the more evident in his administrative measures to empower women. He passed an amendment to Hindu Succession Act that ensured equal property rights for female children. Before this amendment, daughters enjoyed property rights only until they got married. In 1989 The Hindu Succession (Tamil Nadu Amendment) Act was passed providing equal rights for women in their fathers' property. It needs to be noted that this law was amended to this effect at the national level much later, only in 2005.

To ensure that girls get at least early education, Karunanidhi announced a grant of Rs. 5,000 for the marriage of girls from poor families who have completed 8th standard. He also announced free education for Dalit girls upto graduation level. The fact that he progressively altered the man-woman ratio in Tamil Nadu's Government sector by reserving 30% for women in government employment in the State, needs special mention.

Staying true to his commitment to the marginalised and the oppressed, Karunanidhi pioneered the setting up of a board for disabled persons. His job wasn't over with just that, he went on to donate his remuneration from two films as funding for the board. He also instituted a board for the transgender community in the State, a radical initiative at that time.

Karunanidhi instituted a Leprosy Rehabilitation Centre, provided free education for the first graduate in the family, distributed 5 kilograms of rice free of cost to the poor households - a first in the country, introduced free electricity to farmers - which was also a first in the country in 1990 and set up a Slum Rehabilitation Board - another first in India.

He nationalised the bus transport system in the State, set up Small Industries Development Corporation and State Industries Promotion Corporation - both synonymous with the industrial development of Tamil Nadu, developed the IT corridor in Chennai and so on. All these moves are pointers to the comprehensive

efforts Karunanidhi spearheaded for the overall development of Tamil Nadu and Tamilians. There was no area, which he left untouched.

Karunanidhi also played an extraordinary role as a fighter for democratic rights, especially during the emergency and had to suffer major political losses despite the fact that Tamil Nadu was one of the states that were least affected by the emergency. He steadfastly defended those who sought refuge from the clutches of the Centre, including prominent socialist leaders of that time.

To me, this is in continuation to his efforts from much earlier on, in defense of the Republic of India and its federal structure. The fact that Karunanidhi opposed the demands for a separate Dravida Nadu, and reaffirmed Tamil Nadu's position as an integral part of the Indian Republic - along with Anna - is a reflection of how far he would go to defend India and its Constitution.

In a sense, it was the unequivocal condemnation of separatist demands, by the likes of Karunanidhi that ensured that no further separatist demands could arise in those early days of the Indian Republic. That did not mean that, he would allow the various nationalities in India to be subdued, when ideas such as Hindi Nationalism were pushed.

Karunanidhi stood strongly in defence of India's multiple cultures and languages. I believe that we are at a juncture, when ideas such as autonomous States - which Kalaignar stood for - should be revisited, to ensure that India retains its strong federal character, where the States are content.

Karunanidhi left us at a time when Indian politics is at crossroads. At a time when we need to go all out to unite secular and progressive forces, for a transformational shift in Indian politics, his departure has left a huge void. He was a fighter all through his life. Even in his death he fought those who tried to belittle his legacy, and won.

As we celebrate his birth centenary, let Kalaignar Karunanidhi's memory be a guiding light for all those who strive to defend the federal and secular traditions of our country, cutting across the lines of gender, language, culture, caste and religion. It would ensure that our unity in diversity is upheld.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சமூக நீதி காத்த தலைவர் கலைஞர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு,
பேரவைத் தலைவர், சட்டமன்றப் பேரவை.

தமிழ், மொழி, கலை, இலக்கியம், அரசியல், நிர்வாகம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் தனக்கென தனி முத்திரை பதித்தவர்தான் பன்முகத் தன்மையுடைய தலைவர் கலைஞர் அவர்கள். தமிழகம், இந்தியா மற்றும் உலக வரலாற்றை எழுதினால், அதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் யாரும் எழுத முடியாது. அந்த அளவுக்கு கடந்த 50 ஆண்டுகளில் இந்திய அரசியலில் ஒரு சிறந்த தலைவராக கோலோச்சியவர் கலைஞர். 1957 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தான் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளார். 1984 ஆம் ஆண்டில் சட்ட மேலவை உறுப்பினராகவும் பணியாற்றிய மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழகத்தில் ஐந்து முறை முதலமைச்சராக சிறப்பாக பணியாற்றிய பெருமைக்குரியவர்.

1996 ஆம் ஆண்டு தேர்தலில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றிபெற்று, சட்டமன்றத்திற்கு முதன்முறையாக சென்றபோது, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களோடு பணியாற்றிய காலத்தில் நடைபெற்ற ஓரிரு நிகழ்வுகளை நினைவுகூர விரும்புகிறேன்.

1979 ஆம் ஆண்டு, மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு வகித்தபோது, 10 பணியிடங்களுக்கு குறைவான பணியிடங்கள் ஒரு துறையில் காலியாக இருந்தால், இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்றாமல் அந்த துறையே காலிப் பணியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்று 11-1-1979 அன்று வெளியிடப்பட்டிருந்த அரசாணை குறித்து, 11-5-1999 ஆம் நாளன்று, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் தொடர்பான மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில், எனது கருத்துக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்தபோது, அவர், அருகிலுள்ள மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் கல்வி அமைச்சரான பேராசிரியர் அவர்களின் காதினில் ஏதோ சொன்னார். நான் பேசி, நான்கு மாதங்களுக்குள்ளாகவே, இட ஒதுக்கீட்டுக்கு எதிராக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசாணையை இரத்து செய்தும், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார ரீதியிலான இட ஒதுக்கீட்டு முறையை எதிர்த்து,

தமிழகம் முழுவதும் போராடி, அதை நடைமுறைப்படுத்தவிடாமல் தடுத்த பெருமை மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு.

அதுமட்டுமல்லாமல், அரசுப் பணியிடங்களில், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை 11–5–2000 ஆம் நாளன்று பேரவையில் வைக்கப்பட்டு, 16–5–2000 அன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் விவாதத்தில் பங்கேற்று, தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தனர். இறுதியாக, எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பு வகித்த மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள், மேற்படி வெள்ளை அறிக்கையில் அவர் பேச வேண்டிய வாய்ப்பை எனக்கு வழங்கினார். நான், இதுகுறித்து, பல கருத்துக்களை அவையில் எடுத்து வைத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், எனது கருத்துகளுக்கு பதிலளிக்கையில் "தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்களின் கையைப் பிடித்துத் தூக்க வேண்டும், அதற்காக முன்னேறிய சமுதாயத்தின் காலைப் பிடித்து இழுக்கக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றுகின்ற சமூக நீதிக் கொள்கையாகும். இந்தக் கொள்கை இன்று, நேற்று அல்ல; நீண்ட நெடுங்காலமாக நான் தலைமை ஏற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன்." என்று சமூக அக்கறையோடு, அனைத்து சமூக மக்களின் நலன் காக்கும் வகையில் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் பதிலளித்தார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், 1971 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதம் என்றும், பொதுப் போட்டியினருக்கு 51 சதவிகிதம் என்றும் உயர்த்தப்பட்டது. மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி ஒதுக்கீடு வேண்டுமென்ற பல ஆண்டுகளாக இருந்த கோரிக்கையை ஏற்று, மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதம் என்றும் இட ஒதுக்கீட்டிற்கான சட்டத்தையும் கொண்டுவந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

1969 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான தனி அமைச்சகமும், 1989 ஆம் ஆண்டில், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கென்று தனி இயக்ககமும், 2000 ஆம் ஆண்டில் பழங்குடியினர்களுக்கான நல இயக்ககமும் தோற்றுவிக்கப்பட்டதும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான்.

கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளுக்கான நியமனங்களிலும், பதவிகளிலும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீட்டினையும், அருந்ததியினர்களுக்குப்

பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டாக 3 சதவிகித இட ஒதுக்கீட்டினையும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் சட்டமன்றத்தில் சட்டம் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தினார்.

ஜாதி, மத, இன வேறுபாடு இல்லாமலும், ஏன்? ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமலும், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலகங்ளிலும் வசிக்கும் அனைத்து சமுதாய மக்களின், சமூக நீதியை நிலைநிறுத்த வித்திட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழர்களின் நலனுக்காக பல்வேறு சட்டங்களை அவர் இயற்றிய இந்த அவையில், எனக்கு பேரவைத் தலைவராக பணியாற்ற வாய்ப்பு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் அதே வழியை பின்பற்றி, பல்வேறு சட்டங்களின்மூலம் அனைத்து சமுதாய மக்களின் சமூக நீதியை நிலை நாட்டி வருகிறார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தமிழக முதலமைச்சர் முன்னெடுக்கும் சமூக நீதி திராவிட மாடல் ஆட்சிதான் இந்தியா கூட்டணியினுடைய கொள்கையாக, தேர்தல் வாக்குறுதியாக இந்தியா முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருப்பது, தமிழுக்கும், தமிழர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பெருமையை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

தலைவர் கலைஞரின் புகழ் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்திருக்கும்!

மாண்புமிகு திரு. துரைமுருகன்,
நீர்வளத் துறை அமைச்சர்.

என் தலைவர் – என் ஆசான் – என் வழிகாட்டி – அரசியல் மாமேதை – சமூக நீதி நாயகர் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா!

என் அரசியல் வாழ்வின் உயிராகத் திகழ்ந்தவர் தலைவர் கலைஞர்!

இன்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் தலைவர் கலைஞர் அவர்களை எண்ணியபடியே வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!

கழகத்தின் தலைவர்–திராவிட நாயகர் தளபதி அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாட ஆணையிட்டு 12 குழுக்களை அமைத்துக் கொண்டாடச் செய்திருக்கிறார்கள்!

"பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர்" எனும் தலைப்பில் கொண்டாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த விழாவை வேலூர் மாநகரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடிச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டோம்!

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு மு. அப்பாவு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு "சட்டமன்ற நாயகர் கலைஞர்" எனும் தலைப்பில் கொண்டாடிச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடுகிறது!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகம் தேர்தலில் நிற்கத் தொடங்கிய 1957 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 13 முறை சட்டப் பேரவை தேர்தலில் போட்டியிட்டு–13 முறையும் வென்று, தோல்வி என்பதையே காணாத மகத்தான தலைவராகத் திகழ்ந்தவர்!

"சட்டமன்றம் என்பது நெஞ்சம் இடித்துரைக்கும் நீதியினை மறந்துவிட்டுச் சொல்லம்புகளைத் தொடுத்துக் களித்திடும் வில்பயிற்சிக் கூடமல்ல, விளையாட்டரங்கமல்ல, வேடிக்கை மேடையும் அல்ல! ஆளும் கட்சியோ–எதிர்க்கட்சியோ எதனைச் சார்ந்திட்ட போதிலும், பொதுமக்கள் நலனைக் காத்திடும் பொறுப்புள்ள கருத்துகளை பொருத்தமான சொற்களில் பொறுப்போடு பேச வேண்டிய பொறுப்பு மிகுந்த இடமே சட்டமன்றம்!" என நெஞ்சுக்கு நீதியில் எழுதி–சட்டமன்றம் என்றால் என்ன? அங்கு எப்படிப் பேச வேண்டும் என எல்லோர்க்கும் கற்றுக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

ஒரு முறை, ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி மூன்றாந்தர ஆட்சி என்று கூறிவிட்டார். உடனே எழுந்த முதலமைச்சர் கலைஞர் "தவறு, இது மூன்றாந்தர அரசு அல்ல, இது நாலாந்தர அரசு, தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவது போல

பிராமண, சத்திரிய, வைஷ்ய, சூத்திர என்ற வரிசையில் நான்காவதாக உள்ள சூத்திரர்களின் அரசு, சூத்திரர்களுக்காகவே நடைபெறும் அரசு" என்று கூறிப் பேரவையையே மிரள வைத்தவர் தலைவர் கலைஞர்!

1973 ஆம் ஆண்டில் அன்றைய பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய, கே. ஏ. மதியழகன் (1972–ல் தி.மு.க.–விலிருந்து வெளியேறி அ.தி.மு.க.–வில் இணைந்த உறுப்பினர்) அவர்கள் "கலைஞர் அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய தலைவர் கலைஞர் அவர்கள், "என்னுடைய அருமை நண்பர் மதியழகன் அவர்கள் நான் தான் இவரை முதலமைச்சராக முன்மொழிந்தேன், இப்போது நானே அவரை வெளியேறச் சொல்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

திருமணத்திற்கு நான் தான் புரோகிதத்திற்கு வந்தேன். ஆகவே இப்போது நான் உத்தரவிடுகிறேன் நீங்கள் விவாகரத்து செய்து கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு எப்படிப் புரோகிதருக்கு உரிமை இல்லையோ, அதைப்போலவே கட்சிக் கூட்டத்தில் என்னை முதலமைச்சராக இருக்க வேண்டுமென்று முன்மொழிந்த ஒரே ஒரு காரணத்திற்காக இப்போது என்னை வெளியேறச் சொல்கிற உரிமை இல்லை என்று நாகரிகமாக மதியழகன் அவர்களின் கருத்தை கலைஞர் மறுத்தவிதம் நயமானது!

மற்றொரு முறை, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 1975–ல் நெருக்கடி நிலை பிறப்பித்தபோது, அதைக் கண்டித்து இந்தியாவிலேயே முதன் முதலாகக் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றிய மாவீரர் முத்தமிழறிஞர் கலைஞர்!

அதுகுறித்து, 30–10–1975 அன்று பேரவையில் பேசிய அ.தி.மு.க. உறுப்பினர் விருதுநகரைச் சேர்ந்த திரு. பெ. சீனிவாசன், "நெருக்கடி நிலைமை வந்தவுடனே நீங்கள் கடற்கரையிலே, பொதுக்கூட்டத்திலே, செயற்குழுவிலே தீர்மானம் போடாமல் இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து கண்டித்திருக்கலாமே" என்று பேசினார்.

உடனே எழுந்து அவருக்குப் பதிலுரைத்த முத்தமிழறிஞர் கலைஞர் "போர்வீரனுக்குத் தெரியும் எந்தக் கையிலே வாள் வைப்பது, எந்தக் கையிலே கேடயம் வைப்பது" என்று கூறி கேள்வி கேட்டவரைத் தலைகுனிய வைத்தவர்!

இப்படி, விவாதங்களின்போது சரியான உவமைகளை நறுக்கென்றுக் கூறி, கேட்பவர் மனதில் சுருக்கெனத் தைத்திடச் செய்யும் தலைவர் கலைஞரின் நாவன்மையை அனைவரும் அறிவர்!


இப்படி தன் ஆட்சியே போனாலும் பரவாயில்லை–அண்ணா கற்றுத் தந்த

ஜனநாயகத்தைக் காப்பதே தன் முதல் அரசியல் கடமை என வாழ்நாளின் இறுதிவரை நிலைநாட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

தலைவர் கலைஞர் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் எத்தனை இன்னல்கள் ஏற்பட்டாலும், முத்தமிழறிஞர் கலைஞர் போல் சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை காத்து வெற்றி மாலை சூடுவது உறுதி!

சட்டமன்ற நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் வாழ்கிறோம்!

தலைவர் கலைஞரின் புகழ் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்திருக்கும்!



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

வாழ்க சட்டமன்ற நாயகர் கலைஞர் புகழ் !

மாண்புமிகு திரு. கே.என். நேரு,
நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் இன்ப ஒளி ஏற்றிய என் அரசியல் ஆசான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா குதூகலத்துடன் கூடிக் கொண்டாடுவோம்!

முத்தமிழறிஞர் கலைஞர் இளமையிலேயே உலகைக் கற்ற உணர்வாளர்; இயற்கையிலேயே ஒரு பகுத்தறிவாளர்; தந்தை பெரியார் அவர்களை–பேரறிஞர் அண்ணா அவர்களைக் காண்பதற்கு முன்னாலேயே சமுதாயத்தைக் கண்டவர்; சமுதாயச் சீர்கேடுகளை எண்ணி வருந்தியவர்; சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் வாய்க்கப் பெற்றவர். அவர் 18 வயதில் கட்டுரை எழுதி, பேரறிஞர் அண்ணா அவர்களின் திராவிட நாடு இதழுக்கு அனுப்பி, அண்ணா அவர்கள் அதைத் "திராவிட நாடு" இதழில் வெளியிட்டார். அதன்பின், அண்ணா அவர்கள் ஓர் இஸ்லாமிய விழாவுக்காக திருவாரூருக்கு வந்தபோது, அவரை அழைத்து வரச்சொல்லிப் பார்த்து வியந்து, "நீயா, கருணாநிதி" எனக் கேட்டு, "இது, மாணவப் பருவம், முதலில் படி, பின் எழுதலாம்" எனக் கூறும் அளவுக்கு மிகச் சிறிய வயதிலேயே, வயதான முதியவர் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டு, ஓரிரு ஆண்டுகளில், அந்த முதியவர் இறந்ததால், விதவையான இளம் பெண்ணின் இளமைக் கனவுகள் பாழானதை மையமாக வைத்து, "இளமைப் பலி" என எழுதியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதன்மூலம் அண்ணாவின் மனதைத் தொட்டவர் கலைஞர்; அதன் பயனாக, அண்ணா அவர்களின் இறுதிக் காலம் வரை அவரோடு பயணித்து, தன் இறுதிக் காலம் வரை அண்ணா அவர்களை நெஞ்சில் வைத்துப் போற்றியவர் அண்ணன் கலைஞர் அவர்கள்.

"அண்ணா அவர்களையும், பெரியாரையும் சந்தித்திருக்காவிட்டால் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன்" என்று கூறியவர் கலைஞர்.

கம்யூனிஸ்ட் என்றால், ஆண்டான்–அடிமை, முதலாளி–தொழிலாளி என்று வேறுபாடில்லாமல் எல்லார்க்கும் எல்லாம் என்ற பொதுவுடைமைச் சமுதாயம்–சமநிலைச் சமுதாயம் அமைந்திட வேண்டும் என்பதுதான் கம்யூனிசத் தத்துவம். அந்தத் தத்துவத்தை இயல்பாகவே, இளஞ்சிறு வயது முதலே இயற்கையாக இதயத்தில் கொண்டிருந்தவர் அண்ணன் கலைஞர்.

இந்தத் தத்துவத்தை நிறைவேற்றிடும் பணியில் அவர் முதலில் போராடத் தொடங்கிய இடம் எங்கள் திருச்சி மாவட்டத்தின் குளித்தலை தொகுதியைச் சார்ந்த நங்கவரம்தான்.

1957–ல் முதன்முதலில் குளித்தலை தொகுதியில் வென்று சட்டமன்றத்தில் அடியெடுத்து வைத்து, முதன்முதல் கன்னிப் பேச்சை நிகழ்த்தியதும் அந்த நங்கவரம் விவசாயிகள் பிரச்சினைகள் பற்றித்தான்.

அதன்பின், 60 ஆண்டுகள் சட்டப் பேரவை உறுப்பினராகத் திகழ்ந்தவர். 60 ஆண்டுகளில் சட்டமன்றத்தில் அவர் பேசியவற்றுள், ஒரு சொல்கூட அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படாத வரலாற்று ஆவணமாகப் பாதுகாக்கப்பட்டு வருபவை அவருடைய உரைகள்! பேரவையில் கேள்வி நேரம், கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம், நிதிநிலை அறிக்கை, ஆளுநர் உரை மீதான விவாதங்கள், மானியக் கோரிக்கை விவாதங்கள், 110 விதியின்கீழ் அறிவிப்புகள், இரங்கல் தீர்மானங்கள் என்பன போன்ற அவை நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் அவர் பங்குபெற்று ஆற்றிய உரை நிகழ்வுகள் ஒவ்வொன்றும் எல்லோர்க்கும் வழிகாட்டக் கூடிய வரலாற்றுப் பாடங்கள்! சட்டப் பேரவை மூலம் அவர் உருவாக்கிய சட்டங்கள் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை, தமிழ் மக்களை வளப்படுத்தியவை; இன்றும் வாழவைப்பவை.

அண்ணன் கலைஞர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய சட்டங்கள்மூலம்

தீவுகளாகக்கிடந்தகிராமங்களைஇணைப்புச் சாலைகள் மூலம் இணைத்தவர் !

இருண்டுகிடந்தகிராமங்கள்அனைத்திற்கும் மின்சாரம் தந்து ஒளியேற்றியவர் !

காவிரிநீர்இன்றிக்கலங்கியவிவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்து மோட்டார் பம்புகள் மூலம் வேளாண்மை செழிக்கச் செய்தவர் !

தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கி குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதிகள் தந்தவர் !

போக்குவரத்துகள் தடையின்றி நிகழ சாலைகளில் மேம்பாலங்கள் கட்டியவர் !

எல்லோரும் படிக்க எங்கும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அமைத்தவர் !

மாவட்டந்தோறும் அரசு மருத்துவக் கல்லூரி அமைத்து, மருத்துவமனைகள் பெருக்கி தரமான மருத்துவ வசதிகள் எல்லோர்க்கும் கிடைக்கச் செய்தவர் !

நிலமில்லா விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கியவர் !

வீடில்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கியவர் !

குடிசைகள் இல்லாத கிராமங்கள், கிராமப் பகுதிகள் இல்லாத நகரங்கள் எனக் கொள்கை வகுத்து, குடிசை மாற்று வாரியங்கள்மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டியவர் !

கைதூக்கிவிட்டாலன்றி கரையேற முடியாத மக்களில், தாழ்த்தப்பட்டவர்க்கு 18 சதவீதம், அவர்களுள் அருந்ததியர்க்கு 3 சதவீதம்;

பிற்படுத்தப்பட்டோர்க்கு 30 சதவீதம், அவருள் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதம்;

மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கு 20 சதவீதம்;

மலைவாழ் பழங்குடியினருக்கு 1 சதவீதம் என 69 சதவீதம் இட ஒதுக்கீடு நிலைபெறச் செய்து கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் எளியோர் எல்லோரும் ஏற்றம் பெற வழிவகுத்தவர் !

மகளிருக்கு அரசுப் பணிகளில் 30 சதவீதம், உள்ளாட்சிகளில் மகளிருக்கு 33 சதவீதம், மகளிருக்குச் சொத்துரிமை, விதவை மகளிர் மறுமணம், சாதி வேறுபாடுகள் அகல சாதி மறுப்புத் திருமணம், மகளிர் பொருளாதாரம் உயர மகளிர் திட்டம்–சுய உதவிக் குழுக்கள் !

சிப்காட் தொழில் வளாகங்கள்மூலம் பெருந்தொழில்கள் !

சிட்கோ மூலம் சிறுதொழில்கள் வளர்ச்சி !

தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் வளம் !

படிப்பு வாசனை இல்லா, பட்டாதாரிகள் இல்லா குடும்ப வாரிசுகள் உயர் கல்வி பெற தனித் திட்டங்கள்!

செம்மொழியாகச் செந்தமிழ் மேன்மை பெறச் செய்தவர்!

விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், மாற்றுத் திறனாளிகள் அனைவரும் நலம் பெற, வளம் பெற வகைவகையான திட்டங்கள் தந்தவர் !

19 ஆண்டுகள் முதலமைச்சர் பொறுப்பில் நான்குமுறை ஊதியக் குழுக்கள் அமைத்து, அரசு ஊழியர், ஆசிரியர்களின் பொருளாதாரத்தை உயர்த்தியவர் !

சுதந்திரப் போர்த் தியாகிகள், மொழிப் போர்த் தியாகிகள், எல்லைப் போர்த் தியாகிகள் எல்லோர்க்கும் உதவிகள் செய்து நினைவகங்கள் எழுப்பிப் போற்றியவர் !

என சட்டப் பேரவையைக் கருவியாகக் கொண்டு முத்தமிழ் வித்தகர் அண்ணன் கலைஞர் அவர்கள் செய்தவை அனைத்தும் வேறு எவராலும் செய்யப்படாதவை. எனவே, வரலாறு அண்ணன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சட்டமன்ற நாயகர் எனப் போற்றும் ! கலைஞர் புகழ்பாடும் ! வாழ்க சட்டமன்ற நாயகர் கலைஞர் புகழ் !

உழைப்பு

தேன் கூடும், கஞ்சனின் கருவூலமும் ஒன்றுதான். காரணம், இரண்டுமே அவற்றை நிரப்பிட உழைத்தவர்களுக்கு பயன்படுவதில்லை.

– கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

வாழ்க சட்டமன்ற நாயகர் கலைஞர் புகழ் !

மாண்புமிகு திரு. எ.வ. வேலு,
பொதுப் பணித் துறை அமைச்சர்

முத்தமிழறிஞர் அண்ணன் கலைஞர் இந்த மண்ணில் 94 ஆண்டுகளைக் கடந்து வாழ்ந்தவர். பிறந்த 14 ஆண்டுகளுக்குப்பின் ஏறத்தாழ 80 ஆண்டுக்காலம் பொது வாழ்வில் பங்கேற்றவர்; அந்த 80 ஆண்டுகளில் 1957 முதல் 2018 வரை ஏறத்தாழ 62 ஆண்டுகள் தோல்வி என்பதையே காணாமல், 13 முறை தேர்தலில் நின்று, நின்ற இடங்களில் எல்லாம் வென்று, சட்டமன்ற உறுப்பினர் ஆனவர். அந்த 62 ஆண்டுகளிலும், 19 ஆண்டுகள் ஐந்து முறை தமிழ்நாட்டின் தன்னிகரில்லா முதலமைச்சராகத் திகழ்ந்தவர். அந்தக் காலங்களில் சட்டமன்றத்தில், அவர் பங்கேற்ற விவாதங்கள், அவர் காலத்தில் இருந்த ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், இன்று பேரவை உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கும், எதிர்காலத்தில் மக்கள் தொண்டாற்ற விழைபவர்களுக்கும் ஒரு மகத்தான மாமலை போல நின்று வழிகாட்டத்தக்கதாகும்.

அந்த மாமேதையிடம் யான் கற்றவைதான் என்னையும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக– அமைச்சராகப் பணியாற்றும் பக்குவத்தை, பண்பை எனக்கு வழங்கியுள்ளன என்பதை நன்றியுடன் நான் இன்று நினைவுகூர்கிறேன்.

1957 தேர்தலில் வென்று, தி.மு. கழகம், பேரவையில் இடம்பெற்றபின், பேரறிஞர் அண்ணா அவர்கள், 7–5–1957 அன்று, கொடுத்த முதல் தீர்மானம் நமது மாநிலத்திற்கு, "தமிழ்நாடு" எனப் பெயர் மாற்ற வேண்டும் என்பது; ஆனால், அன்றைய ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையால் அத்தீர்மானம் அன்று தோல்வியில் முடிந்தது.

ஆனால், 1967–ல் அரசியல் அதிகாரம் அண்ணா அவர்களின் கைக்கு வந்தபின், பேரவையில் 18–7–1967 அன்று, முதல் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, "தமிழ்நாடு" என நமது மாநிலம் பெயர்பெற்றது.

அந்த அனுபவம் எங்களுக்குப் பல புதிய விவரங்களைத் தெளிவாகத் தெரிவித்தது என்று கூறும் அண்ணன் கலைஞர், "அதுவரையில் நான்கூட நெருப்புக் குழம்பாக, புரட்சித்தனம் படைத்த வாலிபனாகத்தான் இருந்தேன். மக்கள் திருத்தப்பட வேண்டும் என்று நினைத்திருந்த காலம் அது; ஆனால், அன்று தீர்மானம் தோற்கடிக்கப்பட்டபின், மக்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்; அவர்கள் சரியாக, திறமையாக வழிநடத்தப்பட வேண்டியவர்கள் என்பதை என்போன்ற துடிக்கும் மனம் படைத்த வாலிபர்கள் புரிந்துகொண்டோம்" என்றார்.

அதுவரையில் நலிவுகளுக்குக் காரணம் என்ன என்பதையே அதிகம் சிந்தித்துக்

கொண்டிருந்த நிலைமாறி, நலிவுகளைப் போக்குவது எப்படி என்பதைக் கழகம் திட்டம்போட்டு விளக்குவதில் முனைந்தது.

அரசியல் அதிகாரம்தான் ஒரே வழி!

இருபதாம் நூற்றாண்டில் அரசியல் அதிகாரத்தால்தான் அனைத்துப் பீடைகளையும் ஒரே நொடியில், ஒரே வரியில் ஒழித்துக்கட்ட முடியும் என்பது உறுதியாக்கப்பட்டிருப்பதைச் சட்டமன்ற நுழைவுக்குப் பிறகே எங்களால் சரியாகத் தெரிந்துகொள்ள முடிந்தது என்பது முற்றிலும் உண்மை.

ஆகவே, "அறிஞர் அண்ணா அவர்களும், அவர் அடியொற்றி நாங்களும், முதல் சட்டமன்றக் கூட்டம் முடிவடைந்ததும், நாட்டு மக்களை நோக்கிப் புறப்பட்டோம். அரசியல் அதிகாரத்திற்கு ஊற்றுக்காலான சாதாரண மக்களின் ஆதரவு திரட்டும் பணிதான் முக்கியமெனக் கருதிப் பணியாற்றத் தொடங்கினோம்" என்று, "நெஞ்சுக்கு நீதி" முதல் பாகம், பக்கம்–317, 318–ல் குறிப்பிடுகிறார்.

இப்படி, முதன்முதல் சட்டமன்றம் தந்த சிந்தனைதான் அண்ணா அவர்களையும், கலைஞரையும், மாபெரும் வெற்றிவேந்தர்களாக வரலாற்றில் நிலைபெறச் செய்துள்ளது.

பேரவையில் அவரது கன்னிப்பேச்சு

1957–ல், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், முதன்முதல் அவர் 4–5–1957 அன்று உரையாற்றியது, தம் குளித்தலை தொகுதி விவசாயிகளின் நங்கவரம் போராட்டம் குறித்துதான்; அது, தொகுதி உறுப்பினர்கள், தங்கள் தொகுதி மக்களின் குறைதீர்க்கும் பணியில் ஈடுபட எல்லோர்க்கும் வழிகாட்டுகிறது.

பேரவையில் கலைஞரின் நாவன்மை

1966–ல் பேரவையில், அண்ணன் கலைஞர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர். அந்நிலையில், அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், "எதிர்க்கட்சிக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரியவில்லை" என்று குற்றம் சாட்டி, கழகத்தைப் பழித்துப் பேசினார்.

உடனே எழுந்த கலைஞர், "இன்னும் 6 மாதங்கள்தான் இருக்கிறது; பொறுத்திருங்கள். அதன்பின் உங்கள் இடத்தில், ஆளும்கட்சியாக நாங்கள் இருப்போம்; எங்கள் இடத்தில், எதிர்க்கட்சியாக நீங்கள் இருப்பீர்கள். அப்போது, எதிர்க்கட்சி என்றால், எப்படி இருக்க வேண்டும் என்பதை எங்களுக்கு நடந்து காட்டுங்கள்" என்று சூடாகப் பதில் கூற, முதல்வர் முகமோ மாறியது.

எதிர்க்கட்சியை மதித்த கலைஞர்

கழகம் முதலில் எதிர்க்கட்சியாக இருந்தபோது, ஏற்பட்ட அனுபவங்கள் ஆளுங்கட்சியாக மாறியபின் பேரவையில், பல மாற்றங்களைப் புகுத்த வழிவகுத்தது ஜனநாயகத்தில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை எனக் கூறி, எதிர்க்கட்சியை மதித்திட வேண்டும் என்றார் கலைஞர்.

முத்தமிழறிஞர் அண்ணன் கலைஞர் அவர்கள், 1969–ல் முதன்முதலில் முதலமைச்சரானபின், "எதிர்க்கட்சித் தலைவருக்கு

அமைச்சர்களுக்கு உள்ளதுபோல், அரசு கார், ஓட்டுநர், கார் அலவன்ஸ், வீட்டு அலவன்ஸ் ஆகியவற்றுடன் அவர்களுக்கென்று ஓர் அலுவலக உதவியாளர், ஒரு சுருக்கெழுத்தாளர் பதவிகளும், தொலைபேசி இணைப்பு வசதியும் அனுமதிக்கப்படும்" என 26-3-1969 அன்று பேரவையில் அறிவித்து, அந்தச் சலுகைகளை முதன்முதலில் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கினார்.

பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச அதிக வாய்ப்பு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்த காலங்களில், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் அவையில் பேச அதிக வாய்ப்புகளை வழங்குவார். அரசுத் திட்டங்களுக்கு எதிரான கருத்துகள், திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில், களத்தில் ஏற்படும் தாக்கங்கள், மக்களின் குறைகள் அவர்கள்மூலம் வெளிவரும் என எதிர்பார்ப்பார். அப்படி வரும்போது, அவற்றுக்கு உரிய விளக்கங்கள் கூறுவார். அவர்கள் அளிக்கும் கோரிக்கைகள் நியாயம் எனில் அவற்றை உடனடியாக ஏற்பார்.

அண்ணா வழியில் கலைஞரின் அணுகுமுறை

1957-ல் தமிழ்நாடு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம், "நாங்கள் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது – தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது என்று கூறுகிற முழக்கத்தை, நீங்கள் சாதகமாக எடுத்துக் கொண்டு, எங்களைக் காட்டியாவது தமிழகத்தினுடைய தேவைகளை அங்கே கேட்டுப் பெறுங்கள்" என்று கூறினார்.

அண்ணா அவர்கள், முதலமைச்சர் காமராசர் அவர்களிடம் அன்று வலியுறுத்தியது போலவே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 18-4-1990 அன்று பேரவையில் தொழில் துறை மானியத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில், "நெய்வேலி நிலக்கரி டன் ஒன்றுக்கு இரண்டரை ரூபாய் வீதம் தமிழ்நாடு அரசுக்கு ராயல்டி வழங்கப்படும் என ஒன்றிய அரசின் அமைச்சர் திரு. வசந்த் சாத்தே 26-9-1989 அன்று ஒரு கடிதம் எழுதியிருந்தார்" என்று குறிப்பிட்டார்.

அப்போது, பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினராயிருந்த பேராசிரியர் க. பொன்னுசாமி "அது என்ன இரண்டரை ரூபாய், ஐந்தரை ரூபாய் வீதம் வாங்கியிருக்கக் கூடாதா?" என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்துப் பேசிய அண்ணன் கலைஞர், "ராயல்டி குறித்து ஒன்றிய அரசிடம் பேசி, வாதாடி நிலக்கரி எடுக்கத் தொடங்கிய 1956 ஆம் ஆண்டிலிருந்து ராயல்டி கேட்டு, வட்டியோடு ரூ.30 கோடி பெற்றது இந்த (தி.மு.க.) ஆட்சி, அதற்காகவாவது எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பொன்னுசாமி மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். மகிழ்ச்சி அடையாமல் ஏன் இன்னும் அதிகம் வாங்கவில்லை என்று கேட்டார். அப்படிக் கேட்பதுகூட நல்லதுதான்; இப்படியெல்லாம் கேட்டால்தான் நாங்கள் அங்கே செல்லும்போது, இப்படியெல்லாம் கேட்கிறார்கள். ஆகவே, தயவு

செய்து கொடுங்கள், இல்லாவிட்டால், உங்கள் ஆட்சிக்குத்தான் கெட்டபெயர் வரும் என்று சொல்லி அவர்களிடத்தில் கேட்பதற்கு, இங்கே எதிர்க்கட்சிகள் வேகமாகப் பேசுவதை நான் நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்வேன்" என்று கூறினார்.

1957–ல் அண்ணா அவர்கள், காமராசரிடம் தெரிவித்து, அவர் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி தம் கேள்வியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கூறிய வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் எதிர்க் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் க. பொன்னுசாமி கூறியதற்குப் பதில் கூறிய பாங்கினை, அண்ணன் கலைஞரின் சாதுர்யத்தை நாம் எண்ணி! எண்ணி! இன்புறலாம்.

பேரவையில் பொங்கி எழுந்திடும் கலைஞர்

இப்படியெல்லாம் எதிர்க்கட்சியை மதித்துப் போற்றிய கலைஞர், கழகத்தையும், தம்மையும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி இழிவுபடுத்தினால் விட்டுவிட மாட்டார்; உடனே பொங்கி எழுந்திடுவார். இதற்கு இரண்டு சான்றுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒன்று, எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஹண்டே பேரவையில் 28–7–1971 அன்று, தி.மு.க. அரசை, "ஒரு மூன்றாந்தர அரசு–Third Rate Government" என்று இழித்துப் பேசிவிட்டார்.

உடனே பொங்கி எழுந்த முதலமைச்சர் கலைஞர், இந்தத் தமிழ்நாடு அரசு மூன்றாந்தர அரசு என்று கூறியது சரியல்ல. இது, நாலாந்தர அரசு என்பதே சரி. இது, நாலாஞ்சாதி மக்களாகிய சூத்திரர்களுக்காகப் பாடுபடும் அரசுதான்; எங்களை எல்லாம் ஆளாக்கி உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களின் மொழியில் கூறுகிறேன்; இவ்வரசு நாலாந்தர அரசுதான். பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரன் என்ற முறையில் நாலாந்தர அரசைத்தான், நாலாந்தர மக்களின் நலனுக்காகவே நடத்துகிறோம் என இறுமாப்புடனும் பெருமையுடனும் கர்வத்துடனும் கூறிக்கொள்கிறேன்" என கலைஞர் முழங்கியதைக் கேட்டு அன்று பேரவையே அதிர்ந்தது; பெருமிதம் கொண்டது.

சவால் விட்டவரை மண்டியிடச்செய்த சரித்திர நாயகர்

இரண்டாவது, 1983–ல் அண்ணன் கலைஞர் எதிர்க்கட்சித் தலைவர்; அ.தி.மு.க. ஆட்சி; எம்.ஜி.ஆர். முதலமைச்சர்.

அப்போது, "உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும், அவர் கலந்துகொண்ட வேறுபல நிகழ்ச்சிகளிலும், தேனிக்கு பக்கத்தில் முத்துதேவன்பட்டியில், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரின் மகன் திரு. மு.க. அழகிரி பெயரில் ' 100 ஏக்கர் நிலம் வாங்கியிருப்பதாகவும், அதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும் பலமுறை பேசியது பற்றிச் சட்டப் பேரவையில் கேள்வி எழுப்பிய துரைமுருகன், அந்தக் "குற்றச்சாட்டை நிரூபிக்காவிட்டால் தன் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருப்பதாகவும் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசி வருகிறாரே, அவர் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கத் தயாரா?" என்றார்.

உடனே அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு எழுந்து, "முத்துதேவன்பட்டியில் தனக்கு நிலம் இல்லை என்றும், தன் குடும்பத்திற்கும் அவர் தங்கியிருந்த அந்த இடத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும் இங்கேயிருக்கிற கலைஞரே எழுந்து சொல்லட்டும். பிறகு நான் ஆதாரத்தைக் கொண்டு நிரூபிக்கிறேன்" என்றார்.

உடனே எழுந்த சிங்கம், "முத்துதேவன்பட்டியில் என் பெயரிலோ, என் மகன் மு.க. அழகிரி பெயரிலோ எந்த நிலமும் வாங்கப்படவில்லை என்று அண்ணாமீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்காவிட்டால் ராஜினாமா செய்வதாகக் கூறியிருக்கிறார். அவர் ஆதாரத்தைக் காட்டினால், நான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்யத் தயார்" என்று கூறிச் சீறியது.

அதற்கு அமைச்சர் குழந்தைவேலு அந்தச் சவாலைத் தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார். இது பேரவையில் 12-3-1983 அன்று நிகழ்ந்தது.

அதற்குப்பின், 4-4-1983 அன்று அமைச்சர் குழந்தைவேலு, வெறும் 3 ரூபாய் பதிவுப் பேப்பரில், இதுதான் ஆதாரம் என யாரோ ஓர் அழகிரி பெயரில், ஒரு போலி பேப்பரில் 8 ஏக்கர் 84 செண்ட் ரூ.7,000-க்கு வாங்க, செய்துகொண்ட ஒரு போலி ஒப்பந்தத்தை, சபாநாயகர் திரு. க. இராஜாராம் அவர்களிடம் கொடுக்க, பேரவைத் தலைவர் திரு. இராஜாராம் அவர்கள், கலைஞர் தங்கியிருந்த இடம் குறித்த ஆவணங்களை நிலப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 1971 முதல் 1983 வரை வரவழைத்து, அனைத்தையும் அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து, அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் காட்டி; அதன்பின் 15-4-1983 அன்று அவையில், "முத்துதேவன்பட்டியில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் மகன் மு.க. அழகிரியால் 100 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் கூறியதற்கு எவ்வித உண்மை ஆதாரமும் இல்லை" என்று கூறி; "இத்தகைய ஆதாரமில்லாமல் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளை அவையில் கூறக்கூடாது" என்று தீர்ப்பளித்தார்.

ஆனால், குற்றச்சாட்டைக் கூறிய அமைச்சர் சவால் விட்டதுபோலத் தன் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யவில்லை; அண்ணன் கலைஞர் அவர்களும், அவர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று வலியுறுத்தவில்லை.

இப்படி, பேரவையில் பேசும்போது, உண்மை பேச வேண்டும்; ஆதாரத்துடன் பேச வேண்டும். நாட்டிற்கும், மக்களுக்கும், ஏழை எளியோர்க்கும், தமிழ்மொழிக்கும் நன்மை தருபவற்றைப் பேச வேண்டும் என்று, 1957 முதல் சட்டப் பேரவை நிகழ்வுகளில் தம்முடைய சொற்களால், செயல்களால் மற்றவர்கள் உணர்ந்துகொள்ளச் செய்து உணர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சட்டமன்ற நாயகர் என்று புகழ்வது, பாராட்டுவது எல்லோர்க்கும் கடமையல்லவா!

வாழ்க சட்டமன்ற நாயகர் கலைஞர் புகழ்!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற நாயகன் – கலைஞர்
முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,
வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்

நூற்றாண்டு விழா காணும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எக்காலத்திற்கும் ஞானியாக திகழ்ந்தவர். தலைவர் கலைஞர் தாயுள்ளத்துடன் ஒரு தந்தையைப் போல் என்னை அரவணைத்தவர்.

1996–ல் கழக அரசு அமைந்தவுடன், "பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை" அமைச்சராக்கி சட்டமன்றத்தின் நடைமுறைகளையும், அமைச்சராக சக உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோரின் கேள்விகளுக்கு எவ்வாறு சட்டமன்றத்தில் பதிலளிக்க வேண்டும் என்று பல முறை எனக்கு அறிவுரைகள் கூறியுள்ளார்கள்.

சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தபோது 2008–ல் அவசரகால ஆம்புலன்ஸ் (108), 2009–ல் கலைஞர் காப்பீடு ஆகிய திட்டங்களை அமல்படுத்தும்போது, பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

போர் குணம் மிக்க போராளி

பொதுவுடமை கொள்கையின் பற்றாளர்

அரசு ஊழியர், ஆசிரியர்களின் தோழன்

கலை, இலக்கிய பெருமான்.

சட்டமன்ற விவாதங்களில் தலைவர் கலைஞரின் பேச்சாற்றல், சொல் வன்மை, செயல் வன்மை, ஆற்றல் வன்மை அழியாத புகழ் வன்மை கொண்டது. இவருக்கு நிகராக சட்டமன்றத்தில் நடவடிக்கைகளை கையாண்ட முதல்வர்களில் இவர்தான் முதல்வர் ஆவார்.

சினிமா, நாடகம், கதை, வசனம், பாடல் என கலைத் துறையில் இவர் கைவண்ணத்தில் தமிழகத்தில் கரை சேர்ந்த கதாநாயகர்கள் பலர். பராசக்தி திரைப்படம்மூலம் தன்னுடைய வருங்கால திட்டங்கள் யாவும் வசன வடிவில் பிரகடனப்படுத்திய கலை உலக மாமேதை.

கை ரிக்ஷா ஒழிப்பு, கண்ணொளி திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டம், பெண்களுக்கு சொத்துரிமை, குடிசை மாற்று வாரியம், கணினி உலகத்தில் தமிழ்நாட்டினை ஒளிரச்செய்த தமிழ்நாட்டின் மென்பொருள் மேதை. உழவர்கள் வாழ்வு சிறக்க பல அரிய திட்டங்கள்மூலம் இந்தியாவின் முன்னோடி.

தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு கலைஞர் தீட்டிய திட்டங்கள்தான் எக்காலத்திலும் பெயர் சொல்லும், தேவையான நிலைத்த

திட்டங்கள்மூலம் ஏழை எளியோரின் வாழ்வில் கலங்கரை விளக்கமாய் திகழ்ந்தவர். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள் என பலதரப்பட்ட வகுப்பினரையும் முன்னேற செய்வதில் முக்கியப் பங்காற்றிய தென்னாட்டு அரிஸ்டாட்டில். பகைவரை பொறுத்தருளும் பண்பாளர். இட ஒதுக்கீடு கொள்கையில் தனது முத்திரையை பதித்து மண்டல் கமிஷன் நிறைவேற்றிட அன்றைய பாரதப் பிரதமர் வி.பி. சிங்குடன் துடிப்போடு பங்காற்றி, இட ஒதுக்கீடு முழுமையடைய இந்தியாவிற்கு வழிகாட்டிய தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டின் கதாநாயகன்.

மாநில சுயாட்சிக்கு முக்கியத்துவம் அளித்து மாநில முதல்வர்கள் சுதந்திர திருநாளில் கோட்டை கொத்தளத்தில் மூவர்ண கொடியை உயர்த்திட முன்னுரை எழுதிய முதல்வர்.

ஆட்சி நிர்வாகத்தில் இவருடைய வேகம், விவேகம் யாவும் பார்போற்றும் வகையில் அமைந்தது. இவருடைய திறமையை முழுவதும் உணர்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது அரசியல் வாரிசாக பிரகடனப்படுத்தினார். தரணி போற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நாட்களில் அவருடைய கொள்கைகளை தீவிரமாக செயல்படுத்திட செயலாற்றி வரும் உழைப்பு, உழைப்பு, உழைப்பு எனும் மாமந்திரத்திற்கு உரியவர் தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் அமைச்சரவையில் வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சராக செயல்பட டாக்டர் கலைஞரின் பாசறையில் பயின்ற அனுபவம் கைகொடுக்கிறது. எங்களது குடும்பத் தலைவர் டாக்டர் கலைஞரின் புகழ் ஓங்குக!

வாழ்க டாக்டர் கலைஞர் புகழ்!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்றத்தின் நிரந்தர நாயகர் கலைஞர்!

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, 'சட்டமன்ற நாயகர்' என்ற தலைப்பிலே குழு அமைத்து மலர் வெளியிடும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்த மலரில் பங்களிப்புச் செய்ய, எனக்கும் வாய்ப்பு கொடுத்ததற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் நான் உறுப்பினராக இல்லை என்றபோதிலும், அவர் மூன்றுமுறை போட்டியிட்டு சட்டமன்றத்திற்கு வரக் காரணமாக இருந்த சேப்பாக்கம் – திருவல்லிக்கேணித் தொகுதியில் இருந்து முதல்முறையாக நான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன் என்பது தனிப்பட்ட முறையில் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

கலைஞரை ஒரு இலக்கியவாதி என்றோ, வசனகர்த்தா என்றோ, பத்திரிகையாளர் என்றோ போற்றுவதை விட, தனித்துவமானது 'சட்டமன்ற நாயகர்' என்று அழைப்பது. இலக்கியத்தில், கவிதையில், வசனம் எழுதுவதில், பத்திரிகையாளராய் செயல்படுவதில் கலைஞரைப் போல பல நாயகர்கள் இருக்கலாம். ஆனால், சட்டமன்றத்தில் எந்நாளும் கலைஞர் மட்டுமே முதன்மை நாயகர். அவர் எந்தந்தப் பிரச்னைகளை எல்லாம், தன் திரைப்படங்களிலும் நாடகங்களிலும் வசனங்களாகத் தீட்டினாரோ, இலக்கியங்களில் பதிவு செய்தாரோ, மேடைகளில் முழங்கினாரோ அதற்கான தீர்வுகளைத் திட்டங்களாகவும் சட்டங்களாகவும் தீட்டியது இந்த சட்டமன்றத்தில்தான். அதேபோல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, மக்களுக்காக உரிமைக்குரல் எழுப்பியதும் இதே சட்டமன்றத்தில்தான்.

கலைஞர் வாழ்ந்த காலத்தில் பெருந்தலைவர் காமராசர் தொடங்கி, அம்மையார் ஜெயலலிதா வரை எத்தனையோ தலைவர்கள் எதிர்முகாமில் மாறிமாறி வந்தார்கள்; சென்றார்கள். ஆனால், நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் சுமார் 60 ஆண்டுகளைத் தொட்டவர், முத்தமிழறிஞர் கலைஞர் ஒருவர் மட்டுமே.

சட்டமன்றத்தில் கலைஞரின் முதல் உரையே முத்தாய்ப்பானது. குளித்தலை தொகுதியின் 'கையேரு வாரம், மாட்டேரு வாரம்' என்ற பிரச்னை குறித்து 'கலைஞர் தன் முதல் உரையைப் பதிவு செய்துவிட்டு, இருக்கையில் அமர்ந்தவுடன், சட்டப்பேரவைச் செயலாளர் ஒரு துண்டுச்சீட்டை வழங்கினார். சபாநாயகர் யு. கிருஷ்ணாராவ் கொடுத்திருந்த அந்தத் துண்டுச் சீட்டில், 'Very good speech'

என எழுதப்பட்டிருந்தது. பிறகு பேரறிஞர் அண்ணாவிடமும் பலமுறை வாழ்த்துகளை ஏராளம் பெற்றவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர்.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது குறைகளைச் சுட்டிக்காட்டி குரல் கொடுப்பதும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது சுட்டிக்காட்டப்படும் குறைகளை உள்வாங்கி தீர்வு காண்பதும், என சட்டமன்ற ஜனநாயகத்தின் உச்சபட்ச கண்ணியத்தைக் காத்த, தலைவராக முத்தமிழறிஞர் கலைஞர் கடைசிவரை திகழ்ந்தார். அதற்கு எண்ணற்ற உதாரணங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல இயலும்.

1957–ஆம் ஆண்டு ஆளுநர் உரை மீது கலைஞர் உரையாற்றியபோது, அவர் வைத்த மிக முக்கியமான கோரிக்கை, பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டுமென்பது. ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. 1971–இல் கலைஞர் முதலமைச்சரான பிறகு பேருந்துகளைத் தேசியமயமாக்கினார்.

சில வேளைகளில் கலைஞரின் சட்டமன்ற உரைகள் நீதிமன்றத்தில் வழக்காடும் வழக்கறிஞர்களின் வாதங்களைத் தோற்கடிக்கும் அளவுக்கு ஆணித்தரமாக இருந்திருக்கின்றன. எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில், 'பூம்புகார்' நிறுவனத்தின் சார்பில் வாங்கப்பட இருந்த 'பல்கேரியா பால்டிகா' என்ற கப்பல் பேர ஊழல் குறித்து, இருபது ஆதாரங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துவைத்தார் கலைஞர். அந்த ஆதாரங்களை மறுக்கவோ, மறைக்கவோ முடியாமல், இரண்டு கப்பல்களையும் வாங்கும் முடிவையே கைவிட்டது அன்றைய அ.தி.மு.க. அரசு என்பது வரலாறு.

எதிர்க்கட்சியினர் வீசும் வார்த்தைகளில் இருந்தே பதிலை எடுத்து சுவைபட பேசும் கலைஞரின் திறமை, கட்சி வேறுபாடின்றி அனைவரும் ரசிக்கும் வகையில் இருக்கும். அதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்ல வேண்டும். ஒன்று, 1989–ஆம் ஆண்டில் ஆளுநர் உரை மீது, பேசிய காங்கிரஸ் உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள், "ஆளுநர் உரையில் பல இடங்களில் புள்ளிகளும் பல இடங்களில் கோடுகளும் காணப்படுகின்றன" என்று கூறினார். அதற்குப் பதிலளித்த கலைஞர், "புள்ளிகளையும் கோடுகளையும் இணைத்தால்தான் அழகான கோலங்கள் உருவாகும். அப்படிப்பட்ட எழுச்சிக்கோலத்தை உருவாக்கத்தான் புள்ளிகளும் கோடுகளும்" என்றார். அதேபோல எச்.வி.ஹண்டே அவர்கள் ஒருமுறை சட்டமன்றத்தில் தி.மு.கழக அரசைப் பற்றி விமர்சிக்கும் போது, "இது மூன்றாம் தர அரசு" என்றார். இதனால் சட்டமன்றத்தில் அமளி ஏற்பட கலைஞரோ நிதானமாக, "திரு. ஹண்டே அவர்களே இது மூன்றாந்தர அரசு இல்லை, நாலாந்தர அரசு. பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர என்று கூறப்படும் வர்ணங்களில் நான்காவதாகக் கூறப்படும் சூத்திரர்களின் அரசு" என்று பதில் அளிக்க, சில நிமிடங்கள் திக்குமுக்காடிப் போனார் ஹண்டே.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக முத்தமிழறிஞர் கலைஞர் சட்டமியற்றினார். இப்போது நமது தலைவர், இன்றைய முதலமைச்சர் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றினார். சட்டம் இயற்றப்பட்ட நாளில் இருந்து, இப்போதுவரை எதிர் முகாமில் இருந்து நம்மை நோக்கி வைக்கப்படும் ஒரே கேள்வி என்னவென்றால், ''கோயிலுக்கே போகாத உங்களுக்கு இதைப்பற்றி என்ன கவலை?'' என்பதுதான். ''தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கருவறைக்குள் செல்ல உரிமை இல்லையே'' என சட்டமன்றத்தில் கலைஞர் ஒருமுறை பேசிக்கொண்டிருந்தபோது, காங்கிரஸ் உறுப்பினர் அனந்தநாயகியும் இதே கேள்வியை எழுப்பினார். ''கொலை செய்தவர்கள் மட்டுமா கோர்ட்டுக்குப் போகிறார்கள்? வாதாடுபவர்களும்தானே போக வேண்டும்?'' என்று அப்போது கலைஞர் அளித்த பதிலே, இப்போது அக்கேள்வியைக் கேட்பவர்களுக்கும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நகைச்சுவையாகவும், சிந்திக்கத் தூண்டும் வகையிலும் கருத்துக்களை விதைப்பதில் கலைஞருக்கு நிகராக இன்னொருவரை தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் காணவில்லை. 1973–ஆம் ஆண்டு பெண் உறுப்பினர் ஒருவர், ''மதுரை மீனாட்சிக்கு வைரக் கிரீடம், வைர அட்டிகை... இன்னும் இருக்கிற பல நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு?'' என்று கேள்வி கேட்டார். சட்டென எழுந்து பதில் சொன்ன கலைஞர், ''மீனாட்சிக்கு இருக்கிற சொத்தின் மதிப்பைச் சொன்னால், காமாட்சிக்குப் பொறாமை ஏற்படுமே!'' என்று கூறவும் ஒட்டுமொத்த அவையும் சிரிப்பொலியில் ஆழ்ந்தது. ஏனென்றால், கேள்வி கேட்ட பெண் உறுப்பினரின் பெயரும் காமாட்சி. சட்டமன்றத்தில் கலைஞரின் பேச்சுக்கு மட்டுமல்ல, செயலுக்கும் வேறு எவரும் ஈடு இணை கிடையாது.

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், குடிசை மாற்று வாரியம், கை ரிக்ஷா ஒழிப்பு, காவல்துறை மானியம், பெண்களுக்குச் சொத்துரிமை, நில உச்சவரம்புச் சட்டம், தகவல் தொழில்நுட்பக் கொள்கை, அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம், பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு என கலைஞரின் ஆட்சிக்கால சட்டங்கள் அனைத்துமே சரித்திரத்தில் அழிக்க முடியாத பக்கங்களைப் பிடித்தவை.

தி.மு.க. முதன்முதலில் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே அக்கறை காட்டிய பல விஷயங்களில் மிக முக்கியமானது தொழில் வளத்தைப் பெருக்குதல். நெய்வேலி நிலக்கரி, சேது சமுத்திரத் திட்டம், சேலம் இரும்பாலை என தி.மு.கதொழில்வளம்குறித்துப்பேசியபோதெல்லாம், 'எப்போதுமே தி.மு.ககாரர்கள் 'தட்டினால் தங்கம் தோண்டினால் இரும்பு' என்பார்கள் போல' என்றெல்லாம் கேலி செய்யப்பட்டதுண்டு. ஆனால், இன்றைக்கு இந்தியாவில் முதலீட்டாளர்களின் தங்க பூமியாக தமிழ்நாடு உருவாகியிருக்கிறது. தொழில்துறை வளர்ச்சியில் அசைக்க முடியாத இரும்புக்கோட்டையாகவும் திகழ்கிறது என்றால், அதற்கு மிக முக்கிய காரணம் கலைஞர்.

கழகம் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும்போது, நமது சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பே வழங்கப்படாமல், ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்படுவதுண்டு. ஆனால், கலைஞர் முதல்வராக இருந்த காலங்களில், தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சிகளுக்கு அதிக நேரம் வழங்கப்பட வேண்டும் என்பதில், அதிகம் அக்கறை கொண்ட ஜனநாயகக் காவலர் கலைஞர். எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டும் பிரச்னைகளில் உண்மை இருக்கிறது என்றால் உடனடியாக அதைத் தீர்ப்பதில் அக்கறை காட்டியவர் என்பதைப் பலரும் பதிவு செய்திருக்கிறார்கள். முற்போக்கு எண்ணமும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட கலைஞரின் சட்டமன்ற உரைகளைப் படிக்கும்போது எல்லாம் நாமும் கலைஞரைப் போல உழைக்க வேண்டுமென்ற எண்ணம் பிறக்கிறது. கழக உடன்பிறப்புகளுக்கு மட்டுமல்ல, சட்டமன்றத்தில் காலெடுத்து வைக்கிற ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய பாலபாடம் கலைஞரின் சட்டமன்ற வரலாறு.

'சட்டமன்றத்துக்குள்ளே போகும்போது என்ன நினைப்பீர்கள்?' என பத்திரிகையாளர் ஒருவர் கலைஞரிடம் ஒருமுறை கேட்டார். அதற்குப் பதிலளித்த கலைஞர், "கற்றுக்கொள்ளும் மாணவனாகவும், கற்பிக்கும் ஆசிரியராகவும் இருக்க வேண்டுமென்று நினைப்பேன்" என்றார். சட்டமன்றத்தில் கலைஞர் ஆற்றிய உரைகள் அனைத்தும் என்றென்றும் நமக்கு கற்றுக்கொடுத்து வழிகாட்டும். அவரின் மாணவராக இருந்து, நாம் கற்றுக்கொண்டே இருப்போம். சட்டமன்றத்தில் கலைஞர் காத்த கண்ணியமும், பாதுகாத்த ஜனநாயகமும் இப்போது நமது தலைவரின் திராவிட மாடல் ஆட்சியிலும் அணையா விளக்காக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. ஜனநாயகத் திரியில், சமத்துவச் சுடர் விட்டு எரியும் அந்த அணையா விளக்கைக் காப்போம் எந்நாளும்!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

“சட்டமன்ற நாயகர் கலைஞர்”

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்,
சுற்றுலாத் துறை அமைச்சர்

வாழும் காலம் வரையிலும் தமிழ்நாட்டிலும் சரி, தேசிய அளவிலும் சரி, தவிர்க்க முடியாத தனிப் பெரும் தலைவராக, செல்வாக்கின் சிகரத்தில் சிறப்போடு பாடுபட்டு மறைந்தவர் தமிழினத் தலைவர், முத்தமிழ் மூதறிஞர் கலைஞர் ஐயா. அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது உலகத் தமிழருக்குப் பெருமை சேர்க்கும் அருமைமிக்க தருணமாகும்.

2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையில், நான் கதர்த் துறை அமைச்சராகவும், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற உறுப்பினராகவும், மக்கள் நல மாண்பாளர், போற்றுதலுக்குரிய நூற்றாண்டு நாயகர் கலைஞர் ஐயா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கிய எனக்கு ஒவ்வொரு மணித்துளியும் பால பாடமாக இருந்தது என்பது எனக்குக் கிடைத்த பிறவிப் பயனாகக் கருதுகிறேன்.

இந்த பத்து ஆண்டுக்கால என் அனுபவத்தில், சட்டமன்றத்தில் கலைஞர் ஐயா அவர்களின் பங்களிப்பைப் பார்த்து பிரமிப்பு அடைந்திருக்கிறேன். முதல்வர் என்ற தகுதியில் செயல்பட்ட கலைஞர் அவர்கள், தினந்தோறும் தவறாமல் சட்டமன்றத்திற்கு வந்து, அனைத்து நிகழ்ச்சிகளிலும் நேரடியாக நெருக்கம் காட்டிப் பகிர்ந்துகொள்ளும் வழக்கம் அவருக்கு இருந்தது. சட்டப் பேரவை விவாதத்தின்போது தலையிட்டு, பிரச்சினைகளுக்கு தெளிவுமிகு தீர்வைக் கூறுவதுடன், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, அதன் மூலமாக, மக்களின் தேவைக்கு மாபெரும் திட்டங்களை வழங்கி வந்தவர் கலைஞர் ஐயா.

எதிர்க்கட்சி வரிசையில் அவர் அமர்ந்திருந்தபோதும், நாட்டு மக்களின் தேவைகள் குறித்து சட்டமன்றத்தில் துல்லியமான கருத்துகளை எடுத்துக்கூறி, ஆக்கப்பூர்வமான நாகரிகம் பொருந்திய நிலைப்பாட்டை நிகழ்த்திக் காட்டி, அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து, மக்களின் குறைகளுக்கு மகத்தான தீர்வு கிட்ட முன்மாதிரியாகத் திகழ்ந்து அரும்பாடுபட்டவர் கலைஞர் ஐயா.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, ஆக்கப்பூர்வமான நாகரிகம் பொருந்திய நிலைப்பாட்டை நிகழ்த்திக் காட்டி, மக்களின் அகமும் முகமும் சுகமாய்த் திகழ முன்மாதிரியாக மிளிர்ந்தவர் கலைஞர் ஐயா.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரை நேரம் முடிந்த பிறகும்கூட, அவர்களின் கருத்துகளைக் கேட்டு தீர்வுகளைச் சொல்ல வேண்டுமே என்ற நல்லெண்ணத்தில், கூடுதல் நேரம் ஒதுக்கித் தரும்படி பேரவைத் தலைவரிடம் கலைஞர் ஐயாவே கேட்டுக் கொண்ட நிகழ்வுகள் அடிக்கடி காணப்படுவதை செய்தியாளர் மாடத்தில் உள்ள நிருபர்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள்.

நான் கதர்த் துறை அமைச்சராக இருந்த காலத்தில் எத்தனையோ நற்பணிகள் கலைஞரின் நேரடி கவனத்தால் நடந்தேறி உள்ளன. அவற்றுள் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா?

கதர்த்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்ற காலகட்டத்தில் அந்தத் துறை நலிந்தும், மெலிந்தும், நொடிந்தும் திகழ்ந்தது. இதில் பணியாற்றிய ஆயிரம் பேருக்கு ஊதியம் வழங்குவதில் அடர்மிகு இடர்பாடுகள் நிகழ்ந்துவந்தன. "கதர்த் துறையின் தொழில்சார்ந்த வருவாயை வைத்துத்தான் அந்த ஆயிரம் பேருக்கும் ஊதியம் தர வேண்டும்" என்ற நிலைப்பாடுதான் அப்போது இருந்தது.

கைத்தறி மற்றும் மில் துணிகளுக்கு ஈடாகத் தொழில் செய்ய முடியாத நிலையில், கதர்த் துணி உற்பத்தியும், விற்பனையும் மோசமான நிலையில்தான் இருந்தன. கதர்த் துணியை உடுத்துவோரின் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது.

இதனால் தொடர்ந்து துறையை நடத்துவதில் நிதிச் சிக்கல் நீடித்து வந்தது.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைத் தர வேண்டும் என்று தீர்மானித்தேன். அதன்படி முதலமைச்சர் ஐயா தனது முகாம் அலுவலகத்துக்குச் செல்வதற்காக காத்திருந்த நேரத்தில், அவரை அணுகி நின்றேன். அருகில் அழைத்த அவர், "என்ன பிரச்சினை?" என்று அருளுணர்வுடன் கேட்டார்.

கதர்த் துறை ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, "நேரடியாக அவர்களுக்கு அரசே சம்பளம் அளிக்க வேண்டும்" என்று தலைவர் கலைஞரிடம் உருக்கமாக எடுத்துரைத்தேன். என் வேண்டுகோளைக் கேட்ட கலைஞர் ஐயா, அதனை இதயத்தில் நிறுத்திக் கொண்டார். முதலமைச்சரின் செயலாளரான திரு. தேவராஜ், இ.ஆ.ப. அவர்களை அழைத்தார். "இந்தப் பிரச்சினை குறித்து என் கவனத்திற்கு ஏன் கொண்டு வரவில்லை?" என்று கடிந்து கொண்டார். "கதர்த் துறையின் அலுவலர்கள் அனைவருக்கும் அரசே நேரடியாக ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று மாலை 6 மணிக்குள் நடத்தி முடிக்க வேண்டும்" என்று கலைஞர் ஐயா அவர்கள் உடனடி உத்தரவைப் பிறப்பித்தார்.

கலைஞர் அய்யா அவர்களின் ஆணை காரணமாகப் பணிகள் துரித கதியில் தொடங்கின. "அரசு நிதித் துறைச் செயலாளர் திரு. ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்களிடம் இருந்து கருத்துரு பெற்றுக்கொண்டு வாருங்கள். நிறைவேற்றித் தருகிறேன்" என்று பிற்பகல் 4 மணிக்கு கலைஞர் ஆணையிட்டார்.

மாலை 7 மணி வரையிலும் தனது முகாமில் என்னை அமர வைத்தார். அதற்குள்ளாகவே கலைஞர் ஐயாவின் ஆணை நிறைவேற்றப்பட்டு, செயல்பாட்டுக்கே வந்துவிட்டது.

இவ்வாறாக எள் என்றால் எண்ணெய்யாக இயங்கும் கலைஞர் ஐயாவின் நிர்வாகத் திறனும், தாயன்பு கொண்ட தொண்டு உணர்வும் ஏற்றுப்போற்றிடத் தகுதியானவை ஆகும்.

கதர்த் துறையில் உபரியாக இருந்த ஊழியர்களை அவரவர்களின் பணித் தகுதிக்கு

ஏற்ப வேறு துறைகளுக்கு மாற்றம் செய்து, அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வசதி வாய்ப்புகளை வழங்கியவர் கலைஞர் ஐயா.

இவ்வாறு கதர்த் துறையைக் காப்பாற்றித் தந்தவர் கலைஞர் ஐயா என்பதை வருங்கால வரலாறு வளமாகப் பேசும்.

என்னைச் சந்திக்கும் கதர்த் துறை ஊழியர்கள், கலைஞர் ஐயா அவர்களின் முயற்சியால் கிடைத்த முன்னேற்றத்தை இன்றளவும் சொல்லிச் சொல்லி, நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்பா(வு) என்ற பாசப் பெருக்கோடு சட்டப் பேரவையை நடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கனிவுமிகு வழிகாட்டுதல்கள் மூலமாகச் சட்டப் பேரவை சாந்த சொரூபமாகவும், நாகரிக நிகழ்த்தலமாகவும் திகழ்ந்து வருகிறது.

அண்ணாவின் ஆற்றலையும், கலைஞரின் கண்ணியத்தையும் நெஞ்சில் நிலைநிறுத்தியவாறு, சட்டப்பேரவையில் எங்கள் முதல்வர், தமிழினத்தின் தனிப் பெரும் காவலர் தளபதி அவர்கள் இயங்கும் பாங்கு, அரசியல் மாச்சரியங்களைத் தாண்டிய நாகரிகத் தொட்டிலாகும்.

கிரிக்கெட் போட்டியில் முதல் டெஸ்டிலேயே செஞ்சுரி அடித்தது போன்று விளையாட்டுத் துறை அமைச்சர், எங்கள் வருங்கால மன்னவர் பேரன்புச் சீர்மிகு சின்னவர் அவர்களின் வரிசையில் அடியேனுக்கும் ஓரிடம் கிடைத்தது.

தளபதியாரின் தயாளமும், சின்னவரின் நல்லுணர்வும் என்னை அமைச்சராக இயங்கச் செய்கின்றன.

எனவேதான் சட்டமன்றப் பேரவையின் சார்பில் உருவாகி வருகின்ற, "நூற்றாண்டு நாயகர் கலைஞர்" என்ற தலைப்பிலான மலரில் கட்டுரையில் இடம்பெறும் அளவுக்கான தகுதி அடியனுக்குக் கிடைத்திருக்கிறது.

தாய்

தான் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும்போது தன் மக்களின் முகம் சுண்டக் கூடாது என்பதில் குறியாக இருப்பது தாய்க்குணம்.

– கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

பேராற்றல்களின் பெருமகனார் தலைவர் கலைஞர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, எம்.ஏ.,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர்

அற்புதமான அறிவாற்றல், சொக்க வைக்கும் சொல்லாற்றல், நிகரில்லா நினைவாற்றல், இயல், இசை, நாடக எழுத்தாற்றல், சோம்பல் இல்லா செயலாற்றல், வசப்படுத்தும் வாதத்திறன், செம்மையான நிருவாக ஆற்றல், மாற்றுக் கருத்து கொண்டோரையும் இணைக்கும் ஒருங்கிணைப்பாற்றல், மாற்றாரையும் மதித்துப் போற்றும் செம்மாந்த தலைமைப் பண்பு போன்ற அருங்குணங்கள் அனைத்தும் எல்லா தலைவர்களுக்கும் வாய்த்திடுவதில்லை.

ஒவ்வொரு தலைவருக்கும் தனிச்சிறப்பு மிக்க சில பண்புகள், ஆற்றல்கள் உண்டு. ஆனால், இந்த அருங்குணங்கள் அனைத்தும் ஒருங்கேபெற்ற ஒரே தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் என்றால் அது மிகையல்ல.

தனக்கு வாய்க்கப்பெற்ற இந்த அரிய பேராற்றல்களைத் தமிழினத்திற்கு மட்டுமின்றி சாதி, மத, இன, மொழி, இட வேறுபாடின்றி ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் உயர்விற்காகவும் பயன்படுத்தினார் என்பதுதான் தலைவர் கலைஞர் பெருமகனாருக்கு உள்ள தனிச் சிறப்பு. மனிதனை மனிதன் சுமக்கும் கொடுமையினைப் போக்கிட "கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம்", ஓலைக் குடிசையில் ஒண்டிக் கிடந்த ஏழையின் அவலத்தைப் போக்கிட 'குடிசை மாற்று வாரியம்' அமைத்து, அடுக்குமாடிக் குடியிருப்பு வழங்கிட திட்டம், ஆணும், பெண்ணும் சமம் என்பதை சமூகத்திற்கு உணர்த்த "பெண்களுக்கு சொத்தில் சம உரிமைத் திட்டம்", அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் வாரியம் அமைத்து அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்யும் திட்டம் போன்றவை கலைஞர் அவர்களின் மனிதாபிமானமிக்க மனிதநேயப் பண்புகளைப் பறைசாற்றும் ஒப்பற்ற திட்டங்களாகும்.

கலை, இலக்கியத் துறையில் அவரது சாதனை அளப்பரியது. தமிழ்த் திரை உலகத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். "பராசக்தி" ஒன்று போதும், அவர் திரைத் துறையிலும், சமூகத்திலும் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு கட்டியம் கூற, அதிர்ஷ்டத்தால் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவரல்ல கலைஞர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், காஞ்சி தந்த பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பாசறையில் பயின்று, தன்னுள் உறங்கிக் கிடந்த பேராற்றல்களை பட்டை தீட்டி சமுதாய மறுமலர்ச்சிக்காக ஓயாமல் உழைத்ததன் காரணமாக, அவரிடம் வந்தமைந்ததுதான் ஆட்சியும், அதிகாரமும். இத்தகைய பன்முக ஆற்றல் கொண்ட முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களோடு இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைக்கும் என்று நான் கனவிலும்

நினைத்ததில்லை. ஆனால், என்னை திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தின், திருவண்ணாமலை மாவட்ட கழக செயலாளராகப் பொறுப்பு வழங்கியதோடு, நான்கு முறை திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை கீழ்பெண்ணாத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், பணியாற்ற வாய்ப்பளித்து பெருமைப்படுத்திய மாண்பினை நன்றியுணர்வோடு இந்தத் தருணத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

ஐந்து முறை செந்தமிழ்த் திருநாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, நாடும், ஏடும் போற்றும்வகையில், பல நல்ல சமுதாய நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய முத்தமிழ் அறிஞர், 1996–2001–ல், அவர் தலைமையில் அமைந்த அமைச்சரவையில் எனக்கு வீட்டு வசதித் துறை அமைச்சராக பொறுப்பு வழங்கி, அரவணைத்து வழிநடத்தியதை நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை மெய்ப்படுத்தும் வகையில் இன்று தலைவர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தில் "திராவிட மாடல்" ஆட்சி, இந்தியத் திருநாட்டின் பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் நடைபெறுகிறது என்றால், அதற்குக் காரணம் பேராற்றல் பெற்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் அவர் கற்ற உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்ற பால பாடம்தான் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பலமுறை குறிப்பிட்டு பெருமைப்படுத்தியுள்ளார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

கலைஞரின் மறைவிற்குப்பின் கழகம் கரைந்து காணாமல் போய்விடும் என்று கனவு கண்ட ஆதிக்க சக்திகளைப் பேராற்றலுடன் எதிர்கொண்டு, 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தனது ஆளுமையினை நிரூபித்து அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து, பிற மாநிலங்களும் பாராட்டிப் பின்பற்றும் திராவிட மாடல் ஆட்சி நடத்திடும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எனக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் பொறுப்பு வழங்கி, மக்கள் தொண்டாற்ற வாய்ப்பளித்துள்ளது மரபுவழி வந்த மாண்பிற்குச் சான்றாகும். அதற்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

சாதி பேதம்

சட்டங்களால் மட்டுமே சாதிபேதத்தை ஒழித்துவிட முடியாது. மனமாற்றமே அதை அகற்றும் மாமருந்து.

–கலைஞர்

"ஈடிணையற்ற முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர்"

முனைவர் கோவி. செழியன்,
அரசு தலைமைக் கொறடா.

தமிழகத்தின் தன்னிகரில்லாத தலைவர், திராவிட இயக்கத்தின் காவலராய், பெரியாரின் மாணவராய், அறிஞர் அண்ணாவின் தம்பியாய், தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் உலகுக்கு அரும்பணியாற்றிய முத்தமிழறிஞர் மூதறிஞர் தலைவர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு விழா என்பதும், மலர் வெளியீடு என்பதும் அவரது புகழுக்கும், பெருமைக்கும் மேலும், மேலும் பெருமை சேர்க்கும் மணிமகுடம் ஆகும்.

பிறந்த எல்லோருக்கும் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதில்லை. நூற்றாண்டு விழா கொண்டாட வயது மட்டும் சிறப்புக்குரியது இல்லை. வாழும் காலத்தில் செய்து காட்டிய சாதனைகள்தான் வாழ்ந்த காலத்திற்கு பிறகும் நிலைத்து நிற்கும். அப்படி புகழ் பெற்ற தலைவர்கள் சிலர்தான். அவர்களில், முதன்மையான முதல்வர், தலைவர் **கலைஞர்** மட்டுமே.

இந்திய வரைபடத்தின் அடையாளம் காணப்பட முடியாத கிராமத்தில் ஏழை–எளிய குடும்பத்தில் பிறந்து தன் முயற்சியால், தன் உழைப்பால், தன் அறிவால் தானாகவே உருவான உயர்ந்த தலைவர் **கலைஞர்**.

அவர் சாதித்த சாதனைகள் ஏராளம். தமிழக அளவில் அவர் முதல்வராக இருந்தபோது துவங்கிய திட்டங்களும், அவர் போட்ட சட்டங்களும்தான் இந்திய அளவில், பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. அவையாவன:

1. மாநில உரிமையை பேணிக் காக்க ராஜமன்னார் குழு அமைத்தது.

2. மனிதனை மனிதனே மாடு போல இழுக்கும் அவலம் கண்டு, கை ரிக்ஷாக்களை 3–6–1973–ல் ஒழித்து, இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியது.

3. போக்குவரத்து கழகங்களை உருவாக்கியது.

4. காவலர்களுக்கென 1996–ல் முதலாவது காவல் ஆணையத்தை உருவாக்கியது.

5. அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வகை செய்யும் வண்ணம், 2–12–1970 அன்று அர்ச்சகர் சட்டத்தை சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றியது.

6. அரசு விழாக்களிலும், கல்வி நிலையங்களின் விழாக்களின் தொடக்கத்திலும் பெ. சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணியம் காப்பியத்திலிருந்து "நீராருங் கடலுடுத்த" எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாட வேண்டும் என்ற ஆணையினை 1970 ஆம் ஆண்டு பிறப்பித்தது.

7. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியது.

8. சென்னை உயர் நீதிமன்றத்தில் முதன்முறையாக பட்டியல் இனத்தை சார்ந்த

திருமிகு வரதராஜன் அவர்களை நீதிபதியாக்கி, அழகுபடுத்தியது.

9. குடிசைமாற்று வாரியத்தை உருவாக்கியது.

10. குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தை கொண்டுவந்தது.

11. பார்வையற்றவர்களுக்கு கண்ணாடிகள் வழங்கும் கண்ணொளித் திட்டம் கொண்டுவந்தது.

12. டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு கைம்பெண் மறுமண உதவித் திட்டம்.

13. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம் கொண்டுவந்தது.

14. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தனி அமைச்சகத்தை உருவாக்கியது.

15. பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை 25 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாக உயர்த்தியது.

16. சேலம் உருக்காலை திட்டத்தினை கொண்டுவந்தது.

17. காவல் துறையில் பெண்களுக்கும் பணிப்பொறுப்புகள் வழங்கியது.

18. அனைத்து மாநில முதலமைச்சர்களும் அந்தந்த மாநிலங்களில் தேசியக் கொடியை ஏற்ற உரிமை பெற்று தந்தார். 15-8-1974 அன்று முதன்முதலாக கோட்டையில் கொடியேற்றியது.

19. விவசாயிகளின் பாசனத்திற்கு இலவச மின்சாரம் தந்தது.

20. கிழக்கு ஆசியாவிலேயே முதன்முதலாக 1989 ஆம் ஆண்டு கால்நடைப் பல்கலைக்கழகம் நிறுவியது.

21. மகளிர் முன்னேற்றத்திற்காக மகளிர் சுய உதவிக் குழு அமைத்தது.

22. மே தின விழா-சம்பளத்துடன்கூடிய விடுமுறை அறிவிக்கப்பட்டது.

23. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான 69 சதவீத இட ஒதுக்கீட்டினை செயல்படுத்தியது.

24. பெண்களுக்கு சொத்திலே சமபங்கு வழங்க 1989 இல் சட்டம் கொண்டுவந்தது.

25. பெண்களுக்கு அனைத்து அரசுப் பணிகளிலும் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

26. சிறுபான்மையினர் நல ஆணையம் 1989 இல் அமைத்து, சிறுபான்மையினர் நலன் காத்தது.

27. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் கொண்டுவந்தது.

28. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் கொண்டுவந்தது.

29. சிறுபான்மையினர் நலன் மேம்பட சிறுபான்மையினர் நலக் குழு 1990 இல் அமைத்தது.

30. சிறுபான்மை இசுலாமியர்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் 3.5 சதவிகித இடஒதுக்கீடு தந்தது.

31. "உழவர் சந்தை" திட்டத்தை கொண்டு வந்தது.

32. சாதி ஒழிப்புக்காக சமத்துவபுரங்களை உருவாக்கியது.

33. ஊரகப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் உள்ள ஏழை–எளிய மக்களின் போக்குவரத்து வசதிக்காக சிற்றுந்துகளை அறிமுகப்படுத்தியது.

34. நாட்டிலேயே முதன்முறையாக 1996 இல் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டினைக் கொண்டு வந்தது.

35. பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இலவச பஸ் பாஸ் திட்டத்தை செயல்படுத்தியது.

36. தமிழ் ஆட்சி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறைக்காக தனி அமைச்சகத்தை உருவாக்கியது.

37. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைய வழிவகுத்தது.

38. ஏழை–எளிய மக்களின் நலன் கருதி 2006 ஆம் ஆண்டு மே 13 ஆம் நாள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள் "ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்" திட்டத்தினைக் கொண்டுவந்தது.

39. கல்வித் துறையின் வளர்ச்சிக்காக அத்துறையினை இரண்டாகப் பிரித்து, பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை என இரு அமைச்சகங்களை உருவாக்கியது.

40. பொறியியல், மருத்துவம் போன்ற உயர் கல்விகளுக்கான நுழைவுத் தேர்வுகளை இரத்து செய்து சட்டம் இயற்றியது.

41. மூன்றாம் பாலினத்தவரை திருநங்கை என்று பெயர் சூட்டியது.

42. தீப்பிடித்து எரியாத கான்கிரீட் வீடுகளை முதன்முதலில் கட்டித் தந்து, சாதனை படைத்தது.

43. விவசாயிகள் பெற்றிருந்த 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்தது.

44. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தது.

45. சிறுபான்மையினர் சமூக, பொருளாதார, கல்வி முன்னேற்றத்திற்காக சிறுபான்மையினர் நல இயக்ககம் அமைத்தது.

46. ஏழை–எளிய மக்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியது.

47. ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கியது.

48. காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்தது.

49. தமிழ் மொழியை செம்மொழியாக அறிவித்து, அதற்கான மத்திய அரசின் ஆணையை பெற்றுத் தந்தது.

50. 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கியது.

51. செம்மொழிப் பூங்கா அமைத்தது.

52. அருந்ததியினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு அளித்து ஆணையிட்டது.

53. சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்தது.

54. 179 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைத்தது.

55. கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் அய்யன் திருவள்ளுவர் சிலையை ரூ.9.65 கோடி செலவில் அமைத்து, திருவள்ளுவருக்குப் பெருமை சேர்த்தது.

56. தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வழிவகுத்தது.

57. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழைக் கைம்பெண்களின் மகள்களுக்கான திருமண உதவித் திட்டம் கொண்டுவந்தது.

இதுபோன்ற ஏராளமான திட்டங்களையும், சட்டங்களையும் உருவாக்கி, சாதித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்**.

முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் வழியைப் பின்பற்றி மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களும் தற்போது தமிழகத்தினை வெற்றிப் பாதையில் கொண்டுசெல்லும் இவ்வேளையில், **கலைஞர்** அவர்களுக்கு நூற்றாண்டு விழா காண்பது என்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியினை அளிக்கிறது. எளியவனாகிய எனக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கியமைக்கும், இத்தகைய வாய்ப்பினை நான் பெற்றமைக்கும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

"வாழ்க திராவிட கொள்கை, வளர்க திராவிட மாடல் ஆட்சி".

திரு. எம். ஏ. லத்தீப்: கூவம் ஆற்றில் முதலை இருப்பதாகச் செய்தி வந்ததும் கூவம் ஆற்றுக்குப் பல காரியங்களாகப் போகக்கூடியவர்கள் இப்போது கூவம் ஆற்றை நெருங்காமலே இருக்கிறார்கள். ஆகவே, அங்கு அசுத்தம் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. இந்த வேலை முடிந்தவுடன் அரசாங்கமே கூவம் ஆற்றில் முதலை விடுவது பற்றி ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் 'முதலை' கூவம் ஆற்றில் போட்டிருக்கிறது. (சிரிப்பு)

தொகுதி 12, 8–12–1971, பக்கம் 31

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

DR. H.V HANDE, FORMER HEALTH MINISTER

The Legislative innings of Dr. Kalaingnar Karunanidhi has been outstanding and the longest. Starting from Kulithalai in the old Trichy district in 1957, and ending up at Tiruvarur in Thanjavur district in 2016, Dr. Kalaignar holds an All India record of contesting and winning in every General Election, during these six decades.


The first time I met Dr. Kalaignar was in 1964 in the lobby of the Madras Legislative Council. I was introduced to him by Prof. K. Anbazhagan who had got elected as M.L.C on behalf of the DMK from the Teachers' Constituency and I had got elected as M.L.C, as an Independent Member, from the Madras District Graduates' Constituency. I was 37 years old while Dr. Kalaignar was 41 years. He was then the Deputy leader of the DMK in the State Assembly. The very day I met him, I was mightily impressed with him, at the manner in which he was advising Prof. K. Anbazhagan, on the important issues that needed to be raised in the Legislative Council, from the oppostion benches. Mr. M. Bhaktavatsalam was then the Chief Minister.

After Arignar Anna became immortal, the mantle of Chief Ministership fell on the shoulders of Dr. Kalaignar, in 1969. During the Assembly debates, the Chief Minister Dr. Kalaignar, by virtue of his sharp wit and economy of words, used to counter the points raised by the opposition members and also satisfied the ruling party members with apt assurances. He was always kind towards me, eventhough I happened to be a strong critic of Dr. Kalaignar in the Legislative Assembly and I had also given him a tough fight in the Anna Nagar Assembly election in 1980.

At this point, I wish to recall an interesting episode. A few years after becoming the Chief Minister, Dr. Kalaignar received an Honorary Doctorate from the Annamalai University, a function to honour him was got up in the Rajaji Hall by the D.M.K Legislature Party, with the participation of the leaders of other political parties. Puratchi Thalaivar MGR, as the DMK treasurer had hosted the event. Thiru. Sa. Ganesan, the leader of the Swantantra Party, while paying his compliments, said "Kalaignar edayum thaangum idayam padaithavar; edayum thaakkum naavaiyum (lashing tongue) padaithavar". While paying my compliments, I said "There is none from Tamilnadu, strong enough to give a fight to the centre (Mrs. Indira

Gandhi was the Prime Minister) after Aringar Anna's departure; however, if at all there is someone who can fill this void, it can only be Dr. Kalaignar". In his reply, Dr. Kalaignar, in his inimitable style, recalling the words of Thiru. Sa. Ganesan, said "Dr. Hande avargalin naavai sattamanrathil kanden (because I was harshly criticizing him in the Assembly), avarudaiya idayathai ingu kanden". There was great applause from the audience. In showing ready wit and giving masterly replies Dr. Kalaignar had none to equal him.

Despite all the 'troubles' I gave Dr. Kalaignar both inside and outside the Legislative Assembly, he showed his noble gesture, when he was Chief Minister, which I will never forget. On 20.01.1997, just a day before the release of my 'English Prose rendering of Kamba Ramayanam by Dr. Shankar Dayal Sharma, the late President of India, I received a lovely 'MESSAGE' from Chief Minister Dr. Kalaignar, personally delivered to me, by an orderly, a copy of which I am giving hereunder, for publication. I cherish this noble act of his, with fond memory.



M. KARUNANIDHI
CHIEF MINISTER

SECRETARIAT
CHENNAI - 600 009
Dated 20.1.1997

MESSAGE

I am happy to know that the Bharatiya Vidya Bhavan has come forward to publish an English version of the "Kamba Ramayanam" in prose-form rendered by Dr.H.V. Hande.

Kamba Ramayanam is considered to be one among the best Literary Works in Tamil Language. The Poet Kambar rendered his work Ramayanam in Tamil with a vision of Tamil culture and traditions.

His spontaneous poetic sense is so powerful that his characters live through action and dialogue. Owing to this excellent dramatic power, his work has been called as 'Kamba Natakam'.

I hope, this English version of Kamba Ramayanam reflects the real spirit and vision with which Poet Kambar rendered his work.

It is appropriate that the President of India, a profound scholar of vision and social mission, is presenting this.

I convey my best wishes and warm greetings on this occasion.

M.Karunanidhi

[M. KARUNANIDHI]

To
Dr. H.V. HANDE,
No.30, Uthamar Gandhi Salai,
Chennai - 600 034.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. ஆற்காடு நா. வீராசாமி,
முன்னாள் அமைச்சர்

திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் அரசியலில் பங்கேற்பது என முடிவெடுத்தபின் நடைபெற்ற 1957 ஆம் ஆண்டு, சட்டமன்ற பொதுத் தேர்தலில் தலைவர் கலைஞர் அவர்கள் தன் முதல் வெற்றியைப் பதிவு செய்ததையும், இடையில் சில ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த காலம் தவிர, தான் மறையும் வரை சட்டமன்ற உறுப்பினராகச் செயலாற்றியதையும் அனைவரும் அறிவோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், கழகம் முதன் முதலில் ஆட்சியமைத்த 1967 ஆம் ஆண்டு, நான் ஆற்காடு தொகுதியில் போட்டியிட்டு முதன் முதலில் சட்டப்பேரவையில் அடியெடுத்து வைத்தேன். பின்னர் 1971–லும் ஆற்காடு தொகுதியிலேயே மீண்டும் வெற்றி பெற்றேன். 1977–1983 வரை மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளேன். இதனை அடுத்து, 1989 ஆம் ஆண்டு தேர்தலில் புரசைவாக்கத்திலும், 1996, 2001 மற்றும் 2006 தேர்தல்களில் அண்ணா நகர் தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டு வரை சட்டப் பேரவையில் தலைவர் கலைஞர் அவர்களுடன் பணியாற்றும் அரிய வாய்ப்பைப் பெற்றேன். தனது நீண்ட நெடிய அரசியல் பயணத்தில், கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராகவும், பின்னர் முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த காலங்களில் பேரவையில் அவர் ஆற்றிய உரைகளையும், செய்த சாதனைகளையும் உடனிருந்து, கவனித்து வியந்திருக்கின்றேன். இன்னமும் சொல்வதென்றால், நான் மின்சார வாரியத்தில் பணியாற்றும்போதே பேரவையில் அவர் பேசுவதை உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளேன். சில சமயங்களில் அவருக்குத் தேவையான விவரங்களைத் திரட்டிக்கொண்டு வந்து கொடுத்துள்ளேன். நான் மின் வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே, பேராசிரியர் அவர்கள் வீட்டுக்குச் செல்வது வழக்கம். பேரறிஞர் அண்ணா அவர்கள் பேராசிரியர் இல்லத்தில் வந்து தங்கிச் செல்லும்போதெல்லாம், அவரது எழுத்துக்களையும், பேச்சுகளையும் தட்டச்சு செய்து கொடுப்பேன். கலைஞர் அவர்கள் பேராசிரியர் வீட்டுக்கு வரும்போது அவருடன் சட்டமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் குறித்துப் பேசுவேன்.

ஒரு சமயம், மின் வாரியத்தில், ஒரு துணை மின் நிலையம் அமைக்க எருக்கஞ்சேரி பகுதியில் நிலம் கையகப்படுத்தும்போது, நடைபெற்ற சில முறைகேடுகள் எனக்குத் தெரிய வந்தன. அப்போது காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தார். நான் கலைஞரிடம் இந்த விவரங்களைக் கூறி இதுகுறித்து சட்டசபையில் பேசுமாறு கேட்டுக் கொண்டேன். கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் இந்தப் பிரச்சனையை எழுப்பி, சிறப்பாகப் பேசினார்.

பேரவையில் அரசுக்குப் பெரும் சங்கடம் ஏற்பட்டது. பின்னர், இந்த ஊழல் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக அரசு அறிவித்தது.

இந்நிகழ்ச்சி குறித்து, பின்னாளில் புரசையில் நான் சட்டமன்ற வேட்பாளராகத் தேர்தல் களத்தைச் சந்தித்தபோது, 31.12.1989 அன்று நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், கலைஞர் அவர்கள் பின்வருமாறு பேசினார்.

"ஆற்காடு வீராசாமி அவர்கள் மின்சார இலாகாவிலே பணியாற்றிய அந்தக் காலம் முதல் தி.மு. கழகத்தின்பால் ஆர்வமும், அதனுடைய வளர்ச்சியிலே அக்கறையும் கொண்டவர். எதிர்க்கட்சித் துணைத் தலைவராக நான் இருந்த காலத்தில், 'எருக்கஞ்சேரி ஊழல்' குறித்த ஆதாரங்களை என்னிடம் தந்து, அது பற்றி சட்டப்பேரவையிலே என்னைப் பேசுங்கள் என்று சொன்னவர் ஆற்காடு வீராசாமி. அன்று முதல் அவரிடத்திலேயே எனக்கு ஒரு பற்று". இவ்வாறு கலைஞர் அவர்கள் இதனைப் பற்றி நினைவு கூர்ந்து பேசினார்.

கலைஞருடைய பொது வாழ்விலும், அரசியல் பணியிலும், ஜனநாயகக் கடமை ஆற்றுவதிலும், சட்டப் பேரவைப் பணி பெரும் பங்கு வதித்தது. அவர் முதலமைச்சராக இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், சட்டப் பேரவைக்கு வரும்போது, சட்டப் பேரவையில் நடைபெற இருக்கும் விவாதங்களுக்குத் தேவையான விவரங்களுடன்தான் வருவார். முதலமைச்சராக இருக்கும்போது, அன்றைக்கு எதிர்க்கட்சியினர் என்ன பிரச்சினைகள் கிளப்பக்கூடும் என அனுமானித்து, அதற்குத் தேவையான தகவல்களைத் தயார் செய்து கொண்டு வருவார். சட்டப் பேரவை நடைபெறும் நாட்களில் நாட்டில் இயற்கைப் பேரிடராலோ, அல்லது வேறு விதமான சம்பவங்களோ நடைபெற்றால், அவை குறித்து எதிர்க்கட்சியினர் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானமோ அல்லது ஒத்திவைப்பு தீர்மானமோ கொண்டு வருவர். கலைஞர் அவர்கள் இதுபோன்ற சமயங்களில், மேற்படி தீர்மானங்களை எதிர்கொள்வதற்கு கால அவகாசம் கோரமாட்டார். பேரவைத் தலைவரிடம் உடனடியாக, மேற்படி தீர்மானங்களைக் கொண்டுவர எதிர்க்கட்சியினரை அனுமதிக்கச் சொல்வார். பின் அவற்றுக்குச் சரியான பதில்களையும் தக்க தீர்வுகளையும் வழங்குவார்.

கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் முதலமைச்சராகவோ, எதிர்க்கட்சித் தலைவராகவோ இடம் பெற்றிருந்த காலத்தில், தவிர்க்க முடியாத வேறு கடமை இருந்தாலன்றி சபைக்கு வரத் தவறமாட்டார். பேரவை தொடங்க சில வினாடிகள் முன்னதாகவே வந்து அமர்வார். அந்த நாள் நிகழ்ச்சி முடியும் வரையில் அவையிலேயே இருந்து அனைவரது கருத்தையும் கேட்பார். முதலமைச்சர் என்னும் பொறுப்பை ஏற்றுள்ளதால், அனைத்துத் துறைகள்பற்றியும் எழக்கூடிய கேள்விகள், சந்தேகங்களுக்குத் தகுந்த விளக்கம் தரக்கூடியவராக இருப்பார். துறை பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் பேசும்போது, தேவையான திருத்தத்தை அந்தந்த கட்டத்திலேயே விளக்கியுரைப்பார். அவர் மீதோ, அரசின் மீதோ யாரேனும், ஏதேனும் குற்றச்சாட்டுகள் கூறிவிட்டால்,

அவற்றுக்கு தக்க பதில்களை உடனே தருவார். அவர் ஒரு சிறந்த ஜனநாயகவாதியாக இருந்ததால் எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளையும் ஏற்று, ஆவன செய்வார். இதற்கு முரணாக டெல்லியில், பாராளுமன்றத்திற்குப் பிரதமரை வரவழைப்பதற்காக, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த அவலத்தையும் நாம் பார்க்கின்றோம். இந்நிலையில் நமது கலைஞரின் மேன்மையை எண்ணி மகிழ்கின்றோம்.

நம் பேரவையின் பணி நேரத்தில் முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரமாக வைத்திருப்பது மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. நாட்டு நடப்பு, அரசின் கடமை, அரசுத் துறைகளின் பணிகள் முதலானவை பற்றி உண்மையான தகவலை மன்ற உறுப்பினர்கள் பெறுவதற்காகவே கேள்வி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த கேள்விகள்–பதில்கள் மூலமாகவே பொதுமக்கள் பல உண்மைகளையும், தகவல்களையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். எனவே, இதன் முக்கியத்துவத்தை அறிந்த கலைஞர் அவர்கள், மிகுந்த கவனத்துடன் விடையளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். விடையளிக்கும்போது அதில் சொற்சுவை, பொருட்சுவை தோன்றக் கூறுவது அவரது முறை. சில சமயங்களில் துணை வினாக்களுக்கு விடையளிப்பதில் அமைச்சர்கள் எவரேனும் சிரமப்படுவதாக உணர்ந்தால் கலைஞர் அவர்கள் குறுக்கிட்டு, நகைச்சுவையாகப் பதிலளிப்பார்.

ஒரு முறை, எதிர்க்கட்சியில் இடம் பெற்றிருந்த டாக்டர் ஹண்டே அவர்கள் தி.மு.க. ஆட்சி திறமையுடன் செயல்படவில்லை என்று சாடுவதற்கு முற்பட்டு, இந்த ஆட்சி மூன்றாந்தர ஆட்சியாக உள்ளது என்றார். உடனே முதல்வர் கலைஞர் அவர்கள் "டாக்டர் ஹண்டே கூறியதை நான் மறுக்கவில்லை. இந்த ஆட்சி நான்காந்தர ஆட்சிதான். நாட்டிலுள்ள நான்காந்தர மக்களுக்காக (சூத்திரர்களுக்காக) நடைபெறுகின்ற ஆட்சிதான் இது" என்றார்.

அடித்தட்டு மக்களான நான்காம் வருணத்தினருக்குப் பாடுபடும் ஆட்சியை, என்றைக்கும் மேல் வகுப்பார் தரமான ஆட்சி என்று ஏற்க மறுப்பது அவர்தம் இயல்பு என்னும் கருத்துபட பதில் அளித்தார். கலைஞர் அவர்கள் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அடித்தட்டு மக்களுக்காகத்தான் கழக ஆட்சி அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டத் தவறியதில்லை.

மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் திருச்செந்தூர் ஆலய வளாகத்துக்குள், கோயில் அறங்காவல் துறை அதிகாரி சுப்பிரமணியம் பிள்ளை என்பவர் மர்மமான முறையில் மரணமுற்றதை ஒட்டி, எதிர்க்கட்சிகள் அனைத்தும் நீதி விசாரணை கேட்டு குரல் கொடுத்தன. மேலும் கோயிலில் இருந்த முருகனின் வேலும் காணாமல் போனதாக தகவல் வெளியானது. அதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி பால் கமிஷன் விசாரணை நடத்தி, அறிக்கை தந்தும், அதனை அரசு வெளியிடாமல் காலம் கடத்தியது. இந்நிலையில், அந்தக் கமிஷனின் அறிக்கையின் நகல், கலைஞருக்குக் கிடைத்தது. அவர் அதனை வெளியிட்டு, மக்கள் உண்மையை அறியச்

செய்து விட்டார். அதற்காக அப்போதைய அரசு, கலைஞர் மீதும், அவருக்குத் துணை செய்தவர் என்று சந்தேகிக்கப்பட்டவர் மீதும் வழக்கு போட்டு கைது செய்ய முயன்றது. ஆனால், பால் கமிஷன் கொடுத்த அறிக்கையின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இதனைக் கண்டித்து கலைஞர் அவர்கள் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நீதி கேட்டு நெடிய நடைபயணம் மேற்கொண்டார். அவருடன் நானும், கழக முன்னோடிகளும், பல்லாயிரக்கணக்கான கழகத்தினரும், பொதுமக்களும் நடைபயணம் மேற்கொண்டோம்.

இதுகுறித்து ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர், பேரவையில் கலைஞரைக் கிண்டல் செய்யும் ஆர்வத்தில் "கருணாநிதி திருச்செந்தூர் முருகனின் வேலைக் காணவில்லை என்று நடைபயணமாக திருச்செந்தூர் கோயிலுக்குச் சென்றார். அவரைப் பார்க்க விரும்பாத முருகன் எங்கள் தலைவர், முதலமைச்சரின் இராமாவரம் தோட்டத்திற்கே வந்து விட்டார். அதனால் கருணாநிதி போனபோது, திருச்செந்தூர் கோயிலில் முருகன் இல்லை" என்று குறிப்பிட்டார். அப்போது கலைஞர் "பேரவைத் தலைவர் அவர்களே! இதுவரையில் நான் திருச்செந்தூர் கோயிலில் இருந்து வேல் மட்டும்தான் காணாமல் போயிற்று என்று எண்ணியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் பேசுவதைப் பார்க்கும்போது முருகன் சிலையும் காணாமல் போயுள்ளது என்று தெரிகிறது" என்று கூறிவிட்டு அமர்ந்தார். இதனால் அவையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூட சிரித்துவிட்டார். இவ்வாறு நகைச்சுவையுடன் தன் கருத்தை வலியுறுத்துவதில் வல்லவர் கலைஞர்.

சில சமயங்களில் பேரவையில் வினாக்களுக்கு விடையளிக்கும்போது நகைச்சுவையைக் கலந்து விடுவார், கலைஞர்;

திரு. சுப்பராயன் (இந்திய கம்யூனிஸ்ட்): திருப்பூரை அடுத்துள்ள அனுப்பர்பாளையத்தில் ஒரு காவல் நிலையம் அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

கலைஞர்: 'கரு' உருவாகி இருக்கிறது. பத்து மாதத்தில் முடிவடையும் (அவையிலே சிரிப்பொலி எழுகிறது).

கலைஞர் அவர்கள் தற்போது அத்தகைய கருத்துரு ஏதுமில்லை. சில காலம் கழித்து பார்க்கலாம் என்னும் பதிலைத் தான் இவ்வாறு கூறினார். ஆனாலும் திரு. சுப்பராயன் விடாமல் தொடர்ந்து பின்வருமாறு கேட்டார்.

திரு. சுப்பராயன்: என் தொகுதியைச் சேர்ந்ததும், அரசு தலைமைக் கொறடா முபாரக்கின் சொந்த ஊருக்கு அருகே ஒரு காவல் நிலையம் அமைக்கப்படுமா?

கலைஞர்: "முபாரக் சொந்த ஊரில் குடியிருக்கவில்லை. வேறு ஊரில் வசிக்கிறார். எனவே அங்கு காவல் நிலையம் தேவையில்லை;" இதில் உள்ள கிண்டலை அவையிலுள்ளோர் உணர்ந்து சிரித்தனர்.

பிறிதொரு முறை உறுப்பினர் ஒருவர் நாமக்கல் ஆஞ்சநேயர் கோயிலின் அசையும் சொத்து எவ்வளவு, அசையா சொத்து எவ்வளவு என்று துணைக் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

மூல வினாவுக்கு, சம்பந்தமில்லாத இத்துணைக் கேள்விக்கு, அறநிலையத் துறை அமைச்சரிடம் விவரக் குறிப்புகள் இல்லை. அவர் சிறிது தடுமாற்றத்துடன் பதில் சொல்ல எழுந்தார். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைச்சரைக் கையசைத்து அமர்த்திவிட்டு,

"அசையும் சொத்துக்கள் அங்கு வரும் பக்தர்கள்; அசையாச் சொத்து அங்கே நிற்கும் ஆஞ்சநேயர்" என்று பதில் அளித்து அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தினார்.

மற்றொரு முறை, உறுப்பினர் ஒருவர் நாட்டியத்திலிருந்து நாடகம் வந்ததா அல்லது நாடகத்திலிருந்து நாட்டியம் வந்ததா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன் எனக்கூறி துணைவினா ஒன்றினை எழுப்பினார். செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களைச் சிக்கலுக்குள்ளாக்கும் வகையில் இந்தத் துணை வினாவினை எழுப்பினார். கலைஞர் அவர்கள் எழுந்து பின்வருமாறு பதிலளித்தார்:

கலைஞர்: தலைவர் அவர்களே, நாடகத்திலிருந்து நாட்டியம் வந்ததா, நாட்டியத்தில் இருந்து நாடகம் வந்ததா என்பதற்கு ஒரே பதில் முட்டையிலிருந்து கோழி வந்ததா, கோழியிலிருந்து முட்டை வந்ததா என்பதுதான்.

இவ்வாறு கலைஞர் அவர்கள் தன்னுடைய சாதுரியமான நகைச்சுவை கலந்த பேச்சினால், அவர் முதலமைச்சராக இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் பேரவையை உயிர்ப்புடன் வைத்திருப்பார்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது"

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் கலைஞர்.

பேரவையில் பல்வேறு துறைகளின் மானியங்கள் மீது நடைபெறும் விவாதங்களுக்கு முன்பு, ஒவ்வொரு துறையைப் பற்றியும் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பார்.

நான் அமைச்சர் பொறுப்பில் இருந்த காலங்களில் எனது துறை சார்ந்த மானியங்கள் விவாதத்துக்கு வரும் முன்பு அவரது ஆலோசனையைப் பெற்று, தேவையான நிதி ஒதுக்கீட்டையும் பெறுவேன். நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப்பில் இருந்தபோது, தமிழ்நாட்டில் 1330 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தன. அவற்றில் சுமார் 150 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்த கட்டடம் இல்லை. நிதித் துறை அதிகாரிகள் ஆண்டுக்கு 40 அல்லது 50 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டும் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கமுடியும் எனக் கூறினர். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், எனது வேண்டுகோளை ஏற்று, அந்த ஆண்டிலேயே அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யும்படி, நிதித் துறை செயலாளருக்கு உத்தரவிட்டார். மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்போது, இதற்கான அறிவிப்பைச் செய்யும்படி என்னிடம் கூறினார். இதுபோல அனைத்துத் துறைகளுக்கும்,

தேவையான திட்டங்களைச் செயல்படுத்த அமைச்சர்களுக்கு ஊக்கம் அளிப்பார்.

கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், 1997–1998–ல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கும் திட்டம் துவங்கப்பட்டது. 1998–ல், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி அலுவலகம் கட்டும் திட்டம் துவக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

மாவட்டங்கள்தோறும், மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டன. மாவட்டந்தோறும், ஒரு மருத்துவக் கல்லூரி என்னும் திட்டமும் துவங்கப்பட்டது. மதுரையில் உயர் நீதிமன்ற கிளைக்காக, மிகப் பெரிய கட்டடம் கட்டப்பட்டது.

அவரது ஆட்சிக் காலத்தில் அவர் செய்த சாதனைகளை சொல்லி மாளாது.

தமிழக சட்டமன்ற வரலாற்றில், தொடர்ந்து ஐம்பது ஆண்டுகள் சட்டமன்றப் பணிக்காக பொன்விழா கண்ட தலைவர் நமது கலைஞர். 2007 ஆம் ஆண்டு மே திங்கள், 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் மிகச்சிறப்பாக நடைபெற்ற பொன் விழாவில் நானும் பங்கேற்றது எனது பெரும்பேறாகும்.

காலமெல்லாம் சிறந்த ஜனநாயகவாதியாக வாழ்ந்த கலைஞர் அவர்கள், தான் போற்றிய சட்டமன்றத்துக்கு பிரம்மாண்டமான முறையில் கட்டடம் ஒன்றைக் கட்டுவித்து, தன் ஆட்சிக் காலத்திலேயே அங்கு சட்டமன்றக் கூட்டத் தொடரையும் நடத்திக் காட்டினார். ஆயினும், காழ்ப்புணர்வு கொண்ட ஆட்சியாளர்கள் வசம் தமிழ்நாடு போன பின்பு, அந்த கட்டடம் மருத்துவமனையாக்கப்பட்டது. கலைஞர் அவர்களின் வழி வந்து, அவரது பாணியில் கழகத்தையும், ஆட்சியையும் நல்ல முறையில் நமது தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார். இன்று நாடெங்கும் திராவிட மாடல் ஆட்சி என்று அறியப்படும் சிறப்பான ஆட்சியை வழங்கி வரும் நமது முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், கலைஞர் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் விரைவில் சட்டப் பேரவைக்குப் புதிய கட்டடம் கட்டுவார் என்று நம்புகின்றேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. பொன். முத்துராமலிங்கம்,
முன்னாள் அமைச்சர்

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில், அவரது பல்துறை ஆற்றலையும், பல்வேறு கோணங்களில் மக்கள் மத்தியில் பகிர்ந்துகொள்ள முடியும். ''வீழ்வது நாமாகயிருப்பினும், வாழ்வது தமிழாகட்டும்'' என்ற லட்சிய முழக்கத்துடன் வாழ்ந்து வழிகாட்டியவர். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் ஆற்றலைப் பெற்றவர் என்பதற்கான சான்றுகளாகவும் சாட்சியங்களாகவும், நூற்றுக்கணக்கான இலக்கிய, இலக்கண, நாடக நூல்கள் அவரால் உருவாக்கப்பட்டு, வருங்கால சமுதாயத்திற்கு வழங்கப்பட்டுள்ளன என்பது பதிவு செய்யப்பட்ட அவரது வாழ்க்கையின் வரலாற்றுப் பக்கங்களாகும். மக்களின் சமூக–பொருளாதார–அரசியல் வாழ்வியலில், முத்தமிழறிஞர் கலைஞரின் வழிகாட்டும் நெறிகள் முத்தாய்ப்பான இடத்தைப் பெற்றுள்ளன என்பதற்கு அவரின் எழுத்துலகப் படைப்புகளே சாட்சியங்களாகும். குறிப்பாக ''நெஞ்சுக்கு நீதி'' என்ற அவரது வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் தந்தை பெரியாரின் பகுத்தறிவு, சமூக நீதி, பெண்ணுரிமை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளையும், பேரறிஞர் அண்ணாவின் அரசியல் கோட்பாடான மக்களாட்சியின் மாண்புகளை உள்ளடக்கிய கருத்துகளையும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கின்ற அரசியல் ஒழுக்க நெறிகளையும் உள்வாங்கிக்கொண்டு, தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதித்துவ மன்றமான சட்டமன்றத்தில் ஆற்றிய மக்கள் சார்ந்த பணி என்பது வியக்கத்தக்கது! வியப்பூட்டுவது!! அதுமட்டுமல்ல, தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் பணியாற்றியதோடு ஆட்சி அதிகாரம் தம்மிடம் இருந்த பொழுதும், ஆட்சி அதிகாரம் இல்லாத பொழுதும், தன் தலைமையிலான அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிமை குன்றாமல் பார்த்துக்கொள்வதில் மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் செயல்பட்டு வந்தவர். கழகச் செயல்வீரர்களின் போராட்ட குணம் கிஞ்சிற்றும் முனை மழுங்கிவிடாமல் பாதுகாப்பதிலும், அதனைப் பக்குவமாகப் பயன்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவர்தான்! சட்டமன்ற விவாதங்களில் மரபுசார்ந்த சொற்றொடர்களைத்தான் பயன்படுத்துவார். எந்தச் சூழ்நிலையிலும் மரபுகளுக்கு முரண்பட்ட வார்த்தைகளை அவரது சட்டமன்ற வரலாற்றில் என்றும் பயன்படுத்தியதில்லை. சூடான சட்டமன்ற விவாதங்களைக் கட்டுக்குள் கொண்டுவர, பொருத்தமான நகைச்சுவைக் கருத்துக்களை வெளிப்படுத்தி விவாதங்களின் கடுமையை மென்மையாக்கிவிடுவார். இப்படி எத்தனையோ நிகழ்வுகளை நாட்கணக்கில் எடுத்துச் சொல்லிக்கொண்டே போகலாம். இத்தகைய வரலாற்றுப் பெருமை பெற்ற மன்றத்திற்கு 1989 ஆம் ஆண்டு நான் மதுரை மேற்குத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகி, மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞரால் அவரது அமைச்சரவையில் அமைச்சராகப் பணியாற்ற

வாய்ப்பளித்த காலக்கட்டம். இந்த சூழ்நிலையில் அன்றைய பிரிக்கப்படாத மதுரை மாவட்டப் பகுதிகளான தேனி–போடி ஆண்டிப்பட்டி பகுதிகளில் சாதி மோதல்கள் உருவாகி, இரண்டு நாட்களில் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். செய்தியறிந்த மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உடனடியாக என்னை அழைத்து கலவரம் நடைபெறும் பகுதிக்குச் செல்லப் பணித்ததோடு, மாண்புமிகு அமைச்சர் தங்கவேல் அவர்களையும் உடன் அழைத்துச்சென்று கலவரத்தை அடக்கி அமைதிப்படுத்துவதோடு, அவ்வப்பொழுது என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவித்து, விளக்கம் பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆணையிட்டார்கள். காலதாமதமின்றி மாண்புமிகு அமைச்சர் தங்கவேலுவை உடன் அழைத்துக்கொண்டு கலவரப் பகுதிக்குச் சென்றோம். மதுரை அரசினர் சுற்றுலா மாளிகையிலிருந்து கிளம்பும்பொழுது, ஒன்றிய அரசில் அமைச்சர்களாக இருந்த மதிப்புமிகு திரு. சிதம்பரம் அவர்களும், திரு. அருணாசலம் அவர்களும் உடன் சேர்ந்துவருகிறோம் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அவர்களையும் அழைத்துக்கொண்டு தேனி–போடி–மீனாட்சிபுரம்–சின்னமனூர் ஆகிய கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டோம். ஆனால், அங்கு கலவரம் இன்னும் ஓய்ந்தபாடில்லை, தொடர்வதற்கான அறிகுறிகளே தெரிந்தன. நாங்கள் கலவரப்பகுதிக்குச் சென்றபொழுது வீடுகள் எரிந்து கொண்டிருந்தன. பாதிக்கப்பட்டவர்கள் கண்ணீர் மல்கச் சொன்ன செய்திகள் கல்லையும் கரைத்துவிடும் சோகம் தோய்ந்த செய்திகளாகும். களநிலைமையின் தீவிரத்தையும், அவசரத்தையும் உணர்ந்த நான் உடனடியாக தலைமைச் செயலாளருடன் தொடர்புகொண்டு, கலவரத்தில் வீழ்ந்தவர்களுக்கு எவ்வளவு இழப்பீடு கொடுக்கலாம் என்று வினவினேன். அவர் சட்டப்படி இவ்வளவுதான் கொடுக்கலாம் என்றார். அவர் குறிப்பிட்ட தொகை மிகவும் குறைவாக இருந்தமையால் உயர்த்தித்தர வாய்ப்பு உண்டா என வினவினேன். ஆனால் அவர் அதற்குமேல் இயலாது என்று கூறிவிட்டார். அவசர அவசியம் கருதி, நேரடியாக மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞரைத் தொடர்பு கொண்டு விவரம் தெரிவித்தேன். மாண்புமிகு முதல்வரை தேனி காவல் நிலைய தொலைபேசி மூலமாகத்தான் தொடர்பு கொண்டேன். நான் நிலைமையை விளக்கவும், அவசரச் சூழ்நிலைகளை சரியாக புரிந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் "நீயும், அமைச்சர் தங்கவேலும் சேர்ந்து நிலைமைக்கேற்ற முடிவுகளை எடுத்து அறிவியுங்கள், அமைதியை நிலைநாட்டுங்கள், உங்களின் அறிவிப்புகளே தமிழக அரசின் அறிவிப்புகளாகவும், ஆணைகளாகவும் வடிவம் பெறும் எனத் தெரிவித்ததோடு, மேலும் அழுத்தமாக வலியுறுத்தியது எதுவெனில் "நான் விரும்புவதும், எதிர்பார்ப்பதும் "அமைதி" மீண்டும் கலவரம் வெடிக்காது என்பதற்கான "உறுதிப்பாடு" மட்டும்தான்" என்றார். முதலமைச்சரின்

ஆணையை ஏற்றுக்கொண்டு இரவும் பகலுமாக ஓய்வின்றிச் செயல்பட்டு, கலவரத்தை அடக்கி அமைதிப்படுத்திவிட்டு, கலவரம் ஓய்ந்து, அமைதி மீண்டது என்ற செய்தியை தெரிவித்தபொழுது மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் எங்களைப் பாராட்டினார். அப்பொழுது எங்களுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டு உடன்வந்த காவல் துறை அதிகாரி துணிச்சல் மிக்கவர் எனப் பெயர் பெற்ற திரு. தேவாரமாவார். இந்த நிகழ்வு மக்களாட்சியில், அதிகாரிகள் சட்டத்தைப் பற்றியும் சட்ட வரையறைகளைப் பற்றியும் மட்டும்தான் ஆலோசனை வழங்க முடியும். ஆனால், அதிகாரம் படைத்த மக்கள் பிரதிநிதிகள் அவசிய அவசரத் தேவைக்கேற்ப, சட்டத்தை மாற்றி அல்லது புதியதாக உருவாக்கி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற மக்களாட்சித் தத்துவங்களை நடைமுறைப்படுத்தியதோடு, மக்களுக்காகத்தான் சட்டமேயல்லாமல், சட்டத்திற்காக மக்கள் அல்ல என்னும் மக்களாட்சித் தத்துவத்தின் நோக்கத்தை முத்தமிழறிஞர் செயல்படுத்திக்காட்டினார் என்பது எங்களை வியப்பில் ஆழ்த்தியது. இந்த நிகழ்வினைத் தொடர்ந்து நான் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் அமைச்சரவையில் உணவுத் துறை அமைச்சராக பணி மேற்கொண்டபொழுது நடந்த நிகழ்வுகள்மூலம் தான் முத்தமிழறிஞர் கலைஞர் மக்கள் பிரதிநித்துவ மன்றங்கள்மீதும் அமைச்சரவையின்மீதும் அவர் வைத்துள்ள கூட்டுப்பொறுப்பின் வெளிப்பாடும், நிர்வாக அமைப்பின் (Executive) அதிகார வரம்பு பற்றிய தீர்க்கமான புரிந்துணர்வும் வெளிப்பட்டது மட்டுமல்லாமல்; இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களை மிகவும் நுணுக்கமாக அறிந்து வைத்திருக்கும் அவரது ஆற்றலும் வெளிப்பட்டது. முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற நிலையில், உணவுத் துறை அமைச்சராகிய என்னை அழைத்து சாமானிய–சாதாரண ஏழை மக்களின் சங்கடங்களைக் குறைக்கும் வகையில் நியாயவிலைக் கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவின் அரிசியினைப் பெற்றுக்கொள்ள ரூ.2–க்கு ஒரு கிலோ அரிசி என விலையைக் குறைத்து வழங்க முடியுமா என ஆய்வு செய்து எனக்கு அவசரமாகத் தகவல் தெரிவிக்க வேண்டுமென ஆணையிட்டார்கள். உணவுத் துறை அமைச்சர் என்ற முறையில் துறைச் செயலாளர்களையும் நிதித் துறைச் செயலாளரையும் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளோடும் பலநாட்கள் கலந்தாலோசித்து, நீண்ட ஆய்விற்குப் பின்னர், மேற்கண்ட அதிகாரிகளின் முழுமையான ஒப்புதல் அடிப்படையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.2–க்கு வழங்கலாம், அதுவும் 20 கிலோ வழங்கலாம் எனவும், அதனால் ஏற்படும் நிதிச்சுமை அதிக அளவில் இருக்காது என்ற முடிவிற்கு வந்த நிலையில், இந்தத் தகவலை மாண்புமிகு முதலமைச்சரிடம் உடன் தெரிவித்தேன். அவர்களும், தொடர்புடைய அதிகாரிகளோடு தலைமைச் செயலகமான கோட்டைக்கு வந்துவிடுமாறு பணித்தார்கள், அவர்களின் ஆணைப்படி தலைமைச் செயலகத்தில் அமைச்சரவை கூடுமிடத்தில் அனைவரும் கூடியமர்ந்தோம். மாண்புமிகு முதல்வர் உணவுத் துறை அமைச்சரான

என்னைப்பார்த்து, 'அந்தத் திட்டத்தை விளக்கிச்சொல்' என்றார்கள். அந்தக்கூட்டத்தில், தொடர்புடைய அதிகாரிகளும், தலைமைச் செயலாளரும், அமைச்சர்களில் சிலரும் அமர்ந்திருந்தனர். நான் முதலமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் எடுத்த நடவடிக்கைகளை விளக்கிவிட்டு, ஒரு கிலோ அரிசி ரூ.2 என 20 கிலோ அரிசி வழங்கலாம் என்று கூறினேன். அப்பொழுது அங்கிருந்த தலைமைச் செயலாளர் "என்னைக் கேட்காமல் எப்படி இந்த முடிவிற்கு வந்தீர்கள்" என்று வினவினார். முதலமைச்சர் முன்னிலையில், முதலமைச்சரின் ஆலோசனைக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக, துறை சார்ந்த அதிகாரிகளுடன் தீர்க்கமாக ஆய்வு செய்து எடுக்கப்பட்ட இந்த முடிவுகளை விமர்சித்து தலைமைச் செயலாளர் கேட்ட கேள்வியும், அவரது தொனியும் என்னை உடன் பதில் தெரிவிக்க வேண்டுமென்ற கட்டாயத்தை உருவாக்கியது. உடனே நான் ஆங்கிலத்தில் தலைமைச் செயலாளர் அவர்களே, நீங்கள் எனக்கு ஆட்சித் தலைவரோ அல்லது நிர்வாகத் தலைவரோ அல்ல. மாண்புமிகு முதல்வர் மட்டும்தான் எல்லாம் என்று கூறினேன். (Mr. Chief Secretary, you are not my Boss and my Boss is Honourable Chief Minister) இந்தக் கட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லவேண்டிய சூழ்நிலை உருவானது. என்ன சொல்லப்போகிறாரோ என்ற அச்சம் என்னை நிலைகுலையச் செய்தது. அந்தக்கட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளரைப் பார்த்து ஆங்கிலத்தில் "பொன். முத்துராமலிங்கம் எனது அமைச்சர் மட்டுமல்ல என்னுடைய தளபதியும் ஆவார்" என்று சொன்னார். (Pon. Muthuramalingam is not only Minister but also my Commander) இந்த விளக்கமே எல்லா வகையிலும் தலைமைச் செயலாளருக்கு உரிய பதிலாக அமைந்தது. உடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது தனிச் செயலாளரை அழைத்து அடுத்தகட்டமாக என்ன செய்யவேண்டுமென்பதற்கு ஆணையிடுகிறேன், உணவுத் துறை அமைச்சரின் ஆலோசனைகள் அரசு ஆணையாகட்டும், தொடர்ந்து அமைச்சரின் திட்டத்தை அமல்படுத்தலாம் என்று சொல்லிக்கொண்டே தலைமைச் செயலகத்தை விட்டு வெளியேறிவிட்டார். இது தொடர்பான பிந்தைய நிகழ்வுகள் பற்றி இங்கு விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இதில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமைச் செயலாளரை ஏன் வழக்கத்திற்கு மாறாகக் கடிந்து கொண்டார் என்றால் உணவுத் துறை அமைச்சரான எனக்கு ஒரு கிலோ அரிசி ரூ.2–க்கு கொடுக்க முடியுமா என ஆய்வு செய்ய ஆலோசனை வழங்கியவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரது ஆலோசனைகள் ஆய்வு செய்யப்பட்டு, அவருடைய இறுதிக்கட்ட இசைவுக்கான கட்டத்தில் தலைமைச் செயலாளரின் தலையீடு (ஆலோசனையல்ல) என்பது ஏற்புடையதல்ல; மேலும், முதலமைச்சர் பொறுப்பு என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதித்துவமாகும். அவருடைய அதிகார எல்லையில் அடியெடுத்து வைக்கும்

முயற்சியில் தலைமைச் செயலாளர் ஈடுபட்டதை குறிப்பால் உணர்ந்த அமைச்சர், தலைமைச் செயலாளருக்கு உரிய பதிலை வழங்கியதால் ஏற்பட்ட உந்துதல் காரணமாகத்தான், முதல்வர் அவர்கள் என்னைப் பாராட்டியும் தலைமைச் செயலாளரை கடிந்தும் கொண்டார்கள். இந்த நிகழ்விலும், "மக்கள் சக்திதான் மகத்தானது", "இறுதியானது" என்பதையும், அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரின் அதிகார எல்லையில் அடியெடுத்துவைத்தால், நிர்வாக அதிகாரிகளின் அத்துமீறல்கள் தடுக்கப்பட வேண்டுமென்பதையும் உணர்த்தி மக்களாட்சியின் மாண்பை உயர்த்திப் பிடித்தார். இப்படி முத்தமிழறிஞரின் ஆற்றல், ஆளுமை, இலக்கிய வளம், அரசியல் சட்டத்தின் நோக்கங்கள், சிந்தனைகள், மனிதநேயம், மதச்சார்பற்றதன்மை, மதநல்லிணக்கம் ஆகிய மனித குலத்திற்கு அடிப்படையான கட்டமைப்புகளைக் கட்டிக்காத்த பல்துறை ஆற்றலாளர், சமூகச் சிற்பி எதிர்கால சமுதாயத்திற்கான வார்ப்படம், என்றும் மனிதகுலத்திற்கு வழிக்காட்டும் கலங்கரை விளக்கம்!! கலைஞர் என்ற கலங்கரை விளக்கம் காலமெல்லாம் ஜனநாயகப் பாதைக்கு நேர்வழி காட்டிக்கொண்டே தான் இருக்கும்!!



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. மு. கண்ணப்பன்,
முன்னாள் அமைச்சர்

1967, 1971, 1989, 2006 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று அண்ணா அவர்கள் தலைமையிலும், பின்னர் கலைஞர் அவர்கள் தலைமையிலும் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன்.

1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் முதன்முறையாக 25-3-1967 அன்று உரையாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அன்றைய உரையில் நிறைவாக, அப்போதைய அரசின் இலச்சினையில் (Emblem) Government of Madras என ஆங்கிலத்திலும், சத்யமேவ ஜெயதே என வடமொழியிலும் இருந்த சொற்களை மாற்றி தமிழில் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த கலைஞர் அவர்கள் என்னை அழைத்து பெயர் மாற்றம் செய்வதற்கான பணிகள் ஏற்கெனவே நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்கள்.

14-4-1967 அன்று தலைமைச் செயலகத்தில் "தமிழ்நாடு அரசு வாய்மையே வெல்லும்" என்று தமிழில் பொறிக்கப்பட்ட இலச்சினை இடம்பெற்ற மின் ஒளி பெயர்ப் பலகை முதலமைச்சர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி நிறைவு பெற்றவுடன் கலைஞர் அவர்களைச் சந்தித்தபோது "இப்பொழுது மகிழ்ச்சிதானே" எனக் கூறி பாராட்டினார்கள். இன்றும் அந்த வடிவமைப்புதான் தமிழ்நாடு அரசின் இலச்சினையாக உள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு பெயர் மாற்றம், இருமொழித் திட்டம், சுயமரியாதை திருமணச் சட்டம் எனும் முப்பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்து நிறைவேற்ற எனக்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி பெருமிதம் கொள்கிறேன்.

1971 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் இரண்டாம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றார்கள். அமைச்சரவையில் என்னையும் அமைச்சராக்கி அறநிலையத் துறை, பால்வளம் போன்ற துறைகளின் நிர்வாகத்தை ஒப்படைத்தார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து தமிழர்களால் உருவாக்கப்பட்டு தமிழில் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்த கோயில்களில் இடைக்காலத்தில் தமிழ் வழிபாடு மாற்றப்பட்டு வடமொழி வழிபாட்டு மொழியாக ஆக்கப்பட்டது. இந்த நிலையை மாற்றி தமிழ் வழிபாடு அர்ச்சனைகள் நடைபெற மடாதிபதிகள், ஆன்மிகப் பெருமக்கள் தமிழறிஞர்கள் அரசிடம் கோரிக்கை வைத்தனர். முதலமைச்சரின் அறிவுரைகளைப் பெற்று முறையாக பூசைகள் நடைபெறவும் தமிழ் மொழியில் வழிபாடு நடைபெறவும் ஆணையிடப்பட்டு உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

தமிழ் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாத சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்தனர். 40 ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்றங்களில் சட்டப் போராட்டம் நடைபெற்று இறுதியாக 2008 ஆம் ஆண்டு தமிழில் வழிபாடு சட்டப்படியும் ஆகமப்படியும் சரியானதே என நீதிமன்றம் தெளிவான தீர்ப்பு வழங்கியது.

நீண்ட காலமாக கோயில் கருவறையில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமை ஒழிக்கப்பட 1970 ஆம் ஆண்டு அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடுத்தனர். உச்ச நீதிமன்ற தீர்ப்பால் சட்டம் நடைமுறைப்படுத்த முடியாமல் முடக்கப்பட்டது.

அர்ச்சகர் சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை 15-4-1974 அன்று சட்டமன்ற மேலவையிலும், சட்டமன்றத்திலும் அறநிலையத் துறை அமைச்சர் என்ற முறையில் கொண்டு வந்தேன். பெரும்பாலான உறுப்பினர்களும் ஆதரித்துப் பேசினர். சிலர் மாற்றுக் கருத்துகளை முன்வைத்தனர்.

அவர்களுக்கு பதில் அளிக்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள், "யாரோ சிலரை அர்ச்சகர்களாக்கிவிட வேண்டும் அதுதான் பெரிய உத்தியோகம் அதற்கு செல்ல முடியாமல் தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் தவிக்கிறார்கள். ஆகவே அவர்களை உச்சாணிக் கொம்பிலே ஏற்றி வைத்திட வேண்டுமென்பதல்ல, உச்சாணி கொம்பிலே ஏற்றவிடாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த சமுதாயத்தை செல்லரித்து வருகின்ற மூடப்பழக்கவழக்கங்களின் தலைமீது போடப்படுகின்ற சம்மட்டி அதுதான்" எனவே, மாண்புமிகு கண்ணப்பன் கொண்டு வந்த தீர்மானத்தை நிறைவேற்றிட ஆதரவு அளித்தமைக்கு அனைவரையும் பாராட்டி அமர்கிறேன் எனக் குறிப்பிட்டார் முதல்வர் கலைஞர் அவர்கள் (15.04.1974).

இதையடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதற்குப் பிறகும் சட்டத்தைச் செயல்படுத்த பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. இறுதியாக 16-12-2015 அன்று தி.மு.க. அரசு கொண்டு வந்த சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

தமிழ் வழிபாடு, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் இரண்டும், இன்று நமது முதல்வர் தளபதி அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கான அரசு என்பதை சட்டமன்றத்தில் பெருமையோடு அறிவித்தவர் தலைவர் கலைஞர்.

சுதந்திரா கட்சியின் உறுப்பினராக சட்டமன்ற விவாதம் ஒன்றில் பங்கேற்ற திரு. H.V. ஹண்டே அவர்கள் கழக அரசை இது ஒரு மூன்றாந்தர அரசு (Third rate Government) என மிக கடுமையாக சாடினார்.

உடனடியாக முதல்வர் கலைஞர் எழுந்து "ஒரு திருத்தம், இது மூன்றாம் தர அரசு இல்லை, நான்காம் தர அரசு. நான்காம் தர மக்களுக்காக நாலாந்தர மக்களால் நடத்தப்படும் அரசுதான். பெரியார் மொழியில் சொல்லுகிறேன், நாலாந்திர சூத்திர ஆட்சிதான் நடக்கிறது" என சூடாக பதில் அளித்தார். (ச.ம.உ.ரை 28–7–1971)

1989 சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் தி.மு.க. வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கூடியது. 13 ஆண்டுகளுக்குப் பிறகு தலைவர் கலைஞரை சட்டமன்றக் கட்சித் தலைவராக தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கும் கூட்டத்திற்கு நான் தலைமை ஏற்கும் பெரும் வாய்ப்பை பெற்றேன். கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் முன்மொழிந்திட பொருளாளர் சாதிக்பாட்ஷா வழிமொழிந்திட கலைஞர் அவர்கள் தலைவராக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தியதை எனது வாழ்நாளில் பெற்ற பெரும்பேராக கருதுகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை அமைச்சர்கள் சுயமாக சிந்தித்து செயல்பட வேண்டுமென்று விரும்புவார்கள்.

1989–ல் நான் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது ஒரு நாள் தலைமைச் செயலகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது நான் முதல்வரிடம் தமிழ்நாட்டு அரசுப் பேருந்துகளில் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வரை பள்ளி செல்ல இலவச அனுமதி வழங்கலாம் என்றேன். உடனடியாக நல்ல யோசனை எவ்வளவு செலவாகும்? நிதிநிலை எப்படி என்பதையெல்லாம் கணக்கிட்டுச் சொல்லுங்கள் முடிவெடுப்போம் என்றார்கள்.

அதன்படியே பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதி வழங்கும் அறிவிப்பை முதல்வர் முறையாக அறிவித்தார்.

பிறகு அது படிப்படியாக வளர்ந்து பெருமளவு மாணவர்களும் இன்று பெண்களுக்கும் கட்டணமில்லா பயண அனுமதி வரை நமது திராவிட மாடல் அரசு சாதித்துள்ளது.

சட்டமன்றம் நடைபெறும் நாட்களில் கலைஞர் அவர்கள் ஒரு நாளும் தவறாது பங்கேற்பதுடன் அமைச்சர்கள் மசோதாக்களைத் தாக்கல் செய்யும்பொழுதும் அதுபற்றிய விவாதங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகள் போன்றவற்றுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்கும்போதும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பார்கள். சில நேரங்களில் முதல்வர் கலைஞரே குறுக்கிட்டு சூடான விவாதங்களையும் சுவையாக்குகின்ற வகையிலே பதில் அளிப்பார். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்தை மதித்து நடத்தும் ஜனநாயகப் பண்புமிக்கவர் கலைஞர். அதேபோல் அமைச்சர்களின் செயல்பாடுகளை பதில் அளிக்கும் முறைகளை அவையிலேயே பாராட்டி, ஊக்கப்படுத்தி நெறிப்படுத்துவார்கள்.

அறிஞர் அண்ணா காலத்தில் கிடைத்த வாய்ப்புகள், தலைவர் கலைஞர் அவர்களால்தான் என்ற உணர்வோடு, சட்டமன்ற நாயகனாம் அண்ணன் கலைஞரை நினைவு கூர்ந்து வணங்கி நிறைவு செய்கிறேன்.

சட்டமன்றத்தில் இடம் பெற்று, அண்ணாவிற்கு பிறகு தலைவர் கலைஞர் தலைமையில் இரண்டு முறை அமைச்சர் பொறுப்பேற்று பணியாற்றவும்



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

தமிழர்கள் தன்மானம் இழந்து, மூட நம்பிக்கைகள், சாதி இழிவுகள், ஏற்றத்தாழ்வுள்ள சமூக சூழ்நிலையில் வாழ்ந்து வந்தபோது அவர்களை தன்மானமுள்ளவர்களாக மாற்றி வாழ வைத்த பெருமை திராவிட இயக்கத்தையே சாரும்.

திரு. தி. வேல்முருகன்,
சட்டமன்ற உறுப்பினர், பண்ருட்டி,
தலைவர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி

சிறுபான்மை மக்கள் பாதுகாப்பாக வாழ்வதிலும், வரலாற்றில் ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்கள் அரசுப் பணிகளிலும், ஆட்சி அதிகாரத்திலும் பங்கு பெறும் அளவிற்கு சமூக கட்டமைப்பை உருவாக்கியதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணிகள் போற்றத்தக்கவை.

பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் அவர்களின் முன்னேற்றம், பெண் சமத்துவம், கல்வி, வேலை வாய்ப்புகளில் அனைவருக்கும் சம வாய்ப்பு என்பனவற்றை திராவிட முன்னேற்றக் கழகம் சாதித்திருக்கின்றது.

குறிப்பாக, தமிழ்நாட்டின் வளர்ச்சியினை இந்திய நாட்டின் மற்ற மாநிலங்களும் முன் மாதிரியாக எடுத்துக்கொள்ளும் அளவிற்கு, தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாக மாறியதில் முத்தமிழறிஞர் கலைஞரின் பங்கு அளப்பரியது.

கலைஞர் நடைமுறைப்படுத்திய சமூக வளர்ச்சியுடன்கூடிய பொருளாதார வளர்ச்சி என்ற பாதை தமிழ்நாட்டை, ஒரு சிறந்த வளர்ச்சி மாநிலமாக, தமிழ்நாட்டை இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருந்து வேறுபடுத்தியது.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவின் வழியில் நின்று, அடிமைத்தளையில் சிக்குண்டு இருந்த தமிழ்ச் சமூகத்தின் அடிமைத்தளையை அறுத்தெறிந்து, மூட நம்பிக்கையில் உழன்று கொண்டிருந்த தமிழ் மக்களை பகுத்தறிவு சுடர் ஏற்றி, சாதி மத வேறுபாடுகளால் சிதறுண்டு கிடந்த மக்களை ஒன்றுபடுத்தியதில், முத்தமிழறிஞர் கலைஞரின் சமூகப் பணி என்பது மகத்தானது.

சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதிலும், முத்தமிழறிஞர் கலைஞரின் பங்கு என்பது அளப்பரியது.

1967 இல் ஆட்சிக்கு வந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரசியல் அதிகாரம் கிடைத்தது. சமூக நீதி இயக்கம் எதற்காகப் போராடியதோ, அதை எல்லாம் செயல் வடிவம் கொடுக்கக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு அந்த மாபெரும் இயக்கத்திற்கு கிடைத்தது.

ஆனால், அண்ணா முதலமைச்சராக இருந்தது ஒன்றரை ஆண்டுகள்தான். அவர் மறைந்த பிறகு, அந்த அரும்பணியும், அந்த அரிய வாய்ப்பும் முத்தமிழறிஞர் கலைஞரிடம் வந்து சேர்ந்தது.

1976 ஆம் ஆண்டு வரை அவர் செய்த காரியம் என்பது தமிழ்ச் சமுதாயத்தையும், தமிழ்ப் பொருளாதாரத்தையும், தமிழ்நாட்டின் அரசியல் செயல்படுகின்ற விதத்தையும் எந்த அளவிற்கு மாற்றியமைத்திருக்கின்றார் என்பதை நினைத்து பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது.

கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு, அவர் கொண்டு வந்த குடியிருப்பு நில உரிமைச் சட்டமும், குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டமும் தான், தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவில் ஜனநாயகப்படுத்தியது.

இதனால், கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பெரிய அளவில் பயன்பெற்றனர். அவர்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்பட்டன.

1974 இல், முதன்முதலில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்கள்–நகர்ப்புறங்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல், அனைவருக்கும் ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டன. அதுவரை கிராமப்புறங்களில் ரேஷன் அட்டை கிடையவே கிடையாது.

மேல்தட்டு, அடித்தட்டு மக்கள் சேரிகளாகவும், சாதிகளாகவும் பிரிந்திருந்திருக்கும் நிலையில், அனைத்து சமூகத்தினரும் ஒரே இடத்தில் வசிக்கும் வகையில், பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் என்ற இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத புதுமையான திட்டத்தையும் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு, மருத்துவம் மற்றும் பொறியியல் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர அமைப்பு முறை என முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்றினார். மெட்ராஸ் மாநகர் சென்னையாக பெயர் மாற்றப்பட்டதும் அப்போதுதான்.

சாலைகள், பாலங்கள் கட்டமைப்பு, கிராமங்களில் கான்கிரீட் சாலைகள், புதிய தொழில் கொள்கை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், மினி பேருந்துகள், நீர்நிலைகளைத் தூர்வாருதல் என தமிழ்நாட்டின் கட்டமைப்புகளை பலப்படுத்தும் பல திட்டங்களை செயல்படுத்தினார் கலைஞர்.

குமரிக்கடலில் திருவள்ளுவருக்கு 133 அடியில் பிரம்மாண்ட சிலை, மதுரை உயர் நீதிமன்றக் கிளை, கோயம்பேடு பேருந்து நிலையம் கட்டுமானம் போன்றவையும், அவரது ஆட்சிக்காலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டன.

உலகமயமாக்கலின் வேகத்துக்கு ஈடுகொடுத்து கணினி சார்ந்த படிப்புகளையும், தொழில்களையும் விரிவுபடுத்தினார் கலைஞர். 2000–ம் ஆண்டில் சென்னையில் டைடல் பார்க்கை திறந்து வைத்தார்.

2006–ல் திமுக கூட்டணி வெற்றி பெற்று கலைஞர் முதலமைச்சரானவுடன் தேர்தல் வாக்குறுதியில் கூறியபடி, நியாய

விலைக்கடையில், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கினார். கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்தார். சத்துணவில் முட்டை சேர்த்தார்.

இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டு மலைக் கிராமங்களிலும் தொலைக்காட்சி இல்லாத வீடு இல்லை என்ற நிலையை ஏற்படுத்தினார். இத்திட்டத்தால் தமிழ்நாட்டில் மக்கள் செய்திகளை உள்வாங்கும் விகிதம் அதிகரித்திருப்பதாக அப்போது பல புள்ளிவிவரங்களும் வெளியாகின.

2006–2011 ஆட்சிக்காலத்தில்தான் அனைத்து ஜாதி அர்ச்சகர் சட்டத்தையும் கலைஞர் நிறைவேற்றினார். அந்தச் சட்டத்தின்கீழ்தான் 2022 ஆம் ஆண்டில் நியமனங்களை பிறப்பித்தார் தற்போதைய மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தனியார் பள்ளிகளில் கல்வி கட்டணத்திற்கு வரம்பு, சமச்சீர் கல்வி, நுழைவுத் தேர்வுகள் இரத்து என கல்வி ரீதியாகவும் 2006 முதல் 2011 வரையிலான ஆட்சியில் பல முக்கியமான முடிவுகளை கலைஞர் எடுத்தார். அருந்ததியர்களுக்கு 3 விழுக்காடு உள் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதும் அப்போதுதான்.

தமிழ் மொழிக்கான திட்டங்கள், இருமொழிக் கொள்கை கொண்டுவரப்பட்டு தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமே அலுவல் மற்றும் பயிற்று மொழியாக அமையும் வகையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தமிழுக்கு உழைத்த பெருந்தலைவர்களின் பெயரில் புதிய பல்கலைக்கழகங்கள், மொழிப்போர்த் தியாகிகளுக்கு ஓய்வூதியம், கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை அமைப்பு, தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன, தமிழ் செம்மொழியாக அங்கீகாரம், செம்மொழி ஆய்வு நிறுவனம் சென்னையில் அமைக்கப்பட்டது, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிப்பு.

காமராஜர் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிப்பு, மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம், உயர் கல்வித் துறை தனியாக உருவாக்கப்பட்டு உயர் கல்விக்கென தனி அமைச்சகம், மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை, பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம், சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முட்டைகள்.

ஒரத்தநாடு, பெரம்பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, இராமநாதபுரம், திண்டுக்கல் என பல்வேறு இடங்களில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், தொழிற்கல்விக்கான நுழைவுத்தேர்வு இரத்து, கோவை, திருச்சி, நெல்லை நகரங்களில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள், மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள், தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ஆகிய திட்டங்களின் வழியாக, ஏழை குழந்தைகளின் வாழ்வில், வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் முத்தமிழறிஞர்.

பெண்களுக்கு சொத்துரிமை, அரசுப் பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு,

கலப்பு குடும்பத்து பெண்களுக்கு பேறுகால நிதியுதவி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம், உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு, ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு காலத்திற்கு முந்தைய 3 மாதங்களும், பிந்தைய 3 மாதங்களும் நிதியுதவி அளிக்கும் மகப்பேறு உதவித் திட்டம், ஈ.வே.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் பட்ட மேற்படிப்பு இலவச திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு கைம்பெண் மறுமணத் திட்டம், கைம்பெண்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகிய திட்டங்களின்மூலம் மகளிர் மேம்பாட்டிற்கு அடிதளமிட்டவர் கலைஞர்.

பண்டிகை நாட்களில் ஏழைகளுக்கு இலவச அரிசி, வேட்டி–புடவைகள் வழங்கும் திட்டம், ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் துறை அமைத்தல், ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் மற்றும் வீட்டு வசதி வாரியம், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு, இசுலாமியர்களுக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு, உருது பேசும் இசுலாமியர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பு.

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், நிலச்சீர்த்திருத்தம் கொண்டு வரப்பட்டு நில உச்சவரம்பு அமல்படுத்தப்பட்டது, நீர்ப்பாசன வசதியில்லாத புஞ்சை நிலங்களுக்கு நிலவரி விலக்கு.

உழவர் சந்தைகள், கோயம்பேடு சந்தை, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உருவாக்கப்பட்டன, நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டது.

அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி, கிராமப்புற வளர்ச்சிக்காக ‘நமக்கு நாமே திட்டம்’, அனைத்து அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டம், கிராமப்புறங்களை இணைக்கும் வகையிலான சிற்றுந்து சேவைகள் தொடக்கம்.

சுதந்திர தினம் அன்று முதலமைச்சர் கொடியேற்றும் உரிமை, முதன்முதலில் மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயர் ‘தமிழ்நாடு’ என்று மாற்றம், மெட்ராஸ் என்ற பெயர் ‘சென்னை’ என்று மாற்றம், மாநில திட்டக் குழு அமைத்தல், சிவப்பு நாடா இரகசிய குறிப்பு முறை ஒழிப்பு, மாநில உரிமைகளுக்கென்று ராஜமன்னார் குழு அமைப்பு.

தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம், காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டம், நீர்வளத்தை பெருக்கும் வகையில் புதிய அணைக்கட்டுகள், தடுப்பணைகள்.

அண்ணா ஆட்சிக் காலத்தில் 1967 ஆம் ஆண்டு சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட வடிவம் அளிப்பு, குடிசை மாற்று வாரியம் உருவாக்கம், பிச்சைக்காரர்கள், தொழுநோயாளிகள்

ஆகியோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் அமைப்பு, கோயில்களில் ஆதரவற்றோருக்கு பாதுகாப்பு வழங்கும் கருணை இல்லங்கள், கண்ணொளி திட்டத்தின்கீழ் இலவச கண் சிகிச்சை முகாம்கள், இலவச கண்ணாடிகள்.

நாட்டிலேயே முதன்முதலாக காவல் துறை ஆணையம், அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்புத் திட்டம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், அரவாணிகள் திருநங்கையினர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கென்று நல வாரியம், மாநிலம் முழுவதும் பொது விநியோகத் திட்டம் விரிவாக்கம், 34 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கம்.

108 இலவச ஆம்புலன்ஸ் சேவை, அனைத்து மருத்துவ சேவைகள் வழங்கும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம், ஊனமுற்றோர் என்ற பெயரை மாற்றுத் திறனாளிகள் என்று மாற்றம், அனைத்து கிராமங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், தாய்சேய் நல மையங்கள் அமைப்பு.

தகவல் தொழில்நுட்பக் கொள்கை அறிமுகம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா சென்னையிலும் பிறகு தமிழ்நாட்டின் பிற பெரிய நகரங்களிலும் கொண்டு வரப்பட்டது, எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் கொண்டு வரப்பட்டன.

சிப்காட் தொழில் வளாகங்கள், சிட்கோ தொழிற்பேட்டைகள், தேயிலை வாரியம், உப்பு வாரியம், சேலம் உருக்காலை, மின் திட்டங்கள் வல்லூர், வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடி.

அண்ணாவின் ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் பெருமுயற்சியினால் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் மேம்பாலங்கள், கோயம்பேடு பேருந்து நிலையம், மெட்ரோ இரயில் திட்டம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகரில் சென்னை உயர் நீதிமன்ற அமர்வு, நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்வு, பெரிய மாவட்டங்களில் இருந்து புதிய மாவட்டங்கள் பிரிப்பு.

ரிக்ஷா ஒழிப்பு, அனைத்து கிராமங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம், சிறந்த உள்கட்டமைப்பு, சமத்துவபுரம், உழவர் சந்தை, மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை, சிறந்த பொது விநியோகத் திட்டம் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமூக நலத் திட்டங்கள் இந்திய நாட்டிற்கே முன்னோடியாக விளங்கி சமூக நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை நிகழ்த்திக் காட்டியவர் கலைஞர்.

வருவாய் கோட்டங்கள் மற்றும் புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கம், தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழி சாலைகளாக விரிவாக்கம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி நிதி வழங்கும் திட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை

மேம்படுத்தும் வகையிலான எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

வாழ்நாள் முழுவதும் இட ஒதுக்கீட்டு உரிமைகளுக்கு போராடியவர், சட்டப் போராட்டம் நடத்தியவர், ஒவ்வொரு சமூகத்திற்கும் பார்த்துப் பார்த்து இட ஒதுக்கீட்டை வழங்கியவர் கலைஞர்.

அவரது தலைமையிலான திமுக ஆட்சியில், நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, சட்டமன்றத்திலும் சரி; அதற்கு வெளியேயும் சரி, என்மீது அளவு கடந்த அன்பு செலுத்தியவர் கலைஞர்.

சட்டமன்றத்தில் நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எனது பண்ருட்டி சட்டமன்ற தொகுதியில் பல்வேறு நலத் திட்டங்களை அள்ளிக்கொடுத்திருக்கிறார். என்னுடைய வேண்டுகோளை ஏற்று, கடலூர் மாவட்டத்திற்கான அரசு பொறியியல் கல்லூரியை கொண்டு வந்து, ஏழை, எளிய மாணவர்களின் வாழ்வியலில் விளக்கேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

கல்வி, சுகாதாரம், சமூக நலன் போன்ற துறைகளில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் அளவிற்கு வளர்ச்சிக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இத்தகு வளர்ச்சிக்கு முதன்மையான காரணம், முத்தமிழறிஞர் கலைஞர் ஒருவரே!

தமிழ் போன்ற இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியமான மொழியின் தனித்துவத்தை மீட்டெடுக்கும் வகையில் தமிழ், தமிழர் குறித்துப் பேசியும் எழுதியும் ஆக்கமான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்ட கலைஞரின் செயல்கள், தமிழர் வரலாற்றில் முக்கியமானவை.

கலைஞரின் அறிவு, தமிழர் பண்பாட்டின் வேர்களைத் தேடிக் கண்டறிய முயன்ற வேளையில், அவருடைய இதயம் துயரப்படுகிறவர்களுக்காகக் குருதியைச் சிந்தியது; அதற்கான தீர்வுகளை அரசியலிலும் கலை இலக்கியத்தின் வழியாகவும் கண்டறிய முயன்றது.

தமிழர் வாழ்க்கையின் தேவைகள் காரணமாகத் தமிழ்நாட்டு வரலாறு, முத்தமிழறிஞர் கலைஞர் என்ற மனிதரை உருவாக்கிய வேளையில், அவர் தனிமனிதராக வரலாற்றை மாற்றியமைத்ததும் காத்திரமாக நடைபெற்றுள்ளதை யாராலும் மறுக்க முடியாது.

இப்படி வரலாற்று நாயகரான, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, சட்டமன்ற நாயகர் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பதும், சிறப்பு மலர் வெளியிட முடிவு செய்திருப்பதும் போற்றத்தக்கது.

தமிழ்நாடு மாண்புமிகு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற நாயகர் கலைஞர்–100

திரு. கி. பாரிமோகன், B.com., BL.,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்,
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்.

தமிழகத்தின் அரசியல் களத்தில் தவிர்க்க இயலா சக்தியாக ஐம்பது ஆண்டுகள் திகழ்ந்த கலைஞருக்கு நூற்றாண்டு விழா நிகழ்கிறது.

பன்முகத்தன்மை கொண்டவர், மேடைப் பேச்சு, எழுத்து, இலக்கியம், மொழி, நாடகம், திரைப்படம், அரசியல் நிர்வாகம் என பல பரிமாணங்களில் தன் திறமையைக் காட்டியவர்.

"கற்றாரை கற்றவரே காமுருவர்" என கூறுவதற்கு ஒப்ப தமிழ் புலமையாளரை, தமிழறிந்தவர், தமிழ் உணர்வாளர், மொழிப்பற்றாளர் போன்றோர் பாராட்டுவதும், போற்றுவதும் இயல்பே! இதில் எந்த பேதத்திற்கும் இடமில்லை. அதுமட்டுமின்றி, பல நற்பண்புகளைக் கொண்டவர். "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என "அண்ணா" சொன்னதைக் கடைப்பிடித்து "மாற்றுக் கொள்கை உடையவரையும் மதிக்கும் இயல்புடையவர்" மற்றவரின் சிறப்புகளையும் பாராட்டி ஊக்குவிப்பவர்.

நான் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது (1998–1999) மேட்டூர் கோனூரில் சமத்துவபுரம் திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் கலந்துகொண்டு திறந்து வைக்க வந்திருந்தார். அன்று இருந்த சூழ்நிலையால், நிகழ்ச்சியின் துவக்கத்திலேயே, உடன் வந்த மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் நிகழ்ச்சியைக் கூறி இப்போது முதல்வர் சமத்துவபுரத்தை திறந்து வைத்து உரையாற்றுவார் எனக் கூறினார்.

கோனூர் சமத்துவபுரத்தை சீரோடு சிறப்பாய் திறந்து வைத்து கலைஞர் உரையாற்றினார். பின் கிளம்புகிற நேரத்தில் என்னிடம் "நேரம் இல்லை, அதனால் பேச வாய்ப்பில்லை" என சமாதானமாகக் கூறினார். நான் அதற்கென்னண்ணா! பரவாயில்லை எனக் கூறியது, என் மனதில் பசுமையாக உள்ளது.

1998–ல் தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் நடைபெற்ற அரசு விழா, முதல்வராக கலைஞரும், பா.ம.க. தலைவர் திரு. ஜி.கே. மணி, நாடாளுமன்ற உறுப்பினரான நானும் கலந்துகொண்டோம். அப்போது, தருமபுரி மாவட்டத்திற்கு "ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்" வேண்டும் என பல்வேறு வகையில் குரல் கொடுத்த நேரம். நான் அந்த விழாவில் பேசும்போது, பள்ளிக் காலத்தில் உங்கள் பள்ளி மாணவன் என்ற அந்த உரிமையோடு கேட்கிறேன். இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை வைத்தேன். முதல்வர் கலைஞர் பேசும்போது

''பள்ளிக் காலத்தில் என் பள்ளி மாணவர்'' என்றார். ''இப்படி எத்தனையோ மாணவர்கள் எனக்கு இந்தத் திட்டத்தை செயல்படுத்த வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ நிதி கிடைக்கவில்லை என்றாலும், மாநில அரசு மூலமே இதை செயல்படுத்துவேன்'' என்று உறுதிமொழி கூறினார். அன்று விழாவில் அது பேசும் தலைப்பு ஆனது.

2001–ல் நான் சட்டப்பேரவை உறுப்பினராய் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தி.மு.க. எதிர்க்கட்சியாக அமர்ந்தது. கலைஞர் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றப்போகிறார்; சட்டப்பேரவை விதிகள், மரபுகள், பல முன் உதாரணங்கள் ஆகியவற்றை நடைமுறையில் மூத்த உறுப்பினரான, நீண்ட அனுபவம் கொண்ட கலைஞரின்மூலம் தெரிந்துகொள்ளலாம் என ஆர்வத்தோடு புதியவர்கள் நினைத்தனர்.

2001–ல் சட்டப்பேரவை உறுப்பினராய் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆர்வத்துடன் பேரவை நடவடிக்கைகளில் கலந்து கொண்டபோது, அன்றாடம் கலைஞர் கலந்துகொள்ள இயலாத அரசியல் சூழ்நிலையில் அவரது செய்தி அறிக்கைமூலம் அவை நிகழ்வுகளைப் பற்றி சுட்டிக்காட்டுவார். ஒரு நிகழ்வு அவையில் நடந்தால், அதுகுறித்து அறிந்துகொண்டு பின் அதைப்பற்றி அறிக்கை வெளியிடுவார். அந்தத் தருணங்களில் எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. G.K. மணி, M.L.A. அவர்களுடன் கலைஞரைப் பார்த்துப் பேச அண்ணா அறிவாலயம் செல்லும்போது நானும் உடன் சென்றுள்ளேன்.

13–வது சட்டமன்றத்தில் அன்றைய தி.மு.க. உறுப்பினர் ஒருவர் பேசியபோது, பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அவையில் களேபரம் உருவானது. அப்போது கலைஞர் முதல்வர் அறையிலிருந்து, சக்கர நாற்காலியில் அமர்ந்து வந்து தனது கட்சி உறுப்பினர் கூறிய கருத்து தவறு எனக் கூறி அவையை அமைதிப்படுத்தினார். மிகப் பக்குவமாகச் செயல்பட்டு அவையை அமைதியாக நடத்த உதவிகரமாக இருந்தார். அவரது 50 ஆண்டுகால சட்டப்பேரவை பணியைப் பாராட்டி சட்டப்பேரவையிலும், அனைத்து கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட மாபெரும் பொதுக் கூட்டம் தீவுத் திடலிலும் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

"கலைஞரின் சட்டமன்ற உரைகள் மக்களுக்கான மருந்தும் விருந்துமாகும்"

பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்,
முன்னாள் மக்களவை உறுப்பினர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக வரலாற்றில் நிரந்தரமாக இடம் பெற்றுத் திகழும் மக்கள் தலைவர் ஆவார்.

தமிழகச் சட்டப்பேரவையில் 1957 முதல் அங்கம் வகித்து, தனது இறுதி காலம் வரையிலும் சட்டமன்ற உறுப்பினராக விளங்கி, தமிழக முதலமைச்சராக ஐந்து முறை கோலோச்சிய தமிழின் தவப்புதல்வர் கலைஞர் ஆவார்.

அவருடைய சட்டப்பேரவை உரைகளையும், அவற்றில் பொதிந்திருக்கும் வரலாற்று நிகழ்வுகளையும், அதன்மூலம் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், முன்னேற்றங்கள், சீர்திருத்தங்கள், மகளிரின் மேம்பாடு மற்றும் சமூக நீதியின் கொடைகள் யாவற்றையும் ஒன்று சேர்த்தால், அது காலாகாலத்திற்கும் அறிவு ஒளியைச் சிந்தக் கூடியவையாகவே வரலாற்றில் மின்னுவதைக் காணலாம்.

தமிழக வரலாற்றில் சட்டப்பேரவையில் தமிழ் மொழிச் சொற்களைப் பயன்படுத்தி ஒவ்வொன்றையும் குறிப்பிடும் வழக்கம், பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்டு, கலைஞர் காலத்தில் தொடர்ந்து, தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்துக்கும் புத்தெழுச்சியை ஊட்டியது. கலைஞர் காலத்தில் அந்த வழக்கம் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எல்லாமும் தமிழ், எப்போதும் தமிழ்" என்றதொரு புதிய பண்பாடு மலர்ந்து பரவியதை இன்றளவும் தமிழ்ச் சமுதாயம் கண்டுவருகிறது.

தமிழக முஸ்லிம் சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடு கோரிய காலத்தில், முந்தைய அரசு பின்பற்றிய கொள்கையின் அடிப்படையில், அதற்குரிய அமைச்சர் அவர்கள், முஸ்லிம்களின் கோரிக்கையை ஏற்பதற்குச் சட்டத்தில் இடமில்லை என்றபோது, கலைஞர் அவர்கள், சட்டத்தில் இடமில்லாமல் இருக்கலாம், ஆனால், எங்கள் இதயத்தில் இடம் இருக்கிறது என்று, அன்று அறிவித்த அதே கலைஞர், சட்டமன்றத்தை மகிழ்விக்கும் வகையில் கொஞ்ச காலத்திற்குப் பிறகு, முஸ்லிம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு அறிவித்து அதை 3.5 சதவீதம் என்றும் பிரகடனம் செய்த அந்தப் பேற்றை எவ்வாறு புகழ்வது?

கலைஞர் ஆட்சியில் எந்தவொரு இடத்திலும், எந்தவொரு ஊரிலும், ஏதோ ஒரு காரணத்திற்காக, ஆர்ப்பாட்டம் என்று நடைபெறுவதை அறிந்தால், உடனடியாக, அந்த இடத்திற்கே தனது தனி அதிகாரியை அனுப்பி, அங்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை குறித்து அறிந்து, அதனை உடனடியாகத் தீர்ப்பதில் கலைஞர் காட்டிய வேகமும், விவேகமும் வியப்புக்கு மேல் வியப்பூட்டுவதாகவே இருந்திருக்கிறது.

கலைஞர் அவர்களின் சட்டமன்ற உரைகள் யாவும் அனைத்துத் தரப்பு மக்களுடைய உணர்வுகளுக்கு மருந்தாகவும், விருந்தாகவும் அமைந்திருந்தன எனக் கூறினால், அது மிகைப்படுத்தப்பட்டதாக ஒருபோதும் இருக்காது. நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஏதோவொரு வகையில் நன்மை பெறக்கூடிய வகையில்தான் அவரின் அறிவிப்புகளும், திட்டங்களும், அமைந்திருந்தன.

ஒரு சமயம் ஒரு சிற்றூருக்குள் சென்றோம். அங்கிருந்த அனைத்து சமுதாய மக்களும், கலைஞர் ஆட்சியால் எத்தகைய பலன்களை பெற்றிருக்கிறார்கள் என்பதைக் காண்பதற்காக ஓர் ஆய்வு நடத்தினோம். குடிசைகள் நிறைந்திருந்த அந்தக் கிராம மக்களிடம் விசாரித்தோம். ஒரு குடிசை வீட்டுக்குள் நுழைந்தபோது, அங்கே ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு முதியோர் பென்ஷன் கலைஞர் தருகிறார் என்றார். வீட்டம்மாவிடம் பேசியபோது, இதோ அடுப்பு அதில் உள்ள சிலிண்டர், அடுப்பு கலைஞர் வழங்கியது என்றார்கள். ரேஷன் அரிசி கிடைப்பதாகக் கூறினார்கள். இலவச மின்சாரம் கிடைப்பதாகவும், வயது வந்த மகளின் திருமணத்துக்கு அரசு உதவித் தொகை தந்ததாகவும் கூறினார்கள். பள்ளிக்குச் செல்லும் சிறுமிக்கு சைக்கிள் கலைஞர் கொடுத்தார் என்றார்கள். அனைத்து வீடுகளுக்கும் இலவச தொலைக்காட்சி பெட்டியை வழங்கினார்கள். சுருங்கச் சொன்னால், குடிசைவாசிகள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் அரசின் உதவியைப் பெற்று அவர்களது வளர்ச்சிக்கு வழிகாட்டி வருகிறார்கள் என்பதை உணர்ந்தோம்.

கடைசியாக, வீட்டம்மாவிடம் விடைபெறும்போது, ‘‘எங்கள் குடிசை வீட்டை ஓட்டு வீடாக மாற்றிக்கொள்ளும்படியும், அதற்கான அரசு உதவியைப் பெற்றுக்கொள்ளும்படியும் அரசு அதிகாரிகள் வந்து கூறிவிட்டுச் சென்றார்கள்’’ என்ற தகவலை எங்களிடம் கூறியபோது, அந்தக் குடிசைகளில் வாழும் குடிமக்கள் மத்தியில் அமைதியும், சுமுகமும், நம்பிக்கையும், எதற்கும் தங்களுக்கு உதவிட ஓடிவரும் அரசு இருக்கிறது என்ற உள்ளார்ந்த உணர்வு மேலிட்டிருந்ததைப் பார்க்க முடிந்தது.

கலைஞர் காட்டிய அதே வாழ்க்கைப் பயணத்தை, இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களும் தமது திராவிட மாடல் ஆட்சி மூலமாக தொடர்வதைப் பார்க்கிறோம்.

காலத்திற்கு ஏற்றதும், காலாகாலத்திற்கு பயன்படுத்துவதும், என்றும் தமிழக மக்களின் இதயங்களில் நின்று நிலவுவதுமான அற்புதமான ஆட்சியை நடத்திய பெருமை கலைஞர் அவர்களுக்கு உண்டு.

தமிழக சட்டப்பேரவையிலிருந்து கலைஞர் வாயிலாகப் பிறப்பெடுத்த ஒளிச்சுடர், பன்னெடுங்காலத்திற்கு இருளைப் போக்கும் ஒளிச்சுடர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

‘‘வாழ்க கலைஞர் புகழ்! வாழ்க தமிழகம்! வெல்க இந்தியா!’’

கலைஞரின் தனிப்பெருமை குறித்து, வருகின்ற வரலாறு தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. அ. அசோகன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(திருவாரூர் தொகுதி)

"பாரறிய பைந்தமிழை பாங்காய் பரப்பிய" பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பி முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தத் தருணத்தில் தலைவர் கலைஞரோடு பத்து வருடங்கள் சட்டமன்றத்தில் பயணித்ததில் சுவாரசியமான சில நினைவுகளை பகிர்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக சட்டமன்றம் வைர விழா கண்ட காலகட்டத்தில் (1996–2006) கலைஞர் முதல்வராக இருந்தபோது, அவை உறுப்பினராகக் பணியாற்றுகின்ற அரிய வாய்ப்பினை பெற்றேன். அந்த அவையில் ஆன்றோர்கள், சான்றோர்கள், நாவலர்கள், பாவலர்கள் மத்தியில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னையும் சட்டமன்ற உறுப்பினராக்கி, பதவியேற்ற இருபத்து நான்கு மணி நேரத்தில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னைப் பேச வைத்து அழகு பார்த்தவர் கலைஞர் அவர்கள். என்னை மற்றவர்களிடத்தில் அறிமுகப்படுத்தும்போது என் தொகுதி எம்.எல்.ஏ. என்று ஊர் பாசத்தோடு அறிமுகப்படுத்துவார்.

சட்டமன்றத்தில் என்னுடைய கன்னிப்பேச்சில் நான் குறிப்பு வைத்து கொண்டு பேசினேன். அது அவைத் தலைவராக பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் மற்றும் அமைச்சர்களாக நாவுக்கரசர் நாஞ்சிலார், பேராசிரியர் போன்றோர் இருந்த காலகட்டம். அன்றைய பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த துரைமுருகன் அவர்கள் நகைச்சுவைக்காக என் பேச்சில் குறுக்கிட்டு "உறுப்பினர் பேசுகிறாரா அல்லது வாசிக்கிறாரா?" என்று வினவினார். என் பேச்சு தடைபட்டபோது முதல்வர் கலைஞர் அவர்கள் எழுந்து நின்று அவையில் பதில் கூறும் வகையில் "அசோகனைக் கேட்டால் நீங்கள் மட்டும் பட்ஜெட் வாசிக்கவில்லையா? என்று கேட்பார்" என்றார். அப்போது அவையில் எற்பட்ட சிரிப்பலை அடங்க நீண்ட நேரமானது. அன்றைய சட்டமன்ற நிகழ்வுகள் முடிந்தவுடன் அவருடைய அறைக்கு அழைத்து என்னுடைய கன்னிப் பேச்சிற்கு பாராட்டு தெரிவித்தார்.

எனக்கு அடிக்கடி சபாநாயகரிடத்தில் அனுமதி கேட்டு நிறைய துணைக் கேள்விகள் கேட்கும் வழக்கமுண்டு. ஒருமுறை எனது தொகுதியில் காவலர் குடியிருப்புகள் பழுதடைந்து கிடக்கின்றன. பழுதுகளை நீக்கி சரி செய்ய முடியுமா என்று வினவினேன். அதற்கு முதலமைச்சர் கலைஞர் அவருக்கே உரிய நகைச்சுவை பாணியில் கடந்த ஆட்சியினால் தமிழ்நாடே பழுதடைந்த நிலையில்தான் இருக்கின்றது. தமிழ்நாடோடு சேர்த்து தங்கள் தொகுதியில் உள்ள காவலர் குடியிருப்பும் விரைவில் சீர் செய்யப்படும் என்று பதில் அளித்தார்.

அதுபோல் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது (2001 – 2006)

அன்றைய பிரதமர் வாஜ்பாய் காவிரி பிரச்சனை குறித்து பேச தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து கட்சிக் குழுவிற்கு அழைப்பு விடுத்தார். அப்போது தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் என்னை அனுப்பினார். சட்டப்பேரவையில் இதுகுறித்து விவாதம் நடந்தபோது அன்றைய முதல்வர் அம்மையார் ஜெயலலிதா, ''உங்கள் கழகத்தில் மூத்த உறுப்பினர்கள் இல்லையா, சாதாரண உறுப்பினர் அசோகனை அனுப்புகிறீர்களே'' என்று கேள்வி எழுப்பினார். அப்போது தலைவர் கலைஞர் அவர்கள், 'சாதாரண உறுப்பினர் அல்ல காவிரிக்கு சம்பந்தமான விவசாய குடும்பத்தில் பிறந்த டெல்டா பகுதியைச் சேர்ந்த தகுதியான உறுப்பினரைத்தான் அனுப்பியுள்ளேன்' என்று பதில் அளித்தார். அன்றைய செய்தித்தாள்களில் அதுதான் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்தது. இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்களோடு சட்டமன்றத்தில் மறக்க முடியாத நிகழ்வுகள் பல இருப்பினும் சிலவற்றை உங்களோடு பகிர்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. கே. வினாயகம்: அமைச்சர் அவர்கள் நேரிடையாக முக பாவங்களைப் பார்க்கலாமே தவிர, மனத்திற்குள்ளே புகுந்து பார்க்கும் அளவுக்கு எப்படி மனமாரச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள்? மனத்திற்குள் இருப்பது எப்படி அமைச்சருக்குத் தெரியும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி (சிரிப்பு).

தொகுதி 33, 3–9–1970, பக்கம் 396

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. எம்.அப்பாத்துரை,
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
(ஒட்டப்பிடாரம் தொகுதி)

1980 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற ஏழாவது சட்டமன்றத் தேர்தலில் ஒட்டப்பிடாரம் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெற்றி பெற்று சட்டமன்றத்தில் நுழைந்தேன்.

அப்போது கலைஞர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். நான் சட்டமன்றத்தில் கன்னிப்பேச்சாக உரையாற்றி முடித்தவுடன், சிறிது நேரம் கழித்து எனது பக்கத்தில் வந்த அண்ணன் துரைமுருகன் அவர்கள் என்னிடம், 'தலைவர் உங்களை அழைக்கிறார்', வாருங்கள் தம்பி' என்று என்னை கலைஞரிடம் அழைத்துச் சென்றார்.

நான் கலைஞரின் அறைக்குச் சென்றவுடன் "தம்பி வாருங்கள், அமருங்கள்" என்று என்னை அன்போடு அமரச் செய்தார். "உங்களுக்கு எந்த ஊர்? என்று கேட்டார். உடனே நான், "தூத்துக்குடிக்கு அருகில் உள்ள மறவன்மடம் பஞ்சாயத்தைச் சேர்ந்த ராமநாச்சியார்புரம்" என்று கூறினேன். உடனே கலைஞர் "1958-ல் நான் மறவன்மடம் கிராமத்துக்கு, தூத்துக்குடி சட்டமன்ற இடைத்தேர்தல் பொறுப்பாளராக வந்திருந்தபோது மாலைப் பதநீர் அருந்தியிருக்கிறேன்" என்று சொன்னார். நான் உடனே, "மாலைப் பதநீர் உங்களுக்கு வாங்கிக் கொடுத்தவர் அருமை அண்ணாச்சி தி.மு.க. சௌந்தரபாண்டியன் அவர்கள்தானே?" என்று கூறினேன். அவர் ஆச்சரியப்பட்டு, "சரியாகச் சொன்னீர்கள். பதநீர் விசயம் எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று கலைஞர் கேட்டார். உடனே நான், "சௌந்தரபாண்டியன் அவர்கள் என் தந்தையின் வகுப்பு நண்பர். 1976-ல் நான் தூத்துக்குடி வட்டார இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகப் பணியாற்றியபோது அவர் என்னிடம் அரசியல்ரீதியாக உறவோடு பழகுவார். அப்போது அவர் என்னிடம், "கலைஞருக்கு மாலைப் பதநீர் வாங்கிக் கொடுத்த இடம் இதுதான் என்று காட்டினார்" என்றேன். பின்னர், அப்போது நடந்த அரசியல் நிகழ்வுகளை ஆர்வமாக கதை சொல்வதுபோல என்னிடம் சொன்னார் கலைஞர். எனக்கு அவர் சொன்ன நிகழ்வுகளைக் கேட்டவுடன் என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. ஏனென்றால் 1958-ல் நடந்த சம்பவங்களையெல்லாம் இப்போது, 22 வருடங்கள் கழித்து 1980-ல் ஞாபகமாகச் சொல்கிறாரே என்று ஆச்சரியப்பட்டேன். இன்று நாம் வாழும் கம்ப்யூட்டர் உலகத்தைவிட, அப்போதே கலைஞரின் மூளையில் ஞாபகசக்தி அடங்கி இருந்ததை எண்ணி வியக்கிறேன்.

சிறிதுநேரம் கழித்து, அவர் என்னிடம், "தம்பி அப்பாத்துரை", நான் 1957-ல் முதன்முதலாக இந்த சட்டமன்றத்தில் நுழைந்தேன். தற்போது கட்டபொம்மன், வ.உ.சி., வாஞ்சிநாதன், சுந்தரலிங்கம் ஆகியோர் பற்றி நீங்கள் பேசிய பேச்சு என்னையே மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. நன்றாகப்

பேசினீர்கள். என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று மனதார வாழ்த்தினார்.

1981–ல், திருச்செந்தூர் முருகன் கோயிலில் நடைபெற்ற, நகை சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மர்ம மரணம் பற்றி தெரிந்தவுடனே, திருச்செந்தூருக்குச் சென்று சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டேன். அங்கு இருந்தவர்களைச் சந்தித்து உண்மை நிலவரங்களை அறிந்தேன். அதன்பிறகு, பத்திரிகையாளர்களை அழைத்து விவரங்களைக் கூறினேன். இதன் பின்னரே, கலைஞர், 'நீதிகேட்டு நெடும் பயணம்' என்று அறிவித்து, மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை தொண்டர்களுடன் நடந்தே சென்றார். இது பொதுமக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது.

நீதியரசர் பால் கமிஷன் அறிக்கைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டமன்றத்தில் விலாவாரியாகப் பேசினேன். (பால் கமிஷன் அறிக்கையில் அரசுத்தரப்பு வாதமான தற்கொலை என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்கள்தரப்பு வாதமான கொலை என்பதை நான் நிராகரிக்கவில்லை.) சிவன் சொத்து குல நாசம் என்று பேசி முடித்தேன். பேசி முடித்தவுடன் கலைஞர் என்னை அழைத்து, ''உண்மை விவரங்களை அருமையாகப் பேசினீர்கள்'' என்று பாராட்டினார்.

1983–ல், சென்னையில் நடைபெற்ற எனது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு எங்களை கலைஞர் வாழ்த்திப் பேசினார்.

கலைஞர், சட்டமன்றத்துக்கு காலையில் அவை கூடும்போது வந்தாரென்றால் சபை முடியும் வரை அவையில் இருப்பார்; கடமையே கண்ணாக இருப்பார்; நேரம் காலத்தைப் பொன்னாகப் போற்றுவார்;. தோழமைக் கட்சியினரோடு என்றுமே நல்லுறவு வைத்துக்கொள்வார்.

கலைஞரின் திரையுலக அடுக்குமொழி தமிழ் வசனங்களும், அரசியல் மேடையில் அவரின் பேச்சுகளும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. இராம. அருணகிரி,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(திருப்பத்தூர் தொகுதி)

முன்னாள் முதல்வர், தமிழினத் தலைவர் திரு. கலைஞர் அவர்களின் வாழ்நாளில் அவருக்கும் எனக்குமான தொடர்புகளை கீழ்க்கண்ட நிகழ்வுகளைச் சுட்டி நினைவுகூர்கிறேன்.

முதன் முதலில் சிவகங்கை மாவட்டம், பிரான்மலையில் தி.மு.க பொதுக் கூட்டத்தில் பங்கேற்க வந்தபோதுதான் முதலில் அவரைப் பார்த்தேன். நான் காங்கிரஸ் குடும்பத்தினர். ஆனாலும் முன்வரிசையில் அமர்ந்து பேச்சை பார்த்தேன். பிரான்மலையில் அன்று தி.மு.க–வுக்கு என ஒரு கொடிமரம் நடப்பட்டது. அதனை காங்கிரசார் எடுத்துச் சென்று விட்டனர். அதைக் குறிப்பிட்டு கூட்டத்தில் பேசிய கலைஞர் அவர்கள் பச்சை மரம் யாருக்குத் தேவையோ, அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் எனப் பிறர் நோகாமல் பேசினார்.

அதே நாளில் சிங்கம்புணரியில் தமிழ் மன்றம் சார்பில் தமிழர்களின் வீரம் மற்றும் மான உணர்வு குறித்து ஏளனம் செய்து பேசிய கனக–விசய மன்னர்களின் தோல்வி மற்றும் சேரன் செங்குட்டுவனின் வீரம் குறித்த நாடகம் கல் சுமந்த கசடன் என்ற பெயரில் நடத்தப்பட்டது. அதில் பேசிய கலைஞர் அவர்கள் நாடகத்தலைப்பு கல் சுமந்த கசடர் என்றிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

நான் காரைக்குடி, அழகப்பா கல்லூரியில் படித்த நேரம். தேவகோட்டையில் தி.மு.க மாநாடு அதில் உதயசூரியன் எனும் நாடகம் நடைபெற்றது. கலைஞர் அவர்கள் முதலில் காங்கிரசார் வேடத்தில் கதருடை அணிந்தும், பின்னர் தி.மு.க–வில் இணைவதாகவும் நடிப்பு இருக்கும். அவருடன் உரையாடுபவர் திருமதி மனோரமா. கலைஞர் அவர்கள் சில குறிப்புகளை வைத்துக்கொண்டு அதில் அன்றைய செய்திகளைச் சேர்த்து படித்து நடிப்பார். ஆனால் திருமதி மனோரமா குறிப்புகள் இன்றி மனப்பாடமாக பதில் சொல்லி நடித்தார். அச்சம்பவம் திருமதி மனோரமாவின் திறமையைக் கண்டு என்னை வியக்க வைத்தது.

1970–களில் நான் சிங்கம்புணரி வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தேன். திரு. வெ. வால்மீகி அவர்கள் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தார். 1977 நாடாளுமன்றத் தேர்தலில் அன்னை இந்திராகாந்தியும், காங்கிரஸ் இயக்கமும் தோல்வி அடைந்திருந்த நிலையில் தமிழக சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தி.மு.க அவருக்கு கறுப்புக்கொடி காட்ட முடிவெடுத்து மதுரையில் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. அக்கூட்டம் வன்முறையால் தடைபட்டது. அன்றையதினம் கொட்டாம்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அன்னை

இந்திராகாந்தி முன்னிலையில் மேடையில் கலந்து கொண்டு பேசினேன். 1978 இல் சிவகங்கை மாவட்டம் வந்த கலைஞர் அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டத் தீர்மானிக்கப்பட்டு திரு. வெ. வால்மீகி தலைமையில் நடைபெற்றது. நானும் அதில் கலந்து கொண்டு திருப்பத்தூரில் கறுப்புக்கொடி காட்டினோம். அவர் பயணம்செய்த காரின் கண்ணாடியைத் திறந்து இருவரையும் பார்த்துச் சென்றார்.

1980 இல் காங்கிரஸ் – தி.மு.க கூட்டணி ஏற்பட்டது. திரு. வெ. வால்மீகி திருப்பத்தூர் சட்டமன்றத் தேர்தலில் நிறுத்தப்பட்டார். அவரது வெற்றிக்கு கலைஞர் அவர்கள் மிகவும் பாடுபட்டார். பின்னர் திரு. வெ. வால்மீகி அவர்கள் மறைவுக்குப்பின் அப்பதவிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் நான் வெற்றி பெற்றேன். கறுப்புக்கொடி காட்டிய எங்கள் இருவரையும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவதற்கு கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருந்தார். அது நீங்காத நினைவு ஆகும்.

1980 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திரு. வெ. வால்மீகி போட்டியிட்டார். அப்போது என்னை கலைஞர் அவர்களிடம் மாவட்டக் கழகச் செயலாளர் திரு. எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது என்னை பெரிய இடத்துப் பிள்ளை என திரு. எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் குறிப்பிட்டார். அவரும் புன்னகையை வெளிப்படுத்தினார். 1981 இடைத்தேர்தலில் தேர்தல் பணிக்கு கலைஞர் அவர்கள் வரவில்லை. நிருபர்கள் அவரிடம் கேள்வி கேட்டதற்கு பொன்குடத்திற்குப் பொட்டெதற்கு என கேள்வியையே பதிலாகத் தந்தார். அது என் வாழ்நாளில் மறக்க முடியாத கருத்தாக அமைந்துவிட்டது.

நான் சட்டமன்ற உறுப்பினர் விடுதி அறையில் தங்குவேன். என் பக்கத்து அறையில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் தங்குவார். அப்போது இலங்கைத் தமிழர் நலன் குறித்து கலைஞர் அவர்களிடம் பேச வேண்டும் என நினைத்தேன். திரு. ஆறுமுகம் அவர்கள் அதற்கான வாய்ப்பினை தொலைபேசி மூலம் ஏற்படுத்தித் தந்தார். நானும் இலங்கைத் தமிழர் நலன் குறித்து விரிவாகப் பேசினேன். கனிவான பேச்சாக அது இருந்தது.

நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது சட்டமன்ற அலுவலகங்களில் அவரைப் பார்க்கும்போது எல்லாம் வணக்கம் செலுத்துவேன். அவரும் அதை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் தமது தொகுதிகள் குறித்து கோரிக்கைகள் வைப்பார்கள். அப்போது கலைஞர் அவர்கள் உங்களது சட்டமன்றக் கேள்விகள் கேள்விக் கணைகளாக இருக்க வேண்டும் என்றும் கெஞ்சுதலாக இருக்கக் கூடாது எனவும் கூறுவார். மேலும் தாங்கள் கூறும் விளக்கம் ஆணையிடலாக இருக்க வேண்டும் எனவும் கூறுவார்.

ஒருமுறை நானும், குன்றக்குடி–திருவண்ணாமலை ஆதீன கர்த்தர் திரு. பொன்னம்பல அடிகளாரும், சிங்கம்புணரி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மக்களின் ஆதாரப்

பிரச்சனையான குடிநீர் பிரச்சனை குறித்து மனு அளிக்க கலைஞர் அவர்களைச் சந்தித்து மனு அளித்தோம். மனுவினைப் பெற்றுக் கொண்டு ஆவன செய்வதாகக் கூறினார். நான் அவருக்கு பொன்னாடை அணிவிக்க முயன்றேன். அவர் அதைப் பலமுறை மறுத்தார். நானும் மீண்டும் மீண்டும் முயன்றேன். பின்னர் பொன்னாடையைப் பெற்றுக் கொண்டு, அடிகளாரிடம் உங்கள் ஆள் விடமாட்டேன் என்கிறாரே எனச் சிரிப்புடன் கூறினார்.

ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்களிடம் திரு. முரசொலி மாறன் நாடாளுமன்றத்தில் எப்படி பேசுவது எனக் கேட்டாராம். அதற்கு அண்ணா அவர்கள் குறிப்புகள் வைத்துக் கொண்டு பேச வேண்டும். ஆனால் பேசுவதை முழுவதுமாக எழுதிக் கொண்டு வந்து பேசக்கூடாது என்றாராம். கலைஞர் அவர்கள் மிகப் பெரிய அரசியல்வாதி. சட்டமன்றத்தில் குறிப்புகள் இல்லாமல் பேசமாட்டார். அதேபோல் தகுந்த ஆதாரமின்றி எவ்விதக் குற்றச்சாட்டுகளையும் கூற மாட்டார்.

அது 1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்திருந்தது. அண்ணா அவர்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி எனும் திட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றவும் செய்தார். அச்சமயத்தில் பிரான்மலையில் (பறம்புமலையில்) முன்தோன்றல் அடிகளாரால் பாரி வள்ளல் விழா நடைபெற்றது. அதில் ஒரு நிகழ்வாக கலைஞர் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. அதில் கவிதை பாடிய கலைஞர் அவர்கள்

முடி என்றால் நாதர் முடி
குடி என்றால் குன்றக்குடி
மடி என்றால் ஆவின் மடி
படி என்றால் அண்ணாவின் படி

எனப் பாடி அண்ணாவின் படி அரிசித் திட்டத்தை நினைவுகூர்ந்தார்.

கலைஞர் அவர்கள் சிறந்த சினிமா வசனகர்த்தர். பராசக்தி படத்தில் இடம்பெற்ற வழக்காடு மன்றக் காட்சியில் கலைஞரின் வசனமும், சிவாஜி அவர்களின் நடிப்பும் கண்ணையும் நெஞ்சையும் நிறைப்பவை. எங்கள் ஊரில் டூரிங் டாக்கீஸில் 30 நாள்கள் நடைபெற்றது. அந்த வசனத்திற்காகவும், இருவரின் சிறப்பான திறமையால் ஈர்க்கப்பட்டு அத்தனை நாள்களும் திரைப்படம் காணச் சென்றேன்.

முரசொலி இதழ் மாதமிரு முறையாக இருந்த போதே குறளோவியம் தொடர்ந்து வெளிவரத் தொடங்கியது. கட்சிப்பாகுபாடின்றி இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் அதனை விரும்பிப் படிப்பர். அதிலும் படைச் செருக்கு என்ற அதிகாரம் – குறள் 774,

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

என்ற குறளுக்கு அவர் எழுதியுள்ள விளக்கவுரை என்னை வெகுவாகக் கவர்ந்த ஒன்றாகும்.

கலைஞர் அவர்களின் பணியாளர் திரு. செயல்மணி அவர்கள் என் உறவினர். அவரது திருமணம் சிங்கம்புணரியில் எங்கள் வீட்டில் நடந்தது. அதில் கலைஞரின்

துணைவியார் திருமதி தயாளு அம்மாள், அவர்களின் மகள் திருமதி செல்வி மற்றும் கலைவாணரின் மனைவியும் நடிகையுமான திருமதி டி.ஏ. மதுரம் ஆகியோர் எங்கள் வீட்டிலேயே தங்கி திருமணத்தில் கலந்து கொண்டனர். முன்னாள் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களின் தலைமையில் திருமணம் நடைபெற்றது. இது எனக்கு மறக்க முடியா இனிய நிகழ்வு. பின்னர் கலைஞர் அவர்களின் வீட்டுத் திருமணத்தில் கலந்துகொள்ளச் சென்ற போது என்னை அழைத்து இன்முகத்துடன் பேசினார். அப்போதைய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. M.P. சுப்பிரமணியம் நிகழ்ச்சிக்கு வந்துவிட்டுச் சென்று விட்டதாகவும், நான் தாமதமாக வந்துள்ளதாகவும் கிண்டலாகக் கூறினார்.

ஒருமுறை திரு. செயல்மணி அவர்கள் கலைஞர் மீதான தமது மனக்குறையால் சிங்கம்புணரிக்கு வந்திருப்பதாக அறிந்தேன். கலைஞர் அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர் – அவரிடம் கோபித்துக் கொண்டு வரலாமா – உடனே திரும்பிச் செல் – உன் உயிர் பிரியும் காலம் முழுதும் அவருடனேயே இருக்க வேண்டும் எனக் கண்டிப்புடன் அறிவுரை கூறி அனுப்பி வைத்தேன்.

திரு. செயல்மணி அவர்கள் மறைந்த போது கலைஞர் அவர்கள் ஒரு இரங்கற்பா எழுதினார். அதனைத் தற்போதைய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் அவர்கள் கொட்டும் மழையில் வாசித்தார். அது படைச்செருக்கு அதிகாரம் – குறள் 780

புறந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

என்ற குறள் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு பணியாளருக்கு வழங்கிய இலக்கிய நயத்துடன் கூடிய சான்றாகும்.

நான் அன்னை இந்திரா காந்தி அவர்கள் மற்றும் தமிழகத் தலைவர்கள் அனைவரின் தலைமையிலும் கூட்டங்களில் பேசி உள்ளேன். ஆனால் கலைஞர் அவர்களின் தலைமையில் கூட்டங்களில் பேசியது இல்லை. இது என் வாழ்நாளில் மிகப்பெரிய குறையாகக் கருதுகிறேன்.

தற்போதைய முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கம்புணரிக்கு அடிக்கடி வருவதுண்டு. 1970–களில் இங்கு வந்து ஒரு மாதத்திற்கு மேல் தங்கியுள்ளார். அப்போது கழக முன்னோடி திரு. தோப்பு நடராசன் தோப்பில் வந்து பேசிக் கொண்டிருப்பார்கள். நாங்களும் அவரது உரையாடல்களில் பங்கு பெறுவோம். அப்போதும் கூட. அவரது பேச்சுக்களில் ஒரு பண்பட்ட நிலைமை தெரியும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. பால. ஆனந்தன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(வந்தவாசி தொகுதி)

நான் கடந்த 1996–2001 ஆம் ஆண்டில் வந்தவாசி (தனி) தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளேன். அப்போது தி.மு.க. சார்பில் 160 உறுப்பினர்களும், த.மா.கா. சார்பில் 40 உறுப்பினர்களும் மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்கள் 34 உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் இருந்தோம்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு சிறந்த முதல்வர் என்பதை நாடறியும். 1997 ஆம் ஆண்டு என நினைக்கிறேன், 1997–1998 ஆம் ஆண்டின் நிதிநிலை கூட்டத்தொடரில் அனைத்துத் துறைகளுக்கான மானியக் கோரிக்கை முடிவுற்றது. தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் பதிலுரை அளிக்கும் போது, வரிவிதிப்பு பகுதியில் கோயில்களில் பயன்படுத்தப்படும் திருநீருக்கு வரி 4 பைசாவில் இருந்து 2 பைசாவாக குறைத்து அறிவிக்கும்படி ஓர் உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். அதனை அறிவிக்கும் போது தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர் திருநீருக்கு வரியினை 4 பைசாவிலிருந்து 2 பைசாவாக குறைப்பதற்கு கோரிக்கை வைத்துள்ளார். அந்த. "ஈஸ்வரனே" திருநீருக்கு வரியை குறைக்க கோரியதாக, அவரின் கோரிக்கையை ஏற்று இன்று முதல் 2 பைசா வரியும் இல்லாமல் இனிமேல் திருநீருக்கு வரியே இல்லை என்று அறிவிக்கிறேன் என்று அறிவித்தார் கலைஞர். அதன் பிறகுதான் அனைவருக்கும் தெரிய வந்தது, இந்த கோரிக்கையை வைத்த த.மா.கா. உறுப்பினர் திரு. ஈஸ்வரன் MLA என்பது. இதுபோன்ற சமயோசிதமான பேச்சுத் திறன் கலைஞரிடம் ஏராளமாகக் கொட்டிக் கிடந்தது. இது ஓர் உதாரணம் மட்டுமே.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. பி. இராசமாணிக்கம்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(ஒரத்தநாடு தொகுதி)

1996–2001 வரை ஒரத்தநாடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் மக்கள் பணியாற்றிய வாய்ப்பை பெற்றமைக்கு வாழ்நாள் முழுவதும் பெருமை அடைகின்றேன்.

ஒரு சமயம் சட்டமன்றத்தில் காவல் துறை தொடர்பாக, ஒரத்தநாட்டில் வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என்று வினா எழுப்பியிருந்தேன். காவல் துறை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இலாகா என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்களே சட்டமன்றத்தில் எழுந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்படும் என்று பதில் அளித்தார்கள்.

நான் ஆர்வக்கோளாறு காரணமாக எவ்வளவு காலத்திற்குள் நிரந்தர அலுவலக கட்டடம் கட்டித்தர அரசு முன்வரும் என்று துணைக் கேள்வியை எழுப்பினேன். உடனே தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரத்தநாட்டில் தற்போது இயங்கி வரும் காவல் நிலையக் கட்டடம் அரசுக்குச் சொந்தமான சத்திரத்துக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றது என்றாலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று விரைவில் காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று உறுதி அளித்தார்கள்.

இந்த நிகழ்வு சட்டமன்றத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், என்னை ஏற இறங்க பார்த்தவுடன், நான் அதிர்ச்சியாகி தலைகுனிந்துவிட்டேன். அதன்பிறகு எனக்கு புரிந்தது, தலைவர் கலைஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலக் கேள்விக்கு பதில் அளித்த பிறகு, துணைக் கேள்வி எழுப்புகின்ற நடைமுறை இல்லை என்பதும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இவ்வளவு பொறுமையாகவும், விளக்கமாகவும் பதில் அளித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி விட்டார்கள் என்பதை உணர்ந்தேன்.

பின்பு ஒருமுறை ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவது வழக்கம். ஒரு முறை அந்தக் கூட்டத்தில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தபோது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் வழங்கப்படும் மகளிர் திருமண உதவி திட்டத்திற்கு அரசு ஒதுக்கிய நிதி பற்றாக்குறையால் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது என்றும், எனவே அரசு கூடுதலாக நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்றும், இந்த மகத்தான திட்டத்திற்கு பொதுமக்களிடம் பெரிய வரவேற்பும், எதிர்பார்ப்பும் உள்ளது என்றும் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அந்த

ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து, விண்ணப்பித்த அனைத்து மகளிரும் பயன்பெற்றார்கள் என்று இவண் குறிப்பிடத்தக்கது.

தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் தமிழ்நாட்டில் பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

எங்கள் ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி, தஞ்சை, திருவாரூர் ஆகிய இரண்டு மாவட்டங்களும் இணைந்த தொகுதியாகும். நான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில் அவரது அலுவலகத்தில் சந்தித்து எழுத்துப் பூர்வமாக எனது தொகுதிக்கு இரண்டு பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைத்துத்தர வேண்டும் என்றும், அதற்குத் தேவையான இடம் உள்ளது என்றும் கோரிக்கை வைத்தேன். இந்த திட்டம் அப்போதுதான் ஒரு தொகுதிக்கு ஒன்றுதான் என்ற நிலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் எனது கனிவான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இரண்டு பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்க ஆணை வழங்கி, அதை மாண்புமிகு திரு. கோ.சி. மணி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) அவர்கள்மூலம் மாபெரும் திறப்பு விழா நடத்திய வரலாற்று நிகழ்வினால் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உள்ளத்தில் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என்று உறுதி அளிக்கின்றேன்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திருமதி இரா. இராணி,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(உப்பிலியாரபுரம் தொகுதி)

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்ட ஒரு மாபெரும் தலைவர் ஆவார். சட்டமன்றத்திலேயே மாற்றுக் கட்சியினரையும் மதிக்கின்ற மனப்பான்மை உடையவர், மனிதநேயமிக்க தலைவர். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தொகுதியின் வளர்ச்சிக்காக வைத்த கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி தந்தவர் தலைவர் அவர்கள். சட்டமன்ற உறுப்பினர் ''பதவி'' அல்ல ''பொறுப்பு'' என்று உணர்த்தி எங்களையெல்லாம் மக்களுக்காக உழைக்க வைத்த தலைவர். தோல்வியை கண்டிராத சட்டமன்ற உறுப்பினராய் அனைத்து தேர்தல்களிலும் வென்ற அதிசய தலைவராய் எங்களை வழி நடத்தியவர்.

உறங்கிக் கிடந்த உள்ளாட்சியின் உறக்கம் கலைத்து இந்தியாவிலேயே முதன்முறையாக உள்ளாட்சி அமைப்பு தேர்தலில் போட்டியிட பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளித்தது, தி.மு.கழக அரசு. 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்ற தேர்தலில் போட்டியிட 33 சதவீத இட ஒதுக்கீட்டை நமக்கு தலைவர் அவர்கள் வழங்கியதன் காரணமாகத்தான் இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர் மாநகராட்சி மேயர்களாக, நகராட்சி தலைவர்களாக, ஒன்றிய தலைவர்களாக, உறுப்பினர்களாக, சிற்றூராட்சி தலைவர்களாக பதவியில் அமர்ந்திருக்கின்ற காட்சியை நாம் பார்க்க முடிகிறது.

''தமிழ்த்தாயின் தலைமகனே''

''தமிழர்களை வாழ வைத்த திராவிட சூரியனே''

''விவசாயிகளின் வாழ்வை செழிக்க வைத்த செந்தமிழ் காவலரே''

''உனக்கேது மறைவு நீ தினமும் உதித்துக் கொண்டே இருப்பாய் எங்களை வழிநடத்திக் கொண்டே இருப்பாய்''

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவரே! அன்பு தலைவரே! எங்கள் ஆருயிர் தலைவரே! நூற்றாண்டு விழா சிறக்கட்டும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. சோ.மா. இராமச்சந்திரன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(அண்ணாநகர் தொகுதி)

1966 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலை நோக்கி தமிழ்நாடு தயாராகிக் கொண்டு இருந்தது. 1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடக்க இருக்கிறது. அந்த நேரத்தில் நானும், முன்னாள் சென்னை மேயர் திரு. அ.பொ. அரசு மற்றும் முன்னாள் தி.மு.க. மாவட்ட செயலாளர் திரு. நீலநாராயணன் அவர்களும், திரு. அண்ணா அவர்களின் ஆணைக்கேற்ப, திரு. எம்.ஜி.ஆர். அவர்களை பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள தேதி கேட்டு இராமாவரம் தோட்டத்திற்கு போனோம். அப்போது எம்.ஜி.ஆர். சினிமா படப்பிடிப்பிற்காக தன்னுடைய ஒப்பனைக் கலைஞர் பீதாம்பரத்துடன் இராமாவரத்தில் இருந்தார். நாங்கள் வந்த செய்தியினை திரு. எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில் சொன்னபோது, அவர் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு சாத்தியமில்லை என்று தெரிவித்தார். அப்போது எம்.ஜி.ஆர். வீட்டில் நடந்த நிகழ்வுகளை, அண்ணா அவர்களிடம் தெரிவிக்க, அவருடைய வீடு இருக்கும் நுங்கம்பாக்கத்திற்கு சென்றோம். அப்போது காலை 10 மணியளவில், அண்ணா வீட்டிற்குச் சென்றவுடன், மாடியில் ஊஞ்சலில் இருந்த அண்ணா அவர்களை நாங்கள் நேரடியாகச் சென்றுபார்த்தோம். நடந்தவற்றை சொன்னோம். அதன் பிறகு அண்ணா அவர்கள், எங்களைப் பார்த்து, "நீங்கள் உடனடியாக கலைஞர் அவர்களை, வீட்டில்போய்ப் பார்த்து நடந்த நிகழ்வுகளைச் சொல்லி வாருங்கள்" என்று அனுப்பினார். அதன் பிறகு கலைஞர் அவர்களைப் பார்த்து நடந்தவற்றை சொன்னோம். அவர் அதற்கு "நீங்கள் எந்த வருத்தமும் பட வேண்டாம்; அதன் பிறகு S.A. கிரவுண்டில், நான்கு நாட்கள் கூட்டம் நடத்தி, நாலணா டிக்கெட் போட்டு அதிலிருந்து வசூலிக்கிற நிதியை தேர்தல் நிதிக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்" என்று சொன்னார். முதல் நாள், வசூலிலேயே சென்னை மாவட்டம் தன் பங்கிற்கு கொடுக்க வேண்டிய நிதியை கணிசமான அளவில் பெற்று விட்டோம். மற்ற மூன்று நாட்கள் பெற்ற வசூலை கூட்டத்திற்கான செலவு போக, சென்னை மாவட்ட வளர்ச்சி நிதியாக வைத்துக் கொண்டோம்.

நான்கு நாட்கள் படு விமரிசையாக கூட்டம் நடந்தது. அண்ணா மற்றும் கலைஞர் உட்பட அனைத்து தி.மு.க. தலைவர்களும் கூட்டத்தில் பங்கேற்றார்கள்.

இன்னொரு நிகழ்ச்சி, 1984 ஆம் ஆண்டு, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த போது, அண்ணா நகர் சட்டமன்ற தொகுதி உட்பட தமிழ்நாட்டில் நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்போது

ஒரு நாள், என்னுடைய நண்பர்கள் திரு. மேத்தா நகர் நடராஜன் மற்றும் திரு. லத்தீப் ஆகியோர் என்னிடம் "தலைவர் கலைஞர் அவர்கள் தன்னை சந்திக்க வேண்டுமென்று உங்களிடம் சொல்லச் சொன்னார்கள். இதைக்கேட்ட நான் உடனடியாக மவுண்ட் ரோடு கட்சி தலைமையகத்திற்குச் சென்று தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்தேன். அப்போது கலைஞர் அவர்கள் என்னிடம், "அண்ணா நகர் தொகுதிக்கு வேட்பாளராக விருப்பம் உள்ளதா?" என்று கேட்டார். நான் சரியென்று சொன்னேன்.

அப்போது உடன் இருந்த பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் என்னிடம் கேட்டுக் கொண்டார். திரு. T.R. பாலு அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களிடம் திரு. சோ.மா. இராமச்சந்திரன் அவர்களை, "பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைப்பது எனது கடமை" என்று சொன்னார். அதே போல் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கடுமையாக உழைத்தும், கலைஞர் அவர்களின் தீவிர பிரச்சாரத்தினாலும் நான் ஏறத்தாழ பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன்.

மேலும், தேர்தல் பிரச்சாரத்தின்போது அப்போதைய தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், தற்போதைய நமது தமிழ்நாடு முதல்வருமான, திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தன் இளைஞர் அணி உறுப்பினர்களுடன் அண்ணாநகர் தொகுதிக்குட்பட்ட அனைத்து இல்லங்களிலும், மாடிப்படி ஏறி, வாக்குகளை சேகரித்து எனக்கு வெற்றி தேடித்தந்தார் என்பது, இன்றும் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்களும், நமது தற்போதைய முதல்வர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாட்டை திராவிட மாடல் அரசாக அற்புதமாக மக்களுக்காய் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் அவர்களின் அரசை தொடர்ந்து சீரிய முறையில் வழி நடத்த வேண்டுமென்று நமது மாண்புமிகு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(செஞ்சி தொகுதி)

நான் டாக்டர் எஸ்.எஸ்.ஆர். ராமதாஸ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினராக இருந்தவன் என்ற முறையிலும், மறைந்த எனது தந்தையார் திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சி அவர்களும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் என்ற முறையிலும், கலைஞர் கருணாநிதி அவர்களைப் பற்றி நான் பார்த்தது, எனது தந்தையார் அவர்கள் அவரைப்பற்றி கூறக் கேட்டது என்று பல நினைவுகள் என் மனதில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் சில நினைவுகளை இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

எனது தந்தையார் திரு. இராமசாமி படையாட்சி காலத்திலிருந்து என்னுடைய காலம் வரையிலும் எங்களுக்கு கலைஞர் அவர்களுடன் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தலைவர் கலைஞர் அவர்களை சட்டமன்றத்தில் சந்திக்கும் வாய்ப்பு அவ்வளவாக எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அதற்கு முன்பே கலைஞர் அவர்களைப் பற்றி எனது தந்தை படையாட்சியார் அவர்கள் சொல்வதை நிறையக் கேட்டிருக்கின்றேன்.

எனது தந்தையார் பழகிய அரசியல் தலைவர்களிலேயே முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார். இதனை நானே பலமுறை கண்டும், கேட்டும் இருக்கிறேன்.

ஒருமுறை கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது, எனது தந்தை படையாட்சியார் மேல்சபை (MLC) உறுப்பினராக இருந்தார். அப்போது தமிழகத்தில் தென்பெண்ணையாற்றில் பெரியதொரு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் ஆற்றின் அருகாமையிலுள்ள விளைநிலங்கள் எல்லாம் வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட மணலால் மூடப்பட்டுவிட்டன. அதன் பிறகு அங்கு பயிர் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதை அகற்றுவதற்கு பெரும் பணத்தொகை தேவைப்பட்டது; மேலும் பல வருடங்களுக்கு விவசாயிகள் பயிர் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

விவசாயிகள் அனைவரும் படையாட்சியாரிடம் வந்து முறையிட்டதன் காரணமாக, எனது தந்தையாரும் கலைஞர் அவர்களிடம் அந்த ஆற்று மணல் குவியல்களை அகற்றித்தர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். கலைஞர் அவர்களும், பொதுப் பணித் துறையிடம் அதனை உடனே அகற்றுமாறு உத்தரவிட்டார். அதற்கு அவர்கள், அரசாங்கத்திலிருந்து பெரும் தொகையைச் செலவிட நேரிடும். அதற்கு நிதியமைச்சகம் அனுமதி தரமாட்டார்கள் என்று

கூறினார்கள். மேலும், Bulldozer என்னும் இயந்திரத்தை வைத்துதான் அவற்றை சரி செய்ய முடியும் என்றார்கள். ஆனால், கலைஞர் அவர்களோ, "நான் படையாட்சியாருக்கு வாக்கு கொடுத்துவிட்டேன். அதை என்ன செலவானாலும் செய்து முடியுங்கள்" என்று கடுமையாக உத்தரவிட்டார். அதன் காரணமாக, அடுத்த சாகுபடிக்கே நிலத்தைத் தயார் செய்து கொடுத்துவிட்டார்கள். இதனைப் பாராட்டி படையாட்சியார் அவர்கள் மேல்சபையில் பேசியபோது, 'கடவுளால் ஏற்படும் இயற்கைச் சீற்றத்தைக்கூட கலைஞர் மாற்றி அமைத்துவிடுவார்' என்று பாராட்டிப் பேசினார்.

பொதுவாக, சட்டசபையிலோ அல்லது மேல்சபையிலோ ஓர் உறுப்பினர் பேசினால், அவரது பேச்சை அப்படியே அச்சடித்து, அதை அந்த உறுப்பினரிடம் காண்பித்து, ஏதாவது திருத்தம் இருந்தால் சரிசெய்து, அன்று மாலையே பத்திரிகைக்கு அனுப்பிவிடுவார்கள். அதேபோல் படையாட்சியாரிடம் காண்பித்தபோது அதை அவர் படித்துப் பார்க்காமல் கையொப்பமிட்டு தந்துவிட்டார். அதில் படையாட்சியார், 'கடவுளால் ஏற்படும் சீற்றத்தைக்கூட கலைஞர் சரி செய்துவிடுவார்' என்று பேசியதை குறிப்பெழுதுபவர் 'கடவுளால் செய்ய முடியாததைக்கூட கலைஞர் சரி செய்துவிடுவார்' என்று மாற்றி எழுதிவிட்டார்கள். அது அடுத்த நாள் பத்திரிகையில் அப்படியே பிரசுரமாகிவிட்டது. அதனைப் பார்த்த துக்ளக் பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. சோ. இராமசாமி அவர்கள், தனது பத்திரிகையில், 'இந்த வார தமாஷ்' என்று படம் போட்டுக் காட்டிவிட்டார். மேலும் அதற்கு வழக்கமாக சன்மானம் அளிப்பதுபோல் படையாட்சியார் அவர்களுக்கு ரூ.5/–ஐ மணியார்டர் செய்துவிட்டார். மறுநாள் நான் இருக்கும்போதுதான் தபால்காரர் அந்த மணியார்டர் பணத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். நான் உடனே எனது தந்தையாரிடம், நீங்கள் பேசியதைத் தவறாகப் புரிந்துகொண்டு பிரசுரித்துவிட்டார்கள். அதற்காகத்தான் இவ்வாறு அனுப்பியிருக்கிறார்கள் என்று கூறினேன்.

அப்போது படையாட்சியாரின் பக்கத்து அறையில் இருந்த திரு. சி.வி. இராஜகோபால் (மேல்சபை உறுப்பினர்) என்பவர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவரும், அறிஞர் அண்ணாவின் நெருங்கிய நண்பருமாகிய அவர் படையாட்சியாரைப் பார்த்து, நீங்கள் பேசியபோது நானும் அங்குதான் இருந்தேன். நீங்கள் பேசியதை தவறாகப் பிரசுரித்துவிட்டார்கள்; அதற்காக இவர்கள் சன்மானம் அனுப்பி தங்களை அவமதிக்கிறமாதிரி இருக்கிறது. நீங்கள் இந்தப் பணத்தை வாங்காதீர்கள், திருப்பி அனுப்பிவிடுங்கள் என்று கூறினார். உடனே படையாட்சியார் அவர்கள், தவறாகப் புரிந்துகொண்டு பிரசுரித்திருந்தாலும், அதில் உள்ளதுபோல்தான் நான் பேசியிருக்க வேண்டும்; அதற்குத் தகுதியானவர்தான் கலைஞர் என்று கூறி, அந்த சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு, RECEIVED with THANKS என்று எழுதி அனுப்பிவிட்டார்.

ஒருமுறை கலைஞர் அவர்களுக்கு முதன் முதலாக சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் தருவதற்காக ஒரு விழாவினை ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த

விழாவிற்குச் சென்ற கலைஞருக்கு எதிராக அந்தக் கல்லூரி மாணவர்கள் சிலர் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள்.

அதற்கு அடுத்த நாள் மேல்சபையில் (MLC) படையாட்சியாரைப்பார்த்து கலைஞர் அவர்கள், பல கல்லூரிகளுக்கு நீங்கள் பரிந்துரைத்த அத்தனை பேருக்கும் அனுமதி வாங்கித் தந்தேன். ஆனால், நான் இந்தப் போராட்டத்தைப் பற்றி போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டபோது, பெரும்பாலும் இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் வன்னிய மாணவர்கள்தான் என்று கூறினார்கள் என்று சொல்லி வருத்தப்பட்டார்.

அதில் மிகவும் மனவேதனை அடைந்த படையாட்சியார், அந்தக் கல்லூரியில் வருடந்தோறும் நடைபெறும் கல்லூரி விடுதி நாளில் நடைபெறும் விருந்திற்கு அவரவர் தாங்கள் சார்ந்திருக்கும் கட்சியின் தலைவர்களையெல்லாம் விருந்தினராக அழைப்பார்கள்; வன்னிய மாணவர்கள் வருடந்தோறும் படையாட்சியாரை அந்த விழாவிற்கு அழைப்பார்கள். கலைஞருக்கு அங்கு நேர்ந்த மனக்கசப்பினால் படையாட்சியார் அதற்குப்பின் பலமுறை அவர் இறக்கும் வரை அழைத்தும் போகாமல் இருந்துவிட்டார். இதுவே படையாட்சியார் அவர்கள் கலைஞர் அவர்கள்மீது வைத்திருந்த மதிப்பையும், மரியாதையையும் காட்டுகிறது.

படையாட்சியார் மட்டுமல்லாமல், கலைஞர் அவர்களும் படையாட்சியார்மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும், வைத்திருந்தார்.

ஒருமுறை தேர்தலின்போது கலைஞர் பிரச்சாரம் செய்வதற்கு கடலூர் வந்தபோது, படையாட்சியார் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததைக் கேள்விப்பட்டு, அவரது துணைவியார் திருமதி தயாளு அம்மாளையும் அழைத்துக்கொண்டு எங்களது இல்லத்திற்கு வந்து படையாட்சியாரைப் பார்க்க வந்துவிட்டார். எனது தந்தையாரைப் பார்த்து நலம் விசாரித்து விட்டு ஒன்றுமே பேசாமல் நாற்காலியில் அவரருகே அமர்ந்து நீண்டநேரம் படையாட்சியாரையே பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவேளை படையாட்சியாரை நாம் பார்ப்பது இதுவே கடைசி முறையாக இருக்குமோ என்று எண்ணி வெகு நேரம் அமர்ந்திருந்தார்.

நேரம் ஆக ஆக அவரோடு வந்த கட்சிக்காரர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்ல வேண்டும் என்று அவரிடமும், அவரது துணைவியாரிடமும் வற்புறுத்திக் கூறியும்கூட, அவர் படையாட்சியாரை விட்டுச்செல்ல மனமில்லாமல் அங்கேயே அமர்ந்திருந்தார். படையாட்சியார் நிலைமையைப் புரிந்துகொண்டு கலைஞரிடம் தாங்கள் போய் தேர்தல் பணிகளைக் கவனியுங்கள், நாம் பிறகு சந்திக்கலாம் என்று கூறி அவருக்கு பிரியாவிடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

அரசியலில் போட்டி இருந்தபோதும் கலைஞர் அவர்கள் படையாட்சியாரின்மீது வைத்திருந்த மதிப்பும் மரியாதையும் என்னை பலமுறை மெய்சிலிர்க்க வைத்தது என்றே சொல்லலாம். அதற்கு சிகரம் வைத்தார்போல படையாட்சியார்

மறைந்தவுடன், படையாட்சியாருக்கு முரசொலி பத்திரிகையில் அவரது புகைப்படத்தை முதல் பக்கத்தில் ஒரு கால் பகுதிக்குமேல் பிரசுரித்து, படையாட்சியார் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்று அதுவரை யாருக்கும் தெரிவிக்காத இரங்கல் செய்தியை தெரிவித்தார் கலைஞர் அவர்கள்.

கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, மக்களுக்காக படையாட்சியார் கேட்டு பல நன்மைகளைச் செய்திருக்கிறார். நானும் தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவருடன் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி பெருமைகொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக ஒழுங்கு

சட்டத்தைப் பயன்படுத்திச் சமூகத்தை ஒழுங்குபடுத்துவது என்பது, சலவை செய்யப்பட்ட உடைகளுக்கு இஸ்திரிப்பெட்டி போடுவதுபோல; கொஞ்சம் கைதவறினாலும், சட்டைத்துணி கருகிவிடும்.

–கலைஞர்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(பள்ளிப்பட்டு தொகுதி)

எல்லோருக்கும் ஏதோ ஒரு விதத்தில் எப்போதுமே 'ஏக்கம்' இருப்பது உண்டு. அத்தகைய ஓர் ஏக்கம் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் இருந்ததை நான் பல நேரங்களில் உணர்ந்திருக்கிறேன். சட்டப் பேரவையில் பத்தாண்டு காலம் அவரோடு நெருங்கிப் பணியாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 1998 ஆம் ஆண்டு கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' தன் வரலாற்று நூலின் முன்னுரையில் அவர் எழுதியிருந்ததை நான் சட்டப் பேரவையில் பதிவு செய்தேன்:

"நான்காவது முறையாக நாடாளும் பொறுப்பை மக்கள் என்னிடம் வழங்கியுள்ள நிலையில், நாலாவது பாகத்தினை நானே எழுதுவேனோ அல்லது நாட்டு மக்கள் இதயத்தில் இந்த வரலாற்றுக் குறிப்புகள் வரிகளாக வடிவம் கொள்ளுமோ, அதை நிர்ணயிக்கும்போது நான் இருப்பேனோ?" என்று அப்போது வெளியாகியிருந்த 'நெஞ்சுக்கு நீதி' மூன்றாம் பாக முன்னுரையினை வாசித்துவிட்டு நான் பேசினேன்: "நாம் நம்புகிற இறைவன், நீங்கள் நம்புகின்ற இயற்கை, உங்களுக்கு மேற்கொண்டு எழுதும் வாய்ப்பை நல்கட்டும்!'" இந்தப் பேச்சைக் கேட்டு சட்டப் பேரவையில் ஒரே ஆரவாரம். முதலமைச்சர் கருணாநிதியை வாழ்த்திடும் பேச்சினை வரவேற்றார்கள்.

அந்த நிகழ்வுக்குப் பிறகு கலைஞர் அவர்கள் பல ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதும், 'நெஞ்சுக்கு நீதி' ஆறாம் பாகம்வரை வெளிவந்தது என்பதும் வரலாறு. "சிறிது இடைவெளிவிட்டு 'நெஞ்சுக்கு நீதி' தொடரின் ஏழாவது பாகத்தினைத் தொடங்கி எழுதுகிறேன்! இயற்கையின் துணையை நம்பி!" என்று ஆறாம் பாகம் நிறைவிலும் அவர் குறிப்பிட்டிருப்பார். நிறைவாக மேலும், மேலும் வாழவேண்டும் என்ற 'வேட்கை', 'ஏக்கம்' அவருக்குள்ளே இருந்தது என்பது வெளிப்படை. மக்களுக்கு நெடுந்தொண்டு ஆற்றிட அவர் விரும்பியதில் வியப்பேதுமில்லை.

கலைஞரைப் பொறுத்தமட்டில், வரலாற்று நிகழ்வுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பார். சோழன் காலத்திலிருந்து அண்மைக் காலத்தில் தொண்டாற்றிய தேவநேயப் பாவாணர் வரை அவர்களின் நினைவுகளுக்கு நீங்காத சின்னங்களை இயற்றி, அவர்களுடைய பெருமை சரித்திரத்தில் சரியாகப் பதிவிடப்பட வேண்டும் என்பதில் குறிப்பாக இருப்பார்.

எல்லா மதங்களுக்கும் பொதுவாக அறியப்பட்ட 'பொதுமறை'யான திருக்குறள் தந்த வள்ளுவருக்கு அவர் செய்த சிறப்பு அலாதியானது. தமிழகத்தின் வடமுனையான சென்னையில் வள்ளுவர் கோட்டம் நிறுவி, தென்முனையான கன்னியாகுமரியில் 133 அடி உயரமான வள்ளுவர்

சிலையை நிறுவி மகிழ்ந்தார். பேரழிவுகளைத் தாண்டி வள்ளுவரின் சிலை நிற்பதும், நின்றதும், 'காலத்தை' வென்று நிற்கக்கூடிய நினைவுச்சின்னம் அந்தப் பேராசானின் சிலை என்பது உண்மைதானே? "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்பதில் கலைஞருக்கு இருந்த தெளிவு அதிசயிக்கத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலில் சென்னை மாநகராட்சியில் அதிகாரத்தில் அமர்ந்தது. அந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருந்தார். அந்தக் காலக்கட்டத்தில் (1961) மாறுபட்ட, வியப்பான ஒரு காரியத்தை தி.மு.க. செய்தது. சென்னை பிரதான சாலையில் காமராஜருக்கு ஒரு சிலையை முதன்முதலாக நிறுவியது. "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற பொருளினை என்றைக்கும் உணர்த்தும்விதமாக அந்த மகத்தான காரியத்தைச் செய்தது. "வாழும் மனிதர்களின் சிலையைத் திறந்து வைக்கமாட்டேன்" என்று பிடிவாதமாக இருந்த அன்றைய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு தன் பிடிவாதத்தைத் தளர்த்திக்கொண்டு, அந்தச் சிலையை திறந்து வைத்ததோடு மட்டுமல்லாமல், காமராஜருக்கு என்றைக்கும் அழியாப் புகழ் மாலைகளை வரிசையாக தொகுத்து, பெருமைகளைச் சேர்த்தார். "அசாதாரண, அரிய மக்கள் தொண்டர் காமராஜர்!" என்ற பொருளில் அன்றைய பிரதமர் நேரு பேசிய உரையினை 11-10-1961 அன்று வெளியான அனைத்து பத்திரிகைகளும் பெரிதாக மகிழ்ந்து வெளியிட்டன.

கற்பதில் இரண்டு வகை உண்டு. ஒரு கருத்துக்கு உடன்பட்டும் கற்கலாம்; முரண்பட்டும் கற்கலாம். இந்த இரண்டு வகைகளிலும் முன்னாள் முதலமைச்சர் கலைஞரிடம் கற்பதற்கு நிறையவே இருக்கும். அவற்றைக் கற்பதற்கும் நிறைய திறன்வேண்டும். பன்முகத்தன்மையைப் பாராட்டுவதும், விளக்குவதும் 'சந்தனக் காட்டில் வாசனை திரவியத்தைத் தெளிப்பதைப்' போன்றாகிவிடும்.

ஆனால், சட்டமன்றப் பேரவையில் அவர் நடந்துகொண்டவிதம், நடத்தியவிதம் வரலாற்றின் பதிவுக்குரியது. சட்டமன்ற விதிகளின்மீதும், மரபுகளின்மீதும் அவர் காட்டிய அக்கறை, மரியாதை அளப்பரியது.

சட்டமன்ற நடவடிக்கைகள்தான் மாநிலத்தில் நடைபெறும் அத்தனை செயல்பாடுகளுக்கும், திறன்பாடுகளுக்கும் அடிப்படை என்பதை எவரும் விளக்கத் தேவையில்லை. யாதொன்றையும் நிறைவேற்றும் திறன் சட்டப் பேரவைக்கு மட்டுமே உண்டு. 1957 ஆம் ஆண்டு குளித்தலையில் போட்டியிட்டு வென்று, முதன்முறையாக சட்டப் பேரவையில் நுழைந்தபோது, அவருக்கிருந்த அதே துடிப்பும், வேகமும் 2006 ஆம் ஆண்டு 5-வது முறையாக முதலமைச்சராகப் பணியாற்றிய வேளையிலும் இருந்ததுதான் ஆச்சரியம். இரண்டு தேர்தல்களைப் பார்த்தமட்டிலும் துவண்டு போகின்றவர்கள் மத்தியில் சுமார் முக்கால் நூற்றாண்டு அரசியலில் ஆர்வம் குறையாமல், அயராது பாடுபட்டு வருவது சாதாரண காரியம் இல்லை.

13 முறை சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு, தோல்வி முகமே காணாத ஒரே தலைவர் இந்தியாவிலேயே கலைஞர் கருணாநிதி மட்டுமே. காலை 9–30 மணிக்கு சட்டமன்றக் கூட்டம் தொடங்கும். சட்டமன்ற நடவடிக்கைகள் தொடங்கும் முன்பு சபாநாயகர் அறைக்குள் கருணாநிதி குறைந்தது 15 நிமிடங்கள் முன்பாக ஆஜராகி விடுவார். மூத்த அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்த நேரத்தில் உடன் இருப்போம்.

அன்றைய அலுவல்கள் குறித்து அறிந்துகொள்வதில் எப்போதும் முனைப்பாக இருப்பார். சிறந்த தலைமை ஆசிரியர் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துவதுபோன்ற பாணியை அவரிடம் காண முடியும்.

ஒருநாள் காலை வழக்கம்போல் அவர் சபாநாயகர் அறைக்கு சபை தொடங்கும் முன்பு வந்தார். அதற்கு முந்தைய நாள் செய்தித் துறை பற்றிய மானியக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இருந்தது. 'வள்ளுவர் கோட்டம்' குறித்த அறிவிப்பு நேற்று சட்டப் பேரவையில் வெளியிடப்பட்டதாகவும், அதை தான் செய்தித்தாள்மூலம் மட்டுமே அறிய நேரிட்டதாகவும் கூறியவர், சம்பந்தப்பட்ட அமைச்சரை அழைத்து விளக்கம் கேட்டார்.

அப்பொழுது நான் சட்டப் பேரவை நடவடிக்கைகள் குறித்து வாரம் இருமுறை வெளியாகும் ஒரு பத்திரிகையில் தவறாமல் விமர்சனம் எழுதி வந்தேன். எல்லா பத்திரிகைகளிலும் 'கண் பதிக்கும்' மூத்த சட்டமன்ற உறுப்பினர்களும், நானும் "அவ்விதம் செய்தி வரவில்லை" என்றோம்.

"இல்லை, இல்லை. நான் படித்தேன். என் கவனத்திற்கு வராமல் எப்படி ஒரு அறிவிப்பு வரலாம்?" என்று உறுதியாகக்கூற, அலுவலர்கள் பரபரத்தார்கள். அப்படியொரு செய்தி வரவில்லை என்று அனைவருமே செய்தித்தாள்களை மீண்டும் தேடிப்பார்த்து மறுத்தோம்.

அப்போது அந்த அறைக்கு வந்த நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், தானும் அந்தச் செய்தியைப் படித்ததாகக் கூற, பரபரப்பு எகிறியது. "பெரிய தேடலுக்குப்" பின்பு ஒரு மாலைப் பத்திரிகையில் கடைசிப் பக்கத்தில் 'கொசுறாக' அந்தச் செய்தி வெளியாகியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது!

ஊகத்தின் அடிப்படையில், சட்டமன்றத்தில் அறிவிக்கப்படாத ஒரு செய்தியை 'கடைசி நேரச் செய்தியாக' ஒரு நிருபர் தந்துள்ளார் என்பது தெளிவாயிற்று. கலைஞரின் கோபம் பொங்கி, அடங்கியது. ஒரு குட்டிச் செய்தியைக்கூட கவனத்தில் வைத்துக்கொண்டு முதலமைச்சர் எவ்வாறு கண்காணிக்கிறார் என்று அறிந்து எல்லோருமே வியந்தோம்.

தான் பொறுப்பு வகிக்கும் துறைகள் பற்றிய விவாதம் வரும் போதும், கேள்விகள் கேட்கப்படும்போதும் 'கண்கொத்திப் பாம்பாக' அவர் இருப்பார். வேறு எதிலும் நாட்டம் செலுத்த மாட்டார். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அல்லது சொல்லும் விமர்சனங்களுக்கு 'மின்னல்' வேகத்தில் 'பதிலோ, பதிலடியோ' கொடுப்பார்.

"எடுத்தது கண்டனர், இற்றது கேட்டனர்" என்று இராமன் வில்லை ஒடித்த வேகத்தைப்

பற்றி கம்பன் சொன்னது மிகையன்று என்பதை அவருடைய வேகம் உணர்த்தும்.

ஒரு முறை எதிர்க்கட்சித் தலைவர் அரசை விமர்சனம் செய்யும்போது, "இந்த அரசை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது!" என்ற தொனியில் பேச, அதற்கு முதலமைச்சர் கருணாநிதி கண்சிமிட்டும் நேரத்தில், 'இது எங்கேயோ கேட்ட குரல்!' என்று பதிலளிக்க, சபை ஆரவாரம் செய்தது.

1996 ஆம் ஆண்டு நடிகர் ரஜினிகாந்த் சொன்ன அந்த வாக்கியத்திற்கு, நடிகர் ரஜினிகாந்த் நடித்த படத்தின் பெயரை வைத்தே பதில் சொல்லும் விதம் யாருக்கும் வராது!

என்னுடைய பக்கத்து இடத்தில் இடம் பெற்றிருந்த சக சட்டமன்ற உறுப்பினர், 'தமிழ்நாட்டுக்கு என்று தனிக்கொடி' கேட்டு கோரிக்கை வைக்கப் போவதாக என்னிடம் சொன்னார். "வேண்டாம், இது விதண்டாவாதமாகிவிடும்" என்று நான் ஆலோசனை சொன்னேன். ஆனால் அந்த உறுப்பினர் விடவில்லை. முதலமைச்சரை நோக்கி அந்த கோரிக்கையை வினாவாக வைத்துவிட்டார்.

அதற்கு முதலமைச்சர் திரு. கருணாநிதி சொன்ன நீண்ட, பெரிய விளக்கம் அலாதியானது. பிரதமர் இந்திரா காந்தி காலத்தில் கர்நாடக மாநிலத்தில் அப்படி ஒரு கோரிக்கை வைக்கப்பெற்றதைக் குறிப்பிட்டு, மிக விளக்கமாக, தமிழ்நாட்டுக்குரிய நிலைமையினையும் குறிப்பிட்டு அவர் பேசிய பேச்சு, எவ்வளவு ஆழமாக ஒரு பிரச்சினையை அவர் அணுகுகிறார் என்பதைப் புலப்படுத்தியது.

எங்கள் வீட்டுத் திருமணங்களில் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொள்வார். என் பிள்ளைகளின் திருமணங்களுக்குத் தவறாமல் வந்து வாழ்த்துவார். அத்தனை அமைச்சர்களையும் அழைத்துக் கொண்டு வருவார். 2009 ஆம் ஆண்டு அவருக்கு முதுகில் ஒரு எலும்பு ஆபரேஷன் ஆகி ஓய்வில் இருந்தார். என் இளைய மகன் டாக்டர் அருண் சுப்பிரமணியத்திற்குத் திருமணம்.

'அவ்வளவு தொலைவு வரமாட்டார். அவர் உடல்நிலை அதற்குரிய நிலையில் இல்லை' என்று எல்லோரும் கருதினோம்.

அவர் சார்பில் துணை முதலமைச்சர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வந்து வாழ்த்திவிட்டுச் சென்றிருந்தார்.

திடீரென்று காவல் துறை டி.ஜி.பி. மணமண்டபத்திற்கு வந்து 'முதலமைச்சர் வருகிறார்!' என்று தகவல் தர மண்டபமே பரபரப்பானது. உடனே மணமக்களை அவசர அவசரமாக வாசலில் நிறுத்தி, முதலமைச்சர் கலைஞருக்காக காத்திருந்தோம். மூத்த அமைச்சர்கள் திரு. துரைமுருகன், திரு. க. பொன்முடி ஆகியோரோடும், தன் மகள் திருமதி கனிமொழி எம்.பி. அவர்களோடும் அவர் வருகை தந்து, சில நிமிடங்கள் இருந்து, வாழ்த்தியது எல்லோருக்கும் ஆச்சரியத்தை பெரிய அளவில் அளித்தது. நூறு சதவீதம் எதிர்பாராத விஷயம்.

கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் இருக்கும்போது நான் கவனிப்பேன். கலைஞர் அவர்களைப் பொறுத்தவகையில் நல்ல ரசனையுடன் பிறருடைய பேச்சைக் கேட்பார்.

நன்றாக இருப்பின் அதை மகிழ்ந்து பாராட்டுவார். அவருடைய துறையைப் பற்றிய கேள்விகள்தான் சட்டப் பேரவை துவக்கத்தில் அமையும். பிரதானக் கேள்விக்கு அவர் பதில் சொன்ன பின்னர், துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படும்.

அப்படி அனுமதிக்கப்படும் துணைக் கேள்விகளுக்கும் முக்கியமானவையாக அமையும் கலைஞர் அவர்களின் பதிலுரை விரிவாகவும், அழுத்தமாகவும் இருக்கும்.

1996–2001, 2006–2011 ஆகிய இரண்டு சட்டப் பேரவைத் தொடர்களிலும் மாற்றுத் தலைவர்கள் பட்டியல் அறிவிக்கப்படும். சபாநாயகரும், துணை சபாநாயகரும் அவையில் இல்லாவிட்டால் அவைக்குத் தலைமை தாங்குவதற்கு, மாற்று சபாநாயகர் பட்டியலை சட்டப் பேரவைத் தலைவர் அறிவிப்பார். ஆளும்கட்சி சார்பில் 3 பேர், எதிர்க்கட்சிகள் சார்பில் சுமார் 2 பேர் அடங்கிய பட்டியலாக அது இருக்கும். எதிர்த்தரப்பில் மாற்றுத் தலைவர் பட்டியலில் அதிகம் இடம் பெற்றவன் நான்தான். முதல்வர் கலைஞர் அவர்கள் காட்டிய அன்பே அதற்குக் காரணம்.

ஐந்தாவது முறையாக முதல்வராக ஆட்சி நடத்திய நேரத்தில், உணர்வுப்பூர்வமான ஒரு விஷயத்தைக் கையில் எடுத்தார்.

தமிழ்ப் புத்தாண்டு தை முதல் நாள்தான் என்ற சட்டமுன்வடிவை அவையில் அறிமுகம் செய்தார். பல தமிழ் அறிஞர்களோடும், வரலாற்று ஆசிரியர்களோடும் கலந்துரையாடிய பின்பே, அதைச் சட்டமாக்கிட விழைந்தார்.

கூட்டணிக் கட்சிகளை, காங்கிரஸ் சார்பில் நானும், பா.ம.க. சார்பில் திரு. சி. ஆறுமுகம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் திரு. நன்மாறன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் திரு. மு. கண்ணப்பன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. கு. செல்வம் அவர்களும் இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்துப் பேசினோம். சட்டமுன்வடிவை நிறைவேற்றும்பொழுது முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை உணர்ச்சிப்பூர்வமாகவும், ஆதாரப்பூர்வமாகவும் இருந்தது. அவையின் மேசைகளைத் தட்டி வரவேற்று மகிழ்ந்த அந்தக் காட்சி இன்றைக்கும் மனதில் நிழலாடுகிறது.

சட்டப் பேரவையில் முதன்முதலாக இடம் பெற்ற ஒரு புதிய உறுப்பினர் பேசும் பேச்சு 'கன்னிப்பேச்சு'. அந்தக் கன்னிப்பேச்சைப் போலவே அனைத்து நேரங்களிலும் அவர் கவனமாகப் பேசியதால்தான், கன்னித் தமிழின் இளமையைப் போல் அவருடைய சட்டமன்றப் பேச்சுகள் இன்றைக்கும் பதிவேடுகளில் பளிச்சிடுகின்றன.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. மிசா. ஆர். கணேசன்
சட்ட மேலவை முன்னாள் உறுப்பினர்

1984 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை காலியிடங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. அவற்றில் சட்டமன்ற உறுப்பினர்களால் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இடத்திற்கு அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டார்.

அதேபோல், சென்னை மற்றும் மதுரை பட்டதாரிகள் தொகுதிகளுக்கு, என்னையும், அண்ணன் திரு. P.T.R. பழனிவேல்ராஜன் அவர்களையும், தஞ்சாவூர் ஆசிரியர் தொகுதிக்கு திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களையும் வேட்பாளர்களாக அறிவித்தார்.

சென்னை பட்டதாரிகள் தொகுதிக்கு போட்டியிட்ட R. கணேசன் என்ற பெயர்கொண்ட எனக்கு எதிராக, அதே R. கணேசன் என்ற பெயர்கொண்ட ஒருவர் எதிர்தரப்பிலிருந்து நிறுத்தப்பட்டார். சட்டமன்ற மேலவைத் தேர்தலில் வேட்பாளர்களுக்கென கட்சி சின்னம் இல்லாததால் வாக்குச் சீட்டில் இடம்பெறும் பெயருக்கெதிரே வாக்களிக்கும் முறைதான் இருந்தது. இதன் காரணமாகவே என் பெயர் கொண்ட ஒருவர் எனக்கெதிரே நிறுத்தப்பட்டார்.

இதனைக் கண்டு பதறிப்போன நானும், எனது தேர்தல் முகவரான அண்ணன் திரு. N.V.N. சோமு அவர்களும் இப்பிரச்சினையை தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் அடுத்தகணமே இன்றிலிருந்து நீ மிசா. ஆர். கணேசன் என்றவர் அதனை தேர்தல் அதிகாரிகளிடமும் தெரிவிக்கக் கூறினார். வாக்குச் சீட்டில் R. கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன் எனும் பெயர் இடம் பெறவே, பட்டதாரி வாக்காளர்கள் தி.மு.க. வேட்பாளரான என்னை 10,699 வாக்குகள் வித்தியாசத்தில் மிகப்பெரிய அளவில் வெற்றியடையச் செய்தனர். என் வெற்றிக்கு முக்கிய காரணம் அண்ணன் கலைஞர் தெரிவித்த பெயர் மாற்றம் மற்றும் அவர் எனக்கு வாக்களிக்க வேண்டுமென கைப்பட எழுதிய இரண்டு கடிதங்களுமேயாகும்.

வெற்றிபெற்ற அண்ணன் கலைஞர், அண்ணன் P.T.R பழனிவேல்ராஜன் மற்றும் திரு. மீனாட்சிசுந்தரம் இவர்களுடன் நானும் சேர்ந்து நால்வரும் 23-4-1984 அன்று மேலவை உறுப்பினர்களாக பதவியேற்றோம். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. சாதிக்பாட்ஷா மேலவை உறுப்பினராக இருந்ததால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் 5 ஆகவும், முக்கிய எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கை 4 ஆக இருந்ததால் தி.மு.கழகம் முதலிடத்திற்கு முன்னேறியது.

அடுத்த நாள் சட்டமன்ற மேலவை கூடியபோது, ஐந்து உறுப்பினர்களுடன்

முக்கிய எதிர்க்கட்சியாக கருதப்படவேண்டிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கலைஞர் அவர்களுக்கு முதலிடம் ஒதுக்காமல் மூன்றாவது இடம் ஒதுக்கப்பட்டதைக் கண்ட அண்ணன் சாதிக்பாட்ஷா அவர்கள், இதுகுறித்து மேலவையை நடத்திக்கொண்டிருந்த துணைத் தலைவர் திரு. G. சாமிநாதனைப் பார்த்துக் கேட்டபோது, ஆளுநரால் மேலவைக்கு நியமிக்கப்பட்ட திரு. சாராசெரியன் என்பவர் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டதால் அக்கட்சியின் எண்ணிக்கையும் ஐந்தாக உள்ளதால் எதிர்க்கட்சியின் தலைவர் யார்? துணைத் தலைவர் யார் என்று தெரியும்வரை இருக்கை குறித்த நிலை அவ்வாறே தொடர்வதாகக் கூறினார்.

உடனே கலைஞர் அவர்கள், மேலவையை நடத்திக்கொண்டிருந்த திரு. G. சாமிநாதனைப் பார்த்து, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த உங்களுக்குத் தெரியாததில்லை. தஞ்சாவூர் பெருவுடையார் கோவிலைக் கட்டிய மாமன்னன் ராஜராஜன் சிலை கோயிலின் வெளியே இருப்பதால் அவரது சிறப்பு குறைந்தாவிட்டது. இங்கே கடைசியில் அமர்ந்திருக்கின்ற உறுப்பினர் சங்கரலிங்கம் அவர்களுக்கு அடுத்து எனக்கு இடம் ஒதுக்கினாலும்கூட, நான் அங்கே இருந்து குரல் எழுப்பத் தயாராக இருக்கிறேன். இடம் எதுவானாலும் நான் என் கடமையை ஆற்றிடுவேன். திரு. சாதிக் பாட்ஷாவைப் பார்த்து இதனைப் பெரிய பிரச்சினையாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

1986 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் தஞ்சாவூரில் திரு. எல். கணேசனும், கோவை பட்டதாரிகளின் தொகுதியில் வழக்கறிஞர் திரு. K.M. தண்டபாணியும் வெற்றிபெற்று உறுப்பினர் ஆனார்கள். திரு. சாதிக்பாட்ஷா பதவிக்காலம் முடிந்தபோது, மேலவையில் கழக உறுப்பினர்கள் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்தது.

தொடர்ந்து நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.கழகம் பெரும்பாலான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளைக் கைப்பற்றியது. மேலவையில் தி.மு.கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை 24 ஆக உயரும் என கணிக்கப்பட்ட நிலையில், சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. உள்ளிட்டோர் மேலவையின் மரபினையும் மாண்பினையும், அதில் பணியாற்றிய அறிஞர் பெருமக்களின் பெருமைகளையெல்லாம் கூறி மன்றாடிய நிலையிலும், 1986 ஆம் ஆண்டு மேலவை கலைக்கப்பட்டது.

சட்டமன்றத்தின் மாண்பு குறையாமல் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என எங்களுக்கெல்லாம் வழிகாட்டி உரையாற்றச் செய்த அண்ணன் கலைஞர் அவர்களுடன் இரண்டரை ஆண்டுகள் பணியாற்றியது என் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவம். யாருக்கு கிடைக்கும் இந்தப் பேறு?

வாழ்க அண்ணன் கலைஞர் புகழ்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

"சட்டமன்ற நாயகர்–கலைஞர்"

திரு. எம். கந்தசாமி, B.A., BL.,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்.
(குளித்தலை தொகுதி)

1956 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம், குளித்தலை தொகுதியில் பணிக்கம்பட்டியில் எனது சொந்த செலவில் தி.மு. கழக கிளைக்கு கட்டடம் அமைத்துக் கொடுத்து, முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதே பணிக்கம்பட்டியில் 1957 ஆம் ஆண்டில் எனக்கும், திருமதி நல்லம்மாள் ஆகியோருக்கான திருமணம் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. மேலும், பணிக்கம்பட்டியில் திரு.வி.க. பள்ளியையும் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தல்களில் தி.மு. கழகம் போட்டியிட்டபோது, முத்தமிழறிஞர் கலைஞரை குளித்தலை தொகுதி சட்டமன்ற வேட்பாளாராக அறிவித்தார். அப்போது, பணிக்கம்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞரை, தி.மு.க. வேட்பாளராக அறிமுகப்படுத்தும் பொதுக் கூட்டம் திரு. மீ.சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நாங்கள் அனைவரும் பம்பரமாக சுழன்று தேர்தல் பணி ஆற்றினோம். அத்தேர்தல்களில் தனி வாக்குப் பெட்டி வைக்கப்பட்டிருக்கும். தண்ணீர்ப் பள்ளியில் வைக்கப்பட்டிருந்த மஞ்சள் நிற பெட்டிதான் கலைஞருக்கானது. அங்கு பதிவான அத்தனை ஓட்டுகளும், கலைஞருக்கே கிடைத்தது. எட்டுமுனைப் போட்டியில் கலைஞர் வெற்றி பெற்றார். நான்தான் அவருக்கு முதன்முதலாக மாலை சூட்டினேன். அன்று அவர் பெற்ற வெற்றி 13 முறை அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக தொடர்ந்து வெற்றி பெற்றார்கள். சட்டமன்றப் பேரவை உறுப்பினராக பதவியேற்ற கலைஞர் பல சீரிய சாதனைகளை குளித்தலை தொகுதிக்கு செய்துள்ளார்கள். தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று அவற்றை நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்தார்கள். மேலும், குளித்தலை, நங்கவரம் போராட்டத்தில் விவசாயிகளுக்காக போராடி சட்டமன்றத்திலும் கலைஞர் பேசினார்கள்.

அன்றைய காலகட்டத்தில் தமிழ்நாடு ஆளுநராக பதவியிலிருந்த திருமிகு விஷ்ணுராம் மேதி அவர்களிடம், குளித்தலை சட்டமன்ற உறுப்பினரான கலைஞர் அவர்கள் நெடுநாட்களாக இவ்வட்டாரத்து மக்கள் எதிர்நோக்கியிருந்த "குளித்தலை–முசிறி காவேரி பாலத்தை" விரைவில் அமைத்துத் தந்திட கோரிக்கை வைத்தார்கள். அத்திட்டம் நிறைவேற ஆவன செய்வதாக தெரிவிக்கப்பட்டது.

நான் 1967–ல் குளித்தலை சட்டமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, தேர்தலில் பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் அவர்கள் வழிகாட்டுதலில் களப்பணி ஆற்றி வெற்றி பெற்றேன். சட்டமன்றத்தில் அவர்களுடன் இணைந்து குளித்தலை தொகுதி வளர்ச்சிக்காக பாடுபட்டுள்ளேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டிற்கு 'சென்னை மாகாணம்' என்று வழங்கியதை மாற்றி 'தமிழ்நாடு அரசு' எனப் பெயர் சூட்டினார். தமிழ், ஆங்கிலம் என்ற தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கை போன்ற சீர்மிகு திட்டங்களுக்கு உறுதுணையாக சட்டமன்றத்தில் செயல்பட்டேன். 1969–ல் அண்ணாவின் மறைவுக்குப் பின், தமிழ்நாடு முதல்வராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றார்கள். அப்போது கலைஞர் அரசு மேற்கொண்ட சீரிய சாதனைகளில் சில:–

அரிசி பஞ்சத்தை ஒழித்தது; கனவிலும் வராது என்று கருதப்பட்ட சேலம் உருக்காலை பெற்றுத் தந்தது; 5 ஏக்கர் வரை நஞ்சைக்கு வரி விலக்கும், புஞ்சை நிலங்களுக்கு பூரண வரி விலக்கும் அளித்தது போன்றவை.

1971–ல் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது கலைஞர் அவர்கள், குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்கு மீண்டும் ஒருமுறை என்னை வேட்பாளராக தெரிவு செய்தார்கள். அதில் வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்டு, கலைஞருடன் இணைந்து பணியாற்றினேன். தனியார் பேருந்துகள் அரசுடைமை ஆக்கப்பட்டன. மத்தியில் இந்திராகாந்தி தலைமையில் அமைந்த மத்திய அரசுக்கும் உறுதுணையாக இருந்து "வங்கிகள் தேசியமயமாக்கம்" போன்ற முக்கிய மசோதாக்களுக்கு ஆதரவு அளித்தார்கள். சுதந்திர தின நாளில் மாநில முதல்வர்கள் தேசியக் கொடி ஏற்றும் உரிமையை கலைஞர் அவர்கள் பெற்றுத் தந்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், குளித்தலை தொகுதி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியான குளித்தலை–முசிறி காவேரி பாலம் அமைந்திட நான் கலைஞரிடம் வாதாடி, ஞாபகமூட்டி தொடர்ந்து முயற்சி செய்து, அதன் பயனாக 28–8–1971–ல் குளித்தலையில் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்தார்கள். பாலத்தின் நீளம் 1,470 மீட்டர்களாம். அன்றைய மதிப்பீடு ரூபாய் 95,00,000/– ஆகும்.

மேலும், குளித்தலை அரசினர் மருத்துவமனைக்கு, 24 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டடத்திற்கு எனது முன்னிலையில் மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 9–9–1975 அன்று கால்கோள் விழா நடத்தி வைத்தார்கள்.

1967–1976 காலகட்டத்தில் எனது தொகுதியில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்றன:–

1. சிவாயம் குளத்தை ரூ.5.2 இலட்சம் மதிப்பீட்டில் சீர் செய்யும் பணிகளுக்கு அரசு ஒப்புதல் பெற்றுத் தந்தது.

2. நல்லூர் குளத்தை ரூ.7.46 இலட்சம் மதிப்பீட்டில் சீர்படுத்த அரசு ஒப்புதல் பெற்றுத் தந்தது.

3. அண்ணா திருமண மண்டபத்தை (Community Hall) குளித்தலை நகரில் உருவாக்க அரசிடமிருந்து உபரித் தொகை பெற்றுத் தந்தது.

4. குளித்தலை பேரூராட்சிக்கு ரூ.10.5 இலட்சம் செலவில் காப்புக் குடிநீர் திட்டத்திற்கு (Protected Water Supply Scheme) அரசு ஒப்புதலை பெற்றுத் தந்தது.

5. கல்விப் பணிக்காக i) குளித்தலை மகளிர் உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆராய்ச்சிக் கூடம் கட்டி முடிக்க ரூ.25,000/– ii) குளித்தலை ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் கூடம் அமைத்துத் தர ரூ.23,000/– திட்ட மதிப்பீடு வழங்கி பெற்றுத் தந்தது. இவை போன்று இன்னும் பலப்பல.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. S.V. கிருஷ்ணன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(நாங்குநேரி தொகுதி)

நான் 1996 முதல் 2001 வரை கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கும்போது சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றினேன். என்னுடைய தொகுதியின் நீண்ட கால கோரிக்கையான பச்சையாறு மற்றும் கொடுமுடியாறு அணைக்கட்டு திட்டங்களை நிறைவேற்றினார். நாங்குநேரியில், படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்புக்காக உயர் தொழில்நுட்பப் பூங்கா (Hi–TECH) அமைத்துத் தந்தார். நாங்குநேரியில் வரும்முன் காப்போம் திட்டத்தை தொடங்கி வைத்தார். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை கட்சிப் பாகுபாடு இன்றி நிறைவேற்றிக் கொடுத்தார். மேலும், அனைத்து தொகுதி குறைகளையும் தீர்த்து பள்ளி, மருத்துவமனை, அவசர ஊர்தி, சமத்துவபுரம், சாலை, பாலங்கள், காவல்நிலைய கட்டிடம், காவல் நிலைய குடியிருப்பு மற்றும் இதர பணிகளை நிறைவேற்றி வைத்தார். கலைஞர் அவர்கள் உயர்ந்த மனிதர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. எஸ்.எஸ். குருசாமி,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(அந்தியூர் தொகுதி)

ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.எஸ். குருசாமி ஆகிய நான்,ஒரு சாதாரண ஏழை பட்டியல் வகுப்பு அருந்ததியர் குடும்பத்தில் பிறந்து தொலைதொடர்புத் துறையில் 33 ஆண்டுகள் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றேன். தானைத் தலைவர் தமிழினத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களாலும் தற்போதைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களாலும் எனக்கு அந்தியூர் சட்டமன்ற (SC) தொகுதி வேட்பாளராக போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. தலைவர் தளபதி அவர்கள் தொகுதிக்கு நேரில் வந்து பிரச்சாரம் செய்தும் அதில் 57,143 வாக்குகள் பெற்று 19,743 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன்.

நான் சட்டப் பேரவைக் கூட்டத்தில் முதல் கன்னிப் பேச்சில், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், தொகுதி மக்களுக்கும் நன்றி தெரிவித்து, அந்தியூர் தொகுதியில், பர்கூர் 36 மலைக் கிராமங்கள் நிறைந்த ஊராட்சியாகும். அன்றைய நிலையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தது. ஆனால் மருத்துவர், செவிலியர்கள் இல்லை. ஒரே ஒரு ANM மட்டும் பணிபுரிந்து வந்தார். பர்கூர் மலைக் கிராமத்தை பொறுத்தவரையில் அவல நிலை என்னவென்றால், போக்குவரத்துக்கு சாலை வசதி கிடையாது. மருத்துவ வசதி கிடையாது. ஒருவர் நோய்வாய்பட்டால் நோயாளியை தொட்டிலில் வைத்து தோளில் தூக்கி அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு வருவார்கள். வரும் வழியில் நோயாளி இறந்துவிட்டால் அங்கேயே அடக்கம் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி விடுவார்கள். இந்நிலையை சட்டமன்றத்தில் எடுத்துரைத்தேன். இதை முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பரிசீலித்து உடனடியாக மருத்துவர்கள்–2, செவிலியர்கள்–7 மற்றும் நடமாடும் மருத்துவமனையில் மருத்துவர்–1, செவிலியர்கள்–2, ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்–1 ஆகியோரைப் பணியமர்த்தி அவர்கள் சிறப்பாக பணிபுரிந்தார்கள். மேலும், தலைவர் கலைஞர் அவர்கள் 1969–ல் முதலமைச்சர் ஆனபோது எல்லா கிராமங்களுக்கும் மின்னிணைப்பு வழங்க திட்டம் வகுத்து ஆணையிட்டார்கள். அவ்வாணையின்படி, பர்கூர் மலைப் பகுதியில் ஒரு சில கிராமங்களுக்கு மட்டும்தான் சென்றது. (அந்த திட்டத்தில் நானும் 3 ஆண்டுகள் வேலை பார்த்தவன். பிறகு 1974–ல் தொலைத் தொடர்பு துறைக்கு வந்தேன்). இந்நிலையில், இக்கிராமங்களுக்கு சாலை மற்றும் 108 ஆம்புலன்ஸ் ஆகிய வசதிகளை செய்துகொடுத்ததுமின்றி மலையிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு அதிக திறன் கொண்ட கம்பிகள் மாற்றி அதிக (Transformer booster உடன்) மின் மாற்றிகள் அமைத்துக் கொடுத்தும் எல்லா மலைக் கிராமங்களுக்கும் மின்

இணைப்பு, வீதி விளக்குகள் (வீடு, வீதி விளக்கு, கடைகளுக்கும்) வழங்க உதவி செய்தார்கள்.

துணை முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து ரூ.8.50 கோடி நிதி வழங்கி கிழக்குப்பகுதி தாமரைகரை முதல் மடம் வரையிலும் மேற்கு மலை மணியாச்சி முதல் கொங்காடை வரையிலும் தார்ச் சாலை அமைக்க உதவி செய்தார்கள்.

மலைப்பகுதியிலுள்ள நடுநிலைப்பள்ளிகளில் பர்கூர், ஓசூர் மற்றும் தேவர்மலை ஆகிய பள்ளிகளை தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாகவும், பர்கூர் ஆதி திராவிடர் நலத் துறை பள்ளி, உண்டு உறைவிட பள்ளிகளை அடுத்த ஆண்டே மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தி உத்தரவிட்டார்கள்.

எனது அந்தியூர் தொகுதியில் முதியோர் உதவித் தொகை பெறாதவர்கள் அதிகம் பேர்இருந்தார்கள். அவர்களில் ஓர் ஏழை விதவைக்கு, அரசு வீட்டு மனை பட்டாவில் அரசால் ஓட்டு வீடு கட்டி கொடுக்கப்பட்டது. இதை காரணம் காட்டி முதியோர் உதவித் தொகை மறுக்கப்பட்டு வந்தது. (முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு சொந்த வீடு, நிலம், ஆண் வாரிசு இருக்கக் கூடாது என்பது அரசு விதி.) இதே போன்று ஏழை விதவைக்கு நான்கு ஆண் மக்கள் உண்டு. தாயை கவனிக்காமல் அனாதையாக விட்டுவிட்டார்கள். இந்நிலையில் பலபேர். இந்நிலையை சுட்டிக்காட்டி சட்டப் பேரவையில் பேசினேன். "தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள் விதிகளை தளர்த்தி வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 50 வயதிற்கு மேற்பட்ட விதவைகள், 60 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், முதிர்கன்னிகைகள் ஆகியோருக்கு முதியோர் உதவித் தொகை வழங்க ஆணை பிறப்பித்து அனைவரின் கண்ணீரையும் துடைத்து பசியார சாப்பிட உதவி செய்துவந்தார்.

எனது ஒரே மகன் S.S.G. ஜெயக்குமார் +2–வில் 1000/1200 மதிப்பெண்கள் பெற்று மருத்துவராக விரும்பினார்.

கடந்த 3–6–2008–ல் தலைவர் கலைஞர் பிறந்த நாள் அன்று தலைவரிடம் வாழ்த்து பெற்றும், வணங்கியும், எங்களுடைய விருப்பத்தை கடிதத்தின்மூலம் தெரிவித்து வந்தோம். இக்கடிதத்தை பரிசீலித்து சென்னை போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவ கல்லூரியில் மருத்துவம் படிக்க உதவி செய்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் தேர்ச்சி பெற்றதை நேரில் தெரிவித்து ஆசி பெற்று வந்தோம். பிறகு அரசு மருத்துவராக 5 ஆண்டுகள் பணிபுரிந்து, தற்போது சென்னை ESI மருத்துவ கல்லூரியில் மயக்கவியல் துறை இரண்டாமாண்டு பயின்று வருகிறார். என் பெற்றோர் 1967–முதல் சட்டப் பேரவை மற்றும் பாராளுமன்ற தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வந்தார்கள். நான் அரசு ஊழியனாக இருந்ததால் எனது மனைவி திருமதி செல்லம்மாள் கிளைச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற துணைத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றி வந்துள்ளார். நாங்கள் அனைவரும் கலைஞரை எங்கள் குல சாமியாக வணங்கி வருகிறோம். தி.மு.கழகத்திற்காக எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் உழைக்கிறோம். உழைத்துக்கொண்டே இருப்போம்.

திரு. டி.எஸ்.ஏ. சிவப்பிரகாசம்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(சேரன்மகாதேவி தொகுதி)

கோடிக்கணக்கானமக்கள்போற்றிபாராட்டும் முத்தமிழ் அறிஞர் கலைஞருடன் சட்டமன்றத்தில் ஐந்து ஆண்டு காலம் பணியாற்றியது, என் வாழ்வின் சிறப்பான பகுதி. 1971 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நான் சுதந்திர கட்சியின் சார்பில் வேட்பாளராக சேரன்மகாதேவியில் நின்று வெற்றிபெற்றேன். 1971–1976 என்பது தமிழக சட்டமன்றத்திற்கு முக்கியமானதாகும். நான் வெற்றி பெற்று சென்னைக்கு போய் முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப் பார்த்து அவருக்கு மாலை அணிவித்து "நான் இளம் வயதினன் எனக்கு சட்டமன்றத்தில் நிறைய வாய்ப்புகள் கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். அப்போது எனக்கு வயது 26. மறுநாள் காலை முதல்வர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெறச் சென்றேன். நான் மாலை அணிவித்து வாழ்த்துப் பெற்றவுடன் கலைஞர் நேற்று நாவலரைப் பார்த்தீர்களாம் நாவலர் சொன்னார். எங்களுக்கு தெரிந்திருந்தால் நாங்களே தி.மு.க. வேட்பாளராக அறிவித்திருப்போம். அவரும் என்னை வாழ்த்தி நன்றாக செயல்படுங்கள் என்றார்.

நான் எனது கன்னிப் பேச்சை சட்டமன்றத்தில் நிகழ்த்தும் போது எனது பேச்சை கூர்ந்து கவனித்தார். நான் பேச்சை முடித்தவுடன் என்னைப் பார்த்து கை செய்கை மூலம் பேச்சு நன்றாக இருந்தது என்று பாராட்டினார். அப்போது எனக்கு உற்சாகமாக இருந்தது.

சட்டமன்றத்தில் ஒரு நாள் தேர்தல் முடிந்த பிறகும் எனது தொகுதியில் பல இடங்களில் கலவரங்கள் நடைபெற்றன. அது பற்றி நான் சட்டமன்றத்தில் தேர்தல் கலவரங்களை பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி முதல்வரிடம் கேட்டுக் கொண்டேன். நான் முக்கூடலுக்கு திரும்பியவுடன் காவல் துறையினர் சிலரை கைது செய்து நடவடிக்கை எடுத்தனர். இதிலும் எனக்கு ஆதரவாக முதல்வர் கலைஞர் அவர்கள் நடந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சியை தந்தது. அவர் மீது அளவற்ற மரியாதை ஏற்பட்டது. நான் கேள்வி ஒன்றை முதலமைச்சருக்கு அனுப்பி இருந்தேன். முதல்வர் கேள்வி நேரத்தில் பதிலளிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், நான் வெளியில் லாபியில் நடந்து கொண்டிருந்தபோது, முதல்வரின் உதவியாளர் நாகராஜன் என்பவர் முதல்வர் இந்த கேள்வியை திரும்ப பெற்றுக் கொள்ளும்படி கூறினார் என்றார். நான் மறுபேச்சின்றி படிவம் இருக்கிறதா என்று கேட்டேன் அவர் அதை கொடுத்ததும் கையெழுத்திட்டுக் கொடுத்தேன்.

2–12–1972–ல் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகள், தமிழக சட்டமன்றத்தில் மட்டுமில்லாமல், மற்ற எந்த மாநில சட்டமன்ற வரலாற்றில் என்றும் நடைபெறாதது. அன்று காலை சட்டமன்றம் கூடியபோது எல்லா உறுப்பினர்களும் பரபரப்பாக இருந்தார்கள். சட்டமன்றத்தில் சபாநாயகர் திரு. கே. ஏ. மதியழகன் அமர்ந்ததும், ஆற்காடு வீராசாமி எழுந்து சபாநாயகர் மீது

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்மொழிந்தார். நாவலர் அதை வழிமொழிந்தார். ஆனால், சபாநாயகர் மதியழகன் முதலில் அமைச்சரவை மீது உள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு எம்.ஜி.ஆர். அவர்களைப் பேச அழைத்தார். முதல்வர் கலைஞர் அவர்கள் அவை வேறு திசை நோக்கி செல்வதை பார்த்து பதட்டப்படாமல் மிகவும் தெளிவாக சபாநாயகரின் மைக்கையும், எம்.ஜி.ஆரின் மைக்கையும் நிறுத்திவிட்டு, சபையில் இன்னொரு நாற்காலியை போடச் சொல்லி, அதில் துணை சபாநாயகர் திரு. பே. சீனிவாசன் அவர்களை அமரும்படி கூறினார். திரு. வேதாசலம் அவர்கள் மதியழகன் இடம் இருந்து மணியை எடுத்து சீனிவாசன் மேசையில் வைத்தார். துணை சபாநாயகர் சீனிவாசன் தலைமையில் கூட்டத்தை நடத்தி, மதியழகன் மீது நம்பிக்கை இல்லா தீர்மானத்தை விவாதம் நடத்தி நிறைவேற்றினார்கள். எதிர் வரிசையில் ஒலிபெருக்கியில்லாமல் வியர்வை வழிந்தோட எம்.ஜி.ஆர். முதல்வர் மீது குற்றச்சாட்டுகளை கூறி முதல்வர் மீது நம்பிக்கை இல்லை என்று பேசினார். நான் சட்டசபையில் இருந்த தலைவர் கலைஞர் அவர்களையே பார்த்தேன். எந்தவித சலனமும் இல்லாமல் பரபரப்பும் இல்லாமல் சபை நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தார். அன்று இரு சட்டசபையும் நடக்கவில்லை என்றால் சபாநாயகர் மதியழகன் வாக்கெடுப்பு நடத்தி அமைச்சரவையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து இருப்பார். ஆனால் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மிகச்சிறந்த நடவடிக்கையாக மற்றொரு நாற்காலியைப் போட்டு சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததால், பின்விளைவுகள் தடுக்கப்பட்டன. அண்ணா தி.மு.க. தோன்றிய பிறகு கலைஞரை திருட்டுக் கூட்ட தலைவர் என்று கூறுவதை வழக்கமாக கொண்டார்கள். ஒரு நாள் நண்பர் ஆலடி அருணா கலைஞரைப் பார்த்து அலிபாபா கூட்டத்தின் தலைவர் என்று கூறினார். கலைஞர் அதற்கு கோபப்படாமல் பதட்டப்படாமல் அலிபாபா கதையில் அலிபாபா நல்லவர்; எல்லோருக்கும் உதவுபவர். 40 பேர் மட்டுமே திருடர்கள் என்று கூறிவிட்டு அமர்ந்தார்.

மற்றொரு நிகழ்வு மாநில சுயாட்சி தீர்மானம். 1974 ஏப்ரலில் நடைபெற்றது. இந்த முன்னோடி தீர்மானத்தை எந்த மாநில சட்டமன்றமும் நிறைவேற்றாதபோது கலைஞர் கொண்டு வந்தார். வழக்கம்போல் எதிர்க்கட்சியை சார்ந்த பலர் இது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று கூறினர். H.V. ஹண்டே அ.தி.மு.க.வில் இருக்கும்போது அவர் மாநில சுயாட்சி அதிகாரம் தேவைதான், ஆனால், உங்கள் ஆட்சிக்கு கிடைத்தால் நீங்கள் தவறாக பயன்படுத்துவீர்கள். அதனால் இந்தத் தீர்மானம் தேவையற்றது என்று கூறினார். ஆனால், தலைவர் கலைஞர் எழுந்து நீங்கள் ஆட்சிக்கு வந்து இந்தத் தீர்மானம் கொண்டு வந்தால் நான் ஆதரிப்பேன் என்று கூறினார்.

14-8-1972-ல் சுதந்திரம் கிடைத்த பெருவிழாவை நள்ளிரவு கூட்டமாக இரவு 12 மணி வரை நடத்தினார் கலைஞர். 8-7-1971-ல் இன்றும் தீராத காவேரி பிரச்சனை தொடர்பாக

தீர்மானம் நிறைவேற்றினார். இந்திய துணைக் கண்டத்தில் எந்த மாநிலமும் செய்யாத ஒன்றான மாநில திட்டக் குழுவை அமைத்தார் கலைஞர்.

மந்திரி சபையைக் கலைக்க வேண்டும் என்று இங்கிருந்து டெல்லி சென்று பேசிக் கொண்டிருந்தார்கள். 12–11–1975 ஆம் நாள் முதல்வர் எழுந்து நாள் குறிப்பிடாமல் இந்த சபை ஒத்திவைக்கப்படுகிறது என்று கூறினார்.

அண்ணா தி.மு.க–வைச் சேர்ந்த H.V. ஹண்டே அவர்கள் எழுந்து மீண்டும் நீங்கள் கூட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, முதல்வருக்கு தகவல் ஏதாவது இருக்கிறதா தெரிந்தால் கூறுங்கள் என்றார். முதல்வர் கலைஞர் பதட்டப்படாமல், ஆத்திரப்படாமல் செய்தி தரலாம் என்று தான் நேற்று முழுவதும் வானொலியில் எதிர்பார்த்து கேட்டுக் கொண்டிருந்தேன். பிரதமர் ஏதும் சொல்லவில்லை என்றார்.

நான் கலைஞர் அவர்களுடன் 50 ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். இந்திய துணைக் கண்டத்தில் கலைஞரைப் போல் திடமான நடவடிக்கைகளை எந்த முதலமைச்சரும் எடுத்ததில்லை. சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களோடு பணியாற்றியது எனக்கு கிடைத்த பெருமை.



திரு. கே. வினாயகம்: ஐயா, 30 ஆம் தேதி வரும் ஆடிக் கிருத்திகை திருவிழாவிற்கு ஏராளமான யாத்திரிகர்கள் திருத்தணி முருகன் கோவிலுக்கு வருவார்கள். தயவு செய்து, குடிநீர்த் திட்டத்தை 30 ஆம் தேதிக்குள் துவக்கி வைக்க முதலமைச்சரவர்கள் இசைந்து ஒரு தேதியைக் கொடுப்பாரா?

மாண்புமிகு திரு.சி.என். அண்ணாதுரை: தம்பியின் கோயில் பற்றி அண்ணன் இவ்வளவு அக்கறை காட்டுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

4.7.1967

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

கலைஞரும் நானும்

திரு. எஸ்.வி. சேகர்.
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(மயிலாப்பூர் தொகுதி)

2006 சட்டமன்ற உறுப்பினராக கலைஞருக்கு எதிர் வரிசையில் அமர்ந்த நான் 2008–ல் முதல்வர் கலைஞருக்கு பின் வரிசையில் அமர்ந்து, அதன் பின் புதிய சட்டமன்ற வளாகத்தில், 100–வது சட்டமன்ற உறுப்பினராக அமர்ந்த வரையிலும், கடைசி வரையில் தன் நெஞ்சில் ஒரு சிம்மாசனமிட்டு என்னை அமர்த்தியவர் என் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய கலைஞர் அவர்கள்.

நான் பதவியேற்றவுடன் எனக்கு ஒதுக்கிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை ஒரு தி.மு.க. கவுன்சிலர் தரமாட்டேன் என்று சொன்னதை காலை 5 மணிக்கு பேப்பரில் படித்த முதல்வர் கலைஞர் தன் உதவியாளர் திரு. சண்முகநாதன் மூலம் என்னை காலை 6 மணிக்கு தொலைபேசியில் அழைத்து அந்த அலுவலகத்தை ஒப்படைத்தார். ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

கலைஞரின் நகைச்சுவை உணர்வு அபாரமானது. அதேபோல் யார் நல்ல நகைச்சுவையுடன் பேசினாலும் அதை ரசித்து பாராட்டும் மிக உயர்ந்த குணம் கொண்டவர். மயிலாப்பூரில் நடைபாதை பழக்கடை வியாபாரிகள் பாதசாரிகளுக்கு இடைஞ்சலாக இருப்பதை அங்குள்ள பழம்பெ(று)ரும் காவலர்கள் உதவியாக உள்ளனர் என்றேன். பழம்பெ(று)ரும் காவலர் என்றதை புன்னகையோடு ரசித்து உடனடி நடவடிக்கையும் எடுத்தார்.

நான் 8–4–2010 அன்று சட்டமன்றத்தில் பேசியபோது, 1957–ல் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால்அடிக்கல்நாட்டப்பட்டுபின்கைவிடப்பட்ட வீரத்தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபத்தை அவர் பிறந்த செங்கோட்டையிலேயே, என் வேண்டுகோளுக்கிணங்கி, கட்டிட ஆணையிட்ட நம் முதல்வர் கலைஞர் அவர்கள், இதே சட்டமன்றத்தில் என்னை "சட்டமன்ற வாஞ்சிநாதன்" என அழைத்ததை என் வாழ்நாள் கவுரவமாக கருதுகின்றேன்.

தினசரி பிணங்களோடு வாழும் சுடுகாட்டு வெட்டியான்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்ற என் வேண்டுகோளுக்கு இணங்க அன்றைய தமிழக துணை முதல்வர் திரு. ஸ்டாலின், முதல்வர் கலைஞர் அறிவுறுத்தலின்படி, தினசரி பிணம் வந்தால்தான் பணம் என்றவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, அவர்களை மாநகராட்சி ஊழியர்களாக மாற்றியதில் என் சிறு பங்கும் இருப்பதை என் பெருமையாக கருதுகிறேன்.

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்பதை, நான் மாற்று கட்சியில் இருந்தபோது, என்னை தி.மு.க. பொதுக்குழுவிற்கு அழைத்து, மேடையில் பேச எனக்கு வாய்ப்பளித்தது ஒரு சரித்திரம்.

ஒருமுறை என் நாடகத்திற்கு போலீஸ் லைசென்ஸ் வாங்கவில்லை என்பதற்காக நாடகம் நடத்தக்கூடாது என தடை போட்டபோது, சட்டமன்றத்தில் இருந்த முதல்வர் கலைஞரிடம் தெரிவித்தேன். உடனடியாக இனி எந்த நாடகக்குழுவும் போலீஸ் அனுமதி வாங்க வேண்டியது இல்லை என வாய்மொழி உத்தரவு போட்டு, "சேகர், நீதிமன்றத்தில் இந்த பிரிட்டிஷ் கால சட்டத்துக்கு ஒரு ஸ்டே வாங்கிடுங்கன்னு அறிவுறுத்தினார்".

மயிலாப்பூரில் அரசு நிகழ்ச்சிகள் எது நடந்தாலும், முதல்வர் கலைஞர் கலந்து கொள்ளும்போது கேட்கும் முதல் கேள்வி "என்னப்பா நம்ம எம்.எல்.ஏ. வந்துட்டாரா"

ஒரு தந்தையைப் போல பாசத்துடன் பழகி என்னை முழுதும் அன்பால் வென்றவர் டாக்டர் கலைஞர்.

என் 5600-வது நாடக விழாவிற்கு அன்றைய துணை முதல்வர், இன்றைய முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்களுடன் என்னையும் சரிசமமாக அமர்த்தி கவுரவப்படுத்தியவர் கலைஞர்.

நாடகத்தில் பத்து பதினைந்து காட்சிகளானாலும், ரசிக்கின்ற கருத்துக்களை, மருந்து கேப்சூல் போல கொடுக்கும் இந்த திறமையை, நடிகவேள் எம்.ஆர். ராதாவிற்கு பிறகு இன்றைக்கு எஸ்.வி. சேகரிடம் காண்கிறேன் என்று வாழ்த்தியது, என் வாழ்நாள் கவுரவம்.

2010-ல் சட்டமன்றத்தில் பேசியபோது, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் நேரடி பார்வையில் வளர்ந்து நிற்கும் இந்த எழில் கொஞ்சும் பிரம்மாண்டமான புதிய சட்டமன்ற வளாகத்தில் 5 முறை தமிழக முதல்வராக இருந்த நம் கலைஞருக்கு முழு உருவச் சிலை வைக்கவேண்டும் என கோரிக்கை வைத்தேன். அதை நிறைவேற்றிய நம் கலைஞரின் மகன், என் இனிய நண்பர், இன்றைய தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

என் 60 ஆம் பிறந்த தினத்திற்கு நேரில் வந்து எங்களை தம்பதி சமேதரராய் கை நிறைய அட்சதை போட்டு ஆசீர்வாதம் செய்ததை இன்றும் மகிழ்வுடன் நினைத்துப்பார்க்கின்றோம்.

இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும் கலைஞரின் புகழும், நினைவுகளும் மாறாது, மங்காது நிலைத்திருக்கும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. சி. ஞானசேகரன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(வேலூர் தொகுதி)

1996 ஆம் ஆண்டு வேலூர் சட்டமன்றத் தொகுதியில் இருந்து நான் இரண்டாம் முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய நேரத்தில், 1996 ஆம் ஆண்டிற்குமுன், காவல் துறை உதவி ஆய்வாளர் பதவிக்கான 748 காலிப் பணியிடங்களுக்குத் தேர்வாகி, பணி நியமனத்திற்காக நீண்டகாலம் காத்திருந்த இளைஞர்களின் பிரச்சினையானது என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பொதுவாக, பேரவை கூடும் நாட்களில், அரைமணி நேரத்திற்கு முன்னதாகவே தலைவர் கலைஞர் அவர்கள் பேரவைத் தலைவர் அறைக்கு வந்து, எந்தெந்தத் தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பது குறித்து பேரவைத் தலைவருடன் கலந்தாலோசிப்பார். விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் தீர்மானங்கள் குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, பதிலளிக்கத் தயாராகி வருவதுடன், எந்தத் துறையில் கேள்வி எழுப்பினாலும் உடனே பதில் சொல்லும் கற்பூர புத்தி கொண்ட சகலகலா வல்லவர் அவர்.

இந்நிலையில் 1996 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுக் கூட்டத்தொடரில் பங்கெடுத்துக் கொண்டிருந்தபோது, இப்பிரச்சினை குறித்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து, மேற்படி பணிக்கு தேர்வானவர்கள் எந்த அரசியல் கட்சியையும் நம்பி விண்ணப்பிக்கவில்லை; அவர்கள் நிலையான அரசை, அரசு இயந்திரத்தை நம்பி காத்திருக்கிறார்கள் என்று உருக்கமாகப் பேசியதைக் கண்ட தலைவர் கலைஞர் அவர்கள், வாயால் பேசாமல் சைகையால் பேசினார். தொடர்ந்து வாதிட்டேன். கலைஞரின் மனம் கனிந்தது; பெயருக்கேற்ற கருணை அவர் மனதில் ரீங்காரமிடத் தொடங்கியது. சட்டென உடனே எழுந்து, "இடி இடிக்காது, மழை பொழியும்" என்று கூறியதுடன் என் கோரிக்கையை ஏற்று, அடுத்த நாளே அவர், தேர்வான 748 பேருக்கும் உதவி ஆய்வாளர் பதவிக்கான பணி நியமன ஆணை வழங்கப்படும் என்று அறிவித்தார். உறுப்பினர்கள் அனைவரும் அகமகிழ்ந்து மேசையைத் தட்டி அறிவிப்பை வரவேற்றோம். அவர்கள் எல்லோரும் தற்போது காவல் துறையின் உயர் பதவிகளில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கம்ப ராமாயணத்தில் அனுமன், "கண்டேன் சீதையை" என்று உரைத்ததுபோல், தலைவர் கலைஞர் அவர்கள் 'பணி நியமனம் வழங்கப்படும்' என பின்னால் சொல்லப்போவதை முன்கூட்டியே "இடி இடிக்காது, மழை பொழியும்" என்று இலக்கிய நடையில் பதில் அளித்து, அவர்களின் வாழ்வில் விளக்கேற்றி வைத்த புண்ணியவான் தலைவர் கலைஞர் அவர்கள்.

''காதல் சின்னமும் – நீதியின் சின்னமும்''

1998 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாளன்று, அப்போதைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தை திறந்து வைத்தார். அவ்விழாவில் நான், நீதிமன்றக் கட்டடம் தாஜ்மஹாலைப்போல் உள்ளது என்று பேசினேன்; உடனே தலைவர் அவர்கள், தாஜ்மஹால் காதல் சின்னம், நீதிமன்றக் கட்டடமோ நீதியின் சின்னம், என என்னைத் திருத்தியது இன்றும் என் நினைவில் நிழலாடுகிறது. எத்தனை பொருத்தமான வார்த்தை, ஆற்றலின் சிகரம் அவர்.

பெருந்தலைவருக்கு, தலைவர் கலைஞர் புகழ்மாலை சூட்டிய பாராட்டு

2-9-2000 அன்று வேலூர் மாவட்டத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மோர்தானா அணையை, தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்த விழாவில், '1962-ல் பெருந்தலைவர் காமராசர் ரூ.16 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டினார். ஆட்சி மாற்றத்தால் இன்று ரூ.100 கோடிக்கு செலவினம் ஏற்பட்டுள்ளது' என்று பேசினேன். அதற்கு தலைவர் கலைஞர் அவர்கள், 1962-ல் பெருந்தலைவர் காமராசர் முதல்வராக இருந்தபோது அடிக்கல் நாட்டிய நல்ல திட்டமானது வீண்போகக் கூடாது என்று ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப் பிறகு மன உறுதியோடு நிறைவேற்றியுள்ளோம். அந்த காமராசர் ஆட்சியில் தொடங்கப்பட்ட நல்ல திட்டங்கள் இந்த காமராசரின் (கலைஞரின்) ஆட்சியில் தொடர்ந்து நடைபெறும். பெருந்தலைவருக்கு பெருமை சேர்க்கும் வகையில் மோர்தானா அணைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என எனக்கு பதிலடி கொடுத்து, பெருந்தலைவருக்கு புகழ் மாலை சூட்டிய பாங்கு அனைவரின் நெஞ்சைத் தொட்டது. மாற்றான் வீட்டு தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்ற பேரறிஞர் அண்ணாவின் தம்பி என்பதை கலைஞர் அவர்கள் உணர்த்திவிட்டார்கள்.

"கலைஞரின் தனிப்பண்பு"

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு முன்பாக இருந்த மண்டபத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரை பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்று பேரவையில் நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியபோது, கலைஞர் அவர்களின் ஆலோசனையின் பேரில், மாண்புமிகு அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் என்னை சைகையால் அமரச் சொன்னார். பிறகுதான், மாற்று மதத்தைச் சார்ந்த அந்த ஒருவர்தான் தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சித் தலைவராக உள்ளார். அவரது பணியிட மாற்றத்தைப் பேரவையில் அறிவிப்பது அழகல்ல என்பதால், நிர்வாக ரீதியில் அவரை வேறு இடத்திற்கு சுமூகமாக மாற்றம் செய்யப்போவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. மதம் சார்ந்த பிரச்சினைகளை தலைவர் கலைஞர் அவர்கள் அணுகும் விதமும், கையாளும் விதமும் அவரின் சாணக்கியத்தனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

"கருப்பு நாள் – கற்பு நாள்"

1-6-2006 அன்று சட்டமன்றத்தில் சமுதாய நலத் திட்டங்கள் பலவற்றிற்கான தீர்மானத்தை நிறைவேற்றிய முதல்வர் கலைஞர், இந்நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும் என்று பேசினார். சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தீர்மானத்தைப் பாராட்டி கருத்து தெரிவித்தார்கள். ஒருவர் மட்டும் "இது கருப்பு நாள்" என்று பேசியதை நான் சுட்டிக்காட்டி வருத்தப்பட்டு பேசினேன். கலைஞர் உடனே எழுந்து "அவர் சொல்லியதுபோல இது கருப்பு நாள் அல்ல. உண்மையிலேயே அது "கற்பு நாளாகும்" என்று பதிலடி தந்ததும், அவையே ஆரவாரத்தால் அதிர்ந்தது. கலைஞரின் நாவில் சொற்கள் நர்த்தனமாடுவதைக் கண்டு நாடே வியக்கும்போது சட்டமன்றம் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

சட்டப் பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜன், நான் துப்பாக்கி லைசென்ஸ் கேட்டு விண்ணப்பித்தேன். ஏன் எனக்கு துப்பாக்கி லைசென்ஸ் தரவில்லை என்று கலைஞரை பார்த்து வினா எழுப்பினார். உடனே கலைஞர் பதில் உரையில் "இத்தருணத்தில் ஒரு நிகழ்ச்சியைக் கூற விரும்புகிறேன். நானும் பேரறிஞர் அண்ணாவும் வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். எங்களுடன் முல்லை வடிவேல், முல்லை சக்தி என்ற எங்கள் ஆருயிர் நண்பர்களும் வந்தனர். இரவு அவர்களின் சொந்த ஊரான முல்லைக்கொம்பையில் தங்கினோம். அண்ணா ஒரு கட்டிலில் தனியாக படுத்து உறங்கினார். நாங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தோம். வடிவேல் சொன்னார், இது காட்டுப் பகுதி அர்த்தராத்திரியில் பயணம் ஆகாது. ஒரு துப்பாக்கி வைத்துக்கொள்ளக்கூடாதா? என்றார். நான் உடனே, வருகிறவன் கொண்டு வருவான்ல, நமக்கு எதுக்கப்பா என்றேன். நம்முடைய கலைராஜனுக்கும் அதையே சொல்கிறேன். கொண்டு வருபவன் கையில் துப்பாக்கி இருந்தால் அதையே பிடுங்கி அவர் சுடலாம் அல்லவா?" என்றதும் அவை சிரிப்பலையில் மிதந்தது. முல்லை சக்தி என் சிறிய மாமனார், முல்லை வடிவேல் Ex. M.L.A., என் மாமனார், முல்லை வடிவேல் மகள் மேகலா என் மனைவி, தன் பழைய நினைவுகளை மறக்காமல் அந்த நிகழ்வுகளையே சட்டமன்ற கேள்விகளுக்கு பதிலாக குழைத்துக் கொடுத்து பழைய நண்பர்களை எப்படி கொண்டாடுகிறார் கலைஞர் என்று எண்ணி அவையே அவரைப் பாராட்டியது. எங்கள் குடும்பத்தினரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது இருமுறை (10 ஆண்டுகள்), அவர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது இருமுறை (10 ஆண்டுகள்) ஆக தொடர்ந்து 20 ஆண்டுகள் வேலூர் சட்டமன்ற உறுப்பினராக நான் அவரோடு பயணித்துள்ளேன். எங்களை எல்லாம் சட்டமன்றத்தில் பேசவிட்டு அழகு பார்க்கும் அவர் குணம் இமயம் போன்றது. அவர் முதல்வராக இருந்தபோது, வேலூர் மாநகராட்சியாக

அறிவிப்பு, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி, பொன்னையாற்று குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம், வேலூர் மாவட்ட நீதிமன்றக் கட்டடம், திருவள்ளுவர் பல்கலைக்கழகக் கட்டடம், வேலூர் அரசு சட்டக் கல்லூரி, வேலூர் புதிய பேருந்து நிலையம், அப்போதைய துணை முதல்வர் இப்போதைய முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்களின் துணையோடு வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு (அப்போது இவை ஒன்றுபட்ட வேலூர் மாவட்டம்) ஒகேனக்கல் காவேரி ஆற்று குடிநீர்த் திட்டம் என்று எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றிட பாடுபட்டேன் என்றால், எல்லாம் கலைஞரின் கருணையால்தான். போட்டியிட்ட அனைத்து சட்டமன்றத் தேர்தல்களிலும் தோல்வியே கண்டிராத சட்டமன்ற நாயகர் கலைஞர். 5 முறை தமிழகத்தின் முதல்வராக பணியாற்றிய தமிழினத் தலைவர். அவரைப்போல் ஒரு முதல்வரை இனி காண்பதரிது. சட்டமன்ற நிகழ்வுகளில் இன்னும் அவர் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. எம். தமிமுன் அன்சாரி,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(நாகப்பட்டினம் தொகுதி)

கலைஞர் எனும் பெயர் திராவிட இயக்க அரசியல் வரலாற்றில் சமூக நீதியாளர்களை உசுப்பும் அறிவாயுதமாக இருக்கிறது.

மு. கருணாநிதி என்ற பெயரை விட **'கலைஞர்'** என்ற அடைமொழிதான் தமிழுலகில் நிலைத்து நிற்கிறது.

அரசியல், சமூகவியல், இலக்கியம், எழுத்துலகம், திரைத்துறை என முக்கிய களங்களில் பன்முக ஆளுமையாக அவர் திகழ்ந்தார்.

அவர் மேற்கொண்ட பயணங்களும், எழுதிய எழுத்துகளும், ஆற்றிய உரைகளும் அவரது அயராத உழைப்பை எடுத்துக் கூறுகிறது.

இந்தியாவில் முழுநேர அரசியலில் ஈடுபடுபவர்கள் கலைஞரின் உழைப்பை முன்னுதாரணமாக கொள்வது அவசியமாகும்.

அவர் முதல்வராக இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் ஆணித்தரமாக எடுத்து வைத்த வாதங்களும், புள்ளிவிவர திரட்டுகளும், சிலேடையாக எடுத்துரைத்த நகைச்சுவை கருத்துகளும் இந்தியாவின் எந்த சட்டமன்றத்திலும் நிகழாதவை.

அவர் அரசியலில் இலக்கியத்தையும், இலக்கியத்தில் எளிமையையும், எழுத்தில் தென்றலையும், உரையில் அனலையும் பயன்படுத்திய ஆற்றலாளர்.

பெரியாருக்கு பிள்ளையாகவும், அண்ணாவுக்கு தம்பியாகவும், தமிழர்களுக்கு தலைவராகவும் திகழ்ந்தவர்.

எதிர்க்கட்சிகளை வியக்க வைக்கும் வாதத்திறமையும், கொள்கை எதிரிகளையும் ரசிக்க வைக்கும் நகைச்சுவைத் திறனும் அவரது பொது வாழ்வை அலங்கரித்தன.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் நாகப்பட்டினம் தொகுதியில் நான் 15–வது சட்டப்பேரவை உறுப்பினராக வெற்றி பெற்று, 25–5–2016 அன்று அன்றைய சட்டப்பேரவை செயலாளர் ஜமாலுதீன் அவர்கள் முன்னிலையில் பதவியேற்றேன்.

அப்போது முதல்வராக டாக்டர் ஜெ ஜெயலலிதா அம்மா அவர்கள் அமர்ந்திருக்க, சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு கலைஞர் அவைக்கு வந்தார்.

இருவரும் ஒரு சேர அவையில் இருக்கும்போது பார்த்த முதலும், கடைசியுமான காட்சி அதுதான்.

கலைஞரின் கடைசி சட்டமன்ற வருகையும் அதுதான்.

அவரது சட்டமன்ற விவாதங்களை கேட்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லை என்ற வருத்தம் இருக்கிறது.

ஆனால், அவர் இருந்த அவையில் சக உறுப்பினராக இருந்தோம் என்ற ஆறுதலும் இருக்கிறது.

கலைஞர் அவர்களுடன் முதன் முதலாக 2006 ஆம் ஆண்டில் வேலூர் திமுக மண்டல மாநாட்டிலும், மயிலாப்பூர்–மாங்கொல்லையில் சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஆதரவாக நடைபெற்ற திமுக கூட்டத்தில் அவரோடு பங்கேற்றும் பேசினேன்.

2014 ஆம் ஆண்டில் ஈரோடு, திருவாரூரில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையிலும் பங்கேற்று பேசினேன்.

2007 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கும், கிருத்தவர்களுக்கும் தலா 3.5 சதவீத இடஒதுக்கீடு அளித்ததற்கு நன்றி கூறி நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற தமுமுக மாநாட்டில் நிகழ்ச்சியின் தொகுப்பாளராக இருந்தேன்.

எனது தொகுப்புரையை மிகவும் ரசித்தவர், அம்பாசிடர் காரில் முன் இருக்கையில் அமர்ந்தவாறு என்னைப் பார்த்து புன்னகையுடன் கையசைத்து சென்றார்.

அதன்பிறகு பேரா. ஜவாஹிருல்லாவும், முன்னாள் வக்ஃபு வாரிய தலைவர் செ. ஹைதர் அலியும் அவரை சந்தித்தபோது என்னைப் பற்றி கேட்டறிந்திருக்கிறார்.

அவையெல்லாம் எனக்கு இப்போதும் மகிழ்ச்சியூட்டுகின்றன.

கடைசியாக கலைஞரை அவரது கோபாலபுர வீட்டில் 17–11–2017 அன்று நானும், தமிழக கொங்கு இளைஞர் பேரவை தலைவர் உ. தனியரசு அவர்களும், முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் அவர்களும் நேரில் சென்று சந்தித்தோம்.

7–8–2018 அன்று அவர் இறந்தபோது அவரது இறுதிச் சடங்கில் மெரினாவில் பங்கேற்றோம்.

அவரது நினைவுகளை 3–1–2019 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற இரங்கல் தீர்மானத்தில் நான் பேசியபோது, அவையிலிருந்த திமுக நண்பர்கள் மிகவும் உணர்ச்சிமயமாகினர்.

அந்த உரையில் 'இந்திய அளவில் தமிழர்களுடைய அரசியல் ஆளுமையை வெளிப்படுத்திய தன்னிகரற்ற திராவிட இயக்கத் தலைவர் கலைஞர்' என குறிப்பிட்டு பேசினேன்.

அது வரலாற்று உண்மைதானே...!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. அ. தமிழரசு,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(ஓமலூர் தொகுதி)

2006 முதல் 2011 வரை டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில், என்னுடைய 43–வது வயதில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்றத்துக்கு அனுப்பப்பட்டேன். சட்டமன்ற உறுப்பினராக எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

தமிழக சட்டப்பேரவைச் செயலாளர் அவர்கள், சட்டப் பேரவையில் முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்களின் சிறப்பு அம்சங்கள் பற்றி என்னுடைய கருத்தைக் கேட்டதற்கு நன்றி.

தலைவர் கலைஞர் அவர்கள் சபையில் இருந்தாலும், சபையில் இல்லாமல் அவரது அறையில் இருந்தாலும், சட்டமன்ற நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் கூர்ந்து கவனித்து, பிறகு சபைக்கு வந்து பதில் கொடுப்பார். நான் முல்லைப் பெரியாறு அணை போராட்டத்தில் இருந்தபோது, அதுசமயம் ஓமலூரில் ஒரு தனியார் பள்ளியில் நடைபெற்ற பிரச்சினையில், நான் சம்பந்தப்படாத பிரச்சினையில், எனது தூண்டுதலால்தான் பிரச்சினை ஏற்பட்டது என்று எனக்கு களங்கம் விளைவித்தபோது, சட்டப்பேரவையில் என்மீது விவாதம் வந்தபோது, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து விவாதத்திற்கு விட்டபோது, எதிர்க்கட்சித் தலைவர்கள் உரைக்குப் பின் தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது, 'நான் ஆரம்பம் முதல் தற்போது வரை இந்தப் பிரச்சினையை கவனித்து வந்துள்ளேன். அரசு நியாயத்தை செய்யும், என்னை நம்பி இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்களேன்' என நடுநிலையோடு பேசி, இந்து–கிருத்துவர்கள் மோதல் வராமலும், அரசுக்கும், ஆட்சிக்கும் களங்கம் வராமலும் ஆளுமைத் திறமையால் கையாண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். எனக்கும் நற்பெயரை பெற்றுத் தந்தார்.

சபையில் தி.மு.க.–வைச் சேர்ந்த ஆரணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. சிவானந்தம் அவர்கள் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் உரையாற்றியபோது, உரைக்கும் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லாமல், "வன்னியருக்காக இங்கு யாரும் வக்காலத்து வாங்கி பேச வேண்டியதில்லை" எனப் பேசியபோது, நானும் என்னுடன் 17 சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கையில் இருந்து எழுந்து நின்று, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் எனக் கடுமையாக பேசியபோது, தலைவர் கலைஞர் அவர்கள் அவரது அறையில் இருந்த தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, அவையில் அவரது இருக்கையில் வந்து அமர்ந்து, பா.ம.க. தலைவர் திரு. கோ.க. மணி பெயரை சொல்லி, உங்களது சட்டமன்ற உறுப்பினர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள் எனக்

கூற, பா.ம.க. உறுப்பினர்கள் அனைவரும் அமர்ந்த பிறகு, சக சட்டமன்ற உறுப்பினர் மனது புண்படும்படி பேசிய உறுப்பினரின் பேச்சின் உரையையும், அதனைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் பேசிய உரையையும், அவைக்குறிப்பில் இருந்து நீக்குங்கள் என பேரவைத் தலைவருக்கு முன்மொழிந்து பேசியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

எனக்கும், மாண்புமிகு முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டியாருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், எனது பெயருக்கும், எனது சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது என நான் சபையில் பேசி, 18 சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தபோது, தலைவர் கலைஞர் அவர்கள் பலதரப்பில் அமைச்சர்கள் மற்றும் அரசுச் செயலாளர்கள் வழியாக என்னிடம் சமாதானம் பேச எடுத்த முயற்சி, அவரது நற்பண்பு, எந்த அளவு அக்கறை கொண்டவராக இருந்தார் என்பதை பறைசாற்றியது.

ஓமலூர் சுங்கச்சாவடி பிரச்சினை மற்றும் வாகன உபயோகிப்புக்கான அதிகக் கட்டணம் குறித்து எனக்கும் சுங்கச்சாவடி நிர்வாகத்திற்கும் ஏற்பட்ட பிரச்சினையில், சுங்கச்சாவடி நிர்வாகம் பொய்யாக எனது பெயரில் 2009 ஆம் ஆண்டு ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, காவல் துறையும் என்மீது வன்கொடுமை வழக்குப் பதிந்து, நான் ஓமலூர் பயணியர் மாளிகையில் இருந்தபோது, என்னை கைது செய்ய சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு. மயில்வாகனம் தலைமையில் காவல் துறையினர் வந்தபோது, 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் என்னை கைது செய்யாமல் தடுத்தபோது, இப்பிரச்சினையை தலைவர் கலைஞர் கவனத்திற்கு திரு. ஜி.கே. மணி அவர்கள் கொண்டு சென்றபோது, புகாரில் உண்மைத்தன்மை இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு, அன்று என்னை .கைது செய்வதை தடுத்து நிறுத்திய மாமேதை தலைவர் கலைஞர் அவர்கள்.

இறுதியாக ஒவ்வோராண்டும் சட்டப்பேரவையில் அதிக வினா எழுப்பிய 5 சட்டமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவனாக 5 ஆண்டுகளும் தேர்வு செய்யப்பட்டதை பேரவையில் அறிவிப்பார் பேரவைத் தலைவர் அவர்கள். அதனடிப்படையில் 2010–2011 ஆம் ஆண்டு சட்டப்பேரவை நிகழ்வில் நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தேன். என்ன தீர்மானம் என்றால், ‘‘ஏழை எளியவர்கள் நலன் கருதி, சட்டமன்ற உறுப்பினர்கள் எளிமையாக வாழ வேண்டியதன் அவசியம் குறித்து’’ விவாதிக்க கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை மட்டும் அன்று காலை 9–30 மணிக்கு முன்பே, முதல்வர், பேரவைத் தலைவர், அவை முன்னவர், அன்றைய துணை முதல்வரும் இன்றைய முதலமைச்சருமான அன்னார் தளபதி உட்பட அனைவரும் கலந்து பேசி, முதல்வருக்குப் பதிலாக, அவை முன்னவர் தீர்மானம் நிறைவேற்றக் கோரி, அவையில் அவை முன்னவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசும்போது, ‘‘அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் வழங்கிய அனைத்து

வெட்டுத் தீர்மானங்களையும் கவனமாக படித்துப் பார்த்து, அதிகாரிகளால் தீர்வு செய்ய முடிந்ததை அதிகாரிகள் தீர்வு செய்யவும், அமைச்சர்களால் தீர்வு செய்ய முடிந்ததை அமைச்சர்கள் தீர்வு செய்யவும் நமது முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இருப்பினும் இந்த அவைக்கு ஓமலூர் மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசு கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை குறிப்பிட்டு பேசி, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசு ஏழை எளிய மக்கள் நலன் கருதி, நல்லெண்ணத்தின் அடிப்படையில் வெட்டுத் தீர்மானத்தை வழங்கியுள்ளார். மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் தமிழரசுவை இந்த அவை பாராட்டுகிறது. இருப்பினும் மேற்படி தீர்மானத்தை அவையில் விவாதிக்க இயலாது. எனவே மேற்படி தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் தமிழரசு முன்வந்து திரும்பப் பெற்று, அவை நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு''முதல்வரின் சார்பாக பேசியது, எனது சட்டமன்ற உறுப்பினரின் செயல்பாட்டிற்கு முத்தாய்ப்பாகவும், எனக்கு கிரீடம் வைத்தாற்போலவும், இது எனக்கு முதல்வர் அவர்களும், பேரவையும், அரசும் நற்சான்று வழங்கிய நிகழ்வு போலவும் விளங்கியது.

எனது இறப்பு வரை மறக்க முடியாத இந்த செயல்பாட்டை செய்த முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நிகர் கலைஞரே! இப்படி ஒரு முதல்வர் இதற்கு முன்பும் இல்லை, இனிமேல் வரப்போவதும் இல்லை என அய்யா தலைவர் கலைஞர் அவர்களின் செயல்பாட்டை நினைவு கூர்ந்து, அவர் நினைவிடத்தின் திசைநோக்கி வணங்குகின்றேன். நன்றி.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. சு. துரைசாமி,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(திருப்பூர் தொகுதி)

வணக்கம்! 1967 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை திருப்பூர் சட்டமன்ற உறுப்பினராக, தமிழக சட்டமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பினை பேரறிஞர் அண்ணா அவர்களும், அதன் பின்னர் அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் முதலமைச்சர்களாக பணியாற்றிய காலத்தில் எனக்கு அளித்தார்கள்.

இந்திய நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு இருந்தே தொழிற்சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களும் 'மே' தினத்திற்கு விடுமுறை விட வேண்டும் என்று கூறி போராட்டம் நடத்தி வந்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் தொழிலாளர் தினமான 'மே' தினத்திற்கு விடுமுறை விட வேண்டும் என்று தமிழகத்தை அன்று ஆண்ட காங்கிரஸ் அரசிடம் தொழிற்சங்கத் தலைவர்கள் கோரிக்கை வைத்து போராடி வந்தனர். ஆனாலும் காங்கிரஸ் அரசு தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்கவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்னர், 1967 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளை அரசு விடுமுறை நாளாக இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழக அரசு அறிவித்து, 'மே' நாள் விழாவை அரசு விழாவாக கோவை வ.உ. சிதம்பரம் பூங்காவில் அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து நடத்தினார்கள்.

அதற்கு பின்னர் தமிழக முதலமைச்சரான அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'மே' முதல் நாளை அரசு விடுமுறையாக்கி சட்டம் இயற்றினார்கள்.

தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்த 15 பஞ்சாலைகளை திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட நேரத்தில் மாநில அரசும், மத்திய அரசும் அதற்கான பங்குத் தொகைகளை செலுத்த வேண்டும் என்றிருந்த நிலையில் மத்திய அரசு செலுத்த வேண்டிய முழுத் தொகையை செலுத்தாத நேரத்திலும், பஞ்சாலை தொழிலாளர்களின் நிலையைக் கருதி மாநில அரசே அதற்கான நிதி ஆதாரங்களைத் தந்து பஞ்சாலைகளை எடுத்து தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும், வாழ்வாதாரத்தையும் வழங்கி பாதுகாத்தார்கள்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்து 25 ஆம் ஆண்டு விழாவை சட்டமன்றத்தில் கொண்டாடும் முறையில் 1972 ஆகஸ்ட் 15 ஆம் நாள் இரவு நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருந்த மூன்று மிகப் பெரும் பேருந்து நிறுவனங்களான டி.வி.எஸ், ஏ.பி.டி மற்றும் ராமன் & ராமன் நிறுவனங்கள் நாட்டுடமையாக்கப்படும் என அறிவித்து, அதனை நாட்டுடமை ஆக்கினார். அதன் பயனாகத்தான் கடந்த 50 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் பொதுமக்களிடம் வசூலிக்கப்படுகின்ற

கட்டணங்கள், பிற மாநிலங்களில் பேருந்து கட்டணங்களைவிட இன்றளவும் குறைவாக உள்ளது என்றால் அது அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் மட்டுமே சாத்தியமாயிற்று என்பதனை தமிழக மக்கள் என்றென்றும் நினைவு கொள்ள வேண்டும்.

மத்திய அரசு நெருக்கடி நிலை அறிவித்த நேரத்தில் சென்னை கடற்கரையில் நெருக்கடி நிலையை எதிர்த்து அவர் பேசிய பேச்சுக்கள் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும். 1974 ஆம் ஆண்டு மத்திய அரசு நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்திய நேரத்தில் அந்த ஆண்டு தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவீதம் என்பதை 4 சதவீதமாக மத்திய அரசு குறைத்து அறிவித்தது. இதனால் அந்த நேரத்தில் கோவையில் இருக்கிற பஞ்சாலை தொழிலாளர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தி நிலவியது.

1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்ட நான், மத்திய அரசு தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ள குறைந்தபட்ச போனஸ் 4 சதவீதம் என்பது பஞ்சாலை தொழிலாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது என்றும், தொழிலாளர்கள் மத்திய அரசுக்கு கண்டனத்தை தெரிவிக்கும் விதமாக ஒருநாள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும், அந்த கூட்டத்தில் நான் பேசினேன். அதற்கு அப்போதைய தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த திரு. க. ராசாராம் அவர்கள் உடனே நீங்கள் வேலை நிறுத்தம் செய்தால் மத்திய உள் துறை துணை அமைச்சராக இருந்த திரு. ஓம் மேத்தா அவர்கள் தன்னைத் தான் தொடர்பு கொண்டு, மாநிலத்தில் ஆட்சி செய்து கொண்டு வேலை நிறுத்தம் அறிவிப்பது ஏற்புடையதல்ல என்று தெரிவிப்பார். ஆகையால் வேலை நிறுத்தத்தை தவிர்க்க வேண்டும் என்று பேசினார்.

நான் முதலமைச்சர் அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் இதனால் தமிழக அரசுக்கு நெருக்கடி ஏற்படுமானால் என்னை வேண்டுமானால் கைது செய்துகொள்ளுங்கள் என்று சொன்னேன். அதன் பின்னர் முதலமைச்சர் அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு எனக்கு அனுமதி கொடுத்தார்.

தொழிலாளர்கள் கோரிக்கைக்காக ஆளும் கட்சியாக அந்த நேரத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் தான் 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்த தீர்ப்பில் நீதிபதி அவர்கள் தமிழ்நாட்டில் தி.மு.க.–வின் பஞ்சாலை தொழிற்சங்கம்தான் அதிகமான பஞ்சாலை தொழிலாளர் உறுப்பினர்களைக் கொண்ட முதன்மைச் சங்கம் என்று தீர்ப்பு வழங்கியது. அது தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டது.

ஆகவே அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தொழிலாளர் நலன் சார்ந்த தொலைநோக்கு திட்டங்கள், அவற்றை

சட்டமாக்கியது, தொழிலாளர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்வில் ஏற்றம் அடைந்தது என்பதனை இன்று சட்டமன்ற நாயகர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் நினைவுகூர்வது சாலச்சிறந்தது.

இந்திய அரசியலில் பல்வேறு சமுக மேம்பாட்டுத் திட்டங்களை வெற்றிகரமாகவும், பாமர மக்களுக்குப் பயனளிக்கும் திட்டமாகவும், மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டின் திட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு திட்டங்களை அளித்து வந்ததையும் அண்ணன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சிறப்பு மலரில் வெளியாவது மிக்க மகிழ்ச்சி.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

நன்றி.



'இளமை அற்புதமான சக்தியையும், ஆற்றலையும் பெற்றுள்ளது. நாட்டை உருவாக்குவதில் பயனளிக்கும் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். திடநம்பிக்கை யுடன் கூடிய துணிவு இருக்கும்போது முன்னேற்றப் பாதையில் உள்ள இடையூறுகள் நீர்க்குமிழிகள்போல் மறைந்துவிடும். தற்காலிகக் கவர்ச்சி உங்களுடைய முன்னேற்றத்திற்கான பயணத்திலிருந்து உங்களைத் திசை திருப்பிவிடக்கூடாது. தற்காலிக லாபங்கள் சமதானத்திற்கும் வளர்ச்சிக்கும் அழைத்துச் செல்லாது' - கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. A. நாராயணன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(நாங்குநேரி தொகுதி)

தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளை என்னும் சிறு கிராமத்தில் பிறந்த கலைஞர் அவர்கள், தனது 14 வயதிலேயே பல்வேறு சமூக இயக்கங்களில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டு அரசியலில் நுழைந்தவர். தமிழகத்தில் இந்தித் திணிப்புக்கு எதிரான பல்வேறு போராட்டங்களுக்கு மூல காரணமாக இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இவர் துவங்கிய முரசொலி பத்திரிகை பின்னாளில் தி.மு.க. கட்சியின் அதிகாரப்பூர்வ பத்திரிகையானது.

இவர் பள்ளிப்படிப்பை திருக்குவளையிலும், பின்னர் திருவாரூரிலும் பயின்றார். இளம் வயதில் பல்வேறு தமிழ் தலைவர்களின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். இவரால் துவங்கப்பட்ட மாணவநேசன் என்னும் இதழ், தற்போது முரசொலி என்னும் நாளிதழாக உருவெடுத்துள்ளது. டாக்டர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக சுமார் 50 ஆண்டுகள் பதவி வகித்தார். தமிழகத்தின் முதல்வராக நான்கு சகாப்தங்களில் ஐந்து முறை பதவி வகித்துள்ளார். 1957–லிருந்து 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இவர், இதுவரை தோல்வியடைந்ததே இல்லை. 1971 மற்றும் 2006 என இருமுறை கவுரவ டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் 1969 முதல் 2018 வரை பதவி வகித்துள்ளார். 1969, 1971, 1989, 1996, 2006 என ஐந்து முறை தமிழக முதலமைச்சராகப் பணியாற்றினார். தமிழ்த் திரையுலகில் கதை, உரையாடல் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். 'தூக்குமேடை' நாடகத்தின் போது திரு. எம்.ஆர். ராதா, இவருக்கு, 'கலைஞர்' என்ற பட்டம் அளித்தார். இவர் முத்தமிழறிஞர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இவர் 75 திரைப்படங்களுக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கிறார். 15 நாவல்களையும், 20 நாடகங்களையும், 15 சிறுகதைகளையும், 210 கவிதைகளையும் படைத்துள்ளார். மேலும் "நண்பனுக்கு", "உடன்பிறப்பே" என்னும் தலைப்புகளில் 7000–க்கும் மேற்பட்ட மடல்களை எழுதியிருக்கிறார்.

கரிகாலன் என்னும் பெயரில் கேள்வி–பதில் எழுதியிருக்கிறார். இவை தவிர தாம் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்களை எழுதியிருக்கிறார். இவரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கின்றன. முத்துவேல் கருணாநிதி என்ற எழுத்துக்கள் வெறும் பெயர் மட்டுமல்ல, அது ஓர் அடையாளம், ஒரு தலைமுறையின் சாட்சி, பல சந்ததி எழுச்சியின் திறவுகோல்; இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர், 13 முறை சட்டமன்ற உறுப்பினர் என தமிழ்நாட்டின்

ஒரு தலைமுறை மாற்றத்திற்கே வித்திட்ட ஒரு சில தலைவர்களில் முக்கியமானவர் கலைஞர் என்றால் மிகையாகாது. தன்னுடைய அரசியல் எதிரிகள் கூட தன்னை விரும்பும் வண்ணம் மொழியாலும், ஆளுமைத் திறனாலும் புலமை படைத்தவர் கலைஞர் அவர்கள்.

மனிதர்களை மனிதனே இழுத்துச் செல்லும் வகையிலான கை ரிக்ஷாக்கள் அப்போது அதிகளவில் இருந்தன. மனிதனை மனிதனே மாடு போல இழுத்துச்செல்வது சுயமரியாதைக்கு இழுக்கு என்பதால் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டன. இந்தியாவுக்கே முன்னோடியாக அமைந்த தமிழகத் திட்டங்களில் இதுவும் ஒன்று. குடிசைகளில் வாழ்வோருக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தருவதற்காக குடிசை மாற்று வாரியம் என்ற அமைப்பை கலைஞர் அவர்கள் தொடங்கினார். இதன்மூலம் பெருநகரங்களில் குடிசைகள் அகற்றப்பட்டு, அங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்பட்டன. இத்திட்டமும் இந்திய அளவில் முன்னோடித் திட்டம்தான்.

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களே தேசியக் கொடியை ஏற்றும் உரிமையுடையவர்களாக இருந்தனர். தேசிய அளவில், சுதந்திர தினத்தில் பிரதமரும், குடியரசு தினத்தில் ஜனாதிபதியும் கொடியேற்றும் உரிமையுடையவர்களாக இருக்கும்போது, மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தலைமை வகிக்கும் முதல்வர்களுக்கு கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இதனால், 1972 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் வெள்ளி விழாவையொட்டி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர தினத்தில் அந்தந்த மாநில முதல்வர்கள், தலைமைச் செயலகத்தில் கொடியேற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது; இந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர்.

அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து, பார்வையற்றோருக்கு அறுவை சிகிச்சை செய்து கண்ணாடிகள் வழங்கும் கண்ணொளித் திட்டம், பிச்சைக்காரர்கள் மற்றும் தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்காக இரவலர் இல்லங்கள் அமைத்தார்.

இந்தியாவிலேயே முதன்முறையாக கோவையில் வேளாண் பல்கலைக்கழகம், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கென தனி அமைச்சரவை, நில உச்சவரம்புச் சட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம், உயர் படிப்பு வரை மாணவர்களுக்கு இலவசக் கல்வி, விதவைகள் மறுமணத்திற்கு நிதியுதவி, சாதி மறுப்பு மணத் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகை ஆகியவை 1969 முதல் 1976 வரையிலான கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசின் முற்போக்குத் தன்மை கொண்ட முக்கியமான மக்கள் நலத் திட்டங்கள் ஆகும். சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாசன வசதிக்காக மின்மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் 1989–ல் நடைமுறைக்கு வந்தது.

1989–ல் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு உண்டு என்ற சட்டம் தமிழகத்தில் கொண்டு வரப்பட்டது. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் கல்வி, வேலைவாய்ப்புகளைப் பெற்று உயர்வதற்காக தமிழகத்தில் நிலவி வந்த இடஒதுக்கீட்டு அளவை 69 சதவீதமாக உயர்த்தியது, டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30%, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20%, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18%, பழங்குடியினருக்கு 1% என 69% இடஒதுக்கீடு 1989 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

1989 ஆம் ஆண்டு தர்மபுரியில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முதன்முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டன. பெண்கள் ஒருங்கிணைந்து சுயதொழில் வாய்ப்பைப் பெருக்கும் இத்திட்டம் இன்று மாநிலம் முழுவதும் பெரும் வளர்ச்சி கண்டு பெண்களை தற்சார்பு கொண்டவர்களாக மாற்றியுள்ளது. சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகைத் திட்டம், அரசு நிறுவனங்களின் பணியிடங்களில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு ஆகியவை இந்த 2 ஆண்டுகால ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களாகும்.

தமிழக முதல்வராக 1996 ஆம் ஆண்டில் நான்காம் முறையாகப் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் மற்றொரு புரட்சிகர திட்டத்தையும் அமல்படுத்தினார். மெட்ராஸ் என்று ஆங்கிலத்திலும் ஏனைய அன்னிய மொழிகளிலும் அழைக்கப்பட்டு வந்ததை மாற்றி, சென்னை என அனைத்து மொழிகளிலும் அழைக்கும்படி பெயர் மாற்றம் செய்தார். விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருளை அவர்களே சந்தையில் விற்று நேரடியாகப் பலன் பெறும் வகையில் உழவர் சந்தைகளை தமிழகத்தின் பல பகுதிகளிலும் திறந்து வைத்தார், டாக்டர் கலைஞர் அவர்கள்.

தமிழர்கள் என்ற உணர்வை மறந்து சாதிவாரியாக மக்கள் பிரிந்திருப்பதைப் போக்க வேண்டும் என்பதற்காக, தமிழகத்தில் 100–க்கும் மேற்பட்ட இடங்களில் சமத்துவபுர குடியிருப்புகளைத் திறந்து வைத்தார். பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டுடன் தமிழகம் முழுவதும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. குக்கிராம மக்கள் எளிதில் சுற்றியுள்ள நகரப் பகுதிகளை அடைவதற்கு வசதியாக தனியார்மூலம் சிற்றுந்துகள் இயக்கும் திட்டத்தை தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்தியது. பள்ளி மாணவர்கள் தங்கள் கல்விக்காகப் பயணம் செய்வது சுமையாக இருக்கக்கூடாது என கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழகத்தில்தான் இப்படி முதல் முறையாக கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. பல கிராமப்புற ஏழை மாணவர்கள் இதனால் கல்வி பயின்று இன்று, நல்ல நிலைக்கு வந்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று தமிழகத்தின் முதல்வராக ஐந்தாவது முறையாகப்

பொறுப்பேற்றார் கருணாநிதி. 2006 மே 13 ஆம் நாள் பதவியேற்பு விழா நடந்த மேடையில் வைத்தே, தனது தேர்தல் வாக்குறுதிப்படி 1 கிலோ அரிசி 2 ரூபாய், விவசாயிகளின் கூட்டுறவுக்கடன் 7000 கோடி ரூபாய் தள்ளுபடி, சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முட்டைகள் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தினார்.

தேர்தல் வாக்குறுதியின்படி, குடும்ப அட்டை உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விறகு அடுப்பு, மண்ணெண்ணெய் அடுப்பு இவற்றைப் பயன்படுத்தும் ஏழைப் பெண்கள் படும் அவதியைத் தவிர்க்கும் விதத்தில், அவர்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என ஐ.நா.மன்றம் வழிகாட்டியிருப்பதை இந்தியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுத்தியிருக்கும் மாநிலம் தமிழகம்தான்.

அண்ணா நூற்றாண்டு தொடக்க தினமான 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் 1 கிலோ அரிசி 1 ரூபாய் என்ற விலையில் மாதம் 20 கிலோ அரிசி நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகிறது. இதன் மூலமாக, பட்டினிச்சாவு இல்லாத மாநிலமாக தமிழகம் மாறியுள்ளது. மனோன்மணியம் பெ. சுந்தரனார் எழுதிய 'நீராருங் கடலுடுத்த' என்ற தமிழ் வாழ்த்துப் பாடலை அரசு மற்றும் கல்வி நிகழ்வுகளில் பயன்படுத்த ஆணை பிறப்பித்தார் கலைஞர் அவர்கள்.

தமிழ்மொழியின் மேன்மையை போற்றும் வகையில் இன்றளவும் இந்தப் பாடல் தமிழ்நாட்டில் விழாக்களில் பாடப்படுகிறது.

குடிசைகள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்பது கலைஞரின் இலட்சியம். இந்தியாவிலேயே முதன் முறையாகக் கலைஞரின் ஆட்சியில் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப்பட்டது. குடிசை வாழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் குடிநீர், வடிகால் அமைப்புகள், மின்வசதி போன்ற உட்கட்டமைப்புடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் உருவாக்கித் தரப்பட்டன.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையை எழுப்ப முன்மொழிந்து 2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. 133 அடி உயரமான தலைசிறந்த இப்படைப்பானது புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக மாறியுள்ளது. நற்பண்புகளைக் குறிக்கும் திருக்குறள் வாசகங்கள் அடங்கிய 38 அடி பீடத்தில் சிலை உள்ளது. தமிழர் பெருமையின் அடையாளமாக கலைஞர் கற்பனை செய்த சிலை, இன்று ஒரு சிறந்த சின்னமாகத் திகழ்கிறது.

'வருமுன் காப்போம் திட்டம்' கிராமப்புறங்கள், குடிசைப்பகுதிகள் மற்றும் பின்தங்கிய சமூகங்களில் சுகாதார முகாம்களை ஏற்பாடு செய்வதில் கவனம் செலுத்தியது. அவர்களுக்கு மருத்துவ சேவைகள், பரிசோதனைகள்,

சிகிச்சைகள், இலவச மருந்துகள் வழங்கப்பட்டன. நகர்ப்புற–கிராமப்புற சுகாதார இடைவெளியைக் குறைப்பதன் மூலம், தனியார் பராமரிப்புக்கான தேவை குறைந்தது.

கலைஞரின் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம் நதிகளை இணைத்து, தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கியது. பட்ஜெட்டில் ரூ.369 கோடி மதிப்பீட்டில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தியது; இது விவசாயத்தை மேம்படுத்தியது. சீரான நீர் விநியோகத்தை உறுதி செய்தது மற்றும் தமிழ்நாட்டின் கிராமப்புற வளர்ச்சியை ஆதரித்தது.

தமிழ்நாட்டில் திருமண உதவித் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியை கலைஞர் அதிகப்படுத்தினார். திருமணத்தை கவுரவமாக நடத்த ஏழைப்பெண்களுக்கு ரூ.25 ஆயிரம் திருமண உதவித்தொகை வழங்கப்பட்டது. கலைஞர் அனைத்து சாதிகளிலிருந்தும் அர்ச்சகர்களை அனுமதிக்கும் சட்டத்தை இயற்றினார். பல்வேறு பின்னணியில் இருந்து 216 தனிநபர்கள் பயிற்சி பெறவும் அர்ச்சகர் பணியைத் தொடரவும் உதவினார். சமூகத்தின் ஆன்மீகக் கட்டமைப்பிற்கு பங்களிப்பதற்கும், சமூக நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும், இந்த முயற்சி விளிம்புநிலை சமூகங்களுக்கு அதிகாரமளித்தது.

நகரின் தண்ணீர்ப் பற்றாக்குறையை சமாளிக்க சென்னை மீஞ்சூரில் "கடல் நீரை குடிநீர் ஆக்கும் திட்டத்தை" 2010 ஜூலையில் கலைஞர் அவர்கள் தொடங்கினார். இந்தப் புதுமையான திட்டமானது கடல் நீரை உப்பு நீக்கம் செய்து, நிலையான குடிநீர் ஆதாரத்தை வழங்குகிறது. மக்கள் எதிர்கொள்ளும் தண்ணீர் பற்றாக்குறை சவாலை திறம்பட தணிக்கிறது.

ஜப்பான் சர்வதேச கூட்டுறவு வங்கியின் ஆதரவுடன் "மெட்ரோ இரயில் திட்டத்தை" கலைஞர் அவர்கள் தொடங்க வழி வகுத்தார். ரூ.14,600 கோடி செலவில், தமிழகத்தில் நவீன மெட்ரோ நெட்வொர்க்கை உருவாக்குவது, இணைப்பை மேம்படுத்துவது மற்றும் போக்குவரத்தை எளிதாக்குவது, மாநில வளர்ச்சிக்கான ஒரு சிறந்த நடவடிக்கையாகும்.

தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டின் ஆழமான சாரத்தைக் கொண்டாட அறிஞர்கள், ஆர்வலர்கள் மற்றும் கலைஞர்களை ஒன்றிணைக்கும் வகையில், 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடந்தது. இலக்கியம், இசை, நடனம், கலை ஆகியவற்றில் தமிழ்ப் பாரம்பரிய மரபுகளை வெளிப்படுத்தும் விவாதங்கள், விளக்கக்காட்சிகள் இடம்பெற்றன.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

கேட்கும் காதுகள் !

திரு. எம்ஜிகே. நிஜாமுதீன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(நாகப்பட்டினம் தொகுதி)

1996–ல் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, நான் தமிழக சட்டமன்றத்தில் ‘‘மாண்புமிகு முதல்வர் அவர்களே, தமிழகத்திற்கே நீங்கள் முதல்வரானாலும், உங்களுக்கு நான்தான் சட்டமன்ற உறுப்பினர் என்பதை பெருமையோடு நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்’’ என்று உரை நிகழ்த்தினேன்.

பலருக்கும் இதன் பொருள் புரியாத நிலையில் சுதாரித்து புரிந்துகொண்ட கலைஞர் அவர்கள் மனம்விட்டு சிரிக்கலானார்கள். ஆம், அவர் பிறந்த திருக்குவளை அப்போது எனது தொகுதியான நாகைக்கு உட்பட்டது. அந்த வகையில் முதல்வருக்கும் சட்டமன்ற உறுப்பினர் நான் என்ற தலைக்கணம் எனக்கு உண்டு. அதனால் அவருக்கும் என்மீது தனிப்பட்ட பிரியம் உண்டு. அதுமட்டுமல்ல அவருடைய இளம் வயதில், புலவர் ஆபிதீன் அவர்களைச் சந்திப்பதற்காக நாகூருக்கு வருவார். நாகூர், கௌதியா சங்கத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் வருகைக்காக அவருடைய வருகை ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக முதல் நாளே வந்த கலைஞர் அவர்கள் அன்று இரவு சங்கத்தின் பக்கத்தில் உள்ள எனது பூர்வீக வீட்டில் தங்கினார். அந்தப் பெருமையும் எனக்கு உண்டு. இந்நிலையில் நான் சட்டமன்ற உறுப்பினராக 28 வயதில் பொறுப்பேற்றதிலிருந்து கலைஞரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பையும் பெற்று அன்றிலிருந்து அவருடைய ஒவ்வோர் அசைவையும் கவனிக்கலானேன்.

பொதுவாக காதுகள் கேட்பதற்குத்தான். ஆனால், காதுகள் இருக்கும் எல்லோரும் கேட்பதில்லை. அரசியலாகட்டும் அல்லது ஏனைய துறைகள் ஆகட்டும், அதில் உள்ள பெரியவர்கள் பெரும்பாலும் பிறர் சொல்வதைக் காது கொடுத்து கேட்பதில்லை. மாறாக, அவர்கள் சொல்ல நினைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அதற்குக் காரணம், தான் அனுபவசாலி என்றோ, அறிவாளி என்றோ, தனக்குத்தான் தெரியும் என்றோ அல்லது மற்றவர்களுக்கு தன்னை விட என்ன தெரியும் என்றோ நினைத்துக்கொள்வது. ஒருகால் இப்படி இல்லையென்றால், பிறர் சொல்வதை அமைதியாக கேட்கக்கூடிய பொறுமை இல்லாமல் இருப்பது. இப்படி பலருக்கும் பக்குவமற்ற தன்மை உண்டு. ஆனால், கலைஞர் அப்படி அல்ல. யார் என்ன சொன்னாலும், அதை ஆழ்ந்து கவனித்து கேட்கக்கூடியவர்.

ஒரு முறை சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளில் விவாதம் நடைபெறும்போது பெரும்பாலான அமைச்சர்கள், உறுப்பினர்கள் அவையில் இருப்பதில்லை. அன்று பேச வாய்ப்பு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர பெரும்பாலான உறுப்பினர்கள் வெளியே சென்றுவிடுவார்கள். அவ்வாறான சூழ்நிலையில் அன்றைய விவாதத்தில் அதிகம்

பேசத்தெரியாத ஓரளவு மட்டுமே விஷயம் தெரிந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார். அவருடைய பேச்சு மிகவும் சலிப்பு ஏற்படுத்தியும், விஷயமில்லாத பேச்சாகவும் இருந்த காரணத்தினால் அதை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில், அவையில் அமர்ந்திருந்த முதல்வர் கலைஞர் அவர்களிடம் அவர் சும்மா இருக்கிறார் என்று எண்ணி நான் ஒரு மனுவைக் கொடுக்க அதை கையில் பெற்றுக்கொண்ட கலைஞர் அவர்கள் கொஞ்சம் இருங்கள், அவர் பேசிக்கொண்டிருக்கிறார், அருகில் உள்ள இருக்கையில் அமருங்கள் என சைகையில் உணர்த்தினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த உறுப்பினர் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார், இதில் முதல்வர் என்ன கவனித்துக்கொண்டிருக்கிறார் என்று நினைத்தேன். மாறாக, அந்தப் பேச்சிலும் கலைஞர் அவர்கள் ஒரு பொறியைக் கண்டுபிடித்து சட்டமன்றத் தொடரின் இறுதிநாள் பதிலுரையில் மறக்காமல் அதைக் குறிப்பிட்டார்.

அதுபோல் ஒரு நாள் ஓர் உறுப்பினர், தனது தொகுதியில் மருத்துவ குணம் வாய்ந்த மூலிகை கிடைப்பதாகவும், அதைக் கொண்டு பல் துலக்கினால் நூறு ஆண்டுகளுக்கு பல் விழாது என்றும், அந்த மூலிகையைக் கொண்டு பல்பொடி தயாரிக்கும் தொழிற்சாலையை தனது தொகுதியில் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு உறுப்பினர் தன் தொகுதியிலும் அதேபோன்று மூலிகை இருப்பதாகவும் அதைக் கொண்டு பல் துலக்கினால் பல நூறு ஆண்டுகளுக்கு விழாது என்றும், ஆகவே தன் பகுதியில் இருப்பதுதான் சரியான மூலிகை என்றும், பல்பொடி தொழிற்சாலையை தன் பகுதியில் அமைக்க வேண்டுமென்றும் அவர் போட்டி வேண்டுகோள் விடுத்தார். இதேபோல் மேலும் இரு உறுப்பினர்களும் இதேபோல் போட்டி கோரிக்கை வைத்தனர். அப்பொழுது நாங்கள் அலுத்துப் போய் என்ன இப்படி பேசுகிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். அப்பொழுது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுந்து பல் நூறு வருடம் விழாது என்பது இருக்கட்டும், 100 வருடம் வாழ என்ன மூலிகை இருக்கிறது என்று பார்த்துச் சொல்லுங்கள் என்றார்; மன்றமே சிரிப்பொலியில் அதிர்ந்தது.

ஒரு நாள் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரிடம் நான் ஒரு கேள்வி எழுப்பினேன். பரத மன்னர் காலத்தில் நாட்டியம் வந்தது என்கிறார்கள், பரத மன்னர் காலமோ சுமார் 5,000 ஆண்டுகள் தாண்டியது என்கிறார்கள். ஆனால் முத்தமிழான இயல், இசை, நாடகத் தமிழ் இதுவும் 5,000 ஆண்டுகள் தாண்டிய பழமையானது. இதில் நாட்டியம் நாடகத்தோடு சேர்ந்திருக்கிறது. இங்கே என்னுடைய கேள்வி என்னவென்றால் நாட்டியத்திலிருந்து நாடகம் வந்ததா? நாடகத்திலிருந்து நாட்டியம் வந்ததா என்று கேட்டேன். இதற்கு பதில் சொல்வதற்கு அமைச்சர் தமிழ்க்குடிமகன் யோசித்துக்கொண்டிருந்த வேளையில் சட்டென எழுந்த முதல்வர்

அவர்கள் கோழியிலிருந்து முட்டை வந்ததா? முட்டையிலிருந்து கோழி வந்ததா? என்பதற்கு விடை தெரிந்தால் நிஜாமுதீன் கேள்விக்கு விடை கிடைக்கும் என்றார். அவை வியந்து மேஜையை தட்டியது.

ஒரு நாள் எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவையில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது அவையில் முதல்வர் இல்லை, அலுவல் நிமித்தமாக முதல்வர் அறைக்குச் சென்றுவிட்டார். முதல்வரிடம் கோரிக்கை இருக்கிறதே, முதல்வர் அவையில் இல்லை என்ற கவலையோடு பேசிக்கொண்டிருந்தேன். அப்போது முதல்வரிடமிருந்து ஒரு துண்டுச் சீட்டை அவர் உதவியாளர் கொண்டு வந்து அவை முன்னவரும், கல்வி அமைச்சருமான பேராசிரியர் அன்பழகன் அவர்களிடம் கொடுத்தார். அதைப் பெற்ற பேராசிரியர் அவையில் எழுந்து சொன்னார், அலுவல் காரணமாக முதலமைச்சர் தன்னுடைய அறையில் இருந்தாலும் இங்கே பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் எம்ஜிகே. நிஜாமுதீன் இவ்வவையில் பேசியதைக் கேட்ட முதல்வர் அவர்கள் அவரது கோரிக்கையை ஏற்று திருச்சி வேளாண்மைக் கல்லூரிக்கு அன்பில் தர்மலிங்கம் பெயரை மீண்டும் சூட்ட உத்தரவிடுவதாக அறிவிக்கச் சொல்லியிருக்கிறார் என்று அறிவித்தார். நான் மெய்சிலிர்த்துப் போனேன். சட்டமன்ற கட்டடத்தில் உள்ள ஒவ்வோர் அறையிலும் சட்டமன்றத்தில் நடைபெறும் உரையாடலைக் கேட்க ஒலிபெருக்கி வசதி செய்யப்பட்டிருக்கும், இது பெரும்பாலும் அணைத்து வைக்கப்பட்டிருக்கும். ஆனால், கலைஞர் அறைக்குச் சென்றவுடன் அதை இயக்கி சட்டமன்ற உரையாடலை கேட்டுக்கொண்டே அலுவலைப் பார்ப்பாராம்; வியக்கத்தக்க கவனிக்கும் திறன்.

இப்படி அடுக்கிக்கொண்டே போக முடியும். யார் என்ன பேசினாலும், கூர்ந்து கவனித்து, கேட்டு உள்வாங்கி அதையும் தன்வசப்படுத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார். இதன் விளைவு சட்டமன்றத்தில் முதல்வரே கவனித்து பதில் கொடுக்கிறார் என்ற உற்சாகத்தில் பலரும் நல்ல விஷயங்களைப் பேசவேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. இதனால் ஆரோக்கியமான கருத்து பரிமாற்றம், சொல்வளம், சொல்சாதுர்யம், சமயோஜிதம், இலக்கிய நயம், ஈர்ப்பு இப்படி ஆரோக்கியமாக சபை நடைபெற நல்ல சூழ்நிலை ஏற்பட்டது.

இத்தகைய பொறுமையான, சளைக்காத கேட்கும் திறன்தான் கலைஞரின் வெற்றிக்கு வித்து. அதனால்தான் அவரது காதுகளை கேட்கும் காதுகள் என்றேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

செல்வி பாலபாரதி,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(திண்டுக்கல் தொகுதி)

சட்டமன்ற நாயகர் டாக்டர் கலைஞர் அவர்கள்

முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் 2006–ல் பதவியேற்றிருந்த அக்காலகட்டத்தில் சி.பி.எம். சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மிகவும் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயமாக நான் கருதுவது அவரது நேரமேலாண்மைதான். மிகச்சரியாக சட்டமன்றம் காலை 9–30 மணிக்கு துவங்குகிற நேரத்தில் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பார். ஒருநிமிடம்கூட அவர் தாமதித்து வந்ததில்லை. கேள்வி நேரத்தில் அவரது பங்கேற்பு சபையை உற்சாகமூட்டி கலகலப்பாக்கிவிடும்.

ஒவ்வொரு துறைசார்ந்த உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அதற்கான பதில்களை அமைச்சர்கள் வழங்கினாலும் முதலமைச்சர் என்ற முறையில் பொருத்தமான நேரத்தில் தலையீடு செய்து பதில்களை வழங்குவார்.

ஒருமுறை மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தோழர் நன்மாறன், 'தகவல் தொழில்நுட்பப் பூங்கா மதுரைக்கு வருவதாக வாக்குறுதி அளித்தீர்கள், அது என்ன நிலையில் இருக்கிறது?' என்று கேள்வியை கேட்டபோது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சற்றும் தாமதிக்காமல், "அது அரும்பும் நிலையில் இருக்கிறது" என்று பதில் அளித்தார்.

எதிர்க்கட்சியினர் சூடான கேள்விகளைக் கேட்டாலும் அதற்கு சுவையான பதில்களை சாதுரியத்தோடு வழங்கி சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பார்.

கூட்டுறவுத் தேர்தல் அறிவிப்பு செய்த காலகட்டத்தில் திண்டுக்கல் அருகில் இருந்த கூட்டுறவுச் சங்கத்தில் எதிர்க்கட்சியினர் வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்வதை கண்டித்து நாங்கள் ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தோம். மறியல் என்பதால் மண்டபத்திற்கு காவல் துறை வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டோம். அப்போது காவல் துறை பரபரப்பானது. அதிகாரியின் கைப்பேசியில் முதலமைச்சர் அழைத்துள்ளார் என்ற செய்தியறிந்தோம். கைப்பேசியை வாங்கி பேசியபோது, ஆச்சரியம். முதலமைச்சரின் குரல்தான் அது. என்ன நடந்தது என்று அவர் கேட்க, முதலமைச்சரே தொலைபேசியில் பேசுகிறாரே என்று அதிர்ச்சியில் இருந்து மீள சற்று நேரம் ஆன நிலையில், நடந்த விவரங்களை அவரிடம் தெரிவித்தேன். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.இங்குதேர்தல்மீண்டும்ஒத்திவைக்கப்பட்டு அனைத்துக் கட்சியினரின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்ட பிறகு தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை தெரிவித்தேன்.

அதன் பின்னால் அடுத்த நாளே மாநிலம் முழுவதும் கூட்டுறவுத் தேர்தல்

ஒத்திவைக்கப்படுவதாக அறிவிப்பு வந்து மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. போராட்ட நேரத்திலேயே ஒரு மாநில முதலமைச்சர் பேசுவது என்பதெல்லாம் மிகப்பெரிய அதிசயமாக விளங்கியது.

அதற்கும் மேலாக அவர் உடனடியாக பல இடங்களில் இருந்து செய்திகளைப் பெற்று தேர்தலையே தள்ளி வைத்தது மிக முக்கிய நடவடிக்கையாக இருந்தது. எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை உடனடியாகக் கேட்டறிந்து நடவடிக்கை எடுத்தது கலைஞரின் தனித்துவமான அரசியல் பண்பையும் நேர்மையையும் எடுத்துக்காட்டியது.

பெண்கள்மீதான அனைத்து வன்முறைகளையும் தடுத்து நிறுத்த மாநில அரசு மகளிர் ஆணையம் ஒன்றை அமைத்திருந்தது. அந்த ஆணையத்திற்கு சட்டரீதியான அந்தஸ்தும் அதிகாரமும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை சட்டமன்றத்தில் முன்வைத்தபோது, அதற்கான மசோதாவை கொண்டுவந்து, ஏகமனதாக நிறைவேற்றி, அந்த மகளிர் ஆணையம் சட்டப்பூர்வமாக்கப்பட்டது கலைஞர் ஆட்சியில்தான்.

பெண் கல்விக்கான உதவித்தொகையை உயர்த்தியது மற்றும் சிறுபான்மை முஸ்லிம் சமுதாயத்தின் பெண் குழந்தைகள் கல்விக்காக அரசின் உண்டி உறைவிட விடுதிகள் கலைஞர் ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டன. அக்கோரிக்கையை சிபிஎம் சார்பில் சட்டமன்றத்தில் எழுப்பியதால் திண்டுக்கல் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் முஸ்லிம் மாணவிகளுக்கான அரசு விடுதிகளை அறிவித்தார்.

முதியோர் விதவை பெண்களுக்கான உதவித் தொகை பெறுவதில் ஆண் வாரிசு இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படாது என்ற நிபந்தனை பல்லாண்டு காலமாக பெரும் தடைக்கல்லாக இருந்து வந்தது. அதனைச் சுட்டிக்காட்டி சட்டமன்றத்தில் பேசிய கருத்துகளையும் விவாதங்களையும் கவனித்துக் கொண்டிருந்தார் முதல்வர் கலைஞர் அவர்கள்.

ஆண் வாரிசு இருந்தாலும் அவர்களின் வறுமை, ஆதரவற்ற நிலைமை, வயதின் மூப்பு இவைகளை மட்டுமே நிபந்தனையாகக் கொண்டு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்ற மாற்றத்தை அரசாணையின்மூலம் கலைஞர் கொண்டுவந்தார்.

அரசுப் புறம்போக்கு இடங்களில் ஐந்து ஆண்டுகளுக்குமேல் குடியிருந்தால் அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை சட்டமன்றத்தில் முன்வைத்தபோது உடனடியாக கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. திண்டுக்கல்லில் மட்டுமே 4,000 குடியிருப்பினருக்கு பட்டா வழங்கப்பட்டது. மற்ற மாவட்டங்களிலும் அரசாணை பிறப்பிக்கப்பட்டு ஏழை மக்களின் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கப்பட்டது.

25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வீடுகளை விலைக்குப் பெற்ற நடுத்தர மக்கள், நலிவடைந்த மக்களுக்கு பத்திரங்கள் வழங்கப்படாத நிலைமை நீடித்து வந்தது. அதனைச் சுட்டிக்காட்டி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தோழர் என். வரதராஜன் அவர்கள் மாநில முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நேரடியாக சந்தித்து விளக்கிக் கூறினார்கள்.

அதுகுறித்த விவரங்கள் அனைத்தையும் பெற்ற கலைஞர் அவர்கள், 2010–ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நிலவி வந்த அனைத்து குறைபாடுகளையும் சரிசெய்து, வீட்டுப் பத்திரங்கள் வழங்க உத்தரவிட்டார்.

மக்களின் பிரச்சினைகளை சபையில் எடுத்துக் கூறினால் அவை உடனடியாக தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையை கலைஞர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். அது ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை வளர்ப்பதற்கு அவர் ஆற்றிய அரிய பணி என்றே பார்க்கிறேன்.

அதன் தொடர்ச்சிதான் மதுரை மாவட்டம் உத்தப்புரத்தில் இருந்த தீண்டாமை சுவர் உடைக்கப்பட்ட அரசின் நடவடிக்கைகள் மற்றும் அருந்ததியர் மக்களுக்கான 3 விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றம் ஆகியவையாகும்.

கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மக்களுக்கான இன்னும் பல அரிய பணிகளை பட்டியலிட முடியும்.

எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய, முன்வைத்த மக்கள் கோரிக்கைகளை எதிர்க்கட்சி என்பதற்காகவே புறக்கணிப்பு செய்யாமல் அதனை மக்களின் நலனுக்காக நிறைவேற்றியவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை அனுபவத்தின் வாயிலாக மேற்காணும் உண்மைகளை கூறியுள்ளேன்.

எதிரும் புதிருமான கருத்துகளோ தத்துவங்களோ ஜனநாயக அரசமைப்பில் இருக்கலாம். ஆனால், மக்கள் பணியில் அந்த வேறுபாடுகளை பொருட்படுத்தாமல் அனைவரையும் அரவணைக்கிற ஆளுமையும், தலைமைப் பண்பும் கலைஞர் அவர்களிடத்தில் உயர்ந்த பண்பாகவும், செயல்களாகவும் இருந்தன என்பதை நேரில் கண்டறிந்தோம்.

அதனால்தான் அவர் ஆறு முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், சட்டமன்றத்தின் நாயகராகவும் விளங்குகிறார். பன்முகத் திறமைகளைப் பெற்றிருந்தார். கலை, இலக்கியம், அரசியல், வரலாறு என அவர் எந்தத் துறைகளையும் விட்டுவைக்கவில்லை. அனைத்துத் துறைகளிலும் ஆற்றல்மிக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரியின் கடலலைகளால்கூட தொடமுடியாத உயரத்தில் அவரால் நிறுவப்பட்ட திருவள்ளுவரின் சிலை ஒன்றே போதும். . . அவரது மதச்சார்பற்ற தொலைநோக்குப் பார்வையின் உயரத்திற்கு சான்றளிக்கும்.

அத்தகைய வரலாறு படைத்த வரலாற்று நாயகரின் நூற்றாண்டை முன்னிட்டு அவரது நினைவுகளை இங்கே பதிவு செய்வதில் உளப்பூர்வமாக பெருமை அடைகின்றேன்.

கலைஞர் அவர்களின் இந்த நூறாண்டு என்பது வரலாற்றில் நிலைத்த பல நூற்றாண்டுகளாக தொடரட்டும்...!

மாண்புமிகு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசு கொண்டுவர இருக்கும் கலைஞர் நூற்றாண்டு மலர் திக்கெட்டும் சிறக்கட்டும்...!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(கடையநல்லூர் தொகுதி)

கலைஞர் எனும் **"மனித அதிசயத்தின்"** அத்தனை பரிணாமங்களையும் முழுக்க அறிந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேதான் இருக்க முடியும். அவரது எண்பதாண்டு கால பொதுவாழ்வு என்பது, அரசியல் பணியோடும், அரசுப் பணியோடும் மட்டுமே முடிந்துவிடவில்லை. அதனையும்தாண்டி அவர் ஒரு மாபெரும் மனித விஞ்ஞானி, பிரம்மாண்டமான சிந்தனைக் கருவூலம், அற்புதமான படைப்பாளி.

தமிழ்ச் சமூகத்தைப் புரட்டிப்போட்ட சீர்திருத்தச் செம்மல்; எதிர்முகாமில் இருப்பவர்களை நிலைகுலையச் செய்யும் களப்போராளி; பேச்சிலும், எழுத்திலும் வித்தகர்; பட்டங்கள் பெறாத பல்கலைக்கழகம்; ஓய்வறியா உழைப்பாளி; அசாத்தியமான நினைவாற்றல்; ஆற்றல் நிறைந்த சுறுசுறுப்பு... இப்படி கலைஞரின் பன்முக ஆளுமையை நாள் முழுவதும் சொல்லிக்கொண்டேயிருக்கலாம். ஆனால், இவையெல்லாவற்றிற்கும் மேலாக நான் கலைஞரிடம் கண்ட சிறப்பு, தமிழ்ச் சமூகத்தின்மீது அவர்கொண்டிருந்த அளவற்ற அன்பும், தமிழ்மொழியின்மீது அவர் கொண்டிருந்த தணியாத காதலும், விளிம்புநிலைச் சமூகத்தினர்மீதும், ஆதரவற்றவர்கள்மீதும், தங்களை தற்காத்துக்கொள்ள திராணியற்ற பலவீனர்கள்மீதும் அவர்கொண்டிருந்த தந்தைநிகர் கரிசனமும்தான்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழக அரசியல் களத்தை உள்ளிருந்தே பார்க்கும் வாய்ப்பினை இறைவன் அருளால் பெற்றவன் நான். பெருந்தலைவர் காமராசரின் காலடி நிழலில் துவங்கி, அன்னை இந்திரா காந்தி போன்ற தேசியத் தலைவர்களின் அருகில் நிற்கவும், அமரர் எம்.ஜி.ஆர்., செல்வி ஜெயலலிதா போன்ற தலைவர்களை பக்கத்தில் இருந்து பார்க்கவும், மக்கள் தலைவர் மூப்பனார் போன்ற மகத்தான மனிதரோடு அருகே இருந்து பணியாற்றவும் வாய்ப்பினைப் பெற்றேன். அவர்களோடு எல்லாம் நெருங்கிப் பணியாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்தேன். ஆனால் நான் பார்க்கவும், பழகவும் நினைக்காத ஒரு தலைவரைப் பார்க்க நேர்ந்ததும், பழக முடிந்ததும் நான் வாழ்க்கையில் பெற்ற பெரும் பாக்கியங்களுள் ஒன்று; அவர்தான் தலைவர் கலைஞர்.

ஏதாவது ஒரு வாய்ப்பில், வாழ்க்கையில் கலைஞரை ஒருமுறை சந்தித்த யாரும் அவரது தாக்கத்திலிருந்து தப்ப முடியாது. ஏதாவது ஒரு வகையில் நம்முள் அவர் நுழைந்துவிடுவார். அவரோடு நாம் நடத்திய உரையாடல் பல சமயங்களில் நமது சிந்தனை ஓட்டத்தையே மாற்றிய நிகழ்வுகளுமுண்டு. எதிர்முகாம்களில் இருப்பவர்கள் அவரது கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றாலும். அதனை ஒட்டுமொத்தமாக நிராகரிக்க முடியாத

சூழ்நிலையினை அவரது அணுகுமுறை உருவாக்கிவிடும். சட்டமன்ற விவாதங்களில் பலமுறை இத்தகைய அனுபவங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கும் அனைவருக்கும் ஏற்பட்டதுண்டு. ஆட்சி அதிகாரம் வாய்த்தபோதெல்லாம் விளிம்புநிலை மக்கள் மற்றும் வளர்ச்சி வட்டத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அவர் செலுத்திய கவனமும் முனைப்பும் எதிர்முகாமில் இருப்பவர்களையும் அவரது நிலைப்பாட்டினை ஏற்கச்செய்யும். பல நேரங்களில் எதிர்முகாம்களில் இருந்து வரும் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு தனது நிலைப்பாட்டினை விட்டுக்கொடுத்து, எதிர்க்கட்சியினர் தந்த ஆலோசனைகளை அப்படியே அரசின் அறிவிப்பாக வெளியிடுவார். அப்படி அறிவிக்கும்போது அந்த ஆலோசனைகளை தந்தவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுப் பெருமைப்படுத்துவார். மறுநாள் முரசொலியில் உடன்பிறப்புகளுக்கு மடல் வரைகின்றபோது, நல்ல ஆலோசனைகளைத் தந்த எதிர்க்கட்சி உறுப்பினரை மனம் நிறைய பாராட்டி எழுதுவார். இந்த அங்கீகாரத்தை அவையின் மூத்த உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது இளைய தலைமுறையைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் குறைவின்றி வழங்குவார். அவர் தரும் அந்த அங்கீகாரம் மறுநாள் நாளிதழ்களில் பெரிய செய்தியாக இடம்பெறும். இத்தகைய அங்கீகாரத்தை தலைவர் கலைஞரிடம் இருந்து பெற என்னைப்போன்ற இளம் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரிய தயாரிப்புடன் சட்டமன்றம் போவோம். எப்படியாவது கலைஞரின் கவனத்தினைப் பெற்றுவிடவேண்டும் என்பதில் முனைப்பாக இருப்போம். சட்டமன்றத்திற்கு நல்ல தயாரிப்புடன் வருகின்றவர்களை அவர் அடையாளம் கண்டு அவர்களை உற்சாகப்படுத்த அவர் எடுக்கும் முயற்சிகள் அவர்மீது நமக்கு அளவில்லாத மதிப்பையும் அன்பையும் தரும். ஒவ்வொரு கட்சியிலும் துடிப்பாக செயல்படுகின்ற உறுப்பினர்களை அவர் உற்சாகப்படுத்தி பெருமைப்படுத்துவதால் அத்தகைய சட்டமன்ற உறுப்பினர்களை மூத்த அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் கவுரவமாக நடத்துவர். சில சமயங்களில் அவர் நம்மீது காட்டுகின்ற பரிவும், பாசமும் நம்மை பிரமிக்கச்செய்யும்.

ஜூனியர் விகடன் பத்திரிகைக்காக, சட்டமன்ற நிகழ்வுகளைப்பற்றி நான் வாரம் இருமுறை தொடர் கட்டுரை எழுதி வந்தேன். கேள்வி நேரங்களில் அமைச்சர்கள் பதில் அளிக்கும் முறைகள், உறுப்பினர்களுடைய விவாதங்களைப்பற்றிய எனது மதிப்பீடுகள் மற்றும் சட்டமன்ற விவாதங்களின்போது தனிப்பட்ட முறையிலே அமைச்சர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நடந்த நட்புரீதியான உரையாடல்கள், சில நேரங்களில் ஒழுங்காக பதில் சொல்லாத அமைச்சர்களுக்கு அவை முடிந்த பின்னர் முதலமைச்சரிடம் கிடைத்த "அர்ச்சனை" என்று பத்திரிகைகளில் வெளிவராத பல செய்திகள் அக்கட்டுரையில் இடம்பெறும். அக்கட்டுரைகளுக்கு வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்தது. சில மூத்த அமைச்சர்களைப் பற்றியும், சில எதிர்க்கட்சி உறுப்பினர்களின் விவாதங்கள் பற்றியும் நான் எழுதியிருந்த குறிப்புகள்

சம்பந்தப்பட்டவர்களை மனம் வருத்தமடையச் செய்ததால் அவர்கள் எல்லோரும் உட்கார்ந்து பேசி, அவை உரிமைக் குழுவின்மூலம் என்மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தனர். அவை உறுப்பினர் ஒருவர் அவையின் நடவடிக்கைகளில் பங்கேற்கும் அதேவேளையில் ஒரு பத்திரிகையின் நிருபராகப் பணியாற்றலாமா என்றும், அப்படி பணியாற்றுவதற்காக அவைத் தலைவரின் அனுமதியினைப் பெற்றுள்ளாரா என்றும் பல பிரச்சினைகளை எழுப்பினர். பேரவைத் தலைவர் அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகள், கட்டுரைகளை எழுதிய என்மீதும், பிரசுரித்த ஜூனியர் விகடன் பத்திரிகைமீதும் நடவடிக்கை எடுக்க முகாந்தரமுள்ளது எனத் தெரிவித்துவிட்டனர். எனக்கு விளக்கம் கேட்டு அறிவிப்பு கொடுக்க ஏற்பாடுகள் நடப்பதை அறிந்த முதல்வர் கலைஞர் தன்னை கேட்காமல் எதுவும் செய்ய வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல் சொல்லிவிட்டு, அக்கோப்பு முழுவதையும் வாங்கிப் படித்துவிட்டு, முந்தைய இதழ்களையும் கொண்டுவரச் சொல்லி முழுமையாகப் படித்துவிட்டார். அந்தச் சமயத்தில் சட்டமன்றத்தில் காங்கிரஸ், தி.மு.க.–வை எதிர்த்துக் கடுமையாக விமர்சித்துக்கொண்டிருந்த நேரம். அதிலும் நான் நாள் தவறாமல் ஏதாவது பிரச்சினைகளைக் கிளப்பி சட்டமன்றத்தில் விவகாரம் செய்துகொண்டேயிருப்பேன். கலைஞர் நினைத்திருந்தால் என்மீது நடவடிக்கை எடுத்து என்னை அவையின் கூட்டங்களில் பங்கேற்காமல் செய்திருக்க முடியும். மறுநாள் சட்டமன்றம் சென்றபோது, கேள்வி நேரம் முடிந்தவுடன் முதலமைச்சர் அவரது அறைக்குச் சென்றார். சற்றுநேரம் கழித்து அவைக் காவலர் ஒருவர் முதலமைச்சரின் தனிச் செயலர் சண்முகநாதன் என்னைப் பார்க்க லாபியில் நிற்பதாகச் சொன்னார். வெளியே வந்தேன். அவர் முதலமைச்சர் என்னை அழைப்பதாகச் சொன்னார். சற்று அச்சத்துடன் அவரது அறைக்குச் சென்றேன். என்னை அருகில் அமரச் சொன்னார், அமர்ந்தேன். அவர் முன்பு உள்ள மேஜையில் சில ஜூனியர் விகடன் இதழ்கள் இருந்தன. எதற்காக அழைக்கப்பட்டேன் என்பதனைப் புரிந்துகொண்டேன். "சட்டமன்றத்தில் எப்படிப் பேசவேண்டும் என்று தெரிந்த உங்களுக்கு அவையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரியவில்லையே!" என்று சொல்லி சிரித்தார். அவர் என்மீது கோபமாக இல்லை என்பது மட்டும் எனக்குப் புரிந்தது. நான் பதிலேதும் சொல்லாமல் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். "சட்டசபையின் உறுப்பினர் ஒருவர் அவைத் தலைவர் அனுமதியில்லாமல் அவை நடவடிக்கைகள் பற்றி "running commentary" போல பத்திரிகைகளில் எழுதலாமா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார். "எனக்கு அதைப் பற்றித் தெரியாது. பத்திரிகை ஆசிரியர் கேட்டதால் ஒப்புக்கொண்டேன்" என்று சொன்னேன்.

"பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது கவனமாக இருக்க வேண்டும். இதைப்போன்ற "commitments" கொடுக்கும்போது சட்டமன்ற அனுபவம் உள்ளவர்களிடம் இப்படிச் செய்யலாமா என்று கேட்க வேண்டும்" என்று என்னைப் பார்த்துச் சொன்னார். "எனக்கு கேட்க

வேண்டும் என்று தோன்றவில்லை'' என்று சொன்னேன். சொல்லிவிட்டு, ''விதிகள் இதனை அனுமதிக்கவில்லையென்றால் உடனடியாக எழுதுவதை நிறுத்திவிடுகிறேன்'' என்று சொன்னேன். சற்று நேரம் யோசித்து விட்டு செயலாளரை அழைத்தார். ''சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்து பத்திரிகைகளில் கருத்து சொல்வது அல்லது எழுதுவது தவறு என்று தெளிவான விதி ஏதும் உள்ளதா?'' என்று கலைஞர் கேட்க, செயலாளர் ''அப்படி விதி ஒன்றும் இல்லை. ஆனால், உறுப்பினர்களின் அவை நடவடிக்கைகள் பற்றி விமர்சனங்களை எழுதினால் சம்பந்தப்பட்ட உறுப்பினர் உரிமைமீறல் பிரச்சினைகள் எழுப்புவதற்கு வாய்ப்புகள் உண்டு'' என்று தெரிவித்தார். செயலாளரை அனுப்பிவிட்டு என்னைப் பார்த்து கலைஞர் சொன்ன அறிவுரைகளை வாழ்வு உள்ளவரை மறக்க இயலாது. ''நீங்கள் நல்ல பேச்சாளர் என்று தெரியும். நல்ல எழுத்தாளரும்கூட என்று இப்போதுதான் தெரிந்துகொண்டேன். பேச்சைவிட எழுத்துக்கு வீரியம் அதிகம். எழுத்து நமக்குப் பின்னரும் நிற்கும். தொடர்ந்து எழுதுங்கள். எழுத, எழுத எழுத்து திருந்தும். இதைப்பற்றிய தகவல்கள் வந்தவுடன் உங்கள் கட்டுரைகளைப் படித்தேன். சட்டமன்ற நடவடிக்கைகளை நேரே பார்ப்பதுபோன்று சுவைபட எழுதியிருந்தீர்கள். உங்களது எழுத்து நடை எனக்கு மிகவும் பிடித்திருந்தது'' என்று கலைஞர் சொன்னபோது என்னையறியாமல் என் கண்களில் நன்றியின் கண்ணீர். என் தோளைத் தட்டி ''உங்கள் கட்டுரைகளைப் பற்றி வாசகர்கள் எழுதிய கடிதங்களைப் படித்தீர்களா?'' என்று கேட்டார். 'இல்லை' என்று சொன்னேன். ''அனைத்துத் தரப்பினரும் வரவேற்று எழுதியுள்ளனர்" என்று அவர் சொன்ன பின்னர்தான் வாசகர் கடிதங்களையும் வாரம்தோறும் படிக்கவேண்டும் என்று அறிந்தேன். ''ஒரு advice'' என்று கலைஞர் சொன்னதும் நான் பதறி எழுந்தேன். என் தோளைப்பிடித்துக்கொண்டே ''யாரைப் பற்றியும் negative comments எழுதாதீங்க. சபை நடவடிக்கைகளின் 'positive aspects'–ஐ மட்டும் highlight பண்ணுங்க. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நிறைய நண்பர்களை சம்பாதித்துக்கொள்ளுங்கள்'' என்று கலைஞர் சொன்னவுடனே, நான் கையெடுத்து கும்பிட்டுவிட்டு வெளியே வந்தேன். என் நெஞ்சமெல்லாம் கலைஞர் நிறைந்துவிட்டார்.

அக்காலகட்டத்தில் ஜூனியர் விகடன் பத்திரிகையில் நான் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழக அரசை கடுமையாகவிமர்சனம்செய்தேஎழுதப்பட்டிருந்தன. கலைஞர் அன்று என்னிடம் இனிமேல் எழுத வேண்டாம் என்று சொல்லியிருந்தால், நான் எழுதுவதை நிறுத்தியிருப்பேன். அன்றையதினம் ஒரு எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த என்னைப் பாராட்டி மேலும் தொடர்ந்து எழுதுங்கள் என்று உற்சாகப்படுத்த வேண்டிய அவசியம் முதலமைச்சராக இருந்த கலைஞருக்கு இல்லை. காரணம், அவர் என்னை ஒரு எதிர்க்கட்சி உறுப்பினராகப் பார்க்காமல் தமிழக அரசியல்

களத்தில் வளர்ந்துவரும் ஓர் இளைஞனாகவே அன்று அவர் என்னைப் பார்த்தார். என்னை மட்டுமல்ல! திறமைகள் எங்கே இருந்தாலும் அவற்றை அடையாளம் கண்டு ஊக்குவிக்க வேண்டியது தனது கடமை என அவர் நினைத்தது அவருடைய இமாலயப் பெருந்தன்மை.

அவரும் ஒரு பத்திரிகையாளர் என்ற அளவில் தன்னைப் பற்றிய விமர்சனங்களை திறந்த மனதுடன் வரவேற்பார். விமர்சிப்பவருக்கு தன்னை விமர்சிக்க தகுதி உண்டா என்று ஒருநாளும் அவர் சிந்தித்ததில்லை. காலத்தின் தேவைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளவும், ஊடக உலகின் புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்ளவும் எப்போதும் கலைஞர் தயாராக இருந்தார் என்பது கலைஞரின் வெற்றிக்கு மிகப்பெரிய காரணம்.

முரசொலி பத்திரிகையினை தன் கைப்பிரதியாக தயாரித்து வெளியிட்ட கலைஞர் தனது 80–வது வயதில் "ஆப்பிள் ஐபேடு" வைத்து அந்த புதிய தொழில்நுட்பத்தினைக் கற்றுக்கொண்டதைப் பார்த்து அதிசயித்தவர்கள் அநேகர்.

ஒரு முகநூல் (facebook) பக்கம் ஒன்று அவருக்காக உருவாக்கப்பட்டது. அதில் அவரது பேச்சு, அறிக்கைகள் முதலானவை வெளிவந்தன. அதனை அவர் ஒருநாள் பார்த்துக்கொண்டிருந்தபோது, அவற்றைப் பற்றிய அனைத்துக் கருத்துக்களும் வரவேற்பதாகவே இருந்தன. சில பெயர்களுக்கு பின்னால் எந்த கருத்துகளும் இல்லை. அவரது Admin இடம் "இது என்ன?" என்று கேட்க, அவர் comment–களை moderate செய்வதாகச் சொல்லியுள்ளார். "அப்படி என்றால் என்ன?" என்று கலைஞர் கேட்க, எதிர்மறையாக இருப்பவற்றை அவர் நீக்கிவிடுவதாகச் சொல்லியுள்ளார். "அப்படி நீக்கிவிட்டால் மக்களது மனநிலையினை நான் எப்படி அறிவது? "என்று கலைஞர் திருப்பிக் கேட்க, அதற்கு Admin, "சிலர் மிகவும் கொச்சையாக, தரம்தாழ்ந்து தங்கள் விமர்சனங்களைப் பதிவிடுகிறார்கள்" என்று சொன்னவுடன், அதற்கு கலைஞர் சொன்ன பதில்தான் கலைஞர் என்ற மாபெரும் தலைவரின் வெற்றிக்குக் காரணம். "என்னுடைய வாழ்க்கையில் பலர் என்னை எனக்கு எதிரிலேயே மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்துள்ளனர். அதைவிட மோசமாக இனிமேல் என்னை யாரும் விமர்சித்துவிட முடியாது. அதையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் இந்த இடத்திற்கு வந்துள்ளேன். என்னைப் பற்றிய தரம் தாழ்ந்த விமர்சனங்கள் விமர்சிப்பவரின் உண்மை முகத்தை மக்களிடம் காட்டும். அனைத்து விமர்சனங்களும் அப்படியே இருக்க வேண்டும். நான் அவற்றைப் பார்க்க வேண்டும்" என்று கலைஞர் சொன்னபோது உதவியாளர்கள் அனைவரும் ஆச்சரியத்தால் அதிர்ந்துபோயினர்.

சமூகத்தின் அடித்தட்டில் இருந்து, எழுந்து, உயர்ந்து, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையினருக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்து, முக்கால் நூற்றாண்டு காலமாக தமிழகத்தின் பொதுவாழ்வின் "மையக்கட்டமாக" செயல்பட்டு சாகாவரம் பெற்ற சமூக நீதிச் சுடரொளியாய் என்றென்றும் வாழும் கலைஞரின் புகழ் வாழ்க!

திரு. இரா. பெர்னார்டு,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(குளச்சல் தொகுதி)

சட்டமன்ற நாயகர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியிடுவது வரவேற்கத்தக்கது, பாராட்டக்குரியது. நான் 1996 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது என்னுடைய கன்னிப்பேச்சில் காரண காரியங்களை விளக்கி சில கோரிக்கைகளை முன்வைத்தேன். முதல்வர் அவர்கள் அவருடைய பதிலுரையின்போது, குளச்சல் தொகுதி உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்று, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியும், மீன்பிடித் துறைமுகமும், மேலும், கீழமணக்குடி–மேலமணக்குடி இணைப்பு பாலமும் வழங்கப்படும் என அறிவித்தார்கள். நான் அன்று கேட்ட பல கோரிக்கைகளில் இந்த மூன்றும் மிகமுக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஐம்பதில் கிடைக்காதது ஐந்தில் கிடைத்திருக்கிறது என்று நான் நன்றி சொன்னபோது எல்லோரும் வியந்து பார்த்தார்கள்.

ஒருநாள் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. தாமரைக்கனி அவர்கள் எழுந்து, 'முதல்வருக்கு ஒரு வேண்டுகோள்' என்றார். "உங்களை ஆட்சியில் கொண்டுவர உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் பலர் கடுமையாக உழைத்தனர். அவர்கள் யாருக்கும் இன்னும் நீங்கள் சிறப்பு செய்யவில்லை; சிறப்பு செய்ய வேண்டும்" என்று பேசினார். தலைவர் கலைஞர் "என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார். அப்போது திரு. தாமரைக்கனி அவர்கள், "ஒரு நல வாரியம் அமைத்து உறுப்பினர்களை சிறப்பிக்க வேண்டும்" என்று சொல்லி, "அந்த வாரியத்திற்கு பெயர் நாய் வாரியம் என்று அழைக்கப்பட வேண்டும்" என்று சொன்னார். அவையே அதிர்ச்சிக்குள்ளாகியது. அப்போது கலைஞர் அவர்கள் எழுந்து, "நாய்களில் பலவகை நாய்கள் உண்டு. வீட்டு நாய், தெரு நாய், சொறி நாய், கடி நாய், வெறிநாய் என்று பல வகை உண்டு. அப்படி ஒரு வாரியம் அமைக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை. அப்படி அமைக்கின்ற காலகட்டத்தில் உங்கள் கருத்துப்படி அதற்கான குணம் படைத்த தங்களைத்தான் தலைவராக நியமிப்பேன்" என்று கூறினார். இன்னொரு நாள், "உங்கள் ஆட்சியில் ஒரே இருட்டாக இருக்கிறது" என்று திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னபோது, கலைஞர் அவர்கள், "இருட்டு உங்களுக்கு உடன்பாடு உடையதுதானே" என்றார்.

1976–ல் நெருக்கடிகால சட்டத்தை தி.மு.க. எதிர்த்தது; தி.மு.க. தொண்டர்கள் சுமார் 600 பேர் கைது செய்யப்பட்டார்கள். அதில் கலைஞருடைய மருமகன் முரசொலி மாறன் மற்றும் மகன் மு.க. ஸ்டாலின் ஆகியோரும் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அப்போது கலைஞர் அவர்கள், ஒன்றிய அரசிடமும் தமிழ்நாட்டு ஆளுநரிடமும் ஒரு வேண்டுகோள் வைத்தார். "என்மீது ஏதேனும் கோபம் இருந்தால், அதற்காக

என்னுடைய அப்பாவி தொண்டர்களை கைது செய்து வைத்திருப்பதை விடுதலை செய்யுங்கள், என்னுடைய மகனையும் மருமகனையும் வேண்டுமானால் பிணமாகத் தாருங்கள்" என வேண்டுகோள் வைத்தார். அப்படிப்பட்ட தொண்டர்களை நேசித்த அற்புதத் தலைவர்தான் கலைஞர் அவர்கள்.

சட்டமன்றத்தில் ஒருநாள் கலைஞர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருந்தபோது, திடீரென பேரவைத் தலைவர் அவர்கள் முதல்வரைப் பார்த்து, 'தங்களுக்கு வழங்கிய நேரம் முடிந்துவிட்டது; அமரலாம்' என்று சொன்னார். முழு அவையும் வியப்பிலும் அதிர்ச்சியிலும் மூழ்கியது. அவை முடிந்ததும் முதல்வர் அவர்கள் பேரவைத் தலைவருடைய அறைக்குச் சென்றார். அப்போது பேரவைத் தலைவர், 'எதிர்பாராமல் நடந்துவிட்டது' என்று சொன்னார். அப்போது கலைஞர் அவர்கள், "நீங்கள் அப்படி நடந்து கொண்டதால் அவைக்கு பெருமை, எனக்கு பெருமை, தங்களுக்கும் பெருமை, அந்த பெருமையை எனக்கு சேர்த்ததற்கு நான் நன்றி சொல்கிறேன்" என்று சொன்னார். அப்படிப்பட்ட பெருமைமிகு தலைவர்தான் கலைஞர் அவர்கள்.

கலைஞருடைய நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு அனைத்துத் தகுதிகளையும் கலைஞர் அவர்கள் பெற்றிருந்தார். பல்வேறு நலத் திட்டங்களை வழங்கியிருந்தார். போக்குவரத்துக் கழகங்களை நாட்டுடைமையாக்கி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கினார்கள். அந்தப் பேருந்துகளில் தமிழ் மொழியின் சிறப்பிற்குக் காரணமான திருக்குறளை பேருந்துகளில் பதித்து அதன் சிறப்பை மக்கள் அறிய வழிவகை செய்தார். இதே கலைஞர் அவர்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில், சுதந்திரப் போராட்டத்திற்கு உழைத்த விடுதலை வீரர்களுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும், அந்தக் குடும்பங்களுக்கு குடும்ப நல உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள். அவர்களுடைய தியாகங்களை பாராட்டி, சிலைகள் வைத்து நினைவு மண்டபம் அமைத்து பெருமைப்படுத்தினார்கள். வெளிநாட்டிலிருந்து இங்கே வந்து தமிழ்மொழியைக் கற்று அதன் சிறப்புகளை அறிந்து, ஆராய்ச்சி செய்து, திராவிட மொழிகளுக்கு தமிழ்மொழிதான் மூலமொழி என்ற கருத்தை பரப்பினார்கள். அவர்கள் கால்டுவெல், வீரமாமுனிவர், ஜி.யு. போப் ஆகியவர்கள். அவர்களின் தமிழ்ப் பற்றை பாராட்டி அவர்களுக்கு தமிழ்நாட்டில் சிலைகள் வைத்து சிறப்பு செய்தார்கள். அவருடைய ஆட்சிக் காலத்தில் சமூக நீதி தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றத்தாழ்வுகளைக் களைகின்ற வகையில் கை ரிக்ஷாக்களை ஒழித்து, சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கி மனிதநேயம் காத்தார். ஏழை எளியவர்களுக்கு இலவச வீடுகள், ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வீடு கட்டும் திட்டங்களை நிறைவேற்றினார்கள். இலவச கண்ணொளித் திட்டம், தொழு நோயாளிகளுக்கு மறுவாழ்வு இல்லம், அனாதை குழந்தைகளுக்கு காப்பகம், பெருநோயாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டுத் திட்டம், நோயாளிகளுக்கு உதவுகின்ற வகையில் 108 மருத்துவ வாகனத் திட்டம், ஆதரவற்றோருக்கு கருணை இல்லங்கள்

அமைத்துக் கொடுத்து சிறப்பு செய்தார்கள். ஏழை எளிய ஆதி திராவிடர்களுக்கும் மீனவர்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக் கொடுத்து சிறப்பு செய்தார்கள். குறிப்பாக, மீனவர்களுக்கு அவர் கட்டிக் கொடுத்த வீட்டிற்கு மீனவர் சமுதாயத்தில் சிறந்து விளங்கிய சமூக நீதிக் காவலர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரை சூட்டி, மீனவர்களைப் பெருமைப்படுத்தினார். மீனவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்த்து கல்வி வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு வாய்ப்பு அளித்தார்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்; விவசாயக் கடன்களை இரத்து செய்தார். உழவர் சந்தை, பெரியார் சமத்துவபுரம் திட்டங்களையும் நிறைவேற்றினார். முன்னாள் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் சமூக நீதி காக்க மண்டல் கமிஷன் கோரிக்கை நிறைவேற்ற முன்வந்தபோது, முற்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் ஆட்சியை இழந்தார். அவரை தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் அழைத்து வந்து நன்றி தெரிவித்து பாராட்டி மகிழ்ந்தார். தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையை நிலை நாட்டினார். நீட் தேர்வை, தான் இருக்கும் வரைக்கும் இரத்து செய்து தமிழக மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பிற்கு பேருதவி புரிந்தார். வங்கிகளை தேசியமயமாக்கியும், மன்னர் மானியத்தை ஒழித்தும், விவசாயத்திற்கு மறுமலர்ச்சி (பசுமைப் புரட்சி) ஏற்படுத்தவும், மத்திய அரசு கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து வெற்றிக்கு உதவியவர் கலைஞர்.

கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி சிறப்புப் பெற்றார். கல்வியைப் பொறுத்தமட்டில், பெண் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு வீட்டின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு பெண் கல்வி மிக மிக முக்கியம் என்பதை செயல்திட்டத்தின் மூலமாக நிறைவேற்றினார். ஆக, பெண்கள் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காக அவருடைய ஆட்சிக் காலத்தில் பெண் கல்விக்கு பல்வேறு சலுகைகளை வழங்கினார். பெண்கள் உயர் கல்வி பெற மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி பெண்கள் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தார். பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பங்கு பெற 33 விழுக்காடும், அவர்கள் வேலைவாய்ப்பு பெற 50 விழுக்காடும் வழங்கி வரலாற்று பதிவு செய்தார். நாட்டின் போக்குவரத்து வளர்ச்சிக்காக சென்னை கோயம்பேட்டில் ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையத்தை நிறுவினார். மக்கள் நல்வாழ்வுக்காக வீடுகள்தோறும் மருத்துவ வசதியும், இல்லங்கள்தோறும் கல்வி வசதியும் பெற திட்டம் வகுத்துத் தந்தார்.

கலைஞரின் ஆட்சியைத் தொடர்ந்து இன்றைய முதல்வர் ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையத்தை உருவாக்கி பல்வேறு வசதிகளோடு செங்கல்பட்டு அருகில் உள்ள கிளாம்பாக்கத்தில் கட்டி முடித்துள்ளார். நம் தமிழ்மொழிக்கு இந்தியத் துணை கண்டத்தில் செம்மொழி சிறப்பை பெற்றுக்

கொடுத்தார். தமிழ்நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய நவீன சிற்பிதான் கலைஞர் அவர்கள். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நிலையில் பல்வேறு திட்டங்களை வழங்கினார்கள். அந்த வகையில் இன்றைய அரசு அதைப் பின்பற்றி வருவது பாராட்டுக்குரியது. அவருடைய அடிப்படைக் கொள்கையில் 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற தத்துவம் வெற்றி பெற தொடர்ந்து பாடுபட்டார். அவர் வழித்தோன்றலாகிய இன்றைய ஆட்சி அதை அப்படியே பின்பற்றி வருவது தமிழகத்திற்கு தனி சிறப்பாகும்.

ஏழை எளிய மீனவர்கள் கடலில் தவறிவிட்டால், அவர்களின் குடும்ப முன்னேற்றத்திற்குத் தேவையான எல்லா வகையான உதவிகளையும் செய்த பெருமை நூற்றாண்டு விழா காணும் கலைஞருக்கு உரியது. அப்பேர்ப்பட்ட கலைஞர் கொடுத்த திட்டங்கள் தொடர்ந்து தமிழகத்தில் நிறைவேற நாமெல்லாம் ஒத்துழைக்க வேண்டும். பொற்கால ஆட்சிபுரிந்த கலைஞரின் சிறப்புகளை மலராக வெளியிடுவது வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது. கலைஞர் காலத்தில் மக்கள் கல்வி அறிவு பெற்று வெளிநாட்டு நிலையைத் தெரிந்துகொள்ள படிப்பகங்கள் மிகக் கட்டாயம் தேவை என்பதை உணர்ந்த கலைஞர் அவர்கள், கோட்டூர்புரத்தில் பேரறிஞர் அண்ணா பெயரில் படிப்பகம் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இன்றைய தமிழக அரசு, கலைஞர் காலத்தில் முச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த மதுரையில் கலைஞர் பெயரில் நூற்றாண்டு படிப்பகம் அமைத்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது. தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஜல்லிக்கட்டு முக்கிய இடத்தை பெறுகிறது. மதுரையில் அலங்காநல்லூரில் புதிய களம் அமைத்து புதிய கட்டடம் அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே மதுரையில் வீர விளையாட்டான ஏறு தழுவுதல் கட்டடம் அமைத்தல் வரலாற்றுப் பதிவாகும். இந்த கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் தமிழக மக்களுக்கு மேலும் வளர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தட்டும்!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. E. முத்துராமலிங்கம்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(ராதாபுரம் தொகுதி)

சிலரோடு பழகி பெருமைகொள்ள முடியும். மிகச் சிலரோடு அவர் அருகாமையில் இருந்து பார்ப்பதையே பெருமையாகப் போற்ற முடியும். அவ்வாறு அருகிலிருந்ததையே இன்றளவும் நான் பெருமையாக கருதுவது முத்தமிழறிஞர் கலைஞரோடு சட்டமன்றத்தில் பணியாற்றியதைத்தான்.

என் மகள்கள் பள்ளிப் பருவ காலத்தில் "நீ விரும்பும் தலைவர்" என கட்டுரை எழுதச் சொன்னால் காமராஜரையோ, கலைஞரையோ, எம்.ஜி.ஆரையோ அவர்கள் விரும்பும் தலைவர் என எழுதத்தக்க பெருமைமிக்க தலைவர்கள் மூவரோடும் நானும் பணியாற்றியிருக்கிறேன் என்ற பெருமையைத்தான் என் வாழ்க்கை அத்தியாயத்தில் நிரப்பத்தக்க சுவர்ண வரிகளாகக் கருதி பெருமையடைகிறேன். நினைவுகளை திருப்பிப் போனால் கிட்டத்தட்ட 50 வருடங்கள் தலைவர் கலைஞரை நேராகப் பார்த்து அவரோடு நான் பேசிப்பழகிய அனுபவத்தைச் சொல்வதானால் இப்போதைய தெலங்கானா மாநில ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்களின் திருமண அழைப்பிதழை இலக்கியச் செல்வர் குமரி அனந்தனோடு கொடுக்க கோபாலபுரம் இல்லம் சென்றதுதான் முதல் அனுபவம். அந்த நிகழ்வின் அதிசயம் மெச்சி, பெருமிதம்கொள்ளச் செய்தது, தலைவர் கலைஞரின் நினைவாற்றல்தான்.

என் சட்டமன்ற உறுப்பினர் அனுபவத்தில் எம்.ஜி.ஆரோடும் தலைவர் கலைஞரோடும் மூத்த அரசியல் தலைவர்கள் திரு. ராஜாராம், ம.பொ.சி., இனமான பேராசிரியர் இவர்களோடு பழகியிருக்கிறேன். பேரூராட்சித் தலைவராக பெருந்தலைவரோடும் பழகியிருக்கிறேன். நினைவாற்றல் என்று சொன்னால், தலைவர் கலைஞரை மிஞ்ச ஆளில்லை. கோபாலபுரம் இல்லம் மாடி அறையில்தான் தலைவரை சந்தித்தோம். இலக்கியச் செல்வரை நலம் விசாரித்த கையோடு புதிய சட்டமன்ற உறுப்பினர்களான என்னையும், அப்போதைய சாத்தான்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.N. ராமசாமி அவர்களையும் சட்டமன்ற அனுபவம் எப்படி...! எனக் கேட்ட கேள்வியிலேயே நாங்கள் புதிய சட்டமன்ற உறுப்பினர் என்பதையும், ஒழுங்காக அவை நடவடிக்கைகளில் பங்கேற்கிறோமா என்பதையும், அதைவிடவும் உங்களையெல்லாம் சட்டமன்றத்தில் பலமுறை பார்த்திருக்கிறேன் என்பதையும் அந்த ஒரு கேள்வி விசாரிப்பு எங்கள்முன் செய்தித் தொகுப்பாய் வந்து விழுந்தது, மலைத்துப் போனேன். அவரது உயரத்திற்கு, அனுபவத்திற்கு என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினராக விசாரிக்க வேண்டிய அவசியமேயில்லை. ஆனாலும் என்னை விசாரித்ததில் அப்போதைக்கு அவர் ஆட்சியில் இல்லாவிட்டாலும் அவர்தான் முதல்வர், சட்டமன்றத்தில் மற்றவர்களுக்கெல்லாம் முதல்வர் என்பதை உணர்த்தியது.

சென்னை புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்றத்தில் துணை சபாநாயகர் அறையைக்

கடந்துதான் எதிர்க்கட்சித் தலைவர் அறைக்குச் செல்ல முடியும். தலைவர் கலைஞர் வருகின்ற நேரத்தில் அவருக்கு வணக்கம் சொல்லுகிற ஒவ்வொருவருக்கும் இருகரம் கூப்பி அன்பொழுக பதில் வணக்கம் செய்பவர் தலைவர் கலைஞர். ஆனாலும் யாருக்கும் அவரோடு பேசி, கருத்து பரிமாற தைரியம் வராது. சட்டமன்றம் நடக்கின்ற நாட்களில் கலைஞருக்கு வணக்கம் சொல்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அன்றைய நாள் சட்டமன்ற நிகழ்ச்சி நிரலையும், மானியக் கோரிக்கைகளுக்கான விவாத நாள் என்றால் அந்தத் துறைக்கான தகவல்களைத் தெரியாமல் வணங்க, சந்திக்க அஞ்சுவார்கள். ஒரு தேர்வுக்குப் போகிற மாணவனைப்போல் அந்த நாளில் விவாத உட்பொருளை முழுமையாக படித்துத் தெரிந்துகொண்டுதான் கலைஞர் முன்னால் போய் தைரியமாக வணக்கம் சொல்ல முடியும். அவர் எந்த கருப்பொருள் குறித்தும் எவ்வளவு புதிய சட்டமன்ற உறுப்பினர்களானாலும் மிகப் பழகியவர்போல் உரையாடுவார். நான்கூட அப்போதைய துணை சபாநாயகர் திரு. பி.எச். பாண்டியன் அவர்களது அறையிலிருந்து வெளியே வரும்போது கலைஞர் கண்ணில் பட்டால் சபாநாயகர் இன்று என்ன திருக்குறள் வாசித்தார் எனக் கேட்டுவிடுவாரோ என அஞ்சி, அவர் கண்ணில்படும்போது சொல்வதற்காக அன்றைய திருக்குறளைப் படிக்காமல் துணை சபாநாயகர் அறையில் இருந்து வெளியே வந்ததில்லை.

கலைஞர், சட்டமன்ற உறுப்பினர்களை சட்டமன்ற உறுப்பினர்களாகப் பார்ப்பாரேயொழிய, தி.மு.க., காங்கிரஸ், அ.தி.மு.க.காரர்கள் எனப் பார்த்தது இல்லை.

என் அனுபவத்தில், துதிக்கத்தக்க பண்புகளை சட்டமன்றத்தில் புகுத்தியவர் கலைஞர்தான். அவர் அனுபவம், சொல் அலங்காரம், ஞாபக சக்தி, ஆதாரங்களோடு அடுக்கி பேசுதல், எதிரியை வசப்படுத்துகிற சொற்கவர்ச்சி என எங்களுக்கு சட்டமன்றத்தில் பாடமே நடத்தியிருக்கிறார். மதிக்கத்தக்க பேராசான் அவர்.

சட்டமன்றத்தில் புதிய உறுப்பினர்கள் பெரும்பாலும் இடைவேளையில் பலகாரங்களைத் தேடிப்போவார்கள். கலைஞர் பேச ஆரம்பித்தால் அந்தச் சிற்றுண்டி சாலை காலியாகிவிடும். பேரவை நிரம்பிவிடும். வாயில் பாதி பலகாரத்தோடு சட்டமன்ற அரங்கம் நோக்கி ஓடுவார்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். நான் அதிசயமாக கவனித்தது எல்லாம் ஒரு கண்டிப்பு இல்லாமல் அவர் சொல் அலங்காரம் காரணமாகவே அவருடைய ஒரு வார்த்தையைக்கூட விட்டுவிடாமல் கேட்க வேண்டும் என்று ஓடுவதைத்தான் அண்ணன் திரு. பி.எச். பாண்டியன்கூட "நான் மணி அடித்தும், கூப்பிட்டும் வராதவர்கள் இந்த கலைஞர் பேசினால் அரங்கத்திற்குள் நிறைந்து விடுகிறார்களே" என அங்கலாய்ப்பார்கள்.

அவ்வளவிற்கு எனக்கு திகட்டத் திகட்ட அனுபவங்களைத் தந்தவர் கலைஞர். அவர் இல்லாத அவையில் உறுப்பினராக இருப்பது பெயருக்குப் பின்னால் MLA என்ற அடைமொழியைத் தருமே தவிர, ஒரு முழுமையான சட்டமன்ற உறுப்பினராக அனுபவிக்கும் கவுரவத்தைத் தராது.

நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு, என் தொகுதியில் தலைவர் கலைஞர் நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டத்தைத் தந்து, திறந்து வைக்க வருகை தந்தபோது, தலைவர் கலைஞரைச் சந்தித்து தமிழர் மரபான குத்துவிளக்கு ஒன்றை நினைவுப் பரிசாகத் தந்தேன். பக்கத்தில் இருந்த அப்போதைய நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 'முத்துராமலிங்கம் என்னோடு சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்' என்று சொன்ன சொல் இன்னும் என் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. தலைவர் கலைஞர் எண்ணியிருந்தால் எனக்கு வணக்கம் சொன்னதோடு குத்துவிளக்கை வாங்கி உதவியாளரிடம் கொடுத்திருக்கலாம். ஒரு மாட்சிமை பொருந்திய மாண்புமிகு முதல்வர் என்றோ, எப்போதோ அவரோடு சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரை, இவரும் நானும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினோம் எனச் சொன்னார் என்றால், அவர்தான் கலைஞர். அதுதான் அவரது பெருந்தன்மை. அப்படி என்னையும் ஒரு பொருட்டாக நினைவில் தேக்கி, அன்பைச் சொரிந்த தலைவரை நாள்தோறும் நினைவுகூராது போனால் பெருந்தவறு செய்த பிழை என்னை வருத்தும். அதனால்தான் இந்த நினைவு மலரில் நூற்றாண்டு நாயகரைப் பற்றி என் நினைவில் சுமக்கும் எண்ண அதிர்வுகளைப் பதிவிடுகிறேன். தலைவர் கலைஞர் புகழ் ஓங்குக.....

நான் முதலமைச்சர் ஆனபின்,

"பதவி என்பது பொதுமக்களுக்குப் பணியாற்றக் கிடைத்திட்ட ஒரு கருவிதான். அந்தக் கருவியை முறையாக, நெறியாக முழுப்பலன் விளைவிப்பதற்காகப் பயன்படுத்துவதைப் பொறுத்துத்தான் அந்தப் பதவிக்கும் பெருமை; அதனை ஏற்பவருக்கும் பெருமை.

என்னைப் பொறுத்தமட்டில், அண்ணாவின் அடிச்சுவட்டில், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் முயற்சியில் என் நெஞ்சம் கூறும் நீதிக்கேற்ற முறையில் முதலமைச்சர் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு என்னாலான வரை முயன்று வந்திருக்கிறேன்.

எதிர்க்கட்சி நிலையில் இருந்த காலத்தில் என்னென்ன கழக இலட்சியங்கள் எதிரொலிக்கப் பட்டனவோ அவற்றையேதான் நான் முதலமைச்சரான பிறகும் செயற்படுத்திட முனைந்திருக்கிறேன்."

– கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(கடையநல்லூர் தொகுதி)

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பாடுபட்ட முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அதன்மூலம் உலக அரங்கில் தமிழகத்திற்கு பெயரையும், புகழையும் சேர்த்து, நிலைத்து நின்று, இமயமலைபோல் திகழ்ந்தவர். தனது அரசியல் வாழ்க்கையிலும், தனது எழுத்துக்கள் மூலமும், கலைஞர் அவர்கள் ஆற்றிய சேவைகளை தமிழக மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். இப்படி, பல்வேறு சாதனைகளை நிகழ்த்திய கலைஞரின் மறைவு, தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு ஈடு செய்ய முடியாத அளவிற்கு பேரிழப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்றே கூறலாம்.

தமிழ் மொழியின் சுரங்கம்:

தமிழக வரலாற்றில் 80 ஆண்டுகளுக்கும் மேலாக முதலிடத்தில் வைத்து போற்றப்பட்ட மக்கள் தலைவராகத் திகழ்ந்தவர், கலைஞர் அவர்கள். தமிழ் மொழியின் சுரங்கமாகவும், தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், செம்மொழித் தமிழ் இலக்கிய ஊற்றாகவும், தமிழ் நெறியின் உறைவிடமாகவும், மானிட வரலாற்றுச் சுவையாகவும் வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள். மக்கள் சேவையில் அரசு நிருவாகத்திலும், சட்டங்கள் இயற்றுவதிலும் பல சீர்திருத்தங்களையும் புரட்சிகரமான திட்டங்களையும் தேசிய அளவில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் கொண்டுவந்து, போற்றக்கூடிய தத்துவங்களையும் வெளியிட்டு, ஒளி சிந்தும் ஓய்வறியா ஞான சூரியனாகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

முஸ்லிம் சமுதாயத்தின் இதய நாயகர்:

எல்லா சமுதாய மக்களின் அன்பராகத் திகழ்ந்த கலைஞர் அவர்கள், தமிழக முஸ்லிம் சமுதாயத்தின் நண்பராகவும், இதய நாயகராகவும் போற்றப்பட்டவர். கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, வர்த்தகம், தொழில் முன்னேற்றம், ஏழையெளிய நடுத்தர வர்க்க மக்களின் வாழ்வுக்கான ஆதாரமாகிய அனைத்துத் துறைகளிலும் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கித் தந்து, சமுதாய உயர்வுக்கு உதவிய பேருபகாரியாகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வு, நம்பிக்கை, நடைமுறை பழக்க வழக்கம், பண்பாடு, மரபுகள் ஆகியவற்றை தெளிவாகப் புரிந்து சிறப்பாக மதித்து பாராட்டக் கூடிய வகையில் பாதுகாத்து தந்து நல்லிணக்க நாயகனாக விளங்கியவர் கலைஞர் அவர்கள்.

53 ஆண்டு கால உறவு:

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் காலந்தொட்டு, முஸ்லிம் சமுதாயத்தோடும், எங்கள் இயக்கம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியோடும், கடந்த 1962 ஆம் ஆண்டு முதல் 57 ஆண்டுக்கால வரலாற்றுடன் பின்னிப்

பிணைந்திருக்கும் உறவினையும், அன்பையும், நேசத்தையும் வளர்த்தவர் கலைஞர் அவர்கள் என்பதை நன்றியுணர்வோடு இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றோம். காயிதே மில்லத் அவர்களோடு தொடங்கிய தொடர்பினால் என்னைப்போன்ற எளியவரும் சட்டமன்ற உறுப்பினராகி சட்டமன்றத்திற்கு வந்து அமர்வதற்கும், அவர் வாழ்ந்த காலத்தில், நாங்களும் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றினோம் என்று சொல்லும் அளவிற்கு ஓர் அரிய வாய்ப்பினையும் நாங்கள் எல்லோரும் பெற்றோம்.

முதல் சந்திப்பு:

நான் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் மாணவரணித் தலைவராகப் பொறுப்பு வகித்தபோது, 1992 ஆம் ஆண்டு எங்களுடைய மறைந்த தலைவர் சிராஜுல் மில்லத் அப்துல் ஸமது சாஹிப் அவர்களோடு, நெய்வேலியில் தலைவர் கலைஞர் அவர்களை முதல்முறையாக சந்திக்கும் வாய்ப்பினை பெற்றேன். அதன்பிறகு, எங்களது தலைவர் மறைந்த இ. அஹமது, தற்போதைய தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஆகியோருடன் பல்வேறு தருணங்களில் சந்திக்கும்போதெல்லாம், கலைஞர் அவர்களின் மதிநுட்பம், அரசியல் முதிர்ச்சி, தொலைநோக்கு பார்வை, அபூர்வமான நினைவாற்றலை நினைத்து புளகாங்கிதம் அடைந்துள்ளோம். KALAIGNAR WAS EVERY INCH POLITICIAN என்று சொல்லும் அளவிற்கு அவர் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தமுள்ளதாக இருக்கும். அதன்பிறகு, 15–வது சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்கும் நாளன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் யாராலும் பெறமுடியாத ஒரு பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது என்னவென்றால், நான் சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்கும்போது அன்றைய முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களும், அவையில் இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அந்த நேரத்தில் அவையில் இருந்தார்.

இப்படி, இரண்டு பேரும் இருக்கக்கூடிய ஒரே நேரத்தில் பதவி ஏற்கக் கூடிய பாக்கியத்தை நான் ஒருவன் மட்டுமே பெற்றேன். முதல்வர் அவர்கள் இருந்தார்கள். கலைஞர் அவர்கள் வந்தபிறகு, அம்மையார் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

ரமலான் பரிசு:

கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை, முஸ்லிம் சமுதாயத்திற்காக எண்ணற்ற நன்மைகளைச் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக, வேலை, கல்வியிலே நல்ல நிலையை அடைய வேண்டும் என்பதற்காக 15–9–2007 அன்று பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா துவக்கத்தில் ரமலான் பரிசாக முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கியவரும் கலைஞர் அவர்கள்தான்.

அதேபோல், கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த துணைவேந்தர்கள் நியமனம்

செய்யப்பட்டார்கள். 1990 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக திரு. சாதிக் அவர்களும், 1996 ஆம் ஆண்டு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வந்தவாசி திரு. அப்துல் கரீம் அவர்களும், 1998 ஆம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இராமநாதபுரத்தைச் சேர்ந்த திரு. சாதிக் அவர்களும், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக டாக்டர் மீர் முஸ்தபா ஹுசேன் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். இப்படி, முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் துணைவேந்தராக ஆவதற்கு மிகப்பெரிய பணியாற்றி, வழிகாட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

முஸ்லிம் லீக் துணை நிற்கும்:

கல்வி ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும், முஸ்லிம் சமுதாயத்தின் சார்பாக நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான இடவசதி இல்லாதிருந்த நிலையில், கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் பாளையங்கோட்டையில் இருக்கக்கூடிய சதகத்துல்லா அப்பா கல்லூரிக்கு 30 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சென்னை மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரி எனப் பல்வேறு கல்லூரிகளுக்கு அவர் நிலங்களை வழங்கியதில் தன் பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள். திராவிட நெறியும், இஸ்லாமிய வாழ்க்கை நெறியும் இணைந்து செல்லும் பல்வேறு கூறுகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தவர் கலைஞர் அவர்கள். சட்டமன்றத்தில் நிறைவேற்றிய இலட்சியங்கள், அவர் போதித்த தத்துவங்கள், அவர் காட்டிய அரசியல் பயணப் பாதைகள் என்றும் மாறாமல் இருக்கின்றன.

கலைஞர் அவர்களை பின்பற்றி தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சியை மிகச் சிறப்பாக நடத்திவரும் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீகும், முஸ்லிம் சமுதாயமும் எப்போதும் துணை நிற்கும். தளபதி அவர்களின் சிறப்பான திட்டங்கள்மூலம் தமிழக மக்கள் மட்டுமல்லாமல், உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் நன்கு பயன் அடைந்து வருகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இந்தத் திட்டங்கள் தொடர இ.யூ.முஸ்லிம் லீக் தொடர்ந்து உற்ற துணையாக இருந்து பணியாற்றும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறோம்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற "அறிவுக் களஞ்சியம்" கலைஞர்

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(ஆலங்குளம் தொகுதி)

1989 ஆம் ஆண்டு மாண்புமிகு எம்.ஜி.ஆர். மறைவிற்கு பின் அ.தி.மு.க. இரண்டாகப் பிரிந்து ஜானகி அணி என்றும், ஜெயலலிதா அணி என்றும் இயங்கி வந்தது. அவ்வாண்டு சட்டமன்றத் தேர்தல் நான்கு முனைப் போட்டியாக நடந்து முடிந்தது. தி.மு.க., காங்கிரஸ், ஜானகி அணி, ஜெயலலிதா அணி என தனித்தனியாக நின்று தேர்தல் களத்தில் போட்டியைச் சந்தித்தது. இதில் தி.மு.க. அணி வெற்றி வாகை சூடியது. ஐயா மூப்பனார் தலைமையில் காங்கிரஸ் கட்சி 26 இடங்களில் வெற்றி பெற்றது. நான் காங்கிரஸ் கட்சி சார்பாக ஆலங்குளம் தொகுதியில் வெற்றி பெற்று முதல் முறையாக சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றும் வாய்ப்பைப்பெற்றேன்.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றார். சட்டமன்றத்தில் பதவியேற்ற எந்த உறுப்பினரையும் தன் காலில் விழுந்து மரியாதை செலுத்துவதை அவர் அனுமதிக்கவும் இல்லை; ஏற்றுக்கொள்ளவும் இல்லை. சட்டமன்ற அவை என்பது மக்கள் பிரதிநிதிகளைச் சமமாகப் பார்க்கும் அவையாகும். அது ஒரு கண்ணியமான, கட்டுப்பாடான மரபு காக்கும் அவையாக காக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை திண்ணமாக கொண்ட கலைஞரின் உயர்ந்த கருத்தைக் கண்டு நான் பூரித்தேன்.

சட்டமன்ற விவாதங்கள் உயிரோட்டமாக, கட்டுப்பாடாக, விதிகளுக்குட்பட்டதாக எல்லாக் கட்சியினருக்கும், சமச்சீராகப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு ஆக்கப்பூர்வமான சபையாகத் திகழ வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்து சட்டமன்ற நிகழ்வுகளை நடத்திச் சென்றவர், கலைஞர் அவர்கள். பேச ஆரம்பித்தால் அவர் பேச்சு மேடைப்பேச்சு போல் அடுக்கடுக்காக இல்லாமல் அழகிய தமிழில் ஓர் இனிய விவாதத்தைக் காணலாம். எங்களைப் போன்ற புதிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கலைஞரின் சட்டமன்றப் பேச்சு ஒரு பெரும் படிப்பினையாக விளங்கும். அவருடைய சுவைமிக்க பேச்சைக் கேட்க கேட்க இனிக்கும்.

கேள்வி நேரங்கள்:

சட்டமன்றத்தில் கேள்வி நேரம் என்பது மிகவும் சுவையானதாகவும் சுவாரசியமாகவும் இருக்கும். பல்வேறு தொகுதி மக்களின் பிரச்சினைகளை, தேவைகளை கேள்வியாகக் கேட்கப்படுவதற்கும் அக்கேள்விகளுக்கு அந்தந்த துறை அமைச்சர்கள் பதில் சொல்வதும், அந்தப் பதிலுக்குப் பின் உறுப்பினர்கள் மேலும் துணைக் கேள்விகள் கேட்பதும் ஓர் அற்புதமான நிகழ்வாகும். கலைஞர் அவர்கள் துறையைச் சார்ந்த கேள்விகள் முதலில் இடம் பெறும். அக்கேள்விகளில் துணைக் கேள்வி கேட்க பல

அனுபவமிக்க சட்டமன்ற உறுப்பினர்களும் என் போன்ற இளம் உறுப்பினர்களும் போட்டி போட்டு கையை உயர்த்தி சபாநாயகரின் கவனத்தை ஈர்ப்பது வழக்கமாகும்.

கலைஞர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதில் சொல்லும் போது பல ஆண்டுகளுக்கு முன் இந்த அவையில் நடந்த சம்பவத்தை நினைவூட்டுவார். நினைவூட்டும் போது "என் நினைவு சரியாக இருக்குமானால்" இந்த அவையில் இத்தனையாவது ஆண்டு, அந்நாளில் இத்தனை மணிக்கு இந்த நிகழ்வு நடந்தது என்று சரியாக நினைவூட்டிப் பேசுவார். அவருடைய நினைவாற்றலைக் கண்டு நான் மற்றும் பிற உறுப்பினர்கள் அனைவரும் வியப்படைந்ததுண்டு.

சிரிப்பலையில் சட்டமன்றம்:

கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் உரையாற்றும் போது சிரிப்பலை உருவாக்கும் சம்பவங்கள் ஏராளம். ஒருமுறை சட்டமன்றத்தில் "செயற்கை மழை பெய்ய" அரசு திட்டம் கொண்டு வந்த செயலின் மீது என் கேள்வி வந்தது. அப்போது நான் துணைக்கேள்வி எழுப்பும்போது "செயற்கை மழை பொழிய முயற்சித்து அரசு திட்டம் கொண்டு வந்தது போல், இயற்கை மழை பொழிய ஏதாவது திட்டம் வைத்துள்ளீர்களா?" என்ற கேள்வியை எழுப்பினேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் இன்னொரு துணைக் கேள்வியை எழுப்பினார். "இயற்கை மழை பொழிவதற்கு நீர்நிலைகளில் கழுத்தளவு நீரில் மூழ்கி நின்று கொண்டு வருண பகவானை வேண்டினால் மழை பெய்யும் என்று கதைகளில் சொல்லப்படுவது உண்மையா?" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கலைஞர் திடீரென்று இருக்கையிலிருந்து எழுந்து பதில் சொல்லத் துவங்கினார், "இரண்டு இளைஞர்கள் இயற்கை மழை பெய்வது பற்றி மிக ஆர்வமாக உள்ளனர். பரிதி இளம்வழுதியும், ராமசுப்புவும் இந்த வருண பகவானை வேண்டி நீர்நிலையில் மூழ்கலாம், அருகிலே இருப்பது கூவம் நதிதான் அதில் சென்று நீங்கள் வேண்டிக்கொள்ள நினைத்தால் நாங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை" என்றார். சபையில் ஒரே சிரிப்பலை ஏற்பட்டது. சிரிப்பலை அடங்க பல நிமிடங்கள் ஆகின.

அதுபோல் அவையின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான மாண்புமிகு லத்தீப் அவர்கள் திருவாரூர் அருகில் ஒரு கோயில் தேர் தீப்பற்றி எரிந்து போன சம்பவத்தை சபையில் எழுப்பினார். அவர் பேசும்போது தேர் எப்படி எரிந்தது. சதிகாரர்களால் எரிந்ததா, ஏன் எரிந்தது என பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருந்தார். உடனே கலைஞர் எழுந்து "தீப்பிடித்ததினால் எரிந்தது" என ஒரு வரியில் பதில் சொன்னவுடன் சபையே சிரிப்பலையில் அதிர்ந்தது.

இதுபோல நகைச்சுவை ததும்ப பதில் சொல்வதில் கலைஞர் வல்லவர். மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லா உறுப்பினர்களின்

பேச்சுகளையும் உன்னிப்பாக கவனிப்பார். சிறந்த சட்டமன்ற உறுப்பினர்களைப் பாராட்டுவார். நியாயமான கோரிக்கைகள் வேண்டுகோள்களை ஏற்று செவிசாய்த்து ஒவ்வொரு தொகுதிக்கும் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்ற மக்கள் சிந்தனையாளராக இருந்தார்.

நான் திருநெல்வேலியில் புதிய பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற முதலாவதாக வைத்த கேள்வியும், தாமிரபரணி தண்ணீர் ஆலங்குளத்திலிருந்து சங்கரன்கோவில் வரை கொண்டு செல்லும்போது வழியோர கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும், கங்கைகொண்டான் தொழில் மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சட்டமன்றத்தில் கலைஞரால் உறுதியளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுபோல் ஒவ்வோர் உறுப்பினரின் நியாயமான கோரிக்கைகளையும் பாகுபாடு இல்லாமல் மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தவர் கலைஞர்.

தமிழக மக்களின் பல்வேறு பிரச்சனைகளை அந்தந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்கள் மாமன்றத்திற்கு கொண்டுவந்து விவாதிக்க, கருத்துக்களைக் கூற, அதற்கு முறையான பதில் கொடுத்து அழகு தமிழில் பேசி

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

என்ற குறளுக்கு இலக்கணமாய்த் தன் சொல்லை யாருடைய சொல்லும் வெல்ல முடியாத அளவிற்கு கருத்துள்ள சொற்களால் விவாதங்களை ஆக்கப்பூர்வமாக எதிர்கொண்டு பதில் சொல்வதில் வல்லவர். சட்டமன்ற மரபைக் காத்து சபையின் கண்ணியம், இறையாண்மை வழுவாமல் போற்றிக் காத்து ஒரு "அறிவுக் களஞ்சியமாக" திகழ்ந்தவர் கலைஞர். அவரை "சட்டமன்ற நாயகன்" என்று சொல்வது பெருமைக்குரியதாகும். அவருடைய சட்டமன்ற செயல்பாட்டின்மூலம் என்போன்ற இளைஞர்கள் கற்றுக் கொண்ட பாடம் ஏராளமானதாகும்.

சமாதானம்

சண்டையில் ஒருவர் மட்டுமே வெல்ல முடியும். ஆனால், சமாதானத்தில் இருவரும் வெல்ல முடியும்.

–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. N.R. ரெங்கராஜன்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(பட்டுக்கோட்டை தொகுதி)

மறைந்த முதல்வர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. 2006 முதல் 2011 வரை அவரது தலைமையிலான அரசு நடைபெற்றபோது அதில் நானும் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன்.

கலைஞர் அவர்கள் மிகப்பெரிய ஞாபகசக்தி உடையவர். அதேபோன்று எதையும் நகைச்சுவையோடு ஆரம்பித்து வைப்பதிலும், ஒரு விஷயத்தை முடிவு செய்து வைப்பதிலும் வல்லவர். சட்டமன்ற உறுப்பினர் கடிதங்கள், கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற முயற்சி செய்வார்.

ஒருமுறை ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் பட்டுக்கோட்டையில் செயல்படும் மிகப்பழமையான உயர்நிலைப் பள்ளியினை உடனடியாக மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டுமென சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்டேன். மதுரையில் ஒரு பள்ளிக்கு உறுதியளித்துவிட்டோம் எனக் கூறினார்.

எனவே, நான் கலைஞர் அவர்களிடம் கடிதம் கொடுத்துவிட்டு ஊருக்கு வந்துவிட்டேன். அடுத்த நாள் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தொலைபேசியில் அழைத்து தலைவரிடம் சொல்லிவிட்டீர்கள். அவர்கள் போனில் என்னை அழைத்து உடனடியாக உங்கள் கோரிக்கையினை நிறைவேற்றச் சொன்னார்கள் என்று கூறினார். அதுபோல் அப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது.

அதேபோல் பட்டுக்கோட்டையில் புதிதாக தாலுகா காவல் நிலையம் ஒன்று அமைக்கக் கோரி நானும், எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களும் நேரில் சென்று கோரிக்கை விடுத்தோம்.

போனவருடம் காவல் நிலையம் சம்பந்தமாக ஏதோ கேட்டீர்களே என்று கேட்டார்கள். நான் இல்லையே என்று சொன்னேன். இல்லை ஏதோ செய்தேன் என்றார்கள். அதன்பின் எனக்கு நினைவு வந்து, பட்டுக்கோட்டை நகர காவல் நிலையத்தை தரம் உயர்த்திக் கொடுத்தீர்கள் என்றேன். உடன் அதுதானே, ஏதோ ஒன்று செய்து கொடுத்தேனே என்று சொன்னார்கள். வெளியில் வந்தவுடன் திரு. சுதர்சனம் அவர்கள் 'அவருக்கு ஞாபகசக்தி அதிகம், அவரிடம் தவறாக எதையாவது கூறி மாட்டிக்கொள்ளக் கூடாது' என்றார். அந்த வருடம் காவல் துறை மானியக் கோரிக்கையில் எனது கோரிக்கையும் ஏற்கப்பட்டு பட்டுக்கோட்டையில் புதிய தாலுகா காவல் நிலையம் அமைக்கப்பட்டது.

சென்னை கடற்கரைச் சாலையில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை மாற்றம் செய்து செம்மொழி ஆய்வு மையம் அமைக்கப்போவதாக ஒரு புரளி கிளம்பியது.

அது பற்றி எதிர்க்கட்சிகள், தோழமைக்கட்சிகள் அனைவரும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தனர். சபாநாயகர் அவர்கள் அதை ஏற்றார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் மீது விவாதம் நடந்து முதல்வர் பதில் வழங்கினார். நீங்கள் எல்லாம் சொன்னதற்குப் பதில் 'அந்த முடிவு அரசிடம் இல்லை என்பதே; இதை நான் முன்னமே ஒரே வரியில் கூறி முடித்திருக்க முடியும். ஆனால், இப்படியாவது சுவாமி விவேகானந்தரைப் பற்றி ஞாபகம் வைத்து அனைவரும் பேசினீர்களே; அதற்காகத்தான் காத்திருந்தேன்' என்றவுடன் சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

இவ்வாறாக அவர்கள் இருக்கும் காலங்களில் சட்டமன்றம் கலகலப்பாக இருக்கும். நல்ல கருத்துக்கள் கிடைக்கும்.

சட்டமன்றத்தில் அன்னாரது நினைவு என்றும் இருக்கும்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. கு. வடிவேல்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(கரூர் தொகுதி)

நான் 1977 முதல் 1980 வரை மற்றும் 1984 முதல் 1987 வரை கரூர் தொகுதியில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியிருக்கிறேன். நான் சார்ந்த இயக்கம் அ.இ.அ.தி.மு.க. அப்போது சட்டமன்ற நிகழ்வுகளில் முடிந்த அளவிற்கு தவறாமல் கலந்துகொள்வேன். நான் கரூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தமிழகத்தின் முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பு வகித்து வந்தார்கள். அது சமயம் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பொறுப்பு வகித்து வந்தார்கள். அது சமயம் தற்போதைய நீர்ப் பாசனத் துறை அமைச்சரும், அவை முன்னவருமான மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ரகுமான்கான், திரு. க. சுப்பு ஆகியோரும் சட்டமன்ற உறுப்பினர்களாக பணியாற்றி வந்தார்கள். இந்த மூவரும் சட்டமன்றத்தில் அடிக்கடி பேசுவதோடு பல விவாதங்களில் சுவாரசியமாக கலந்துகொள்வார்கள். இவர்கள் மூவரில் யார் சட்டமன்றத்தில் பேசினாலும், சட்டமன்ற அரங்கு நிறைந்திருக்கும். இவர்களது பேச்சுகளும், விவாதங்களும் காரசாரமாகவும், சுவாரசியமாகவும், உணர்ச்சிப்பூர்வமாகவும் இருக்கும். இவர்கள் பேச்சுகளையும், விவாதங்களையும் அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அன்றைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் உன்னிப்பாக கவனிப்பார்கள். இந்த மூன்று பேருக்கும் அந்தக் காலத்தில் இடி, மின்னல், மழை என்ற அடைமொழி பெயரும் உண்டு. இவர்களது பேச்சுகளும், விவாதங்களும் சுவாரசியமாக இருக்கும். ஒருமுறை சட்டமன்ற நிகழ்வு காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இன்றைய நீர்ப் பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு விவாதத்தில் ஈடுபட்டு வேகமாகவும், ஆக்ரோஷத்துடனும் உணர்ச்சிவசப்பட்டு பேசும்பொழுது திடீரென்று மயக்கமடைந்து, சட்டமன்றத்திலேயே மயங்கி கீழே விழுந்துவிட்டார். அவர் விழுந்த உடனே அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் உடனடியாக அவர் குடிப்பதற்காக வைத்திருந்த தண்ணீரை எடுத்துவந்து, திரு. துரைமுருகனுடைய முகத்தில் தெளித்து, எம்.ஜி.ஆர். தனது கைக்குட்டையால் திரு. துரைமுருகனின் முகத்தைத் துடைத்து, உடனடியாக ஆம்புலன்ஸ்

வரவழைத்து, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அப்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் "இவரை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று மனிதநேயத்தோடு சட்டமன்றத்தில் கூறினார். அப்போது யாரும் எதிர்பார்க்காத சூழ்நிலையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுந்து "நான் ஆண்டவன், அவரைக் காப்பாற்றுவேன்" என்று இருபொருள்பட கூறினார். உடனே சட்டமன்றத்தில் ஒரே சிரிப்பலை. இந்த நிகழ்வு இன்றும் என் கண்முன் நிழலாடுகிறது. இதிலிருந்து நான் தெரிந்துகொள்வது என்னவென்றால், இடம், பொருள், நேரம் இந்த மூன்றிற்கும் தகுந்தாற்போல் இரு பொருள்பட பேசக்கூடிய பேச்சாற்றல் பெற்ற வல்லவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்தான் என்பதை நிரூபித்துக் காட்டினார். இடத்திற்கும், நேரத்திற்கும், சூழ்நிலைக்கும் தகுந்தாற்போல் கேள்வி கேட்பதும், பதில் அளிப்பதும் (Timely questioning and answering), இரு பொருள்பட பேசுவதிலும் அவருக்கு நிகர் அவர்தான் என்பதை நான் ஆணித்தரமாக கூறமுடியும். இந்த சூழ்நிலையிலிருந்து மனிதநேயத்திற்கு (Humanity) எடுத்துக்காட்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்; அவருக்கு நிகர் அவர்தான் என்பதையும் நான் இங்கு ஆணித்தரமாக கூற முடியும். மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகனை படிக்க வைத்தவர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதேபோல் அவருக்கு அரசியல் குருவும், வழிகாட்டியும் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்தான் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே பல இடங்களில் கூறியுள்ளார்.

இதுபோன்ற பல நிகழ்வுகளில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நேரத்திற்கு ஏற்றாற்போல் பதில் அளிப்பதிலும், கேள்வி கேட்பதிலும் வல்லவர் என்பதை இதுபோன்ற சான்றுகள் சட்டமன்ற நிகழ்வுகளிலேயே நிறைய இடம்பெற்றுள்ளன என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. A.C.N. விஜயபாலன்
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(பூம்புகார் தொகுதி)

நான் 1980 முதல் 1987 வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலக்கட்டங்களில் கலைஞர் அவர்களின் சொல்லாற்றலோடும், சொல் நயத்தோடும், சீற்றம் மிகுந்த வார்த்தைகளில்கூட செவ்வாழைப் பழத்தின் இனிப்பையும் கலந்து கொடுக்கக்கூடிய பேராற்றல் படைத்தவர் கலைஞர் என்பதை நான் நினைவுகூர விரும்புகிறேன். கலைஞர் அவர்களின் அறிவையும், ஆற்றலையும், மக்கள் நலன் குறித்த இலட்சியங்களையும், நான் பார்த்துப் பார்த்து வியந்தவன். எனது சிறு வயது முதல் திராவிட இயக்கத்தில் பற்றுகொண்டு வளர்ந்தவன். பல நேரங்கள், கலைஞரின் பொதுக் கூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகளை எங்கோ ஓர் ஓரத்தில் நின்று பார்த்து மகிழ்ந்தவன்.

அவர் கழகத் தொண்டர்களுக்கு வீரத்தையும், விவேகத்தையும் ஊட்டுவதோடு எதிர்க்கட்சிகளின் எண்ணங்களைச் சிதறடித்தும், மக்கள் விரும்புகின்ற மகத்தான கருத்துகளையும் பேசப் பேச கேட்டுக்கொண்டே இருக்கலாம். எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், வல்லுநராக விளங்கக்கூடிய ஆற்றல் மிக்கவர் கலைஞர். தந்தை பெரியாரின் பாசறையில் பயின்று, பேரறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பியாக வளர்ந்து, தமிழ்நாட்டிற்குத் தலைவராகி, இந்தியாவுக்கு வழிகாட்டியாக விளங்கி, உலகத் தமிழர்களின் இதயங்களில் மாமன்னனாக அமர்ந்து புகழ்பெற்ற கலைஞரின் காலத்தில் நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன் என்பது மகிழ்ச்சியையும், மன நிறைவையும் கொடுக்கிறது. ஐம்பது ஆண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி பெருமை படைத்தவர் கலைஞர் என்பது போற்றத்தக்கது.

நான் முதன்முதலில் 1980 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இயக்கத்தின் சார்பில் சென்றவன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கலைஞர் எதிர்க்கட்சித் தலைவர். அவர் பேசுவதை ஆளுங்கட்சி பெரும்பகுதி ஏற்றுக்கொள்வது இல்லை. காரணம், அரசியல் சூழ்நிலை அப்படி அமைந்துவிடுகிறது. ஆனால் இதற்கெல்லாம் மாறாக, கலைஞர் சட்டமன்றத்தில் உரையாற்றுகிறார் என்றால், அன்று, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் சபைக்கு வந்துவிடுவார்கள். கலைஞர் பெரும்பாலும் நிதிநிலை அறிக்கையில் பேசுவார் அல்லது காவல் துறை மானியத்தில் பேசுவார். கலைஞர் பேசும்பொழுது காரசார விவாதங்கள் நடைபெற்றாலும், கலைஞர் அவர்களிடமிருந்து அடுக்கடுக்கான குறைகளும், குற்றங்களும் அவருக்கே உரிய பாணியில், நகைச்சுவையும், நயமும், சீற்றமும், சிங்காரத் தமிழும் கலந்து வார்த்தைகள் வந்து விழுந்துகொண்டே

இருக்கும். அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் மெய்மறந்து கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர் பேசி முடிக்கும்வரை, ஒருசில நிமிடங்கள் தவிர, குறுக்கீடு இல்லாமல், கலைஞர் உரையாற்றி அமர்வார். இப்படி ஒரு தலைவரா, இப்படி ஒரு கருத்தாழமிக்க கருத்துகளா என்று மெய்சிலிர்த்து மகிழ்வோம். அவருக்குப் பிறகு யாரும் அப்படி உரையாற்றியதும் இல்லை, இனி எப்போதும் அத்தலைவரைப்போல பார்க்கவும் முடியாது.

சட்டமன்ற வளாகத்தில் வரும் பொழுது, என்னைப் போன்றவர்கள், மரியாதை நிமித்தமாக வணக்கம் தெரிவிக்கும்போது அவர் தலைகுனிந்து, அந்த வணக்கத்தை ஏற்கும் பொழுது, இமயமலை போன்ற ஒரு மாமனிதர், தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாக திகழ்வார். எங்கோ ஓர் ஓரத்தில் நின்று அவர் ஆற்றிய உரைகளைக் கேட்டவன் நான். ஆனால் அவர் காலத்தில், அவர் அமர்ந்த சட்டமன்றத்தில் இந்த எளியவனும் அமர்ந்து, அவர் இதயக் கருத்துகளை கேட்டு மகிழ்ந்த எனக்கு இனி ஒரு காலம் எப்போது கிடைக்கும்; மறைந்து விட்ட கலைஞரே, மீண்டும் வருவாயா, என்னைப் போன்று இலட்சோப இலட்ச மக்களின் கனவுகளை நிறைவேற்றுவாயா, நிர்க்கதியாய் நிற்கிறோம். உன்னைக் காணாமல், உன் கருத்துகளைக் கேட்காமல். கலைஞரே, நீங்கள் ஒரு நடமாடும் சட்டமன்ற நாயகர் மட்டுமல்ல, மக்களின் மகத்தான நாயகனும் நீங்கள்தான். கலைஞரைப்போல் இனி யாரும் பிறக்கப் போவதில்லை. கலைஞருக்கு நிகர் கலைஞரே! உன் புகழ் ஓங்குக! தமிழ் இருக்கும்வரை தாங்களும் மக்கள் மனதில் வாழ்வீர்கள்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. மீ.அ. வைதியலிங்கம்,
சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்
(தாம்பரம் தொகுதி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள விழாக் குழு சார்பாக "சட்டமன்ற நாயகர் கலைஞர்" என்ற தலைப்பில் விழா சிறப்பு மலர் வெளியிட இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களால் ஒருங்கிணைந்த தாம்பரம் தொகுதியில் ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதுபோது நடந்த எனது நினைவுகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற நாயகர் அல்லவா! எனவே சட்டமன்றம் காலை 9.30 மணிக்கு துவங்குகிறது என்றால், கலைஞர் அவர்கள் காலை 9.15 மணிக்கே பேரவைத் தலைவர் அறைக்கு வந்து அவரோடு அன்றைய நிகழ்வுகள் பற்றி பேசிவிட்டு பேரவைத் தலைவர் வருவதற்கு முன் அவைக்கு வந்துவிடுவார். அதுமுதல் அவை முடிகிற வரையில் அவையைவிட்டு வெளியே செல்லமாட்டார். இது அவரது தனி குணமும், ஒழுங்குமுறையும் ஆகும்.

எந்த நிகழ்விலாவது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தால், போனவரை லாபம் என்று எண்ணாமல் ஆளுங்கட்சியைச் சார்ந்த முக்கிய நபர்களை அனுப்பி அவர்களை திரும்ப அவைக்கு அழைத்துவரச் செய்வார். இது அவருடைய அறிவுக்கூர்மைக்கும், சட்டமன்றத்தை நடத்தும் திறமைக்கும் மிகச் சிறந்த உதாரணமாகும்.

ஒரு முறை அமைச்சராக இருந்த அச்சிறுப்பாக்கம் இராமகிருஷ்ணன் அவர்கள் அன்றைய பேரவை அலுவல்படி, பேரவைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர், விதி 110-ன்கீழ் அறிக்கை அளிப்பார் என அறிவித்தார். ஆனால் அமைச்சர் அன்றைய பட்டியலை அவர் கையில் வைத்திருக்காததால், அறியாமல் 'அவைமுன் விரிவான அறிக்கை வைக்கப்பட்டுள்ளது' என கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு சொல்லுவதைப் போல் சொல்லிவிட்டார்.

உடனே சட்டமன்ற நாயகர் தலைவர் கலைஞர் அவர்கள், அமைச்சரிடம் அன்றைய பட்டியல் இல்லை என்பதை உணர்ந்து, உடனே 'அமைச்சர் புதியவர், எனவே நான் படிக்கிறேன்' என்று அவரே 110 விதியின்கீழ் படிக்க வேண்டியதை படித்தார். அமைச்சர் படிக்க வேண்டிய அறிக்கையின் நகல் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருந்தது என்பது அவருடைய சான்றாண்மைக்கும் நிர்வாகத் திறமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

எந்தக் கேள்விக்கும் தாமதிக்காமல் சமயோசிதமாக பதில் அளிப்பதில் கலைஞர் அவர்களுக்கு நிகர் இந்தியாவிலேயே யாரும் இருப்பதாக எனக்குப் படவில்லை.

சட்டமன்றத்தில் ஒரு முறை கேள்வி நேரத்தின்போது, மீன்வளத் துறை அமைச்சரிடம் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் "கடல் வாழ் உயிரினங்களைக் காட்சிப்படுத்த அருங்காட்சியகம் அரசின் சார்பில் அமைக்கப்படுமா?" என கேள்வி எழுப்பினார். அமைச்சரும் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும் எனவும் இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் பதிலளித்தார். உடனே என்னுடைய மரியாதைக்குரிய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுந்து "மனிதர்களுக்கும் அதுபோல் அருங்காட்சியகம் அமைக்கப்படுமா?" என்று துணைக் கேள்வி எழுப்ப, அதற்கு பதிலளிக்க அமைச்சர் யோசித்தார். உடனே தலைவர் கலைஞர் அவர்கள் எழுந்து 'மாண்புமிகு உறுப்பினர் ஒத்துழைத்தால் இந்த அரசு பரிசீலிக்கும்' என்றார். அவையில் சிரிப்பொலி அடங்க சில மணித்துளிகள் ஆகின. இப்படி இயல்புக்கு மாறான கேள்வி வரும்போது, நேரத்திற்கேற்ப இடையில் பதில் அளித்து அவையை கலகலப்பாக்குவதென்பது கலைஞரால் மட்டுமே முடியும்.

கலைஞர் அவர்கள் ஒரு தீர்க்கதரிசியாவார். இன்றைக்கு நாம் பேசும் பேச்சுக்கு நாளை எதிராளிகள் என்ன பதில் சொல்வார்கள் என்பதை அறிந்து வைத்திருக்கும் ஆற்றல் உள்ளவர் என்பதை எனது அனுபவத்தில் உணர்ந்ததை கூறுகிறேன். ஒரு முறை நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின் மீது பேசினேன். என்னுடைய உரையைக் கேட்டுக் கொண்டிருந்த கலைஞர் அவர்கள், மாலை என்னை அறிவாலயம் வரச்சொல்லி அழைத்தார். அங்கு என்னிடம், "இன்றைக்கு பல விஷயங்களை நன்றாக பேசினாய், ஆனால், முடிக்கும்போது என்ன சொன்னாய்? அது விளங்கவில்லையே!" என்றார். நான் பேசி முடிக்கும்போது இந்த மானியத்தில் உள்ளது மருந்தாக இல்லாமல், "குரூடாயிலும், கத்தாழையும் கலந்த கலவையைப் போல உள்ளது" என்று முடித்தேன்! என்று சொன்னேன். உடனே தலைவர் கலைஞர் அவர்கள் தவறு செய்து விட்டாயே, கத்தாழையும் மருந்துதான் என்று நாளை பதிலளிப்பார்களே என்றார்.

மறுநாள் அவையில் அப்போதைய அமைச்சர் செம்மலை அவர்கள் பதிலுரை கூற எழுந்ததும், 'மாண்புமிகு வைதியலிங்கம் பத்திரிக்கையில் தலைப்பு செய்தி வரவேண்டும் என்பதற்காக பலவற்றைப் பேசினார். கத்தாழையும் மருந்துதான் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார்.

தலைவர் கலைஞர் அவர்கள் முந்தைய நாள் என்னிடம் என்ன சொன்னாரோ அதனை அப்படியே அமைச்சரின் பதிலுரையின்போது சொன்னதைக் கேட்டதும் நான் மெய்மறந்துப் போய் இப்படிப்பட்ட தீர்க்கதரிசியை தலைவராகப் பெற்ற

நான் என்ன தவம் செய்தேன் என்று எண்ணி எண்ணி புளகாங்கிதம் அடைந்தேன்.

எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய திறமையையும், பாராட்டுவதிலேயும், உற்சாகப்படுத்துவதிலேயும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நிகர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

எனக்கு தலைவரால் கிடைத்த பெருமை, 2001 ஆம் ஆண்டு என்னை மீண்டும் 5-வது முறையாக தொடர்ந்து தாம்பரம் தொகுதிக்கு வேட்பாளராக அறிவித்து, பிரச்சாரத்திற்காக வரும்போது, ‘‘நான் கொண்டுவந்த திட்டங்களை, என் தொகுதியிலேயே நிறைவேற்றாத திட்டங்களை, என் தம்பி வைதியலிங்கம் இதுவரை சட்டமன்றத்தில் அதிகமான கேள்விகளைக் கேட்டும், அமைச்சர்களை நேரடியாக அழைத்து வந்தும் இந்தத் தொகுதியில் நிறைவேற்றித் தந்துள்ளார். அவருக்கு வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்" என்று பேசினார்.

அதன் விளைவாக, அத்தேர்தலில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தி.மு.க. தோல்வியை சந்தித்த வேளையில், அம்மாவட்டத்தில் தாம்பரம் தொகுதியில் நான் மட்டும் வெற்றி பெற்றேன். இது தலைவர் கலைஞரால் எனக்குக் கிடைத்த பெருமை என்பதனை குறிப்பிட்டு மகிழ்கிறேன்.

சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களின் புகழ் என்றைக்கும் மங்காது. காரணம் அவர் இன்னும் நம்மோடு, தமிழ்நாட்டு மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஒரு மனிதர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதைவிட அவர் என்ன சாதித்தார் என்பதுதான் முக்கியம்.

ஒரு தலைவருடைய உணர்வுகள், செயல்கள் போற்றப்படுகிறவரை அவர்கள் இறப்பதில்லை. எனவே தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர் செய்த செயல்களின் உணர்வுகள் இன்றைய முதல்வர் மாண்புமிகு தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் நிறைவேற்றப்படுவதால் தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்கிறார். அவரது புகழ் வாழ்கிறது என்று கூறி முடிக்கிறேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

கலைஞர் ஆட்சியில் சரித்திரம் படைத்த சட்டங்கள்

திரு. கே. சந்துரு,
மேனாள் நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்

இந்திய அரசமைப்பு சட்டம் இயற்றப்பட்டு முதல் தேர்தல் 1952–ம் வருடம் நடத்தப்பட்டது. அதில் மைனாரிட்டி அரசாக காங்கிரஸ் பதவியேற்றது. ஆனால் அந்த தேர்தலில் போட்டியிடாத தி.மு.க. 1957–ல் 15 இடங்களையும் 1962–ல் 50 இடங்களையும், 1967–ல் தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கட்டிலில் ஏறியது. முதன் முறையாக அந்த தேர்தலில்தான் 8 மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியுற்று எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தன.

மாநிலங்களுக்கான அதிக அதிகாரம் தேவை என்பதுடன், மாநிலங்களில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற முழக்கம் வலுப்பெற்றது. மற்ற மாநிலங்களில் ஆட்சி செய்த கட்சிகள் எப்படியிருப்பினும், 1967–க்குப் பிறகு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்று வரை எந்த ஒன்றியக் கட்சிகளும் ஆட்சியைக் கைப்பற்றவில்லை.

முதன்முறையாக நாடுமுழுதும் திரும்பிப் பார்க்கும் வகையில் ஒரு திராவிட அரசை நிலைநிறுத்தி 19 ஆண்டுகள் அதன் முதலமைச்சராக இருந்து தனது முத்திரையைப் பதித்தவர் கலைஞர் அவர்கள். தமிழகத்தில் வேறெந்த முதல்வரும் சாதிக்காத வகையில் 6863 நாட்கள் அவர் முதலமைச்சராக பதவி வகித்தது மட்டுமின்றி தனது பதவிக் காலத்தில் பல புதிய சட்டவடிவுகளை சட்டமன்றத்தில் நிறைவேற்றியது, மற்ற மாநிலங்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், சட்டத்திருத்தங்கள் பற்றி இப்பொழுது பார்க்கலாம்.

சமூகநீதி:

பட்டியலினத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சில பிரிவினர் மட்டுமே அரசு உரிமைகளை பெறுவதைப் பார்த்த அரசு அப்பட்டியலின சாதிகளுக்குள்ளே மிகவும் பின்தங்கியுள்ள அருந்ததியினருக்கு உள்ஒதுக்கீடு அளிக்கும் வகையில் சட்டத்திருத்தம் 2009–ல் செய்யப்பட்டது. அதேபோல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான பட்டியலில் இசுலாமியர்களின் வகுப்புப் பிரிவுகளும் சேர்க்கப்பட்டன.

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருவதோடு அப்பகுதிகளை அகற்றி அவர்களுக்கு புதிய குடியிருப்புகளை அமைத்துத் தருவதற்கான புதிய வாரியம் ஒன்று 1971–ல் ஏற்படுத்தப்பட்டது. அதுதான் தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (முன்னேற்றம் & அகற்றும்) சட்டம். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டன.

பெண்ணுரிமை:

இந்து சமூகத்தில் வாரிசுரிமை பிரச்சினையில் எப்பொழுதுமே பெண்கள்

பாரபட்சமாகவே நடத்தப்பட்டு வந்தனர். வெள்ளையர் ஆட்சி காலத்திலும் இப்படிப்பட்ட தவறான அணுகுமுறைதான் தொடரப்பட்டது. முதன்முறையாக 1956–ம் வருடம் இந்து வாரிசுரிமை சட்டம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்திலும் பெண்களுக்கான வாரிசுரிமை ஓரளவுக்கு சமன் செய்யப்பட்டாலும், இந்து கூட்டுக்குடும்ப சொத்துப்பிரச்சினைகளில் பெண்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்டு வந்தது. பெற்றோர்களின் சுயசம்பாத்தியத்தில் பெறப்பட்ட சொத்துகளில் சமபங்கு அளிக்கப்பட்டிருப்பினும், இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களில் அவர்கள் மகன்களுக்கு இருக்கும் உரிமை போல் உரிமை அளிக்கப்படாததோடு, அவர்கள் அச்சொத்து பற்றிய வாரிசுரிமையில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். இதைக் களையும் விதமாக 1989–ம் வருடம் வரலாற்று சிறப்புமிக்க இந்து வாரிசுரிமை சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன்படி மத்திய சட்டத்தில் 29 என்ற புதிய பிரிவு நுழைக்கப்பட்டது. அதன்மூலம் இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்றாலும் அதில் மகள்களுக்கும் மகன்களுக்கும் சமமான உரிமை கொண்டுவரப்பட்டது.

1998–ம் வருடம் எத்திராஜ் கல்லூரி மாணவி சரிகா ஷா சில கயவர்களால் பின்தொடரப்பட்டு அவர்களது தொல்லையினால் இறக்க நேரிட்டது. அதையொட்டி தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பு குரல்களினால் 1998–ம் வருட பொதுவெளிகளில் பெண்களை சீண்டுவதைத் தடுக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச்சமயத்தில் இந்தியாவில் எங்குமே அப்படிப்பட்ட சட்டம் நடைமுறையில் இல்லை.

தொழிலாளர் உரிமைகள்:

உலக தொழிலாளர்கள் தங்களை 8 மணிநேரம் மட்டுமே வேலைக்கு உட்படுத்த வேண்டுமென்று சிகாகோவின் தெருக்களில் போராடி உயிர்விட்ட தினத்தை மே தினம் என்று உலகம் முழுவதும் நினைவு கூறப்படுகிறது. அந்த மே தினத்தை கொண்டாடும் வகையில் அன்றைக்கு கட்டாய விடுமுறை அளிக்கும்படி 1969–ல் சட்டத்திருத்தத்தை தமிழ்நாடு செய்தது. இன்று இந்தியாவில் பல மாநிலங்களில் ஊதியத்துடன் கூடிய மே தின விடுமுறை எங்கும் இல்லை. மேலும் ஒன்றிய அரசு மே தினத்தை வேலை தினமாக மட்டுமே கடைபிடிக்கிறது. டாஸ்மாக் ஊழியர்கள் கடை வணிக நிறுவன சட்டங்களிலிருந்து விதிவிலக்கு பெற்றிருந்தாலும் அவர்களுக்கும் மே தினத்தை ஊதியத்துடன் கூடிய தினமாக அறிவித்தவர் முதல்வர் கலைஞரே.

1947–ம் வருடத்திய தொழிற்தகராறு சட்டத்தில் அமைக்கப்பட்ட தொழிலாளர் நீதிமன்றங்களும், தீர்ப்பாயமும் உத்தரவுகள் பிறப்பித்தாலும் அவ்வுத்தரவுகளை நிர்வாகங்கள் மீறும்போது அவற்றை செயல்படுத்துவதற்கான அதிகாரமின்றி இருந்தன. இதனால் பலன்கள் பெற்றிருப்பினும், அவற்றை தொழிலாளர்கள் அடையமுடியாத சூழ்நிலை இருந்தது. இதைக் களையும் வண்ணம் கலைஞர் அவர்கள் 2008–ம் வருடம் தொழிற்தகராறு சட்டத்தில் 11(3) என்ற பிரிவை ஏற்படுத்தி தொழிலாளர் நீதிமன்றங்கள் தங்களது உத்தரவுகளை செயல்படுத்தும் அதிகாரத்தையும் வழங்கி அதற்கான கூடுதல் செலவினத்திற்கான நிதிஒதுக்கீட்டையும் செய்து தொழிலாளர்களுக்கு

மகத்தான உதவி செய்தார். இதன் பிறகே ஒன்றிய அரசும் அதற்கான சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்தது.

நிலச்சீர்திருத்தங்கள்:

1968–ம் வருடம் கீழ்வெண்மணியில் 44 பட்டியலின மக்கள் தீயிட்டு கொல்லப்பட்ட செய்தி தமிழகத்தின் மனசாட்சியை தட்டியெழுப்பியது. 1969–ம் வருடம் தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நியாயமான கூலி சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்னர் கிழக்கு தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு மற்ற மாவட்டங்களிலுள்ள தொழிலாளர்களைவிட அதிகமான கூலி நிர்ணயம் செய்யப்பட்டதோடு, பண்ணையாள் முறையும் ஒழிக்கப்பட்டது.

பெரும் பண்ணை நிலங்களில் குத்தகை விவசாயம் செய்யும் சிறு விவசாயிகளின் குத்தகை காரணமின்றி ரத்து செய்யப்படுவதை தடுப்பதற்காக குத்தகைதாரர்களை பதிவு செய்யும் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களை விளைநிலங்களிலிருந்து வெளியேற்றுவது தடுக்கப்பட்டது. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் குத்தகை பதிவு செய்யும் ஆவணம்) சட்டம், 1969–ல் கொண்டுவரப்பட்டது.

பல கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு 1961–ம் வருடம் தமிழ்நாடு நிலசீர்திருத்தம் (உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி எந்த தனிநபரும் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்துக்கொள்ள முடியாது என்று விளைநிலத்திற்கான உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது. அப்படி உச்சவரம்பிற்கு மேல் வைத்திருக்கும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் சட்டம் கூறியது. அச்சட்டம் இயற்றப்பட்டும் கடுகளவுக்குக்கூட நிலங்கள் உச்சவரம்பிற்கு மேற்பட்டு வரவில்லை. 1970–ம் வருடம் முதல்வர் கலைஞர் மிகவும் துணிச்சலுடன் உச்சவரம்பிற்கான அளவை 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைக்க சட்டத்திருத்தம் கொண்டுவந்தார். இதன்மூலம் கணிசமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இப்படி தமிழ்நாடு பல சட்டங்களுக்கு இந்தியாவுக்கே முன்னோடியாக இருந்தது என்பதோடு அல்லாமல், இதர மாநிலங்களும், ஒன்றிய அரசும் அதைப் பின்பற்றி சட்டத்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன என்பது நமக்குப் பெருமையளிக்கிறது.

இப்படி சரித்திரம் பெற்ற சட்டங்களைக் கொண்டுவந்த கலைஞரின் நூற்றாண்டில் அவற்றை மீண்டும் நினைவு கூர்வது நம்மைப் பரவசமாக்கும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

முதல்வராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் கடமையாற்றிய தலைவர்

திரு. பழ. நெடுமாறன்,
தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் இயங்கிவரும் சட்டமன்றங்களில் நமது சட்டமன்றத்திற்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும், அதைத் தொடர்ந்து நாடு விடுதலை பெற்ற பிறகு 1956 ஆம் ஆண்டு மொழிவழியாகப் பிரிக்கப்படும்வரை இருந்த **சென்னை மாகாண சட்டமன்றத்தில்** தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சியின் சார்பில் பலர் முதலமைச்சர்களாகப் பதவி வகித்தனர். பிறகு 1937 சூலையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு வெற்றிப் பெற்று **இராசாசி** முதலமைச்சரானார். நாடு விடுதலை பெற்ற பிறகு காங்கிரசு கட்சியின் **சார்பில் டி. பிரகாசம், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராசா** ஆகியோர் முதலமைச்சர்களாகப் பதவி வகித்தனர். இவர்கள் யாரும் எதிர்க்கட்சித் தலைவர்களாக விளங்கியதில்லை.

21 வயது நிறைவடைந்தவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பெற்று முதலாம் பொதுத் தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பிறகு முதலமைச்சராக **இராசாசி** பொறுப்பேற்றார். 1956 ஆம் ஆண்டு மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பின்னர், அமைந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர்களாக **காமராசர், பக்தவத்சலம்** ஆகியோர் பதவி வகித்தனர். இவர்களும் எதிர்க்கட்சித் தலைவர்களாக விளங்கியதில்லை.

1957 ஆம் ஆண்டில் தி.மு.க. முதன்முறையாக தேர்தலில் போட்டியிட்டு 15 இடங்களில் வெற்றிப் பெற்றபோது, **அறிஞர் அண்ணா** அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றார். 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க.வின் சார்பில் 50 இடங்களில் வெற்றி பெற்றனர். எதிர்க்கட்சித் தலைவராக நாவலர் **இரா. நெடுஞ்செழியன்** அவர்களும், துணைத் தலைவராக **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்படச் செயலாற்றினர்.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. ஆளுங்கட்சியாக வெற்றி பெற்றது. அறிஞர் அண்ணா முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். அவரின் மறைவுக்குப் பிறகு 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி ஒன்றாம் நாள் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். மீண்டும் 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று கலைஞர் மீண்டும் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அதன் சார்பில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார். அதுவரை முதலமைச்சராக விளங்கிய கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்கத் தயங்கவில்லை.

தமிழ்நாட்டில் 1957 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற பெருமையும், குறிப்பாக, தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சராக வீற்றிருந்து ஆட்சி நடத்திய ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் தயங்காமல் பொறுப்பேற்று தனது சனநாயகக் கடமைகளைச் செவ்வனே ஆற்றிய பெருமையும் முதன்முதலாக கலைஞரையே சாரும்.

அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்து பின்னர் முதலமைச்சர் ஆனவர். அவருடைய தம்பி கலைஞர் முதலமைச்சராகவே இருந்து பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ஆனவர். இருவருமே இரு பொறுப்புகளையும் திறம்பட வகித்து சனநாயகக் கடமைகளை ஆற்ற தயங்கியதில்லை.

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதல்முறையாக தமிழக சட்டமன்றத்திற்குள் நான் அடியெடுத்து வைத்தேன். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞரின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்திருக்கிறேன். பல்வேறு பிரச்சனைகளில் அவருடன் எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. சட்டமன்றத்தில் நாங்கள் கடுமையான விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் அனைத்து கட்டங்களிலும் அவர் அனுபவமிக்க ஒரு நாடாளுமன்றவாதி என்பது எனக்குப் புலனாயிற்று.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அநேகமாக நாள்தோறும் சட்டமன்றத்திற்குத் தவறாது வந்தார். சட்டமன்ற நடவடிக்கையில் பங்கேற்றார். தாமே முதலமைச்சராக வீற்றிருந்த சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக உட்கார வேண்டுமா என்ற எண்ணம் அவருக்கு வந்ததில்லை. முதலமைச்சர் பதவி வகித்த காலத்தில் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் எத்தகைய பொறுப்புணர்வோடு கலந்துகொண்டாரோ அதற்கு கொஞ்சமும் குறையாத வகையில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க நேர்ந்தபோதும் கலந்துகொண்டார்.

சட்டமன்றத்தில் நான் அங்கம் வகித்தபோது, எதிர்க்கட்சித்தலைவரான கலைஞர் அவர்களுடன் பலமுறை எதிர் விவாதம் செய்திருக்கிறேன். பல கட்டங்களில் அவருடன் இணைந்தும் பேசியிருக்கிறேன். அப்போது நடைபெற்ற சில சுவையான நிகழ்ச்சிகளில் சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழீழ விடுதலை வீரர்களான **குட்டிமணி, ஜெகன்** ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, அந்த மரண தண்டனையை இரத்து செய்யவேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்த இந்திய அரசு முன்வரவேண்டும் என்பதற்காக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நான் கொண்டுவந்தேன். சட்டமன்ற விதிகளின்படி வெளிநாடு தொடர்பான பிரச்சனையை சட்டமன்றத்தில் விவாதிக்க

முடியாது. அப்போது சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய **இராசாராம்** அவர்களை நான் சந்தித்து இந்தத் தீர்மானத்தை அன்றே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தினேன். ஆனால், "அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். ஏகமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால்தான், இந்திய அரசு, இலங்கை அரசு ஆகியவை இத்தீர்மானத்தை மதிக்கும்" என அவர் எனக்கு அறிவுரை கூறினார்.

அதன்படியே சட்டமன்றத்தில் இருந்த பல்வேறு கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசினேன். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞரையும் சந்தித்து இத்தீர்மானத்திற்கு ஆதரவு தர வேண்டுமென வேண்டிக்கொண்டேன். அவரும் அதற்கு ஆதரவு அளிப்பதாகக் கூறினார். பிறகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களையும் சந்தித்துப் பேசியபோது அவரும் மகிழ்ச்சியுடன் ஆதரவு அளித்தார்.

சட்டமன்றத்தில் இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசினேன். அனைத்துக் கட்சித் தலைவர்களும் வழிமொழிந்து பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் இத்தீர்மானத்தை வரவேற்றுப் பேசிவிட்டு, "தமிழ்நாட்டிலும் ஈழப் போராளிகளைக் கைது செய்து சிறையில் வைத்திருக்கிறோம். அவர்களையும் விடுதலை செய்யவேண்டும்" என்று கூறினார்.

சென்னை, பாண்டி பசாரில் விடுதலைப்புலிகள் தலைவர் **பிரபாகரனும்,** பிளாட் அமைப்பின் தலைவர் **உமாமகேசுவரனும்** ஒருவரையொருவர் சுட்டுக்கொண்ட நிகழ்ச்சியையொட்டி காவல் துறையினர் இரு அமைப்புகளையும் சேர்ந்த பலரை கைது செய்து சிறையில் அடைத்திருந்தனர். இதைச் சுட்டிக்காட்டும் வகையிலேயே கலைஞர் மேற்கண்டவாறு கூறினார்.

அதற்குப் பின் மதிப்பிற்குரிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசும்போது, என்னுடைய தீர்மானத்திற்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்தார். அத்துடன் நிற்காமல், "குட்டிமணியைப் பிடித்து இலங்கை அரசிடம் ஒப்படைத்தது கலைஞர் ஆட்சியில்தான். அதைப்போல இப்போது நாங்கள் கைது செய்திருக்கிற ஈழப்போராளிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக்க மாட்டோம்" எனக் கூறினார்.

சட்டமன்றத்தில் பெரும் பரபரப்பு பரவியது. உடனடியாக நான் எழுந்து கலைஞர் அருகில் போய் "தயவுசெய்து நீங்கள் எதுவும் இதற்குப் பதில் கூறவேண்டாம். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற உதவுங்கள்" என வேண்டிக்கொண்டேன். என் குரலில் வெளிப்பட்ட பதட்டமும், உருக்கமும் அவரின் உள்ளத்தைத் தொட்டது போலும். "நான் எதையும் பேசமாட்டேன்" என என்னிடம் வாக்குறுதி கூறினார். அதன்படி அவர் முதலமைச்சருக்குப் பதிலளிக்கும் வகையில் எதுவும் பேசவில்லை. தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நடிகர்–வசனம் எழுதியவர்–ரசிகர்

மற்றொரு நாள் சட்டமன்ற தி.மு.க. உறுப்பினரான ரகுமான்கான் அவர்கள்

பேசும்போது "மருதநாட்டு இளவரசி" படத்தில் நடிக்கும்போது இப்படி வசனம் பேசினீர்களே! அதற்கு மாறாக இப்போது ஆட்சி நடத்துகிறீர்களே? எனக் குறிப்பிட்டார். உடனடியாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். எழுந்து, "அதைப்போன்ற வசனம் எதையும் நான் பேசவில்லை" என மறுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் எழுந்து "அந்தப் திரைப்படத்திற்கு வசனம் எழுதியவனே நான்தான். ரகுமான்கான் சொல்லியது சரியானது" என்றார்.

சட்டமன்றம் பெரும் பரபரப்புக்கு ஆளானது. முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் மேலும் எவ்வாறு மோதிக்கொள்ளப்போகிறார்கள் என்பதைக் காண அனைவரும் காத்திருந்தனர்.

அப்போது நான் எழுந்தேன். பேரவைத் தலைவர் மாண்புமிகு இராசாராம் அவர்கள் குறுக்கிட்டு "அவர் வசனம் எழுதியவர் இவர் நடித்தவர், இவர்கள் அது குறித்துப் பேசலாம். நீங்கள் யார் நடுவில் குறுக்கிடுவதற்கு?" என்றார்.

"நான் படம் பார்த்த ரசிகன். எழுதியவரும் வசனத்தை மறந்திருக்கலாம். நடித்தவரும் மறந்திருக்கலாம். ஆனால், படம் பார்த்த ரசிகன் என்கிற முறையில் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். ஆகவே, ரசிகன் என்னும் தகுதியினால் எனக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது" என்று கூறினேன்.

முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே குலுங்க குலுங்கச் சிரித்தனர். அந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் நான் எதுவும் பேசாமல் அமர்ந்துவிட்டேன். பேரவைத் தலைவரும் இந்த மோதலைத் தவிர்ப்பதற்காக அடுத்த பிரச்சனைக்குச் சென்றுவிட்டார்.

முதலமைச்சரும், அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்வரிசையில் வீற்றிருந்த என்னை நோக்கி கைகளை அசைத்து வரும்படி அழைத்தனர். எழுந்து சென்று கலைஞருக்கு அருகே அமர்ந்தேன்.

இருவருமே "ரசிகன் என்ற முறையில் ஏதோ சொல்வதற்கு வந்தீர்கள். ஆனால் சொல்லாமலே உட்கார்ந்துவிட்டீர்களே" எனக் கேட்டனர்.

"உண்மையைச் சொல்லவா?" என்றேன். "அதற்காகத்தானே உங்களை அழைத்தோம் என்றார்கள்"

"நான் படமே பார்க்கவில்லை" என்று கூறியதும், இருவரும் முதலில் திடுக்கிட்டாலும், பிறகு சிரித்தார்கள்.

"இந்தப் பிரச்சனையில் இருவரும் சூடாகிவிட்டீர்கள். எனவே அதைத் தணிப்பதற்காகத்தான் அப்படிப் பேசினேன்" என்று நான் கூறியபோது, இருவருமே என்னைப் பாராட்டினார்கள்.

இப்படி சட்டமன்றத்தில் நடைபெற்ற எத்தனையோ சுவையானதும், சூடானதுமான நிகழ்ச்சிகள் இன்னமும் எனது மனத்திரையில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. கோ. விசுவநாதன்
நிறுவனர் & வேந்தர், வி.ஐ.டி. பல்கலைக்கழகம்

முதல் சந்திப்பு

1958–ல் லயோலா கல்லூரியில் நான் இளங்கலை இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருந்தபோது இளங்கலை முதலாமாண்டில் சேர்ந்த திரு. முரசொலி செல்வம் அவர்களுடனான நட்பில் என்னை கோபாலபுரம் அழைத்துச் சென்று கலைஞரை எனக்கு அவர் அறிமுகம் செய்து வைத்தார்.

வேலூர் விழா

1965–ல் சென்னை மாநகராட்சி மேயராக தேர்ந்தெடுக்கப்பட்ட என்னுடைய நண்பர் மைனர் மோசஸ் அவர்களுக்கு நான் ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவில் சிறப்பு பேச்சாளராகக் கலந்துகொண்ட கலைஞர் அவர்கள் மேயரையும், விழா நடத்திய என்னையும் பாராட்டினார்.

1967 பாராளுமன்றத் தேர்தல்

1967 பாராளுமன்றத் தேர்தலில் நான் வந்தவாசி தொகுதியில் போட்டியிட விரும்பி, பேரறிஞர் அண்ணாவிடம் நேரிலும், கலைஞர், முரசொலி மாறன், முரசொலி செல்வம் ஆகியோரிடமும் எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். ஏற்கெனவே இரண்டாவது முறையாக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் மூத்த தலைவர் திரு. தர்மலிங்கத்திற்கு கலைஞரின் குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாகவும், முரசொலி மாறனும், முரசொலி செல்வமும் எனக்கு ஆதரவாகவும் இருப்பதால், கலைஞர் நடுநிலை வகித்து விட்டார். எனினும் திரு. தர்மலிங்கத்தின் ஆதரவுடன் பேரறிஞர் அண்ணா என்னை வந்தவாசி தொகுதி பாராளுமன்ற வேட்பாளராக அறிவித்தார். சட்டமன்றத்திற்கு போட்டியிட்டாலும், கலைஞர் அவர்கள் அனைத்து தேர்தல் பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு எல்லா வேட்பாளர்களுக்கும் ஆதரவு தெரிவித்ததுடன், என் தொகுதியில் "காகிதப்பூ" எனும் நாடகம் நடத்தியும் ஆதரவு தந்தார்.

1967–ல் பொதுப் பணித் துறை அமைச்சராக கலைஞர்

1967–ல் பாராளுமன்றத் தேர்தலில் நான் வெற்றி பெற்றேன். திராவிட முன்னேற்றக் கழகமும் மகத்தான வெற்றிபெற்று தமிழ்நாட்டில் ஆட்சியமைத்தது. கலைஞரும் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்றார். பதவியேற்பு விழா முடிந்ததும், நான் புதிதாக வாங்கிய செவர்லே காரில் கலைஞரை கோபாலபுரம் அழைத்துச் சென்றேன். கலைஞரின் துணைவியாரும், சகோதரிகளும், எங்களுக்கு பந்திப் பாய் போட்டு உணவு பரிமாறியது இன்றும் பசுமையான நினைவுகள்.

முதலமைச்சராக தலைவர் கலைஞர்

அண்ணா மறைவுக்குப் பிறகு யார் தமிழக முதலமைச்சர் என்ற பேச்சு அரசியல்

வட்டாரத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் எழுந்தது. அப்போது கலைஞர் என்னிடம் "உள்ளது உள்ளபடி தயங்காமல் சொல், மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்; கட்சிக்காரர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்" என்று கேட்டார். அப்போது நான், கட்சிக்காரர்கள் நீங்கள் முதலமைச்சராவதை விரும்புகிறார்கள் என்றேன். அவ்வாறே கலைஞர் முதலமைச்சரானார். டெல்லியில் அவர், பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் உட்பட முக்கிய தலைவர்களைச் சந்திக்கச் செல்லும்போதெல்லாம் கூடவே என்னையும் அழைத்துச் செல்வார்.

கலைஞரின் தீர்க்க தரிசனம்

தற்போதுபோல் தமிழகத்திலிருந்து, டெல்லிக்கான சிறப்பு பிரதிநிதி என்று யாரும் இல்லாததால், தமிழ்நாடு அரசு சம்பந்தமான கோப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்படும்போது, தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களே சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சென்று மத்திய அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு எனக்கு துறை சார்ந்து ஏற்பட்ட அனுபவத்தால் 1971–ல் மத்திய உள்துறை செயலாளரான திரு. எல்.பி. சிங், ஐ.பி.எஸ். என்பவர் தமிழகத்தின் ஆளுநராக நியமிக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாகக் கலைஞரிடம் கூறினேன். அப்போது ஒரு காவல் துறை அதிகாரி தமிழ்நாட்டின் ஆளுநராக வருவதை கலைஞர் விரும்பவில்லை. எனினும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த கே.கே.ஷா தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

மத்திய அரசிடம் சுமூகமான உறவு

நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, கலைஞர் என்னிடம் மத்திய அரசால் மாநிலத்தில் நடக்க வேண்டிய பணிகள் நிறைய இருப்பதால், பாராளுமன்றத்தில் விரும்பத்தகாதவற்றை பேசக்கூடாது என எனக்கு உத்தரவே போட்டுவிட்டார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பேசுவதால் மத்திய, மாநில அரசுகளின் உறவில் சிக்கல் வரக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

1980–ல் நான் அ.தி.மு.க. சார்பாக அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது அ.தி.மு.க. ஆளுங்கட்சி. எதிர்க்கட்சித் தலைவராக கலைஞர் இருந்தார். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து நான்தான் முதலில் பேசினேன். அந்தத் தீர்மானம் பற்றி நான் பேசிவிட்டு இறுதியாக முதலமைச்சர் எம். ஜி.ஆர்.–க்கு பணம், புகழ் எல்லாம் கிடைத்தது. ஆனால், நல்ல எதிர்க்கட்சித் தலைவர்தான் அவருக்கு கிடைக்கவில்லை என்று பேசி, என் பேச்சை முடித்தேன். இதனை அ.தி.மு.க. உறுப்பினர்கள் ரசித்தனர். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்னை பார்த்த பார்வையில், அவர் என்மீது கோபமாக இருக்கிறாரா என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், 1998–ல் வேலூர் பொறியியல் கல்லூரி விழாவிற்கு கலைஞரை அழைப்பதற்காக

நான் என் மகன்களுடன் அவரது வீட்டுக்குப் போனேன். நிகழ்ச்சிக்கு வருவதாக என்னிடம் ஒப்புக்கொண்டார். அதுபற்றி பேசி முடிந்ததும், என் மகன்களை பார்த்து உங்கள் அப்பா சட்டசபையில் என்னைப் பற்றி என்ன பேசினார் தெரியுமா? நல்ல எதிர்க்கட்சித் தலைவர் கிடைக்கவில்லை என்று பேசியதை நினைவுபடுத்தி, இப்படி எல்லாம் என்னைப் பற்றி உங்கள் அப்பா பேசினார் என்று சொன்னார். உண்மையில் அப்படிப் பேசியதை நான் மறந்துவிட்டேன். ஆனால், கலைஞர் மறக்கவில்லை. இவையெல்லாம் அவர் நினைவாற்றலுக்கு ஓர் உதாரணம். அப்போதும் உன் அப்பா பேசியதால் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. என்னைப் பற்றி உங்கள் அப்பா என்ன பேசினார் என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னேன். இப்படி என் மகன்களிடம் விளக்கம் சொன்னார் கலைஞர்.

மாநில உரிமை என்பது அண்ணா விதைத்த விதை. அதை ஆல் போல் தழைக்க வைத்தவர் கலைஞர். மாநில உரிமையை அவர் என்றும் விட்டுக் கொடுத்ததில்லை. இன்று வரை தி.மு.க. அந்த உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு கலைஞர்தான் காரணம். மாநில உரிமை என்றால், இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் முதலில் நினைவுக்கு வருபவர் நிச்சயம் கலைஞராகத்தான் இருப்பார். அதுதான் அவரது பலம், ஒரு பொதுக் கூட்டத்தில் இந்திராகாந்தி அம்மையார், எதிரியாக இருந்தாலும் நண்பனாக இருந்தாலும் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பவர் கலைஞர் என்று பாராட்டினார். இதுதான் உண்மை. கலைஞர் தனது அரசியல் வாழ்வில் எத்தனையோ ஏற்ற இறக்கங்களைக் கண்டவர். ஆனால், சளைக்காமல் போராடியவர். அவர் ஓர் அரசியல் போராளி என்பதுதான் உண்மை. விமர்சனங்களை எதிர்கொள்ளும் பக்குவம் கொண்டவர் கலைஞர். அவரது சட்டமன்ற செயல்பாடு எப்போதும் ஆக்கபூர்வமாக இருக்கும், அது மக்கள் நலம் சார்ந்திருக்கும். ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி அப்படித்தான் அவர் செயல்பாடு இருந்தது. ஆளுங்கட்சியாக இருக்கும்போது எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதில் சொல்ல என்றும் அவர் தயங்கியது கிடையாது. அவரது பதில்கள் ஆணித்தரமாகவும், உறுதியாகவும் இருக்கும். அவர் விரல் நுனியில் புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு பேசுவார். அவர் சட்டமன்ற பேச்சே சுவாரசியமாகத்தான் இருக்கும்.

அவர் எல்லா நாளிதழ்களையும், வார இதழ்களையும் படித்துவிடுவார், குறிப்பாக எதிர்க்கட்சி ஆதரவு நாளிதழ்களை முதலில் படிப்பார். அவர் முதல்வராக இருக்கும்போது, நாளிதழ்களில் ஏதாவது ஓர் இலாகா பற்றி பிரச்சினை என்று செய்தி வந்திருந்தால் காலையிலேயே சம்பந்தப்பட்ட துறை அமைச்சர், துறைச் செயலாளர் இருவரையும் தொடர்புகொண்டு அந்தச் செய்தியை சுட்டிக்காட்டி,

இதுபற்றிய அறிக்கையை எனக்கு காலை 10 மணிக்கு கோட்டையில் தாருங்கள். அந்தச் செய்தி உண்மையாக இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லிவிடுவார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர் என்னிடம், கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் நாங்கள் எல்லா நாளிதழ்களையும் வாங்கி படிக்க ஆரம்பித்து விடுவோம். அவரைப்போல் அதிகாலை எழுந்து நாங்களும் எல்லா நாளிதழ்களையும் படித்துப் பார்த்துவிட்டு நம் இலாகா பற்றி சர்ச்சைக்குரிய செய்தி இல்லை என்று நிம்மதியுடன் எங்கள் பணியை ஆரம்பிப்போம். இந்தப் பழக்கம் பிறகும் தொடர்ந்தது என்று குறிப்பிடுவார்கள். கலைஞரின் நிர்வாகத் திறமைக்கு இதுவே ஒரு சிறந்த உதாரணம்.

1956-ல் அறிமுகமான கலைஞருடனான நட்பு கடைசி வரை தொடர்ந்தது. அவரை கடுமையாக விமர்சனம் செய்தெல்லாம் பேசியிருக்கிறேன். ஆனால், அந்த விமர்சனத்தை எல்லாம் அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அவரை சந்திக்கும்போதெல்லாம் நான்தான் சங்கடப்படுவேன். அவர் பெருந்தன்மையாக என்னோடு நட்பாகத்தான் பழகினார். அதுதான் கலைஞர்.

2002-ல் வி.ஐ.டி. பல்கலைக்கழக விழாவில் கலந்துகொள்வதற்காக கலைஞர் வந்திருந்தார். அந்த விழாவில் பேசிய பல்கலைக்கழக பேராசிரியர், வி.ஐ.டி. அகில இந்திய தரவரிசைப் பட்டியலில் எட்டாவது இடத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டார். அதற்குப் பிறகு பேசிய கலைஞர், வி.ஐ.டி. விரைவில் யாரும் எட்டாத இடத்தில் இருக்கும் என்று வாழ்த்திப் பேசினார். அந்த வாழ்த்துதான் இன்று உண்மையாகி இருக்கிறது. வேலூரின் அடையாளம் வி.ஐ.டி. என்று இன்று ஆகிவிட்டது. அதற்குக் கலைஞரின் அந்த மனம் திறந்த வாழ்த்துதான் காரணம்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

"கொள்கையை சட்டமாக்கிய கோமான்"

திரு. ப. திருமாவேலன்,
தலைமை செய்தி ஆசிரியர்,
கலைஞர் தொலைக்காட்சி.

"நான் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். நான் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக என் உயிரை பணயமாக வைத்துப் போராடுவேன்" என்று முதன்முதலில் முதலமைச்சர் ஆனபோது கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் சொன்னார்கள்.

"எனக்கென்று சாதிப் பெருமை கிடையாது. மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன். எனக்கென்று குடும்பப் பாரம்பரியம் கிடையாது. ராவ் பகதூர், திவான் பகதூர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று கூறும் பெருமை எனக்கில்லை, கல்லூரிப் பட்டம் எனக்கில்லை. நான் புகுந்ததெல்லாம் ஈரோட்டுப் பள்ளியும், காஞ்சிக் கல்லூரியும் தான். நான் பட்டம் பெறாதவன் என்றாலும், பகுத்தறிவுப் பணியாளன். சாதிப் பெருமை இல்லை என்றாலும், அண்ணாவின் நீதியே என் சாதியென பதிப்பவன் நான்" என்று பேசினார். அப்படித்தான் செயல்பட்டார். அத்தகைய மக்களுக்காகத்தான் இயக்கம் நடத்தினார். மக்கள் மன்றத்தில் எதைப் பேசினாரோ அதையெல்லாம் சட்டமன்றத்தில் சட்டங்களாகக் கொண்டு வந்தவர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். அதில் சில..

மாநில சுயாட்சித் தீர்மானம் (1974)

'மாநிலத்தில் சுயாட்சி–மத்தியில் கூட்டாட்சி' என்பது கலைஞர் வகுத்துக் கொடுத்த ஐம்பெரும் முழக்கங்களில் ஐந்தாவது முழக்கம் ஆகும். மத்தியில் உள்ள அதிகாரங்கள் எவையெல்லாம் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதற்கான அறிக்கையை வழங்க 1969 ஆம் ஆண்டு நீதிபதி இராசமன்னார் தலைமையில் ஒரு குழுவை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைத்தார்கள். இதில் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஏ. இலட்சுமணசாமி அவர்களும், உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்திரா (ரெட்டி) அவர்களும் இடம்பெற்றிருந்தார்கள். இக்குழு கொடுத்த பரிந்துரைகளை, தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட குழு உறுப்பினர்களான முரசொலி மாறனும், இரா. செழியனும் ஆராய்ந்து அறிக்கை கொடுத்தார்கள். அமைச்சரவை இதுகுறித்து பரிசீலித்தது. பின்னர் 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் நாள் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநில சுயாட்சிக்காகத் தீர்மானம் நிறைவேற்றிய முதல் சட்டமன்றம், தமிழ்நாடு சட்டமன்றம்தான். முதல் முதலமைச்சர், கலைஞர் அவர்கள்தான்.

ஏ.என். சட்டநாதன் ஆணையம் (1969)

பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதற்காகவும் கடந்த காலங்களில் அவர்கள் பெற்ற சலுகைகளை மேலும் அதிகப்படுத்துவதற்காகவும், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைத்தார்கள். அந்தக் குழுவின் தலைவராக ஏ.என். சட்டநாதனும், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகளான சின்னப்பன், ஜமால் உசேன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருந்தார்கள். இக்குழுவின் பரிந்துரைப்படி பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 25 விழுக்காட்டில் இருந்து 31 விழுக்காடாகவும், பட்டியலின மக்களுக்கான இடஒதுக்கீடு 16 விழுக்காட்டில் இருந்து 18 விழுக்காடாகவும் முதலமைச்சர் கலைஞரால் உயர்த்தி வழங்கப்பட்டது. உருது பேசும் இசுலாமியர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள். கொங்கு வேளாளர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டார்கள்.

நியாயக் கூலிச் சட்டம் 1969

கீழ்வெண்மணியில் நடந்த கொடூரத்தை யாராலும் மறந்திருக்க முடியாது. நியாயமான கூலி கேட்ட விவசாயத் தொழிலாளர்களை தீயிட்டு கொளுத்திய கொடூரம் நடந்தது. இப்பிரச்சினை குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதியரசர் கணபதியாபிள்ளை தலைமையில் விசாரணை ஆணையத்தை முதலமைச்சர் அண்ணா அவர்கள் அமைத்தார்கள். இக்குழு கொடுத்த பரிந்துரைகளை அடிப்படையாக வைத்து தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நியாயக் கூலிச் சட்டத்தை 1969 சூலையில் கொண்டு வந்து அமல்படுத்தினார், முதலமைச்சர் கலைஞர்.

குடியிருப்பு மனை அவர்களுக்கே சொந்தம்

விவசாயத் தொழிலாளர்கள் குடியிருந்த மனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கும் குடியிருப்பு மனைச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார், முதலமைச்சர் கலைஞர். மிராசுதார்களின் நிலங்களில் வீடு கட்டிக் குடியிருந்த 1 லட்சத்து 75 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் இதனால் பலன் பெற்றனர். இவற்றில், 1 இலட்சம் பேர் பட்டியலின சமூகத்தவர்கள். "இந்தச் சட்டத்தை முதல்வர் கருணாநிதி ஒரே ஒரு துளி இங்க் செலவில் பிரகடனம் செய்து விட்டார். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், சொந்த வீட்டில் படுக்கப் போகிறோம் என்ற ஆனந்த உணர்வோடு படுப்பார்கள். இதற்காக விவசாயத் தொழிலாளர் வர்க்கம் சிந்திய இரத்தத் துளிகள் கொஞ்சமல்ல" என்று பேசினார், பொதுவுடமை இயக்கத் தலைவர் மணலி கந்தசாமி.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர்–1970

ஆலயங்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும், ஆலயங்களில் கர்ப்பக்கிரகங்கள் வரை சமத்துவம் வர வேண்டும் என்று தந்தை பெரியார் போராடினார். இதுதொடர்பான கிளர்ச்சியை 1970 ஆம் ஆண்டு தந்தை பெரியார் தொடங்கினார். அதற்கான பயிற்சி பெறுகிறவர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் அவர்கள் தேர்வு பெற்று அர்ச்சகர்களாக

வரலாம், அதற்கு விதிமுறைகள் வகுப்போம் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். 2-12-1970 அன்று இந்து சமய அறக்கட்டளைத் திருத்த மசோதா கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடுத்தார்கள். 14-3-1972 அன்று தீர்ப்பு வெளியானது. 'இப்படி சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உரிமை உண்டு. கோவிலில் அர்ச்சகர் நியமிப்பது வகுப்பு வேறுபாடற்ற நடவடிக்கைதான். இது மதத்தில் தலையிடும் விவகாரமாக இல்லை' என்று தீர்ப்பு அளித்தது. அதேநேரத்தில் இது நடைமுறைக்கு வரவேண்டுமானால் அரசியல் சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது. ஒன்றிய அரசு அப்படி ஒரு திருத்தம் கொண்டு வரவில்லை.

1973 டிசம்பர் 24 அன்று தந்தை பெரியார் மறைந்தபோது, 'அவரது நெஞ்சில் முள்ளோடுதான் புதைத்திருக்கிறோம்' என்று முதல்வர் கலைஞர் குறிப்பிட்டார். அந்த முள்ளை அகற்றி, ஆலயங்களில் அனைவரும் அர்ச்சனை செய்யும் உரிமையை நிலைநாட்டி பணி நியமனங்களையே செய்து காட்டிவிட்டார் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

ஆதிதிராவிடர் அறங்காவலர்

கோவில் அறங்காவலர் குழுவில் கட்டாயம் பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவர் இடம்பெற வேண்டும் என்பதை சட்டத்தில் 1970 ஆம் ஆண்டே வழிவகை செய்தவர், முதலமைச்சர் கலைஞர். அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவர் இடம்பெற வேண்டும் என்பதை 1997 ஆம் ஆண்டு சட்டமாக்கினார்.

நில உச்சவரம்பு மசோதா-1970

1961 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஐந்து பேர் அடங்கிய குடும்பத்துக்கு 30 ஏக்கர் நிலம் வைத்துக்கொள்ளலாம் என உச்சவரம்பு கொண்டு வரப்பட்டது. இதனை 15 ஏக்கராகக் குறைக்கும் நில உச்சவரம்பு மசோதாவை 31-3-1970 அன்று சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார், முதலமைச்சர் கலைஞர். நிலச் சீர்திருத்த அடிப்படையிலும், சமத்துவத்தை நிலைநாட்டவும் இச்சட்டம் கொண்டு வரப்படுவதாக அவையில் பேசினார் முதலமைச்சர். பொது நலனுக்கு விரோதமாக பலரிடமும் நிலம் அதிகளவில் சேர்ந்துள்ளதைத் தடுப்பதற்கான சட்டமாக இது கொண்டு வரப்பட்டது.

அந்த உச்சவரம்புச் சட்டத்தால் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது 1 இலட்சத்து 8 ஆயிரத்து 68 ஏக்கர் ஆகும். அதில் அரசு கைப்பற்றியது 88 ஆயிரத்து 146 ஏக்கர் ஆகும். நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட நிலம் 62 ஆயிரத்து 682 ஏக்கர். இதனால் பலனடைந்த உழவர்கள் 38 ஆயிரத்து 504 பேர்.

பேருந்துகள் நாட்டுடைமை-1973

தேசியமயக் கொள்கை அடிப்படையில் 100 மைல் தொலைதூரப் பேருந்துகளை அரசுடைமை ஆக்கினார் முதலமைச்சர் கலைஞர். அந்தக் காலத்தில் இருந்த தனியார் பஸ் கம்பெனிகள்

எல்லாம் அரசுடைமை ஆக்கப்பட்டு அரசின் போக்குவரத்துக் கழகங்களாக மாறின. பல்லவன், பாண்டியன், சேரன், சோழன், அண்ணா, பெரியார், கட்டபொம்மன் ஆகிய பெயர்களில் பேருந்துகள் ஓடத் தொடங்கி, 1973 ஆம் ஆண்டு முழுமையாக பேருந்துகளை அரசுடைமை ஆக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதை எதிர்த்து பேருந்து நிறுவன அதிபர்கள் உச்ச நீதிமன்றம் சென்றார்கள். 1983 ஆம் ஆண்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், அரசின் சட்டம் செல்லத்தக்கதே எனக் குறிப்பிட்டது.

முதலீட்டில் பங்கு

தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு–முதலீட்டில் பங்கு என்கிற திட்டத்தை 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு, மசோதா கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசின் கம்பெனிகள் சட்டத்தை திருத்த வேண்டும் என்று சொல்லி அந்தச் சட்டத்தை அன்றைய ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துவிட்டது.

இலஞ்ச ஊழல் தடுப்பு மசோதா–1973

பொதுவாழ்வில் ஈடுபட்டோர் இலஞ்ச ஊழல் குற்றத் தடுப்பு மசோதாவை 12–2–1973 அன்று கொண்டு வந்தவர், முதலமைச்சர் கலைஞர். பொதுவாழ்வில் ஈடுபடுவோர்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுகளை ஆராய தகுதியுடைய உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் ஆணையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டது. மாவட்ட நீதிபதியாக இருப்பவர்களை கூடுதல் ஆணையர்களாக நியமிக்கலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஏழு ஆண்டு சிறை வழங்கும் சட்டம் இது. பொய்யான குற்றச்சாட்டை வைத்து, நிரூபிக்கப்பட்டால் அவருக்கும் தண்டனை உண்டு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் இந்தச் சட்டத்தை வரவேற்றார். சென்னைக்கு அப்போது வந்திருந்த ஜன சங்கத் தலைவர் அத்வானி வரவேற்றார். 5–4–1973 அன்று இச்சட்டம் நிறைவேறியது. நீதிபதி வெங்கடாத்திரி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியில் அந்தச் சட்டத்தை திரும்பப் பெற்று விட்டார்கள்.

முழு மதுவிலக்கு–1974

சட்டமன்றத்தில் துணை மதிப்பீடுகளை அவையில் 14–8–1974 அன்று வைத்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் முழு மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்பதை அறிவித்தார். செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளின்போது தமிழ்நாட்டில் முழுமையாக மதுவிலக்கை அமல்படுத்துவேன் என்றார். அன்றைய தினம்தான் 'குதிரைப் பந்தயம் அறவே ஒழிக்கப்படும்' என்றும் அவையில் அறிவித்தார். இதற்கான இரண்டு மசோதாக்களும் அவையில் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டன. குதிரைப் பந்தயத் தடைக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை

பெண்களுக்கு ஆண்களைப்போல சொத்தில் சம பங்கு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற

செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இதனை 1989 ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் சட்டமாக ஆக்கினார்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்–1990

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் சட்டம், இந்தியாவிலேயே முதன்முதலாக 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அறிமுகம் செய்தவர் முதலமைச்சர் கலைஞர். இதற்கான உத்தரவை 17–11–1990 அன்று முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினருக்கு தனி ஒதுக்கீடு

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தனி இடஒதுக்கீடு வழங்கும் கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்தது. இதனை ஏற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் 13–3–1989 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை எடுத்து அறிவித்தார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் இருபது விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்படும் என்பதே அந்த முடிவாகும். மொத்தம் 107 சமூகங்கள் இதனால் பலனடைந்தன.

பழங்குடியினருக்கு தனி ஒதுக்கீடு

ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் சேர்த்து 18 விழுக்காடு இடஒதுக்கீடு என இருந்தது. அதனை ஆதி திராவிடருக்கு 19 விழுக்காடு என்றும், பழங்குடியினருக்கு தனியாக ஒரு விழுக்காடு என்றும் மாற்றி சட்டம் கொண்டு வந்தார், முதலமைச்சர் கலைஞர்.

பெண்கள் இடஒதுக்கீடு

வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கினார், முதலமைச்சர் கலைஞர்.

33 விழுக்காடு இடஒதுக்கீடு

ஊராட்சி உறுப்பினர் பதவிகளில் 30 விழுக்காடு பெண்களுக்கு என திருத்தச் சட்டத்தை 1989 ஆம் ஆண்டு நிறைவேற்றினார், முதலமைச்சர் கலைஞர். 1996 ஆம் ஆண்டு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார் கலைஞர்.

மண்டல் குழு பரிந்துரைகளை அமல்படுத்த தீர்மானம்–1989

சமூகம், கல்வி ஆகிய அளவீடுகளின் அடிப்படையில் பின்தங்கிய மக்களை கைதூக்கி விட சிறப்புத் திட்டங்களை உருவாக்கிய மண்டல் குழு பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரி சட்டமன்றத்தில் 12–5–1989 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார் முதலமைச்சர் கலைஞர். மண்டல் ஆணையப் பரிந்துரைகள் அமல்படுத்தப்படும் என்று பிரதமர் வி.பி. சிங் 7–8–1990 அன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அறிவித்தார். இதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை 20–8–1990 அன்று பேரவையில் நிறைவேற்றினார் முதலமைச்சர் கலைஞர்.

தமிழ் கட்டாயம்–2006

பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக படிக்கப்பட வேண்டும் என்பதை அரசாணையாக முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார். அது நீதிமன்றத்தால் முடக்கப்பட்டதால் 1 முதல் 10

ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிக் கல்வி கட்டாயம் என்ற சட்டத்தை 31-5-2006 அன்று நிறைவேற்றினார், முதலமைச்சர் கலைஞர். இதையும் எதிர்த்து வழக்கு போடப்பட்டது. அரசின் சட்டம் செல்லும் என்று 23-8-2007 அன்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றத்துக்கும் போனார்கள். உச்ச நீதிமன்றமும் இச்சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்தது.

சமச்சீர்க் கல்விச் சட்டம்-2010

பல்வேறு முறை கல்வி முறையை அகற்றி அனைவருக்கும் பொதுவான கல்வி முறையைக் கொண்டு வர முதலமைச்சர் கலைஞர் முயன்றார். அதற்காக முன்னாள் துணைவேந்தர் முத்துகுமரன் தலைமையில் குழு அமைத்தார். இதனை அடிப்படையாக வைத்து தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம்-2010 நிறைவேற்றப்பட்டது. அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சி இக்கல்வி முறைக்கு தடை போட்டது. இதனை உயர் நீதிமன்றம் கண்டித்தது. உச்ச நீதிமன்றமும் சமச்சீர்க் கல்வியை உறுதி செய்தது. தனியார் பள்ளிகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பதை கட்டுப்படுத்தும் சட்டத்தையும் 7-12-2009 முதல் செயல்படுத்தினார், முதலமைச்சர் கலைஞர்.

அருந்ததியர்க்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு

அருந்ததியர் இன மக்களின் நிலை குறித்து ஆராய நீதியரசர் ஜெனார்த்தனம் தலைமையில் ஆணையம் அமைத்தார் முதலமைச்சர் கலைஞர். அவர் அளித்த பரிந்துரைப்படி தமிழ்நாடு அருந்ததியர் சட்டம், 2009 என்ற புதிய சட்டத்தை 26-2-2009 அன்று நிறைவேற்றினார் முதலமைச்சர் கலைஞர். முதுகில் அறுவைச் சிகிச்சை செய்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் முதலமைச்சர் கலைஞர். எனவே, அன்றைய துணை முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்த சட்டமுன்வடிவை அவையில் தாக்கல் செய்தார். இதன் காரணமாக அருந்ததியர் சமுதாய மக்கள் கல்வி, வேலைவாய்ப்புகளை அதிகம் பெற்றார்கள்.

இசுலாமியர்க்கு தனி இடஒதுக்கீடு

14-8-2007 ஆம் நாள் பிற்படுத்தப்பட்டோருக்கான 30 விழுக்காடு இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக பிற்படுத்தப்பட்ட இசுலாமியர்க்கு 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்க ஆணையிட்டார் முதலமைச்சர் கலைஞர்.

நிலம் வழங்குதல்

நிலமற்ற ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் 17-9-2006 அன்று திருவள்ளூரில் தொடங்கினார். 2011 வரை ஐந்தாண்டு காலத்தில் 1 இலட்சத்து 79 ஆயிரத்து 2 விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்கப்பட்டது.

சென்னை

மெட்ராஸ் என்ற பெயரை 31-8-1996 அன்று 'சென்னை' என்று சட்டமியற்றி மாற்றியவர், முதலமைச்சர் கலைஞர்.

தை முதல் நாள்

தை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என 1921 ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர்கள் கூடி முடிவெடுத்தார்கள். இதை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் கலைஞர், 23–1–2008 அன்று அறிவிப்பு செய்தார். 1–2–2008 அன்று பேரவையில் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2009 ஆம் ஆண்டு தை முதல் நாள் 'தமிழ்ப் புத்தாண்டின்' தொடக்கமாகக் கொண்டாடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அமைந்த அ.தி.மு.க. அரசு இச்சட்டத்தை நீக்கிவிட்டது.

மக்கள் மன்றத்தில் போராடிய–வாதாடிய கருத்துகள் அனைத்துக்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்குவதில் குறியாக இருந்தவர், முதலமைச்சர் கலைஞர். பதவியை பொறுப்பாகக் கருதினார். பொறுப்பை கொள்கை வழியில் பயன்படுத்தினார். கொள்கையை எந்நாளும் காத்தார். 'பதவி என்பது கிரீடம் போன்றது, கொள்கை என்பது தலையைப் போன்றது. நான் தலையைப் பற்றித்தான் கவலைப்படுபவன்' என்றவர் கலைஞர். தனக்கு கிரீடம் கிடைத்தபோதெல்லாம் கொள்கைக்கு அதனைச் சூட்டியவர் தமிழினத் தலைவர் கலைஞர்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

ஆசையை நிறைவேற்றிய தலைவர் !

திரு. நக்கீரன் கோபால்
ஆசிரியர், நக்கீரன்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

உலகில் புகழைப்போல் நிலைத்திருப்பது எதுவும் இல்லை என்று இதன்மூலம் உலகிற்கு உணர்த்துகிறார் வள்ளுவர்.

இதற்கு ஏற்ப, நூற்றாண்டு நாயகரான நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அழியாத புகழாக நமக்கிடையே எல்லா நிலையிலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞரைப் போன்ற ஒரு பன்முகத் திறன்கொண்ட தலைவரை, தமிழகம் இதுவரை கண்டதில்லை. அரசியலிலும், இலக்கியத்திலும், திரையுலகிலும் அவர் பொறிக்காத முத்திரையே இல்லை.

தந்தை பெரியாரின் தளபதியாக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, கோடானுகோடித் தமிழர்களின் உடன்பிறப்பாக திகழ்ந்த அந்த மாமனிதரை, என் மாணவப் பருவத்தில் இருந்தே தூரத்தில் இருந்தபடியே ரசித்து வந்திருக்கிறேன். அவர் காலத்தில் வாழ்வதே பெருமை என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவனாகத்தான் இருந்தேன். அப்படிப்பட்ட எனக்கு அவரோடு நெருங்கிப் பழகுகிற வாய்ப்பும், அவர் அன்புக்குப் பாத்திரமாகும் பேறும், அவர் இட்ட கட்டளைகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் பொறுப்பும் கிடைத்தது என்றால், அது இயற்கை எனக்குக் கொடுத்த பெருங்கொடை என்றே கருதுகிறேன்.

மீசை அரும்பாத இளம் வயதினிலேயே முரசொலியை நடத்த ஆரம்பித்த கலைஞர் அவர்கள், ஒரு பிறவிப் பத்திரிகையாளர் ஆவார். கருத்துப் புரட்சிக்கான கருவியாக முரசொலியை, அந்த பிஞ்சுப் பருவத்திலேயே ஏந்தத் தொடங்கிய கலைஞர், ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக்காலம் அந்த இதழின் லகானைக் கையில் பிடித்திருந்தார். முரசொலியைத் தனது முதல் பிள்ளையாகக் கருதிய மாண்பாளரும் அவர்தான். சோதனையான காலகட்டத்திலும்கூட அவர் முரசொலியைக் கைவிட்டதில்லை. அரசியலில் களமாடிய கலைஞர், முரசொலியைத் தனது கைவாளாகச் சுழற்றினார். அதன்மூலம் அவர் நிகழ்த்திய சாதனைகளையும், சந்தித்த போராட்டங்களையும் பட்டியலிட்டால், அதுவே தனி நூலாகிவிடும்.

தமிழ்நாட்டின் முதல்வர் பதவியில் இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்தபோதும் அவர் தன்னை ஒரு பத்திரிகையாளராகக் காட்டிக்கொள்வதில்தான்

பெருமிதம்கொண்டிருந்தார். பத்திரிகையாளர்களோடு நேரடித் தொடர்பையும் வைத்திருந்தார். அந்த அளவிற்கு பத்திரிகைத் துறைமீது அளவு கடந்த காதல் கொண்டவர் கலைஞர். அதனால், கருத்துச் சுதந்திரத்தின் மீதும், பத்திரிகை மற்றும் ஊடகத்தினரின் நலன்களின் மீதும் மாறாத அக்கறை கொண்டவராகவே திகழ்ந்தார்.

ஊடக சுதந்திரம் தழைக்க வேண்டும் என்று நெருக்கடி காலமான மிசா நேரத்திலேயே, களமிறங்கிப் போராடிய ஊடகப் போராளி என்கிற பெருமையும் அவருக்கு உண்டு. ஒரு பத்திரிகை உலக முன்னோடி என்கிற முறையிலும், தனிப்பட்ட வகையிலும் அவரை என் வாழ்வின் முன்னோடியாக ஏற்றுக்கொண்டு நடைபோட்டு வருகிறேன். சோதனைகள் எதிர்ப்படும்போதெல்லாம் கலைஞரின் மன உறுதியை நினைத்துக்கொள்வேன். அப்போது ஓர் அசுரபலம் ஏற்படும். அது அத்தனை சோர்வையும் துடைத்தெறிவதாக இருக்கும். அந்த வகையில் உணர்வோடும், நினைவோடும் இரண்டறக் கலந்திருக்கும் மின்சார ஆற்றலாக அவர் இருக்கிறார்.

வீரப்பன் விவகாரத்தில் என்னை அரசுத் தூதராக நியமித்து, வீரப்பனால் கடத்தப்பட்டவர்களை மீட்கும் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்தார் கலைஞர். குறிப்பாக, கர்நாடக மக்களால் உயிருக்கு நிகராகப் போற்றப்பட்ட கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரை வீரப்பன் கடத்தியபோது, அவரை மீட்க, இரு மாநில அரசுத் தூதுவராக என்னை நியமிக்கச் செய்தார் அன்றைய தமிழக முதல்வரான கலைஞர். அவரை பத்திரமாக மீட்காவிட்டால் கர்நாடகாவில் வாழும் ஒரு இலட்சம் தமிழர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்கிற நிலைமை இருந்ததைப் புரிந்துகொண்டு, அந்த மீட்பு முயற்சியில் அதிக ஆர்வம் காட்டினார்.

அவர் விருப்பப்படி ராஜ்குமாரை மீட்க, என் குழுவினரோடு காட்டுக்குள் நான் சென்றபோது, போலீஸ் துறையிலேயே இருக்கும் கருப்பாடுகளால் என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்று, என் பாதுகாப்பிற்காக கலைஞர் துப்பாக்கியையும் கொடுத்து அனுப்பினார் என்றால், அவரது பொறுப்புணர்வையும், அவர் என்மீது காட்டிய அக்கறையையும் என்னவென்பது? அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளால்தான் ராஜ்குமார் பத்திரமாக மீட்கப்பட்டார். கர்நாடக மாநிலத் தமிழர்கள் சந்திக்க இருந்த பேராபத்தும் நீங்கியது.

என் தனிப்பட்ட வாழ்வில் என்மீது கலைஞர் காட்டிய பேரன்பையும் இங்கே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

அரசாங்கத்தில் கடைநிலை ஊழியராக இருந்த ஒருவரின் மகனாகப் பிறந்து, சராசரி குடும்பத்தில் இருந்து வந்த நான், கடும் உழைப்பால் இன்று இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். என்னை விரும்பி ஏற்றுக்கொண்ட பத்திரிகைத் துறையில் உண்மை, நேர்மை, துணிவு ஆகியவற்றை மட்டும் மூலதனமாகக் கொண்டு,

என்னால் ஆனதைச் செய்திருக்கிறேன். சமூக விழிப்புணர்வுக்கான களத்தில் எழுதுகோலையே வாளாக சுழற்றுவதால், எதிர்ப்புகளுக்கும், எதிரிகளுக்கும் பஞ்சம் இருந்ததே இல்லை.

எனினும், எதற்கும் அஞ்சாமல் இதுவரை வெற்றிகரமாகவே நடைபோட்டு வருகிறேன். என்னையும், என் இதழியல் பயணத்தையும் கூர்ந்து கவனித்த அன்றைய முதல்வரான கலைஞர் அவர்கள், எனது நக்கீரன் பணிகளைப் பாராட்டி 2009 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதை 2010–ல் எனக்கு வழங்குவதாக அறிவித்தார். அரசுக்கும், அதிகாரத்திற்கும் எதிராகவே போராடிக் கொண்டிருக்கிற என்னை, அரசுத் தரப்பே விருது கொடுத்துப் பாராட்ட முன்வருகிறது என்றால், அது எத்தனை மதிப்பான அங்கீகாரம்!

இதை, போராட்டங்களில் கிடைத்த என் காயங்களுக்கெல்லாம் கிடைக்கிற ஒத்தடமாகக் கருதினேன். அதிலும், தாய்மை மனம் கொண்ட கலைஞர் கொடுக்கும் ஒத்தடம். அந்த விருதளிப்பு விழாவில் பங்கேற்க இருந்த என்னை, அரசு சார்பில் உயர் அதிகாரிகள் என் வீட்டிற்கே வந்து அழைப்பார்கள் என்று என்னிடம் சொல்லப்பட்டது. எனக்கு அப்போது ஒன்று தோன்றியது.

என் தந்தையார் நெடுஞ்சாலைத் துறையில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றியவர். அதனால், தன் மேலதிகாரிகளுக்கு கார் கதவைத் திறக்க வேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது என் மனதில் உறுத்தலாகவே இருந்து வந்தது. இதுபோன்ற சங்கடங்களை எல்லாம் சுமந்த என் தந்தையாருக்கு, இந்த விழாவின்மூலம் ஒரு பெரும் கௌரவத்தை ஏற்படுத்த விரும்பினேன். அதாவது, பணியில் இருந்தபோது, உயர் அதிகாரிகளுக்கு கார் கதவைத் திறந்துவிட்ட அவருக்கு, இப்போது அந்த அதிகாரிகள் வந்து கார் கதவைத் திறந்து வரவேற்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது அவர் வாழ்ந்த நேர்மையான வாழ்க்கைக்கு பெருமை தருவதாக இருக்கும் என்றும் நினைத்தேன். எனவே, எனது இந்த ஆசையை, முதல்வர் கலைஞரிடமே தெரிவித்தேன்.

என் உள்ளத்தை உணர்ந்த அவர், ஒரு புன்னகையோடு, அதை ஏற்றுக்கொண்டார். அவர் உத்தரவுப்படி, எனக்கு பதில் என் தந்தையை அரசு மரியாதையோடு விழாவுக்கு அழைக்க, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே எங்கள் வீட்டுக்கு வருகை தந்தார்கள். என் தந்தையாருக்கு அன்போடு வணக்கம் தெரிவித்து, மிகுந்த மரியாதையோடு அந்த விழாவிற்கு அவரை அவர்களே காரில் அழைத்துக்கொண்டு வந்தார்கள். விழா அரங்கின் வாசலிலும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அவர் வந்த காரின் கதவைத் திறந்து என் அப்பாவை வரவேற்றனர். இந்தக் கண்கொள்ளாக் காட்சியை நானும் என் குடும்பத்தினரும் கண்கள் கசியக் கசிய நெகிழ்ச்சியோடு பார்த்தோம்.

இப்படி ஒரு சம்பவம் கற்பனையிலும் நடக்கக்கூடிய ஒன்றா? ஆனால், பத்திரிகையாளனான என் மனதைக் குளிரவைக்க, எனது அந்த

ஆசையையும் நிறைவேற்றிக் காட்டினார் கலைஞர். காரணம், கலைஞர் கீழ்மட்டத்தில் இருந்து வந்தவர். ஒரு சாமானிய எளிய குடும்பத்தில் இருந்து மேலே உயர்ந்து வந்தவர். அதனால் சாமானியர்களின் வாழ்க்கை நிலையும் அவர்களின் உணர்வும் அவருக்குப் புரியும்.

நான் விருது பெற்றதை விடவும், என் தந்தையாருக்கு கலைஞர் அரசு கொடுத்த மரியாதைதான் என்னை அதிகம் மகிழவும், நெகிழவும் வைத்தது. என் தந்தைக்கு இதைவிட நான் என்ன செய்துவிட முடியும். இந்த அதிசயமெல்லாம் கலைஞர் முதல்வர் பொறுப்பில் இருந்ததால்தான் நடந்தது. அதுமட்டுமா?

இந்த விழாவில் என் தந்தையாரின் காதுகள் குளிரக் குளிர என்னை தாயுள்ளத்தோடு மனம் திறந்து பாராட்டினார் கலைஞர். அப்படிப் பாராட்டும்போது தந்தை பெரியார் விருதை என்னுடைய நண்பர் நக்கீரன் கோபால் இன்றைக்கு பெற்றிருக்கின்றார். நக்கீரர் என்றாலே கண்டிப்பானவர். சிவனுக்கே பயப்படாதவர். பரமசிவனையே எதிர்த்தவர். அவரோடு எதிர்த்து வாதாடியவர். எனவே, என்னதான் நான் முதலமைச்சராக இருந்தாலும், இங்கே அவர் என்னை பாராட்டினாலும், என்னை எதிர்த்தும் கொடி தூக்கக் கூடியவர் நக்கீரன் கோபால். அவர் தூக்கக்கூடிய கொடி, நியாயத்திற்காக தூக்கப்படுகின்ற கொடி என்றால் அந்தக் கொடிக்கு தலை தாழக்கூடியவன் நான் என்பதை அவர் அறிவார்.

அப்படிப்பட்ட நக்கீரன் கோபால் படாத சிரமங்களை எல்லாம் பட்டிருக்கிறார். எழுத்துரிமைக்காக போராடி, மனித உரிமைக்காக போராடி, அவரை அந்த போர்க்களத்திலே சிக்க வைத்து, அவருக்கு கொடுக்க முடியாத துன்பங்களையெல்லாம் கொடுத்து, கொடுமைகளை எல்லாம் இழைத்து, அந்தக் கொடுமைகளை எல்லாம் தாங்கிக்கொண்டு, நம்முடைய தமிழ்ச் சமுதாயத்திற்காக எழுத்துரிமைப் போராட்டத்திலே எதிர்நின்று வென்று, இன்று நம்மிடையே, நம்முடைய வாழ்த்துகளுக்கும், புகழாரங்களுக்கும் உரியவராக வீற்றிருக்கிறார் நக்கீரன் கோபால் என்று நக்கீரனின் குணத்தையும் போராட்டத்தையும் உணர்ந்தே என்னை மனதார வாழ்த்தினார்.

அப்படிப்பட்ட தலைவருக்கு நிகழும் இந்த நூற்றாண்டு விழாவை, அவர் புதல்வரான தளபதியே முதல்வராக இருந்து சிறப்புற நடத்துவதைப் பார்க்கும்போது, நெஞ்சம் நெகிழ்கிறது. கலைஞர் அவர்கள் மறையவில்லை; அவர் தளபதி வடிவில் நம்முன் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார் என்கிற ஆறுதலும் நம்பிக்கையும் மனதிலே பிறக்கிறது.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

Thiru. R. Bhagwan Singh,
Former Executive Editor,
Deccan Chronicle, Chennai.

In the long–cherished legacy of the Tamil Nadu Legislature, right from the Madras Presidency era, several doyens of Indian polity have embellished its proceedings by their wise counsel, skilful debates, stunning oratory and deep commitment to the all–round development of the state and the betterment of living for the underprivileged. Kalaignar Karunanidhi, undoubtedly, occupies prime place in this illustrious list of destiny definers.

It was in Kalaignar's tenure as the Chief Minister that epoch–making legislations were passed to launch far–reaching government schemes to help the under privileged students and so on. The details of all those many schemes are well–known to all of us, such as the free colour TV sets to poor households launched on Anna's birthday Sept 15, 2006 which mainly empowered the woman at home by providing news and information about the happenings in the outside world apart from of course providing wholesome entertainment to relieve them from stress and work fatigue; distribution of two acres of land to each landless family by retrieving waste land: reducing the price of rice under PDS to Rs.2 per kg and later further slashing the cost down to one rupee a kilo under the PDS (Public Distribution System); introducing the comprehensive 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்', a Medical Insurance Scheme, in 2009, to reduce the burden for the poor and middle–class from the hefty hospital bills; and, the law passed in 1989 conferring Equal Property Rights to Women. Many of these schemes came to be replicated by other state governments in the country due to the deep impact they had on the improvement of the socio–economic Status in Tamil Nadu. While his PDS scheme became a model for the other State Chief Ministers to follow, the free rice scheme made sure that the poor did not sleep hungry.

And when economic liberalisation since mid–1990s' offered an opportunity to expand the state's economy and generate more jobs and incomes for the people, particularly the youth, Kalaignar was not to lose sight of its growth potential and batted for a mixed economy in the state interest. The 'Tidel Park' established under his tenure in Chennai paved the way for TN's emergence as topper in software and building on the state's advantages it had in the manufacturing sector, like textiles and automobile. The Kalaignar regime in no time cleared the proposals for Hyundai to build its factory at Irungattukottai near Sriperumbudur. All these super–schemes and mega projects were piloted by Kalaignar through the state legislature and by proper discussions and debates that gave even his bitterest rivals their best participatory opportunities. Kalaignar took great pride in stating repeatedly that he was "first a journalist and then only a politician".

Kalaignar used '110' very rarely as it was meant to be used rarely; because, he loved discussion and debating in the House. Due to his supreme confidence in himself and his strong convictions on administration, he would never shy away from discussions and debates on any issue raised by the rival members in the House, or any matter that occurred outside that needed discussion in the legislature. Kindly allow me to refer to a couple of instances to prove this point.

I must recall here Kalaignar's masterly presentation of a detailed analysis of the Sri Lankan Tamil crisis in the Assembly in April 2008–drawing his canvas to reflect the situations both prior to Rajiv Gandhi's assassination and post–May 1991 tragedy on Tamil Nadu soil. He then piloted a historic resolution urging the Manmohan Singh government to give up its 'hands off policy' and re–initiate a meaningful dialogue process between the warring parties in Sri Lanka to find an amicable solution to the festering Tamil question.

"They (Congress) have already borne heavy losses; they have lost their great leader Rajiv Gandhi in pursuance of the Tamils' cause. So, to fault or blame them now is futile," he had then said, reflecting political pragmatism and also a new sense of reconciliation towards the Congress. Earlier in August 2007, Kalaignar demonstrated his statesmanship by visiting Satyamurthy Bhavan, the first time any DMK leader had gone to the state Congress party headquarters.

Kalaignar's quick wit and the skills of sharp repartee have been legendary; and the state legislature witnessed numerous instances that justified his fame. Let me recall his verbal duel with Dr H V Hande, himself a veteran in the Assembly, during a session sometime in 1971–72. When Dr Hande branded the DMK as a "third–rate government", Kalaignar with his usual elan turned the tables on the erudite adversary saying, "இது மூன்றாம் தரம் அல்ல; நான்காம் தரம் அரசு". (This is not a third–rate government, but a fourth–rate government). What he was alluding to was that his government also stood stoutly behind the 'Shudras', who were unjustly discriminated against in the four–fold 'varna' system in vogue from ancient India. Needless to say, Kalaignar walked away with all the glory that day, demonstrating yet again his presence of mind and skills of sharp repartee laced with an unmatched sense of humour.

In July 1996, Chief Minister Kalaignar M Karunanidhi moved a resolution in the Assembly for reviving the Legislative Council. "This Assembly resolves that a Legislative Council may be created in the State of Tamil Nadu, and that necessary legislation may be passed under Clause (1) of Article 169 of the Constitution of India, containing such provisions for the amendment of the Constitution as may be necessary to give effect to the provisions of the Law and also such supplemental, incidental and consequential provisions as the Parliament may deem necessary", he said while moving the

resolution that led to one of the liveliest debates in that Assembly. Kalaignar replied to the debate before the resolution was put to vote and got passed. He was in top form with his wit and the use of similes that stunned the members, explaining how the Assembly and the Council, the latter as the House of Elders and experienced people, had an organic relationship. He recalled his late mentor C.N. Annadurai's example of 'cup and saucer', to drive home that when the Assembly gets too heated up over an issue or legislation, like a 'cup' of coffee being too hot to handle, it is the wise counsels of the Upper House who act like a 'saucer to moderate the heat and make the beverage palatable in the larger public interest. Kalaignar's succinct reply tinged with humour was applauded by one and all, in the Assembly and outside.

His sessions in the Assembly were all so enriching and enlightening to both hardcore politicians and to those deeply immersed in Tamil literature–obviously because of his hard–fought climb in politics and his self–developed mastery expertise in Tamil language. Take for example his budget speech of 1971–72 that had set out a comprehensive blueprint for the all–round development of Tamil Nadu and the roadmap for the Dravidian Model of Governance.


Being a journalist representing 'upcountry' publications for most of the four–decades–plus career, I did not get the opportunity to cover all the Assembly sessions of Kalaignar and had to be content choosing only those with some special 'star–value' to my newspapers and magazines published outside Tamil Nadu. I wish I did not have to repent this at this late hour in life. Some of my close friends in the media are more blessed; they had witnessed most of Kalaignar's legislative glitter. One of them is MR Venkatesh and I asked him to give me a short summary of his deep feelings from covering Kalaignar in the Assembly. Here he goes.

"Kalaignar was a quintessential legislator. With his wit, repartee, amazing memory, penchant for debate and strong commitment to democracy, he could wade into any issue, hear out what his political opponents had to say, and on most occasions that I have been witness to, would maximize agreement even on any controversial issue in the House despite political differences. It was never a dull moment when he was in the Assembly, even the Question Hour he would religiously make the best use of for conveying information to people at large, not just to the MLAs", says Venkatesh.

My journalist–friend further recalled: "Even after 2011 Assembly polls, when DMK had to sit in the Opposition, his being confined to a wheelchair did not deter Kalaignar from making it to the legislature. He would come to sign the register, have a word with the media and leave. He used to say if only there was a disabled–friendly seating arrangement for him in the House, he would have sat through the

proceedings! Such was his liking for the deliberative process, which he believed was essential for good democracy and was best captured in a vibrant Assembly".

Kalaignar was one of the greatest parliamentarians of post–independent India and a hardcore democrat. I am lucky to have been a journalist in his illustrious era. We do miss him a lot.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

The Leader of the masses

Thiru. Manoj Bhattacharya,
General Secretary, Revolutionary Socialist Party

In the present context of our dear country we should recapitulate the memories of some of the leaders of the masses of the past who could rise from a downtrodden section in the society to the centre stage of the state administration and politics. At the present India an all pervasive and pernicious allegiance to blind faith, obscurantism and irrational socio–economic thoughts have taken the nation to a perilous or abject reality. Such is eroding the noble social values to push the country to the ominous disaster. The nation is being ruthlessly divided and sub–divided in the name of caste, creed and religion. The age old religious superstitions are rigorously spread to push the country backward. A religion based cultural ultranationlism is being advanced.

He became an atheist not as a fashion or whim but as the philosophical commitment. He was popularly known as Kalaignar by a vast majority of the Tamil people. He had the element of artistry in his gene as being born in a culturally significant family who used to earn their meager living by playing music to the populace.

Thiru M. Karunanidhi was an indomitable crusader for the mother tongue of the Tamil people. He could consciously plunge into the mass movement as a mere 14 year old student. He fought against the forcible imposition of Hindi way back in 1938–1940.

Late Muthuvel Karunanidhi belonged to the Isai Vellalar caste that was treated as a most backward caste by the Brahminical social order. The people of such backward castes were ill treated by the higher castes in all the possible manners. Almost the same is being practised in different parts of the country even today.

This could not deter the young Karunanidhi to choose a valuable or respected life not only for himself, but the entire discriminated sections of the Tamil society. His unrelenting activism in this regard was never in a narrow sense but as an indivisible part of the social movement that was closely associated with the historic freedom struggle against the tyrannical British colonialism.

Thiru M. Karunanidhi was a close compatriot of the renowned social thinker and a protagonist of the social upsurge as great Periyar E.V. Ramasamy. His Self Respect movement pioneered or rebelled

against the Brahminical dominance, gender and caste inequality in Tamil Nadu. Kalaignar could assimilate the philosophy of such epoch making struggle and declared his non allegiance to any institutional religion. He could gather the courage to declare himself as an Atheist at a very early life. Simultaneously, his deep rooted affection to cultural activities for the common was advanced with all sincerity. Within a short span of time he became an inseparable entity in the Tamil drama and film world. He became a noted writer in his mother tongue. He was also an actor and script writer of repute. This exceptionally talented attributes could place him to a great height even before he joined in the political activities. The common people of the state conferred him with the prestigious recognition as the Kalaignar.

Late Karunanidhi was closely associated with the Dravidian political movement of the great C.N. Annadurai, who found the DMK on the 17th September 1949 in his presence. He was deeply influenced by the rationalist movement at a young age much before joining politics. His grit, determination and a clear vision of perspective could lead him to success in the popular political movement.He was elected as a Member of the Legislative Assembly only at the age of 33. Since then he never looked back. He can be termed as invincible in all the elections he contested in his life time. He led the Dravidian Movement from the front and also could make a mark in the National political scenario. Thiru M. Karunanidhi led the Tamil Nadu Assembly as Chief Minister for a long 6,863 days with dignity and to the best interest of the people in general.

This is his centenary year that must be celebrated to uphold his philosophy of his life. I pay my regards to such immortal fighter who braved all the odds. Long live his memory.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

நூறாண்டு கடந்து வாழும் கலைஞர்

முனைவர் கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.

பேரவைச் செயலகத்தில் 1989 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றிய காலங்களில் 1989–1991, 1996–2001, 2006–2011 ஆகிய ஆண்டுகளில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், பேரவையில் அவர் பங்கேற்ற நாட்களில் அவரின் செயல்பாட்டுத் திறனைக் கண்டு வியப்புற்ற காலங்கள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. நான் பணியாற்றிய காலத்தில் நடைபெற்ற பேரவை நிகழ்வுகள் அனைத்தையும் முன்வைக்க இயலாது எனும் நிலையில், சிலவற்றை மட்டும் இங்கே எடுத்தியம்ப எண்ணுகிறேன். சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் சிறப்புறப் பணிபுரிந்தமைக்கு கொண்டாடப்பட்ட சட்டமன்றத்தில் கலைஞர் பொன் விழா 2007 ஆம் ஆண்டு கொண்டாடப்படுகையில், அவ்விழா தொடர்பான பணிகளில் பணியாற்றிய எனக்கு, கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், ''சட்டமன்ற நாயகர்–கலைஞர்'' எனும் குழுவின் செயலாளராகப் பணியாற்றும் அரிய வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஆம் ஆண்டு, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அரசு ஊழியர் பணி ஓய்வு பெறும் வயது குறைக்கப்படும் என்று அரசு ஊழியர்கள் அச்சப்படும் செய்திகள் வருவதைக் குறிப்பிட்டு, அதனைத் தெளிவுபடுத்த கேட்டுக்கொண்டபோது, மாண்புமிகு கலைஞர் அவர்கள், ''அச்சம் தவிர்'' எனும் பாரதியாரின் வாக்கை ஞாபகப்படுத்துகிறேன் என பதில் வழங்கியதும்,

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 1990 ஆம் ஆண்டில் உறுப்பினராக இருந்தபோது, ''சென்னை வள்ளுவர் கோட்டத்தினுடைய முகப்பில் கன்னியாகுமரியில் அமைக்க இருக்கிற 133 அடி வள்ளுவர் சிலையைப் போல அமைக்க திட்டம் அரசுக்கு உண்டா'' என துணைக் கேள்வி கேட்கையில், மாண்புமிகு கலைஞர் அவர்கள் ''அது 'குமரி'க்கு மாத்திரம் தரப்படுகிற சிறப்பு'' என ஒரு வார்த்தையில் குறிப்பிட்டு பதில் அளித்ததும்,

கூவம் ஆற்றிலே முதலை விடுவது பற்றிய ஒரு துணைக் கேள்விக்கு, மாண்புமிகு கலைஞர் அவர்கள், அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ''முதலை'' கூவம் ஆற்றில் போட்டிருக்கிறது என பதிலுரைத்ததும்,

மாண்புமிகு கலைஞர் அவர்களின் நகைச்சுவை உணர்வுக்கும், சொல்லாற்றல் தன்மைக்கும் எடுத்துக்காட்டாக அனைவரையும் வியக்க வைக்கக்கூடிய நிலையில் பல விவாதங்கள் அமைந்திருந்தன. அதனை நமது மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்

அவர்களிடத்திலும் காணலாம். ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், "மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பார்கள்; இந்த அறிக்கையில் மணியோசையும் இல்லை, யானையும் இல்லை' என்று சொன்னார்கள். அடக்கப்பட்ட யானைக்குத்தான் மணி கட்டுவார்கள். தி.மு.க. என்பது யாராலும் அடக்க முடியாத யானை, நான்கு கால்கள்தான் யானையினுடைய பலம், சமூக நீதி, சுயமரியாதை, மொழி–இனப்பற்று, மாநில உரிமை ஆகிய நான்கின் பலத்தில்தான் தி.மு.க.வும் நிற்கிறது. இந்த அரசும் நிற்கிறது" என்று உரைத்தபோது அவருடைய சொல்லாற்றலைக் கண்டு அவையே வியந்தது.

அரசினர் தனித் தீர்மானத்தின்போது, குறுக்கிட்டுப் பேச முற்பட்ட மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் தண்ணீர் குடித்ததைக் கண்ட மாண்புமிகு கலைஞர் அவர்கள் "முல்லைப் பெரியாறு தண்ணீரா" எனக் கேட்டபோது, அவையே சிரிப்பலையில் குலுங்கியது.

சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் மட்டுமல்லாமல், இடத்திற்கு ஏற்றாற்போல் நகைச்சுவையாகப் பேசி, அவை நடவடிக்கைகள் இறுக்கமாக செல்வதைக் கலைத்து, உணர்வுபூர்வமாக, கலகலப்போடு அமைய மிகுந்த ஈடுபாட்டோடு செயலாற்றுவதில் வல்லவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள்.

2006 ஆம் ஆண்டில், சிறிது உடல் நலக் குறைவு ஏற்பட்டிருந்த நாளில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், "பேரவை விதி 88(1)–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேவைப்பட்டால் உட்கார்ந்தே பேச அனுமதியளிக்கிறேன்" எனக் கருத்துரை வழங்கியபோது, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் "தேவைப்படும்போது உட்கார்ந்துகொண்டு பேசுகிறேன், அதுவரையில் நிற்க அனுமதியுங்கள்" என கேட்டுக்கொண்டபோது, அவை நெகிழ்ச்சியில் திளைத்தது. உடல்நலக் குறைவு ஏற்பட்டபோதும், தன்னால் முடியும் என நின்று பேசியது கலைஞர் அவர்களுடைய உறுதிப்பாட்டை, பேரவைக்கு அளிக்க வேண்டிய மதிப்பை தந்ததை உணர்த்தியது. மற்றொரு நாள் இதேபோன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கருத்துரை வழங்கியபோது, "உட்கார்ந்து பேசினால் ரொம்ப நேரம் பேசுவேன்" எனக் கூறி, நின்று கொண்டே உரையாற்றினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உறுப்பினராக இருந்த காலத்தில், மாண்புமிகு கலைஞர் அவர்கள் அவையில் உரையாற்றுகையில், "நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களுக்கு ஒரு குறை, 'இந்த அரசு நிதி உதவியின்றி செயல்படும் பள்ளிகளுக்கு இலவசப் புத்தகம் வழங்க கோரிக்கை நான் அல்லவா வைத்தேன், முதன்முதலில் வைத்தேன்' என்று எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார், அந்த உரிமையை அவருக்கு விட்டுக்கொடுக்குமாறு பீட்டர் அல்போன்ஸைக் கேட்டுக்கொள்கிறேன்" எனக் கூறி, அனைவரும் மகிழும்வண்ணம், ஏற்கெனவே பதிவிட்ட ஒன்றை மாற்றவும், உறுப்பினருடைய உரிமையை நிலைநாட்டிய வல்லமைக்கு சான்றாகும்.

மாற்றுக் கருத்துகளாக இருந்தாலும், அவற்றை உள்வாங்கிக்கொண்டு, உரையாற்றிய உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் பதிலுரை வழங்கி, அந்தக் கருத்துக்களை ஏற்காததற்கான காரணத்தை விளக்கி, அரசு கொண்டுள்ள கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நியாயத்தையும் தெரிவித்து எவர் மனமும் வருத்தமுறாத வகையில் அவை நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள். அதே நேரத்தில், மாற்றுக் கருத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உரைத்தால், நற்பயன் விளையும் எனக் கருதினால், அக்கருத்துத் தெரிவித்த உறுப்பினர்களை மனதாரப் பாராட்டும் பண்பு படைத்தவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள்.

அரசின் 100 நாள் சாதனைகளைப் பற்றி ஓர் உறுப்பினர் மகிழ்ச்சியோடு தெரிவிக்கையில், மற்றோர் உறுப்பினர் குறுக்கிட்டபோது, ‘‘செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே நடைபெற்ற சாதனைகளைச் சொன்னால் செங்கோட்டைக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது’’ என மாண்புமிகு கலைஞர் குறிப்பிட்டபோது, அவரின் சொல் நயம் குறுக்கீடு செய்ய முயன்ற உறுப்பினர்களிடம்கூட நகைச்சுவை உணர்வைத் தூண்டி அமைதிப்படுத்தியது.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த நாட்களிலும்கூட, அவை நடவடிக்கைகள் சுமுகமாக, சிறப்பாக நடைபெற பல வகைகளில் உதவியவர். எதிர்த்தரப்பினரின் வாதங்களை அவர்களுடைய பழைய விவாதக் குறிப்புகளை சுட்டிக்காட்டி கருத்துக்களைத் தெரிவிக்கும் மாண்புமிகு கலைஞர் அவர்களின் நினைவாற்றல் வியக்கத்தக்கது. கருணை, நீதி, பணிவு, நகைச்சுவை என அத்தனை உணர்வுகளையும் உள்ளடக்கி, உரையாற்றும் வல்லமை படைத்தவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் அவர்களால் கீழ்க்காணும் பல்வேறு முக்கியமான திட்டங்கள்/ சட்டங்கள் மீதான விவாதம் நடைபெறுகையில் பேரவையில் பணியாற்றிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது:

விவசாயிகளின் பாசனத்திற்கு இலவச மின்சாரம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு, மகளிருக்கு சொத்தில் சம உரிமை வழங்கும் வகையில் சட்டம், அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவித் திட்டம், மெட்ராஸ் என்பதை சென்னை எனப் பெயர் மாற்றம் செய்தது, உழவர் சந்தைகள், சமத்துவபுரங்கள், கிராமப்புறங்களுக்குச் செல்லும்வண்ணம் சிற்றுந்துகள், கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் திட்டம், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகம், அண்ணல் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம், கேலி வதை செய்தலைத் தடுத்தல் சட்டம், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய், விவசாயிகள் பெற்றிருந்த கூட்டுறவுக் கடன் தள்ளுபடி, சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முட்டைகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய எரிவாயு அடுப்பு வழங்கிடுதல், அனைத்து சாதியினரும்

அர்ச்சகர் ஆகும் வகையில் சட்டம், செம்மொழிப் பூங்கா, அருந்ததியினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை, புதிய மருத்துவக் கல்லூரிகள், புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் என நலத் திட்டங்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் உறுப்பினராக, எதிர்க்கட்சி உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, முதலமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் பெற்ற அனுபவத்தால், கற்ற நூல்களில் பெற்ற ஞானத்தால், இயற்கையிலேயே அவர் பெற்றிருந்த, ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும் எனும் அவாவின் காரணத்தால், பேரவையின் மாண்பைக் காத்து, அனைவரின் பாராட்டைப் பெற்ற மாண்புமிகு கலைஞர் அவர்கள், எதிர்கால சந்ததியினருக்கும் "நூறாண்டு வாழும் கலைஞராக" என்றென்றும் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.



பேரவைச் செயலக அலுவலர்களுடன்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

கலைஞரைப் போல விரைந்து முடிவெடுக்கும் நிருவாகியை நான் கண்டதில்லை

த.உ. டில்லி துரை,
முன்னாள் செயலர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

மாமனிதர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவடைகிற நேரம் இது. தமிழ்நாட்டின் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்ட போதெல்லாம் வெற்றி பெற்று, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆளுமைமிக்கத் தலைவராக விளங்கியவர்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957 கலைஞர் அடியெடுத்து வைத்த நாள் முதல் சட்டமன்றத்தில் அவரின் பேராற்றலைக் கண்டு வியக்கும் வாய்ப்பை 36 ஆண்டுகள் அந்தச் சட்டப் பேரவையின் செயலகத்தில் நான் பணியாற்றிய பொழுது பெற்றவன். தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு அரிய பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர் கலைஞர். சட்டமன்ற வரலாற்றில் கலைஞர் ஒரு சகாப்தம் என்றால் அது மிகை அல்ல. அவருடன் பணியாற்றிய காலத்துப் பசுமையான நினைவுகள் பல. அவற்றில் ஒரு சில நினைவுகளைக் கலைஞரின் நூற்றாண்டு நிறைவெய்தும் இந்நேரத்தில் இக்கட்டுரையில் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இரண்டாவது முறை ஆட்சிபுரிந்த கலைஞர் மிகவும் போற்றத்தக்க ஒரு செயலைச் செய்தார். சட்டமன்ற மேலவையில் மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் கோரிக்கைகள்மீது விவாதிக்கும் வாய்ப்பை 1972 வரை மேலவை உறுப்பினர்கள் பெற்றதில்லை. இதுகுறித்த கோரிக்கை 1964 ஆம் ஆண்டு முதல் எழுப்பப்பட்டு வந்தது. இது கலைஞரின் கவனத்திற்கு வந்ததும் அரசமைப்புச் சட்டத்தில் இதற்கு ஏதும் தடையில்லை என்பதனை ஆய்ந்தறிந்த கலைஞர் 1972 இல் சட்ட மேலவையில் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் குறித்து மேலவை உறுப்பினர்கள் விவாதம் நடத்தும் புதிய நடைமுறையைக் கொண்டு வந்தார் என்பது வரலாறு.

அண்ணா நகர் தொகுதியிலே வெற்றி பெற்று ஏழாவது பேரவையின் உறுப்பினராக அறிவொளி வீசிய கலைஞர், ஈழத் தமிழருக்காகத் தன் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தியாகம் செய்தார். அதன் பிறகு 23–4–1984 அன்று மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிஞர்கள் நிறைந்த மேலவையினை அலங்கரித்தவர் கலைஞர். அப்போது மேலவையின் தலைவராக உயர்திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் இருந்தார். யான் மேலவையின் துணைச் செயலராக இருந்தேன்.



எப்போதும் கலைஞர் அவைக் கூட்டங்களுக்கு முன்னதாகவே வந்துவிடுவார். அவ்வாறு முன்னதாக வருகைபுரிய நேர்ந்தால் என் அறையில் வந்து கலைஞர் அமர்ந்திருப்பார். மேலவையில் 11–4–1985 அன்று அவர் உரையாற்றியபோது மேலவை எத்தகைய பெருமைமிக்க அவை என்பதனையும், 1935 முதல் யார்...யார்? எல்லாம் அந்த மேலவையிலே இடம் பெற்றுச் சிறப்புச் சேர்த்தார்கள் என்பதனையும் உணர்வுபூர்வமாக உள்ளம் கொள்ள குறிப்பிட்டது இன்றும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

கலைஞர் 27–1–1989 அன்று மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார். கலைஞரின் அளப்பரிய நிர்வாகத் திறனை மிக அருகிலிருந்து காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.


கோப்புகளை முதலமைச்சர் கலைஞர் கையாளும் சாதுரியமும், நறுக்குத் தெறித்தார் போல அவர் எழுதும் குறிப்புகளும் வியக்கத்தக்கவை.

அப்பொழுது பேரவையின் செயலராக இருந்தவர், 1990 மே மாதம் ஓய்வு பெறுவதாக இருந்தது. அவருக்குப் பணி நீட்டிப்பு வழங்க கோப்பு கலைஞரின் ஒப்புதலுக்குச் சென்றது. அவர் 'இளைஞர்களுக்கு வழிவிடவும்' என்று எழுதினார். அவருக்கு அடுத்த நிலையில் இருந்த என்னைப் பேரவைச் செயலராகப் பணியமர்த்தி முதலமைச்சர் ஆணையிட்டார்.

கலைஞர் முத்தமிழறிஞர்தானே என்று அவர்தம் ஆங்கிலப் புலமையை எவரும் குறைத்து எண்ணிட முடியாது. அவர் ஆங்கிலத்தில் வறிஞர் அல்ல, அதிலும் நிறைஞர் என்பதற்கு இதோ ஒரு சான்று.

நான் பேரவைச் செயலராகி அடுத்த ஒரே மாதத்தில் 30–6–1990 அன்று பணிநிறைவு பெற இருந்தது. எம்மைப் பணியிலிருந்து விடுவிக்கும் நிலையில் புதியதாக ஒருவரை பேரவைச் செயலராக நியமிக்க கோப்பு முதலமைச்சர் கலைஞருக்குச் சென்றது.

"திரு. டில்லி துரை 1-6-1990 இல் தான் செயலரானார். பொது நலன் கருதி அவரை ஓராண்டுக்காவது இப்பதவியில் இருக்கவைக்க வேண்டும். எனவே சிறப்பு நேர்வாக ஓராண்டுக்கு அவருக்குப் பணி நீட்டிப்பு அளிக்கப்படுகிறது. அப்போதுதான் அடுத்து இந்தப் பதவிக்கு வருகிறவரைப் பயிற்றுவிக்க முடியும்" என்ற கருத்துப்பட முதலமைச்சர் கலைஞர், கோப்பில் ஆங்கிலத்தில் அழகாக எழுதி இருக்கிற நேர்த்தியை இதோ காண்பீராக!


Thiru Delli DURAI took over as Secy
only on 1.6.90. In public interest it
is necy to retain him at least for
one year. He may be given extension
of Service as a special case for
one year. Only then it will be possible
to train a successor to him
Dr. Kalaignar, 27/6

முதலமைச்சர் கலைஞரிடம் அதிகாரியாகப் பணியாற்றுவது எளிதல்ல. தங்கள் துறை தொடர்புடைய அனைத்து விவரங்களையும் தெரிந்து வைத்திருத்தால் மட்டுமே அவரிடம் மூத்த அதிகாரிகள் காலந்தள்ள முடியும். தமிழ்நாட்டில் நடக்கும் அனைத்து விவரங்களையும் கலைஞர் அறிந்து வைத்திருப்பார். அவரது ஆற்றல்மிக்க நிருவாக ஆளுகையின்கீழ் அவருக்குத் தெரியாமல் ஒரு துரும்பு கூட அசையாது.

பேரவையில் முக்கிய பொருள்கள் குறித்துப் பேசும்போது புள்ளிவிவரங்களைப் பழைய கோப்புகளின் தேதிகளைக்கூட நினைவு கூர்ந்து சொல்வார். அடுத்த நாள் பேரவையில் சரியான தகவல்களைத் தெரிவிக்க முதல் நாள் இரவு 10 மணிக்குக்கூட தொலைபேசியில் அழைத்து விவரங்கள் கேட்பார். அதிகாலை முதல் அந்தி நேரமானாலும் அவர் கேட்ட குறிப்புகளை உடனுக்குடன் திரட்டி நான் அளித்த நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவை. இது அந்தத் தன்னிகரில்லா தலைவரின் ஈடுபாட்டினையும் பேரவை நிகழ்ச்சிகளுக்கு அவரளித்த முக்கியத்துவத்தையும், மதிப்பையும் காட்டுகிறது.

யான் பேரவைச் செயலராக இருந்தபோது 1990 இல் ஒரு நாள், "கோடையில் வெப்பம் மிகுதியாக இருப்பதால் சட்டப் பேரவைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் பங்கேற்பதில் சிரமம் இருக்கிறது" என்று என்னிடம் தெரிவித்தார். உடனே சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திற்குக் குளிர்சாதன வசதி செய்ய விரைந்து முடிவெடுத்தார் கலைஞர். அவர் எண்ணிய வேகத்தில் அதனைச் செய்து முடிக்க திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு, முதலமைச்சர் கலைஞரின் ஒப்புதல் பெற்றுக் குளிர்சாதன வசதி செய்யப்பட்டது. அப்பணியை நிறைவேற்றுவதில் பொறியாளர்களுக்குச் சவாலாக இருந்தது. காரணம் கோட்டையில், சட்டப் பேரவையின் சுவர்கள் 5 அடி தடிமன் இருக்கும், கூரையும் உயரமானது. இந்தச் சூழலில் அப்பணி சிறப்பாக நிறைவெய்தி,

அடுத்து நடைபெற்ற சட்டமன்ற பேரவைக் கூட்டத் தொடர் குளிரூட்டப்பட்ட இதமான சூழலில் நிகழ்ந்தது. எப்போதும் நுணுக்கமாகச் சிந்தித்துப் புதிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வல்லவரான கலைஞர் இதனையும் செய்தார். அவர் எண்ணியதை இனிதே நிறைவேற்றிய மனநிறைவு இப்போதும் எனக்கு இருக்கிறது.

ஏழைகள் வாழ்வுயர ஏற்றதான ஏராளமான திட்டங்கள் தீட்டியவர் கலைஞர். எளியவர் நலனை உச்சத்தில் உயர்த்திப் பிடிக்கும் தாய் உள்ளம் கொண்டவர். ஈடு இணை இல்லாத நிருவாகி கலைஞர். முதலமைச்சர் கலைஞரைப் போல விரைந்து முடிவெடுத்து நிறைவேற்றும் செயல் வீரரை, மேதமை நிறைந்த நிருவாகியை நான் கண்டதில்லை. அவர் அருகிலிருந்து பேரவைச் செயலராகப் பணியாற்றிய காலம் என் வாழ்வின் பொற்காலம்.

வாழ்க கலைஞர் புகழ்!



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திரு. மா. செல்வராஜ்,
சட்டப் பேரவை முன்னாள் செயலாளர்

தரிசு நிலத்தில் விழுந்த ஒரு வித்து, வீரியம் கொண்டு நீரும் உரமும் இன்றி, இயற்கை அணைப்பிலே ஆலவிருட்சமாய் வளர்ந்ததுபோல், சாதிய அடுக்குகளில் கீழே இருக்கும் ஒரு சமூகத்தில் பிறந்து, ஆதிக்கப்பிடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் சந்தித்த சோதனைகளை வென்று சாதனைகளாக்கி தமிழன்னை மடியில் வளர்ந்தவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். தந்தை பெரியார் வழியில் திராவிட இயக்கத்தின் கோட்பாடுகளை முன்னிறுத்தி, அரசியல், சமூக மற்றும் பொருளாதார அதிகாரங்கள் யாவும் கீழ்நிலையிலுள்ள அடுத்தடுத்த சமூகங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டுமானால், சட்டமன்றமே அதற்கான தலைமை பீடம் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

1957 ஆம் ஆண்டு குளித்தலை தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராக, பின்பு பேரறிஞர் அண்ணா அமைச்சரவையில் பொதுப் பணித் துறை அமைச்சராக, பின்னர் முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, மீண்டும் முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக என தம் வாழ்நாளில் 61 ஆண்டுகள், சட்டமன்ற வரலாற்றில் 13 முறை பேரவைத் தொகுதிகளிலும், ஒரு முறை மேலவையிலும் ஒரே கட்சி சின்னத்தில் போட்டியிட்டு தோல்வியே காணாதவகையில் வாகை சூடி, 50 ஆண்டுகளுக்கும் மேலாக திராவிட முன்னேற்றக் கழக கட்சித் தலைவராகப் பொறுப்பேற்று, 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகுடம் சூட்டப்பெற்ற கலைஞர் அவர்களைப் போன்ற தலைவர் இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை.

இந்திய ஜனநாயகத்திற்கு திராவிட இயக்கத்தின் நிரந்தரமான பங்களிப்பாக 'தமிழ் தேசியத்தைக்' கொண்டுவந்து நிலைநிறுத்துவதற்கு சமூக நீதி அரசியலை, சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்டங்கள்மூலம் அரசுத் திட்டங்களாக உருவாக்கிய தலைவர்களில் கலைஞர் அவர்கள் முதன்மையானவர்; சட்டமன்றத்தில் அவர் கொண்டுவந்த சட்டங்கள், அவற்றினால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட நன்மைகள் ஆகியவை வாழையடி வாழையாய் வறுமையில் வாடிய ஏழை மக்களின் வாழ்க்கையை புரட்டிப்போட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. இதன் விளைவால் ஏற்பட்ட சமூக நீதியை ஆணிவேராகக் கொண்ட சமுதாயப் புரட்சி, ஏழை மக்களின், குறிப்பாக பெண்களின் வாழ்க்கையில் நிதி வறட்சியைப் போக்கும் பொருளாதாரப் புரட்சி, சட்டமன்றத்தில் இலக்கிய வளம் கொழிக்கும் நடையில் கலைஞர் தந்த தமிழ் மொழியின் எழுச்சி, மற்றவர்கள் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் மாட்சி போன்ற எண்ணற்ற அவரது செயல்பாடுகளால் கலைஞர் சட்டமன்ற நாயகராகப் பாராட்டப்படுகிறார்.

கலைஞர் அதிகாலையில் அனைத்து பத்திரிகைகளையும் படித்துவிடுவார்; சட்டப்பேரவைக்

கூட்டம் காலை 9.30 மணிக்கு தொடங்கும், நாள்தோறும் சட்டப்பேரவைத் தலைவர் அறைக்கு காலை 8.50 மணிக்கு வந்துவிடுவார். அந்த நேரம் தோழமைக் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரிடமும், அவர் உரையாடி விளக்கம் தரும் மாண்பு அலாதியானது. அன்றைய பேரவைக் கூட்டத்தின் பேசுவோர் பட்டியலைப் பார்ப்பார். நல்ல கருத்துகளை பேரவையில் எடுத்துக் கூறும் திறமையுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களை, அவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் முன்னரே அளிக்கப்பட்டிருந்த போதிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குப் பதிலாக பேசுவோர் பட்டியலில் சேர்க்கச் சொல்வார். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில், பேரவையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த நிலையில்கூட, பேரவையில் உரையாற்றுவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புகளும், அதிக நேரமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அவைக் கூட்டம் ஒழுங்காகவும், கட்டுக்கோப்பாகவும், நடுநிலைமையுடனும், அவரால் பொறுப்புடன் வழிகாட்டப்பட்டு நடைபெற்றது.

சட்டப்பேரவையில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் கேள்விகள்மூலம் கொண்டுவந்து உறுப்பினர்கள் தகவல் பெறுவதிலும், அமைச்சர்களின் உறுதிமொழிகளின்மூலம் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் கேள்வி நேரம் முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவாக, வினாக்கள்–விடைகள் நேரத்தில் முதலமைச்சர் தவிர, இதர அமைச்சர்கள்தான் அதிக நேரம் பதிலளிப்பது வழக்கம்; இதற்குக் காரணம் முதலமைச்சர் அவர்களின் இதர முக்கியப் பணிகளே! 1996–2001 ஆம் ஆண்டுகளில் கலைஞர் அவர்கள் 136 உடுக்குறியிட்ட வினாக்களுக்கும், 970 உடுக்குறியிடாத வினாக்களுக்கும் பதிலளித்தார்; 7–12–2006 ஆம் நாளன்று பேரவையில் கலைஞர் அவர்கள், ஒரே நேரத்தில் இரண்டு மூலக் கேள்விகளுக்குப் பதிலளித்ததுடன் உறுப்பினர்களின் 15 துணைக் கேள்விகளுக்கும் பதிலளித்தார். அவரால் 10 உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. இந்நேர்வில் மட்டும் அவர் பேரவையில் உரையாற்றிய நேரம் 32 நிமிடங்கள். கலைஞர் இவ்வாறு உரையாற்றியதுபோல் இந்திய நாடாளுமன்றத்திலும் வேறு எந்த மாநிலத்திலும் எந்தவொரு அமைச்சரும் உரையாற்றிய வரலாறு இல்லை.

பேரவையின் விவாதத்தில் எதிர்க்கட்சியினர் ஏற்படுத்தும் குழப்பத்தில் ஆளுங்கட்சியினர், அவர்கள்மீது கோபக் கணைகளை வீசக் கூடாது என்பதும், பொறுப்புடன் அவையின் கண்ணியத்தைக் காத்திட வேண்டும் என்பதும் அவர் தன் கட்சியினருக்குப் பிறப்பித்த உத்தரவு ஆகும். அவை நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படும்போதெல்லாம், கடுஞ்சொல் தவிர்த்து நடுவுநிலைமை காப்பார்; விவாதத்தின் இறுக்கத்தினை அவரது நகைச்சுவை உணர்வு குறைத்துவிடும். வாதம், எதிர்வாதம் புரியும்போது, கலைஞர் ஆதாரமின்றி எப்போதும்

உரையாற்றமாட்டார்; கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் வைத்த ஆதாரங்கள் மற்றும் குற்றச்சாட்டுகளை மறுத்து, யாரும் நிரூபித்தது இல்லை.

கலைஞர் அவர்கள், அவை உரிமை மீறலுக்கு ஆளான உறுப்பினர்கள் மீதும் அவதூறு பரப்பிய பத்திரிகையாளர் மீதும் மனிதநேயத்துடன் பரந்த மனப்பான்மையுடன் நடந்து கொண்டார்; ஓர் உறுப்பினரை பல மாதங்கள் பேரவை நடவடிக்கையிலிருந்து விலக்கி வைத்தால் அவ்வுறுப்பினரின் தொகுதி மக்கள் பாதிப்பு அடைவர் என்று எண்ணினார். அவதூறு பரப்பி உரிமை மீறலுக்கு ஆளான பத்திரிகை ஆசிரியரை அல்லது நிருபரை பேரவையில் கண்டித்து, அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்வதே போதுமானது என கருதினார்.

சமூக நீதி ஒருபாற்பட்டதன்று; சமூகத்தின் கீழ்த்தட்டு மக்களை மேல்தட்டு மக்களின் நிலைக்கு கொண்டுவருவது மட்டுமின்றி, மேல்தர மக்களை கீழ்நிலைக்கு தள்ளப்படுவது என்பதுவும் ஆகாது. இதை உறுதி செய்யும் வகையில், கலைஞர் அவர்கள், 25-2-1969 அன்று முதன்முதலாக முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு, பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக தன் உயிரையே பணயமாக வைத்துப் போராடப் போவதாகவும் அதே சமயம் முன்னேறிய சமுதாயத்திற்கு எவ்வித ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்வதாகவும் அறிவித்தார்.

கிராமப்புறங்களில் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்ட இளைஞர்கள், மாணவ, மாணவிகள், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்கும், வேலைவாய்ப்புகள் பெறுவதற்குமான இட ஒதுக்கீட்டுச் சட்டங்கள், தொழில் மற்றும் பல்வேறு துறைகளில் மக்கள் நல வாரியங்களுக்கான சட்டங்கள் போன்ற இவரால் கொண்டு வரப்பட்ட சட்டங்களால் தமிழ்நாடு இந்தியாவில் முதல் மாநிலமாக வளர்ந்தது.

கலைஞர் அவர்கள் முன்னோடிச் சட்டங்களை இயற்றும் முதலமைச்சராக விளங்கினார். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், முதன்முறையாக 1997 ஆம் ஆண்டில் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டமுன்வடிவு, சட்டப்பேரவையில் 17-4-1997-ல் அறிமுகம் செய்யப்பட்டு, 30-4-1997-ல் சட்டம் இயற்றப்பட்டது. ஒன்றிய அரசு, இச்சட்டத்தினை 15-6-2005-ல் நிறைவேற்றி 13-10-2005 முதல் நடைமுறைக்கு கொண்டு வந்தது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்கிற சட்டமும் கலைஞர் ஆட்சியில் இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் வந்தது.

இலங்கைப் போரில் தமிழ் மக்களின் உயிர்களும் உடைமைகளும் சூறையாடப்படுவதைக் கண்டு, அவர்களைப் பாதுகாப்பதற்காக பன்னெடுங்காலப் போராட்டத்தை நடத்தியவர் கலைஞர்; போர்க்குணம் கொண்டு இலங்கைத் தமிழர்களுக்காக தன்னுடைய குரலை சட்டப்பேரவையில் ஓங்கி ஒலித்ததன் காரணமாக கடும் இழப்புகளையும் எதிர்விளைவுகளையும் கலைஞர் அவர்கள் சந்தித்தது போன்று இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநில முதல்வரும் சந்தித்தது இல்லை.

கலைஞரின் சிந்தனையும், செயலும் வருங்கால தலைமுறையினர், பகைவர் நெருங்காத தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதில்தான் இருந்தன. தமிழ்நாட்டு மாணவ, மாணவிகள் பட்டமும், உயர் பதவிகளும் பெற்று, தாய்த்தமிழைக் காக்க வேண்டும் என்பதற்காக கட்டாய தமிழ்க் கல்வியைக் கொண்டு வந்தார். அவர் உயர் நீதிமன்றத்தில் தமிழ்மொழி வழக்காடு மொழியாக்கப்பட வேண்டும் என்று சட்டசபையில் 6-12-2006 அன்று தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசினை வலியுறுத்தினார்.

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் சட்டப் பேரவைச் செயலகத்திலிருந்து எந்த விவரங்களைக் கேட்பார்; எப்போது கேட்பார் என்று பேரவைச் செயலக அதிகாரிகளாகிய எங்களுக்கே கணிக்க இயலாது. ஆகவே, பேரவைக் கூட்டம் நடைபெறாத நாட்களிலும்கூட, சட்டப்பேரவைச் செயலகத்தின் திறமையான நிருபர்கள் பிரிவிலிருந்து, அப்பிரிவின் உயர் அதிகாரிகளின் ஆணையின்படி, விடுமுறை நாட்களில் சுழற்சி முறையில் பேரவைச் செயலக நிருபர்கள் பணிக்கு வரவழைக்கப்பட்டனர்; சட்டமன்ற நூலகமும் திறந்து வைக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால்தான் கலைஞர் அவர்களால் கோரப்பட்ட விவரங்கள் என்னால் உடனுக்குடன் வழங்கப்பட்டன. அதிக விழிப்புணர்ச்சியும், சுறுசுறுப்பும் இல்லாத எந்த உயர் அலுவலரும் கலைஞர் அவர்களிடம் பணியாற்ற முடியாது.

அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின், ஓம்பு மதி!
அளிதோ தானே; அதுபெறல் அருங்குரைத்தே.

என்ற நரிவெரூஉத் தலையார் புறப்பாட்டிற்கு ஏற்ப வாழ்ந்தவர் கலைஞர் அவர்கள்; விடா முயற்சி, தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய நீங்காத பண்புகளும் கொண்ட 'கலைஞரின் சட்டமன்ற வாழ்க்கை' காலத்தால் கரைக்க முடியாத ஒரு வரலாறு!

இத்தகைய பன்முகத் திறமைகளைக் கொண்ட கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, நான் சட்டப் பேரவைச் செயலாளராகப் பணியாற்றிட கிடைத்த வாய்ப்பு, வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பேறாகும்.

கலைஞர் அவர்களின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி அவரால் தீட்டப்பட்ட திட்டங்களை தொய்வின்றி தொடர்ந்து செய்து, சிறப்பான திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகின்ற தளபதி அவர்களது காலத்தில் கலைஞர் அவர்களது பெருமை மென்மேலும் உலகம் முழுவதும் பரவும் என்பதில் ஐயமில்லை.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

திருக்கயிலாயப்பரம்பரைத் தருமை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி
தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வான்மழை வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

தமிழக வரலாற்றில் தனது பேராற்றலாலும், போற்றத்தகு பணிகளாலும் அயராத உழைப்பினாலும், ஆற்றல்மிகு படைப்புகளாலும் பொன்னேட்டில் பொறிக்கப்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர், பதின்மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகி தமிழ்நாட்டின் வியத்தகு மாற்றத்திற்கு வித்திட்ட மிகப்பெரும் அரசியல் ஆளுமை. திருக்குவளையில் பிறந்து; திருவாரூரில் வளர்ந்து; தமிழக அரசியலின் அடையாளமாகி; உலகத் தமிழர்களின் உணர்வுகளில் நீங்கா இடம்பிடித்த மூத்த தலைவர்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல்"

என்ற வள்ளுவரின் வாக்கைப்போல் தமிழ்மொழி–அரசியல்–இலக்கியம்–இதழியல்–நாடகம்–திரைத் துறைக்கு அவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா. முத்தமிழறிஞர் கலைஞரின் குடும்பத்தினர் நான்கு தலைமுறையாக தருமையாதீனத் திருமடத்துடன் தொடர்புடையவர்கள். கலைஞரின் தகப்பனார் முத்துவேலர் தருமையாதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட திருக்குவளை தேவஸ்தானத்தில் பணியாற்றியவர். கவித்துவம் வாய்ந்தவர். அவர் பணியாற்றிய காலத்தில் திருக்குவளை ஆலயத்தில் நவகிரகங்களைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நடைபெற்றது. நவகிரகங்களை பல்லக்கிலே வைத்து ஆலயத்தினுள் எடுத்து வரும்பொழுது கொடிமரத்திற்கு பக்கத்திலே தட்டி சுற்றுவது வழக்கம். அவ்வாறு தட்டி சுற்றும்போது பெண்கள் பாடல் பாடுவார்கள். அப்பாடல் அதுவரை எழுதப்படவில்லை. உடனே முத்துவேலர் "ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், நலமான குரு, சுக்கிரன், கோர சனி, இராகு, கேது, கும்ப மகர ராசிக்கதிபதி" என்ற பாடலை எழுதிக்கொடுத்தார். அப்பாடலைப் பாடி நவக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது. இந்நிகழ்வை கல்லூரி வெள்ளி விழாவில் முத்தமிழறிஞர் அவர்களே நினைவுகூர்ந்தார்கள்.

1972 ஆம் ஆண்டு தருமையாதீன ஆளுகைக்குட்பட்ட தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் வெள்ளி விழா நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலந்துகொண்டு வெள்ளி விழா மலரை வெளியிட்டு, விழாப் பேருரை ஆற்றினார்கள். "தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் வெள்ளிவிழா நினைவாக கல்லூரி வளர்ச்சிக்கு ரூ.25,000/– நிலைநிதி நிறுவியருளியமையை எடுத்துக்காட்டியும், தருமையாதீனப் பணிகளைப் போற்றியும், மாணவர்களின் நற்பண்புகளைப் பாராட்டியும்" பேருரை வழங்கினார்கள்.

தெய்வ பக்தியையும், தேச பக்தியையும் இரு கண்ணெனப் போற்றுபவர்கள் தருமையாதீன குருமகாசந்நிதானங்கள். 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் உதய போரின்போது பாதிக்கப்பட்ட வீரர்களுக்கு உதவும் முகத்தான் அப்போதைய 26 ஆவது குருமகாசந்நிதானங்கள் திருவாரூருக்கு வருகை தந்திருந்த முதலமைச்சர் கலைஞரிடம் ரூ.25,001/–க்கான காசோலையை அளித்தார்கள். அப்போது "தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இந்திய நாட்டில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. தியாகராஜர் தந்த கலைஞர் கருணாநிதியின் கரத்தில் நம்முடைய தியாகத்தைப் பொன்னாகவும், பொருளாகவும் வழங்க திருவருள் கூட்டியிருக்கிறது" என்று ஆசியருளினார்கள்.

கல்லூரியின் 75 ஆம் ஆண்டு பவள விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பவளவிழா மலரையும், திருக்குறள் உரை வளம் நூலையும் வெளியிட்டு தருமை இணையதள வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி, ஒளிப் பதிவகத்தினையும் திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றினார்கள். அப்போது "தருமையாதீன மடத்துடன் தமிழ் நட்பு மட்டுமல்ல, எங்களுக்கு குடும்ப நட்பும் உண்டு" என்று கூறினார்கள். யாம் "கல்லூரியின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவிலும், 50 ஆம் ஆண்டு பொன் விழாவிலும் தற்போது 75 ஆவது ஆண்டு பவள விழாவின்போதும் திராவிட முன்னேற்றக் கழகமே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளது. இதைப்போல கல்லூரியின் நூற்றாண்டு விழாவிலும் திராவிட முன்னேற்றக் கழகமே ஆட்சிக் கட்டிலில் இருக்கும்" என்று வாழ்த்தினோம். 2020 ஆம் ஆண்டு கும்பகோணம், மயிலாடுதுறை பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் மகாசந்நிதானத்திடம் ஆசிபெற்றார்.

நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், மென்றாலும், துயின்றாலும் விழித்தாலும், இமைத்தாலும் தமிழ் மற்றும் தமிழர் நலம் நாடிய முத்தமிழறிஞரின் பன்முக ஆற்றலையும், நிகழ்த்திய மக்கள் நலத் திட்டங்களையும் எடுத்தோதும்வகையில், கலைஞர் நூற்றாண்டு விழா இவ்வாண்டு முழுவதும் நடைபெற்று வருகிறது.

செய்தற்கரிய செயல் பலவும் செய்து எய்தற்கரியதனை எய்தின முத்தமிழறிஞரின் நூற்றாண்டு விழா இனிதே நிகழ்ந்தேறவும், விழாவினையொட்டி வெளியிடப்படும் "சட்டமன்ற நாயகர் – கலைஞர்" எனும் தலைப்பிலான விழா மலர் சிறக்கவும் எல்லாம் வல்ல ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கநாதப்பெருமானின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

பால பிரஜாபதி அடிகளார்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று தமிழக சட்டமன்ற நாயகராகச் செயல்பட்ட காலம் தான் தமிழகத்தின் பொற்காலம். தமிழும் தமிழரும் போற்றப்பட்ட நற்காலம்.

டெல்லி செங்கோட்டையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரே கொடி ஏற்றும்போது, தமிழக சட்டமன்ற கோட்டையில், நியமனம் செய்யப்பட்ட கவர்னர் கொடியேற்றும் அவல நிலையினைப் போக்கி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரே கொடியேற்றும் சிறப்பை, உரிமையினைப் பெற்றுத் தந்து தமிழுக்கு மகுடம் சூட்டி மக்களாட்சிக்கு மாட்சிமை சேர்த்தவர் அவர்தானே; அவர்தானே சட்டமன்ற நாயகர்.

உறவுக்கு கை கொடுத்து உரிமைக்கு குரல் கொடுத்து இந்தி ஆதிக்கத்தை அகற்றி எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலையைப் பெற்றுத்தந்த பெருமகனார் அவரன்றோ.

தமிழ் வாழ்க என்பது வார்த்தை அல்ல செயல்பாடு என நிரூபித்த பெருமை அவரையே சாரும்.

மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும் எனும் அண்ணாவின் அமுதவரிகளுக்கு அர்த்தம் கொடுத்து தூற்றியவரும் போற்ற அவர்களுக்கும் உரிய வாய்ப்புகளை வழங்கிச் சிறப்பித்த பெருமைமிகு செயல்பாடுகள் பலவற்றை தமிழக சட்டமன்றம் கண்டது.

முத்தமிழ் அறிஞர் முதல்வராகப் பொறுப்பேற்று ஆட்சி அதிகாரத்தினைத் தொடர்ந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்க போதிய உறுப்பினர் எண்ணிக்கை காங்கிரசுக்கு கிடைக்கவில்லை. எதிர்க்கட்சி அந்தஸ்து இல்லாத நிலையில் திரு. R. பொன்னப்ப நாடார் காங்கிரஸ் சட்டமன்ற குழு தலைவராக பொறுப்பேற்று செயல்பட்டு வந்தார். அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையில் என்ன என்ன மதிப்புகள் உண்டோ அனைத்தையும் கொடுத்து சிறப்பித்த பெருந்தன்மை பெருந்தகை முத்தமிழ் அறிஞரேதான்.

சட்டமன்றத்தில் எதிர் வரிசையினருக்கும் பல அரசு பொறுப்புகளை பகிர்ந்தளித்து சட்டமன்ற மரபை மாண்பைக் காத்த பெருந்தகை அவர்.

போக்குவரத்து துறை போன்ற துறைகளை பலப்படுத்தி பல தனியார் உடைமைகளை பொது உடைமைகளாக்கி அரசுடைமையாக்கிய பெருமை அவரையே சாரும்.

மகளிர் உரிமை, பெருமைகளை காக்கும் பல திட்டங்களும், சட்டங்களும் தந்தவர் கலைஞர்தான். இடுப்பொடிய குடம் சுமந்த பெண்கள் வீட்டு முற்றத்துக்கு குழாய்மூலம் குடிநீர் கொண்டு சேர்த்தார்.

சாலைகள் சிறு பாலங்கள் பல அமைத்து கிராமப்புற சாலைகளிலும் போக்குவரத்தைச்

செம்மைப்படுத்தியதுடன் அரசு பஸ் போக்குவரத்தினை எட்டாத பல ஊர்களுக்கும் எட்ட வைத்தார்.

முத்தமிழ் அறிஞர் சபையிலிருந்தால் சபை உயிரோட்டமுடன் செயல்படும். சிரித்த முகத்துடன் முடிந்தவரை பாரபட்சமின்றி எதிரணியினருக்கும் சாதகமாக பல அறிவிப்புகள் சபையில் கலைஞர் வழங்கத் தவறியதில்லை.

தென் தமிழக இரு சட்டமன்ற உறுப்பினர்கள் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து விமர்சித்து தாக்கி பேசுபவர்கள் மாரடைப்பு ஏற்பட்டு சென்னையில் தவித்தபோது தனிக்கவனம் செலுத்தி சிறப்பு மருத்துவ வசதிகள் அனைத்தும் செய்து அவர்களின் உயிர் காத்த உத்தமர் கலைஞரேதான். இன்றும் இரு சட்டமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் கலைஞரை நன்றியுடன் பாராட்டத் தவறவில்லை.

புதிய இளம் தலைமுறை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தாயாய், ஆசானாய் அறிவு சொல்லி அவர்களது அச்சத்தினையும் கூச்சத்தினையும் போக்கி, சட்டமன்ற வராண்டாவில் அவர்கள் தோள் மேல் கை போட்டு தோழமையுடன் பேசி நடைபோட்டதை வரலாறு அசைபோடுகிறது.

அய்யா வழி தலைமைப்பதியினை இந்து சமய அறநிலையத் துறை கையகப்படுத்துவதற்கு அவர் இணங்கவில்லை. அய்யா வழி தமிழ் வழிபாடு, சாதி சமத்துவம், பெண்ணுக்கும் சமய உரிமை, மூடநம்பிக்கையற்ற சுயமரியாதை நிலைக்காக அதனைத் தனி சமயமாக சட்டமன்றத்தில் அறிவிக்க தயாரானார். அன்று முழு அறிக்கை நாங்கள் கொடுத்திருந்தால் சட்டம் பிறந்திருக்கும்.

சிறுபான்மை மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஊனமுற்றோர், திருநங்கையர் யாவருக்கும் நலன் அளிக்கும் பல திட்டங்களைத் தீட்டி சட்டமன்றத்தில் அறிவித்து சட்டமாக்கிய பெருமை நமது முத்தமிழ் அறிஞரையே சாரும்.

அவர் என்றும் சட்டமன்ற நாயகர் தான். இன்றும் என்றும் வரலாற்றில் இடம் பிடித்த சட்டமன்ற நாயகர் முத்தமிழ் அறிஞர் இவரே தான். இன்னும் ஆயிரம் சொல்லலாம். அவர் புகழ் ஆயிரம் ஆண்டு கடந்தும் பேசப்படும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

‘சட்டமன்ற நாயகர்–கலைஞர்’ விழாக் குழுமூலம் பள்ளிகள்/கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சிகள் குறித்த ஒரு பார்வை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாட மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள் தலைமையில் ‘சட்டமன்ற நாயகர்–கலைஞர்’ விழாக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்/ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் இடம்பெற்றிருந்தனர். திரு. தே. நாகராஜன், கூடுதல் செயலாளர் (விவாதப் பதிப்பாளர்) அவர்கள் இக்குழுவின் ஒருங்கிணைப்பு அலுவலராகப் பணியாற்றினார்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா அவர்கள், திரு. ஆர். ஆவுடையப்பன், முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள் மற்றும் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் தலைமையிலான நான்கு துணைக் குழுக்கள்மூலம் தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிகள்/பள்ளிகளில் “நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது” என்ற தலைப்பின்கீழ் கருத்தரங்குகள் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் 21–9–2023 ஆம் நாளன்று சென்னை லயோலா கல்லூரியில் “சட்டமன்ற நாயகர்–கலைஞர்” கருத்தரங்கினை தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் 120 கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் துணைக் குழுக்கள்மூலம் கருத்தரங்குகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. சுமார் 600 மாணவ,மாணவியர்கள் இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்டனர். கருத்தரங்குகளில் கலந்துகொண்ட மாணவ/ மாணவியருக்கு ரொக்கப் பரிசுகள்/சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, கல்லூரி மற்றும் பள்ளி மாணாக்கர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்குகள் முறையே சென்னை, மாநிலக் கல்லூரியில் 27–2–2024 அன்றும், சென்னை, ரோசரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 29–8–2024 அன்றும் நடைபெற்றன. இக்கருத்தரங்குகளில் மொத்தம் 107 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று, சிறந்த முறையில் தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். வெற்றி பெற்று மாணவ/மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மிகச் சிறப்பாக நடைபெற்ற இக்கருத்தரங்குகளின் அரிய நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பு:

சென்னை மாவட்டம்



செங்கல்பட்டு மாவட்டம்



கோயம்புத்தூர் மாவட்டம்



காஞ்சிபுரம் மாவட்டம்



வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருநெல்வேலி மாவட்டம்



திருவாரூர் மாவட்டம்



திண்டுக்கல் மாவட்டம்



கடலூர் மாவட்டம்



அரியலூர் மாவட்டம்



ஈரோடு மாவட்டம்



கள்ளக்குறிச்சி மாவட்டம்



மதுரை மாவட்டம்



நாகப்பட்டினம் மாவட்டம்



நாமக்கல் மாவட்டம்



பெரம்பலூர் மாவட்டம்



தென்காசி மாவட்டம்



தஞ்சாவூர் மாவட்டம்



தேனி மாவட்டம்



திருவள்ளூர் மாவட்டம்



தூத்துக்குடி மாவட்டம்



திருச்சி மாவட்டம்



திருப்பூர் மாவட்டம்



விருதுநகர் மாவட்டம்



விழுப்புரம் மாவட்டம்



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்
சட்டமன்றத்தில் ஆற்றிய முதல் உரை
4–5–1957

"அவைத் தலைவர் அவர்களே, இன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை; தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி இங்கு நண்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்த நேரத்தில், எதிர்க்கட்சியினரைப் பற்றி இங்கு பேசப்பட்ட நேரத்தில், குறை கூறுவதையே எதிர்க்கட்சியினர் தொழிலாகக் கொண்டு பேசுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. குறைகளை எடுத்துச் சொல்லி, நிறைபெறுவதற்காகத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர, செய்திருக்கிற காரியங்களைப் பன்னிப் பன்னிச் சொல்லி, அவைகளைப் பாராட்டுவதற்காக நாம் இங்கு வரவில்லை. அத்தகைய காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற பாராட்டு விழாக்கள் எல்லாம், வெளியிலே அந்தக் காரியங்களால் பயன் பெறுகிறவர்களால் நடத்தப்படுவது மிகப் பொருத்தமுடையது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குறைகளை எடுத்துச் சொல்லி சரி செய்துகொள்வதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம்.

அந்தக் காலத்தில் மன்னர்கள், மக்களின் குறைகளைத் தெரிந்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்கு இரவு நேரங்களில் "நகர் சோதனை" என்ற பெயரால் மாறுவேடம் தாங்கி, மக்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளை எல்லாம் தெரிந்து, கொலுமண்டபத்தில் உட்கார்ந்து அந்தக் குறைகளைப் போக்கினார்கள் என்று பழைய கால சரித்திரத்திலிருந்து படித்திருக்கிறோம். இது மன்னர்கள் ஆளும் காலம் அல்ல; மக்கள் ஆளுகின்ற காலம். இந்தக் காலத்திலும், அதேபோல் மந்திரிகள் மாறுவேடம் தாங்கி மக்களின் குறைகளைக் கண்டு வரவேண்டுமென்று நான் கோரவில்லை. நாடகத்திலே அனுபவம் பெற்ற நாங்கள், ஒருவேளை ஆளுங்கட்சியினராக வந்தால், அந்த வேடங்களைப் போட்டு, மக்களின் குறைகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்த அனுபவம் இல்லாத மந்திரிகளை அதைச் செய்யவேண்டுமென்று நான் கோரமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி ஒன்று தேவையென்பது, எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதற்காக அல்ல என்பதை இங்கு பேசிய பலர் சுட்டிக்காட்டினார்கள். ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக்கொள்ளல் வேண்டுமென்பதைப் பற்றி, வள்ளுவர் பெருமான், தன்னுடைய திருக்குறளில், "பெரியாரைத் துணைக் கோடல்" என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரை தங்களுடைய துணைவராகக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுமென்று கூறினார் என்றால், எதையும் "சரி, சரி" என்று சொல்லிக் கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல;

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரி லானும் கெடும்"

என்று வள்ளுவர் குறள் வகுத்திருக்கிறார். சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக்கொள்ளாத மன்னன் பகைவர்கள் இல்லையாயினும் தன்னைத்தானே கெடுத்துக்கொள்வான்; கெட்டுவிடுவான் என்று சொல்லியிருக்கிறார். அந்த முறையிலே இடித்துச் சொல்வதற்காகவே வந்திருக்கிற பெரியார்களுடைய துணையை ஆளுகின்றவர்கள் பெறவேண்டுமென்று வள்ளுவர் அந்தக் காலத்திலேயே உணர்ந்து சொன்னார் போலும்! கவர்னருடைய உரையைப் பற்றி இங்கு பேசிய பல நண்பர்கள் "கன்னியாகுமரியை வரவேற்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம் தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்றுகொண்டு வரவேற்காமல், சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்றுகொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும்போது, தேவிகுளம், பீர்மேட்டைப் பெறுவதற்கு வழிவகை காணப்படவில்லை; கவர்னர் உரையில்– என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் பேரால் நியாய வாரச் சட்டங்களின் பேரால் விவசாயிகள் திருப்தியடைந்து சுமுகமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பொறுத்தவரையிலும், திருச்சி மாவட்டத்திலும் இன்றையதினம் இந்த நியாய வாரச் சட்டத்தின் காரணமாகவும் சீர்திருத்தச் சட்டத்தின் காரணமாகவும் எழுந்த வழக்கு உயர் நீதிமன்றம் சென்று, அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மக்களுக்கு வேதனையை உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதை யாரும் மறந்துவிடவில்லை; மறுத்துவிடவும் முடியாது. விவசாயிகள் வீடுகளில் தங்களுடைய மனைவி மக்களுடன் வேதனை அடைந்து புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள்; குமுறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நியாய வாரச் சட்டம் காரணமாக குளித்தலைத் தொகுதி நங்கவரம் பகுதியிலும், திம்மாச்சிபுரம் பகுதியிலும் விவசாயிகள் எந்த அளவிற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தினம் தினம் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் கண்டும், விவசாயிகள் பகுதியில் எழுப்பப்படும் கூக்குரலைக் கண்டும் எந்த முறையில் அங்கு நிலைமை இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு கையேரு வாரம் என்றும், மாட்டு வாரம் என்றும் இரண்டு வித வாரம் இருக்கின்றன. இப்படி இரண்டு விதமான வாரம் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு இந்த நியாய வாரச் சட்டம் பயன்படக்கூடாது என்று கருதி, அதை விவசாயிகள் பயன் அடையாத முறையில் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அங்கு தீர்ப்பு வாங்கி வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் காரணமாக விவசாயிகள் நியாய வாரச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும், வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும்

இருக்கிறார்கள். இன்றையதினம் உயர் நீதிமன்றம் அந்த ரீதியில் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதன் காரணமாக மாட்டு வார ஏருக்காரர்கள் என்றால் யார், கையேருக்காரர்கள் என்றால் யார் என்ற பிரச்சினை எழும்பி அதைப்பற்றி விளக்கத்தை கவனிக்கும்போதுதான் நிலைமை தெரிய வருகிறது. மாடும் தந்து, அவர்களுடைய சொந்த உழைப்பை சிந்தி நிலம் உடையவர்களிடத்தில் விதை, உரம், எரு இவைகளைப்பெற்று அப்படிப் பெறுகிற அந்தப் பொருள்களுக்காக விளைச்சலில் அவர்கள் தனியாக தானியமாகவோ அல்லது பொருளாகவோ எடுத்துக்கொண்ட பிறகு 60:40 என்று பெற வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், இன்றையதினம் மாட்டு ஏருக்காரர்கள் விவசாயிகள் அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது அதைப்போலவே கையேருக்காரர்கள் யார் என்றால் அவர்கள் பெரும்பாலும் ஆதி திராவிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; பழங்குடி மக்கள் என்கின்ற பிற்பட்ட மக்கள்; பாட்டாளி மக்கள். அப்படிப்பட்ட வர்க்கத்தினருக்காகத்தான் இந்த நியாய வாரச் சட்டம் செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுக்கென்று இந்த நியாய வாரச் சட்டத்தையும், நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தாலும், அவர்கள் அவைகளின் பயனை அடைய முடியாமல் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டது. அந்த அடிப்படையிலாவது எந்த அளவிலாவது இந்த நியாய வாரச் சட்டம் அவர்களுக்கு நன்மை வழங்கி இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட மாட்டு ஏருக்காரர்களும், கையேருக்காரர்களும் சாகுபடியாளர்கள் அல்ல என்கின்ற தீர்ப்புக்கு இன்று ஆளாகி இருக்கிறார்கள். அதன் மேல் அப்பீல் செய்யப்பட்டு, மீண்டும் வழக்கு, வரும் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் எடுத்துக்கொள்ளப் போவதாக இருக்கிறது. அதற்குள் விவசாயிகளுடைய நிலைமை என்னவென்றால், முத்து முத்தாக வியர்வை சிந்தி, மணி மணியாக நெற்குவியலைத் தந்தவர்கள் களத்துமேட்டிலே காவலர் புடைசூழ அதைக் கொட்டிவிட்டு, வீட்டிலே வறுமைத் தேள் கொட்டிட, வாடிக் கிடக்கிறார்கள். குளித்தலைத் தொகுதியில் இப்பொழுது நிலவி வருகிற இப்படிப்பட்ட நிலைமையைப் பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட மறந்தது வருந்தத்தக்க ஒன்று.

நெருக்கடிக்கு ஆளாகி இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உயர் நீதிமன்றம் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக புதிய ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அதையும் துரிதமாகக் கொண்டு வரவேண்டும். ஏழைத் தொழிலாளர்களுடைய, ஏழை விவசாயிகளுடைய அவல நிலைமையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றுமே இல்லை என்பதை மிகவும் கவலை கொண்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுப் பற்றாக்குறை நிலையைப் பற்றியது! கவர்னர் அவர்களுடைய உரையில்

உணவு விலை குறையவில்லை என்று குறிப்பிட்டாலும், உணவு விலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது. எங்கு பார்த்தாலும் உணவு விலை விஷம் போல் தினம் தினம் ஏறிக்கொண்டு இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆந்திராவிலுள்ள பெருவாரியான உபரி அரிசி தமிழகத்திற்குப் பயன்படாமல் வட நாட்டில் சோளப் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்குள்ள கோதுமையைக் கொண்டு வடக்கே சரிக்கட்டுவதற்குப் பதிலாக, ஆந்திராவிலுள்ள உபரியான அரிசியைத் தமிழ்நாட்டிற்குப் பயன்படாத முறையில் எடுத்துச் சென்றதானது, இங்கு விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. இதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை. இப்படி விலைவாசிகள் உயர்வைத் தடுக்க எப்படிப்பட்ட வழிவகை செய்யப்படும் என்பதும் சொல்லப்படவில்லை.

உணவு நிலைமையைச் சமாளிப்பதற்கு, சர்க்கார் உணவுப் பெருக்கத்திற்கு திட்டங்கள் செய்யவேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத ஊமையின் நிலைமையில்தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து, சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால் உணவு நிலை பற்றாக்குறை இதுபோன்றே எப்பொழுதும் நீடித்துக்கொண்டே இருக்கும். இத்தகைய நிலைமைகளிலிருந்து திராவிடம் விடுபட்டு, திராவிடம் தனித்து, செழித்து நின்று, வளம்பெற, வாழ, நல்ல முறையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதற்குக் குறிப்பாக, உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்கிறேன். குடகனாறு திட்டம் தேவையென்று முயற்சி ஒன்று குளித்தலைத் தொகுதியில் 1952 ஆம் ஆண்டு முதற்கொண்டே இருந்து வருகிறது. அதைப் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களிடமும், கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களிடமும், கனம் மராமத்து அமைச்சர் அவர்களிடமும், கனம் நிதி அமைச்சர் அவர்களிடமும் பல தடவை பல மனுக்கள் மூலமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்குள்ள P.W.D. சூப்ரவைசர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து துரிதமாக நிறைவேற்றவேண்டும் என்பதை ஆய்ந்து சொல்லியிருக்கிறார். அழகாபுரி என்கிற இடத்தில் ஒரு அணை கட்டினால் அதன் மூலமாக சுமார் பத்தாயிரம் ஏக்கர் புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றக்கூடிய வசதி இருக்கிறது. அதற்கு 12 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுவதைப் பற்றியெல்லாம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சிறிதும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்
சட்டமன்றப் பேரவையில் இந்திய விடுதலை வெள்ளி விழாவில் ஆற்றிய உரை
14–8–1972

மேதகு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு மேலவை தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களே, அனைத்துக் கட்சியின் தலைவர்களே, அன்புக்குரிய உறுப்பினர்களே,

இந்திய சுதந்திரத்திற்கு இன்று வயது இருபத்தைந்து, முறுக்கான பருவம், வெற்றி திருமகனை மணந்து வெள்ளிச் சிரிப்புக் காட்டுகின்ற காளைப் பருவம். இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர்–விழிகளை இழந்தோர்–உயிரினைத் தந்தோர்–உடைமைகள் பறி கொடுத்தோர்–சிறை வாழ்ந்தோர்–செக்கிழுத்தோர்–கஞ்சிக்கலயம் ஏந்தியோர்–கல்லறையாக மாறினோர்–துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர்–தூக்குக் கயிறை முத்தமிட்டோர்––அனைவரது காலடிகளிலும் அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகின்றோம். அவர்களில் சிலர் சிலையாகி விட்டனர். சிலர் படமாகி விட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலையாகி விட்டனர்.

நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீரூற்றி அணைத்திட்ட பெருமான் காந்தியண்ணல்–அவர் வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த தமிழ்நாட்டுத் தானைத் தலைவர் பெருமக்கள்–அணியணியாய்த் திரண்டெழுந்து அந்நிய ஆட்சிதனை தங்கள் வீர மூச்சால் ஊதிக் கலைத்த செந்தமிழ் மறவர் குடிப் பெருமக்கள்!

அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம் – பெய்திட்ட குருதி மழை – பொழிந்த கண்ணீர்–சுதந்திரப் பயிருக்கு உரமாகும்! பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் – நெல்மணிகள் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும் – நேரம் பார்த்து நீர் பாய்ச்சுதற்கும் – நோய்நொடிகள், பூச்சி புழு அணுகாமல் விரட்டுதற்கும் இந்த இருபத்தைந்து ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம். இயற்கையின் சோதனைகள் எண்ணிலடங்கா! எதிரிகளின் ஆக்கிரமிப்போ இரண்டு மூன்று தடவைகள்!

இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம்–இணையற்ற வெற்றிச் செய்திதனை இமயத்தின் நெற்றியிலே பொறித்துக் காட்டி இங்குள்ளோர் மட்டுமல்ல; எங்குள்ளோர் ஆயினும் எமது ஒற்றுமை காணீர் என்று பறை அறிவித்தோம்.

வெள்ளம் போல் எங்கள் கூட்டம்
உள்ளத்தால் ஒருவரே-மற்று
உடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங்கொணாதே-என
வையம் கலங்கக் கண்டு-
உள்ளம் துள்ளும் நாள்

இந்த நாள் என்று மகிழ்கின்றோம். ஆரத் தழுவி அகமலர் கண்டு – முகமலர் ஒத்தி ஆனந்தப் பள்ளுப் பாடுகின்றோம்.

இருட்குகையில் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்கு!

அதனைப் புயலிலும், பெருமழையிலும் அணையாது காக்கின்ற ஐம்பது கோடி மக்களின் கரங்கள்!

அந்தக் கரங்கள், மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள்!

சம்மட்டி பிடித்துத் தழும்பு கொண்ட கரங்கள்!
ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள்!
ஆலையில் சக்கரம் சுழற்றிடும் கரங்கள்!
நாற்று நடுகின்ற கரங்கள்!
நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள்!
பால் கிண்ணம் ஏந்தும் கரம்-பழ ரசக்
கோப்பை எடுக்கும் கரம்--பாதாம்
பிஸ்தா-பச்சை முந்திரி பொறுக்கும்
கரம்-மிகமிகக் குறைவு !

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே !

அவற்றில் சில கரங்களாகவும் பல மரங்களாகவும் இருப்பானேன்? ஏற்றத்தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்திரம் பெற்றோம் அன்று? இல்லை--இல்லை–இல்லவே இல்லை! முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன்? காலில் குத்தித் தொல்லை பல தருவானேன்?

இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம் சபதம்!

இனி நம் நாட்டில் இல்லார் இல்லை
கல்லார் இல்லை –
நல்லார் மீது பாய்கின்ற வல்லார் இல்லை –

எங்கும் புதுமை ! எதிலும் புதுமை ! அனைத்தும் பொது உடைமை !

அந்நிலை நோக்கிப் படிப்படியாய் உறுதியாக நடைபோடும் நம் அரசு என்பதை நாடறியும்–எத்தனையோ சமதர்மத் திட்டங்கள் கொணர்ந்திங்கு செயல்படுத்தியுள்ளோம்! இன்று விழா எடுத்துக் கலைந்துவிட்டால், விழா நோக்கம் நிறைவாவதில்லை– அதனாலே சில மகிழ்ச்சிச் செய்திகள் சொல்லுகின்றேன்.

பேருந்துத் தொழில் முழுதும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் பொதுத் துறையாய் ஆக்குவதற்கு இன்று முதல் முயற்சி எடுக்கப்படும்–விவரங்கள் பின்னர் வெளியிடப்படும். ஏற்கெனவே அறிவித்தவாறு பொதுத் துறையில் தொழிலாளர்கட்கு முதலீட்டில் இருபத்து நான்கு சதவிகிதம் பங்கு ஒதுக்கப் பெறுமென்ற முடிவினையும் இந்நாளில் தெரிவிக்கின்றேன். [கரவொலி.]

தமிழ்நாட்டில் விடுதலைப்போர் வீரர்கட்கு மூன்று திங்கள் சிறை சென்றோர் பட்டியல்படி இப்போது 7,300 பேருக்கு மாதந்தோறும் ரூபாய் ஐம்பது மானியமாய் வழங்குகின்றோம். அவர்தம் கோரிக்கை நிறைவேற்ற சுதந்திரமடைந்த இருபத்தைந்தாம் ஆண்டு நினைவாக–இனிமேல் இருபத்தைந்து ரூபாய் உயர்த்தி எழுபத்து ஐந்தாக வழங்கப்படுமென அறிவிக்கின்றேன். [கரவொலி.]

இந்த விழா நாளையொட்டி–சிறைவாழ் கைதிகட்கு தண்டனைச் சலுகைகளைத் தெரிவிக்கின்றேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றோர்க்கு 1½ ஆண்டுக்காலத் தண்டனைக் குறைப்பு; ஐந்தாண்டுக்கு மேல் பத்தாண்டுக்குள் தண்டனை பெற்றோர்க்கு ஒன்பது மாதம் தண்டனைக் குறைப்பு;

ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை நாலரை மாதம் தண்டனைக் குறைப்பு;

மூன்று மாதங்களுக்கு மேல் ஓராண்டு வரை தண்டனை பெற்றோர் பாதிக் காலத் தண்டனை அனுபவித்திருப்பின் மீதிக் காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாவர். அதே கைதிகள் பாதிக் காலத் தண்டனை அனுபவிக்காதிருந்தால் மூன்று மாதம் தண்டனைக் குறைப்பு.

மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றோர் அனைவருமே விடுதலையாவர்.

நாளைக் காலையிலே சுமார் இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட கைதிகள் விடுதலையாவர் என்ற செய்தியினையும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன் .

மற்றொரு மகிழ்ச்சியான செய்தி. தமிழக மக்களைப் பூரிப்பில் ஆழ்த்துகின்ற புதுச் செய்தி. சிலை வைத்துள்ளோம் சிதம்பரனார்க்கு சென்னைக் கடற்கரையில்! செப்டம்பர் திங்கள் அந்தச் செந்தமிழன் சிலைதனையே திறக்க வருகின்றார்–நம் அன்புக்குரிய பிரதமர், தூத்துக்குடிக்கு! சிலையான தமிழர் சிதம்பரனார் இழுத்திட்ட செக்கொன்று கோவைச் சிறையினிலே கேட்பாரற்றுக் கிடக்கின்ற சேதிதனை அறிவீரோ என்னவோ நானறியேன்! அந்தச் சிங்க மறவன் இழுத்த செக்கினை இங்கு சென்னைக்குக் கொணர்ந்து சிறப்பான இடமொன்றில் காட்சிப் பொருளாய் ஆக்குதற்குத் திட்டம் தீட்டிவிட்டோம். இத்திங்கள் முடிவதற்குள் இனிது நிறைவேறும் அந்தக் காரியம் என்று கூறுகின்றேன்.

தியாகத்தின் சின்னமன்றோ அந்தச் செக்கு!

தியாகத்தை மதிப்பதன்றோ நம் அரசு!

தில்லையாடி வள்ளியம்மைக்குத் திருநகர் அமைத்ததன்றோ தமிழ் அரசு!

அதனாலே தியாகத்தைப் போற்றிடுவோம்!

தியாகிகளைத் தெய்வமெனத் தொழுதிடுவோம்!

மண் காக்க–மான மொழி காக்க–

கண் காக்கும் இமை போல் வாழ்ந்து

வீழ்ந்துபட்ட வீரர் குல நாயகர்க்கு

இந்நாளில் அனைவருமே வணக்கம் செய்வோம். [கரவொலி.)

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாநில முதலமைச்சர்கள் சுதந்திர தினத்தில் தேசியக் கொடியேற்றும் உரிமை தந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு நன்றி !

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்
புனித ஜார்ஜ் கோட்டையில் முதன்முதலில்
தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை!

15–8–1974

இந்தியப் பெருநாடு விடுதலைபெற்ற இந்தத் திருநாளில், என் அன்பு வாழ்த்துகளைத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, வீர சுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்த மான மறவர்களுக்கும், தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.



மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில் வெற்றிக் களிப்புடன் பறந்து, பட்டொளி வீசிடும் தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள்தான் இந்த நாளில் ஏற்றி வைக்க வேண்டுமென்று நமது தமிழக அரசு எழுப்பிய உரிமைக் குரலைப் புறக்கணிக்காமல் ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்ற நமது உறுதி படைத்த உள்ளத்திற்குக் கிடைத்த "விடுதலை நாள் பரிசு" இதுவென எண்ணி மகிழ்கிறோம். அண்ணல் காந்தியடிகளும், ஆசிய ஜோதி நேருவும், திலகரும் தீனபந்துவும், திறன்மிகு சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், வித்தகர் இராஜாஜியும், வீரர் நேதாஜியும்–எண்ணற்ற இந்தியப் பெரு வீரர்களும் சிந்திய இரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம்! அந்த மலரின் மணம், மாளிகைகளின் பலகணி வழியாக, தென்றலின் தோள்மீது ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும்.

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், "1947 ஆகஸ்டு 15–அந்நிய ஆதிக்கத்திற்குக் கணக்குத் தீர்த்த நாள்" என்றும், "ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிற ஆகஸ்டு 15–சுதந்திரத்தின் பயன்களைக் கணக்குப் பார்க்கிற நாள்" என்றும் அழகுபடக் கூறினார்கள்.

சுதந்திர முழக்கம் செய்த தியாக சீலர்கள் எவரையும் இந்த அரசு மறக்கவில்லை. மதிக்கத் தவறவில்லை. பூலித்தேவனைத் தொடர்ந்து வெள்ளையரை எதிர்த்துக் குரல் ஒலித்த வீரபாண்டிய கட்டபொம்மனின் அழிந்துபோன பாஞ்சாலங்குறிச்சியையும் இதோ–மீண்டும் உருவாக்கிவிட்டோம். அந்தத் தீரனின் திருநாமம் என்றும் மறையாதிருக்கும் வகையில்! தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறோம்.

சிதம்பரனார் புகழ்பாட, அவர் சிறையில் இழுத்த செக்கைக் கண்டுபிடித்துச் சென்னை மாநகரில் காட்சிக்கு வைத்திருக்கிறோம். கவிதை வடிவில் விடுதலைப் போர்க் கருவிகளைத் தயாரித்துக் கொடுத்த கவியரசன் பாரதிக்குச் சிலை மட்டுமல்ல, எட்டையபுரத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கியிருக்கிறோம்.

மூதறிஞர் இராஜாஜிக்கு நாம் எழுப்பும் நினைவாலயம் முடியும் தருவாயிலிருக்கிறது.

ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தியாகிகளுக்குத் திங்கள்தோறும் மானியம்–தமிழக அரசின் சார்பில் விடுதலைப் பட்டயம்–இப்படிக் கடமை தவறாது அந்நாளில் சுதந்திரப் போர்க்களங் கண்டவர்க்கு வழங்கிடும் அன்புக் காணிக்கையை இந்த அரசு தட்டாமல் தயங்காமல் வழங்கி வருகிறது.

வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்லவே! மக்களுக்குச் சுக வாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கியக் குறிக்கோள் அன்றோ?

ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள்– இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா? இல்லை என்றுதானே பதில் எழுந்து தொல்லை தருகிறது, மனத்துக்கு? தமிழகத்தைப் பொறுத்தவரையில் –நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு இயன்ற வரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்று வருகிறோம். அடித்தளத்து மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஏழை எளியோர் மேன்மை பெற நமது திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

\நமது கண்ணொளி வழங்கும் தீவிரப் பணிகள், எல்லாப் பகுதிகளிலும் நடைபெற்று மக்களைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்கி, கை ரிக்சாக்களை அறவே அகற்றி விட்டோம். ஊனமுற்றோர்க்கு உதவிட முனைந்துள்ளோம். குடியென்னும் கொடுமையை மட்டுமல்ல; குதிரைப் பந்தயமெனும் தீமையையும் இந்த ஆண்டு ஒழித்துவிட்டோம். இதோ பறக்கிற தேசியக் கொடி, இந்திய ஒருமைப்பாட்டுச் சின்னமெனத் திகழ்கிறது. ஆனால்–மதுவிலக்கும், குதிரைப் பந்தய ஒழிப்பும்– மகாத்மாவின் கொள்கைகள்; எனினும், அவை அனைத்திந்திய அளவில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்திய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட, தமிழகம் எடுத்துள்ள இந்த நல்ல முடிவுகளை இந்திய மாநிலங்கள் அனைத்தும் பின்பற்ற, பேரரசின் அதிகாரத்திலிருப்போர் வழிவகை காண வேண்டும்.



தன்னிறைவுடன் விளங்கிய தமிழ் மாநிலத்தில் உணவுப் பிரச்சினை நமக்கு வேதனையளிக்கும் ஒரு சம்பவம்!

சமுதாயத்தின் தேவைகளை தனியொருவன் தன் சுய நலத்திற்காகச் சுருட்டிக்கொள்ள முற்படுவதால் ஏற்படும் தீமைகளில் ஒன்றுதான் இந்த உணவுப் பிரச்சினை!

பிரச்சினையைக் கண்டு ஓடாமல், ஒளியாமல் அல்லது அலட்சியப்படுத்தாமல் அரசு எடுத்த நடவடிக்கைகள்–பொது மக்கள் தந்த ஒத்துழைப்பு–இவைகளின் காரணமாக சமூகவிரோத வன்முறைச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

பதுக்கல் பூதங்கள், கடத்தல் பிசாசுகள், தங்கள் பேழைகளை நிரப்பிக்கொள்ள ஏழைகளின் வயிற்றில் அடிப்பது மன்னிக்க முடியாத துரோகம். அவர்கள் கடுமையான சட்டத்துக்குள், பொறியில் அகப்பட்ட எலிபோல் ஆக்கப்படுவார்கள் என்பதை இந்த நாளில் நான் எச்சரிக்காமல் இருக்க முடியாது. எதையும் பேசித் தீர்க்க முன்வராமல் சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைய முனைவது, சமுதாய நலனுக்காகச் செய்யப்படும் காரியங்களைத் தடுக்கக் குறுக்கே நின்று மிரட்டுவது இவைகளை இந்த அரசு தயவுதாட்சண்யமில்லாமல் சந்திக்கும், சமாளிக்கும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரம்–எல்லா மக்களுக்கும்தான்! ஒருவன் வாழ ஒருவர் வீழ அல்ல!

"சிற்றூரும், வரப்பெடுத்த வயலும்,
ஆறு தேக்கிய நல் வாய்க்காலும்
நெற்சேர உழுது உழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்களுக்குப்"
பயன்படாத சுதந்திரம்–
"பொற்றுகளைக் கடல் முத்தை,
மணிக் குலத்தைப் போய் எடுக்க"
மூச்சு அடக்கியோர்க்குப்
பயன்படாத சுதந்திரம்–பாலைவனம்
நிலமாகத்தான் கருதப்படும்–அதனைச்
சோலைவனத்துச் சுந்தர நிலமாக்க
இந்த நாளில் அனைவரும் உறுதி எடுப்போம்.

விலைவாசி ஏற்றம்–வேலையில்லாத் திண்டாட்டம் எனும் வேதனைச் சூழலுக்கிடையே சுதந்திரத் திருநாள் எனும் மகிழ்ச்சி ஒரு தேன் துளிதான் எனினும், அதன் சுவை குன்றிடும் எனக் கூறுவார் இல்லை. ஆயினும், தேசிய அளவில் மிகப் பெரியதொரு பொருளாதார மாற்றத்தைச் செய்து தீர வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்திடலாகாது. அரசியல் அமைப்பிலும், பொருளாதாரத் துறையிலும் துணிந்து எடுக்கின்ற புரட்சிகரமான நடவடிக்கைகளின் மூலமே இந்தியாவை ஒளிபொருந்திய நாடாகத் திகழ வைக்க முடியும். இந்த அசைக்க முடியாத பேருண்மைக்குத் தலைவணங்கி, தொண்டினைத் தொடருவோம்! தூய நல் விளைவுகளைச் சேர்ப்போம்" என்று கூறி, என் இதய வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பவள விழா–சட்டப் பேரவை வைர விழாவில் ஆற்றிய உரை

14–7–1997

"இந்தவிழா நிகழ்ச்சியை அற்புதமாக ஏற்பாடு செய்து எழிலும், எழுச்சியும் குலுங்க இந்த நல்ல மாலை நேரத்தில் பெரியவர்களையெல்லாம் அழைத்து, அவர்களுடைய அறிவுரைகளை வழங்கிடச் செய்த–அதற்கென பல நாட்கள் அரும்பாடுபட்டு உழைத்த பேரவையினுடைய தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கும், பேரவையைச் சார்ந்த அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல்கள்மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டு, அந்த அமைப்பினுடைய 75 ஆவது ஆண்டு நிறைந்த பவள விழாவையும், தமிழகச் சட்டமன்றத்தின் பேரவை தொடங்கப்பட்டு, அந்தப் பேரவையின் 60 ஆண்டுகள் நிறைந்த வைர விழாவையும் இங்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.



1972 ஆம் ஆண்டு இந்திய சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாடும்போதும் நான்தான் இங்கே முதலமைச்சராக இருந்தேன். 1989–ல் சட்டமன்றப் பேரவையினுடைய பொன் விழாவைக் கொண்டாடியபோதும்

நான்தான் முதலமைச்சராக இருந்தேன். இப்போது இந்திய நாட்டின் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடும்போதும் நான்தான் முதலமைச்சராக இருக்கிறேன். இன்று –இந்தப் பவள விழா, வைர விழாவைக் கொண்டாடும்போதும் நான் முதலமைச்சராக இருக்கிறேன். எனவே, நீங்கள் எனக்கு ஒரு பட்டம் கொடுக்கலாம்–"விழா முதலமைச்சர்" என்று.

இப்படி, நானே முதல்வராக இருந்து இந்த விழாக்கள் நடப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்.



தேர்தல்கள்மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு தொடங்கப்பட்டு, 75 ஆண்டுகள் ஆயிற்று என்று சொன்னேன். அதனுடைய பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதை நீங்கள் அறிவீர்கள்.

தேர்தல் என்பது தமிழர்களுக்குப் புதிய ஒன்று அல்ல. பிற்காலச் சோழர்கள் காலத்திலேயே தமிழ் நிலத்திலே கிராமப் பகுதிகளில் தேர்தல் முறை இருந்தது என்பதற்கு உத்தரமேரூர் கல்வெட்டு சாட்சியாக இருக்கிறது. யார், யார் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுவதைவிட, விதிமுறை இருப்பதைவிட, யார், யார் ஊராட்சித் தேர்தலுக்கு நிற்கக் கூடாது; மக்கள் பிரதிநிதிகளாக வரக்கூடாது என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. நல்லவர்கள் அல்லாதவர்கள், ஊழல் புரிகிறவர்கள், பிறர் பணத்திற்கு ஆசைப்படுகிறவர்கள், காமவேட்டைக்காரர்கள், குடிகாரர்கள், இவர்கள் எல்லாம் தேர்தலிலே ஈடுபடக்கூடாது; ஈடுபடுவது தடுக்கப்படும் என்ற விதிமுறையின் அடிப்படையில் பிற்காலச் சோழர்களுடைய காலத்திலே கிராமப் பகுதிகளிலே தேர்தல்கள் நடைபெற்றன என்பதற்குச் சான்று பகன்று இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற கல்வெட்டுதான் உத்தரமேரூர் கல்வெட்டு.

நான் பிற்காலச் சோழர்களைக் குறிப்பிட்டேன். சங்க காலத்திலேயே, பழந்தமிழ் காலத்திலேயே இந்த வாக்குச் சீட்டு முறை இருந்திருக்கிறது. வாக்குச் சீட்டு என்றால் அச்சடித்த காகிதம் அல்ல. ஓலைகளிலே இந்த ஊருக்குத் தலைவராக யார் வர வேண்டும் என்று ஊர் மக்கள் விரும்புகிறார்களோ–அந்தப் பெயரை ஓலைகளிலே எழுதி, அங்கே நடு மண்டபம் ஒன்றிலே வைக்கப்பட்டிருக்கின்ற குடத்திலே அந்த ஓலைகளை இடுவது ஒரு தேர்தல் முறை. இதை ஒரு சங்ககாலப் புலவன் ஒரு போர்க்களக் காட்சியை பாடுகின்ற நேரத்திலே நமக்குச் சுட்டிக்காட்டுகிறான். போர்க்களத்திலே பலர் மாண்டு கிடக்கிறார்கள். அப்படி மாண்டு கிடக்கும்போது, மாண்டு கிடக்கின்ற அந்த பிணங்களின் வயிற்றையும், நெஞ்சையும், தலையையும், கழுகுகளும் பருந்துகளும் குத்திக் கீறி, உணவாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு கழுகின் செயலைப் பார்க்கிறான் புலவன். மாண்டு கிடக்கின்ற ஒரு வீரனின் குடலை உருவி, அது உண்ணுகின்ற காட்சியை சங்ககாலப் புலவன் வர்ணிக்கின்றான்.எப்படி என்றால், குடவோலை முறையிலே குடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள ஓலைகளை வெளியே இழுப்பதைப் போல அந்த வீரனுடைய குடலை இந்தக் கழுகும், பருந்தும் வெளியே இழுக்கின்றன என்று குறிப்பிடுகிறான்.

அந்தப் பாடல் மூலமாக குடவோலை முறை பழந்தமிழர் காலத்திலேயிருந்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது. இப்படி பன்னெடு நாட்களுக்கு முன்பு பழந்தமிழர் காலத்திலேயே இந்த மக்களாட்சி மாண்பினை உணர்ந்தவர்களாக தமிழ்நாட்டு மக்கள் இருந்திருக்கிறார்கள். நம்மின மக்கள் அதை உணர்ந்தவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவ்வழியிலே வந்த–ஆங்காங்கு சில தடைகள், இடையூறுகள் இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் கடந்து மக்களுடைய பிரதிநிதிகள் அமர்ந்து சட்டம் இயற்றுவது –சமுதாயத்தை முன்னேறச் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்வதற்குத்தான் சட்டமன்றங்கள், பாராளுமன்றங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்றன.

இந்தச் சட்டமன்றத்திலே பல ஆண்டுக்காலம் பணியாற்றியவன்–1957 ஆம் ஆண்டிலேயிருந்து பணியாற்றியவன்–பணியாற்றிக்கொண்டிருக்கின்றவன் என்ற முறையில் இந்த இரு விழாக்களிலும் கலந்துகொள்வதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே எந்தெந்த முதலமைச்சர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்? "தாடி வைக்காத பெரியார்" என்று புகழப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்திருக்கிறார்.

பேச மாட்டார்; ஆனால் அரிய செயல்களைப் புரிவார் என்று புகழ்பெற்ற–பேச்சில் என்ன இருக்கிறது; செயலில்தான் எல்லாம் இருக்கிறது என்று செய்து காட்டிய பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். நிருவாகத்திலே இவருக்கு நிகர் யாருமில்லை என்று பெயரெடுத்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று, எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களையெல்லாம் சட்டமன்றத்திலே தாங்கிக்கொண்டு "Your days are numbered" என்று எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் சொன்னபோதுகூட, "My steps are measured" என்று சொன்ன பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

என்னுடைய இனிய நண்பர்–அருமை நண்பர்–மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றியவர்கள் எல்லாம் பல பெரும் பதவிகளுக்கும் சென்றிருக்கிறார்கள். நம்முடைய சி. சுப்ரமணியம், மாநில அமைச்சராக இருந்தார். அவர் மாநில அமைச்சராக இருந்தபோது–1957 ஆம் ஆண்டு நான் சட்டசபைக்குள் நுழைந்தவன். அப்போது அவர்கள் நிதியமைச்சர். நான் நுழைந்த இரண்டாம் ஆண்டு 1958–ல் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கும்போது "நான் இன்றைக்குச் சதம் அடிக்கப் போகிறேன்; 'செஞ்சுரி' போடப் போகிறேன்" என்று சொன்னார்கள். நாங்கள் அகல விழிகளை விழித்து என்னவென்று பார்த்தோம். இந்த பட்ஜெட் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் என்று சொன்னார்கள்.

1957–58–ல் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் அவ்வளவு பெருமையாக இருந்தது. இன்றைக்குப் பதினைந்தாயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டாலும், அதனுடைய பலன்களை மக்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலையிலே நாடு இருக்கிறது.

அன்று மாநில அமைச்சராக இருந்த சி.எஸ். அவர்கள் மத்தியிலே அமைச்சரானார்கள். மராட்டியத்தின் ஆளுநராகவும் ஆனார்கள். அதைப்போலவே, இங்கே மாநில அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மத்தியிலே அமைச்சராகவும், குடியரசுத் துணைத் தலைவராகவும், குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள். அதைப்போலவே, இங்கே சென்னை மாகாண முதல்வராக (பிரதமராக) இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் வங்காள மாநில ஆளுநராகவும், முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆகவும் ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த வி.வி. கிரி அவர்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள், கேரள மாநில ஆளுநராக ஆனார்கள். இங்கு அமைச்சராக இருந்த பிரம்மானந்த ரெட்டி அவர்கள் (ஒன்றாக இருந்தபோது–சென்னை மாகாணமாக இருந்தபோது) ஆந்திர முதலமைச்சராக ஆனார்கள். பின்னர், ஆளுநராகவும் ஆனார்கள். நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள், இங்கே அமைச்சராக இருந்தார்கள். பின்னர் ஆந்திர முதல்வராகவும் ஆனார்கள். பிறகு இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள்.

இந்த அளவிற்குப் பல இந்தியக் குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய சட்டமன்றம், தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை நான் தவறாகச் சொல்லியிருந்தால் திருத்திக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்கால மக்களாட்சித் தத்துவத்திற்கும், மக்கள் சேவை உணர்விற்கும் அக்காலத்திலேயே சோழ மன்னர்கள் வித்திட்டார்கள் என்று கூறினேன். அந்த மக்கள் சேவை எப்படியிருக்க வேண்டும் என்பதை "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று உத்தமர் காந்தியடிகளும், அறிஞர் அண்ணா அவர்களும் சொல்லி செயல்பட்டதைப்போல, "சேவை என்பது மற்றவர்கள் நன்மையடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காக, தான் செய்யும் காரியம்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லி செயல்பட்டதைப்போல, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்கள் நலனையே உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

ஒரு தேசத்தை ஒருவர் ஆட்சி புரிவது என்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக்காகவேயொழிய, ஆட்சி புரிவோரின் நன்மைக்காக அல்ல என்பதை ஒவ்வொருவரும் மனதிலேகொள்ள வேண்டும். ஜனநாயகம் என்பது மக்களாட்சி எனும் அரசாங்க முறை; "மக்களுக்காக –மக்களால் நடத்தப்படும்–மக்கள் அரசாங்கம்" என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டதை மறந்துவிட முடியாது. தற்காலத்தில் ஜனநாயக நாடுகள் யாவும் மக்களாட்சி முறை என அழைக்கப்படும் பிரதிநிதித்துவ அரசாங்க முறையை மேற்கொள்கின்றன.

மக்களின் சார்பில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறார்கள். தற்போது அரசிடமிருந்து மக்கள் அதிக அளவில் எதிர்பார்க்கிறார்கள். எனக்கும் புரிகிறது எல்லோருக்கும் புரிவதைப்போல.

அவைகளை நிறைவு செய்யவேண்டிய பொறுப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையில்தான் இருக்கிறது. சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை ஒழுங்குப்படுத்துவது என்பது சலவை செய்யப்பட்ட உடைக்கு இஸ்திரி போடுவதைப்போல! ஏனென்றால் கொஞ்சம் கவனம் தவறினாலும் இஸ்திரி போடும்போது துணி கருகிவிடும். அதனால்தான், சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் சர்வ ஜாக்கிரதையாகச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்.

சட்டங்கள் என்பது குடிமக்களின் ஏற்புடைய விருப்பை அறிவிக்கும் முறையாகும். சட்டமன்றம் என்பது குடிமக்களின் முடிவை வெளிப்படுத்தும் நிறுவனமாக அமைகிறது. மக்களிடையே பொருளாதாரச் சமத்துவம் உருவாக்கப்பட, வகுக்கப்பட்ட திட்டங்கள் பலவும் தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவதோடு, இந்திய நாட்டிற்கே முழுமைக்கும் வழிகாட்டத்தக்கதாக அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

ஒரு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும்; ஆளுங்கட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணங்களைப் பேரறிஞர்கள், பெரியவர்கள் பலரும் எடுத்துக்காட்டி அதைச் செயல்படுத்தியும் உணர்த்தியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியைப் பற்றி ஒரு முறை அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது சொன்னார்கள்:

"கேரளத்திலே ஒரு திருவிழா நடைபெறும். அந்தத் திருவிழாவிலே யானையின் துதிக்கையிலே ஒரு கம்பத்தைக் கொடுப்பார்கள். அந்த யானை அந்தக் கம்பத்தை–குறிப்பிடப்பட்ட குழியிலே கொண்டு போய் நடும். அது நட்ட பிறகுதான் திருவிழா தொடங்கும். இப்படி ஒரு நாள் ஒரு திருவிழாவில் யானையின் துதிக்கையிலே இரும்புக் கம்பத்தைக் கொடுக்க, அந்த யானை குழிக்கு அருகே சென்று, அதை நட மறுத்துவிட்டது. எல்லோருமே ஆச்சரியத்தால் அதிர்ச்சியடைந்தார்கள். அது நாட்டிற்கே நல்லதல்ல என்று கவலை கொண்டார்கள். பலமுறை பாகன் அடித்தும்கூட, அதைக் குத்தியும்கூட, வதைத்தும்கூட–அந்த யானை அந்தக் குழியிலே அந்தக் கம்பத்தை நட மறுத்துவிட்டது. ஏனென்று தெரிந்துகொள்ள–பிறகுதான் எல்லோரும் குழியைப் போய் எட்டிப் பார்த்தார்கள். குழிக்குள்ளே ஒரு சின்ன பூனைக் குட்டி இருந்தது. கம்பத்தை நட்டால் பூனைக் குட்டி இறந்துவிடும் என்பதற்காக யானை அந்தக் கம்பத்தை நட மறுத்தது என்பதை உணர்ந்தார்கள்."

அண்ணா சொன்னார்–சட்டசபையிலே "நீங்கள் யானையாக இருக்கின்ற ஆளுங்கட்சிக்காரர்கள்–பூனையாக இருக்கின்ற எங்களை–எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களை அந்த யானை எப்படி மதித்ததோ அப்படி மதியுங்கள்" என்று சுட்டிக்காட்டினார்கள்.

இன்னொரு முறை, நம் நண்பர் ஹண்டே அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது–அப்போது ஹண்டே அவர்கள் தோழமைக் கட்சி, சுதந்திரா கட்சி. ஹண்டே அவர்கள் தி.மு.கழகத்தின் ஆட்சி அண்ணாவின் தலைமையிலே நடைபெறுவதைப்பற்றி, அவர் தோழமைக் கட்சியாக இருந்தாலும்கூட, ஆட்சிக்குத் தேவையான கருத்துகளை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு எதிர்க்கட்சிக்காரர் எழுந்து "என்ன? ஹண்டே இவ்வளவு மென்மையாகப் பேசுகிறார்" என்று கேட்டார். அப்போது, அண்ணா சொன்னார்: "எப்போதும் எதிர்க்கட்சிதான் வேகமாகப் பேசும்; ஆனால், தோழமைக் கட்சி, பூனை தன் குட்டியைக் கவ்விக் கொண்டு போவதைப் போலத்தான் கவ்வும்; எதிர்க்கட்சியாக இருந்தால், பூனை எலியின்மீது பாய்வதைப்போல பாய்வார்கள்; ஹண்டே அவர்கள், பூனை தன் குட்டியைத் தூக்குவதைப்போல, பல் பதியாமல் எங்களைத் தூக்குகிறார்" என்று அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

இது தோழமைக் கட்சிக்கு இருக்க வேண்டிய இலக்கணம் என்பதை அன்றைக்கே அண்ணா அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிட்டார். அவர்கள் சட்டமன்றத்திலே ஏற்கெனவே என்னோடு இருந்தார் என்று எனக்கு நினைவு. நல்ல சட்டமன்றப் பாரம்பரியம் கொண்டவர். நல்ல பண்பாளர். அவர்கள் சில கருத்துகளை இங்கே சொன்னார்கள்.

இப்போதெல்லாம் சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற விஷயங்கள் குறித்து–முன்புபோல அதிகாரிகள் மாலை நேரத்திலே எங்களிடம் வந்து கேட்டுத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை என்று

சொன்னார்கள். நானும் 1957–லிருந்து சட்டமன்றத்திலே இருக்கிறேன். நான் பேசிய பிறகு, அன்றைக்கு மாலையிலே எந்த அதிகாரியும் என்னை வந்து பார்த்து, என்ன பேசினீர்கள் என்று கேட்டதாக எனக்கு ஞாபகமில்லை. ஒருவேளை பாலகிருஷ்ணன் அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால், என்னைக் கேட்டது கிடையாது. நான் 1957–லும் இருந்தேன்; 1962–லும் இருந்தேன்; எதிர்க்கட்சியாக இருந்தேன்; அதற்குப் பிறகு, 1967–ல் ஆட்சிக்கு வந்தேன். அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறேன். எந்த அதிகாரியும் என்னைக் கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை.

நம்முடைய பாலகிருஷ்ணன் அவர்களுக்கு–கொஞ்சம் ஞாபக மறதி உண்டோ என்று எனக்கு எண்ணம். ஏனென்றால் நான் சொன்னேன் முதலிலேயே, பெருந்தலைவர் காமராஜர் சட்டமன்றத்தில் பேசியதே கிடையாது என்று. அவர் இங்கே தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டுப் பேசியதாக ஒன்றை இங்கே பாலகிருஷ்ணன் படித்துக் காட்டினார். அந்தப் பேச்சு காமராஜர் பேசியது அல்ல. சி. சுப்ரமணியம் அவர்கள் பேசிய பேச்சு என்பதை, வரலாற்றிலே பிழை வந்துவிடக்கூடாது என்பதற்காக–அவர் சார்பாக அந்தப் பிழையை உங்கள் முன் திருத்தி–ஏதாவது தவறு செய்திருந்தால், அந்தத் தவறையும் திருத்துங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு உங்களுடைய அன்பான வருகைக்கு நன்றி கூறி, இந்த அளவில் விடைபெறுகிறேன்.”

சரித்திரம்

உலகில் ஓரிருவர் சரித்திரமாகிறார்கள்; ஒரு சிலர், சரித்திரத்தை உருவாக்குகிறார்கள்; பலர், சரித்திரத்தில் இடம்பெறுகிறார்கள்; மிகப்பலரோ, இவை எதுவுமற்ற தரித்திரங்களாகவே மறைந்துபோகிறார்கள்.


–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில் சட்டமன்ற வரலாறு குறித்து ஆற்றிய உரை


11–1–2010

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரை குறித்தும், அதனைத் தொடர்ந்து இந்த அவையில் பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுடைய கருத்துகள் குறித்தும், நீண்ட நேரம் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் அளித்திருக்கின்றார்கள். நான் இப்போது ஆளுநர் உரை பற்றியோ அல்லது வரவிருக்கின்ற பட்ஜெட் பற்றியோ, வேறு பல நிலைமைகளைப் பற்றியோ பேச விரும்பவில்லை.



திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார்

நான் உட்பட, நாம் எல்லாம் சேர்ந்து, இந்த அவையிலேயிருந்து வெளியேறப் போகிறோம். நம்மை யாரும் வெளியேற்றாமலே நம்முடைய விருப்பப்படி வெளியேறப் போகிறோம், சில பேர் வெளியேறுவதற்காக வந்து, வெளியேறியவர்களையும் சேர்த்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு நாம் வெளியேறப் போகிறோம். எங்கிருந்து? சரித்திரக் கீர்த்திமிக்க இந்தச் சட்டசபை நடைபெறுகின்ற இந்த இடத்திலிருந்து வெளியேறப் போகிறோம்.



திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா


அடுத்து வரும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர் புதிய சட்டமன்றப் பேரவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறுவதற்கு ஏற்ற வகையில் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

இங்கே நடைபெறும் இறுதிக் கூட்டத் தொடர் இது என்பதால் இந்த நேரத்தில் இந்த அவையினுடைய வரலாற்றினை கொஞ்சம் திரும்பிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

டெல்லியிலுள்ள செங்கோட்டை, சக்கரவர்த்தி ஷாஜகானால் 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மொகலாயப் பேரரசின் மிகப் பெரிய சின்னம் என்பதைப்போல, சென்னை மாநகரத்திலேயுள்ள இந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டை, 16 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சின்னம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.


1640–ல் புனித செயின்ட் ஜார்ஜ் நினைவு தினமான ஏப்ரல் 23 அன்று இந்தக் கோட்டை கட்டப்பட்டதால், இதற்கு புனித ஜார்ஜ் கோட்டை (St. George Fort) என்று பெயரிடப்பட்டது.

1678–ல் இக்கோட்டை வளாகத்தில் மிகத் தொன்மையான புனித மேரி ஆலயம் கட்டப்பட்டது. அந்த தேவாலயத்தில்தான் 1753–ல் இராபர்ட் கிளைவின் திருமணம் நடைபெற்றிருக்கிறது. 1687 முதல் 1692 வரை ஆளுநராக இருந்த "யேல்" அவர்கள் காலத்தில்தான், ஆசியாவிலேயே மிக உயரமான கோட்டை கொடிமரத்தில் கம்பெனி கொடிக்குப் பதிலாக பிரிட்டிஷ் கொடி பறக்கவிடப்பட்டது. 1746 பிரெஞ்சுக்காரர்களால் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்த கறுப்பு படிகத்தாலான கிரானைட் போன்ற படிவங்களாலான 32 தூண்கள் 1761 ஆம் ஆண்டு மீண்டும் சென்னைக்கு எடுத்து வரப்பட்டு, அவற்றுள் 20 தூண்கள் இந்தக் கட்டடத்திலே நிறுவப்பட்டு, இப்போதும் அவை இக்கட்டடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. 1910 ஆம் ஆண்டில், அதாவது சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு தற்போதைய சட்டமன்றப் பேரவை மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது என்பதை எண்ணும்போது, இதற்கும் ஒரு நூற்றாண்டு விழா கொண்டாடலாம்போல் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாகாண சட்டசபைக்கு 1920–ல் நடைபெற்ற முதல் தேர்தலில் திராவிட இயக்கத்தின் வேர்க் கட்சியான நீதிக் கட்சி வெற்றி பெற்று, திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள் முதலமைச்சர் ஆனார்.



மூதறிஞர் இராஜாஜி

சென்னை மாகாணத்திலேயே முதன்முதலாக 1920 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி சட்டமன்றத்தில் First Premier, "முதல் பிரிமியர்" என்ற முதலமைச்சர் பதவியைப் பெற்ற பெருமை நீதிக் கட்சிக்கும், அந்தக் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பராயலு ரெட்டியாருக்கும்தான் சாரும். அப்பொழுது சட்டமன்றத்தை 12–1–1921 அன்று கன்னாட் கோமகன் தொடங்கி வைத்தார். அவ்வமயம் சென்னை மாகாண ஆளுநராக இருந்த விலிங்டன் பிரபு அவர்களும், அவரது துணைவியாரும் 6–3–1922 அன்று சட்டமன்றத்திற்கு வருகை தந்தார்கள். அப்போதுதான் தேக்கு மரத்தால் செய்யப்பட்ட, சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்த, பேரவைத் தலைவருக்கான இந்த இருக்கையைப் பரிசாக அளித்தனர். அதுவே இன்றளவும் பேரவைத் தலைவரின் இருக்கையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இருக்கையை அவர்கள் வழங்கியதற்கு என்ன காரணம் என்பதை ஆளுநர் விலிங்டன்



பெருந்தலைவர் காமராஜர்

அவர்களே தன் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது அவருடைய தாத்தா 'ஹவுஸ் ஆப் காமன்ஸ்" அவையிலே ஸ்பீக்கராக இருந்தவர் என்றும், அவரது துணைவியாரின் தந்தையார் சிறந்த நாடாளுமன்றவாதியாக இங்கிலாந்தில் திகழ்ந்தார் என்றும் பேசியிருக்கிறார்.



திரு. எம். பக்தவத்சலம்

1920 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த நீதிக் கட்சி, 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை ஏறத்தாழ 17 ஆண்டுக்காலம் தொடர்ந்து ஆட்சியிலே இருந்தது. அந்த 17 ஆண்டுக்காலத்தில் நீதிக் கட்சியினுடைய ஆட்சி, இந்த நாட்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ., பெண்களுக்கு வாக்குரிமை உள்ளிட்ட சரித்திரம் மறவாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது. நீதிக் கட்சி ஆட்சியில் திரு. சுப்பராயலு ரெட்டியார், பனகல் அரசர், பி. சுப்பராயன், பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர், பி.டி. இராசன் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தார்கள்.

1921 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டு வரை இதே புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள பேரவை மண்டபத்திலே கவுன்சில் ஹாலில் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெற்றது. பேரவையின் கூட்டமே இப்பொழுது இருக்கிற கவுன்சில் ஹாலில் அங்கேதான் நடைபெற்றது.

1937–ல் நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை இடங்களை வென்றபோதும், சில பிரச்சினைகள் காரணமாக அமைச்சரவை அமைக்கவில்லை. கவர்னரின் வேண்டுகோள்படி இடைக்கால ஏற்பாடாக 1–4–1937 அன்று கே.வி. ரெட்டி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

ஒன்றரை மாதத்திற்குப் பின் அமைந்த காங்கிரஸ் அமைச்சரவை மூதறிஞர் இராஜாஜி அவர்களின் தலைமையில் 14–7–1937 அன்று பதவியேற்றது. 1937 ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை முதன்முதலாக சேப்பாக்கத்தில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பிரதான மண்டபத்தில்தான் (செனட் ஹால்) செயல்பட்டது.

14–7–1937 முதல் 21–12–1937 வரை சுமார் ஐந்து மாதங்கள் சேப்பாக்கத்தில் உள்ள செனட் மண்டபத்திலே சட்டப் பேரவை நடைபெற்றிருக்கின்றது.

27–1–1938 முதல் 26–10–1939 வரை சுமார் 20 மாதங்கள் அரசினர் தோட்டத்திலே உள்ள இராஜாஜி மண்டபத்திலே பேரவை நடைபெற்றது. இராஜாஜி மண்டபத்தை நினைத்துப் பாருங்கள்; பேரவையையும் ஒரு முறை உற்றுப் பாருங்கள்; இந்தப் பேரவை இராஜாஜி மண்டபத்திலே 27–1–1938 முதல் 26–10–1939 வரை 20 மாதங்கள் நடைபெற்றிருக்கின்றது.

இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்திய ஆங்கிலேய அரசைக் கண்டித்து, இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ்

அமைச்சரவை 30–10–1939–ல் இராஜினாமா செய்தது. அன்று முதல் 30–4–1946 வரை ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. 1946–ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வென்று 30–4–1946 அன்று ஆந்திர கேசரி டி. பிரகாசம் அவர்கள் தற்போதைய தலைமைச் செயலக பிரதான மண்டபத்தில் பொறுப்பேற்றார்.

24–5–1946 முதல் புனித ஜார்ஜ் கோட்டையிலே உள்ள இதே மண்டபத்தில் பேரவை நடைபெற்றது. பிரகாசம் அவர்களின் அமைச்சரவை 23–3–1947 அன்று பதவி விலகியது. அன்று பிற்பகலில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஓமந்தூரார் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேதான் 15–8–1947–ல் இந்திய திருநாடு விடுதலை அடைந்தது. முதல் சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிய முதல் முதலமைச்சர் என்ற பெருமையை ஓமந்தூரார் பெற்றார். அவரது பெயரைத்தான் Government Estate என்று இருந்த பகுதிக்கு "ஓமந்தூரார் வளாகம்" என்று நான் சூட்டினேன் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

1950 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது. 1952–ல் முதல் பொது தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்று அப்பொழுது மேலவை உறுப்பினராக இருந்த திரு. இராஜாஜி தலைமையில் அமைச்சரவை அமைத்தது. பேரவையின் உறுப்பினர்கள் 375 பேர் என்ற நிலையில் கோட்டையிலே இருந்த பேரவை மண்டபம் போதுமானதாக இருக்காது என்பதால், சென்னை அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை மண்டபம் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. 10 இலட்சம் ரூபாய் அந்தக் காலத்திலே.




1952 ஆம் ஆண்டு அரசினர்

தோட்டத்தில் புதிய சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டு, அதனை 2–5–1952 அன்று ஆளுநர் ஸ்ரீபிரகாசா திறந்து வைத்தார். அதுவே பின்னர் பாலர் அரங்கமாகவும், கழக ஆட்சியிலே கலைவாணர் அரங்கமாகவும் பெயர் பெற்று விளங்கியது. 1957 தேர்தலுக்குப் பிறகு, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவை மண்டபத்தில் பேரவைக் கூட்டங்கள் நடைபெறத் தொடங்கி, இன்று வரை 53 ஆண்டுகளாக இந்த மண்டபத்திலே கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையிலே, 20–4–1959 முதல் 30–4–1959 வரை ஒன்பது நாட்கள் மட்டும் உதகமண்டலத்திலே உள்ள அரண்மூர் மாளிகையில் பேரவை நடைபெற்றதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஓமந்தூராருக்குப் பிறகு, குமாரசாமி ராஜா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோர் முதமைச்சர்களாக இருந்து இந்தக் கோட்டையில் கொலு வீற்றிருந்து கோலோச்சி இருக்கிறார்கள்.

1967–ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானார். 1969–ல் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு முதமைச்சராகப் பொறுப்பேற்ற நான், 1971, 1989, 1996, 2006 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றிபெற்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளேன்.



15–3–1971அன்றுதி.மு.கழகஅமைச்சரவை என் தலைமையில் பதவியேற்றபோது, சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற அந்தப் பதவியேற்பு விழாவிற்கு

வந்திருந்த முக்கியப் பார்வையாளர்களில் ஒருவர் தந்தை பெரியார். பதவியேற்ற பிறகு நாங்கள் அனைவரும் அவர்களிடத்திலே ஆசி பெற்று வாழ்த்து பெற்றுச் சென்றோம்.

அதன் பின்னர் அருமை நண்பர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், ஜானகி அம்மையார் அவர்களும், ஜெயலலிதா அவர்களும், ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் முதமைச்சர்களாக இந்த மாமன்றத்திலே இருந்திருக்கிறார்கள்.

இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சரித்திரப் புகழ்வாய்ந்த தீர்மானங்கள், சட்டங்கள், முடிவுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை நினைவுகூர விரும்புகிறேன்.

வாக்காளர் பட்டியலிலே மகளிரும் இடம்பெற வகை செய்யும் தீர்மானம் 1–4–1921 அன்று நீதிக் கட்சி ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

தாழ்த்தப்பட்டவர்களை பஞ்சமர், பறையர் என்ற சொற்களால் குறிப்பிடுவது அரசு ஆவணங்களில் தவிர்க்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் 20–1–1922–ல் நிறைவேறியது.

ஆலயங்கள் நுழைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் இந்த அவையிலேதான், கிட்டத்தட்ட அந்த ஆண்டுகளிலேதான்.

8–10–1928 அன்று இந்தப் பேரவையிலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்:

சென்னை நகர காவல் துறையினர் பாரதியாருடைய பாடல்கள் அடங்கிய புத்தகங்களைப்பறிமுதல்செய்தநடவடிக்கைபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் கொண்டு வந்தார். பாரதியார் பாடல்கள் பற்றி ஒரு மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதால், அதையொட்டிய கருத்துகளை அவையில் தெரிவிக்கக்கூடாது என்று பேரவைத் தலைவர் கூறினார்; விவாதம் ஏற்பட்டு பிரச்சினையை அடுத்த நாள் எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவாயிற்று. அடுத்த நாள் இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் பாரதியாரின் பாடல்களை அவையிலே பாடி விளக்கமளித்தார். அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள மறுத்ததும், சத்தியமூர்த்தி அவர்களே அவையிலே எழுந்து நின்று பாரதியாருடைய பாடல்களைப் பாடி அந்தப் புரட்சியை செய்தார் என்பது அந்தக் காலத்து இந்த அவையினுடைய வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

கவர்னரால் இந்தப் பேரவைக்கு நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி திருமதி முத்துலட்சுமி ரெட்டி. அடுத்து நியமிக்கப்பட்டவர் திருமதி அலமேலு மங்கத் தாயாரம்மா.

3–11–1952–ல் கைத்தறிக்கென சில இரகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற தீர்மானம், 29–7–1953 குலக் கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவது பற்றிய தீர்மானம், அந்தக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று திருத்தத் தீர்மானம், வாக்கெடுப்பில் திருத்தத்திற்கு ஆதரவாக 138 வாக்குகளும், எதிர்த்து 138 வாக்குகளும் கிடைத்து, பேரவைத் தலைவர் திருத்தத்திற்கு எதிராக, அதாவது குலக்

கல்வித் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் அந்த நேரத்திலே திருத்தம் தோல்வியடைந்து, குலக் கல்வித் திட்டம் தப்பிப் பிழைத்தது. என்றாலும்கூட 18–5–1954–ல் குலக் கல்வி முறையைக் கைவிடுவதென்று, எத்தனை பேர் வாக்களித்தார்கள் என்றில்லாமல் எது நியாயம் என்பதை எண்ணிப் பார்த்து தமிழகத்திலே எழுந்த புரட்சியின் காரணமாக, மக்களுடைய கொந்தளிப்பின் காரணமாக அதைத் திரும்பப்பெற்றார்கள் குலக் கல்வித் திட்டத்தை; அதுவும் இந்த அவையிலே வரலாற்றுச் சான்றாகப் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஏன் இந்த அவையினுடைய வரலாற்றை நான் சற்று பின்னோக்கி திரும்பிப் பாருங்கள் என்று சொன்னேன் என்றால், இந்த அவையிலே எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ முடிவுகள் தமிழ்நாட்டு மக்களுக்காக என்று சிந்தித்து செயல்பட எடுக்கப்பட்ட முடிவுகள் எல்லாம் உண்டு. ஆனால் எல்லா முடிவுகளும் நான் இங்கே குறிப்பிட்டேனே, அதைப்போல 138–138 என்ற நிலையிலே இருந்தாலும்கூட, மக்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளித்து, அதற்கேற்ப சட்டங்களை வகுப்பது, ஆட்சியை நடத்துவது என்ற முறை அன்றைக்கு இருந்தது. அது இன்றைக்கும் இருக்க வேண்டும் என்ற முனைப்போடுதான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே நாங்கள் அமர்ந்திருக்கிறோம்.

இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்துக் கூறினார்கள். அவைகளுக்கெல்லாம் நான் பதில் அளித்தால் இந்தச் சட்டமன்றப் பேரவையைப் பற்றியும், புதிய வீட்டிற்கு நாம் குடிபோவதைப் பற்றியும் பேசுவதாகச் சொல்லிவிட்டு, மீண்டும் எங்கேயோ சென்றதாக நீங்கள் கருதக்கூடும். எனவே, நான் அவைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேச விரும்பவில்லை. துணை முதலமைச்சர் அதற்கெல்லாம் பதில் அளித்திருக்கிறார்.

இடையிடையே அமைச்சர்கள் குறுக்கிட்டு விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். ஆனால் ஒன்று. ஒரு கருத்தைச் சொன்னால் அந்தக் கருத்தின்பால் எத்தகைய எதிரொலி ஏற்படும், எத்தகைய நிலைமைகள் உருவாகும், ஆகவே, அந்தக் கருத்துகளைச் சொல்லாமல் இருப்பது நல்லதல்லவா என்றெல்லாம் எண்ணிப் பார்த்து அந்தக் கருத்துகளைச் சொல்வதுதான் சிலாக்கியமான ஒன்று என்பதை உணர்ந்து, நான் அறிந்த வரையில் என்னுடைய வாழ்க்கையில், அரசியல் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகின்றேன். அதைத்தான் இந்தச் சட்டமன்றப் பேரவையிலும் கடைப்பிடித்து வருகிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவையிலே எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. அவை என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் இங்கே குறித்துப் பேசி மறுபடியும் அதே நிகழ்ச்சியினுடைய தொடர்ச்சியை இங்கே நான் ஏற்படுத்த விரும்பவில்லை. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டு, நாம் குடிசெல்கின்ற புதிய இடத்திலாவது அந்த நிலைமை இல்லாமலும், நாட்டைப் பற்றிய நினைவு, மக்களைப்

பற்றிய நினைவு, இவைகளோடு நம்முடைய பணியை அங்கே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையின் இறுதியிலே, புரட்சித் தலைவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாட்டைச் சொல்லிப் போனார்கள். அந்தப் பாட்டு அவர்களுக்காகப் பாடியது அல்ல. எனக்குத் தெரியும், எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை மனதிலே வைத்துப் பாடிய பாட்டு அது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், என்னுடைய 40 ஆண்டுக்கால நண்பர் அல்லவா? இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சித் தேர்தல் நடைபெற்றபோது, தலைவராக நான்தான் வரவேண்டும் என்று அதற்காகப் பாடுபட்டவர். அதற்காக ஆட்களைச் சேர்த்தவர். அந்த நன்றி இன்றைக்கும் எனக்கு உண்டு. சாகின்ற வரையிலே உண்டு. அதைப்போல, இந்தப் பொறுப்புக்கு நான் வரவேண்டும் என்று விரும்பியவர்களில் அவரும் ஒருவர். ஆகவே, நான் அவருக்கும், எனக்கும் உள்ள 40 ஆண்டுகால நட்பின் காரணமாகச் சொல்லுகிறேன், இந்தப் பாடலை இங்கே அவர் சொன்னாலும்கூட அதனை நான் இப்படித்தான் கருதிக்கொள்கிறேன்.

என்னதான் நடக்கும், நடக்கட்டுமே!
இருட்டினில் நீதி மறையட்டுமே!
தன்னாலே வெளிவரும் தயங்காதே!

ஒரு "தலைவன்" இருக்கிறான் மயங்காதே!

(மேசையைத் தட்டும் ஒலி)

"ஒரு தலைவி இருக்கின்றார் மயங்காதே" என்று சொல்லவில்லை.

(மேசையைத் தட்டும் ஒலி)

"ஒரு தலைவன் இருக்கின்றான் மயங்காதே" என்று அன்றைக்கே என்னைக் குறிப்பிட்டுச் சொன்னார். இதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் எம்.ஜி.ஆருடைய அந்த நம்பிக்கையான வார்த்தையை ஏற்றுக்கொண்டு இந்த அவையைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

(மேசையைத் தட்டும் ஒலி)

உரிமை

அடிமையாக இருப்பவன் தனக்குக் கீழே ஓர் அடிமை இருக்க வேண்டும் என்று கருதினால், உரிமைகளைப் பற்றி பேச அவனுக்கு உரிமையே கிடையாது.

– கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற மேலவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முதல் உரை

21–2–1969

முதலமைச்சர் டாக்டர் சி.என். அண்ணாதுரை அவர்களது இரங்கல் தீர்மானத்தில் ஆற்றிய உரை

"நமது தமிழகத்தில் தனிப்பெரும் தலைவராய்; தமிழ் மக்களின் அண்ணனாய்; தமிழ் மொழியின் காவலராய்; தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும் புதிய பாணியை வகுத்த பாவலராய்; வள்ளுவன் வகுத்த வாழ்க்கைக்கு ஓர் இலக்கணமாய்; தமிழ்ப் பண்புக்கு ஓர் உறைவிடமாய்; உண்மையான ஜனநாயகவாதியாய்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை வாழ்க்கையாய் அமைத்துக் கொண்டு, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் அதிலும் குறிப்பாக வசதியற்று சமூகத்தின் அடித்தளத்தில் கிடந்த மக்களுக்குத் தொண்டாற்றி, இறுதி வரையில் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தவரும், நமது பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவராகவும், தமிழ்நாட்டு முதலமைச்சராகவும், இந்த அவையின் முதல்வராகவும் இருந்தவரான பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பாராவகையில் மறைவு எய்தியமை குறித்து, இம்மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறாத் துயரத்தையும் தெரிவிப்பதுடன், அப்பெருந்தகை மறைவால் வருந்தும் அவரது துணைவியார் ராணி அம்மையாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, இந்த மன்றத்தினுடைய முதல்வராகவும், தமிழகத்தினுடைய முதல்வராகவும், தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல் அனைத்திந்தியாவிலும் ஜனநாயக பாரம்பரியம் கட்டிக்காக்கப்பட வேண்டுமென்பதற்கேற்ப, தன்னுடைய அரசியல் நெறிமுறைகளை வகுத்துக் கொண்டவராகவும் இருந்த, தமிழ்நாட்டு மக்களுடைய இருதயத்தில் கொலுவீற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், பெப்ரவரி திங்கள் இரண்டாம் நாள் இரவு தன்னுடைய வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் தமிழ்நாட்டு அரசியலில் 1937-38 ஆம் ஆண்டின்போது, மொழிப் பிரச்சினையிலே தமிழ்நாடு தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்தியபோது அடியெடுத்து வைத்தார்கள். அந்தக் காலத்திலே தமிழ்நாட்டு அரசியல் மிகவும் கரடு முரடாகவும், கல்லும் முள்ளும் நிறைந்ததாகவும் இருந்தது என்பதையும், அண்ணா அவர்களுடைய அரசியல் நுழைவிற்குப் பிறகு தமிழ்நாட்டு அரசியல் மேடையில் எந்த அளவிற்கு நாகரீகத் தென்றல் வீசத் தொடங்கியது என்பதையும் அவரைத் தொடர்ந்து உணர்ந்தவர்கள் நன்கு அறிவார்கள். "கேட்டார்ப் பிணிக்குத் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்" என்ற வள்ளுவருடைய குறளை மெய்ப்பித்துக் காட்டிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு

உண்டு. "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்ற குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். எழுத்தால், பேச்சால், நாடகத்தால், இலக்கியத்தால், கலைநயத்தால், நடிப்பால், அரசியல் பேச்சுக்களால், அரசியல் எண்ணங்களால், கற்பனை வளத்தால், தமிழக மக்களுடைய இதயத்தை ஒருசேரக் கவர்ந்தவர் அவர். இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழ் அன்னை தவமிருந்து பெற்ற தலைமகனாக பேரறிஞர் அண்ணா அவர்கள் விளங்கினார்கள். உத்தமர் காந்தியாருடைய புனித நெறிகளை தன்னுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்தது மாத்திரமல்லாமல், தன்னைச் சேர்ந்த கட்சிக்காரர்களும், மற்றக் கட்சிக்காரர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டு அவர் ஆற்றிய தொண்டிற்கு அடையாளமாக, அவரை எல்லாக் கட்சிக்காரர்களும் மனம் விட்டு, தென்னாட்டு காந்தி என்று அழைக்குமளவிற்கு பெருமை பெற்றார்கள். அவர்கள் இரண்டாண்டு காலம் தமிழகத்திலே ஆட்சியை நடத்திய நேரத்தில், சொல்லப் போனால் அவர்கள் நல்ல உடல் நலத்தோடு, தெம்போடு ஓராண்டு காலம் தான் ஆட்சி புரிய முடிந்ததே தவிர, அதற்குப் பிறகு அவருக்கு அடிக்கடி ஏற்பட்ட உடல் நலக்குறைவின் காரணமாக, அந்த உபாதையையும் சகித்துக் கொண்டு, அவர் ஆற்ற வேண்டிய உரைகளை ஆற்றி, செய்து முடிக்க வேண்டிய பணிகளை அவர் திறம்பட செய்திருக்கிறார். அவர் ஒரு கூட்டத்திலே குறிப்பிட்டார். இந்த சட்டமன்றத்திலும் குறிப்பிட்டிருக்கிறார். "நான் மிக முக்கியமான மூன்று காரியங்களைச் செய்து முடித்திருக்கிறேன். செய்யவேண்டிய காரியங்கள் இன்னும் ஏராளமாக உள்ளன" என்று கூறியிருக்கிறார். பல ஆண்டுகளாக சமுதாயத் துறையிலே ஆற்ற வேண்டிய சீர்திருத்தங்களில் ஒன்று என்று கருதப்பட்ட சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டப்படி செல்லும்படி ஆக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அவர் கொண்டு வந்தபோது, சமுதாய சீர்திருத்தத்தில் அவருக்கு இருந்த அக்கறையை எடுத்துக்காட்டினார். அதைப்போலவே இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்கிற பெயர் வைக்கப்பட வேண்டுமென்பதற்கான கிளர்ச்சிகளையும், கொந்தளிப்புகளையும் எண்ணி, அவற்றிற்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதுபோல, இந்த மன்றத்தின் எல்லா உறுப்பினர்களும் ஏகோபித்துப் பேராதரவைத் தந்து அந்தப் பெயரைச் சூட்டிய நேரத்திலும், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த மொழிக் கிளர்ச்சிகளைக் குறைக்கிற அளவிற்கு, மொழிப் பிரச்சினையிலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அவர்கள் உருவாக்கிய தீர்மானத்தை, நாம் யாரும் மறந்திருக்க முடியாது. தன்னுடைய முதல் வரவு செலவுத் திட்டத்தை அவர்கள் சட்டமன்றத்தில் சமர்ப்பித்த நேரத்தில் 'எவ்வளவோ செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தை நான் வைத்துக் கொண்டிருந்தும், இப்போது இவ்வளவு தான் செய்திருக்கிறேன்' என்று சொல்லி தன்னுடைய பேச்சை அவர்கள் முடித்தார்கள். அப்படிப்பட்டவர் இன்னும் பல ஆண்டு காலம் வாழ்ந்திருந்து, இன்னும் பல முன்னேற்றப் பணிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்த்து இருந்த நேரத்தில், அவர்கள் மீண்டார்கள். நம்மோடு நீண்ட காலம் வாழ்வார் என்று நம்பிக் கொண்டிருந்த நேரத்தில், அந்த நம்பிக்கையில் பேரிடி விழுவதைப்

போல மீண்டும் அவரை நோய் கவ்விக் கொண்டது. அயல் நாட்டு மருத்துவர்களும், தமிழ்நாட்டின் தலைசிறந்த மருத்துவர்களும், அவர்களுடைய உடலைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள் சாதாரணமானது அல்ல. கட்சி மாச்சரியங்களைக் கடந்து, அரசியலுக்கு அப்பாற்பட்டு, தமிழகத்திலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் 'அண்ணா வாழ்க, உடல் நலம் பெருக' என்று வாழ்த்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் நம்முடைய ஆசையெல்லாம் வெறும் கனவாகப் போகிற அளவிற்கும், பயனற்றுப் போகிற நிலைமைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெப்ரவரி திங்கள் இரண்டாம் நாள் இரவு நம்மை விட்டுப்பிரிந்து விட்டார்கள். அவர்கள் இன்று நம்மிடையே உருவ அளவிலே இல்லையென்றாலும், அவர்களுடைய எண்ணங்கள் நம்முடைய இருதயங்களில் பதிந்து இருக்கின்றன. அவர்கள் உருவாக்கித்தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற நெறிகளைக் காக்க நாம்நம்மை ஆக்கிக்கொள்ளவேண்டும்.இதைத்தான் மறைந்த அந்தப் பெரியவருக்கு, நம்மையெல்லாம் ஆளாக்கி விட்டவருக்கு, தமிழகத்திலே ஒரு புதிய விடிவெள்ளியாகத் தோன்றி தமிழர்கள் உலகத்திலே தலைநிமிர்ந்து நிற்கும்படியான பெருமையை உருவாக்கித் தந்தவருக்கு நாம் செலுத்துகிற காணிக்கையாக இருக்க முடியும் என்று கூறி, அவர் வழி நடப்போம், அவர் எந்த அமைதியைத் தமிழகத்திலே, இந்தியாவிலே காக்க வேண்டுமென்று விரும்பினாரோ, அந்த அமைதியைக் காக்க நம்மாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுவோம் என்று கூறி, அவருடைய குடும்பத்தாருக்கும், அவரை இழந்து தவிக்கின்ற கோடிக்கணக்கான மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்து நான் முடிக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புகழ்மாலை

ஓர் இயக்கத்தில் பொது வேலைகளைத் தேடி ஓடுகின்ற தொண்டுள்ளம் கொண்டவனைத்தான் புகழ்மாலைகள் தேடி ஓடி வரும்!

–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

முத்தமிழறிஞர் கலைஞர் சட்டமன்ற மேலவையைக் கலைப்பது குறித்த தீர்மானத்தில் ஆற்றிய உரை
13–5–1986

மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய பொறுப்பினை, உணர்வினை இங்கே வெளிப்படுத்தி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதாக அறிவித்திருக்கிறீர்கள். இந்த அவையே பாதிக்கப்படுகிற சூழ்நிலையில் அவை உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களைச் சொல்வதற்குத் தாங்கள் அனுமதித்தால், சாலச் சிறந்ததாக இருக்கும். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அளித்தவர்கள் மாத்திரம் மட்டுமில்லாமல் ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், மற்ற கட்சிகளிலே உள்ளவர்கள் ஆகியவர்களையும் அனுமதித்தால், சாலச் சிறந்ததாக இருக்கும். இருந்தாலும் தங்களுடைய முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, மேலவையைக் கலைப்பது என்கின்ற தீர்மானம் சட்டமன்றப் போவையிலே வருகிறது என்ற இந்தப் பிரச்சினையின் மீது நான் முதலிலே ஒன்றைத் தெளிவாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்போது நான் எனக்காக வாதாட விரும்பவில்லை. அப்படி வாதாடப் போவதுமில்லை. எனக்காக வாதாடுவது என்னுடைய வழக்கமும் இல்லை. நான் இப்போது வாதாடுவது இந்த மன்றத்திற்காக கடந்த 60 ஆண்டுக் காலத்திற்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகளும், மாண்புகளும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

அன்றொரு நாள் தாங்களே இந்த அவையிலே சொன்னீர்கள். கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்த நான் தங்களிடம் கூறியதாகச் சொன்னீர்கள். "அந்த அவையிலே இருந்து இந்த அவைக்கு வரும்போது, ஓர் அமைதிகரமான சூழ்நிலை உருவாகிறது. இங்கு ஏற்படுகிற அமைதியும் ஆழமான சில உணர்வுகளும், அறிவிக்கப்படுகிற ஆலோசனைகளும் இந்த அவையில் மாத்திரமல்லாமல், அந்த அவையிலேயும் எங்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே நிர்வாகத்தை மேம்படுத்தக்கூடிய நிலையிலே அமைகின்றன" என்பதை நான் தங்களிடத்திலே எடுத்துக்கூறியதை அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பேசிய திரு. சுவாமி நாதன் அவர்கள் ஒரு உவமையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே பயன்படுத்திய உவமை அது என்றாலும், முன்னாள் மேலவைத் தலைவர் திரு சி.பி. சிற்றரசு அவர்கள் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். அதை அண்ணா அவர்கள்தான் மேற்கோளாக எடுத்துக் காட்டினார்கள். அமெரிக்காவில், மேலவைப் பிரச்சினை ஒன்று அங்கே எழுந்தபோது, வாஷிங்டன் தேநீர் விருந்தில் எடுத்துச்சொன்ன உவமையாகும். அந்த விருந்திலே மேலவை இருக்க வேண்டாமா என்ற விவாதம் எழுந்தபோது, 'கப் அண்டு சாசர்' வைத்துக்கொண்டு கப்பிலே இருக்கிறவரை சூடாக உள்ள தேநீர் சாசரில் ஊற்றும்போது எப்படி ஓரளவிற்கு ஆறுகிறதோ அதைப்போல மேலவை என்பது சூட்டைத் தணிக்கிற வகையில் வெப்பத்தைப் போக்கி வெளிச்சத்தைத் தருகிற வகையில்

உஷ்ணத்தை நீக்கி ஒளி தருகிற வகையில் அமைகிறது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

பல நேரங்களில் மேலவை தேவையா என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம், தேவையா என்ற கேள்விக்குறி வலுப்பட்ட காலக் கட்டத்திலேகூட இறுதி முடிவாக 'தேவைதான், நீடிக்கட்டும்' என்ற முடிவுகள் தான் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அறிவார்கள்; தாங்களும் அறிவீர்கள். தமிழகத்திலே உள்ள மேலவையைக் கலைத்துவிடுவதற்கான காரணத்தைச் சொல்லும்போது, அதுகுறித்து பேரவையிலே கழக உறுப்பினர் திரு. ரஹ்மான்கான் வினா எழுப்பியபோது, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அது ஏடுகளிலும் வந்திருக்கிறது.

"இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே மேலவை இல்லை. ஒரு 5, 6 மாநிலங்களிலேதான் மேலவை இருக்கின்றது" என்று குறிப்பிட்டார்கள். ஒருவேளை 5,6 மாநிலங்களிலேதானே இருக்கின்றது. எனவே இதை எடுத்துவிட்டால் என்ன என்ற விவாதத்தின் அடிப்படையிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் துணை போவார்களானால், நான் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம் இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு இல்லை. தமிழ்நாட்டிலே மதுவிலக்கு இல்லை. ஆனால் காங்கிரசார் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டக்கூடியதாக தமிழ்நாடு இருக்க வேண்டும், எனவே மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தான் வாதாடுவார்கள். அவர்களிடத்திலே எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், பாண்டிச்சேரியில் இல்லையா, கர்நாடகத்திலே இல்லையா அல்லது வேறு பல காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே இல்லையா என்றெல்லாம் கேட்கும்போது, "மற்ற மாநிலங்களைப் பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? இந்த மாநிலத்தைப் பற்றிப் பேசுங்கள்" என்கின்ற வாதத்தை அழுத்தந்திருத்தமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியத் தலைவர்கள் எல்லாம், எடுத்து வைத்திருக்கின்றார்கள். எனவே "5, 6 மாநிலங்களில்தான் இருக்கின்றது. எனவே இந்த மாநிலத்திலே அதைக் கலைத்து விடுவதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை" என்ற குறிக்கோள் ஒரு நல்ல வாதமாக எனக்குப் படவில்லை.

போறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இந்த மன்ற உறுப்பினராக பொறுப்பேற்று இந்த மன்றத்திலே அமர்ந்தார்கள், அவர்கள் அப்படி ஒரு மேலவை உறுப்பினராக வந்து அமராமலேயே ஒரு சட்ட மன்ற உறுப்பினரை பதவி விலகச் சொல்லிவிட்டு, அந்த இடத்தில் நின்று பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சட்டமன்றப் பேரவையிலே பொறுப்பேற்று முதலமைச்சராக வந்திருக்க முடியும். ஆனால் மாநகராட்சி உறுப்பினர்கள் வாக்குகளைப் பெற்று மேலவையில் அண்ணா அவர்கள் அமர்ந்தார்கள். அப்போது இந்த மேலவையில் அன்பிற்குரிய திரு ஆர். வெங்கடராமன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிருந்தது. அப்படி காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்ற எதிர்க்கட்சியாக இருக்கின்றதே என்ற எண்ணத்தில் மேலவையைக் கலைத்துவிட வேண்டும். 'நமக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண்கள் போக

வேண்டும்' என்ற எண்ணம் போறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே வரவில்லை. அவர்கள் காலத்தில் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக காலக்கட்டத்திலேயும் இந்த நிலை ஏற்படவில்லை. அப்போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இங்கேயிருந்தபோது கூட, இந்த மேலவையிலே ஆளுங்கட்சியின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் அல்லது மசோதாக்களிலே பெரிய மோதல்கள் ஏற்பட்டுவிடவில்லை. ஓரிரு தடை ஏற்பட்டாலும், சர்வசாதாரணமாக அரசியல் சட்ட விதிமுறைகளின்படி அவைகள் போக்கிக்கொள்ளப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் அறிவார்கள்.

அடுத்தபடியாகச் சொல்லப்படுகின்ற காரணம், ஏடுகளிலே கூட வந்திருக்கின்றது. இதைக் கலைப்பதன் மூலம் ஒரு பெருஞ்செலவைக் குறைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், இங்கே 3419 கோடிக்கு நிதி ஒதுக்கீடு வைத்து அதற்கான அனுமதியை அந்த மன்றத்திலேயும் இந்த மன்றத்திலேயும் பெற்றார்கள். அப்போது எவ்வளவு பணம் எப்படியெல்லாம் விரயம் ஆகிறது என்பதையெல்லாம் நான் சொன்னேன். அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு அதையெல்லாம் சரி செய்யவேண்டும் என்று இங்கே பேசியிருக்கிறார்கள். அது இங்கே விவாதக்குறிப்பில் பதிவாகியிருக்கின்றது. ஆகவே செலவாகிறது, அந்தச் செலவைச் சிக்கனப்படுத்துவது என்று சொன்னால், நண்பர் திரு மாணிக்கம் அவர்கள்கூட சொன்னார். கவர்னர் என்ற பதவிக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.30 இலட்சம், ரூ.40 இலட்சம் என்ற அளவிலே செலவிடப்படுகிறது. ஆனால் அந்தப் பதவி இருக்கலாம். அது இருக்க நாம் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் போராட புறப்பட்டிருக்க வேண்டும். தீர்மானம் நிறைவேற்றுவதோடு, கருத்துக்களை சொல்வதோடு இருக்கிறோம். அங்கே அதிகாரம் இருக்கின்ற அந்தக் காரணத்தினால் பெரும்பான்மை இருக்கின்ற காரணத்தினால், இந்த மன்றத்தைக் கலைத்துவிடலாம், அந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்றோ நாளையோ அந்த முடிவு பற்றி பேரவையிலே பெரும்பான்மையைப் பெறுமானால், அந்த முடிவு நிறைவேற்றப்படவும் இருக்கின்றது. அதற்குப் பிறகு பாராளுமன்றத்திலே அந்த முடிவை வைத்து அதனுடைய ஒப்புதலைப் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. நான் அந்த விவரங்களிலே எல்லாம் நுழைய விரும்பவில்லை. செலவு காரணமாக, சிக்கனப்படுத்துவதன் காரணமாக இந்த மேலவைக் கலைப்பு என்று சொன்னால், உள்ளபடியே நாம் மாத்திரமல்ல, இந்த மன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் எண்ணிப்பார்த்தால் எத்தனையோ தேவையற்ற செலவுகள் தமிழ்நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலவை மாத்திரம்தானா தேவையில்லாத செலவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏறத்தாழ 25, 26-க்கு மேற்பட்ட வாரியங்கள் இருக்கின்றன. கோழி வாரியம் வரையில் இருக்கின்றன. அந்த வாரியங்கள் எல்லாம் ஏன் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். டெல்லிப் பட்டிணத்தில் தமிழ்நாட்டுப் பிரதிநிதி என்கிற ஒரு அலுவலாளர் நியமிக்கப்படுகிறார். இதுவரை நியமிக்கப்பட்ட எந்த அலுவலாளராவது தமிழ்நாட்டு தூதுவராக, தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக

நியமிக்கப்பட்டவர்கள் யாரிடத்தில் என்ன வாதாடினார்கள், எந்த தொழிற் திட்டத்தை தமிழ்நாட்டுக்காகப் பெற்றார்கள், எந்த வகையிலே வாதாடி, போராடி, அங்கேயுள்ள அமைச்சர்களை, பிரதமரைச் சந்தித்து தமிழ் நாட்டின் தேவைகளைப் பெற்றார்கள் என்பதெல்லாம் கேள்விக்குறி. ஆனாலும் அதற்கு ஒரு பெரும் தொகை ஒதுக்கப்பட்டு, அந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல, குழுக்கள், இரு அவையும் சேர்ந்த குழுக்கள் எத்தனையோ இருக்கின்றன. அந்தக் குழுக்கள் சுற்றுப் பயணம் கூட செய்கின்றன. சில குழுக்கள்தான் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும். ஆனால் நம்முடைய தாராள மனப்பான்மை, அஷ்யூரன்ஸ் கமிட்டி கூட காஷ்மீர் வரையில் செல்கிறது, உறுதிமொழிக்குழு - இங்கே தாப்படும் உறுதிமொழிகள் எவை எவை என்பதும், அவை நிறைவேற்றப்பட்டதா என்பதும், இந்த அவையாலே நியமிக்கப்படுகின்ற குழுவாலே விவாதிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட வேண்டிய விவகாரம். காஷ்மீருக்குப் போய், நீங்கள் எந்த உறுதிமொழியை எப்படி நிறைவேற்றுகிறீர்கள் என்று கேட்டு, இங்கே நிறைவேற்றத் தேவையில்லை, எல்லாக் குழுக்களும் உறுதிமொழிக் குழு உட்பட எல்லாக் குழுக்களும் காஷ்மீர் வரை செல்கின்றன, நான் நகைச்சுவைக்காகச் சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திரு. விநாயகம் அவர்கள் உறுதிமொழிக் குழுத் தலைவராக இருந்தார்கள். "சில குறிப்பிட்ட குழுக்கள்தான் வெளிமாநிலங்களுக்குச் செல்ல வேண்டும், எல்லாக் குழுக்களும் செல்ல வேண்டியதில்லை" என்று அண்ணா அவர்கள் எழுதினார்கள். அதற்குப் பிறகு, திரு. விநாயகம் அவர்கள் அண்ணாவைச் சந்தித்தார்கள், அண்ணாவைச் சந்தித்து, அவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள் "எல்லாக் குழுக்களும் போகும்போது, என்னுடைய தலைமையில் உள்ள குழு மட்டும் போகக்கூடாது" என்று கூறியிருக்கிறீர்களே என்று கேட்டார்கள். பிறகு வாதாடினார்கள். அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் அவருக்கே உரிய நகைச்சுவையோடு "அனுபவி ராஜா, அனுபவி" என்று சொல்லி, அந்தக் குழுவும் செல்லலாம் என்று குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இப்படி ஏராளமான குழுக்கள், வாரியங்கள், டெல்லியிலே எந்தப் பணியும் ஆற்றாத தமிழ் நாட்டு பிரதிநிதி - இப்படியெல்லாம் செலவுகள் ஆகின்ற நேரத்தில், செலவின் காரணமாக, சிக்கனத்தின் காரணமாக மேலவையைக் கலைக்கிறோம் என்று வாதம் செய்வார்களானால், அதுவும் பொருத்தமான வாதமாக எனக்குத் தெரியவில்லை. இன்னும் ஒன்று, சட்டப் பேரவைத் துறைக்கு மொத்தமாக செலவாகும் தொகை 1 கோடி ரூபாய் என்பது என்னுடைய கணிப்பு, அதற்குமேல் 10 இலட்சம், 20 இலட்சம் இருக்கலாம். அதிலேகூட சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆகும் செலவு சுமார் 25 இலட்சம் ரூபாய்தான். கவர்னர் பதவிக்கு 30 இலட்சம் ரூபாய், இவ்வளவு பேர் அடங்கியுள்ள சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆகும் செலவு சுமார் 25 இலட்சம் ரூபாய்தான். அதற்காக இதைக் கலைக்கிறோம் என்ற வாதம் பொருத்தமற்ற வாதமாகும்.

இன்னும் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோலவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் எடுத்துக்காட்டியது போலவும், அமைச்சரவை கூடி ஆழ்ந்து யோசிக்காமல், தேர்தல் அறிக்கையிலேகூட குறிப்பிடாமல், இதுபற்றி

கருத்தோட்டம் என்கின்ற வகையிலே மக்கள் மத்தியிலே இதை வைக்காமல், திடீரென்று, அமைச்சரவையிலே ஆலோசிக்காமல், பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் விளக்கம், வினா கேட்க, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் "அதைப் பற்றி கொள்கை இருக்கிறது, முடிவாகவில்லை" என்று சொல்லி, "இந்த அவையிலே 2 நாட்களில் தெரியும்" என்று சொல்லி, திடீரென்று இன்றைக்கு இந்தத் தீர்மானம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. காலையிலே செய்தியாக வந்துவிட்டது. இப்படி நிகழப் போகிறது என்று 3 நாட்களுக்கு முன்பே எனக்குத் தெரியும். முதன்முதலாக 'முரசொலி' பத்திரிகையில் செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்த பிறகு பேரவையிலே பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போது மூடி மறைக்கப்பட்டு, பிறகு மேலவையிலே 'ஆமாம்' என்று இழுப்பறியாகச் சொல்லப்பட்டு, இன்றைக்கு தீர்மானம் வந்திருக்கிறது. திரு பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் எடுத்துக் காட்டியதுபோல் அமைச்சரவை கூடி. இப்படிப்பட்ட கொள்கை முடிவை எடுக்க வேண்டுமென்ற நியதி ஏன் மீறப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. திரு பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் சொன்னார்கள் கருணாநிதி எதிர்க் கட்சித் தலைவராகிவிட்ட காரணத்தால்தான் இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டதென்று.

இன்றுள்ள சூழ்நிலையில் நம்முடைய நண்பர் திரு மாயவன் அவர்களும், திரு பார்த்தசாரதி அவர்களும், நம்முடைய நண்பர் ஆசிரியர் பிரதிநிதியாகப் பேசிய திரு லெட்சுமிகாந்தன் அவர்களும் குறிப்பிட்டதுபோல இப்பொழுதுதான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் தொகுதிகளிலிருந்து 2 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். பட்டதாரி தொகுதிகளிலிருந்து 2 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள், இந்த 4 இடங்களிலும் ஆளும் கட்சி ஆதரித்த நண்பர்கள் வெற்றி பெறவில்லை. இது ஒன்று அடுத்து, உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் ..

ஆக, 4 தொகுதிகளிலிருந்தும் 4 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் யார் எந்தக் கட்சி என்று கூட நான் குறிப்பிட விரும்பவில்லை. நான் இந்த அவையிலே பேசுகின்ற பாணி, எடுத்துக் கொள்கின்ற முறை, அந்த அவையிலே நான் பேசியிருக்கின்ற முறை இவைகளுக்கு உள்ள வேறுபாடுகளை தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், அமைச்சர்களும் கூட உணர்ந்திருக்கக் கூடும். ஏனென்றால் இந்த அவை அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்க ஓர் அவை, டாக்டர் ஏ.எல். முதலியார் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள், மூதறிஞர் ராஜாஜி போன்றவர்கள், திரு பாலசுப்பிரமணிய ஐயர் போன்றவர்கள், ஏன் தங்களைப் போன்றவர்கள் எல்லாம் இருக்கிற இந்த அவைக்கு என்று தனி மதிப்பு இருக்கிற காரணத்தினால்தான், இந்த அவையிலே எப்படி அணுகுமுறை இருக்க வேண்டும், குற்றச்சாட்டு இருந்தாலும் எந்த அணுகுமுறையோடு சொல்ல வேண்டும் என்பதை எல்லாம் எண்ணி, மிகுந்த எச்சரிக்கையோடு இந்த அவையில் நான் பேசியிருக்கிறேன் என்பது தான் 7, 8 தடவை பேசியிருக்கின்ற பேச்சுகளை எடுத்துப் படித்துப் பார்த்தாலே, மிக நன்றாகத் தெரியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும், சென்னை மாநகராட்சி மன்றம் ஒன்றைத் தவிர ஏனைய 20 இடங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாக இந்த மன்றத்திற்கு கடந்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர் உறுப்பினர்கள் வரக்கூடிய நிலைமை. 4 பேர் வெற்றி பெற்று வந்திருக்கின்ற சூழ்நிலை. அடுத்து 20 பேர் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாக வரக்கூடிய சூழ்நிலை, அதிலே யார் பெரும்பான்மையாக வருவார்கள், யார் குறைவாக வருவார்கள் என்கின்ற பிரச்சினைக்கு எல்லாம் இடம் இல்லை, ஆனால் யார் வந்தாலும், ஆங்காங்கே இருக்கின்ற கிராம மக்களுக்காக, ஸ்தல ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடக்கூடியவர்கள் வரக்கூடிய சூழ்நிலை. அதுமட்டுமல்லாமல், இது கொள்கை ரீதியாக, காலையில் அரும்பி, பகல் எல்லாம் மலராகி, மாலையில் மலர்ந்தது என்று சொல்லத்தக்க அளவில் இந்தக் கொள்கை மலர்ந்தது என்றும் யாரும் கூற முடியாது. அதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அப்படி அறிகுறி இருந்திருந்தால், அண்மையில் கூட 3 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். ஒருவர் ராஜிநாமா செய்துவிட்டார் என்பது வேறு விவகாரம். ஆனாலும் நியமனம் செய்யக் கூடிய அளவுக்குக்கூட பரிந்துரை செய்யப்பட்டு, நியமனங்கள் செய்யப்பட்டு, நாளையதினம் விடை பெற, ஓய்வு பெற இருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் பாராட்டு விழா என்ற அளவிலே, விருந்து, அவர்களுக்கு எல்லாம் நாளை பாராட்டு என்று எல்லாம் சொல்லக் கூடிய சூழ்நிலையில் நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நாளைக்கு இவர்களை எல்லாம் பாராட்டும்போது, அவர்கள் "இன்றைக்கு எங்களைப் பாராட்டுகிறாய், நாளைக்கு எங்களோடு நீயும் வரப் போகிறாய்," என்கிற கண்ணோட்டத்தோடு தானே எங்களைப் பார்ப்பார்கள். நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எனக்காக நான் வாதாடவில்லை இந்த மன்றத்திற்காக நான் வாதாடுகிறேன். என்னை பத்திரிகை நிருபர்கள் சந்தித்துஇப்படிஒருதீர்மானம்வரப்போகிறதாமேஎன்று கேட்டபோதுகூட,நான்மிகத்தெளிவாகச்சொன்னேன். "இதைப் பற்றி கழகம் சார்பிலே எங்களுடைய பொதுச் செயலாளர் நிருபர்களிடத்திலே பேட்டி அளித்தபோது கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில், நான் இதுகுறித்து கவலைப்படவில்லை" என்று சொல்லியிருக்கிறேன். அப்படிச் சொன்னதற்குக் காரணம் இங்கே திரு. பி.டி.ஆர். அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏதோ எனக்காகத்தான், நான் எதிர்க் கட்சித் தலைவன் ஆவேன் என்ற காரணத்தால்தான், இப்படி ஒரு தீர்மானம் வருகிறது என்றால், நான் இந்த மன்றம் நீடிக்க வேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காக, எனக்காகத்தான் இது வருகிறது என்ற ஒரு நிலை இருக்குமானால், என்னுடைய இந்தப் பதவியை இந்த மன்றம் நீடிக்க வேண்டும் என்பதற்காக நான் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன். என்னால் இந்த மன்றம் நீடிக்காமல் கலைக்கப்படுகிற சூழ்நிலைக்கு ஆளாக வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தோடு இந்தக் கருத்தை நான் எடுத்துக் கூறுகிறேன். இதற்குப் பிறகாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "கருணாநிதி ஒழிந்தான், அவன் இல்லாத சபை தான் இது" என்ற எண்ணத்தோடு இந்த மன்றத்தை நீட்டிப்பதற்கு முற்படுவார்கள் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட முக்கிய அரசினர் தனித் தீர்மானங்கள்

காவிரி நீர்த் தகராறுகளை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுதல் குறித்தும், மைசூர் அரசு தொடர்ந்து திட்டங்களை நிறைவேற்றுவதைத் தடை செய்வதன் அவசியம் குறித்தும் – 8–7–1971

தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்கிற ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து அனைத்துக் கட்சியினுடைய அமோகமான ஆதரவோடு அந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டது. நாட்டுக்குப் பெயர் தேவை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்று அந்த நாட்டினுடைய எதிர்கால வாழ்வு பாதிக்கப்படாமல் இருப்பதற்காகத் தமிழ்நாட்டு மக்கள் எதிர்காலத்திலே வளம் இழந்து, வாழ்விழந்து நிற்கக்கூடிய பயங்கரமான சூழ்நிலையில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக இந்தத் தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தில் வடிவம் அமைக்கப்பட்டு இந்த மாமன்றத்தில் உங்கள் அனுமதியோடு நான் அதை வைத்திட முன் நிற்கிறேன்.

"தமிழ்நாடு, மைசூர் அரசுகளுக்கிடையே 1892, 1924 ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களின் விதிகள் அனைத்தையும் மீறி மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத் திட்டங்களையும் அவைகளுக்கான திட்ட விவரங்களைப் பற்றித் தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமலும், இந்திய அரசின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் தன் போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொள்கிறது.

காவிரி ஆற்றின் கீழ்ப் பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி, 1956–ம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தகராறுகள் சட்டத்தின்கீழ் முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்குக் காவிரி நீர்த் தகராறைத் தீர்ப்புக்கு விடுமாறு தமிழ்நாடு அரசு 1970 பிப்ரவரி திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருந்தும்கூட, தமிழ்நாட்டிற்குத் தொன்றுதொட்டு ஏற்பட்டு வந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ்நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத இப்பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்காமல் அளவு

கடந்து காலதாமதம் செய்து வருவதைக் கண்டு இம்மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதில் இந்திய அரசு மேலும் காலந் தாழ்த்தினால், மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி அவற்றைக் கட்டி முடிக்கும் விரும்பத் தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது வழி கோலுமென்றும், அதனால் பன்னெடுங் காலமாகத் தமிழ்நாடு அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறிபோய்விடும் என்றும் இப்பேரவை பெரிதும் அஞ்சுகிறது.

வேதனைமிக்க இத்தகைய சூழ்நிலையில், இந்திய அரசு 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து இத்தகராறுகளுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதித் தமிழக அரசு ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளபடி காவிரி நீர்த் தகராறை அம்மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டு நியாயம் வழங்குமாறும் நடுவர் மன்றம் இத்தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும் வரையில் மைசூர் அரசு தன் போக்கில் மேற்கொண்டுள்ள இத்திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்குக் கட்டளையிடுமாறும், இந்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.”

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் நம்முடைய தமிழ்நாட்டுக்கே உரிய பண்போடும், தமிழ்நாட்டு மக்கள் இந்திய ஒருமைப்பாட்டில் கொண்டிருக்கிற சிறப்பான நம்பிக்கையின் அடிப்படையிலும் எள்ளளவும் பிற மாநில மக்களுக்கும் நமக்குமிடையே பகை உணர்வுகள் தோன்றக்கூடாது என்ற உணர்ச்சியோடும் தயாரிக்கப்பட்டுள்ளதாகும்.

காவிரி நதியில் தமிழ்நாட்டுக்குப் பரம்பரை பரம்பரையாக இருந்து வருகிற பாத்ய உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தினுடைய இன்றியமையாத நோக்கமாகும்.

காவிரி நதி இந்தியாவிலே இருக்கிற மிகப் பெரிய நதிகளில் நான்காவது நதியாகும். கிட்டத்தட்ட 804 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த ஆறு தமிழ்நாட்டில் மாத்திரம் 321 கிலோமீட்டர் அளவுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றில் மைசூர் மாநிலத்தின் வடக்குப் பகுதியில் இதனுடைய துணை நதிகளாகிய ஹேமாவதி, லோகபவானி, ஹரங்கி, சிம்ஸா, அர்க்காவதி, லட்சுமண தீர்த்தம், கபினி, சுவர்ணவதி ஆகிய துணை ஆறுகளும் கலந்து, இவைகள் எல்லாம் காவிரியோடு கலக்கும் வரை தனித்தனிப் பெயர் கொண்டிருந்தாலும் காவிரியோடு கலந்தவுடன் காவிரி என்கிற ஒரே பெயரோடு விளங்கிக் கொண்டிருப்பதை வரலாறு கூறுகின்றது. அந்த நதியில் தமிழகத்திற்குரிய பங்கு, தமிழர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக தமிழகம் உரிமைக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம் அன்றையதினம் ஆட்சியில் இருந்தவர்கள் தலையிட்டு 1892 ஆம் ஆண்டு ஒரு முறையும், 1924 ஆம் ஆண்டில் ஒரு முறையும் இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன.

இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் கிருஷ்ணராஜசாகர் அணை இயங்குவது காவிரி டெல்டா பாசனத்திற்கு எந்தவிதத்திலும் குந்தகம் விளைவிக்குமாறு குறுக்கிட்டுவிடக் கூடாது என்பதாகும். இரண்டாவது, தமிழக மேட்டூர் அணை 3 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதிக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் மைசூர் அரசு அணைகள் கட்ட விரும்பினால் தமிழக அரசின் முன் சம்மதம் பெற்றே கட்ட வேண்டும். தமிழக அரசின் முன் சம்மதம் இல்லாமல் மைசூர் அரசு எந்தவித அணைகளையும் கட்டிவிடக் கூடாது. உத்தேசித்திருக்கிற திட்ட விவரங்கள் முழுமையையும் தமிழக அரசுக்கு அளிக்க வேண்டும். அணை கட்டுவதில் வேலை தொடங்குவதற்கு முன்பு தமிழக அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்பதாகத் தமிழகத்தின் பாசனத்திற்குத் தண்ணீர் வருகிற அளவு பாதிக்கப்படக் கூடாது என்கிற நோக்கத்தில் அமைந்துள்ள ஷரத்துக்கள் அடங்கிய அந்த ஒப்பந்தங்கள் மீறப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறதென்பது தமிழகத்திற்கு அதிர்ச்சி தருகின்றது.

இதில் ஹேமாவதி அணை கட்ட வேண்டுமென்று 1964 ஆம் ஆண்டு மைசூர் அரசால் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டது. அந்தத் திட்ட அறிக்கையை மைசூர் அரசு பெற்றுக் கொண்ட பிறகு 1968–ல் ஹேமாவதி அணைக்கான அடிக்கல் நாட்டு விழாவினை மைசூர் மாநில முதல்வர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். அந்தச் செய்தி தமிழக அரசுக்குக் கிட்டியதும் உடனேயே தன் மறுப்பை வெளியிட்டதோடு மாத்திரம் இல்லாமல் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு நல்ல தீர்வினைக் காணவேண்டுமென்று 1968 ஆம் ஆண்டில் மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக்கொண்டது.

அப்படிக் கேட்டுக் கொண்டதற்கேற்ப, மத்திய அரசு 1968 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தமிழ்நாட்டு அரசுக்கு எழுதிய கடிதத்தில் தமிழகத்தோடு இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணுகிற வரையில் திட்டத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று மைசூருக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது என அந்தக் கடிதத்திலே மத்திய அரசு நமக்குக் குறிப்பிட்டிருந்தார்கள். இதற்கிடையிலே கபினி நதியில் 1959 ஆம் ஆண்டு 2½ கோடி ரூபாய் செலவில் ஒரு சிறிய அணை கட்டுவதற்கான ஒப்புதலைப் பெற்று அப்படி 2½ கோடி ரூபாய் செலவில் கட்டுவதாக இருந்த அணையை இப்போது 25 கோடி ரூபாய் அணைத் திட்டமாக மாற்றி, அந்த வேலையையும் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். கபினி மாத்திரமல்லாமல், சொர்ணவதியில் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். குடகு பகுதியில் லட்சுமணதீர்த்தம் நதியிலும் ஒரு அணைக்கட்டுத் திட்டத்தை தொடங்கி இருக்கிறார்கள். ஆக, கபினி, ஹரங்கி,

சொர்ணவதி இன்னும் வேறு பல உபநதிகளில் காவிரியோடு கலக்கிற உப நதிகளிலேயெல்லாம் பாசனத் திட்டங்களுக்காக அணைக்கட்டுத் திட்டங்களை அவர்கள் இன்றைக்குத் தொடங்கி அந்த வேலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலே இந்த லட்சுமணதீர்த்தம் என்ற நதி குடகு தனி மாநிலமாக இருந்தபோது அந்தத் தனி மாநிலமான குடகிலே இந்த லட்சுமண தீர்த்தம் நதியில் ஒரு அணை கட்டுவதாக 1943 ஆம் ஆண்டு முயற்சி எடுத்துக் கொண்டது: அப்படி குடகு மாநிலத்தில் லட்சுமண தீர்த்தம் அணை கட்டப்படுமானால் மைசூர் மாநிலம் பாதிக்கப்படும் என்று மைசூர் அரசு ஆட்சேபம் தெரிவித்தது. அந்த ஆட்சேபத்தை முன்னிட்டு அப்போதிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு குடகு மாநிலத்தில் மைசூருக்கு விரோதமாக மைசூரினுடைய பாசனத்தை பாதிக்கக்கூடிய அளவிலே லட்சுமண தீர்த்தத்தில் கட்டுவதாக இருந்த அணையைக் கட்டுவது கூடாது என்று அதைத் தடுத்து விட்டார்கள். அப்படிப்பட்ட குடகு மாநிலம் இன்றைக்கு மைசூர் மாநிலத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. அவர்கள் ஹரங்கி அணைக்கட்டு திட்டத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்களுடைய மாநிலம் பாதிக்கப்படும் என்பதற்காக அவர்களுக்கு மேலே உள்ள குடகு தனி மாநிலமாக இருந்த நேரத்தில் அங்கே கட்டப்பட இருந்த லட்சுமண தீர்த்தம் அணைக்கட்டைத் தடுப்பதற்கு மைசூர் அரசுக்கு உரிமை இருந்தது. அதே அடிப்படையில்தான் இன்றைக்கு நம்முடைய மாநிலம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நம்முடைய பரம்பரை பாத்தியதைகள், நம்முடைய உரிமைகள், நம்முடைய பாசன வசதிகள் இவைகளுக்காக 1892 ஆம் ஆண்டு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி நமக்குத் தரவேண்டிய லிமிட் ஃப்ளோ குறையக் கூடாது என்பதற்காகத்தான் இன்றைக்கு மைசூர் அரசு கட்டுகிற ஹேமாவதி, கபினி, ஹரங்கி, சொர்ணவதி போன்ற அணைக்கட்டுத் திட்டங்களை இன்றைக்கு ஆட்சேபிக்கிறோம்.

இதையே பல முறை சட்டப் பேரவையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்த அணை கட்டுவதையே நாம் மறுக்கிறோம் என்பதல்ல பொருள். இந்த அணைகளை அவர்கள் கட்டுவதானால் அதற்கான விவரங்கள் நமக்குத் தரப்பட்டாக வேண்டும். இந்த அணைகளை எழுப்புவதன் மூலமாக நமக்கு–தமிழ்நாட்டிற்கு–தரப்பட வேண்டிய தண்ணீர் அளவு பாதிக்கப்படக் கூடாது: அதற்கான உத்திரவாதம் அளிக்கப்பட்டு உள்ளது. ஆனால் நிலைமை என்ன? ஒப்பந்தத்தில் இருப்பது போல நமக்கு விவரங்கள் அளிக்கப்படவில்லை. நமக்கு விவரங்கள் அளிக்கப்படாதது மாத்திரமல்ல. மத்திய அரசினுடைய முன் அனுமதியும் பெறப்படவில்லை. இந்த இரண்டுமில்லாமல் இன்றைக்கு மைசூர் அரசு, தீர்மானத்திலே நாம் குறிப்பிட்டிருப்பதைப் போல, தன் போக்கில் இந்த அணைகளைக் கட்டிக் கொண்டு வருகின்றனர்.

இந்த ஹரங்கியைப் பற்றி மாத்திரம் சொல்கிற நேரத்தில் இது பட்டியலில் சேர்க்கப்படாத ஆறு, ஒப்பந்தத்தில் வராத ஆறு என்று சொல்கிறார்கள். இங்கேதான் நம்முடைய வாதம் வலுவடைகிறது. ஒப்பந்தத்தில் வராத ஆறு, ஆகவே நாங்கள் விவரங்களைக் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்களே, ஒப்பந்தத்தில் வராத ஆறுக்கு விவரங்கள் இல்லையென்றால் ஒப்பந்தத்தில் இருக்கிற ஆறுகளுக்கு விவரங்களை அறிவித்தாக வேண்டும் என்பதை அவர்களை அறியாமலே ஒப்புக் கொள்கிறார்கள். அவர்கள் இந்த ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளுக்கான விவரங்களை அறிவித்தார்களா என்றால் இல்லை. விவரங்களை அறிவிக்காமல், பேச்சுவார்த்தைகள் எதிலுமே சந்தித்து விவாதிக்காமல், மத்திய அரசினுடைய முன் அனுமதி பெறாமல் நடைபெறுகிற இந்தக் காரியத்தை, 1968 ஆம் ஆண்டு மைசூரினுடைய முதலமைச்சர் திரு. வீரேந்திர பாடில் அவர்கள் அடிக்கல் நாட்டு விழா என்றைக்கு நாட்டினாரோ, அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டு அரசாங்கம் அதை ஆட்சேபித்து வந்திருக்கிறது. அப்படி ஆட்சேபித்து வந்த நேரத்திலேயெல்லாம் தமிழ்நாட்டு அரசாங்கம் இதிலே கட்சி சார்பற்ற முறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி வைத்து நிலைமைகளை விளக்கி அவர்களுடைய அரிய கருத்துக்களையெல்லாம் பெற்று ஒவ்வொரு முறையும் மைசூர் முதல்வரோடோ, கேரள முதல்வரோடோ அல்லது திரு. கே.எல். ராவோடு பேசுகிற நேரத்திலோ அப்போதெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி முடிவுகள் எடுக்கப்பட்ட அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இந்த அரசுக்கு அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்கள் அனைவரும் தங்கள் அன்பான ஒத்துழைப்பு தமிழ்நாட்டு மக்களின் நலனை உத்தேசித்துத் தந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான பாராட்டுதலை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலைமையில் நாம் கடைசியாக அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களுடைய கூட்டத்தை கோட்டையில் கூட்டினோம். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், நாம் மத்திய அரசு இதிலே காட்டுகிற நிதானப் போக்கை, ஏறத்தாழ 18 மாத காலமாகக் காட்டுகிற நிதானப் போக்கை, கண்டிக்கிற வகையிலே தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நடத்துவது என்பது ஒரு தீர்மானம். தமிழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் டில்லிப் பட்டணத்தில் இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து நம்முடைய தமிழ்நாட்டின் எதிர்காலத்தினுடைய நிலைகளையெல்லாம் விவரமாக விளக்கியும், மைசூர் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறாமல் தமிழ் நாட்டிற்கு விரோதமாக அணைகளைக் கட்டுவதை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு முறையீடு ஒன்றைத் தர வேண்டுமென்பது இரண்டாவது தீர்மானம். மூன்றாவது, இன்றைக்கு மாநில சட்டப் பேரவையிலும், மேலவையிலும் இந்த அணைகள் கட்டுகிற விஷயத்திற்காகத் தீர்மானங்கள்

நிறைவேற்ற வேண்டுமென்பதாகும். இதிலே இரண்டினை நாம் செய்து முடித்திருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட கண்டனக் கூட்டங்கள் மிக எழுச்சி நிறைந்ததாக, உணர்ச்சி மிக்கதாக, உருக்கம் கலந்ததாக நடைபெற்று முடிந்து இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய தலைமை அமைச்சரை டில்லியில் அவருடைய இல்லத்தில் கண்டு நம்முடைய நியாயமான உரிமைகளை வற்புறுத்தியிருக்கிறார்கள். இப்போது மூன்றாவது கட்டமாகத்தான் இந்தத் தீர்மானத்தை நாம் ஏற்கெனவே முடிவு செய்தவாறு இந்த மாமன்றத்திலே நிறைவேற்றுவதற்கு இங்கே நாம் கூடியிருக்கிறோம். ஆகவே, இதிலே எந்தவிதமான கட்சி மாச்சரியங்களுக்கும் நிச்சயமாக இடம் கிடையாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தமிழர்களாகக்கூட அல்ல, தமிழ்நாட்டுக்காரர்கள் என்ற நிலைமையில், தமிழ்நாட்டின் வருங்காலம் பாதிக்கப்படக் கூடாது என்ற அளவில் அனைவரும் பங்கு பெற்றிருப்பதை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் பங்கு பெற்று ஒத்துழைத்து வருகிற அனைத்துக் கட்சித் தலைவர்கள் மேலும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்கின்ற நிறைந்த நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையின் முன் நான் முன்மொழிந்து இந்த அளவிலே அமைகிறேன்.

(இத்தீர்மானம் 8–7–1971 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் முன்மொழியப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.)

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல் – 12–5–1989

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் மொழிகிறேன்:

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340 ஆம் விதியில் கூறப்பட்டுள்ளவாறு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4), 16(4) பிரிவுகளின்கீழ் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினையும், சிறப்பு விதிகளையும் சமூக நிலையிலும், கல்வியிலும் பின்தங்கியுள்ள பிரிவினர் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்துவதில் மத்திய அரசு பெரும் பங்கு வகிக்க வேண்டுமெனவும், காலஞ்சென்ற திரு. B.P. மண்டல் அவர்களைத் தலைவராகக் கொண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து சமூக நீதியை ஏற்படுத்த மத்திய அரசு ஆக்கப்பூர்வமாக விரைந்து செயல்படவேண்டுமெனவும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது."

இந்தத் தீர்மானத்தை அவையின் முன்பு வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை வழங்கிய பிறகு தீர்மானம் நிறைவேற வேண்டும் என்கின்ற கோரிக்கையை விளக்கமாக வைக்க இருக்கிறேன்.

(இத்தீர்மானம் 12–5–1989 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் முன்மொழியப்பட்டு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.)

பொது வாழ்வு

பொது வாழ்க்கையில் என்மீது கற்கள் வீசப்பட்டபோதும், மலர்கள் தூவப்பட்டபோதும் இரண்டையும் ஒன்றாகக் கருதித்தான் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து – 16–4–1974

தலைவரவர்களே, "மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு,

பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று–மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இத்தீர்மானம் 16–4–1974 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் முன்மொழியப்பட்டு 20–4–1974 அன்று நிறைவேற்றப்பெற்றது.)

திரு. எம். ஏ. லத்தீப்: கூவம் ஆற்றில் முதலை இருப்பதாகச் செய்தி வந்ததும் கூவம் ஆற்றுக்குப் பல காரியங்களாகப் போகக்கூடியவர்கள் இப்போது கூவம் ஆற்றை நெருங்காமலே இருக்கிறார்கள். ஆகவே, அங்கு அசுத்தம் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. இந்த வேலை முடிந்தவுடன் அரசாங்கமே கூவம் ஆற்றில் முதலை விடுவது பற்றி ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் 'முதலை' கூவம் ஆற்றில் போட்டிருக்கிறது. (சிரிப்பு)

தொகுதி 12, 8–12–1971, பக்கம் 31

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

கச்சத் தீவு பற்றி மத்திய அரசு இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மத்திய அரசு மறு பரிசீலனை செய்து திருத்தியமைக்க வேண்டுமென்பது குறித்து – 21–8–1974

பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி, இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது’’ என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி அவையிலே பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். கச்சத் தீவு இலங்கைக்கு அளிக்கப்படக்கூடாது, தமிழ் மக்கள் அதை விரும்பமாட்டார்கள் என்பதைப் பற்றி பல நேரங்களில் மத்திய பேரரசுக்கு தமிழக அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. நடைபெற்ற ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் இந்தியா கச்சத் தீவை விட்டுத் தருவது கூடாது என்ற கருத்து தமிழக அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும், அதற்கு மாறாக ஏற்பட்டு விட்ட இந்தச் சூழ்நிலையில் உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கும் இந்திய பிரதமருக்கும் நாம் அனுப்பி வைத்தோம். இப்போது இந்தச் சட்டப் பேரவை மூலமாக ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்பிவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உறுப்பினர்களுடைய கருத்துரைகளுக்கு பிறகு நான் ஏதாவது சொல்ல வேண்டுமென்றிருந்தால் இறுதியாகச் சொல்கிறேன் என்று கூறி இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நான் முன்மொழிகிறேன்.

(இத்தீர்மானம் 21–8–1974 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் முன்மொழியப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

நான்காவது பேரவை (1967–1971) முக்கிய நிகழ்வுகள்

- பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் 9 பேர் கொண்ட முதல் தி.மு.க. அமைச்சரவை 6–3–1967 அன்று பதவி ஏற்றது.
- பேரவைத் தலைவர், திருக்குறள் ஒன்றினைச் சொல்லி, பேரவை நிகழ்ச்சிகளைத் தொடங்கும் வழக்கம் 24–11–1967 முதல் ஏற்பட்டது.
- புதிய பல்லடுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதி! 5–1–1968–ல் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.
- பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் 7 பேர் கொண்ட அமைச்சரவை 10–2–1969 பிற்பகலில் பதவி ஏற்றது.
- 1969–1970–க்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முக்கியத் தீர்மானங்கள் (1967–1971)

- **18–7–1967 அரசினர் தீர்மானம்**

  அவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தின் விளைவாக, நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று 16–1–1969 முதல் பெயர் சூட்டப்பட்டது.

- **23–1–1968 அரசினர் தீர்மானம்**

  ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை நீக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமே தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், பாடத் திட்டத்திலிருந்து இந்தி அறவே நீக்கப்பட வேண்டுமென்றும் நிறைவேற்றப்பட்டது.

- **27–8–1969 அரசினர் தீர்மானம்**

  சட்டமன்ற உறுப்பினர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தங்களது சொத்துகள் பற்றிய விவரங்களை அவைக்கு அளிக்கும் முறை கொண்டு வரப்பட வகை செய்தது.

முக்கியச் சட்டங்கள் (1967–1971)

- **இந்து திருமணங்கள் (தமிழ்நாடு) திருத்தச் சட்டம், 1967**

  சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட வகை செய்தது. இந்த அங்கீகாரம், சட்டம் நிறைவேறுவதற்கு முன்பே நடைபெற்ற அத்தகைய திருமணங்களுக்கும் பொருந்தும்.

- **நில வரி மற்றும் தண்ணீர் செஸ் (மேல் வரி) (நீக்கறவு) சட்டம், 1967**

  புஞ்சை நிலங்களுக்கு நில வரி ரத்து செய்யப்பட்டது.

- **விளை நிலங்களின் குத்தகை உரிமைகள் குறித்த ஆவணங்கள் சட்டம், 1969**

  குத்தகைதாரர்கள் குறித்த விவரங்களைக் கிராம நிலையிலுள்ள ஆவணங்களில் பதிவதற்கு வகை செய்தது.

- **விவசாயக் கூலித் தொழிலாளர்கள் (நியாயமான கூலி) சட்டம், 1969**

  விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குப் பல்வேறுவிதமான பணிகளுக்கு நியாயமான கூலி நிர்ணயிக்க வகை செய்தது

- **நிலச் சீர்திருத்தச் (உயரளவைக் குறைத்தல்) சட்டம், 1970**

  1961 ஆம் ஆண்டின் சட்டத்தில் 30 தர ஏக்கர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த நில உச்சவரம்பு 15 தர ஏக்கர்களாகக் குறைக்கப்பட வகை செய்தது.

- **தொழிலகங்கள் (தேசிய மற்றும் பண்டிகை நாள் விடுமுறை) திருத்தச் சட்டம், 1970**

  தொழிலகங்களுக்கு மே தினத்தைக் கட்டாய விடுமுறை நாளாக ஆக்கியது.

- **குடிநீர் வடிகால் வாரியச் சட்டம், 1970**

  முன்பு அரசுத் துறை ஒன்று செய்து வந்த குடிநீர் வடிகால் சார்ந்த பணிகள் இந்த வாரியத்திடம் ஒப்படைக்கப்பெற்று விரைவாக நடப்பதற்கு வழி வகுத்தது.

திருமதி. த. ந. அனந்தநாயகி: ஆண்களைவிட பெண்கள் உயர்ந்தவர்கள் என்பதை அரசு அறியுமா? ஆகவே, பெண்களுக்கு பாதி இடம் பஸ்ஸில் ஒதுக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பெண்களுக்கு பாதியிடம் பஸ்ஸிலே மட்டுமல்ல, பரமசிவனே ஒதுக்கி இருக்கிறார் (சிரிப்பு)

(தொகுதி 19, 20-3-1972, பக்கம் 11)

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

ஐந்தாவது பேரவை (1971–1976) முக்கிய நிகழ்வுகள்

- மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் 14 பேர்கள் கொண்ட தி.மு.க. அமைச்சரவை 15–3–1971–ல் பதவியேற்றது.
- இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி சிறப்புக் கூட்டம் ஆளுநர் தலைமையில் பேரவை மண்டபத்தில் 14–8–1972 அன்று நள்ளிரவு நடைபெற்றது. பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் பங்குபெற்றனர். சரியாக நள்ளிரவு 12.00 மணிக்கு நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளை நினைவுகூரும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.
- திரு. கே.ஏ. மதியழகன், பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து 2–12–1972 அன்று நீக்கப்பெற்றார்.
- 1972–1973–க்கான மதிப்பீட்டுக் குழுவிற்குத் தலைவராக திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் நியமிக்கப்பட்டார்.
- 31–1–1976 ஆம் நாளன்று மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

முக்கியத் தீர்மானங்கள் (1971–1976)

- **8–7–1971 அரசினர் தீர்மானம்**

  காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு நடுவர் மன்றம் அமைக்கக் கோரியும், அதன் மீதான முடிவு வெளிவரும்வரை கர்நாடக அரசாங்கம் ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சொர்ணவதி அணைகள் கட்டுவதைத் தடுக்குமாறும் கோரி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

- **6–12–1971 அரசினர் தீர்மானம்**

  இந்தியாமீது பாகிஸ்தானின் படையெடுப்பைக் கண்டனம் செய்தும், அந்த இக்கட்டான தருணத்தில் மக்கள் ஓரணியாகத் திரண்டு நின்று இந்திய அரசுக்கு ஒத்துழைப்புத் தரக் கோரியும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

- **17–12–1971 அரசினர் தீர்மானம்**

  புதிதாக உருவெடுத்த பங்களாதேஷ் நாட்டிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்து ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

- **15–4–1974 அரசினர் தீர்மானம்**

  இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினரும் அர்ச்சகர்கள் ஆவதற்கு வகை செய்யும் ஒரு சட்டத்தை மாநிலச் சட்டமன்றம் இயற்றுவதற்கு உதவியாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துமாறு மத்திய அரசைக் கோரி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

- **16-4-1974 அரசினர் தீர்மானம்**

  மாநில சுயாட்சி குறித்த மாநில அரசின் கருத்துகளையும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளையும் ஏற்று, அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களைச் செய்ய மத்திய அரசைக் கோரி 5 நாட்கள் விவாதம் நடைபெற்று நிறைவேற்றப்பட்டது.

- **21-8-1974 அரசினர் தீர்மானம்**

  கச்சத் தீவு குறித்து மத்திய அரசு எடுத்துள்ள முடிவை மாற்றிக் கொண்டு கச்சத் தீவின் மீது இந்திய நாட்டின் இறையாண்மை நிலைநிற்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டது.

முக்கியச் சட்டங்கள் (1971-1976)

- **வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டம், 1971**

  வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு, வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

- **குடிசைப் பகுதி மாற்று வாரியச் சட்டம், 1971**

  குடிசைப் பகுதிகளைப் படிப்படியாக அகற்றவும் அங்கு வாழ்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவும் வகை செய்தது.

- **மதுரை மாநகராட்சிச் சட்டம், 1971**

  மதுரை நகராட்சி, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பெற்றது.

- **குடியிருப்புகளுக்கு உரிமைகள் வழங்கல் சட்டம், 1971**

  விளைநிலங்களில் குடியிருக்கும் விவசாயக் கூலிகள் போன்றோர்களுக்குக் குடியிருப்பு உரிமையைப் பெற்றுத்தந்தது.

- **நகர் ஊரமைப்பு திட்டமிடல் சட்டம், 1972**

  நகர்ப்புறங்களின் விரிவாக்கம் சீரான, திட்டமிட்ட வகையில் அமைய வகை செய்தது.

- **பேருந்துகள் மற்றும் ஒப்பந்த ஊர்திகள் (அரசு மேற்கொள்ளுதல்) சட்டம், 1973**

  அரசு சில நேர்வுகளில் பேருந்துகளையும் ஒப்பந்த ஊர்திகளையும் மேற்கொள்ள வகை செய்தது.

- **அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1974**

  தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே சம்பளம் வழங்குவது போன்ற சில சீர்த்திருத்தங்களைக் கொணர்ந்தது.

- **மோட்டார் வாகன வரிகள் சட்டம், 1974**

  முன்பிருந்த சட்டத்திற்குப் பதிலாக இயற்றப்பெற்று, இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிறது.

- **குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம், 1974**

  தமிழகத்தில் குதிரைப் பந்தயங்களை ஒழிக்க வகை செய்தது.

- **சங்கங்கள் பதிவு சட்டம், 1975**

  கலை, பண்பாட்டுச் சங்கங்கள் போன்றவை தங்களைப் பதிவு செய்துகொள்ள வகை செய்தது.

- **ஊரகக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உரிமை வழங்கல்) சட்டம், 1976**

  தச்சர், கருமார் போன்றோருக்கு ஊரகப் பகுதிகளில் அவர்கள் வசிக்கும் மனையின் குடியிருப்பு உரிமையைப் பெற்றுத் தந்தது.

மோதல்

மோதிக்கொள்வது என்பது சாதாரணமான விஷயம். ஆனால், அதனால் ஏற்படுகிற பலன், விளைவு என்ன என்பதுதான் மிகமுக்கியமான விஷயம்.

–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

ஒன்பதாவது பேரவை (1989–1991) முக்கிய நிகழ்வுகள்

- 1989–பொது தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை பெற்று மூன்றாம் முறையாக முதலமைச்சரான கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் 27–1–1989 அன்று அமைச்சரவை அமைந்தது.
- 5–5–1989 அன்று தமிழக சட்டமன்றப் பேரவை தன்னுடைய பொன் விழாவைக் கொண்டாடியது. விழாவினையொட்டி பேரவை மண்டபம் வண்ண விளக்குகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டது. மூன்று முறைகளுக்கு மேல் பதவி வகித்த உறுப்பினர்கள், முன்னாள் பேரவைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மேலவைத் தலைவர்கள், முன்னாள் பேரவைச் செயலாளர்கள், மற்றும் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், பேரவைச் செயலாளர் ஆகியோரும் பொன்னாடைகள் போர்த்தி, நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றனர். விழாவினையொட்டி ஒரு மலர் வெளியிடப்பட்டது. பேரவையின் சிறந்த பாரம்பரியத்தையும், வரலாற்றையும் குறித்த உரைகள் நிகழ்த்தப்பட்டன.
- பேரவை 30–1–1991 அன்று கலைக்கப்பட்டு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.

முக்கியத் தீர்மானங்கள் (1989–1991)

- **20–2–1989 அரசினர் தீர்மானம்**

  தமிழகத்தில் மீண்டும் மேலவை அமைய சட்டம் இயற்றுமாறு பாராளுமன்றத்தைக் கோரும் வகையில் நிறைவேறியது.

- **12–5–1989 அரசினர் தீர்மானம்**

  பிற்பட்டோரின் நலனுக்கான மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த ஒன்றிய அரசைக் கோரியது.

- **24–4–1990 அரசினர் தீர்மானம்**

  காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்ற நிலையை, ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கோரும் வகையில் ஒருமனதாக நிறைவேறியது.

- **21–8–1990 அரசினர் தீர்மானம்**

  மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதற்காக ஒன்றிய அரசுக்கு நன்றியும், வாழ்த்துகளும் தெரிவிக்கும் வகையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முக்கியச் சட்டங்கள் (1989–1991)

- **இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்த) சட்டம், 1989**

  பெண்களுக்குச் சமத்துவம் அளிக்கும் வகையில், இந்து குடும்பத்தில் பிறந்த மகளிருக்கும் சொத்தில் சம உரிமை வழங்க வகை செய்தது.

- **பல்கலைக்கழகங்கள் குறித்த சட்டங்கள் (திருத்த) சட்டம், 1989**

  சட்டமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழக அமைப்புகளில் உறுப்பினர்களாக இரு முறைகளுக்கு மேல் பதவி வகிக்கலாகாது என்றிருந்த தடையை நீக்கியது.

- **மோட்டார் வாகன வரி விதிப்பு (திருத்த) சட்டம், 1989**

  இரு சக்கர வாகனங்களை வாங்கும்போது வாகன ஆயுட் காலத்திற்கு மோட்டார் வாகன வரி செலுத்த வகை செய்கிறது.

- **ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டம், 1989**

  ஊராட்சி உறுப்பினர்கள் பதவிகளில் 30 சதவிகிதத்தைப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வழி வகுத்தது.

- **ஊராட்சிகள் (திருத்த) சட்டம், 1989**

  ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக்காலம், ஏற்கெனவே 5–லிருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டதை, மீண்டும் 5 ஆண்டுகளாக ஆக்க வகை செய்தது.

- **கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்டம், 1989**

  கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கெனப் புதிய பல்கலைக்கழகம் ஏற்பட வகை செய்தது.

- **சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டம், 1990**

  தம்முடைய பதவிக்காலம் முடியும் முன்னர் ஒரு சட்டமன்ற உறுப்பினர் இயற்கை எய்தினால் அவருடைய குடும்பத்தினருக்கு ரூ.50 ஆயிரம் ஒட்டுமொத்த உதவியாக வழங்க வகை செய்தது.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

பதினோராவது பேரவை முக்கிய நிகழ்வுகள் 1996–2001

- 1996 பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று நான்காவது முறையாக 13–5–1996 அன்று கலைஞர் கருணாநிதி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.
- பதினோராவது பேரவை செயல்படத் தொடங்கிய முதல் ஆண்டில் ஆளுநராக இருந்த டாக்டர் எம்.சென்னா ரெட்டி 2–12–1996 அன்று தமது பதவிக் காலத்திலேயே இயற்கை எய்தினார்.
- தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழாவும் மற்றும் சட்டமன்றப் பேரவை வைர விழாவும் 14–7–1997 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றன. மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவினை சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் திரு. மன்மோகன் சிங் லிபரான் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் விழா மலரினை வெளியிட இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள். மூத்த சட்டமன்ற உறுப்பினர்கள் சால்வைகள், நினைவுப் பரிசுகள் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டனர்.
- இந்தியக் குடியரசின் பொன்விழாக் கொண்டாட்டங்களையொட்டி, "குடியரசு வளர்ச்சியில் சட்டமன்றத்தின் பங்கு" எனும் தலைப்பில் குடியரசு தினப் பொன்விழா கருத்தரங்கம் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள மாநாட்டு அரங்கத்தில் 22–1–2001 அன்று நடைபெற்றது.
- பத்தாவது பேரவையில் விதியைத் தளர்த்தி ஆளுநரைப் பற்றித் தெரிவிக்கப்பட்ட விமர்சனங்களையும், உண்மைக்கு மாறாகப் பதியப்பட்ட சில தகவல்களையும் நீக்க வேண்டுமென்று எழுப்பப்பட்ட கோரிக்கையின்மீது தீர்ப்பளிக்கையில், ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் மாற்றம், திருத்தம் அல்லது நீக்கம் செய்ய பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லையென 29–4–1997 அன்று பேரவைத் தலைவர் தீர்ப்பளித்தார். தீர்ப்பின்போது பேரவைத் தலைவர் அளித்த ஆலோசனையினை ஏற்று, பேரவைத் தலைவரால் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு வெளியிடப்பட்ட பேரவை நடவடிக்கைக் குறிப்புகளைப் பின்னர் மாற்றவோ, நீக்கவோ, புதிதாக எதனையும் சேர்க்கவோ, இணைக்கவோ கூடாது எனப் பேரவை விதி 283–ல் காப்புரை சேர்க்கப் பெற்றதுடன், ஆளுநரின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் பேசக் கூடாது

என்றுள்ள விதி 92 (vii) இன் பயன்பாட்டை நிறுத்திவைக்க பேரவை விதி 287–ஐப் பயன்படுத்தக் கூடாது என்ற காப்புரையும் விதிகளில் சேர்க்கப் பெற்றது.

- சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் தேர்ந்தெடுக்கும் இடத்தில், தலா ரூபாய் 5 இலட்சம் மதிப்பிலான அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் எனப் பேரவையில் அறிவிக்கப்பட்டு பதினோராவது பேரவைக் காலம் வரை 215 தொகுதி அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.
- ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென நான்கு தொகுப்புகள் கொண்ட 10 மாடிக் குடியிருப்பு வளாகம் ரூபாய் 51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, 12–6–2000 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

முக்கியத் தீர்மானங்கள் (1996–2001)

- **26–7–1996 அரசினர் தீர்மானம்**

  தமிழகத்தில் மீண்டும் மேலவையைத் தோற்றுவிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றக் கோரி நிறைவேற்றப்பெற்றது.

- **20–2–1999 அரசினர் தீர்மானம்**

  மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாநில ஒதுக்கீட்டில் மாற்றம் செய்யப்படாமலிருக்க இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **11–5–1999 அரசினர் தீர்மானம்**

  மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறை கட்டுதல் (தடுப்பு) சட்டம், 1993 (மையச் சட்டம் 46/1993)–ஐ தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **8–3–2000 அரசினர் தீர்மானம்**

  சேலம் உருக்காலை நிருவாகம் தொடர்ந்து பொதுத் துறையின்கீழ் இருக்கவும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

முக்கியச் சட்டங்கள் (1996–2001)

- **டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1996**

  அரசமைப்புச் சட்டத்தை வரைவதில் பெரும் பங்கு கொண்ட சட்ட வல்லுநர் அம்பேத்கர் பெயரில் தமிழகத்தில் ஒரு சட்டப் பல்கலைக்கழகம் அமைய வகைசெய்யும் சட்டமுன்வடிவு 22–8–1996 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 29–8–1996 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **மெட்ராஸ் மாநகர் (பெயர் மாற்றம்) சட்டமுன்வடிவு, 1996**

  சென்னை மாநகரத்தின் பெயரை மெட்ராஸ் என்பதற்குப் பதிலாக சென்னை என்று பெயர் மாற்றம் செய்ய வகைசெய்யும் சட்டமுன்வடிவு 31–8–1996 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **கேலிவதை செய்தலைத் தடுத்தல் சட்டம், 1997**

  உயர் கல்வி நிலையங்களில் புதிதாகச் சேர்பவர்களை ஏற்கெனவே உள்ள மாணவர்கள் கேலிவதை என்ற பெயரால் அத்துமீறித் துன்புறுத்துவதைத் தடுக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 29–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–1–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1997**

  பல்கிவரும் தனியார் மருத்துவமனைகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், அவற்றைப் பதிவு செய்துகொள்ளுதல், ஆய்வுக்கு ஆட்படுத்துதல் போன்ற சில சட்டக்கூறுகளைக் கொண்டு இயற்றப்பெற்ற சட்டமுன்வடிவு 28–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–1–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது. ஆயினும் சில மருத்துவர் சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க இதன் செயலாக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பெற்றுள்ளது

- **மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டம், 1997**

  மாநகராட்சிகளின் துணை மேயர்களின் பதவிக் காலத்தை, மேயர்களின் பதவிக் காலம் போலவே 5 ஆண்டுகளாக உயர்த்த வகை செய்தது. மேலும், 30–11–1996 மற்றும் 1–12–1996 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அளித்த சில வாக்குறுதிகளுக்குச் செயல் வடிவம் தர வகைசெய்யும் சட்டமுன்வடிவு 28–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–1–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **கடல்சார் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

  ஏற்கெனவே இருந்து வந்த சட்டத்தின்படி தமிழகத்தில் கடல்சார் வாரியம் ஒன்று அமைக்கப் பெற்றது. இந்த வாரியத்தில் சில அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாகப் பங்கு பெற வகைசெய்யும் சட்டமுன்வடிவு 31–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

  தமிழகத்தில் உள்ள சொத்துகளின் உரிமை மாற்ற ஆவணங்களைக் குறைந்த பதிவுக் கட்டணம் கருதி, அண்டைமாநிலங்களில் பதிவு செய்வதால் அரசுக்கு ஏற்படும் வருமான இழப்பைத் தடுக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 31–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **பயிரிடு குத்தகையாளர்கள் (வெளியேற்றப் படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்) சட்டம், 1997**

  வறட்சி, பெருமழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களில் உள்ள பயிரிடு குத்தகையாளர்கள் தாங்கள் தர வேண்டிய குத்தகைப் பாக்கிக்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து நிவாரணம் அளிக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 31–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது

- **தகவல் அறியும் உரிமை சட்டம், 1997**

  அரசு இயந்திரத்தின் செயல்பாடு வெளிப்படையாக அமையும் வகையில், பொது மக்கள் தகவல்களைக் கேட்டுப் பெறுவதற்கு உரிமை அளிக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 17–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 30–4–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்த சட்டமுன்வடிவு, 1997**

  நிதி நிறுவனங்கள் என்ற பெயரால் பெறப்பட்ட காப்பீடுகளை உரிய காலம் முடிந்தவுடன் திரும்பத் தராமல் மக்களை ஏமாற்றியவர்களது சொத்துகளைக் கையகப்படுத்தி, அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட பின்னர், உரியவர்களுக்குத் திருப்பி அளிக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 22–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 30–4–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **நகர் சார்ந்த பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1997**

  நகர்ப்பகுதிகளில் தங்கள் இல்லங்களுக்கு அருகிலேயே பெரும் எண்ணிக்கையில் கால்நடைகளை வளர்த்து அதன்மூலம் பொதுச்சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிப்பதைத் தடுக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 25–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 30–4–1997 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **நிதி நிறுவனங்களில் வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு, 1997**

  ரிசர்வ் வங்கிச் சட்டத்தின்கீழ் வராத, உயர் வட்டி தருவதாக ஆசை காட்டி மக்களிடமிருந்து பணத்தை வைப்பீடுகள் என்ற பெயரில் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்படும் சில நிதி நிறுவனங்களின் தவறான செயல்பாட்டிலிருந்து மக்களைப் பாதுகாக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 30–1–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **பெரியார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 1997**

  தந்தை பெரியார் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்று சேலத்தில் அமைய வகைசெய்யும்

சட்டமுன்வடிவு 30–4–1997 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 1998**

  பெண்களிடம் குறும்பு செய்து, கேலி செய்யும் செயல்களைத் (eve–teasing) தடுக்கும் வகையிலான சட்டமுன்வடிவு 24–11–1998 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 27–11–1998 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு,1998**

  உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக இயங்கிட மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி) பொதுவான சட்டமுன்வடிவு 28–4–1997 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, ஆய்வுக் குழு (Select Committee) அமைத்து, ஆய்வு செய்யப்பட்டு அக்குழு திருத்தி அமைத்தவாறு 28–11–1998 அன்று அவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998**

  அரசுப் பணிகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரிப் பெற்று, ஏற்றுக்கொள்ளும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்த வகைசெய்யும் சட்டமுன்வடிவு 27–5–1998 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 29–5–1998 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களின் நல நிதிச் சட்டம், 1999**

  'தமிழ்நாடு வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்கள் நல நிதி' என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள வழக்குரைஞர்களுக்கான எழுத்தர்களுக்கு ஓய்வூதியப் பலன்களையும், அவர்கள் இறந்துவிட்டால் அவர்களது வாரிசுகளுக்கு குடும்பத்தினருக்கு பண உதவியும் அளிக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 14–5–1999 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 17–5–1999 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞ) திருத்தச் சட்டமுன்வடிவு 2000**

  நன்கொடையாக ஏற்கெனவே வழங்கப்பட்ட நிலத்திற்கு மாற்றாக அதே மதிப்பிலான வேறொரு மாற்று நிலத்தை வழங்குவதற்கும், மாநில வாரியத்தின் பொறுப்பிலுள்ள நிலத்தை, நிலமில்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவாக வழங்குவதற்கும், பொது நோக்கங்களுக்காக நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ வழங்குவதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 18–5–2000 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 11–11–2000 அன்று நிறைவேற்றப்பெற்றது.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

பதின்மூன்றாவது பேரவை முக்கிய நிகழ்வுகள் (2006–2011)

- 2006 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, 13–5–2006 அன்று மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்கள்.
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் 50 ஆண்டு காலச் சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி 11–5–2007 மற்றும் 12–5–2007 ஆகிய நாட்களில் சட்டப் பேரவை மண்டபத்தில் "சட்டப் பேரவையில் கலைஞர் பொன் விழா" நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு ஒன்றிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 11–5–2007 அன்று முதல் நாள் நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். 12–5–2007 அன்று நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மாண்புமிகு திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களும் உரையாற்றினார்கள். இரண்டாம் நாள் ஏற்புரையின்போது பொன் விழா நாள் அறிவிப்பாக, "புதிய சட்டமன்றக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படும்" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினைச் செய்தார்கள்.
- தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகத் திகழ்ந்த மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 29–5–2009 அன்று தமிழக துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.
- பதின்மூன்றாவது பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடர் 2010 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6 ஆம் நாள் முதல் 11 ஆம் நாள் வரை நடைபெற்றது. அதுவே, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற பதின்மூன்றாவது பேரவையின் கடைசிக் கூட்டத் தொடராகும். அக்கூட்டத் தொடரின் இறுதி நாளன்று புனித ஜார்ஜ் கோட்டை வரலாற்றைப் பற்றியும், சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நினைவுகூர்ந்து உரையாற்றினார்கள்.
- முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் "புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகம்" கட்டப்பட்டு 13–3–2010 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் தலைமையில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் குழு தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்கள் முன்னிலையில் இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்தப் புதிய சட்டப் பேரவை 13–வது பேரவையின் 13–வது கூட்டத்தொடர் 19–3–2010 முதல் 10–5–2011 வரை 46 நாட்கள் நடைபெற்றது.

முக்கியத் தீர்மானங்கள் (2006–2011)

- **31–5–2006 அரசினர் தீர்மானம்**

ஒன்றிய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதியுதவி வழங்கப்படும் அனைத்து உயர் கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை வழங்கத் தொடர்ந்து செயலாற்றுமாறும், அதற்கென ஓர் அவசரச் சட்டத்தினைக் கொண்டு வருமாறும் ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **6–12–2006 அரசினர் தீர்மானம்**

சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு எடுத்துள்ள முடிவினைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **7–12–2006 அரசினர் தீர்மானம்**

இலங்கையில் தமிழ்மக்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை மேலும் மோசமான அளவில் தொடர்வதற்கு ஆழ்ந்த வேதனை தெரிவித்து, அதற்கு ஒரு முடிவினைக் காண, இலங்கைத் தமிழர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று அமைதியாக வாழ்ந்திட உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **30–3–2007 அரசினர் தீர்மானம்**

ஒன்றிய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் உயர்கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பு குறித்து விவாதித்து நல்ல முடிவெடுக்க நாடாளுமன்ற இரு அவைகளையும் உடனே கூட்ட வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **31–1–2008 அரசினர் தீர்மானம்**

செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைத்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அம்மையத்தின் தலைவராகச் செயல்பட ஒன்றிய அரசு அறிவிப்புச் செய்ததற்குப் பாராட்டும், நன்றியும் தெரிவிக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **27–3–2008 அரசினர் தீர்மானம்**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குக் கர்நாடக அரசின் எதிர்ப்பைத் தடுத்திட ஒன்றிய அரசின் ஒத்துழைப்பைக் கோரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **1-4-2008 அரசினர் தீர்மானம்**

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடர்பாக அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிரான கர்நாடக வெறியர்களால் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்திடவும், தமிழக மக்களின் உரிமைகளைக் காத்திடவும் முன்வர வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **11-4-2008 தனி உறுப்பினர் தீர்மானம்**

ஒன்றிய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு அறிவித்ததற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை செல்லாது என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும் எனப் பாராட்டுத் தெரிவிக்கும் திரு. ஜி.கே. மணி அவர்களின் தனி உறுப்பினர் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **23-4-2008 அரசினர் தீர்மானம்**

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த அங்கே மோதலில் ஈடுபட்டு வரும் இரு பிரிவுகளுக்கிடையே தமிழர்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தைக்கும், அங்கு முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கான பயனுள்ள பேச்சுவார்த்தைக்கும் ஏற்பாடு செய்ய முன்வர வேண்டுமென்று மைய அரசை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

- **12-11-2008 அரசினர் தீர்மானம்**

இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைப் போர் நிறுத்தத்திற்கு இணங்கவைத்து தமிழர் பகுதியில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **23-1-2009 அரசினர் தீர்மானம்**

இலங்கையில் நடைபெறுகின்ற, தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட வேண்டுமென்றும், தமிழினம் அழிவதைத் தடுத்து, அமைதி மலர்ந்திட நடவடிக்கை எடுக்குமாறு "இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்" விடுக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

- **11-1-2010 அரசினர் தீர்மானம்**

நாடாளுமன்ற மக்களவையிலும், சட்டமன்றப் பேரவைகளிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ-இந்தியருக்கு உள்ள இட ஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகள் நீட்டிக்கும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதப்பெற்றுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளிக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

முக்கியச் சட்டங்கள் (2006–2011)

- **தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006**

  முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தினை நீக்கிக்கொள்ளும் சட்டமுன்வடிவு 29–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–5–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2006**

  முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் சட்டத்தினை நீக்கிக்கொள்ளும் சட்டமுன்வடிவு 29–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 31–5–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச் சட்டமுன்வடிவு, 2006**

  சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் நீங்கலாக அரசு உதவி பெறாத அனைத்துத் தனியார் சுய நிதிக் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டமுன்வடிவு 31–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு, 2006**

  பள்ளிகளில் அனைத்து மாணவர்களும் தமிழ் மொழி பயில்வதைக் கட்டாயமாக்கும் சட்டமுன்வடிவு 31–5–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது

- **தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006**

  தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும், விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 27–7–2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 2–9–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச்சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006**

  மணல் திருட்டில் ஈடுபடும் குற்றவாளிகளால் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும் இயற்கைச் சூழலுக்கும் ஏற்படும் இழப்பினையும், அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினையும் தடுப்பதற்கு, அத்தகைய குற்றவாளி எவரையும் குண்டர் சட்டத்தின்கீழ் சிறையில் அடைப்பதற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு 4–8–2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, 28–8–2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006**

மாநகராட்சிகளின் மேயர்களையும், மூன்றாம் நிலை நகராட்சிகள் உள்ளடங்கலான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைமையாளரையும், மறைமுகமாக மன்ற உறுப்பினர்களால் அல்லது நேர்விற்கேற்ப உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுப்பதற்கும், மேயர் அல்லது துணை மேயரை அரசு அறிவிக்கைமூலம் நீக்குவதற்கும் மற்றும் சிறப்பு ஊராட்சிகளை நகராட்சிகளாக அமைத்து உருவாக்குவதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 22-8-2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, 31-8-2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை, 'கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வகைசெய்யும் சட்டமுன்வடிவு 31-8-2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 2-9-2006 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2006**

நகர்ப்புற மாணவர்களுக்கும், கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சம வாய்ப்பை அளிக்கும் பொருட்டு தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வினை நீக்கும் சட்டமுன்வடிவு 6-12-2006 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007**

சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தை மாதத்தில் ஒரு முறையாவது கட்டாயமாக நடத்த வேண்டும் என்பதற்கும், பிற மாநகராட்சிகளைப் போன்று சென்னை மாநகராட்சியிலும் மேயரும் துணை மேயரும் மறு தேர்தலுக்கு உரிமைத் தகுதியுள்ளவராவர் என்பதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 22-1-2007 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு 23-1-2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு ஊனமுற்றவர்களுக்கான நல வாரியச் சட்டமுன்வடிவு, 2007**

மாநிலத்தில் ஊனமுற்றவர்களின் நலனுக்காக வாரியம் ஒன்றை நிறுவுவதற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு 8-5-2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10-5-2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டமுன்வடிவு, 2007**

நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் மற்றும் உழவர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட அனைத்து நலப் பயன்களும் மீனவர்களுக்கும், மீனைக் காய வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செய்தொழில்களில் ஈடுபட்டிருக்கும்

பெண்களுக்கும் நீட்டிக்கப்படுவதற்கான சட்டமுன்வடிவு 8-5-2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 10-5-2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007**

வாணிபம், வணிகம், தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் தேர்தல் நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்குவதைக் கடமையாக்குவதற்கும் மற்றும் மீறுகைக்கு 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் உள்ளதுபோன்று தண்டத் தொகை குறித்துரைப்பதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 10-5-2007 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு 14-5-2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007**

தீப்பெட்டி அல்லது வான வெடிப்பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பணிபுரியும் ஒவ்வொரு பணியாளரும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத பணத் தொகைக்குக் காப்பீடு செய்யப் பெறுவதையும், அதற்குரிய தவணைத் தொகையினை அளிப்பதனையும் அத்தகைய தொழிற்சாலை ஒவ்வொன்றின் கையுடைமையாளரின் கடப்பாடாக ஆக்குவதற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு 10-5-2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14-5-2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007**

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கு எதிராக அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவருவதால் மக்கள் நலன்கள் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த, நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது மற்றும் நிறைவேற்றுவது குறித்தான வகைமுறைகளைக் கடுமையாக்கும் வகையில் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்களைத் திருத்தம் செய்வது குறித்த சட்டமுன்வடிவு 18-10-2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 22-10-2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007**

உதவிபெறாததனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை தொடர்பாக கட்டணம் நிர்ணயம் செய்ய மாநில அரசுகள் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்திற்கும் வைப்பீட்டுத் தொகைக்கும் கூடுதலாக கட்டணம் எதனையும் வசூலிப்பதைக் குற்றச் செயலாக வகைசெய்யும் சட்டமுன்வடிவு 18-10-2007

அன்று அறிமுகம் செய்யப்பட்டு 22–10–2007 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2007**

கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளுக்கான நியமனங்களிலும், பதவிகளிலும் கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தலா 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யும் சட்டமுன்வடிவு 22–10–2007 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு விளம்புகை சட்டமுன்வடிவு, 2007**

தை திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடும் வகையில் சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008**

திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008**

ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008**

சிற்றூராட்சிகளின் துணைத் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைமையாளர்களுக்கும் துணைத் தலைமையாளர்களுக்கும் எதிராகக் கொண்டுவரப்பெறும் அதிகப்படியான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களால் ஊராட்சிகளின் நிருவாகம் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது மற்றும் நிறைவேற்றுவது குறித்தான வகைமுறைகளைக் கடுமையாக்கும் வகையில் திருத்தம் செய்வது குறித்த சட்டமுன்வடிவு 29–1–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 1–2–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008**

பெண்களின் நலனைப் பாதுகாத்து, அவர்களின் தகு நிலையினைச் சார்ந்துள்ள பொதுப் பிரச்சினைகளை உன்னிப்பாகக் கவனித்துப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை வழங்கும்

வகையில் மகளிர் மாநில ஆணையத்தைச் சட்டபூர்வமாக அமைத்துருவாக்கி, அதிகமான அதிகாரங்களை அளிப்பதற்கான சட்டமுன்வடிவு 22–4–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008**

வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 9–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008**

தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு 9–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008**

தெய்வீகச்சிலைகள் மற்றும் தலைவர்களின் சிலைகளைச் சேதப்படுத்தியும், விகாரப்படுத்தியும், இழிவுபடுத்தும் ஒருசில நபர்கள் ஊறுபாடுகளை விளைவிக்கிறார்கள். இத்தகைய நபர்களால் பொது ஒழுங்கானது பெருமளவில் பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, அத்தகைய நபர்களை மேற்சொன்ன சட்டத்தின் "குண்டர்கள்" என்னும் வரையறைக்குள் கொண்டுவரவும், அத்தகைய நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்கவும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 13–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–5–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008**

தமிழ்நாடு மாநிலத்தில் காவல் பணியை அமைத்துருவாக்கி முறைப்படுத்துவது தொடர்பான சட்டங்களைத் தொகுத்து அமைப்பதற்காக, தற்போதைய காவல் சட்டத்திற்குப் பதிலாகப் புதிய காவல் சட்டத்தினை இயற்றுவதற்கு வகைசெய்யும் சட்டமுன்வடிவு 14–5–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 21–7–2008 அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

- **சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகர புறநகர் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2008**

சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தை இரண்டாகப் பிரிக்கவும், 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளை சென்னைப் புறநகர்ப் பகுதிக்கு நீட்டிப்பதன்மூலம் சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கெனப் புதியதொரு ஆணையரகத்தை உருவாக்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 11–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்கு சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 2008**

பதிவு பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர் மாணவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் தமது மேன்மையான கடமையினைப் பயமின்றி இச்சமுதாயத்தின் நலனுக்கு ஆற்றுவதை உறுதி செய்யவும் அவர்களுக்கெதிரான மற்றும் இம்மாநிலத்தில் உள்ள மருத்துவ நிறுவனங்களின் சொத்துகளுக்கு எதிரான வன்முறை எதற்கும் தண்டனை வழங்குவதற்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 11–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008**


கிறித்துவ சமூகத்தின் சார்பாற்றக் குழுவின் முறையீட்டின்பேரில் கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வகை செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டிற்குள்ளாகவே போட்டியிட்டு பங்குபெறும் வகையில் அவர்களை இயல்விப்பதற்காக அவர்களுக்குத் தனியே வழங்கப்பட்டுள்ள 3.5 சதவிகிதம் என்பதான ஒதுக்கீட்டினை விலக்கிக்கொள்ள வகைசெய்யும் சட்டமுன்வடிவு 12–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008**

நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை, மாநகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில் போலிச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களை உடனடியாகப் பதவிப் பொறுப்பிலிருந்து அல்லது பதவியிடத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்றும், சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள தண்டனை வழங்குவதுடன் குறைந்தது 6 ஆண்டு காலம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடை செய்ய வேண்டும் என்ற பட்டியல் சாதிகளுக்கும், பட்டியல் பழங்குடியினருக்குமான தேசிய ஆணையத்தின் பரிந்துரையின்படி இம்மாநிலத்திலுள்ள மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் சட்டங்களைத் திருத்த வகைசெய்யும் சட்டமுன்வடிவு 12–11–2008 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 14–11–2008 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாகத் தனி ஒதுக்கீடு செய்தல்) சட்டமுன்வடிவு, 2009**

  கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளுக்கான நியமனங்களிலும், பதவிகளிலும் அருந்ததியர்களுக்குப் பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக 3 சதவிகிதம் வழங்க வகைசெய்யும் சட்டமுன்வடிவு 26-2-2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, அன்றே நிறைவேற்றப்பெற்றது.



- **தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டமுன்வடிவு, 2009**

  வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதற்கும், வேளாண்மை மன்றத்தை அமைப்பதற்கும் வேளாண்மை அல்லது தோட்டக் கலையில் தகுதிப்பாடு பெற்றுள்ள நபர்களின் பதிவேட்டினைப் பேணி வருவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகைசெய்யும் சட்டமுன்வடிவு 23-6-2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 21-7-2009 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு, 2009**

  மாநிலத்தில் வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களாக இருக்கும் நபர்கள் அனைவருடைய திருமணங்களும் எந்த இடத்தில் திருமணம் நடத்தி

வைக்கப்படுகிறதோ அந்த மாநிலத்தில், அந்த இடத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுவதற்கான சட்டமுன்வடிவு 30–6–2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 21–7–2009 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2009**

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், விலங்குகள், பங்கேற்பாளர்கள், பார்வையாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், அத்தகைய நிகழ்ச்சிகளுக்கான நெறிமுறைகளை வகுத்துரைத்து முறைப்படுத்துவதற்குமான சட்டமுன்வடிவு 21–7–2009 அன்று அறிமுகம் செய்யப்பட்டு அன்றே நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டமுன்வடிவு, 2010**

தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் போன்று தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை மாநில அளவில் உருவாக்குவதற்காக தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் ஒன்றை நிறுவும் வகையில் சட்டமுன்வடிவு 9–1–2010 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 11–1–2010 அன்று நிறைவேற்றப்பெற்றது.

- **தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்விமுறைச் சட்டமுன்வடிவு, 2010**

மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு வகையான பள்ளிக் கல்வி முறைகள் இருந்துவருவதால் பாடத் திட்டங்கள், பாட நூல்கள், தேர்வுத் திட்டங்கள் வேறுபடுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் சமச்சீரான முறையை உருவாக்குவதற்கான சட்டமுன்வடிவு 9–1–2010 அன்று அறிமுகம் செய்யப்பட்டு 11–1–2010 அன்று நிறைவேற்றப்பெற்றது.

விவேகம்

'சிந்தனை' என்ற வயலுக்கு
'ஆராய்ச்சி' என்ற நீர் பாய்ச்சி 'மூட மதி'
என்ற களையை முற்றிலும் அகற்றினால்,
'விவேகம்' என்ற விளைவு ஏற்படும்.

–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧


சட்டமன்றப் பேரவை தொடர்பான முக்கிய நிகழ்வுகள்/ விழாக்கள்

இந்திய விடுதலை வெள்ளி விழா

14-8-1972

சுதந்திர தினத்தின் வெள்ளி விழாவினை கொண்டாடும் வகையில் சிறப்புக் கூட்டம் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ஆம் நாள் இரவு 10-30 மணியளவில் சட்டப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. K.A. மதியழகன் அவர்கள், சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. C.P. சிற்றரசு அவர்கள் மற்றும் மேதகு ஆளுநர் திரு. K.K. ஷா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். சரியாக நள்ளிரவு 12 மணிக்கு இந்திய தேசிய விடுதலைக்காக பாடுபட்டு உயிர்த் தியாகம் செய்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 2 நிமிடங்கள் அமைதி காக்கப்பட்டது. நாட்டு வணக்கப் பாடல் இசைக்கப்பெற்று இந்திய விடுதலை வெள்ளி விழா சிறப்புக் கூட்டம் நிறைவுற்றது.

இந்திய விடுதலை நாள் வெள்ளி விழா நிகழ்ச்சி குறித்து மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கையெழுத்திட்டு அனுப்பி வைத்த அழைப்பிதழ்



மு. கருணாநிதி
முதலமைச்சர்.

தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

அன்புடையீர்,

வணக்கம். நம் நாடு விடுதலை பெற்று 1972 ஆகஸ்ட் 14-ஆம் நாளோடு 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். விடுதலை ஆண்டின் வெள்ளி விழாவைத் தமிழ் நாட்டில் சீரும் சிறப்பும் பொங்கத் தக்க முறையில் கொண்டாடத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. சென்னையாகையில் ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று மாலை 5 மணி அளவில் மெரீனா கடற்கரையில் அலங்கார வண்டிகளின் அணி வகுப்பும், இரவு 7 மணி யளவில் சீரணி அரங்கில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் பொதுக் கூட்டமும், இரவு 8-30 மணியளவில் இன்னிசை விருந்தும், இரவு 9-30 மணியளவில் வாண வேடிக்கை களும் நடைபெறும். தமிழக ஆளுநர் அவர் களும், இந்திய பாதுகாப்பு அமைச்சரும் மாலை 5 மணியளவில் கடற்கரையில் அண்ணல் காந்தியடிகள் சிலையருகே அலங்கார வண்டி களின் அணி வகுப்பைக் கண்ணுறுவர். இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களே வேண்டிக் கொள்கிறேன்.

அன்புள்ள,

அல்புகூச்சு இந்த அழைப்பிதழுடன் வந்து மாலை 4-30 மணியளவில் உங்கள் இருக்கையில் அமரவும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொன் விழா

5-5-1989

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொன் விழா 1989 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் நாள் (வெள்ளிக்கிழமை) சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மூன்று முறைகளுக்குமேல் பதவி வகித்த உறுப்பினர்கள், முன்னாள் பேரவைத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மேலவைத் தலைவர்கள், முன்னாள் பேரவைச் செயலாளர்கள் மற்றும் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், பேரவைச் செயலாளர் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவினை நினைவுகூரும் வகையில் விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பவள விழா மற்றும் வைர விழா

14-7-1997

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பவள விழா மற்றும் வைர விழா 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் (திங்கட்கிழமை) சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. மன்மோகன் சிங் லிபரான் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட இவ்விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விழா மலரை வெளியிட்டார்கள். முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள். மூத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சால்வைகள் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்றப் பேரவையில் கலைஞர்–பொன் விழா

11–5–2007 மற்றும் 12–5–2007

2007 ஆம் ஆண்டு மே மாதம் 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1957 ஆம் ஆண்டு முதல் 50 ஆண்டுகளை சட்டமன்ற உறுப்பினராக நிறைவு செய்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை பாராட்டும் வகையில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் 'சட்டப் பேரவையில் கலைஞர்' பொன் விழா கொண்டாடப்பட்டது.

இந்தப் பொன் விழா நிகழ்வின் முதல் நாளில் தமிழகத்தின் மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும், இரண்டாம் நாளில் மக்களவைத் தலைவர் திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். இரண்டு நாட்களும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஏற்புரை வழங்கப்பட்டது.







சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் கலைஞர் திருவுருவப் படத் திறப்பு விழா

2-8-2021

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் நாள் திங்கட்கிழமை சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களது தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தலைமை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்துவைத்தார்கள்.





✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டப் பேரவையில் கலைஞர்–பொன்விழா முக்கிய உரைகள்

மேதகு தமிழக ஆளுநர்
சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களின் சிறப்புரை

11-5-2007

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே! முக்கிய விருந்தினர்களே! அழைப்பாளர்களே! சட்டமன்றப் பேரவையில் 50 ஆண்டுகள் பணியாற்றிப் பொன்விழா காணும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"எவர் ஒருவர் எந்தப் பணியை எடுத்தாலும், அதில் தன் மனதை ஒருமுகப்படுத்தி உழைக்கின்றாரோ, அவர்களே உண்மையான தலைவர்களாகிறார்கள்" என்று மேக்வெல் ட்ரோக் கூறியதைப் போல, டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய பணியில் மனதை ஒருமுகப்படுத்தி உழைத்து, தமிழகத்தை, இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக்கிடத் தலைமையேற்றுச் செயல்பட்டு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் அவர்களை நான் கிட்டத்தட்ட நாற்பதாண்டுகளாக அறிவேன். 40 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பஞ்சாப்–க்கு வருகை தந்தபோது நான் அங்கு கல்வி அமைச்சராக இருந்தேன். தமிழர்களுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் இடுக்கண் வந்தபோதெல்லாம், அவர் மன உறுதியுடன் செயல்பட்டு இன்னல்களுக்கு ஆளான போதிலும் உறுதியாக நின்றார். தமிழ்நாட்டிற்குப் பெருமையையும் புகழையும் சேர்த்த உன்னதத் தலைவர் அவர். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரதிநிதித்துவ மக்களாட்சியில், சட்டமன்றப் பேரவை விழிகளாகவும், செவிகளாகவும், மக்களின் குரலாகவும் விளங்குகிறது என சிறந்த பாராளுமன்றவாதியான ஜான் ஸ்டுவார்ட் மில் கூறியிருக்கிறார். மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் அமைப்புதான் சட்டமன்றம். சட்டமன்றம் என்பது கலந்துரையாடிக் கூடி முடிவெடுக்கும் அமைப்பாகும். அதிகாரபூர்வ சட்டமியற்றும் பொறுப்புகளுடன், பெரும்பாலான சட்டமன்றங்கள், சிக்கலான பிரச்சினைகளுக்கு எளிதாகத் தீர்வு காண்பதிலும், முடிவுகளை வகுப்பதிலும், அறிவார்ந்த பணியை மேற்கொள்கின்ற அந்த முறையில், கலைஞர் அவர்கள் பல்வேறு சட்டமன்ற விவாதங்களில், சிக்கலான பிரச்சினைகளிலும் தனது தனித்திறமையைக் காட்டி, அப்பிரச்சினைகளுக்கு எளிதாக தீர்வு ஏற்படச் செய்திருக்கிறார்.

சட்டமன்ற நடவடிக்கைகளிலும், விவாதங்களிலும் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைசிறந்த முறையில் பங்கேற்றுள்ளார். கடும் உழைப்பு, ஆழமான படிப்பு, அன்றாட நிகழ்வுகளுக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றால் மட்டுமே இது சாத்தியமாகும். பிரச்சினைகளை மிக ஆழமாக அலசி, ஆராய்ந்து, நெளிவு சுழிவுகளைப் புரிந்து கொள்ளும் அவருடைய தனித் திறமையால், இவரால் பிரச்சினைகளை எளிதாகக் கையாள முடிந்தது. பொது மக்களுடைய பிரச்சினைகளில், கலைஞர் அவர்கள் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கூடிய கூர்ந்த மதிநுட்பத்தைப் பெற்றுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் மீதும், தமிழ் மக்களின் மீதும் எப்போதும் மிகுந்த கடமையுணர்வும், பொறுப்புணர்வும் கொண்டவர் அவர்.

பல்வேறு துறைகளில் ஆழ்ந்த அறிவு கொண்டிருப்பதால் டாக்டர் கலைஞர் அவர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்ற தலைவராக விளங்குகின்றார். இவர் சிறந்த நிர்வாகி மட்டுமல்ல, விவாதம் புரிவதிலும் இவருடைய தனித்தன்மையை வெளிப்படுத்துபவர். சமூக நீதியே அவரது குறிக்கோள். அரசியல் மற்றும் நிர்வாகத்தில் ஆழ்ந்த நுண்ணறிவு படைத்தவர்கள், கலைஞரைப் போல் இந்தியாவில் ஒரு சிலரே உள்ளனர். புதிய தொழிற்சாலைகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததில் கலைஞர் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், மாநிலத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகுத்துள்ளார். அவருடைய திறம்பட்ட தலைமையினால், அரசு நிர்வாகம் புதிய உத்வேகத்துடன் நடைபோடுகிறது.

தாமஸ் மான் கூறினார், "நாகரிகமே பேச்சாகும், வார்த்தைகள், நேர் எதிர்மறையான வார்த்தைகள்கூடத் தொடர்புகளைப் பாதுகாக்கின்றன. அமைதியே தனிமைப்படுத்துகிறது." கலைஞர் அவர்கள் தனது எண்ணிலடங்கா உரைகள்மூலம் பொதுமக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுடன் தன்னுடைய தொடர்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆழமான பொருளுடனும் நகைச்சுவையுடனும் கூடிய அவருடைய உரைகள் அவையில் கலகலப்பூட்டி, இறுக்கத்தைத் தளர்த்திப் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட வழிவகை செய்துள்ளன.

சிறப்பான தகுதிகள் இல்லாமல் மனிதர்கள் உயர்ந்த இடத்தை அடைய முடியாது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐந்து முறை ஒருவர் பொறுப்பேற்பதும், அரசியல் வாழ்வில் ஒருவர் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெறுவதும் உண்மையில், மிகப் பெரிய சாதனையாகும். இவர் தன்னுடைய 14 ஆவது வயதிலேயே அரசியலில் நுழைந்தவர். இவர் நீதிக்கட்சித் தலைவர்களால் ஈர்க்கப்பட்டார். திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அமைப்பான, "தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற"–த்தைத் துவக்கினார். இந்த இளைஞர் அமைப்பின் மூலமாகச் சட்டமன்றப் பேரவைக்கு வந்தார். 1957 ஆம் ஆண்டு முதன்முதலில் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்வு செய்யப்பட்டார்.

தான் போட்டியிட்ட 11 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். (மேசையைத் தட்டும் ஒலி). அரசியலில் ஆழ்ந்த அறிவு, வியக்கத்தக்க நிர்வாகத் திறன், சமூகச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் கலைஞர் அவர்களுக்கு இருக்கும் ஆழ்ந்த ஈடுபாடு ஆகியவற்றைத் தமிழ்நாட்டின் ஆளுநர் என்ற முறையில் இரண்டாவது முறை காணும் வாய்ப்பை நான் பெற்றுள்ளேன்.

பொதுவாக தொண்டர்கள் தலைவரைத் தேடிப் போவார்கள். ஆனால், அண்ணா வெளியிட்டு வந்த "திராவிட நாடு" பத்திரிகையில் தன்னுடைய 14 ஆம் வயதில் கட்டுரை எழுதிய கலைஞரை தேடி அண்ணா சென்றார் என்று கேள்விப்பட்டு நான் ஆச்சரியப்பட்டேன். அந்தக் கட்டுரை அண்ணா அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. பின்னர், அண்ணா அவர்கள் ஒரு விழாவில் பங்கேற்கத் திருவாரூர் சென்றபோது, அந்தக் கிராமத்தில் கலைஞரைப் பற்றி விசாரித்து அவரைப் பார்க்க ஆவலுற்றார். அப்போது இளைஞரான கலைஞர் அவர்முன் வந்தபோது, ஆச்சரியத்திலும் பெருமகிழ்ச்சியிலும் அண்ணா அவரை கட்டித் தழுவிக் கொண்டார்.

அதேபோல், பெரியார் அவர்கள் கலைஞர் அவர்களைத் தன் மாணவனாக ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சியையும் நினைத்துப் பார்ப்பது பொருத்தமாகும். 1945 ஆம் ஆண்டு பெரியார் மற்றும் அண்ணா ஆகியோருடன் பாண்டிச்சேரியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலைஞர் பங்கேற்றதாக நான் கேள்விப்படுகிறேன். அக்கூட்டத்தில், அரசியல் எதிரிகள் கலைஞரை தாக்கிச் சாக்கடையில் தூக்கியெறிந்துவிட்டு ஓடிவிட்டனர். பெரியார், கலைஞரை தேடிக் கண்டுபிடித்து அவரது காயங்களுக்கு மருந்தளித்து (மேசையைத் தட்டும் ஒலி) நடந்த நிகழ்ச்சிக்கு வருத்தப்பட்டார். பின்னர், பெரியார் அவரை ஈரோட்டுக்குத் தன்னோடு அழைத்துச் சென்று 'குடியரசு' இதழுக்குத் துணை ஆசிரியராக அமர்த்திக் கொண்டார்கள். இவ்வாறுதான், பெரியாரின் மாணவரான கலைஞர், இன்று வரை பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களுக்கு வடிவம் கொடுத்து அவற்றைச் சட்டமாகவும் செய்திருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இந்து மதத்தில் எல்லா ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சமீபத்திய சட்டத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இந்தப் பெரிய செயலால், பெரியாரின் கனவு நனவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் கலைஞர் அவர்கள், தன்னுடைய எழுத்துத் திறமை மூலம், மக்களின் இதயங்களைச் சென்று அடையும் ஆற்றல் பெற்றவர். இவர் எழுதியுள்ள 150-க்கும் மேற்பட்ட நூல்களின் மூலம் சமுதாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர். தமிழ் இலக்கியத்திற்குப் புத்துயிர் அளிக்கும் மாமேதையாக இவர் கருதப்படுகிறார். திரைப்படங்கள் மூலமாகவும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைத் திறமையாகவும் வெளிப்படுத்தி வந்தார். இலக்கியம் மட்டுமல்லாது, கலைஞர் அவர்கள் கலை மற்றும் கட்டடக் கலை மூலமாகவும், தமிழ் மொழிக்குச் சேவை செய்திருக்கிறார். திருக்குறளைக் குறளோவியமாகத் தந்த கலைஞர், வள்ளுவருக்கு ஒரு கோட்டத்தை அமைத்து,

திருவள்ளுவருக்கு கட்டடக் கலை மூலமாகச் சிறப்புச் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) சாகாவரம் பெற்ற ஞானியாம் திருவள்ளுவர் மீது கலைஞர் கொண்டிருந்த உயர்ந்த உணர்வுகளை, டாக்டர் கலைஞர் அவர்கள், கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் எழுப்பிய திருவள்ளுவர் சிலை திறம்படப் பிரதிபலிக்கிறது.

கலைஞரின் தமிழ்ப் புலமைதான் அவரது பேருக்கும் புகழுக்கும் அடிப்படை ஆதாரமாகும். இந்தப் பேராற்றல்தான் அவருடைய அரசியல் எதிரிகளைக் கூட வசியப்படுத்தி விடுகிறது.

"சொலல்வல்லன் சோர்விலான் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என வள்ளுவர் கூறியது போல், கலைஞர் தமிழ் மொழியில் வியக்கத்தக்க திறமை கொண்டிருக்கிறார். சோர்வு என்பதையே அறியாதவர் கலைஞர். அஞ்சாமை அவரது அரும்பண்புகளில் ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை அவரது எதிரிகள் கூட மறுக்க முடியாது என நான் உறுதியாகக் கூறுகிறேன்.

கலைஞரின் அரசியல் நாகரிகத்தைப் பெரிதும் வெளிப்படுத்தும், 1972 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நான் நினைவுகூர்கிறேன். 1972 ஆம் ஆண்டு, விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு சேவைபுரிந்தமைக்காக விருதுகள் பெற இராஜாஜி உள்ளிட்ட பல விடுதலைப் போராட்ட வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்விழாவிற்கு, 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் நடைபெற்ற விழாவில், இராஜாஜியால் நேரில் வந்து கலந்துகொள்ள இயலவில்லை.

தன்னுடைய சார்பாக, கலைஞர் அவர்களை ஆளுநரிடமிருந்து விருதினைப் பெற்றுத் தமக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் இராஜாஜியின் சார்பில் கலைஞர் விருதினைப் பெற்றார். அக்டோபர் 3 ஆம் தேதி, இராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு மாலை அணிவித்து விருதினை அவரிடம் வழங்கினார். இந்நிகழ்வினை இராஜாஜி வெகுவாகப் பாராட்டினார். முதலமைச்சரே நேரில் சென்று விருதினை வழங்கியது வெகுவாகப் பாராட்டப்பட்டது. அதேபோல், கலைஞர் அவர்களுக்கும் காமராஜர் அவர்களுக்கும் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வேறு யாரையும் விட காமராஜருக்கு அதிக மரியாதை கொடுத்தவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லப்போனால், கலைஞரைக் காமராஜர் பெரிதும் பாராட்டியுள்ளார். தமிழக மக்களை, குறிப்பாக ஏழையெளிய மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் கலைஞர். அவர் "மக்களின் முதலமைச்சர்" என்றழைக்கப்படுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷா அறிமுகம், குடிசை மாற்று வாரியம், திருமண நிதி உதவித் திட்டம், நிலமற்ற ஏழைகளுக்கு இலவச நிலம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், ஏழையெளிய மக்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் அடுப்பு, 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி போன்றவை அவரது புதுமையான திட்டங்கள், ஏழையெளியோரின் முன்னேற்றத்திற்கு

அவர் கொண்டுள்ள அக்கறையைப் பெரிதும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

பொதுவாக அரசியலில் நல்ல கருத்துக்களை, நகைச்சுவை உணர்வுடன், ஞாபக சக்தியுடன், மேடையில் பேசுபவர்கள் வெற்றியடைகிறார்கள். பார்வையாளர்களைக் கவர, பழம்பெரும் இலக்கியங்களிலிருந்து கவிதை வரிகளை, ஒன்றன்பின் ஒன்றாக, நல்ல பேச்சாளர்கள் எடுத்தாள்கின்றனர். அத்தகைய திறமை அரிதாகி விட்டது. இந்த அனைத்துத் தகுதிகளையும் கொண்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்திலும் சட்டமன்றப் பேரவையிலும் மக்களின் பிரதிநிதிகள் செவ்வனே செயலாற்றி வரும் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகத் திகழ்கிறது இந்தியா. கண்ணியத்துடனும், உறுதியுடனும் திகழ்கின்ற ஜனநாயக அமைப்பு இது. நல்ல நிர்வாகத் திறமையும், எளிமையும் கொண்ட கலைஞர் அவர்கள் மக்களின் நம்பிக்கையைப் பெற்று கடந்த 50 ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் அனைத்துச் சட்டமன்றத் தேர்தல்களிலும் அவர் வெற்றி பெற்றுப் பெருமையுறக் காரணமாக இருந்தது. அவருடைய சிறந்த பேச்சு, கவிதைத் திறன், அரசியல் விவேகம், தமிழக மக்களின் உள்ளங்களை வெல்லக் காரணமாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் என அன்போடு அழைக்கப்படும் இவர், தமிழகத்தில் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்து தமிழக மக்களுக்குத் தேவாமிர்தமாகத் திகழ்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எக்காலத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் ஒரு முன்மாதிரியாக இருக்கிறார்.

நாம் பல்வேறு வகையான பொன்விழாக்களைக் கண்டுள்ளோம். சட்டமன்றப் பேரவையில் பொன்விழா கண்ட ஒரே மனிதர், இந்தியாவிலேயே டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டுமே. ஜனநாயக தத்துவத்தைப் பொறுத்தவரை இவர் மாபெரும் சாதுரியம் நிறைந்தவர் என்பதையே இது காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களாட்சியையும் மக்களையும் பொறுத்தவரை, சட்டமன்றப் பேரவையில் தெளிவான விவாதங்கள் நடைபெற்றாக வேண்டும். அதைப் பொறுத்தவரை, கலைஞரின் சேவை மிகவும் பாராட்டுக்குரியது. தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் இவருடைய தொண்டு என்றென்றும் தொடரட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் இருப்பவர்களுக்கும், வளர்ந்து வரும் அரசியல்வாதிகளுக்கும் இவருடைய வாழ்க்கை ஒரு முன்னுதாரணமாகத் திகழட்டும். நல்ல ஆரோக்கியத்துடன் அவர் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன். மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ள அரிய சேவைகளைப் புரிய பல்லாண்டு வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிர்ஷ்டவசமாக, இன்று முதல் விடுதலைப் போரின் 150 ஆவது ஆண்டு விழா நடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவருக்கும், இப்பொன்விழாவிற்கும், சுதந்திர பாரதம், இந்தியாவின் 150 ஆவது ஆண்டு விழாவிற்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

✧ ✧ நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்! ✧ ✧

மாண்புமிகு தமிழக முதல்வர்
கலைஞர் அவர்களின் ஏற்புரை
11-5-2007

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களே, அவை முன்னவரும், என்னுடைய அன்புக்குரியவருமான பேராசிரியர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே வாழ்த்துரை வழங்கி, என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தியுள்ள, உணர்ச்சிவசப்படுத்தியுள்ள சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு. சுதர்சனம் அவர்களே, திரு. கோ.க. மணி அவர்களே, திரு. கோவிந்தசாமி அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்களே, திரு. செல்வம் அவர்களே, வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர்களே, நண்பர்களே!

இன்றையதினம் இந்த அவையிலே என்னுடைய பணியின் 50–வது ஆண்டு பொன்விழா என்ற பெயரால், என்னுடைய உள்ளம் சிலிர்க்க, உடல் சிலிர்க்க உணர்ச்சிவயப்படுகின்ற அளவிற்கு நம்முடைய ஆளுநர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், சட்டமன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றி இருக்கின்றீர்கள். அந்த உரையை வரவேற்று எழுப்பிய கையொலி இத்தனை நாளும் ஒரு பக்கத்திலே கேட்டுக்கொண்டிருந்த கையொலி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று ஒருசேர இருபுறத்திலும் கேட்டு, இப்படியும் எல்லா நாளும் இருக்கக்கூடாதா என்ற ஏக்கப் பெருமூச்சை எனக்கு வரவழைக்கின்ற அளவிற்கு இருந்தது என்பதை நான் மறக்க முடியாது.

நம்முடைய நண்பர் கோவிந்தசாமி பேசும்போது, எண் 11 என்பதைக் குறிப்பிட்டு, 11 ஆம் தேதிதான் இந்த ஆட்சிக்கான அறிகுறி தோன்றி, தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது என்று தேதி 11–ஐக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த விழா நடைபெறுகின்ற நாளும் 11 என்று குறிப்பிட்டார்கள். 11 அதோடு முற்றுப்பெறவில்லை. இந்த அவையிலே உள்ள கட்சிகளுடைய எண்ணிக்கையும் 11 தான். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., சி.பி.எம்., சி.பி.ஐ., ம.தி.மு.க.––வராவிட்டாலும் பெயரைக் குறிப்பிடுவது நல்லது அல்லவா? விடுதலைச் சிறுத்தைகள், தே.மு.தி.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக், புரட்சி பாரதம், ஆக, 11 கட்சிகள் இந்த அவையிலே இடம் பெற்றுள்ள கட்சிகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் 11 தான்.

1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு, தேர்தலிலே நிதி திரட்டியபோது கிடைத்தத் தொகையும் 11 இலட்சம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், சைதாப்பேட்டை தொகுதியில் நிற்கப்போவது யார் தெரியுமா? Mr. 11 இலட்சம் என்று குறிப்பிட்டதும் என்னைத்தான். (மேசையைத்

தட்டும் ஒலி) அந்த 11 இலட்சம் இப்பொழுது உங்களுக்கு நன்றிகூறப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியில் நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருப்பேன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஏனென்றால், 50 ஆண்டுக் கால சட்டமன்ற வாழ்வில், இந்த மன்றத்தை 50 ஆண்டுக் காலமாகப் பார்த்துக்கொண்டிருக்கிற நான், பழைய நினைவுகளையெல்லாம் சேகரிக்கிறேன் நினைவில். அப்படிச் சேகரிக்கும்போது, எனக்கு இங்கே அமர்ந்திருந்த பெருந்தலைவர் காமராஜர் தெரிகிறார், அவரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே அமர்ந்திருந்த பெரியவர் பக்தவச்சலம் தெரிகிறார், வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அமர்ந்திருந்த என் ஆசான் அறிஞர் அண்ணா தெரிகிறார்,(மேசையைத் தட்டும் ஒலி) அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தெரிகிறார், (மேசையைத் தட்டும் ஒலி) அவரை ஆரத் தழுவி அன்பைப் பரிமாறிக் கொண்டு இங்கே பேசுகின்றேன். எத்தனையோ பெரியவர்கள், தலைவர்கள் அலங்கரித்த இடம் இந்த இடம். நான் சிலருடைய பெயரை இங்கே குறிப்பிடாவிட்டாலும்கூட, நேரம் இல்லாத காரணமே தவிர வேறல்ல. அவர்களுக்கெல்லாம் நாம் வணக்கம் செலுத்தி, தொடர்ந்து இந்த அவையிலே ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு இந்த நாளை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேதான் என் எதிரே இருக்கின்ற வள்ளுவருடைய படத்தைப் பார்க்கிறேன். பக்தவச்சலத்தினுடைய நினைவு எனக்கு வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சி வரிசையிலே, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது, நான், இந்தப் படம் மயிலாப்பூரிலே முதன்முதலாக வரையப்பட்டு, அதை வரைந்த நண்பர் இந்தப் படத்தை அரசின் சார்பிலே நீங்கள் வெளியிடலாம் என்று என்னிடத்திலே சொன்னார். அந்தப் படத்தை அறிஞர் அண்ணா சென்று பார்த்தார், பெரியவர் பக்தவச்சலம் பார்த்தார், நாவலர் நெடுஞ்செழியன் பார்த்தார், நம்முடைய பேராசிரியர் அன்பழகனார் பார்த்தார், நான் சென்று பார்த்தேன்; புலவர் பெருமக்கள் எல்லாம் பார்த்தார்கள். அது அரசின் சார்பிலே வெளியிடப்பட்டால் இதுவரையிலே திருவள்ளுவருக்கு என்று ஒரு உருவம் அறுதியிட்டு அடையாளமாகக் காட்டப்படாதிருக்கிற அந்த நிலையை மாற்றலாம் என்ற எண்ணத்தோடு, சட்டமன்றத்திலே நான் ஒருநாள் எழுந்து 'இப்படி ஒரு படம் மயிலாப்பூரிலே ஓர் அருமையான ஓவியரால் தீட்டப்பட்டிருக்கிறது, அந்தப் படத்தை இங்கே சட்டமன்றத்திலே வைப்பீர்களா?' என்று கேட்டேன். ஆனால், பெரியவர் பக்தவச்சலம் அப்போது வைக்கப்படும் என்றோ, முடியாது என்றோ சொல்லாமல் மிகத் தந்திரமாகச் சொன்னார். 'சட்டமன்ற உறுப்பினர், இந்தக் கேள்வியைக் கேட்ட சட்டமன்ற உறுப்பினர் அவருடைய செலவிலே அந்தப் படத்தை இங்கே வைப்பதாக இருந்தால் வைக்கப்படும்' என்று சொன்னார். தயங்காமல் நான் மறுநாளே, 'அதற்கு எவ்வளவு செலவாகும், நேற்று சொன்ன,

முதலமைச்சர் சொன்ன அந்த உறுதியை நான் காப்பாற்றுகிறேன்' என்று கடிதம் எழுதினேன். இவன் வம்புக்காரனாக இருப்பான் போலிருக்கிறது என்று கருதி மறுநாள் பக்தவச்சலமே 'கருணாநிதி வாங்கி அந்தப் படத்தை வைத்தான்' என்று வந்து விடக் கூடாது காங்கிரஸ் ஆட்சியிலே, ஆட்சிக்கு அந்த அவப் பெயர் வந்து விடக் கூடாது என்ற காரணத்தால் அவரே, இங்கே வேணுகோபால் சர்மா தீட்டிய அந்த வள்ளுவர் படம் கருணாநிதி அன்றைக்குக் கேட்டுக்கொண்டாரே அந்த அடிப்படையில் வைக்கப்படும் என்று சொன்னார். அவர் சொன்னபடி அந்தப் படம் இங்கே வைக்கப்பட்டது.

ஆகவே, இங்கே வள்ளுவர் இருப்பதற்குக் காரணம் என்னுடைய கேள்வியும் (மேசையைத் தட்டும் ஒலி) பெரியவர் பக்தவச்சலனார் அவர்களுடைய நல்ல தன்மையும்தான். அதற்குப் பிறகு, இன்றைக்கு வள்ளுவர் எந்த அளவிற்கு தமிழகத்திலே பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறார், எந்த அளவிற்கு அவருடைய உருவங்கள் பரவியிருக்கின்றன, அவருடைய கருத்துகள் எந்த அளவிற்கு இப்போதும் பரப்பப்படுகின்றன என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இந்தச் சட்டமன்றத்திலே வள்ளுவருடைய திருவுருவத்தை பார்த்தவுடன் எனக்கு வந்த நினைவை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை, ஆகவே, சொன்னேன்.

இங்கேதான் பெருந்தலைவர் காமராஜர் எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். அவர் அதிகம் பேசுவது இல்லை; இன்னும் சொல்லப்போனால், பேசுவதேகூட இல்லை. அவருக்குப் பதிலாக சி. சுப்ரமணியம் அவர்கள்தான் பேசுவார்கள். அவர் பேச வேண்டிய கருத்துகளை சி. சுப்ரமணியம், நிதி அமைச்சர் அப்போது அவர்தான் பேசுவார். ஒன்றிரண்டு கருத்துகளை அவர் சொல்லி மற்றவர்கள் பேசுவார்கள்.

ஆனால் ஆட்சியின் சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டிருந்தவர் பெருந்தலைவர் காமராசர் என்பதை நாடறியும்; உலகறியும்; நானிலம் அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இலக்கண, இலக்கியத்தோடெல்லாம் பேசக்கூடியவர் அல்ல. அவர் பேசும் தமிழ் கொச்சையான தமிழாக அப்பொழுது இருக்கும். ஆனால், அந்தக் கொச்சைத் தமிழ் கேட்பதற்கு மேலும் மேலும் நமக்கெல்லாம் எவ்வளவு இச்சையாக இருக்கும் என்பது அந்தக் கருத்துகளில் விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடத்திலேதான் இன்னும் நெருக்கமாக மேசைகள் போடப்பட்டிருக்கும். ஒரு பக்கத்திலே பெருந்தலைவரும், மற்ற அமைச்சர்களும் அமர்ந்திருப்பார்கள். இங்கே அண்ணாவும், நானும், பேராசிரியர், நாவலர் போன்றவர்களெல்லாம் அமர்ந்திருப்போம். ஒரே நேரத்திலே நாங்கள் இங்கே அமர்ந்து இருந்ததில்லை. ஆனால், அண்ணா இருக்கும்போது நான் இங்கே இருந்தேன். அப்போது கல்யாணசுந்தரம் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் இங்கே இருந்தார். யார் யார் பெரியவர்களெல்லாம் இங்கே இருந்தார்கள் என்பதற்காக அவர்களையெல்லாம் நினைவுபடுத்துகின்றேன். அவர் இங்கே இருந்தார். அவர் ஒரு நாள் தமிழ்தான் இங்கே

ஆட்சி மொழியாக வைக்கப்படவேண்டும், ஆங்கிலத்தை அறவே அகற்றவேண்டுமென்று வேக வேகமாகப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது பெருந்தலைவர் காமராசர் என் பக்கமாகக் குனிந்து, கையை அசைத்தார்கள். 'இங்கே கிட்டே வாருங்கள்' என்று. இப்பொழுது சொன்னால் வரமுடியாது. அப்பொழுது மேசை இருந்த நிலையில், அண்ணாவும், நானும் குனிந்து என்னவென்று கேட்டோம். அப்பொழுது தலைவர் காமராசர் சொன்னார், கல்யாணசுந்தரம் பேசுகிறார் என்றால், நீங்களும் தலையாட்டுகிறீர்களே, இது நியாயமா? என்று அவருடைய தமிழிலேயே கேட்டார். உங்களுக்கு நியாயம்தானா என்று நாகரிகமாகக் கேட்டார். புத்தி இருக்கிறதா என்று கேட்கிறமாதிரி இருந்தது. நீங்களும் தலையாட்டுகிறீர்களே என்றார். என்ன என்றார் அண்ணா. ஒன்றுமில்லை, அவர் சொல்கிறாரே, English வேண்டாம், தமிழ்தான் முழுக்க முழுக்க இருக்கவேண்டுமென்று சொல்கிறாரே, தமிழையே முழுக்க வைத்துவிட்டால் என்ன ஆகும்? இப்பொழுது English இருக்கிற இடத்தில் இந்தி வந்து குந்திக்கும் என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியே சொன்னார். இவ்வளவு பெரிய இந்தி எதிர்ப்பாளரைப் போய், நாம் இந்தி ஆதரவாளர் என்று நினைத்தோமே என்று அண்ணா என்னிடத்திலே சொன்னார்.

பிறகு காரில் போகும்போது, அண்ணா முன்வரிசையில் உட்கார்ந்திருக்கிறார். நான் பின்வரிசையில் உட்கார்ந்திருக்கிறேன். கருணாநிதி, காமராசர் பேசியதைக் புரிந்துகொண்டாயா? என்றார் அண்ணா. என்ன அண்ணா என்றேன். எவ்வளவு பெரிய தத்துவத்தை, அதுவும் கொச்சையாக அதுவும் சாதாரண உதாரணத்தில் சொன்னார் பார்த்தாயா? ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால், அங்கே தமிழ் வந்து கொஞ்சி விளையாடாது. அங்கே இந்தி வந்து குந்திக்கும் என்று சொன்னாரே! அதுதான் காமராசர், ஞாபகம் வைத்துக்கொள் என்று அண்ணா சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரு ரகசியத்தை உணர்வதற்கு இந்தச் சபை எனக்கு ஒரு காலத்திலே வாய்ப்பாக இருந்தது.

என்னுடைய பேச்சு, நான் குளித்தலை தொகுதியிலே வெற்றி பெற்று இங்கே முதன்முதலாக வந்து அமர்ந்தபோது 170–வது இடமோ, 171–வது இடமோ தெரியவில்லை. இங்கே பின்னால்தான் அமர்ந்திருந்தேன். முன்வரிசையில் அண்ணா, வி.கே. இராமசாமி முதலியார் போன்றவர்கள் எல்லாம் அமர்ந்திருப்பார்கள்.

நான் பேசிய பேச்சு, முதல் பேச்சு, கன்னிப் பேச்சு, என்னுடைய தொகுதியிலுள்ள நங்கவரம் பண்ணையைப் பற்றியது. 'கையேர் வாரம், மாட்டேர் வாரம்' என்ற ஒரு பிரச்சினை பற்றியது. 'மாட்டேர் வாரம்' என்றால்–உழவர்கள், அவர்களே ஏர் எடுத்துக்கொண்டு சென்று, மாடும் ஓட்டிக்கொண்டு சென்று, அவர்களே அங்கே பணியாற்றி, மிராசுதாரர்களுக்கு உதவினால், அதற்குப் பெயர் மாட்டேர் வாரம்–உழவர் மாத்திரம் அங்கே போய், பண்ணையார் மாடும் கொடுத்து, ஏரும் கொடுத்து, கலப்பையும் கொடுத்து அங்கே உழுதால், அதற்குப் பெயர் கையேர் வாரம். வெறும் கையோடுதான் போவார்கள். அதனால்

கையேர் வாரம். மாடும் மற்ற பொருட்களும் கொடுத்தால் அது மாட்டேர் வாரம். அதில் கையேர் வாரத்திற்குள்ள கூலி என்ன, மாட்டேர் வாரத்திற்குள்ள கூலி என்ன என்பதிலே பெரிய வித்தியாசம் இருந்தது. வித்தியாசத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காகப் போராட்டம் நடக்கிறது. அப்பொழுது நாங்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்துதான் நங்கவரத்திலே அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தோம்.

கேள்விப்பட்டிருப்பீர்கள், "நாடு பாதி, நங்கவரம் பாதி" என்று. அவ்வளவு பெரிய பண்ணை அது. அங்கே அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். நாங்கள் அசெம்பிளிக்கு வரவேண்டிய நாள் அன்று. காலையில் என்னுடைய வீட்டிலே எம்.எல்.ஏ.–களுக்கெல்லாம் விருந்து. முதன்முதலாக சட்டமன்றத்திற்கு வரப் போகிறோம். அதனால் வீட்டில் விருந்து. அண்ணா இருக்கின்றார். நாவலர் அப்பொழுது அசெம்பிளிக்கு வர முடியவில்லை. காரணம், அவர் சேலத்திலே வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டார். நம்முடைய பேராசிரியர் இருக்கிறார்; எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்பொழுது நாவலர் கேட்டார், "என்னய்யா கையேர் வாரம், மாட்டேர் வாரம் என்று சும்மா, சும்மா சொல்லுகின்றீர்களே! அது என்ன?" என்று கேட்டார். நான் அதை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

ஒரு பத்து நிமிடமாக நான் சொல்ல, சொல்ல, அவரும் தோண்டித் தோண்டிக் கேட்டார். நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். இதைத் தொலைவிலே உட்கார்ந்திருந்த அண்ணா கவனித்தார். கவனித்துவிட்டு, நாவலரைக் கூப்பிட்டு "நெடுஞ்செழியன், கருணாநிதி உனக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறாயா? இல்லை, அவன் இன்றைக்குப் பேசப் போகிறான், உன்னிடம் ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்று சொன்னார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் சொல்கிறேன் என்றால், நீங்களும் இப்படி ஒத்திகை பார்த்துவிட்டு வந்து பேச வேண்டும். அதற்கு நானே உதாரணமாக அன்றைக்கு இருந்திருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் நான் அதை நினைவூட்டினேன்.

இப்படி ஒரு வேடிக்கையையும் சொல்லவேண்டும்; அது இந்த அசெம்பிளியில் நடந்தது. கிருஷ்ணா ராவ் பேரவைத் தலைவராக இருந்தார். அவருக்குத் தமிழ் அதிகம் வராது. மழலைக் குரலிலே பேசுவார். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவார். பெரிய மனிதர், மேதை, ரொம்ப நல்லவர். அண்ணாவிடத்திலே, எங்களிடத்தில் எல்லாம் மிகுந்த அன்பு கொண்டவர். ஒரு நாள் சேலத்து காங்கிரஸ் உறுப்பினர் பேசினார்.

சேலத்து காங்கிரஸ் உறுப்பினர் என்றால் எங்களுக்கெல்லாம் கோபம். ஏனென்றால் நாவலரைத் தோற்கடித்தவர் அவர். மாரியப்பன் என்று பெயர். கொஞ்சம் வித்தியாசத்தில், 200 ஓட்டிலே நாவலரைத் தோற்கடித்தவர். அந்தக் கடைசியிலேதான் அவர் உட்கார்ந்திருந்தார். இலக்கிய சர்ச்சை ஒரு நாள் பேச்சிலே வந்தபோது,

மாரியப்பன் எழுந்திருந்து, எங்களுக்குப் பதில் சொல்வதாகக் கருதிக் கொண்டு–அவருக்கு இந்த லகர, ளகரம் சரியாக வராது–''திருவல்லுவரை எடுத்துக் கொல்லுங்கள், கம்பரை எடுத்துக் கொல்லுங்கள்'' என்று சொன்னார். நான் இதுதான் சமயம் என்று பார்த்து, அவர் மேலே உள்ள கோபத்திலே, ''அவைத் தலைவர் அவர்களே!'' என்று கிருஷ்ணா ராவ் அவர்களைப் பார்த்து கேட்டேன். என்ன என்றார் அவர். ''இந்த அவையிலே பலாத்காரமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாமா? இது Point of Order–க்கு உட்பட்டதல்லவா? Parliamentary வார்த்தையா?'' என்றேன். ''No, No, No.'' என்று திரு. கிருஷ்ணா ராவ் சொல்லிவிட்டு, ''Mr. Mariappan, ஜாக்கிரதையாகப் பேசுங்கள். அது பலாத்காரமான வார்த்தை, அதைப் பயன்படுத்தாதீர்கள்'' என்று சொன்னார். (சிரிப்பு)

இப்படியெல்லாம் நடைபெற்ற வேடிக்கைகளை, விளையாட்டுகளை, தமாஷ்களை எல்லாம் நான் இங்கே எண்ணிப் பார்க்கிறேன். அதேநேரத்தில் அவர்கள் எல்லாம் இப்போது இல்லையே!. பேராசிரியர் பேசும்போதும் சொன்னார்கள். இதையெல்லாம் பார்க்க, ரசிக்க அண்ணா இல்லையே என்று சொன்னார்கள்.

அம்மா இல்லை என்ற கவலையைவிட, அண்ணா இல்லையென்ற கவலை எனக்குப் பெருங்கவலை என்பதை அவரும் அறிவார், எல்லோரும் அறிவார்கள். ஆனால் எல்லா கவலைகளையும் போக்குகின்ற அளவிற்கு, அந்தக் கவலைகளையெல்லாம் தீர்க்கின்ற அளவிற்கு, அதற்கெல்லாம் பரிகாரமாக நீங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள் என்ற ஒரே ஒரு ஆறுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) உங்களோடு கூட நான் இருக்கிறேன். நீங்கள் இட்ட கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து இந்த நாட்டை வாழ வைக்க, இந்தச் சமுதாயத்தை முன்னேற்ற பாடுபட இன்றைக்குச் சூளுரை மேற்கொள்வோம்.

அதுதான் இந்த நாளில் நீங்கள் என்னைப் பாராட்டி, ஊக்கப்படுத்திய இந்த விழாவில் நாம் எடுத்துக்கொள்கின்ற சூளுரை என்று குறிப்பிட்டு, இந்தச் சூளுரையையே என்னுடைய ஏற்புரையாகக் கருத வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமைகிறேன். நன்றி. வணக்கம்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாண்புமிகு மக்களவைத் தலைவர்
சோம்நாத் சட்டர்ஜி அவர்களின் சிறப்புரை

12-5-2007

மிகுந்த மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி அவர்களே! மாண்புமிகு தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு ஆந்திர மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு புதுச்சேரி சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே! மாண்புமிகு உறுப்பினர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! எல்லோருக்கும் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக சட்டமன்றப் பேரவையில் பொன்விழா காணும் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவைக் கட்சிகளுடன் நீண்ட நாள் உறவைப் பாராட்டும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் பெருமைப்படுகிறேன். தமிழ்நாடு சட்டமன்றக் கட்டடம் என்ற இந்திய ஜனநாயகத்தின் புனிதமான இடத்தில் நான் பேசுவது பெருமையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கருணாநிதி அவர்கள் ஐம்பது ஆண்டு காலம் தொடர்பு கொண்ட மாமன்றம் இது. நாம் அனைவரும் பின்பற்றும் வகையில் நமக்கு முன்மாதிரியாக இவர் திகழ்கின்றார். இங்கு கூடியுள்ள இளைஞர்கள் மற்றும் முதியோர்களைப் போல எனக்கும் உத்வேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த அரிய சாதனை நிகழ்த்திய எனது அருமை நண்பர் டாக்டர் கருணாநிதி அவர்களை மனதார வாழ்த்துகிறேன். நண்பர்களே! தமிழக அரசியலிலும், தேசிய அரசியலிலும் முக்கியப் பங்காற்றிய தலைசிறந்த தலைவர் அவர்களின் வாழ்வில் இது ஒரு முக்கியமான விழாவாகும். தமிழக சட்டமன்றப் பேரவைக்கு 11 முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற தன்னிகரற்ற பெருமையைப் பெற்றவர் டாக்டர் கருணாநிதி அவர்கள். நான் பத்து முறைதான் வெற்றி பெற்றுள்ளேன். அவருடைய வெற்றியை நான் அடைய முடியாது. இது 1980 ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற மேலவை உறுப்பினராக அவர் இருந்ததைத் தவிர்த்து நிகழ்த்தப்பட்ட சாதனை ஆகும். இத்தனை ஆண்டுகள் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருப்பது ஒரு குறிப்பிடத்தகுந்த சாதனையாகும். இது மக்களிடையே இவருக்கு இருக்கும் மிகுந்த மரியாதையைக் காட்டுகிறது. முன்னேறி வருகின்ற மாநிலத்தில் அவருக்கு இருக்கும் செல்வாக்கையும் இம்மாநிலத்தின் விரைவான வளர்ச்சியில் அவருக்கு இருந்த முக்கியப் பங்களிப்பையும் இது காட்டுகிறது.

அவருடைய புகழ் குறிப்பிட்ட எந்த ஒரு பகுதிக்கோ, சட்டமன்றத் தொகுதிக்கோ

உட்பட்டதல்ல. உண்மையில், இந்த மாநிலமும், நாடு முழுவதுமே அவருடைய தளமாக விளங்குகிறது. அவருடைய தேர்தல் சாதனைகள் வெளிப்படுத்துவது என்னவென்றால், அவர் எந்தத் தொகுதியைத் தேர்ந்தெடுத்தாலும் மக்கள் அவர்மீது நம்பிக்கை வைத்துத் தங்கள் தொகுதியின் பிரதிநிதியாக அனுப்பி வைத்துள்ளனர். இது ஒரு தன்னிகரற்ற சிறப்பும் மரியாதையும் ஆகும்.

அவருடைய நீண்ட நாள் சட்டமன்றப் பணியில் ஆளுங்கட்சி உறுப்பினராகவும், எதிர்க்கட்சி உறுப்பினராகவும் பணியாற்றி, பல்வேறு புயல்களையும், அலைகளையும் சந்தித்து உள்ளார். இந்த மாநிலத்தில் முதலமைச்சராக ஐந்து முறைகள் இவர் பதவி வகிப்பதே ஒரு குறிப்பிடத்தகுந்த சாதனையாகும். என்னுடைய தலைவரும், அவருடைய நல்ல நண்பருமான திரு. ஜோதிபாசு அவர்களின் சாதனையை இவர் எட்டிப் பிடித்துள்ளார். இவ்வாறு இவர் சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் அதற்கு மேலாகத் தம் நண்பர்களுடன் 1949 இல் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தன்னிகரற்ற தலைவராகவும் விளங்கி முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ளார். இவ்வாறு பல்வேறு பொறுப்புகளைச் சிறப்பாக நிறைவேற்றித் தன்னுடைய பொது வாழ்விற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

முற்போக்கான கடுமையான உழைப்பாளிகள் நிறைந்த முன்னேறி வரும் மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மிகுந்த பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். திரு. கருணாநிதி அவர்களைப் பொறுத்தவரை மிகச் சிறந்த தலைவர் ஆகவும், தீர்வுகளை வழங்குபவராகவும் விளங்குகிறார்.

சட்டமன்ற உறுப்பினராக அவர் ஆற்றிய பணி, அவருடைய தொகுதி மக்களிடையே மட்டுமின்றி, பொது மக்களிடமிருந்தும் மிகப் பெரிய ஆதரவைப் பெற்றுத் தந்தது. மக்களிடையே அவர் பெற்று வந்த நம்பிக்கையைத் தக்க வைத்துக்கொள்ள எல்லாத் தடைகளையும் அவர் வெற்றி கண்டுள்ளார். இது அவருடைய ஆளுமைத் தன்மையையும், மக்களிடையே அவருடைய ஈடுபாட்டையும் காட்டுகிறது.

திரு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கையானது, சேவை மனப்பான்மை, அர்ப்பணிக்கும் தன்மை, எப்பொழுதும் மக்கள் தம்மை அணுகும் தன்மை, மக்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்பது, தானே முன்வந்து மக்களுடைய குறைகளைத் தீர்த்து வைப்பது ஆகிய தன்மைகளுக்கு உதாரணமாகத் திகழ்கிறது. அரசியல் வாழ்வில் உச்ச கட்ட வெற்றியை அடைந்த காலத்திலும் தெருவில் செல்லும் மக்களின் தொடர்பை அவர் விட்டுவிடவில்லை. கட்சியின் கடைசித் தொண்டனுடனும் அவர் நெருங்கிய தொடர்பு

வைத்துள்ளார். அவர்களுக்காக, குறிப்பாக ஏழைகளுக்கும் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் போராடி வருகிறார்.

கட்சியின் தலைவராக கடந்த நாற்பது ஆண்டுகளாக அவர் புரிந்த சாதனை மிகுந்த மரியாதைக்குரியது. கட்சியின் தலைவர்களுக்கும் அவருடைய தலைமுறையின் தொண்டர்களுக்கும் தற்போதைய தலைமுறையின் தொண்டர்களுக்கும் உண்மையான பாலமாக விளங்குகிறார். பொது வாழ்க்கைக்கு வரும் இளைஞர்களுக்கும், முதியோர்களுக்கும் இவர் வழிகாட்டியாகத் திகழ்கிறார். டாக்டர் கருணாநிதி அவர்களின் இடைவிடாத முயற்சியே தமிழகத்தில் இப்போதுள்ள அரசியல் விழிப்புணர்வுக்கும், ஆரோக்கியமான அரசியல் கலாச்சாரத்திற்கும் மக்களின் அறிவிற்கும், முதிர்ச்சிக்கும், பொறுப்புணர்ச்சிக்கும் காரணமாகும். அத்தகைய சிறப்புத் தலைமையின்கீழ், மாநில மற்றும் இந்திய முன்னேற்றத்திற்கு இம்மாநில மக்கள் சிறந்த பங்களிப்பை அளித்து வருகிறார்கள்.

தமிழக மக்களின் உள்ளங்களில் டாக்டர் கருணாநிதி அவர்களுக்குப் பொது மக்களைக் கவர்ந்த தலைவர் என்ற சிறப்பான இடம் உண்டு. கருணையுடன் பொது நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் தன்மை வாய்ந்த இவர், சில கொள்கைகளுக்காகவும், இலட்சியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அதற்குத் தீங்கு வரும்போது, எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பவர். இவருடைய வாழ்வு தியாக உணர்வையும் கொள்கை உறுதியையும் கொண்டு அடித்தட்டு மக்கள்மீது அவர் கொண்ட அன்பின் சின்னமாக விளங்குகிறது. கடந்த 35 ஆண்டுகளில் 5 முறை முதலமைச்சராக விளங்கி சமூக பொருளாதாரப் புரட்சிகளைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், புதிய சமூக சீர்திருத்தத் திட்டங்களையும், முன்னோடிச் சட்டங்களை இயற்றியது மூலமாகவும் நவீன தமிழகத்திற்கு அடித்தளம் அமைத்துள்ளார். இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மாநிலத்தில் பிற்பட்டோர் நல ஆணையம் அமைத்த பெருமை திரு. கருணாநிதி அவர்களையே சாரும். ஏழைகளுக்கும், அடித்தட்டு மக்களுக்கும் உள்ள பிரச்சினைகளைக் கவனிப்பதற்காக 1989 ஆம் ஆண்டே தனி அமைச்சகம் அமைத்துள்ளார். அவருடைய தொலைநோக்குப் பார்வை மற்றும் புத்தி கூர்மை காரணமாக, பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க, பாராட்டத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் கருணாநிதி அவர்களின் வளர்ச்சி மாதிரி என்பது மதச்சார்பின்மை, முன்னேறி வரும் சமுதாயம் மற்றும் தேசிய அம்சங்கள் கொண்டதாகும். அவர் அரசியலை, சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவிடும் கருவியாகவே பார்த்தார். நலிந்த பிரிவினரை மேம்படுத்த வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். அவர்களே, அவர்களைப் பாதுகாத்துக்கொள்ளட்டும் என்று அரசு வெறுமனே விட்டுவிட முடியாது என்று கருதுபவர். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக அநேகத்

திட்டங்களை முன்மொழிந்துள்ளார். கண்ணொளி வழங்கும் திட்டம், இலவச அறுவை சிகிச்சை, கை ரிக்ஷாக்களை ஒழித்து புதிய சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குதல், நிலமற்ற விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குதல், பெண்களுக்கு இலவசக் கல்வி, ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதியுதவி ஆகியவை ஏழை மக்கள் மற்றும் பெண்களுக்காக அவர் கொண்டு வந்த சில திட்டங்களாகும். அனைத்து மாநிலங்களும் இந்தத் திட்டங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள், ஏழைகளுக்கு மானியத்துடன்கூடிய உணவுப் பொருட்கள், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு மற்றும் அடுப்பு, பிச்சைக்காரர் மறுவாழ்வு ஆகியவை இவர் ஏழைகளுக்காகக் கொண்டு வந்த சில திட்டங்களாகும். ஒரு சட்டமன்ற உறுப்பினராகவும், நிர்வாகியாகவும், ஏழை மக்களின் நலனுக்காகவும் அவர்களுடைய சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு திரு. கருணாநிதி பெரும் பங்கு ஆற்றி வருகிறார். சமதர்ம சமுதாயத்தை நிறுவுவதற்கு இவையெல்லாம் அடிப்படைத் தேவைகள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பேரறிஞர் அண்ணா வழியில் நின்று தம்முடைய எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றல்மூலம் திராவிட இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கைகளை நாடு முழுவதும் பரப்பினார். மிகுந்த முனைப்போடும், அர்ப்பணிப்போடும் சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருகிறார். சமுதாய முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்ட தலைவர் என்ற முறையில் இந்துக் கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை உறுதி செய்தார். சமூக சீர்திருத்தவாதி என்ற முறையில், வகுப்பு பேதமற்ற, சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் இவர் ஆற்றிய பங்கு என்றென்றும் நினைவுகொள்ளத்தக்கதாகும்.

கூட்டணி அரசுக்கும், கூட்டாட்சித் தத்துவத்திற்கும் டாக்டர் கருணாநிதி அவர்கள் பெரும் பங்காற்றி உள்ளார். வலிமையான மாநிலங்களே வலிமையான மைய அரசை உருவாக்க முடியும் என்பதை உறுதியாகக் கூறினார். தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்குப் பாதிப்பு இல்லாமல் மாநில உரிமைகளுக்குப் போராடுவதன்மூலம் கூட்டாட்சித் தத்துவத்திற்கு வலிமை சேர்த்துள்ளார். நம்மைப்போலப் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட சமுதாயத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது என்பது அரசியல் மற்றும் பொருளாதாரத் தேவையாகும். இதுகுறித்து 1972 ஆம் ஆண்டு மே மாதம் தேசிய வளர்ச்சிக் குழுமக் கூட்டத்தில் அவர் பேசியதை இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

“நவீன பொருளாதாரப் பிரச்சினைகளை நம்மைப் போன்ற பெரிய நாடுகள் தீர்க்க வேண்டுமானால் அதிகாரப் பகிர்வு என்பது மிகவும் தேவையான ஒன்றாகும். இந்தச் சூழ்நிலையில்தான் நம்முடைய மாநில சுய ஆட்சிக் கோரிக்கை புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும். நாட்டின் வளங்களை மேலும் திறமையாக நிர்வகிக்கவும் முக்கியப் பிரச்சினைகளில் மைய அரசை மேலும் வலுவுள்ளதாக ஆக்கவும்

மக்களுடைய குறைந்தபட்சக் கோரிக்கைகளை விரைவாகவும் மிகவும் திறமையாகவும் தீர்த்து வைக்க முயலும் வழியாகவே இதைக் கருத வேண்டும்.''

இக்கருத்துக்கள் அவருடைய தொலைநோக்குப் பார்வையையும் நமது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் காட்டுகிறது. தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் டாக்டர் கருணாநிதி. மாநில சுயாட்சி தொடர்பாக தமிழக அரசு நியமித்த இராஜமன்னார் குழு குறித்து அரசின் கருத்தை 16-4-1974 அன்று சட்டமன்றப் பேரவையில் கவிதையாக இவர் வடித்ததை நினைவுகூர்கிறேன்:

''இந்திய தேசியக் கொடி சூரிய ஒளியில் பட்டொளி வீசிப் பறக்கிறது. கொடியின் கம்பீரத்தை அனுபவிக்க நாம் மேகங்களுக்கு அப்பாலும் நமது விழிகளை வானுயர உயர்த்தியிருக்கிறோம். வங்கத்தின் தங்கக் குரலாம் தாகூர் பாடிய தேசிய கீதத்தை நாம் கேட்கிறோம். குற்றால அருவியின் மெல்லிய இசைபோல தேசிய கீதத்தின் இனிமையான நாதம் நமது காதுகளில் ரீங்காரமிடுகிறது. ஆம்! ஆங்கிலேயரின் அடிமைத்தனத்திலிருந்து நாடு விழித்துக்கொண்டது. நம்மைக் கம்பீரமாகப் பார்க்க வைத்த விடுதலைப் போராட்ட வரலாறு என்னும் காவியம் உலக வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.'' உண்மையில் நமது நாட்டின் புலமைமிக்க தலைவராக இவர் விளங்குகிறார்.

நண்பர்களே! டாக்டர் கருணாநிதி ஒரு பன்முகத் தன்மை கொண்டவர். இவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளர். சிறந்த திரைக்கதை ஆசிரியர், நகைச்சுவையும் பொருளும் கலந்த முழுமையான பேச்சாளர். கவிதை, நாடகம், புதினம், சிறுகதைகள் மற்றும் திரைப்படங்கள் மூலமாக தமிழ் இலக்கியத்திற்குப் பெரும் தொண்டாற்றியவர். ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அவர்களைச் சுரண்டும் கட்டமைப்பிற்கு எதிரான பலமான ஆயுதமாக டாக்டர் கருணாநிதி இலக்கியத்தைப் பயன்படுத்தியுள்ளார். மாக்சிம் கார்க்கியின் புகழ்மிக்க காவியம் 'Mother' (தாய்)-ன் திரு. கருணாநிதியின் தமிழ்க் கவிதை வடிவின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பு மக்களவைத் தலைவராகப் பதவியேற்றபின் எனக்குக் கிடைத்தது. அதைத் தொடர்ந்து 2005 ஆகஸ்டில் அப்புத்தகத்தை வெளியிடும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இந்நூலைப் படிப்பது ஓர் அருமையான அனுபவம் ஆகும். மேலும், பல கருணாநிதிகளை நாம் பெற வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். மக்களிடையே ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் மொழியிலும், இலக்கியத்திலும் அவர் பெற்றிருந்த ஆற்றல் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியது. அவர் இதுவரை 10,000-க்கும் மேற்பட்ட பொதுக் கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பேசியுள்ளார் எனக் கேள்விப்பட்டேன். ஆனால், என்னைப்போல அவர் தன்னுடைய குரலை இழக்கவில்லை. இந்தப் புனிதமான தமிழக சட்டமன்றப் பேரவையில் பல்வேறு பொருள்கள் தொடர்பாக

டாக்டர் கருணாநிதி ஆற்றிய உரை எப்பொழுதும் எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

பல ஆண்டுகளாக, இவர் பெற்ற எண்ணற்ற விருதுகளும், பட்டங்களும், அவரது அறிவாற்றல், பயிற்சி, நாட்டில் இவருக்குள்ள அன்பு மற்றும் மரியாதை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆனால், இந்த விருதுகளையும், மரியாதைகளையும் தாண்டி கருணாநிதி என்ற தனி மனிதர், அவருடைய மக்களுக்குக் கலைஞராக, மக்கள் தலைவராக, ஏழை மற்றும் தொழிலாளிகளின் நண்பனாக, தலைசிறந்த பேச்சாளராக, தேசியப் பண்புகளின் பாதுகாவலனாக, வளர்ச்சியின் தோழனாக, அரசியல் கொள்கைகள் மற்றும் அரசியல் தேர்தல் அறிக்கைகளை எல்லாம் தாண்டி மிகுந்த மரியாதையைப் பெறுகின்ற தலைவராகத் திகழ்கின்றார்.

ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருப்பது கௌரவத்திற்கும், மரியாதைக்கும் உரியது. அத்துடன் சில உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக மக்களுடைய ஆசைகள் சட்டமன்றப் பேரவையில் எதிரொலிக்கின்றன. நம்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அவர்களுக்கு உண்மையாக நம்மை அர்ப்பணிப்பது மூலம் நியாயப்படுத்தவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் ஜனநாயக ஜோதியைக் கொழுந்து விட்டு எரியச் செய்யவேண்டிய சவாலான பணி நமக்குண்டு. அத்தகைய மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் சிறந்த உதாரணமாக திரு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கை திகழ்கிறது.

நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் மிகவும் சிறந்த வழி என்று பாராளுமன்ற ஜனநாயகத்தை, நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தை வகுத்தவர்கள் தீர்மானித்து உள்ளார்கள். இந்த முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள் முக்கிய அமைப்பாகும். மக்களுடைய பிரதிநிதிகள் தங்களுடைய கடமைகளை நேர்மையாகவும், அர்ப்பணிப்புத் தன்மையுடனும் நிறைவேற்றுவார்கள் என்று மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால், சமீப காலமாக நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் விதம் குறித்து மக்கள் விரக்தி அடைந்துள்ளார்கள். இது நமது அரசியல் அமைப்பின் அடித்தளத்தையே மிகவும் பலவீனமாக்குகிறது– அரசியல் அமைப்பையே பலவீனமாக்குகிறது. இந்த நாட்டில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் நான் தன்னடக்கத்துடன் கேட்டுக்கொள்வது இந்த அமைப்பை உறுதிப்படுத்த அவர்கள் நடந்து கொள்கிறார்களா? இல்லையா? என அவர்களே சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்பதுதான். உண்மையான எஜமானர்களாக விளங்கும் மக்களை அவர்கள் மதிக்கிறார்களா என்று ஆராய வேண்டும். ஒரு சட்டமன்ற உறுப்பினரின் நடத்தை, நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு டாக்டர் கருணாநிதியின் வாழ்க்கை சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

நண்பர்களே! மாண்புமிகு முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் அவருடைய பல சாதனைகளுக்காக மதிக்கப்படுகிறார்,

வணங்கப்படுகிறார். அவருடைய பொதுச் சேவையைப் பாராட்டித் தமிழக மக்களும், நாடும் மிகுந்த மரியாதையைச் செலுத்தி வருகிறது. தேசிய வாழ்க்கைக்கு அவருடைய பன்முகப் பங்களிப்பு, அவர் வாழ்நாளிலேயே ஒரு ஜாம்பவானாகத் திகழச் செய்தது. வேறு எதையும்விட அவர், மக்களின் ஆசைகளையும், அபிலாசைகளையும் இம்மாமன்றத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி எதிரொலித்ததன்மூலம் ஓர் உண்மையான மக்கள் தலைவராகத் திகழ்கிறார். இந்த அற்புதமான சந்தர்ப்பத்தில் தலைசிறந்த மக்கள் தலைவரை உங்களோடு நானும் சேர்ந்து வாழ்த்துகிறேன்.

இத்தகைய எண்ணங்களுடன் திரு. கருணாநிதி அவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் பன்னெடுங்காலம் இந்த நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாண்புமிகு தமிழக முதல்வர்
கலைஞர் அவர்களின் ஏற்புரை
12-5-2007

சட்டப் பேரவையில் நான் ஆற்றிய பணிகளுக்கான பொன்விழா நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வந்துள்ள நாடாளுமன்றத்தின் மதிப்புமிகு அவைத் தலைவர், அமைதியை உருவாக்கும் தலைவர் (சிரிப்பு), அமளிகளை அடக்கும் தலைவர் (பலத்த சிரிப்பு) திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களே!

வரவேற்புரையாற்றிய மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் அவர்களே, அவை முன்னவர் என் அன்புக்கினிய ஆருயிர் சகோதரர், பேராசிரியப் பெருந்தகை அன்பழகனார் அவர்களே!

ஆந்திர மாநிலச் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புதுவை மாநிலச் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே!

வருகை தந்துள்ள மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் உங்களுடைய காலடிகளிலே குவிக்கின்றேன்.

இந்த இனிய விழாவை, மணமிக்க விழாவை, எழில் பொதிந்த விழாவை, கடந்த இரண்டு நாட்களாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, நான் முதலிலே தடுத்தும்கூட, என்னை ஓரம் தள்ளிவிட்டு, ஒப்பற்ற முறையில் இந்தப் பொன் விழாவை நடத்தியே தீருவோம் என்று என்னிடத்திலே சூளுரைத்து, நடத்திய பிறகு சொல்லுங்கள், எப்படி நடத்தினோம் என்று–என்னிடத்திலே அறைகூவல் விடுத்து–அந்த அறைகூவலிலே வெற்றி பெற்றிருக்கின்ற விழாக் குழுவினர்களான–விழாக் குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களே, ஆற்காடு வீராசாமி அவர்களே, சுதர்சனம் அவர்களே, ஜி.கே. மணி அவர்களே, பீட்டர் அல்போன்ஸ் அவர்களே, கோ.சி. மணி அவர்களே, வீரபாண்டி ஆறுமுகம் அவர்களே, துரைமுருகன் அவர்களே, சி. கோவிந்தசாமி அவர்களே, சிவபுண்ணியம் அவர்களே, மலர்க் குழுவிற்குப் பொறுப்பேற்று, அதை மகத்தான முறையிலே வெளியிட்டு, வழங்கியுள்ள பொன்முடி அவர்களே, எ.வ. வேலு அவர்களே, செல்வபெருந்தகை அவர்களே, வெளிப்புறத்திலும், நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கும் ஏற்பாடுகளைக் கவனித்து, பாழ்பட்டுக்கிடந்த அந்த நிலத்தை, பசுமை நிறைந்த ஓர் இடமாக மாற்றியமைத்துள்ள வடசென்னை பலராமன் அவர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர் சட்டர்ஜி அவர்கள், நான் எந்த அளவிற்கு இந்த மாமன்றத்திலே பணியாற்றியிருக்கிறேன் – இந்த மாமன்றத்தை ஒரு பாசறையாகக்கொண்டு, எந்த அளவிற்குத் தமிழ் நிலத்திலே தொண்டு தொடர்ந்திருக்கிறேன், இந்த ஐம்பதாண்டு காலம் என்பதை அவருக்கே உரிய பாச உணர்வோடு, அவருக்கே உரிய கொள்கை உறுதியோடு இங்கே எடுத்துச்சொல்லி, என்னை வாழ்த்தியிருக்கிறார்கள்.

நேற்றையதினம் இந்திய அரசின் காவலர்களாக உள்ள பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், அங்கே நடைபெறுகின்ற அரசுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களும் என்னைப் பொதுக் கூட்டத்திலே பலபட வாழ்த்திப் பாராட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்த மாமன்றத்தில் சட்டமன்றத்திலே ஆளுநர் ஒருநாள் அமர்ந்து, உங்களையெல்லாம் வாழ்த்திப் பாராட்டியது போதாது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலோ என்னவோ, இந்தியாவே, நாடாளுமன்றமே வாழ்த்துகிறது– சட்டமன்றம் இங்கிருந்து வாழ்த்தியது, நாடாளுமன்றம் வந்து வாழ்த்தியது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முறையிலே நம்முடைய பெருந்தகை சட்டர்ஜி அவர்கள் என்னை வாழ்த்தியிருக்கிறார்கள்.

நான் என்னால் இயன்ற அளவிற்கு, என்னுடைய அமைச்சரவை சகாக்களை துணைகொண்டு, இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்த எல்லா கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் துணைகொண்டு ஆற்றிய காரியங்களை, நான் ஆற்றியதாகவே இங்கு என்னைச் சிறப்பிப்பதற்காக, இந்த ஐம்பதாண்டு காலத்திலே ஆற்றினேன் என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும்கூட, பொன்விழா நடைபெறுகிறது, இவைகளையாவது சொல்லித்தானே ஆகவேண்டும் என்ற முறையிலே சொல்கிறான் என்ற அளவிலே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், ஆமாம், நான்தான் இந்தக் காரியங்களை ஆற்றினேன், வேறு யாரால் இதை ஆற்ற முடியும் என்று சொல்லுகின்ற வீம்பு, வீராப்பு, ஆணவம், அகம்பாவம் எனக்கு ஏற்பட்டதும் இல்லை, ஏற்படப் போவதும் இல்லை. அதற்குக் காரணம், என்னை ஆளாக்கிய தந்தை பெரியாரும், வழி நடத்திய பேரறிஞர் அண்ணாவும் அந்தப் பாடத்தை எனக்குக் கற்றுத் தரவில்லை. எனவே, அவர்களுடைய வழியில் ஐம்பதாண்டு காலம், சட்டமன்றப் பொது வாழ்க்கையை நான் நடத்தியிருக்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலேதான், சுயமரியாதை திருமணச் சட்டம் உருவாயிற்று. சுய மரியாதை திருமணங்கள் பல ஆண்டு காலம் சட்டரீதியாக நடைபெறாவிட்டாலும், தந்தை பெரியாருடைய கொள்கையை, அவருடைய ஆணைக்கிணங்க சுயமரியாதைக்காரர்கள் தங்களுடைய வீடுகளிலே திருமணங்களை சுயமரியாதை

முறையிலே நடத்திக்கொண்டார்கள் என்றாலுங்கூட, அதற்கு நான் சட்ட சம்மதம் பெற்றுத் தருகிறேன் என்று சபதம் செய்து ஆட்சியைக் கைப்பற்றி இந்த ஆட்சிப் பொறுப்பிலே வந்து அமர்ந்த அண்ணா அவர்கள், சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட வடிவம் தந்ததும் இந்த அவையிலேதான் என்பதை நான் சட்டர்ஜி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

நான் ஏன் இதை ஞாபகப்படுத்துகிறேன் என்றால்–தம்பி டி.ஆர். பாலு அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு சட்டர்ஜி அவர்கள் ஒருமுறை வந்தபோது இது பற்றிக் கூறியிருக்கிறேன். இப்படி இந்தத் திருமணம் மாத்திரம் சுயமரியாதை திருமணம் அல்ல, இதுபோல இந்தியா முழுவதும் நடைபெற வேண்டும், சுயமரியாதைக் கொள்கையின்படி நடைபெறுகின்ற இந்தச் சீர்திருத்தத் திருமணங்கள் அகில இந்திய அளவிலே நடைபெறுவதற்கு தாங்கள் வழிசெய்ய வேண்டும் என்று நான் நம்முடைய சட்டர்ஜி அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மறந்திருக்க மாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன். எனவேதான், ஒருவேளை மறந்திருந்தால் அதை நடத்துவதற்கு அவர்கள் தூண்டுகோலாக அமைவார்கள் என்று இங்கே நான் இந்த அவையிலே, இந்தப் பாராட்டு விழாவிலே நான் அவரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கேதான், தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்பட்டது. ஏற்கெனவே தமிழ்நாடு காங்கிரஸ் என்று இருந்தாலுங்கூட, அச்சடிக்கப்பட்ட புத்தகங்களிலே, தமிழ்நாடு அரசு என்று இருந்தாலுங்கூட, நாட்டிற்கு, இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயரிடப்படவில்லை. இதற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற கோரிக்கையை, பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த அவையிலே நிறைவேற்றி – நிறைவேற்றியது மாத்திரமல்ல, அவரே ஒரு தொண்டரைப் போல நின்றுகொண்டு–முதலமைச்சராக அல்ல–நான் தமிழ்நாடு என்பேன், எல்லோரும் வாழ்க என்று கூறவேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக்கொண்டு–அவர் தமிழ்நாடு என்று கூற எல்லோரும் வாழ்க, வாழ்க என்று ஒலித்த மாமன்றமும் இந்த மாமன்றம்தான்.

அதைப்போலவே, இரு மொழித் திட்டம் – இனி ஆதிக்க மொழிகளுக்கு இடமில்லை, ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டு மொழிகளுக்குத்தான் இடம், ஆதிக்க மொழிகள், கட்டாய மொழிகள் நம்மீது எதுவும் திணிக்கப்பட மாட்டாது என்பதற்கு அறிகுறியாக இரு மொழித் திட்டத்தை நிறைவேற்றியதும் இந்த மாமன்றத்திலேதான்.

நான் நேற்றைக்கு கவர்னர் அவர்களுடைய தலைமையிலே, இந்த விழாவிலே பேசும்போது சொன்னேன். இந்த அவையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், உருக்கமான நிகழ்ச்சிகள், வேடிக்கையான நிகழ்ச்சிகள், தமாஷான நிகழ்ச்சிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் என்று இவைகளைப் பற்றியெல்லாம் நேற்று நான் விவரித்தேன். இன்றைக்கு இங்கே நிறைவேற்றப்பட்ட சட்டங்களைச் சொன்னால், இந்த மாமன்றத்தினுடைய மகிமை, பெருமை தெரியும், தெரிய வேண்டுமென்பதற்காக அவைகளையெல்லாம் சொல்கிறேன்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்க, முதல் தடவையாக இந்தியாவிலே இந்த மாமன்றத்திலேதான்–தமிழ்நாட்டிலேதான் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மின்சார விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது என்று சூளுரைத்து, அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு தருவதற்கான திட்டம் இங்கேதான் வகுக்கப்பட்டது. இரண்டு அல்லது மூன்று இலட்சம் மக்களுக்கு குடியிருப்பு மனை–அவர்கள் இருக்கின்ற குடியிருப்புக்கான மனை எந்த நேரத்திலும் முதலாளி பார்த்து, மிராசுதாரர் பார்த்து, பிரித்துக் கொண்டு போ என்று சொன்னால், பிரித்துக்கொண்டு போக வேண்டிய தற்காலிக நிலையில் இல்லாமல், யார் சொன்னாலும் அது அவர்களுக்கான சொந்த மனைதான் என்று குடியிருப்பு மனை, குடியிருப்போருக்கே சொந்தம் என்று விவசாயத் தொழிலாளர்களுக்காக ஆக்கியதும் இந்தச் சட்டமன்றத்திலேதான்.

அதைப்போல, தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல–கை ரிக்ஷாக்களை ஒழித்து, அதற்குப் பதிலாக இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கியதும், அதற்கான திட்டம் தீட்டப்பட்டதும் இந்த மாமன்றத்திலேதான்.

நில உச்சவரம்புச் சட்டம்–பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே கொண்டு வந்த சட்டம்–30 ஸ்டாண்டர்டு ஏக்கரா சட்டம்–அதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று ஆக்கி அந்தச் சட்டத்தை நிறைவேற்றிய இடமும் இந்த இடம்தான்.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இஸ்லாமிய மக்களையும் இணைக்க வேண்டும் என்று குரல் எழுந்ததும், இங்கேதான். அப்படிக் குரல் எழுந்தபோது, அதற்கு சட்டத்திலே இடமில்லை என்று ஓர் அமைச்சர், என் தலைமையிலே இருந்த ஓர் அமைச்சர், உண்மை நிலையை எடுத்துச் சொன்னபோது, இஸ்லாமிய நண்பர்கள், உறுப்பினர்கள் சோர்ந்து உட்கார்ந்தபோது, சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், என் இதயத்திலே இடம் இருக்கிறது என்று சொல்லி அவர்களையெல்லாம் பிற்படுத்தப்பட்ட பிரிவிலே சேர்த்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உள்ளாட்சி அமைப்புகளிலே பெண்களுக்கு 33 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

பெரியாரின் கொள்கையாக சமத்துவக் கொள்கையை நிறைவேற்ற பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் நிறைவேற்றுவதற்கு வழிவகுத்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

உருது அகாடமி உருவாகியதும் இந்த மாமன்றத்திலேதான். உழவர் சந்தை திட்டம் உருவானதும் இந்த மாமன்றத்திலேதான்.

இதுமாத்திரமல்ல. புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்கும் என்று சட்டம் செய்ததும் இந்த மாமன்றத்திலேதான்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஆணை பிறப்பித்து தந்தை பெரியாருடைய நெஞ்சிலே இருந்த முள்ளை அகற்றுவதற்கு செய்த ஏற்பாடும் இந்த மாமன்றத்திலேதான்.

76. சக்கரபாணி, திரு. அர. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு. வானூர் (தனி)

78. சங்கர், திரு. கே.பி. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே. அரூர் (தனி)
86. சரவணக்குமார், திரு. கே.எஸ். பெரியகுளம் (தனி)
87. சரவணன், திரு. பெ.சு.தி. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம. காட்டுமன்னார்கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். குன்னம்
96. சின்னதுரை, திரு. மா. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ். மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ. சங்கரி
101. சுந்தர், திரு. க. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ, திரு. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D. பெரம்பூர்
116. சேகர், திரு. S. பரமத்தி–வேலூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ். ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந. முசிறி
131. திருமகன் ஈவெரா, திரு. இ. $ ஈரோடு (கிழக்கு)
132. துரைமுருகன், திரு. காட்பாடி
133. தேவராஜி, திரு. க. ஜோலார்பேட்டை
134. தேன்மொழி, திருமதி எஸ். நிலக்கோட்டை (தனி)
135. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. நத்தம்
136. நந்தகுமார், திரு. A.P. அணைக்கட்டு
137. நயினார் நாகேந்திரன், திரு. திருநெல்வேலி
138. நல்லதம்பி, திரு. அ. கெங்கவல்லி (தனி)
139. நல்லதம்பி, திரு. A. திருப்பத்தூர்
140. நாகைமாலி, திரு. வி.பி. கீழ்வேளூர் (தனி)
141. நாசர், திரு. சா.மு. ஆவடி
142. நிவேதா எம். முருகன், திரு. பூம்புகார்
143. நீலமேகம், திரு. டி.கே.ஜி. தஞ்சாவூர்
144. நேரு, திரு. கே.என். திருச்சிராப்பள்ளி (மேற்கு)
145. பண்ணாரி, திரு. அ. பவானிசாகர் (தனி)
146. பரந்தாமன், திரு. இ. எழும்பூர் (தனி)
147. பழனி நாடார், திரு. S. தென்காசி
148. பழனியாண்டி, திரு. மொ. ஸ்ரீரங்கம்
149. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் மதுரை (மத்தி)
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. போடிநாயக்கனூர்
152. பன்னீர்செல்வம், திரு. மு. சீர்காழி (தனி)
153. பாண்டியன், திரு. K.A. சிதம்பரம்
154. பாபு, திரு. மு. செய்யூர் (தனி)
155. பாலசுப்ரமணியன், திரு. ஈ. சேலம் (தெற்கு)
156. பாலாஜி, திரு. S.S. திருப்போரூர்
157. பால் மனோஜ் பாண்டியன், திரு. ஆலங்குளம்
158. பிச்சாண்டி, திரு. கு. கீழ்பெண்ணாத்தூர்
159. பிரகாஷ், திரு. ஒய். ஓசூர்
160. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி. விருகம்பாக்கம்
161. பிரபாகரன், திரு. ம. பெரம்பலூர் (தனி)
162. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. குளச்சல்
163. புகழேந்தி, திரு. நா. $ விக்கிரவாண்டி
164. பூண்டி கே. கலைவாணன், திரு. திருவாரூர்
165. பூமிநாதன், திரு. மு. மதுரை (தெற்கு)
166. பெரியகருப்பன், திரு. கேஆர். திருப்பத்தூர்
167. பெரியசாமி, திரு. இ. ஆத்தூர்

168. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. மேலூர்
169. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் பொள்ளாச்சி
170. பொன்முடி, முனைவர் க. திருக்கோவிலூர்
171. பொன்னுசாமி, திரு. கே. சேந்தமங்கலம் (ஆ.வ.)
172. மகாராஜன், திரு. ஆ. ஆண்டிப்பட்டி
173. மகேந்திரன், திரு. சி. மடத்துக்குளம்
174. மணி, திரு. ரா. ஓமலூர்
175. மணி, திரு. ஜி.கே. பெண்ணாகரம்
176. மணிக்கண்ணன், திரு. A.J. உளுந்தூர்பேட்டை
177. மணியன், திரு. ஓ.எஸ். வேதாரண்யம்
178. மதியழகன், திரு. தே. பர்கூர்
179. மதிவேந்தன், டாக்டர் மா. ராசிபுரம் (தனி)
180. மரகதம் குமரவேல், திருமதி கு. மதுராந்தகம் (தனி)
181. மனோ தங்கராஜ், திரு. த. பத்மநாபபுரம்
182. மாங்குடி, திரு. சா. காரைக்குடி
183. மாணிக்கம், திரு. இரா. குளித்தலை
184. மாரிமுத்து, திரு. K. திருத்துறைப்பூண்டி (தனி)
185. மார்க்கண்டேயன், திரு. G.V. விளாத்திகுளம்
186. மான்ராஜ், திரு. இ.மா. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
187. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. நாகப்பட்டினம்
188. முத்துசாமி, திரு. சு. ஈரோடு (மேற்கு)
189. முத்துராஜா, டாக்டர் வை. புதுக்கோட்டை
190. முருகேசன், திரு. செ. பரமக்குடி (தனி)
191. முனிரத்தினம், திரு. ஆ.மு. சோளிங்கர்
192. முனுசாமி, திரு. கே.பி. வேப்பனஹள்ளி
193. மூர்த்தி, திரு. பி. மதுரை (கிழக்கு)
194. மெய்யநாதன், திரு. சிவ.வீ. ஆலங்குடி
195. மோகன், திரு. M.K. அண்ணா நகர்
196. ரகுபதி, திரு. எஸ். திருமயம்
197. ரகுராமன், திரு. A.R.R. சாத்தூர்
198. ரவி, திரு. சு. அரக்கோணம் (தனி)
199. ராதாகிருஷ்ணன், திரு. R. விருத்தாசலம்
200. ராமசந்திரன், திரு. கா. குன்னூர்
201. ராமச்சந்திரன், திரு. தி. அறந்தாங்கி
202. ராமலிங்கம், திரு. பெ. நாமக்கல்
203. ராஜகண்ணப்பன், திரு. R.S. முதுகுளத்தூர்
204. ராஜகுமார், திரு. S. மயிலாடுதுறை
205. ராஜமுத்து, திரு. M. வீரபாண்டி
206. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. திருப்பரங்குன்றம்
207. ராஜா, திரு. ஈ. சங்கரன்கோவில் (தனி)
208. ராஜா, முனைவர் T.R.B. மன்னார்குடி
209. ராஜேஷ் குமார், திரு. செ. கிள்ளியூர்
210. ரூபி ஆர். மனோகரன், திரு. நாங்குநேரி
211. வரலட்சுமி, திருமதி ம. செங்கல்பட்டு
212. வானதி சீனிவாசன், திருமதி கோயம்புத்தூர் (தெற்கு)
213. வில்வநாதன், திரு. அ.செ. ஆம்பூர்
214. விஜயகுமார், திரு. K.N. திருப்பூர் (வடக்கு)
215. விஜயதரணி, திருமதி S. # விளவங்கோடு
216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. விராலிமலை
217. வெங்கடாசலம், திரு. A.G. அந்தியூர்
218. வெங்கடேசன், திரு. ஆ. சோழவந்தான் (தனி)
219. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. தருமபுரி
220. வெற்றிஅழகன், திரு. அ. வில்லிவாக்கம்
221. வேலு, திரு. எ.வ. திருவண்ணாமலை
222. வேலு, திரு. த. மயிலாப்பூர்
223. வேலுமணி, திரு. எஸ்.பி. தொண்டாமுத்தூர்
224. வேல்முருகன், திரு. தி. பண்ருட்டி
225. வைத்திலிங்கம், திரு. ஆர். ஒரத்தநாடு
226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். பாபநாசம்
227. ஜெகன் மூர்த்தி, திரு. மு. கீழ்வைத்திணான்குப்பம் (தனி)
228. ஜெயக்குமார், திரு. S. பெருந்துறை
229. ஜெயசங்கரன், திரு. A.P. ஆத்தூர் (தனி)
230. ஜெயசீலன், திரு. பொன். கூடலூர் (தனி)
231. ஜெயராம், திரு. கே.ஆர். சிங்காநல்லூர்
232. ஜோசப் சாமுவேல், திரு. அம்பத்தூர்
233. ஜோதி, திரு. ஒ. செய்யாறு
234. ஸ்டாலின், திரு. மு.க. கொளத்தூர்
235. ஸ்டாலின் குமார், திரு. செ. துறையூர் (தனி)
236. தாரகை கத்பட், முனைவர் % விளவங்கோடு
237. அன்னியூர் சிவா என்கிற சிவ சண்முகம், திரு. அ. % விக்கிரவாண்டி

$ பதவிக் காலத்தில் காலமானார்.

% இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இராஜினாமா செய்தார்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

பதினாறாவது சட்டமன்றப் பேரவை நிறைவேற்றப்பெற்ற முக்கிய சட்டங்கள் (3–6–2024 அன்று வரை)

1. **தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021**

பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து இடஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும், ஏழரை விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யும் சட்டமுன்வடிவு 26–8–2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

2. **தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கறவு) சட்டமுன்வடிவு, 2021**

விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளை இணைப்பதன்மூலம் 1929 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்தினை ஒருங்கிணைந்த வகையிலிருந்து இணைக்கப்பட்ட வகையாக மாற்றுவதற்கும், டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டத்தினை நீக்கறவு செய்வதற்கும் வகை செய்யும் சட்டமுன்வடிவு 31–8–2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

3. **பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021**

உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு தொடர்பான உடன்படிக்கைகள் போன்ற அத்தகைய ஆவணங்களை பதிவு செய்வதற்காக நேரில் ஆஜராகி முன்னிலைப்படுத்துவதற்கான தேவையை விட்டொழிப்பது, தொழில் செய்வதை எளிதாக்க உதவுகின்ற வகையில் சட்டமுன்வடிவு 2–9–2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

4. **பதிவுச் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2021**

ஆவணங்களின் மோசடி பதிவுகளை குறைப்பதற்கு பதிவுத் துறை தலைவரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு சட்டபூர்வமான ஆதரவை பெறுவதற்கேற்ப பொருத்தமான விதிகளை அமைப்பதற்கு தக்கவாறு சட்டமுன்வடிவு 2–9–2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

5. **தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021**

சமூக நீதியையும், சமத்துவத்தையும் உறுதி செய்திடவும், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதி திராவிடர்–பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு

ஒன்றை தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்பட வகைசெய்யும் சட்டமுன்வடிவு 13-9-2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

6. தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவைச் சிதைக்கும் நீட் என்னும் தேர்வை இரத்து செய்து, சமூகநீதியை உறுதிசெய்யவும், சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளை நிலைநிறுத்தவும், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மாணவர்களைப் பாதுகாக்கவும், நீதியரசர் ஏ.கே. இராஜன் குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தில், முக்கியமாக கிராமப் பகுதிகளில், வலுவான சுகாதாரக் கட்டமைப்பை உறுதி செய்யவும், பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அனைத்து மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கு வகைசெய்யும் வலிமையான சட்டமுன்வடிவு 13-9-2021 அன்று நிறைவேற்றப்பெற்றது.

இச்சட்டமுன்வடிவு மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 1-2-2022 ஆம் நாளன்று திருப்பியனுப்பப் பெற்றதையடுத்து, 8-2-2022 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

7. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

சமய நிறுவனத்தின் பொது விவகாரங்களில் ஆர்வம் கொண்டுள்ள நபர் எவராலும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான குற்றவியல் புகாரானது அளிக்கப்படலாம் என்பதற்காகவும், அவ்வாறு குற்றம் இழைத்தவர்களை கைது செய்வதற்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களை பிணையில் விடாத அளவிற்கு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வகை செய்யும் சட்டமுன்வடிவு 13-9-2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

8. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

தேவையான திறன், அர்ப்பணிப்பு மற்றும் திறமை கொண்ட மூத்த குடிமக்கள், பெண்கள் மற்றும் பிற ஆர்வலர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது மற்றும் சமய நிறுவனங்களின் நிர்வாகத்திற்கும், அறங்காவலர்களின் பணியமர்த்துதலை வலுப்படுத்தவும் மற்றும் ஊக்கமளிக்கவும், மேற்சொன்ன சட்டத்தை திருத்துவதன்மூலம் மாவட்டக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து இரண்டு ஆண்டுகளாகக் குறைக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு 13-9-2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

9. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் அவர்களது வேலை நேரம் முழுவதும் நிற்கும் நிலைமையை கருத்தில் கொண்டு, மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் அனைத்து வேலையாட்களுக்கும் இருக்கை வசதி வழங்க வகை செய்யும் இச்சட்டமுன்வடிவு 13-9-2021 அன்று நிறைவேற்றப்பட்டது.

10. சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டமுன்வடிவு, 2022

சிறந்த நிர்வாகத்திற்காகவும், காவல் துறையின் தரத்தை மேம்படுத்தவும், சென்னை மாநகரக் காவல் ஆணையரகமானது மூன்றாகப் பிரிக்கப்பட்டு, ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய ஆணையரகங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் இச்சட்டமுன்வடிவு 7-1-2022 அன்று நிறைவேற்றப்பட்டது .

11. தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

தமிழகத்தில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் துணை வேந்தர்களை மாநில அரசே நியமிக்க வகைசெய்யும் இச்சட்டமுன்வடிவு 25-4-2022 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

12. சென்னைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை மாநில அரசே நியமிக்கவும், பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் நிதித் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரை ஆட்சிக் குழு உறுப்பினர்களுள் ஒருவராக சேர்க்கவும் வகைசெய்யும் இச்சட்டமுன்வடிவு 25-4-2022 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

13. தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2022

மாநிலத்தின் பாரம்பரிய மருத்துவ முறையின் பெருமையைப் போற்றும் வகையில் இந்திய மருத்துவ முறைகளுக்கான சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றை தனியாக அமைப்பதற்கு வகைசெய்யும் இச்சட்டமுன்வடிவு 28-4-2022 அன்று நிறைவேற்றப்பட்டது.

14. தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்படுவதில் மாற்றுத் திறனாளிகளுக்கு இருந்த தகுதிக்கேடுகளை நீக்க வகைசெய்யும் இச்சட்டமுன்வடிவு 10-5-2022 அன்று நிறைவேற்றப்பட்டது.

15. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாநிலத்தில் உள்ள அனைத்து மாநில அரசுத் துறைகளிலும், மாநில பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழ் இளைஞர்களை நூறு விழுக்காடு அளவிற்கு ஆட்சேர்ப்பு செய்வதை உறுதிசெய்யும் பொருட்டு அனைத்து போட்டித் தேர்வுகளிலும் கட்டாய தமிழ்மொழி தாள் அறிமுகப்படுத்த வகைசெய்யும் இச்சட்டமுன்வடிவு 13-1-2023 அன்று நிறைவேற்றப்பட்டது.

16. தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022

19-10-2022 அன்று நிறைவேற்றப்பெற்று, 6-3-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல்

மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் 23–3–2023 அன்று மறு ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் அனுப்பப்பட்டு ஆளுநர் அவர்களால் ஒப்புதலும் அளிக்கப்பட்டது.

17. தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

தொழிலாளர்கள் மற்றும் தொழிலகங்களின் நலன் கருதி, தொழிற்சாலைகளில் எளிதில் பின்பற்றுகிற வேலை செய்யும் நேரத்தினை வழங்கும் நோக்கத்துடன் இம்மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தினை (மையச் சட்டம் 63/1948) திருத்தம் செய்ய ஏதுவாக இச்சட்டமுன்வடிவு 21–4–2023 அன்று நிறைவேற்றப்பட்டது.

[பின்னர், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை கைவிடுமாறு அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் தொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை வைத்ததையடுத்து, இச்சட்டம் கைவிடப்பட்டது.]

18. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு குடிநீர், கழிப்பிடம், சிறுநீர் கழிப்பிடம் மற்றும் முதலுதவி வசதிகள் ஆகிய வசதிகளை செய்து கொடுக்கும்வகையில் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான இச்சட்டமுன்வடிவு 21–4–2023 அன்று நிறைவேற்றப்பட்டது.

19. 13–11–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்து, திருப்பி அனுப்பப்பெற்ற 15–வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 2 சட்டமுன்வடிவுகள் மற்றும் 16–வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 8 சட்டமுன்வடிவுகள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 18–11–2023 அன்று கீழ்க்கண்ட 10 சட்டமுன்வடிவுகள் மறுஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன:

1. தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க தொடர்புடைய மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்க ஏதுவாக சட்டமன்றப் பேரவையால் இச்சட்டமுன்வடிவு 25–4–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

2. தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளரை ஆட்சிக் குழு உறுப்பினர்களுள் ஒருவராக சேர்க்க ஏதுவாக சட்டமன்றப் பேரவையால் இச்சட்டமுன்வடிவு 19–10–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க தொடர்புடைய மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சட்டத்தில் தக்கவாறு திருத்தம் செய்ய வழிவகுக்க இச்சட்டமுன்வடிவு 10–5–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

4. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க தொடர்புடைய மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்க ஏதுவாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தில் தக்கவாறு திருத்தம் செய்ய வழிவகுக்க இச்சட்டமுன்வடிவு 10–5–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

5. தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாநில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமனம் செய்வதற்கும், அதன்படி அவர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கும் 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக சட்டத்தினை திருத்தம் செய்ய ஏதுவாக சட்டமன்றப் பேரவையால் 19–10–2022 ஆம் நாளன்று இச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

6. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பணியமர்த்துவதற்காக நபர்களைத் தேர்வு செய்யும் வல்லுநர் குழுவில் அரசு பிரதிநிதி ஒருவரைச் சேர்க்க ஏதுவாக சட்டமன்றப் பேரவையால் 9–1–2020 ஆம் நாளன்று இச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

அரசு நிதிகளின் பயன்பாட்டை கண்காணிக்க, ஆய்வு மற்றும் விசாரணை செய்வதற்கான அதிகாரத்தை அரசிடம் வழங்க வகைசெய்யும் இச்சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையால் 9–1–2020 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

8. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாநில பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமனம் செய்வதற்கும், அதன்படி அவருக்கு அதிகாரம் வழங்குவதற்கும் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தம் செய்ய ஏதுவாக இச்சட்டமுன்வடிவு 21–4–2023 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

9. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாநில பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமனம் செய்வதற்கும், அதன்படி அவருக்கு அதிகாரம் வழங்குவதற்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தம் செய்ய ஏதுவாக இச்சட்டமுன்வடிவு 21–4–2023 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

10. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க தொடர்புடைய மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்க ஏதுவாக இச்சட்டமுன்வடிவு 10–5–2022 ஆம் நாளன்று நிறைவேற்றப்பெற்றது.

20. தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டமுன்வடிவு, 2024

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு ஒரு செயல்திட்டத்தைத் தயாரிக்கவும், அம்மக்களின் விகிதாச்சாரப்படி மொத்த நலத் திட்ட செலவின ஒதுக்கீட்டின் ஒரு பகுதியை குறித்தொதுக்குவதற்கும், குறித்தொதுக்கப்பட்ட நிதியங்கள் அம்மக்களின் மேம்பாட்டிற்கு செலவிடப்படுவதை உறுதி செய்யவும் கொண்டுவரப்பட்ட இச்சட்டமுன்வடிவு, ஒரு சட்டமன்ற உறுப்பினர் முன்வைத்த திருத்தத்தையும் உள்ளடக்கி 22-2-2024 அன்று நிறைவேற்றப்பட்டது.

அரசினர் தனித் தீர்மானங்கள்

1. 23-8-2021

நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் சட்டமன்றத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக மன்றத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கக்கூடியவரும், 10 முறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், புதியதாக உருவாக்கப்பட்ட நீர்வளத் துறையின் அமைச்சராக விளங்கக்கூடியவருமான சட்டமன்றத்தில் பொன்விழா கொண்டாடும் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களது 50 ஆண்டுக் கால சட்டமன்றப் பணியினைப் பாராட்டும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23-8-2021 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. 28-8-2021

உழவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க முடியாத சூழலையும், தங்களின் விளைபொருளுக்கு இலாபகரமான விலையை உழவர்கள் கேட்டுப்பெற முடியாத நிலையையும், தங்களின் நில உடைமை உரிமைகள் பறிகொடுக்கும் நிலையையும், தனியார் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக இருக்கும், வேளாண்மையை அழிப்பதாக அமையப்பெற்றிருக்கும் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெறக் கோரும் அரசினர் தனித் தீர்மானம் 28-8-2021 அன்று மண்ணையும் மக்களையும் காக்கும் நோக்கத்தில் நிறைவேற்றப்பெற்றது.

3. 8-9-2021

அகதிகளாக இந்நாட்டிற்கு வருபவர்களை அவர்களின் நிலை கருதி அரவணைக்காமல், மத ரீதியாகவும், எந்த நாட்டிலிருந்து வருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் பாகுபடுத்திப் பார்க்கும் வகையில் ஒன்றிய அரசால் கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019-ஐ இரத்து செய்யக் கோரும் அரசினர்

தனித் தீர்மானம் 8-9-2021 அன்று நிறைவேற்றப்பெற்றது.

4. 21-3-2022

காவேரி நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கிய கர்நாடக அரசுக்கு கண்டனம், மேகதாதுவிலோ அல்லது காவேரி படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எந்தவித புதிய நீர்த்தேக்கத் திட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21-3-2022 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

5. 11-4-2022

மத்திய பல்கலைக்கழகங்களில் பல்வேறு படிப்புகளில் சேர்வதற்காக நடத்தவிருக்கும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை இரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-4-2022 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6. 29-4-2022

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவும்வகையில், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகளை அனுப்பி வைக்க தேவையான ஏற்பாடுகள் செய்து, உரிய அனுமதிகளை வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29-4-2022 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

7. 18-10-2022

ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்ற குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18-10-2022 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

8. 12-1-2023

சேதுசமுத்திரத் திட்டத்தை மேலும் தாமதமின்றி நிறைவேற்றிட ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12-1-2023 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

9. 10-4-2023

பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டும் என ஆளுநருக்கு உரிய அறிவுரைகளை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவரும்

வழங்கிட வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 10–4–2023 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

10. 19–4–2023

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்கள் உரியபயன்களைப்பெற அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–4–2023 அன்று முன்மொழியப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

11. 9–10–2023

உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் 9–10–2023 அன்று நிறைவேற்றப்பெற்றது.

12. 18–11–2023

13–11–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்து, திருப்பி அனுப்பப்பெற்ற 15–வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 2 சட்டமுன்வடிவுகள் மற்றும் 16–வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 8 சட்டமுன்வடிவுகள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்திடும் தீர்மானம் 18–11–2023 அன்று நிறைவேற்றப்பட்டு மறு ஆய்வு செய்யப்பட்டன.

13. 14–2–2024

2026 ஆம் ஆண்டிற்குப் பிறகு மேற்கொள்ளப்படவிருக்கும் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையைக் கைவிடுதல் அல்லது 1971 ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் தற்பொழுது உள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து இருக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளவும் ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் மற்றும் மக்களாட்சி தத்துவத்திற்கு எதிரான 'ஒரு நாடு ஒரு தேர்தல்' திட்டத்தினை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானம் 14–2–2024 அன்று நிறைவேற்றப்பட்டன.

முக்கிய நிகழ்வுகள்

1. தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருவுருவப் படத் திறப்புவிழா 2-8-2021 அன்று மாலை 5-00 மணியளவில் புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள்.

2. தமிழக சட்டப் பேரவை வரலாற்றில் முதல் முறையாக 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை முறையே 13-8-2021 மற்றும் 14-8-2021 ஆகிய தேதிகளில் மின் நிதிநிலை அறிக்கைகளாக, (e-Budget) பேரவைக்கு அளிக்கப்பட்டன. மின் நிதிநிலை அறிக்கைகள் பேரவையில் அளிக்கப்பட்டபோது, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக ஒவ்வோர் உறுப்பினரின் மேசையிலும் All-in-One PC-யும், கையடக்க கணினியும் பொருத்தப்பட்டு நிதிநிலை அறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

3. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொடுதிரை கையடக்க கணினியில் PDF வடிவிலும் நிதிநிலை உரைகளைப் காணும் வகையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

4. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், முதன்முறையாக 15-8-2021 அன்று 75-வது சுதந்திர தின விழாவில் கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

5. 16-வது பேரவைக்கு புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி 23-8-2021 மற்றும் 24-8-2021 ஆகிய இரு நாட்களில் மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியில் 10-வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களும், நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும், சட்டத் துறையின்

கூடுதல் செயலாளர் அவர்களும், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் செயலாளர் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

6. காகிதமில்லா சட்டமன்றம் என்னும் திட்டத்தினைச் செயல்படுத்திடும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கையடக்கக் கணினியின் செயல்பாடு மற்றும் ஆவணங்களை அதில் பதிவிறக்கம் செய்வது மற்றும் பார்வையிடுவது குறித்த கணினி பயிற்சி 7-9-2021 மற்றும் 9-9-2021 ஆகிய நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டது.

7. நீர்வளத் துறைக்கான மானியக் கோரிக்கை, முதன்முறையாக, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால், 23-8-2021 அன்று பேரவையில் வைக்கப்பட்டது.

8. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் என்பது, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1-9-2021 அன்று அறிவிக்கப்பட்டது.

9. சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்கென இறகுப்பந்து விளையாட்டுக் கூடம் மற்றும் பூங்காக்களை 13-9-2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

10. நீட் நுழைவுத் தேர்வுக்கு எதிராக அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ஒருமித்த நிலைப்பாட்டினை எட்டவும் சட்டமன்ற அனைத்துக் கட்சிகள் கூட்டம் 8-1-2022 அன்று கூட்டப்படுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6-1-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

11. 6-1-2022 அன்று முதன்முறையாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைகளில் வினாக்கள்-விடைகள் நேரம் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. 7-1-2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைகளின் வினாக்கள்-விடைகள் நேரம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை ஆகியவை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

12. சேலம், நாமக்கல் மாவட்டங்கள், விடுபட்ட விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடி சான்றுகள் வழங்குதல் மற்றும் மீண்டும் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்குதல் குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் 7-1-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

13. 8-2-2022 அன்றைய பேரவை நடவடிக்கைகள் முழுவதும்

தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

14. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23-3-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

15. பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக ஏற்பட்டுள்ள தொழில் முதலீடுகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் துபாய் மற்றும் அபுதாபி நாடுகளில் ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகள், வேலைவாய்ப்புகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6-4-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

16. அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாளை சமத்துவ நாளாகக் கொண்டாடுதல், சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்தல், அம்பேத்கர் மணிமண்டபத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவுதல் மற்றும் அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை செம்பதிப்பாக தமிழில் வெளியிடுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13-4-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

17. 14-4-2022 அன்று ஆளுநர் அளித்த தேநீர் விருந்தில் தமிழக அரசு சார்பில் கலந்துகொள்ள இயலாத நிலை தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18-4-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

18. விளையாட்டு நகரம், ஒலிம்பிக் அகாடமிகள் அமைத்தல், ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டம், வட சென்னையில் நவீன குத்துச் சண்டை வளாகம், அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு மைதானம், கடற்கரை ஒலிம்பிக்ஸ், தமிழகத்தில் உலக ஒலிம்பியாட் போட்டிகள் நடத்துதல் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21-4-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

19. 24-4-2022 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை முன்னிட்டு நவம்பர் 1 ஆம் தேதி உள்ளாட்சிகள் தினமாகக் கொண்டாடுதல், ஆண்டிற்கு ஆறு கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்படுதல், ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளின் அமர்வுப் படி உயர்த்துதல், புதிய வாகனங்கள் வழங்குதல், கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-4-2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

20. கலைஞர் அவர்கள் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் நாள் அரசு விழாவாக கொண்டாடப்படுதல் மற்றும் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைஞரின் சிலை நிறுவுதல் தொடர்பாக மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் 26–4–2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

21. சட்டமன்றத்தால் மீண்டும் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு சட்டமுன்வடிவினை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநர் அனுப்பி வைத்துள்ளது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4–5–2022 அன்று அறிவித்தார்கள்.

22. தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் அறிவியல்வழி ஆய்வுகளில் கிடைத்த முடிவுகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9–5–2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

23. தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு, சாதனைகள், நிறைவேற்றப்பெற்ற திட்டங்கள், ஓய்வுபெறும் வயதை 60–ஆக உயர்த்துதல் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி, குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திட்டம், தகைசால் பள்ளிகள் உருவாக்கல், நகர்ப்புர மருத்துவமனைகள், தொகுதிகளில் 10 முக்கிய திட்டங்கள் நிறைவேற்ற ரூ.1,000 கோடி வழங்குதல் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7–5–2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

24. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்டுதல், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்டவை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–10–2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

25. பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்துதல், பல்வேறு நிதி உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் உள்ளிட்டவை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–10–2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

26. புதிய பேருந்துகள் வாங்குதல், பழைய பேருந்துகளைப் புதுப்பித்தல், நிதி நிறுவனங்கள்மூலம் கூடுதலாக டீசல் மற்றும் மின்சாரப் பேருந்துகள் வாங்குதல் மற்றும் ஆயிரம் பேருந்துகளை இயக்குதல் உள்ளிட்டவை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–10–2022 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

27. 9–1–2023 அன்று புனித ஜார்ஜ் கோட்டை, சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் ஆளுநர் உரை digital முறையில் வாசிக்கப்பெற்றது இதுவே முதன்முறையாகும்.

28. 9–1–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் பேரவை விதி 92 (vii)–க்கு உட்பட்டு உறுப்பினர்கள் உரையாற்றுதல் குறித்து பேரவைத் தலைவர் அவர்கள் 11–1–2023 அன்று தீர்ப்புரை வழங்கினார்கள்.

29. வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாடுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30-3-2023 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

30. 12-4-2023 அன்று முதன்முறையாக NeVA திட்டத்தின்மூலம் Digital House செயல்படுத்தப்பட்டது.

31. 2016 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்ட விதிகளின்படி செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மின்னணு ஊடக நிகழ்ச்சிகளை புரிந்துகொள்ளும் வகையில் சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு ஒளிப்பதிவு செய்யப்பட்டு, YouTube மூலமாக ஊடகங்களில் ஒளிபரப்பு செய்வதற்கு ஏற்ற வகையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 17-4-2023 அன்று காலை 9-45 மணிக்கு பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

32. கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் திரு. இளையபெருமாள் அவர்களுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18-4-2023 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

33. சட்டமன்றப் பேரவை/ மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் மருத்துவப்படி உயர்த்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19-4-2023 அன்று அறிவித்தார்கள்.

34. முன்னாள் இந்தியப் பிரதமர், திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் முழு உருவச் சிலை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20-4-2023 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

35. தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், வணிக வரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான 'புதிய வரி நிலுவைத் தொகை சமாதான் திட்டம்' குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 10-10-2023 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

36. வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை சிறப்பிக்கும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை, வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று அழைத்தல், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் விருது வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-10-2023 அன்று அறிவிக்கப்பட்டது. (விதி 110)

சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும்
கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா
2-8-2021

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் நாள் திங்கட்கிழமை சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களது தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தலைமை மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்கள் திறந்துவைத்தார்கள்.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் ஆற்றிய உரை – 2-8-2021

Hon'ble Governor of Tamil Nadu Thiru Banwarilal Purohit, Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin, Speaker of Tamil Nadu Legislative Assembly Thiru M. Appavu, Deputy Speaker Thiru K. Pitchandi, Ministers of the Government of Tamil Nadu, Members of Parliament and Members of Tamil Nadu Legislative Assembly, distinguished guests, ladies and gentlemen, வணக்கம். (Applause)

I would like to begin my address with a few words in Tamil. Let me make an attempt. இன்றைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் கலைஞர் திரு. மு. கருணாநிதி (கரவொலி) அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்ததில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். (கரவொலி) உண்மையில் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாள். (கரவொலி)

Ladies and Gentlemen, it is indeed a momentous day. We are commemorating the centenary of the Madras Legislative Council, as it was known then. August is an especially auspicious month in our national calendar as it marks the anniversary of our Independence Day too. In these years, the nation has made great progress on several fronts, and it was made possible by the joint work of people and the leaders of the country.

The history of the Madras Legislative Council, as you know, dates back to 1861. An advisory body set up back then bloomed into a law–making assembly in 1921. Under colonial rule, there were, of course, many limitations and challenges on the functioning of such a body. Also, there were numerous separate constituencies based on caste, community and other parameters. Still, even if partial, it was a move towards a responsible Government. Democracy, in its modern form, was returning to the land where it was practised centuries ago.

It was a new beginning heralded by the people of the Madras Presidency, which included Tamil Nadu as well as parts of Kerala, Karnataka, Andhra Pradesh, Telangana, Odisha and Lakshadweep. Dreams and aspirations of the people of these regions, shaped by the freedom movement, found an expression in the new Legislative Council. In the Justice

Party, which won popular mandates in the initial phase, people had a platform to turn their dreams into reality.

Ladies and Gentlemen, the Legislative Council enacted many forward–looking legislations and also underwent many changes in its early decades. That spirit of democracy remains the guiding light of the state legislature. It would not be wrong to say that this legislature became the fountainhead of many progressive legislations which were subsequently replicated across the country to empower the weaker sections of society and strengthen our democracy. The Madras Legislature had sown seeds of a fully representative democratic form of governance which were realised after Independence.

This Legislature can rightly be credited with nurturing the roots of democracy by focusing on governance to uplift the poor and purge social evils. Politics and governance in the region evolved around positive and rational content that targeted the welfare of those living on the margins. Abolition of the Devdasi system, widow remarriage, mid–day meals in schools and distribution of agricultural land to the landless were some of the revolutionary ideas that transformed the society. The concept of the welfare state has taken deep roots in this legislature irrespective of who rules here. Here I would like to quote a few lines from the great Tamil poet, Subramania Bharati, who sums up the progressive thinking of the people of Tamil Nadu and I quote:

"மந்திரம் கற்போம்வினைத் தந்திரம் கற்போம்
வானை யளப்போம் கடல்மீனை யளப்போம்
சந்திரமண் டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்"
(கரவொலி)

This can be interpreted as:

"We will learn both scripture and science
We will explore both heavens and oceans
We will unravel the mysteries of the moon
And we will sweep our streets clean too"

Ladies and Gentlemen, it is indeed gratifying to learn that the Legislature has a tradition of honouring the greatest stars of land. The Assembly already has the portraits of some of our greatest heroes: Thiruvalluvar, Mahatma Gandhi, C. Rajagopalachari, C.N. Annadurai, K. Kamaraj, E.V. Ramasami, B.R. Ambedkar, U. Muthuramalingam Thevar, Muhammad Ismail Sahib, M.G. Ramachandran, J Jayalalithaa, S.S. Ramaswami Padayachi, V.O. Chidambaram Pillai, P. Subbarayan and Omanthur P. Ramaswamy Reddiar. Now this hall of fame will also have the portrait of Thiru Karunanidhi whose entire life was devoted to the people's cause in the State.

When I came here, I was thinking about Chakravarti Rajagopalachari, Gandhiji's conscience keeper and a titan among the freedom fighters. He was the first Indian occupant of the Rashtrapati Bhavan and his presence graced this august House too. He was the first Premier or Chief Minister of Madras State too. His successors too were exemplary political leaders. Among all Rajaji's successors, however, it is Thiru Karunanidhi who ruled the longest, and thus has left a defining stamp on Tamil Nadu.

Kalaignar started his political career right in his early teenage years, when India was still fighting for freedom, and he left us only recently. When as a young boy fired by ideals he had started working for the downtrodden, India was in the shackles, exploited under foreign rule for long years, stricken by poverty and illiteracy. When he breathed his last, he must have been satisfied that this land and its people had made astounding progress and development on all fronts. He must have been satisfied too, as he spent every waking hour of his long and productive life in the service of the people of the state and also of the nation.

Ladies and Gentlemen, what can I say about his contributions to Tamil literature and cinema? What I know is that there are very few political leaders who are so passionate about language. For him, his mother tongue was the object of worship. Tamil, of course, is one of the greatest and the oldest languages of humankind. (Applause) The whole world takes pride in its rich heritage. But it was Karunanidhi who ensured that it was granted official recognition as a classical language. (Applause) Kalaignar was a leader in a class of his own. He was among the last links we had with the stalwarts of our national movement.

Ladies and Gentlemen, it is to those stalwarts that my thoughts go, as the nation celebrates the 75th anniversary of Independence. Our national movement spans from 1857, or even before, to 1947. During these decades, there were radicals and revolutionaries. There were pacifists and constitutionalists. They had different methods and they had different visions. But they were united in their reverence for the motherland. Each, in his or her own way, strove to serve Bharat Mata. Like different tributaries coming together in a river, they all came together for the cause of national independence. They found a confluence in Gandhiji. Mahatma Gandhi not only personified all that was best in our culture and tradition, but he also improved upon the ideas of several western thinkers. Alongside him was a legion of patriots– lawyers, scholars, social reformers, religious and spiritual leaders and others. Each of them was matchless. Think of Dr. B.R. Ambedkar, such a towering genius and such a visionary!

But for each name written in history books, there were countless others whose names were never recorded. They sacrificed comforts, even careers, and sometimes their lives, so that we could live in a free nation.

Those few decades, I believe, produced some of the greatest generations ever seen on the face of earth. To them, this country will ever remain in debt. To them, the only tribute we can pay is to be continuously inspired by their lives and their ideals. They gave us the gift of freedom but they also gave us responsibility. Their vision has been taking shape, but it is an ongoing process. Just as they each played their own part, we each have to play our part in taking the nation to new heights.

I urge the youth, especially, to continuously engage with the past in order to understand the present and progress in the future. In the lives of Mahatma Gandhi, Subramania Bharati and others, you will find answers to questions that are arising in your minds. I find that the young generation is more and more interested in our recent history. They give me the hope that the work that began with the known and unknown freedom fighters will continue. That India, with its wisdom, will show the way to the world in this century.

Ladies and Gentlemen, I congratulate the people of Tamil Nadu on this auspicious occasion. My best wishes to all of you.

Thank you.

Jai Hind!

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு.நா.வீராசாமி:தலைவரவர்களே,பரிசுச்சீட்டு வாங்குபவர்கள், மாதத்திற்கு ஒரு முறை குலுக்குகின்ற காரணத்தினால் ஒரு மாதம் வரையில் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைக் குறைத்து 15 தினங்களுக்கு ஒரு முறை குலுக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கனவு காண்பவர்கள் ஒரு மாதம் கண்டால் என்ன, 15 நாட்கள் கண்டால் என்ன? (சிரிப்பு)

[தொகுதி 25, 25-8-1972, பக்கம் 409]

சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை – 2-8-2021

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா, கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா ஆகிய விழாக்களுக்குத் தலைமை விருந்தினராக வருகை புரிந்து, விழாப் பேருரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்களே! விழாவுக்குத் தலைமை வகித்து தலைமையுரை ஆற்றவிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களே! சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் மாண்புமிகு திரு. சஞ்சிப் பானர்ஜி அவர்களே! தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று, உரையாற்றிய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்களே! மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நன்றியுரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! சிறப்பு அழைப்பாளர்களே! வந்திருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர் பெருமக்களே, முக்கியப் பிரமுகர்களே, சட்டமன்றப் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, அரசு ஊழியர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நாளாக இந்த ஆகஸ்ட் 2 ஆம் நாள், இனிவரும் காலங்களில் சிறப்புப் பெறவிருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் மிக முக்கியப் பங்கு வகிக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்றைக்கு வருகை புரிந்திருக்கிறார்கள்.

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலனை முன்னிறுத்தி, வாதிடுவதில், போராடுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்; இந்திய ஆட்சிப் பணி கிடைத்தும், அதனை ஏற்காமல், வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சமூக நீதியைத் தனது வாழ்வின் இலக்காகக் கொண்டவர். இத்தனை பெருமைகளுக்குரிய அவர், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வருகை தந்திருப்பது, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

பழமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்தச் சட்டமன்றம், கடந்த ஒரு நூற்றாண்டில் பல புதுமையான சட்டங்களை, முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, சமதர்ம சமூகத்தைப் படைத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

1919 ஆம் ஆண்டில் 'மாண்டேகு–செம்ஸ்போர்டு' சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலம்தான், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலில் இடம்பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது. அந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு 1920 ஆம் ஆண்டு முதன்முதலாகத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக் கட்சி வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது.

1921 ஆம் ஆண்டு கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சி சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டதன் பவள விழா நிகழ்ச்சியும், அதேபோல 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் முதன்முதலாக 1937 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைர விழா நிகழ்ச்சியும், 1997 ஆம் ஆண்டில் அப்போதைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை, நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் நான் நினைவுகூர விரும்புகிறேன். அதே வேளையில், இந்தப் பெருமைமிகு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு சில சட்டங்களை எடுத்துச் சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே மகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை முதன்முதலாக நிறைவேற்றிய பெருமை சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு உண்டு. அதோடு, தேவதாசி ஒழிப்புச் சட்டம், மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இடஒதுக்கீடு, பெண் குழந்தைகளைப் பாதுகாக்க சிறப்புத் திட்டம் என மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை உருவாக்கித் தந்த பெருமை கொண்டது. அதுமட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநிலத்திற்கு "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டி, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானம் நிறைவேற்றியது;

சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது;

நிலச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கியது;

மே தினத்தை அரசு விடுமுறை ஆக்கிட வழிவகுத்தது;

மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது;

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கிட சட்டம் கண்டது;

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது;

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது

எனப் பார் போற்றும் பல்வேறு சட்டங்களை, தீர்மானங்களை நிறைவேற்றிய பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. இந்தச் சீர்மிகு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் இன்றைக்கு நாமெல்லாம் பங்கேற்றுள்ளோம் என்பதே, நாம் எண்ணிப் பெருமிதம்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை நிலைநாட்டப்பட்ட மாபெரும் வளாகம் இது. அரசு முத்திரையில் ‘‘வாய்மையே வெல்லும்’’ எனத் தமிழ்மொழி அரியணையில் அமர்ந்து அலங்கரிப்பதையும் நாம் கண்டு மகிழ்கிறோம். மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர், ஏழை எளியவர் என விளிம்பு நிலை மக்களின் நலன் காக்க இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தச் சட்டமன்றத்தில், அரை நூற்றாண்டுக்கும் மேலாக தனது ஜனநாயகக் கடமையை செம்மையாக நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து, அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருப்பது அனைத்திற்கும் முத்தாய்ப்பானதாகும்.

1957 ஆம் ஆண்டு இந்த மன்றத்திற்கு முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தனது கன்னிப்பேச்சில், நங்கவரம் உழவர்கள் பிரச்சினை குறித்துப் பேசி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து முத்திரை பதித்தவர் கலைஞர் அவர்கள். முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, உறுப்பினராக பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றி, பலரது பாராட்டுகளையும், அன்பையும் பெற்றவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சமூக நீதிக்கு அடித்தளம் அமைத்த மண்டல் ஆணைய அறிக்கையைச் செயல்படுத்த தீர்மானம், தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்ட காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானம், தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கிட, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், மாணவர்கள் உயர் கல்வி பெறுவதில் இருந்த இடர்களை நீக்க நுழைவுத் தேர்வை ஒழிக்கும் சட்டம் போன்ற பல்வேறு புரட்சிகர, சீர்திருத்தத் தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் அவர்களை, அவரது 50 ஆண்டுகால சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொன்விழாவில் பங்கேற்று சிறப்புரை ஆற்றிய பொதுவுடைமைப் போராளியும், முன்னாள் மக்களவைத் தலைவருமான திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், ‘‘கொள்கைகளுக்காகவும், இலட்சியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அதற்குத் தீங்கு வரும்போது எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தவர் கலைஞர்’’ என்று பாராட்டிப் பேசியதை நினைத்துப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியத்

துணைக் கண்டத்தில் எத்தகையதொரு மாபெரும் தலைவராக விளங்கினார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும்.

'உடன்பிறப்பே! உன் இயல்பு என்மீது அன்பைப் பொழிவது!

என் இயல்பு உன் அன்புக்குக் கட்டுப்படுவது!

நம் இயல்பு கழகத்தைக் கட்டிக் காப்பது!'

என்று தனது காந்தக் குரலால் தமிழ்நாட்டு மக்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் தொடங்கி, இனமானப் பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன். முன்னாள் முதலமைச்சரான அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, இன்றும் நம் முன்னால் இருந்து வழிநடத்தும் ஒரு முதலமைச்சராக அவரைக் காண்கிறேன்.

(கரவொலி) இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழன்னையின் தலைமகனான கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததை எண்ணி, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன்; கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன். (கரவொலி)

I take this opportunity to thank our Hon'ble President for gracing this House with his presence and making this historic event more special. I also like to express my sincere gratitude to our Hon'ble Governor of Tamil Nadu for presiding over.

ஜனநாயக மாண்பைக் காக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு, அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி! வணக்கம்! (கரவொலி)

வெற்றி

'முடியுமா நம்மால்' என்பது தோல்விக்கு முன்புவரும் தயக்கம்.

'முடித்தே தீருவோம்' என்பது வெற்றிக்கான தொடக்கம்.

–கலைஞர்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்ட திருவுருவப் படங்கள்

திருவுருவப் படம்	நாள்	திறந்து வைத்தவர்
மகாத்மா காந்தி	24–7–1948	கவர்னர் ஜெனரல் திரு. சி. இராஜகோபாலாச்சாரி
திரு. சி. இராஜகோபாலாச்சாரி	23–8–1948	இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு
திருவள்ளுவர்	22–3–1964	குடியரசுத் தலைவர் மேதகு ஜாகீர் உசேன்
பேரறிஞர் அண்ணா	10–2–1969	இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி
பெருந்தலைவர் காமராஜர்	18–8–1977	குடியரசுத் தலைவர் மேதகு நீலம் சஞ்சீவ ரெட்டி
தந்தை பெரியார் டாக்டர் அம்பேத்கர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில்	9–8–1980	மேதகு ஆளுநர் (கேரளா) திருமதி ஜோதி வெங்கடாசலம்
முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்	31–1–1992	தமிழக முதலமைச்சர் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா
முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா	12–2–2018	மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால்
முன்னாள் அமைச்சர் திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார்	19–7–2019	தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி
சுதந்திரப் போராட்ட வீரர் திரு. வ.உ. சிதம்பரனார் முன்னாள் முதலமைச்சர்கள் டாக்டர் பி. சுப்பராயன் மற்றும் திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார்	23–2–2021	தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி
முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி	2–8–2021	குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த்



காந்தியடிகள் படத்தை இராஜாஜி திறந்து வைத்தல் -- 24-7-1948



இராஜாஜி படத்தை பண்டித நேரு திறந்து வைத்தல் -- 23-8-1948



திருவள்ளுவர் படத்தை திரு. ஜாகீர் ஹுசேன் திறந்து வைத்தல்
-- 22-3-1964



பேரறிஞர் அண்ணா படத்தை திருமதி இந்திரா காந்தி
திறந்து வைத்தல் -- 10-2-1969



திரு. காமராஜர் படத்தை
திரு நீலம் சஞ்சீவ ரெட்டி திறந்து வைத்தல் 18-8-1977



முத்துராமலிங்கத் தேவர், பெரியார், அம்பேத்கர்,
காயிதே மில்லத் ஆகியோர் படத்தை
திருமதி ஜோதி வெங்கடாசலம் திறந்து வைத்தல் -- 9-8-1980



டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் படத்தை
செல்வி ஜெ. ஜெயலலிதா திறந்து வைத்தல் -- 31-1-1992




செல்வி ஜெ ஜெயலலிதா
முன்னாள் முதலமைச்சர்



திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார்
முன்னாள் அமைச்சர்



திரு. வ.உ. சிதம்பரனார்
சுதந்திரப் போராட்ட வீரர்



டாக்டர் பி. சுப்பராயன்
முன்னாள் முதலமைச்சர்



திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார்
முன்னாள் முதலமைச்சர்



முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி

சட்டமன்றப் பேரவை நடைபெற்ற இடங்கள்

சென்னை புனித ஜார்ஜ் கோட்டை 1640 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அது ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக மையமாக முதலில் செயல்பட்டு, காலப்போக்கில் படிப்படியாகக் கம்பெனியின் நிருவாகத் தலைமையிடமாக மாறியது. 1687 முதல் 1692 வரை கோட்டைக்குப் பொறுப்பேற்றிருந்தவர் திரு.யேல் என்பவர். அவர் பேரவை மண்டபத்தை உள்ளடக்கிய கோட்டை இல்லத்தில் வாழ்ந்து வந்தார். அந்த இல்லம் 1694–1695–ல் இடிக்கப்பட்டு, ஆளுநருக்காக அங்கே மூன்றடுக்குக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அதுவே இன்றைய தலைமைச் செயலகக் கட்டடமாகும். இதன் பக்கவாட்டில் உள்ள கட்டடங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டு இதனுடன் சேர்க்கப்பட்டன.

மூன்று மாகாணங்கள்:

இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் மதராஸ் மாகாணம், பம்பாய் மாகாணம், கொல்கத்தா மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களாக அமைக்கப்பட்டன. பின்னர் 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, மாகாணங்களின் ஆளுநர்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது.

ஆளுநரின் நிர்வாகச் சபையும் பட்டயச் சட்டமும்

இந்தியாவில் 1799 முதல் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ஆளுநரின் நிருவாகச் சபை என்ற ஓர் அமைப்பு இருந்து வந்தது; எனினும் 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் சட்டமன்றம் என்ற அமைப்பு முறைப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் மாகாண சட்டமியற்றும் அதிகாரங்கள் கவர்னர் ஜெனரலின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலின் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

கம்பெனி நிர்வாகம் முடிவடைந்து இங்கிலாந்து அரசின் நேரடி நிர்வாகம்

1857 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி பிரகடனத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்திலிருந்த இந்திய நாட்டின் பகுதிகள் இங்கிலாந்து மகாராணியின் நேரடி ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டது. கம்பெனியின் பொறுப்புகளை இங்கிலாந்து பாராளுமன்றம் எடுத்துக்கொண்டது.

1861 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, மாகாணங்களின் சட்டமியற்றும் அதிகாரம் திரும்ப அளிக்கப்பெற்று, ஆளுநரின் கவுன்சிலில் அரசு தலைமை வழக்குரைஞர் மற்றும் 8 உறுப்பினர்கள் வரை நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது.

இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம் 1892

1892 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, மதராஸ் சட்டமன்றத்தின் கூடுதல் உறுப்பினர் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப்பட்டது. மின்டோ–மார்லி சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1909 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தினால் சட்டமன்ற

உறுப்பினர்கள் முழுவதுமாக நியமிக்கப்படும் முறை சற்று மாறினாலும், மக்களால் நேரடியாக உறுப்பினர்கள் பெருமளவு தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் நடைமுறைக்கு வரவில்லை; எனினும், சட்டமன்றத்தில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 20-லிருந்து 50-ஆக உயர்த்தப்பட்டதோடு, சட்டமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் இந்தியர்கள் இடம்பெறவும் இச்சட்டம் வழி செய்தது.

புனித ஜார்ஜ் கோட்டையில் சட்டமன்றத்திற்கென புதிய கட்டடம்

உறுப்பினர் எண்ணிக்கை 50 என அதிகரித்ததை அடுத்து, சட்டமன்றத்திற்கெனப் புதிய கட்டடம் புனித ஜார்ஜ் கோட்டையில் 1910 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் 1759-ல் கோட்டையை முற்றுகையிட்டபோது எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் 1761-ல் திரும்பப் பெறப்பட்ட 32 கரும்படிகத் தூண்களில் 20 தூண்கள் இக்கட்டடத்தில் நிறுவப்பட்டு, அதன் தோற்றத்திற்கு இன்று வரை அவை அழகூட்டி வருகின்றன.

1911 அக்டோபர் 31 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் அப்போதைய ஆளுநர் சர் ஆர்தர் லாலி மற்றும் அவரது கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்திய அரசுச் சட்டம் 1919 இன்படி நூற்றாண்டு விழா கண்ட சட்டமன்றத்தின் தோற்றம்

1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி சென்னை மாகாணத்தில் முதன்முறையாகத் தேர்தல்கள் நடைபெற்று அமைக்கப்பட்ட சட்டமன்றம், 127 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

முதல் சட்டமன்றம் கூடிய இடம்

புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்ற மண்டபத்தில் இம்மன்றம் 1921 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதுதான் முதல் சட்டமன்றம். அந்தச் சட்டமன்றத்திற்குத்தான் தற்போது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

அந்தச் சட்டமன்ற மண்டபத்திற்கு 6-3-1922 ஆம் நாளன்று சென்னை மாகாண ஆளுநர் விலிங்டன் பிரபு மற்றும் அவரது துணைவியார் வருகை தந்து பேரவைத் தலைவர் அமரும் அழகிய இருக்கையைப் பரிசளித்தனர்.

இரண்டாம் இடமாக பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் பேரவைக் கூட்டம்

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி சட்டமன்றத்தில் பேரவை, மேலவை எனச் சென்னை மாகாணத்தில் இரண்டு அவைகள் முதன் முதலில் அமைந்தன. அந்தச் சட்டப்படி நடைபெற்ற 1937 தேர்தலுக்குப் பின்னர் 14-7-1937 அன்று அமைந்த இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 127 ஆக இருந்தது. அதனால் அப்பேரவையின் கூட்டங்கள் 1937 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவை (செனட்) மண்டபத்தில் நடைபெற்றது. ஆக, தமிழகச் சட்டப் பேரவை முதன்முதல் கூடிய நாள் 14-7-1937 இதைக் கணக்கில் வைத்தே பேரவையின் பொன்விழா, வைரவிழாக்கள் கொண்டாடப்பட்டன. 31-8-1937 அன்று செனட் மண்டபத்தில் நடைபெற்ற இரு அவை உறுப்பினர்களும் பங்குகொண்ட முதல் கூட்டுக் கூட்டத்தில் மேலவைத் தலைவர் திரு. யு. இராமாராவ் தலைமையில், அவரது இருக்கைக்கு அருகில் பேரவைத் தலைவர் திரு. புலுசு சாம்பமூர்த்தி அமர்ந்திருக்க, ஆளுநர் உரை மிகச் சுருக்கமாக ஆற்றப்பெற்றது. காங்கிரஸ் கட்சியின் கொள்கையின்படி, அரசமைப்பு நிர்ணய சபை வேண்டுமென்ற தீர்மானத்தை முதல்

நாள் பேரவைக் கூட்டத்திலேயே இராஜாஜி அவர்கள் முன்மொழிந்தார். 1-9-1937 அன்று முதலமைச்சர் இராஜாஜி அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தார். 14-7-1937 முதல் 24-12-1937 வரை பேரவைக் கூட்டம் சென்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

சட்டமன்றம் கூடிய மூன்றாம் இடம்

27-1-1938 முதல் 26-10-1939 வரை பேரவையின் கூட்டம் அரசினர் தோட்டத்திலுள்ள இராஜாஜி மண்டபம் என்று பின்னர் பெயரிடப்பட்ட, விருந்தளிப்பு மண்டபத்தில் (Banquet Hall) நடைபெற்றது.

அப்போது புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள மண்டபத்தில் சட்டமன்ற மேலவை மட்டும் நடைபெற்று வந்தது.

இராஜாஜி பதவி விலகினார்

இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்துவது குறித்து இங்கிலாந்து அரசு எடுத்த நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காந்தியடிகளின் அறிவுரைப்படி ஆட்சியில் இருந்த இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை 29-10-1939 இல் இராஜிநாமா செய்தது. அதனால் 30-4-1946 வரை மாகாணத்தில் ஆளுநரின் ஆட்சி நடைபெற்றது. இடையில் 1-10-1945 அன்று சட்டமன்றப் பேரவை ஆளுநரால் கலைக்கப்பட்டது. மேலவை என்ற அமைப்பு தொடர்ந்து இருந்தாலும் கூட்டங்கள் நடைபெறவில்லை.

1946-தேர்தலுக்குப் பின் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டம்:

1946 இல் மாகாண சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்ற பின்னர் பேரவை 24-5-1946 முதல் 27-5-1952 வரை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்த சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடியது. அதன் அருகிலிருந்த நிருவாக சபை மண்டபம் விரிவுபடுத்தப்பட்டு மேலவை மண்டபமாகச் செயல்பட்டது.

1952 முதல் பொதுத் தேர்தல் – நான்காம் இடமாக அரசினர் தோட்டத்தில் பேரவைக்குப் புதிய மண்டபம்

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு, இந்தியா குடியரசாக மலர்ந்த பின்னர் 1952 ஆம் ஆண்டு, முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அன்றைய சென்னை மாகாணம் என்பது இன்றைய தமிழகம், தற்போதைய ஒடிசா, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் உள்ள சில பகுதிகளும் முன்னாள் ஐதராபாத் சமஸ்தானம் நீங்கிய ஆந்திர மாநிலம் முழுவதும் அடங்கிய மாகாணம். இந்த அனைத்துப் பகுதிகளிலும் 21 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு, 375 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புனித ஜார்ஜ் கோட்டை சட்டப் பேரவை மண்டபத்தில் 375 உறுப்பினர்களும் அமர இடவசதி இல்லாததால் சட்டமன்றப் பேரவை, சென்னை அரசினர் தோட்டத்தில் ரூ.10 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டது. அந்தப் பேரவை மண்டபத்தை 2-5-1952 அன்று ஆளுநர் ஸ்ரீபிரகாசா திறந்து வைத்தார். அந்தப் புதிய சட்டமன்றக் கட்டடத்தில் பேரவை 3-5-1952 முதல் 27-12-1956 வரை அப்பேரவைக் காலம் முழுவதும் கூடியது.

1957-க்குப் பின் புனித ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் பேரவைக் கூட்டம்

1-10-1953 அன்று ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. 1-11-1956 அன்று மொழிவாரி மாநிலங்கள் அமைந்து, தொகுதி மறுவரையறை

செய்யப்பட்ட பின்னர் சென்னை மாநிலம் தனியே அமைந்தது. அதனால், சென்னை மாநிலத்திற்கு 1957 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது உறுப்பினர் எண்ணிக்கை 205 ஆகக் குறைந்தது.

1957 சட்டமன்றத் தேர்தலுக்குப்பின் பேரவைக் கூட்டம் 29-4-1957 ஆம் நாள் முதல் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே நடத்தப்பட்டது.

புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்த சட்டமன்றப் பேரவை செவ்வக வடிவில் அமைந்தது. தென்புறம் அமைந்த பேரவைத் தலைவர் இருக்கைக்கு இருபுறமும் தலா ஏழு வரிசைகளில் மொத்தம் 6 பிளாக்குகளாக, படிப்படியாக உயரும் இருக்கைகள் உறுப்பினர்களுக்கென அமைக்கப்பட்டிருந்தன. சென்னை அரசினர் தோட்டத்தில் 1952 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சட்டமன்றக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட நவீன இருக்கைகள் மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டன. பேரவை மாடங்கள் மறு வடிவமைப்பு செய்யப்பட்டன. அரசினர் தோட்டத்திலிருந்த பழைய சட்டமன்றக் கட்டடம் முதலில் பாலர் அரங்கம் என்றும், பின்னர் கலைவாணர் அரங்கம் என்றும் பெயர் கொண்டது.

மூன்று பார்வையாளர் மாடங்கள்

புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்திற்கு மேல்புறம் உப்பரிகையில் மூன்று பார்வையாளர் மாடங்கள் இருந்தன. பேரவைத் தலைவர் இருக்கைக்கு எதிர்ப்புறம் மேலே அமைந்துள்ள மாடம் பேரவைத் தலைவர் மாடம் என அழைக்கப்பட்டது. இடப்புறம் அமைந்திருந்த மாடத்தின் ஒரு பகுதி பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. பேரவைத் தலைவர் இருக்கைக்கு நேர்மேலே அமைந்த மாடம் பேரவை நடவடிக்கைகளை ஆளுநர் அமர்ந்து பார்க்க ஏதுவாக அமைக்கப்பட்டு, "ஆளுநர் மாடம்" என அழைக்கப்பட்டது. அதே வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் அமரக்கூடிய மாடங்களும் உள்ளன. 1957-ல் மறுசீரமைப்புக்குப் பின் பார்வையாளர்கள் மாடத்தில் 190 ஆண்களும், 42 பெண்களும், பேரவைத் தலைவர் மாடத்தில் 48 பேரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியமானவர்கள் அமரும் மாடத்தில் 12 பேரும் அமர இட வசதி செய்யப்பட்டிருந்தது.


பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலதுபுறம் தலைமைச் செயலக மற்றும் துறை அலுவலர்கள் அமருவதற்கான அலுவலர் மாடம் அமைக்கப்பட்டிருந்தது. பேரவையின் புறத் தாழ்வாரத்திலிருந்து அதற்கு வழி அமைக்கப்பட்டிருந்தது.

பத்திரிகையாளர்களுக்கு இருக்கை வசதிகள்

1957-க்கு முன்னர் பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த அளவிலான இருக்கை வசதிகளே பேரவையில் செய்யப்பட்டிருந்தது. எனவே, பேரவைத் தலைவர் இருக்கைக்கு இடதுபுறம் ஏற்கெனவே இருந்த இடங்களோடு மேற்குப் புறத்திலும், பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலதுபுறத்தில் அலுவலர்கள் மாடத்தையொட்டிய பகுதியிலும் கூடுதல் இடங்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. மேலும், மேற்குப் புறமிருந்த பார்வையாளர் மாடத்தில் முதல் வரிசையும் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பேரவைச் செயலகத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுச் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். அடையாள அட்டை வழங்கும் பணியில் உதவுவதற்காக









பத்திரிகையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பத்திரிகை ஆலோசனைக் குழு ஒன்றை அமைப்பதென 1957 ஆம் ஆண்டு பேரவைத் தலைவரால் முடிவு செய்யப்பட்டது. பேரவையில் பத்திரிகையாளர்களுக்கு இருக்கைகளை ஒதுக்குவது குறித்து இக்குழு பேரவைத் தலைவருக்குப் பரிந்துரைகளைச் செய்கிறது.

இம்மண்டபத்தில் பேரவையின் முதல் ஐந்து கூட்டத் தொடர்கள் 29-4-1957 முதல் 30-3-1959 வரை நடைபெற்றன.

ஐந்தாவது இடத்தில் பேரவைக் கூட்டம்

உதகமண்டலம் அரண்மூர் மாளிகையில் 6-வது பேரவைக் கூட்டத் தொடர்

பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு முடிவிற்கிணங்க, பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர் 20-4-1959 முதல் 30-4-1959 வரை உதகமண்டலத்திலுள்ள அரண்மூர் மாளிகையில் 9 நாட்கள் நடைபெற்றது. அங்கு, சட்டமன்ற மேலவை 4-5-1959 முதல் 9-5-1959 வரை 6 நாட்கள் நடைபெற்றது.

மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டம்

31-8-1959 முதல் பேரவை தொடர்ந்து புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே கூடிவந்துள்ளது. 1957 முதல் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பேரவை மீண்டும் நடைபெறத் தொடங்கியபோது, அதன் அருகிலேயே விரிவாக்கப்பட்ட மேலவை மண்டபத்தில் மேலவையின் கூட்டம், 1986 இல் மேலவை கலைக்கப்படும் வரை நடைபெற்றது.

பதின்மூன்றாவது பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடரின் நிறைவு நாளான 11-1-2010 வரை புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவை கூடியது.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ஆறாவது இடமாக புதிய சட்டமன்ற வளாகம்

புனித ஜார்ஜ் கோட்டை வளாக சட்டமன்றத்தில் இடப் பற்றாக்குறை ஏற்பட்டதை தொடர்ந்து, புதிய சட்டமன்ற வளாகம் கட்டப்பட வேண்டுமெனும் தேவை எழுந்தது. அதன் காரணமாக, அரசு முடிவு செய்தபடி ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வடிவமைத்துக் கட்டிய புதிய சட்டமன்ற வளாகக் கட்டடம் 13-3-2010 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் திருமதி சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதன் பின் பதின்மூன்றாவது பேரவையின் கூட்டத் தொடர் 19-3-2010 முதல் 10-2-2011 வரை 46 நாட்கள் ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் திறக்கப்பட்ட புதிய சட்டமன்றக் கட்டடத்தில் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டங்கள்

2011 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தது. முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா முடிவின்படி பதினான்காவது பேரவை புனித ஜார்ஜ் கோட்டையில் 14-5-2011 அன்று தொடங்கி, அதன் காலம் முழுவதும் நடைபெற்றது. அதேபோல, 2016 தேர்தலில் வென்ற பின்பும் பதினைந்தாவது பேரவையின் கூட்டம் 15-5-2016 முதல் தொடங்கி 24-3-2020 வரை புனித ஜார்ஜ் கோட்டையிலேயே நடைபெற்றது.

புதிய கலைவாணர் அரங்கில் பேரவைக் கூட்டங்கள்

உலகையே அச்சுறுத்தி இலட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட கொரோனா நோய்த் தொற்று காரணமாகப் பேரவையை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கில் நடத்திட அ.தி.மு.க. அரசு முடிவு செய்தது. அதன்படி 14-9-2020 முதல் 27-2-2021 வரை பேரவைக் கூட்டங்கள் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்திலேயே நடைபெற்றன.

2021 இல் 16-வது பேரவைக் கூட்டங்கள்

2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று 6-வது முறையாக ஆட்சியமைத்தது.

திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 7-5-2021 அன்று கிண்டி ஆளுநர் மாளிகையில் முதல்முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.

11-5-2021 அன்று மாண்புமிகு பேரவை உறுப்பினர் பதவியேற்பு நிகழ்ச்சியும் 12-5-2021 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் பதவியேற்பும் நிகழ்ந்தன.

21-6-2021 அன்று மேதகு ஆளுநர் உரை நிகழ்த்தினார்.

22-6-2021 முதல் 24-6-2021 வரை ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24-6-2021 அன்று ஆளுநர் உரை விவாதத்திற்குப் பதிலுரை வழங்கினார்கள்.

13-8-2012 அன்று 2021-2022 நிதியாண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையும், 14-8-2021 அன்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையும் அவையில் அளிக்கப்பட்டன.

16-8-2021 முதல் 19-8-2021 வரை 2021-2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியனமீது விவாதங்கள் கலைவாணர் அரங்கிலேயே நடைபெற்றன.

23-8-2021 முதல் 13-9-2021 வரை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்கள் நடைபெற்றன. 8-9-2021 அன்று பேரவை மாலையிலும் கூடியது.

இப்படி தமிழக சட்டப் பேரவைக் கூட்டங்கள் 1. புனித ஜார்ஜ் கோட்டை 2. பல்கலைக்கழகச் செனட் மண்டபம் 3. உதகமண்டலம் அரண்மூர் மாளிகை 4. இராஜாஜி மண்டபம் 5. அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றக் கட்டடம் 6. ஓமந்தூரார் தோட்டம் புதிய சட்டமன்றக் கட்டட வளாகம் 7. புதிய கலைவாணர் அரங்கக் கட்டடம் என 7 இடங்களில் நடைபெற்றுள்ளன. எனினும், 1921 முதல் 1937 வரை, 1946 முதல் 1952 வரை, 1957 முதல் 2010 வரை, 2011 முதல் 14-9-2020 வரை மற்றும் 8-2-2022 முதல் தற்போது வரை எனப் பல ஆண்டுகள் பேரவைக் கூட்டங்கள் புனித ஜார்ஜ் கோட்டையிலேயே நடைபெற்றுள்ளன.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்றப் பேரவையில்
மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய முதல் உரை
1–4–1989

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே தெரிவிப்பதற்கு முன்பு, என்னை இந்த அவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்ற ஆயிரம்விளக்குத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, அரசியலில் நான் சிறுவனாக இருந்தபோதே தட்டிக் கொடுத்து, உற்சாகப்படுத்தி, ஆர்வமூட்டி இருக்கின்ற நம்முடைய இதய தெய்வம் வங்கக் கடல் ஓரத்தில் ஆறு அடி சந்தனப் பேழையில் உறங்காமல் உறங்கிக்கொண்டிருக்கும் 'ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் உறங்குமிடம் நோக்கித் தொழுது, என் கன்னிப் பேச்சினை இந்தப் பேரவையில் தொடங்குகின்றேன்.

1989–90 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டு, ஆறாவது நாளாக விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 1967–68 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய வருவாய் வெறும் ரூ.248 கோடிதான். ஆனால், இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே வருவாய்க் கணக்கிலே மட்டும் பற்றாக்குறை ரூ.288 கோடியைப் பார்க்கின்றபோது எந்த அளவிற்கு நாட்டினுடைய பொருளாதார நிலை வளர்ந்திருக்கிறது என்பதனை நாம் மிகத் தெளிவாக உணரலாம்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே பிப்ரவரித் திங்கள் 11 ஆம் நாள் உரையாற்றும்போது, கடந்த 40 ஆண்டுகாலமாக மத்திய அரசு மேற்கொண்ட சில நடவடிக்கைகளினால், மத்திய அரசினுடைய நிதியாதாரங்கள் குறைந்து கொண்டுவந்திருக்கின்றன என்ற உண்மை நிலையை இந்த அவைக்கும், நாட்டுக்கும் உணர்த்தியிருக்கிறார்கள். அதனால்தான் பிப்ரவரித் திங்கள் 24 ஆம் நாள் தமிழகத்திற்கு வருகை தந்த ஒன்பதாவது நிதிக் குழு முன்பு உரையாற்றியிருக்கின்ற நம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் நிதியாதாரங்களைத் திரட்டுவதற்காகத் தொடர்ந்து நாங்கள் எடுத்து வரும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கப்படுவதோடு, மத்திய அரசிலிருந்து நிதி மாற்றங்கள் செய்வதன்மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும்

என்று திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் "சொல்வதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்" என்று தெளிவாகக் கூறியிருந்தது. அதைச் சுட்டிக் காட்டி, ஆளுநர் உரையில் பேசியிருக்கின்ற எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் என்னவாயிற்று, என்னவாயிற்று என்று இங்கே திருப்பித் திருப்பிக் கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்கள் எல்லாம், இப்போது நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு என்ன பேசுவது என்று தெரியாத நிலையில் இருக்கின்றார்கள் என்பதனை நாடு மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறது.

நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தில் கலந்து கொள்வதற்குப் பதிலாக, இடம் காலியாகாதா என்று இன்றைக்குச் சில பேர் ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இந்த ஆட்சி இதுபோன்று இன்னும் பல நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் பலர் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். யார் அவர்கள்? தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் இலவசமாக 5 கிலோ அரிசி தரப்படும் என்று இந்த அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் மிகத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அந்தப் பயனைப் பெறுவதற்காகக் காத்திருக்கும் 50 இலட்சம் குடும்பங்களும் இந்த ஆட்சியை வாழ்த்திக் கொண்டிருக்கின்றன, பாராட்டிக் கொண்டிருக்கின்றன. வருமான உச்ச வரம்பு இல்லாமல் விபத்திலே சிக்கி இறக்கக் கூடிய லாரி, ஆட்டோ ரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து போன்றவைகளை ஓட்டக் கூடிய ஓட்டுநர்கள், கட்டடக் கட்டுமானத் தொழிலாளர்கள், இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் எண்ணற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்கள் இறந்து விட்டால், அவர்களுடைய குடும்பத்தினருக்கு 10 ஆயிரம் ரூபாய் பாதுகாப்புத் தொகையாக வழங்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிற அறிவிப்பைப் படித்து விட்டு அந்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் அத்துணை பேரும் இத்த ஆட்சியை நெஞ்சார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்; பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் அறிவித்த திட்டமான ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகியோருக்கு கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு இலவசமாக்கப்படும் என்ற திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதைக் கண்டு எண்ணற்ற தமிழ் நெஞ்சங்கள் இன்றைக்கு இந்த ஆட்சியை வாழ்த்திக் கொண்டிருக்கின்றன; பாராட்டிக் கொண்டிருக்கின்றன. 50 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையத் தக்க வகையில் பொங்கல் நாளன்று இலவசமாக ஒரு ஜோடி கைத்தறி வேட்டி, சேலை வழங்கப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதியோர் உதவித் தொகை இவ்வளவு பேருக்குத்தான் வழங்கப்படும் என்று கடந்த கால ஆட்சியில் வரம்பு இருந்திருக்கிறது. அதனைக்கூட மாற்றி மொத்தத்தில் நான்கு இலட்சம் பேருக்கு அந்த

உதவித்தொகை வழங்கப்படும் என்றும், அதுவும் ரூ.35–லிருந்து 50 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் 8 ஆம் வகுப்பிற்கு மேல் படித்துத் தேர்வு பெற்றிருந்தால் அவர்களுடைய திருமணச் செலவிற்கென்று 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை; கர்ப்பவதியான பெண்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் 4 மாதங்களுக்கு உதவித் தொகை; குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் மானியத் தொகை – இப்படி இந்த நிதிநிலை அறிக்கைமூலம் ஏற்படும் நன்மைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஏராளமான திட்டங்களை– அடுக்கடுக்காக, அதுவும் காலியான கஜானாவைக் கையில் வைத்துக் கொண்டு – ஏழை எளிய மக்களுக்காகக் கொண்டு வந்திருக்கும் நிதிநிலை அறிக்கையை இந்தக் கழக அரசு நீடிக்க வேண்டுமென்று வாழ்த்திக்கொண்டிருக்கிற தமிழக மக்களின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலட்சக்கணக்கான இளைஞர்களின் ஆதரவைப் பெற்று இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிற நம்முடைய கழக அரசு, இளைஞர்களையும் மறந்துவிடாமல் நகரப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கின்ற முறையில், 44,000 பேர்கள் பயன்பெறும் வகையில் ஒரு சிறப்பான திட்டத்தையும் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு உதவும் மற்றுமொரு திட்டத்தின்கீழ் சொந்தமாகத் தொழில் தொடங்க சுமார் 18,000 இளைஞர்களுக்கு உதவி செய்யப்படும் என்றும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் 60 பேருக்குக் குறையாமல் 25,000 பேருக்கான வேலைவாய்ப்புக்கு வரும் ஆண்டில் வழி வகுக்கும் திட்டமும் தொடங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையினை மனத்திலே நிலைநிறுத்தி இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துவிட்டு, ஆண்டுக் கணக்கில் போஸ்ட்மேன் வருகைக்காகத் தவம் இருந்து காத்துக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான வேலையற்ற இளைஞர்களின் சார்பில் ஒரு பணிவான வேண்டுகோளை இந்த அவையிலே நான் பணிவுடன் வெளியிட விரும்புகிறேன். ஆண்டுக் கணக்கிலே பெயர்களைப் பதிவு செய்துவிட்டு வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு அரசுப் பணிகளிலே சேர்வதற்கான வயது உச்ச வரம்பு 28 என்பது இப்போது 30 வயதாக உயர்த்தப்பட்டு இருந்தபோதிலும், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பெயரைப் பதிவு செய்து கொண்டு பத்தாண்டுகளுக்கு மேல் வேலை கிடைக்காமல் காத்திருக்கின்றவர்களுக்கு ஒரு கிரேஸ் டைம் கொடுப்பது போல் வயது வரம்பைத் தளர்த்தி, அரசுப் பணிகளிலே சேர்வதற்கான வாய்ப்பினை இந்த அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று இளைஞர் சமுதாயத்தின் சார்பில் நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையின் அடிப்படையில் தலைமைச் செயலக ஆணைகள், ஆங்கிலத்தில் மாத்திரம் அல்லாமல் தமிழிலும் வெளியிட விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

கடந்த ஆட்சியில் வியாபாரத் தலங்களின் பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள் அனைத்திலும் தமிழ் இடம்பெற வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதும் அது சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே கழக ஆட்சியில் அதுபற்றி உடனடியாகக் கவனித்து, கர்நாடகத்தில், ஆந்திராவில், கேரளாவில் மற்றும் பல்வேறு மாநிலங்களில் அந்தந்த மாநிலத் தாய் மொழிக்கு முக்கியத்துவம் தருவதைப் போன்று, நம்முடைய மாநிலத்திலும் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

‘கண்ணுதற் கடவுள் கழகமோடமர்ந்து
மண்ணிடை ஆய்ந்த பசுந்தமிழ்’

என்ற பெருமையுடைய தமிழுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் நம்முடைய அரசு பெயர்ப் பலகைகளிலும், விளம்பரப் பலகைகளிலும் தமிழ் எழுத்துக்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் தர வேண்டுமென்று இந்த அரசினை மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கையெழுத்திட்ட மை காய்வதற்குள் நற்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என நம்முடைய கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

அந்த வகையில்தான் நம்முடைய கழக அரசு பொறுப்பு ஏற்ற இந்த இரண்டு திங்களில் வெகு வேகமாக நல்ல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்களின் வேக ஓட்டத்திற்கு ஈடுகொடுத்து அலுவலர்களால் ஓடி வர இயலாவிட்டாலும் விரைந்து நடந்து வந்தாவது காரியங்களை ஆற்றிட முன்வந்தால் தமிழகம் நல்ல பயன்களை நிச்சயமாகப் பெற்றிட முடியும். அப்பொழுதுதான் அரசின் சார்பில் அறிவிக்கப்படுகின்ற சலுகைகள் முறைப்படி மக்களைச் சென்றடைய முடியும்.

நான் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பெங்களூர் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே வளாகத்திற்குள் ஓர் அறிவிப்புப் பலகையைக் கண்டேன். அதில் லைசென்ஸ் பெறுவதற்கு, பெயர் மாற்றம் செய்வதற்கு டோக்கன்கள் வழங்குவதற்கு என்று இது போன்ற ஒவ்வொரு பணிக்கும் எவ்வளவு நேரம், எவ்வளவு நிமிடம் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அந்தப் பணியை முடிக்க எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அதுபோலவே அரசுப் பணிகளுக்காக மக்கள் மனு கொடுக்கின்ற நேரத்தில், அவைகளை வகை பிரித்து இவையிவைகளை இத்தனை நாட்களுக்குள் முடிவு செய்து பதில் அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிலை எடுத்தால் அது ஓரளவுக்குப் பயனைத் தரக்கூடும். மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான மனுக்களுக்கு உடனடித் தீர்வுகள் காணப்பட வேண்டும்.

இங்கே, நம்முடைய கோட்டையில் முதலமைச்சர் அவர்களிடத்தில் மனுக்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பெண்கள், இளைஞர்கள், பொதுமக்கள், மனுக்களைக் கொடுக்க தினம் தினம் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலானவை வீடு வேண்டும் என்பது குறித்து அல்லது வேலை வேண்டும் என்பது குறித்து, அவைகளைக் கொடுத்து அவர்களுக்கு உதவிட நம்முடைய அரசு முன்வந்தாக வேண்டும். 60 நாட்களுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் கஜானா காலியாக இருந்த சூழ்நிலையில், அதுவும் மைனஸ் எழுபது கோடி ரூபாய் என்ற நிலையில், பாலைவனத்தில் பயணம் செய்ய வேண்டிய சூழலில் பொறுப்பு ஏற்றிருக்கிறோம் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு அறிவித்தார்கள். அப்படிப்பட்ட பாலைவனத்தைச் சோலைவனமாக்கும் முயற்சியோடு தமிழகம் பொற்காலமாக அமையவிருப்பதற்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த கூட்டத் தொடரில் மதுவிலக்குத் தொடர்பான சட்டத்திலே, விதிகளிலே பல்வேறு மாற்றங்களைச் செய்து, ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் வருவாய்க்கு வழி வகுத்து, திட்ட இடர்ப்பாடுகள் இம்மாற்றங்களினால் ஓரளவிற்குக் குறையும் என்ற அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. "There is no compromise in between fired and fire brigades" அந்த வினாடிக்கு என்ன செய்ய வேண்டும்? கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்ற தீயை அணைத்தாக வேண்டும். கருகிக்கொண்டிருக்கின்ற உயிர்களைக் காப்பாற்ற வேண்டும்.

தீப்பிடித்ததற்கான காரணங்களைத் தேடிப் பிடிப்பதற்காகவோ அல்லது காரணமானவர்களைக் காயப்படுத்துவதற்காகவோ மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற பணி அல்ல நம்முடைய பணி. தற்போதைய பணி, போர்க்கால நடவடிக்கைகளைப் போன்று, எரிகின்ற நெருப்பை அணைத்தாக வேண்டும்; சோதனைகளில் சிக்கியிருக்கும் தமிழ் நிலத்தைக் காப்பாற்ற வேண்டும். சீர்கெட்டுக் கிடக்கும் நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டும். சாராய சாம்ராஜ்யத்தின் நீரூற்றை அடைத்து பாலைவனப் பயணத்தில் ஒரு நீரோட்டத்தைக் கண்டுபிடித்ததன்மூலம் அரசிற்கு 100 கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது. ஆகவே, ஊழலுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் யார் என்று கண்டுபிடித்து, ஊருக்குச் சொல்வதோடு நம்முடைய பணி முடிந்து விடவில்லை. ஊழலின் ஊற்றுக்கண் அடைக்கப்பட்டாக வேண்டும். அதன்மூலம் வருகிற வருவாய் அரசிற்கு வந்தாக வேண்டும். அதனால் தமிழக மக்கள் பயன்பெற்றாக வேண்டும். அதுதான் மாநில அரசின் குறிக்கோள் ஆகும். அந்தக் குறிக்கோளோடு அமைந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையினை இளைய சமுதாயத்தின் சார்பில் மனதார வரவேற்று அமைகிறேன், வணக்கம்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராக ஆற்றிய முதல் உரை

11-8-2006

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் எனப்படுபவை, என் போன்றோருக்குக் கழகம், பெரியார், அண்ணா, கலைஞர் என்பது, (மேசையைத் தட்டும் ஒலி) என்னாளும் இன்பம் தருபவை. அறிவால் சிறந்தவர், நிருவாகத்தில் சிறந்தவர், பொதுத் தொண்டுக்காக தியாகம் செய்வதில் சிறந்தவர் என்று தந்தை பெரியார் அவர்களால் பாராட்டப்பட்டு, ஏதுமறியா தமிழர் தூய வாழ்வை, எனக்குப்பின் சீர்படுத்தும் மறவன் நீதான். 'அண்ணன் என் சொல் வழியில் நடந்து சென்று அவனியெல்லாம் போற்றும்வண்ணம் ஆளுக தம்பி' என்று அறிஞர் அண்ணா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, இவர் தொடாத துறைகள் எதுவும் இல்லை, தொட்ட துறை எதிலும் வெற்றிபெறாமல் விட்டதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் கூறும் நல்லுலகத்தின் தனிப்பெரும் தலைவராக, தன்னிகரற்ற தலைவராக விளங்கிவரும் நமது தலைவர், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தாள்களை என் இரண்டு கண்களாலும் ஆயிரமாயிரம் முறை ஒற்றி உணர்ந்து, நாத்தழும்பேற நன்றி நவின்று, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பெரியார் காட்டிய பகுத்தறிவுப் பாதையிலிருந்து சிறிதும் பிசகாமல், அண்ணா வழியில் அயராது உழைத்து, தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற துணையாய், கழகத்தைக் கட்டிக் காத்து, எங்களையெல்லாம் பேணி பாதுகாத்து வரும் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் திருவடியைத் தொட்டு (மேசையைத் தட்டும் ஒலி) என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

1989 ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் ஆற்றிய அரும் பணியையும், 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரையிலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி. மணி அவர்கள் ஊர், நகரம், நாடு என்று சுற்றிச் சுழன்று, ஆற்றிய பெரும் பணியையும் முன்மாதிரிப் பணியாக எண்ணி என் பதிலுரையை நான் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் 1989, 1996, 2001, அதேபோல 2006 என்று நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு அமைச்சராகவும் நான் விளங்குவதற்கு வேராகவும், விழுதாகவும் இருந்து, ஒளியும், உரமும் ஊட்டியவர்கள்தான் ஆயிரம்விளக்குத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள். எனது நெஞ்சத்தின் நெருக்கமான நேசத்திற்குரிய அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி உணர்வுகளைக் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

நீண்ட, நெடிய, வரலாற்றுப் பாரம்பரிய சிறப்புக்களைப் பெற்றிருக்கக்கூடிய இந்தப் பேரவையில், அமைச்சர் என்ற அந்த முறையிலே என்னுடைய துறைகளுக்கான மானியக் கோரிக்கையைப் படைத்தளித்து, உரையாற்றும்போது, என்னுடைய நினைவுகளில், ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. அந்த நிகழ்ச்சி மின்னல் கீற்றாய் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. ஆம். 25–10–1996 ஆம் ஆண்டு சென்னை, ரிப்பன் கட்டட வளாகத்தில் திராவிட பேரியக்கத்தினுடைய முன்னோடிகளில் ஒருவராக இருந்த, சர் பிட்டி. தியாகராயர் அவர்களுடைய திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, வணங்கிவிட்டு, மாநகராட்சிக் கூடத்திலே, தலைவர் கலைஞர், இனமான பேராசிரியர் பெருந்தகை, மறைந்த மக்கள் தலைவர் ஐயா மூப்பனார், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் தலைவர் மருத்துவர் ஐயா ஆகியோர் பங்கேற்று வாழ்த்து மொழிந்திட, சென்னை மாநகரத்தினுடைய 44–வது மேயராகப் பதவியேற்ற அந்த நாளை எண்ணிப் பார்க்கிறேன். அதைத் தொடர்ந்து, ரிப்பன் கட்டட வளாகத்திலே நடைபெற்ற நன்றி அறிவிப்புக் கூட்டத்திலே உரையாற்றுகிறபோது ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். சென்னை மாநகரத்தின் தந்தை என்று சொல்வதைவிட, இந்த மாநகரத்தின் முதல் சேவகனாக இருப்பதையே விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்தினுடைய முதல் குடிமகன் என்று சொல்வதைவிட, மாநகர மக்களுடைய முதல் ஊழியனாக இருப்பதையே விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்திற்குரிய மேயர் என்று என்னை அழைப்பதைவிட, அனைவரையும் வணங்கக்கூடியவன் என்ற அந்த உரிமையோடு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய செயல்பாடு அமையும் என்று அன்றைக்கு நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்று, நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆணையை ஏற்று, அறிவுரையை ஏற்றுக்கொண்டு, குறைந்தது 90 நாட்களுக்குள்ளாக ஏறக்குறைய 10 மாவட்டங்களில் சுற்றுப் பயணத்தை நடத்தி, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய பிரச்சினைகள், அதேபோல அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களுடைய பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பில் இருக்கக்கூடிய நிருவாகிகள், அதேபோல அரசு அலுவலர்கள் இவர்களோடு கலந்துபேசி, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் அறிந்து, புரிந்து, அவற்றைத் தொடர்ந்து ஆய்வு செய்து, செயல் திட்டங்களை வகுத்தும், தொகுத்தும், இந்த உள்ளாட்சித் துறையின் மூலமாக இன்றைக்கு நாங்கள் செயலாற்றிக்கொண்டிருக்கிறோம்.

அகநானூற்றிலுள்ள 77 ஆம் பாடலில் உள்ள ‘கயிறு பிணிக் குழிசி ஓலை’ என்கிற வரிகள் ஊர் மன்றங்களின் உறுப்பினர்கள், ஊர் பொது மக்கள்மூலம் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அடையாளம் காட்டுகிறது. அதேபோல்,

பல்லவர் காலத்தில் கிராம சபைகள் நீதி வழங்குவது மட்டுமல்லாமல், ஏரி, குளம், தோட்டம் ஆகியவற்றைப் பாதுகாத்தல், தெரு வழிகளை அமைத்தல், அவற்றைக் கண்காணித்தல், வரி வசூலித்தல், இவை போன்ற பணிகளை அன்றைக்கு மேற்கொண்டிருக்கிறார்கள்.

முதல் பராந்தகச் சோழன் (இராஜ இராஜ சோழனுடைய தந்தை) ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த உத்திரமேரூர் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய இரண்டு கல்வெட்டுகள், அதிலே ஒன்று கிராம சபை உறுப்பினர்களுடைய தகுதி, அடுத்து அவர்களைத் தேர்ந்தெடுத்த முறை பற்றி, அந்த இரண்டு கல்வெட்டுகள் இன்றைக்கு விளக்கிக் கொண்டிருக்கின்றன. உத்திரமேரூர், திருநின்றவூர், தலைஞாயிறு, அய்யம்பேட்டை, கிராப்பட்டீஸ்வரம், காமரசவல்லி, செம்பியன்மாதேவி, செய்நல்லூர் ஆகிய ஊர்களில் அமைந்திருக்கக்கூடிய கல்வெட்டுக்களில் கிராம சபையினுடைய விதிகள், பிற செய்திகள் உண்மையான மக்களாட்சியைப் பற்றி தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது.

இந்தியாவினுடைய மக்களாட்சியை எடுத்துக் கொண்டால் நாடாளுமன்றம், சட்டமன்றம், மாநகராட்சி மன்றம், நகர மன்றம், மாவட்ட ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, கிராம ஊராட்சி என்ற அமைப்புகளை நாம் பெற்றிருக்கிறோம். 1882 ஆம் ஆண்டு Lord Rippon என்பவர் உள்ளூர் சுயாட்சி அமைப்பினுடைய சட்டத்தை அன்றைக்கு அறிமுகப்படுத்தினார். அவருடைய நினைவாகத்தான் இன்றைக்கும் சென்னை மாநகராட்சியினுடைய கட்டடம் ரிப்பன் மாளிகை என்று அந்தப் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆகவே இப்படி படிப்படியாக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சட்டங்கள், நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு இயற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1992 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு 73–வது, 74–வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மறைந்த இளைய தலைவர் பெருமதிப்பிற்குரிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 1989 ஆம் ஆண்டு அவர் ஆற்றியிருக்கக் கூடிய உரையிலே ஒரு பகுதியிலே குறிப்பிட்டுச் சொல்கிறார். 'பஞ்சாயத்து ராஜ் சட்டமுன்வடிவை நாடாளுமன்றத்தில் நான் அறிமுகப்படுத்தினேன். பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்மூலம், கிராமப்புற மக்களுக்கு ஜனநாயகமும், அதிகாரப் பங்கீடும் கிடைக்கும். நகர்ப்புற மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைத்திடும். மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றத்தையொட்டி, உள்ளாட்சி அமைப்பினுடைய இலட்சியத்தை அவ்வப்போது மாற்றியமைத்திட வேண்டும்' என்று திரு. இராஜீவ் காந்தி அவர்கள் அன்றைக்கே ஒரு தொலைநோக்குக் கண்ணோட்டத்தோடு, தெளிவோடு குறிப்பிட்டிருப்பதை நான் இந்த அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களாட்சியில் அரசினுடைய நிர்வாகத்தை ஆலமரத்திற்கு ஒப்பிட்டால், அதன் வேர்களாகவும், விழுதுகளாகவும் நம்முடைய உள்ளாட்சி அமைப்பு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோல,

மனிதனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நாடி நரம்புகளாகவும், உயிர் மூச்சாகவும் இந்த உள்ளாட்சி அமைப்பு விளங்கிக் கொண்டிருக்கிறது என்று நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கே இதுபற்றி வர்ணித்திருக்கிறார்கள்.

1991–லிருந்து 1996 வரையிலே உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தல் நடைபெறவில்லை. 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான், உடனடியாக உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலை நடத்தியிருக்கிறோம். இன்னும்கூட நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை மாநகராட்சியினுடைய தேர்தல் ஏறக்குறைய 23 ஆண்டு காலமாக, ஒரு கால் நூற்றாண்டு காலமாக ஒரு தலைமுறையே தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கு தள்ளப்பட்டிருந்த சூழ்நிலையிலே தேர்தலே நடத்தப்படவில்லை. அதனாலேதான் 1996–லே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த சென்னை மாநகராட்சித் தேர்தலோடு சேர்த்து ஒட்டுமொத்த உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தலை நடத்திய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பதிவு செய்கிறேன்.

அதுமட்டுமல்ல, பல பேர் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு. அதுவும் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற அந்தத் தேர்தலில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அது நிறைவேற்றப்பட்டது. ஆக, 44,133 பெண்கள், மகளிர், மேயர்களாக, துணை மேயர்களாக, நகராட்சித் தலைவர்களாக, ஒன்றியத் தலைவர்களாக, மாவட்ட கவுன்சிலர்களாக, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக, இப்படி உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்கக்கூடிய ஒரு சூழ்நிலை கழக ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டது. எனவே, அப்படிப்பட்ட உள்ளாட்சித் துறை என்பது ஒரு முக்கியமான துறை என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் வேல்முருகன் அவர்கள்கூட பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். மற்றவர்களும் அதை இங்கே நினைவுபடுத்திக் காட்டினார்கள். ஏற்கெனவே கடந்த காலத்தில் ஓர் ஆட்சி இருந்தது. கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியிலே இந்த உள்ளாட்சித் துறைக்கு மூன்று அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள் என்பதைத் தெளிவாக அவர் எடுத்துச் சொன்னார். அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால், ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புவது, மூன்று முறை அமைச்சர்களாக இருந்தபோது, கடைசியாக ஒரு அமைச்சர் இருந்தார். இங்கேகூட அவர் பேசினார். இன்றைக்கு உறுப்பினராக இருக்கிறார். முன்னாள் அமைச்சராக இருந்து, இந்த அவையிலே தொடக்கத்தில் அவர்தான் பேசியிருக்கிறார். மாண்புமிகு திரு. அன்பழகன் அவர்கள். அவர் அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தார்.

அமைச்சராக இருந்தாரேதவிர, தனி அமைச்சராக இருந்தாரா என்று கேட்டால், இல்லை. ஒரு பொறுப்பு வகிக்கக்கூடிய அமைச்சராகத்தான் இருந்தார். அவரிடத்திலே செய்தி மற்றும் விளம்பரத் துறையினுடைய அமைச்சர், அந்தத் துறையோடு சேர்த்து இந்தத் துறையையும் தந்திருந்தார்களேதவிர, கூடுதலாகத் தந்திருந்தார்களேதவிர, தனியாக அந்தத் துறையைப் பிரித்து அவரிடத்திலே தரவில்லை. நான் எதற்காக இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், உள்ளாட்சித் துறையின்மீது கடந்த கால ஆட்சிக்கு எந்த அளவிற்கு அக்கறை இருந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஊரகத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு காலத்திலே வருவாய்த் துறையிலே ஒரு அங்கமாக விளங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அதையும் 1974 ஆம் ஆண்டு அன்றைக்கு நம்முடைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றி, இந்த ஊராட்சித் துறையை தனித் துறையாக உருவாக்கினார்கள். நான் இங்கே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு இந்தத் துறையினுடைய அமைச்சராக யார் இருந்தார்கள் என்று கேட்டால் மறைந்த மரியாதைக்குரிய பெரியவர் அன்பில் அவர்கள் அன்றைக்கு அமைச்சராக இருந்தார். அவர் தொடர்ந்து, நம்முடைய முதல்வரிடத்திலே, அன்றைக்கு இந்த ஊரகத் துறையை எப்படியாவது தனித் துறையாக்க வேண்டுமென்று பிடிவாதமாகக் குரல் கொடுத்துக்கொண்டே இருந்தார். அந்தப் பிரச்சினையைக் கேட்டறிந்து, நம்முடைய முதல்வர் அவர்களும் அதற்கு ஆணையிட்டார்கள். அதற்குப் பிறகு, 1974 ஆம் ஆண்டு திருச்சியிலே நடைபெற்ற ஊரக வளர்ச்சி மாநாட்டிலேகூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆக, ஊரகத் துறையை உள்ளாட்சித் துறையோடு சேர்க்கவேண்டுமென்று அன்பில் என்னை அரித்தார், நான் அறிவிக்கிறேன் என்று அந்த மாநாட்டிலே நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல் தொகுப்பு வீடுகள். இன்றைக்கு இந்த மன்றத்திலே பலர் பேசியிருக்கிறார்கள். இந்தத் தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையிலே, 1972–73 ஆம் ஆண்டிலேதான் நம்முடைய தமிழகத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, முதன்முதலில் அந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்னும்கூட பெருமையோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு இன்றைக்கு நாடு முழுவதும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் துணை நின்று கொண்டிருந்தாலும், இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ்நாட்டில், தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் அந்தத் தொகுப்பு வீடுகள் திட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் கண்ணப்பன் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள், கூடுதலாக அதிக அதிகாரத்தை, கூடுதலாகச் சலுகைகளையெல்லாம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை 1996–லே உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அப்போது தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1997 ஆம் ஆண்டு, இதற்கு என்று ஒரு குழுவைக்கூட நியமித்தார்கள். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய, நம்முடைய, இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சராக இருந்த, அண்ணன், திரு. கோ.சி. மணி அவர்களை தலைவராகக் கொண்டு, இந்த அவையிலே அன்றைக்கு அமர்ந்திருந்த எல்லா சர்வக் கட்சிகளினுடைய தலைவர்களையெல்லாம் அதிலே உறுப்பினர்களாக நியமித்து, உயர் மட்டக் குழு ஒன்றை, அன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் நியமித்தார்கள். அந்த உயர் மட்டக் குழு ஓராண்டுக் காலம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் நடத்தி, அந்தச் சுற்றுப்பயணத்தின் விளைவாக, 1,008 பரிந்துரைகளைக் கொண்டுவந்து நம்முடைய முதல்வரிடத்திலே ஒப்படைத்தார்கள். அந்த 1,008 பரிந்துரைகளில் 718 பரிந்துரைகளை உடனடியாக நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அன்றைக்கே உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரத்தை வழங்கிய ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் தலைமையிலிருந்த ஆட்சி என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்குப் பார்க்கிறோம். ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள், சோடியம் ஆவி விளக்குகள் எல்லாம் இன்றைக்கு இருக்கக்கூடிய காட்சிகளைப் பார்க்கிறோம். ஆக, இந்தத் திட்டத்தைக்கூட 1996–2001 ஆம் ஆண்டிலே, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் முதன்முதலில் அறிமுகப்படுத்தி, அந்தத் திட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றித் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஊரகப் பகுதிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரத் திட்டம், இப்படி பல திட்டங்களைக் கொண்டுவந்து நாம் நிறைவேற்றினோம். ஆனால், அதற்குப் பிறகு வந்த ஆட்சி, கடந்த கால ஆட்சி, பல திட்டங்களை இரத்து செய்தது. பல திட்டங்களைக் கிடப்பிலே கொண்டுபோய் போட்டது. பல திட்டங்களைக் குப்பைக்கூடையிலே கொண்டுபோய் தள்ளிவிட்டது. பல திட்டங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படாமலே இருந்தார்கள். அதிலே ஒன்று, முக்கியமான திட்டம், எந்தத் திட்டம் என்று கேட்டால், சமத்துவபுரம் திட்டம். ஆக, இன்றைக்குச் சமத்துவபுரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய அந்த வீடுகளையெல்லாம் போய்ப் பார்க்கிற நேரத்தில், மிகக் கொடுமையான சூழ்நிலையிலே, பராமரிக்கப்படாத நிலையிலே, சில வீடுகள் பாழடைந்த நிலையிலே இருக்கக்கூடிய, ஒரு கொடுமையில் இன்றைக்கு

அவர்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், கடந்த கால ஆட்சி. இது தி.மு.க. கொண்டு வந்தத் திட்டம், கலைஞர் கொண்டுவந்த திட்டம் என்ற காரணத்தால், அதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். அதனால்தான், இப்போது கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தலைவர் அவர்களுடைய உத்தரவை ஏற்றுக்கொண்டு, சமத்துவபுரங்களையெல்லாம் உடனடியாகப் பழுதுபார்க்க, பராமரிக்க ரூ.14.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி. இங்கே பல கோரிக்கைகளெல்லாம் எடுத்து வைக்கப்பட்டன. ஆனால், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி என்பது, முதன்முதலிலே கழக ஆட்சியிலேதான், கலைஞர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான், 1997 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து கடந்தகால அ.தி.மு.க. ஆட்சி. அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்னென்ன பணிகளையெல்லாம் விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றி, இங்கே நான் பேசுகின்ற நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். எனவே, அந்தப் பிரச்சினைக்குகூட நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. ஆனால், 1996 ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்தபோது ஏற்கெனவே 1991–லிருந்து 1996 வரையிலே அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, அன்றைக்கு ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 141 பணிகளை நிலுவையிலே விட்டுவிட்டுச் சென்றார்கள்.

1996–லே கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, அவர்கள் விட்டுவிட்டுச் சென்ற அந்தப் பணிகளையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று, அதற்காகக் கூடுதல் நிதியாக 26 கோடி ரூபாயை வழங்கி, அந்தப் பணிகளை, அந்தக் காலக்கட்டத்தில் முடித்த ஆட்சிதான், கலைஞர் தலைமையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதையும் நான் இங்கே தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, வறுமை ஒழிப்புத் திட்டம் என்று ஒரு திட்டத்தைக் கடந்த கால ஆட்சி கொண்டு வந்து அறிமுகப்படுத்தியது. அந்தத் திட்டம் 2004 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது, அ.தி.மு.க. ஆட்சியிலே. அந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்ன? ஏழையெளிய மக்களுக்கு மருத்துவச் செலவிற்காக, ஓய்வூதியத்திற்காக, அதேபோல, உணவுச் செலவிற்காக, இப்படி ஏழையெளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் நடக்கும் என்று சொல்லி, அந்தத் திட்டத்தை, 2004 ஆம் ஆண்டிலே, கடந்த கால ஆட்சி அறிமுகப்படுத்தியது.

2004–ல் அறிமுகப்படுத்தியபோது, 2004–2005 ஆம் ஆண்டில், அந்தத் திட்டத்திற்காக அவர்கள் ஒதுக்கிய தொகை எவ்வளவு தெரியுமா? 5 கோடி ரூபாய்.

அதற்குப் பிறகு, 2005–2006 ஆம் ஆண்டு, அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகை 20 கோடி ரூபாய். ஆக மொத்தம், 25 கோடி ரூபாய் கடந்த கால ஆட்சியிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்த 25 கோடி ரூபாயிலே, இதுவரையில் அவர்கள் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள் என்று கேட்டால், வெறும் 4 கோடி ரூபாய்தான் என்பதை நான் இங்கே மிகுந்த வேதனையோடு குறிப்பிடுகிறேன்.

அதேபோல, மத்திய அரசின்மூலமாக, மத்திய அரசினுடைய உதவியோடு, இன்றைக்கு நம்முடைய மாநில அரசு பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது நம்முடைய உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம், இப்படி பல திட்டங்களை நம்முடைய மாநில அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள்கூட பேசுகிறபோது, இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆக, நான் உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்; இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 6 மாவட்டங்கள்; திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை, இந்த ஆறு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இது மத்திய அரசினுடைய ஆணை. ஆக, அந்த ஆணையை ஏற்றுக்கொண்டு, மாநில அரசுகள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆக, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு தொகை எவ்வளவு தெரியுமா? 90 சதவிகிதம். அவர்கள் தரக்கூடிய நிதி 90 சதவிகிதம். மாநில அரசு ஒதுக்கக்கூடிய தொகை 10 சதவிகிதம். ஆக, மத்திய அரசு, கடந்த கால ஆட்சியிலே ஒதுக்கிய தொகை, மொத்தமாக 164 கோடி ரூபாய். அந்த 164 கோடி ரூபாயிலே, கடந்த ஆட்சியிலே செலவு செய்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால், வேதனையோடு சொல்கிறேன், வெறும் 3 கோடி ரூபாய்தான். இங்கே திரு. தி. வேல்முருகன் குறிப்பிட்டுச் சொன்னார். ஆனால், இப்போது கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கலைஞர் தலைமையிலே ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக, இந்தத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாயை நாம் செலவு செய்திருக்கிறோம் என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, இந்தத் திட்டத்திற்கு மேலும் 26 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆக, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, தினசரி ஊதியமாக 80 ரூபாய் பெறக்கூடிய வகையிலே, Rural schedule of rates–அதாவது, ஊரக விலைப் பட்டியலைக்கூட, நம்முடைய ஆட்சி

மாற்றியமைத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சுனாமி; இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்புகூட, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கமாக இங்கே பேசியிருக்கிறார்கள். எனவே, நான் அதிகம் இதுபற்றி விளக்க வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும், ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக, அதேபோல, நம்முடைய உள்ளாட்சித் துறையின்மூலமாக, இந்தத் திட்டத்திற்கு, சில வங்கிகளிடமிருந்து பெறக்கூடிய நிதியைப் பெற்று, சில திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்ற காரணத்தால், எங்களுடைய துறையைப் பொறுத்தவரையில் மாத்திரம் சிலவற்றை நான் உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

சுனாமி தமிழகத்திற்கு வந்தபோது, தமிழகம் அதனால் பாதிக்கப்பட்ட நேரத்தில், உலக வங்கி, சுனாமியினுடைய மறு கட்டமைப்புப் பணிகளுக்காக, 1,350 கோடி ரூபாய் நிதியுதவியாக அனுமதித்தது. அதிலே ஒரு பைசாவாவது கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறதா என்று கேட்டால், இல்லை. அதேபோல, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தினுடைய ஒப்புதல் பெற்ற நிதி 283 கோடியே 69 இலட்சம் ரூபாய். அதிலும் ஒரு சல்லிக்காசைக்கூட கடந்த கால ஆட்சி பயன்படுத்தவில்லை. அதேபோல, ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதியுதவியான 301 கோடி ரூபாயிலே, வெறும் 4.95 கோடி ரூபாய் மட்டுமே, கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறது. அதிலே நகராட்சித் துறையின்மூலமாக நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்கு, உலக வங்கி தந்தது 11 கோடி ரூபாய். அதிலும் செலவு கிடையாது. அதுபோல, ஆசிய வங்கி தந்த நிதி 49 கோடி ரூபாய். அதிலே எவ்வளவு செலவு செய்து இருக்கிறார்கள் என்று கேட்டால் ரூபாய் 2 கோடியே 85 இலட்சம்.

TWAD Board–க்கு ஆசிய வளர்ச்சி வங்கி தந்த நிதி ரூபாய் 82.18 கோடி, அதிலே வெறும் 46 இலட்சம் ரூபாய்தான் கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறது. அதுபோல பேரூராட்சிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி தந்த நிதி ரூபாய் 56.84 கோடி, அதையும் கடந்தகால ஆட்சி செலவு செய்யவில்லை. அதனால்தான் நாம் ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களினுடைய ஆட்சித் தலைவர்களையெல்லாம் சென்னைக்கு வரவழைத்து 24–6–2006 அன்று ஒரு கூட்டத்தை நடத்தி ஏறக்குறைய நான்கு மணி நேரம் அந்தக் கூட்டத்திலே ஆய்வு செய்யப்பட்டு, இந்தப் பணிகளையெல்லாம் எப்படி வேகப்படுத்துவது, விரைவுபடுத்துவது, இதற்கு என்னென்ன இடையூறுகள், தடைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி எல்லாம் ஆய்ந்து, அதற்குப் பிறகு பல உத்தரவுகளையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு வழங்கினார்கள்.

குறிப்பாக கடற்கரையோர மாவட்டங்களில் நகராட்சி, ஊராட்சிகளுடைய விதிகளெல்லாம் தளர்த்தப்பட்டு மனைப் பிரிவுகளுக்கு உடனடியாக ஒப்புதல் தரக்கூடிய அந்த உத்தரவு. இன்னும்

பெருமையோடு நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எப்படி நம்முடைய முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அங்கே பதவியேற்பு விழா நடைபெற்ற நேரத்தில், பதவியேற்ற அதே விழாவிலே, அதே மேடையிலே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய், விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் அறவே இரத்து, சத்துணவுடன் வாரத்திற்கு இரண்டு முறை முட்டை என்று அந்த உத்தரவுகளை, அந்த உறுதிமொழிகளை அந்த விழா மேடைக்கே கோப்புகளைக் கொண்டுவரச் செய்து, அந்தக் கோப்புகளிலே கையெழுத்திட்டு, உத்தரவிட்ட முதல்வர் அல்லவா நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக அதே உணர்வோடு இந்த ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலேயே அந்தக் கோப்பைக் கொண்டு வரச் செய்து இதற்கான உத்தரவிட்டவர்தான் நம்முடைய முதல்வர் அவர்கள்.

அதேபோல கடலோரக் கட்டுப்பாட்டு பகுதிகளில் அனுமதிபெற்று பணிகள் துவங்கிட, உடனடியாக அந்த உத்தரவும் வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு. மலரவன் அவர்கள் பாதியிலே பேசிவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால், பாதியிலே பேசுகிற பேச்சிலேகூட ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். அதையும் நான் மறக்காமல் குறித்து வைத்துக்கொண்டேன். என்னவென்று கேட்டால், பேரூராட்சிகளையெல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாக நாங்கள் ஆக்கினோம். ஆனால், இப்போது நீங்கள் அந்தச் சிறப்புச் சிற்றூராட்சிகளையெல்லாம் பேரூராட்சிகளாக மாற்றிவிட்டீர்களே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கை எடுத்து வைத்தார். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, 2004 ஆம் ஆண்டு கடந்தகால ஆட்சியிலே அவர்கள் பேரூராட்சிகளையெல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாகமாற்றினார்கள். அப்படி மாற்றுகிற நேரத்தில் ஒவ்வொரு பேரூராட்சியிடத்திலும் அதற்குக் கருத்துகளைக் கேட்டார்கள்.

கருத்துகளைக் கேட்டபோது, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் என்ன கருத்துகளை எடுத்துச்சொன்னார்கள் தெரியுமா? 385 பேரூராட்சிகள் நாங்கள் பேரூராட்சிகளாகத்தான் இருப்போம் என்று கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். 182 பேரூராட்சிகள்தான் நாங்கள் சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாறுகிறோம் என்ற ஒரு கருத்தைப் பதிவு செய்தார்கள். ஆனால் ஜனநாயக முறைப்படி என்ன செய்திருக்க வேண்டும்? ஆக, பெரும்பான்மையாக என்ன கருத்து வருகிறதோ, அதைத்தானே ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்? ஆனால், கடந்த கால ஆட்சி என்ன செய்தது என்று கேட்டால், அதெல்லாம் முடியாது என்று சொல்லி, சர்வாதிகார தன்மையோடு அன்றைக்குப் பேரூராட்சிகளையெல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றினார்கள். அதற்கு ஒரு காரணம் கண்டுபிடித்தார்கள். என்னவென்று கேட்டால், இப்போதுகூட அவர்கள் சொன்னார்கள், நிதி வர வேண்டும், மத்திய அரசு தரக்கூடிய

அந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய வகையிலே சிறப்புச் சிற்றூராட்சிகளுக்குக் கிடைக்கும், அதனால்தான் மாற்றினோம் என்று சொன்னார்கள். அது உள்ளபடியே தவறு. ஆனால், சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றியதற்குப்பிறகு மத்திய அரசிலிருந்து கூடுதலாக நிதி வந்ததா? இல்லை. ஏற்கெனவே ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த நிதியைத்தான் பகிர்ந்து, பிரித்து சிறப்புச் சிற்றூராட்சிகளுக்குத் தந்தார்களே தவிர, தனியாக அவர்கள் நிதியை வழங்கவில்லை.

அதுமட்டுமல்ல, பேரூராட்சிகளிலே பணிபுரிந்து கொண்டிருந்த பணியாளர்களுடைய நிலை, ஏறக்குறைய 12,811 பணியாளர்கள், அவர்களுடைய எதிர்காலமே கேள்விக்குறியான நிலைமைக்குத் தள்ளப்பட்டது. ஒரு குழப்ப நிலைக்கு வந்தது. அதனால்தான் இப்போது மீண்டும் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த முரண்பாடுகளையெல்லாம் களைய வேண்டுமென்பதற்காகத்தான் அதுவும் ஜனநாயக முறைப்படி, ஒவ்வொரு அமைப்பிடமும் கருத்துகளைக் கேட்டோம். அவர்களைத் தீர்மானம் போட்டு அனுப்பச் செய்தோம், அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலேதான் 561 அமைப்புகளில் 506 அமைப்புகள் நாங்கள் மீண்டும் பேரூராட்சிகளாக மாறுவோம், மாற வேண்டும் என்ற அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகுதான் இன்றைக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்கீழ் பேரூராட்சிகளாக மாற்ற இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதனுடைய சட்டமுன்வடிவுகூட விரைவிலே சட்டமன்றத்திலே வைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள், இது பல ஆண்டுகாலமாக இருந்து வந்த பிரச்சினை, தீராத பிரச்சினையாக இருந்து கொண்டிருந்தது. அனைவருக்கும் தெரியும். ஆக, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க பல காலக்கட்டங்களில் பல சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அது அ.தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும் சரி, அதேபோல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, பல சலுகைகளை பல நேரங்களில் வழங்கியிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபொழுது, 1999, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் பல அரசாணைகள் மூலமாகச் சலுகைகளைத் தந்தோம். அதேபோல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 2006 ஆம் ஆண்டு, அவர்களும் சலுகைகளைத் தந்து, பல அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்குப் பல சலுகைகளைத் தந்து, அரசாணைகளை வழங்கினார்கள். ஆனால், அதில் பலன் கிடைத்ததா என்று கேட்டால், கிடையாது. அதனால்தான், இப்பொழுது கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 6,000 மனைப் பிரிவுகளில், 90,000 வீட்டுமனைச் சொந்தக்காரர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, இன்றைக்கு வரைமுறைப்படுத்தி, அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசாணை வழங்கப்பட்டதற்குப் பிறகு, அங்கீகரிக்கப்படாத மனைப்

பிரிவுகளிலே இருக்கக்கூடியவர்கள், இன்றைக்கு வரைமுறைப்படுத்திக் கொள்வதற்காக, அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அரசிடம் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. போட்டி போட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மகளிர் சுய உதவிக் குழு. ஒரு காலத்திலே, மகளிர் சுய உதவிக் குழு என்பது, நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை, சமூக நலத் துறையிலே ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது உள்ளாட்சித் துறையிடம், இந்த மகளிர் சுய உதவிக் குழு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று கேட்டால், மக்களுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிற நேரத்தில், அந்தப் பிரதிநிதிகளை வைத்து, அந்த சுய உதவிக் குழுக்கள் இன்னும் சிறப்பாகச் செயலாற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு, நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, இன்றைக்கு நம்முடைய துறையுடன் அந்த சுய உதவிக் குழுக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் ஏதோ அவர்கள்தான் ஆரம்பித்ததுபோல, ஏதோ அவர்கள்தான் இந்தத் திட்டத்திற்கு உத்தியைச் சொன்னதுபோல, என்றெல்லாம் இன்றைக்குத் தொடர்ந்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உள்ளபடியே, மகளிர் சுய உதவிக் குழு என்பது, முதன்முதலில், 1989 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில், தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

1989 ஆம் ஆண்டு தொடங்கப்படுவதற்கு அரசாணை வழங்கப்பட்ட நகல்கூட என்னிடத்திலே இருக்கிறது. அவர்கள் இருந்திருந்தால், நன்றாக இன்னும் தெளிவாகக் காட்டியிருக்க முடியும். ஆகவே, 1989 ஆம் ஆண்டு, கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே, அந்த மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டது. ஆனால், தொடங்கப்பட்ட நேரத்திலே எந்த நோக்கத்திற்காக, அரசியலுக்காகவா? அல்லது, தேர்தலுக்காகவா? இடைத் தேர்தலுக்காகவா? கிடையாது. அவர்கள் சுயமாக, சிறுசிறு தொழில்களைச் செய்துகொண்டு, தங்களுடைய சொந்தக் காலில் அவர்கள் நிற்க வேண்டும். மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய வங்கிகளிலிருந்து, குறைந்த வட்டியிலே கடனைப் பெற்று, அவர்கள் அந்த சிறுசிறு தொழில்களைச் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கழக ஆட்சியிலே 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1997–லே தமிழ்நாடு முழுவதும் மகளிர் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், இந்த சுய உதவிக் குழுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே எப்படி இருந்தது? அதனுடைய செயல்பாடுகளெல்லாம் எப்படி இருந்தன? அதுபற்றிப் பரவலாக இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நான் அதிகம் பேச விரும்பவில்லை. இருந்தாலும்,

எங்களுடைய துறையின் மூலமாக, இந்த ஊரக உள்ளாட்சித் துறையின்மூலமாக, நாம் ஆற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணிகளில் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மகளிர் சுய உதவிக் குழுவிற்கு தினசரி பயிற்சித் தொகையாக 45 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே அது முழுவதுமாகக் குறைக்கப்பட்டு, வெறும் 7 ரூபாய் 50 காசாக வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, தொண்டு நிறுவனங்களுக்குக் குழு பராமரிப்புத் தொகையும் கடந்த கால ஆட்சியிலே குறைக்கப்பட்டது. மாவட்ட அளவிலே, 6 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்களை நம்முடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கினோம். ஆனால், கடந்த கால ஆட்சியிலே அது மூன்றாகக் குறைக்கப்பட்டது. என்ன காரணத்திற்காக? வெறும் தேர்தல் ஆதாயத்தைக் கருதி, அவசர கோலத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? மகளிர் சுய உதவிக் குழுவைப் பொறுத்தவரைக்கும், 2005–2006 ஆம் ஆண்டு, அதுவும் குறுகிய அந்த ஆறு மாத காலத்திற்குள்ளாக, தேர்தல் வருவதற்கு ஆறு மாத காலத்திற்கு முன்பாக, 2 இலட்சம் புதிய குழுக்களை அமைத்தார்கள். அதைத்தான் செய்தார்கள். ஆனால், அதில் 1 இலட்சத்து, 20 ஆயிரம் குழுக்களுக்கு உரிய பயிற்சி தந்திருக்கிறார்களா என்று கேட்டால், கிடையாது. அதேபோல, 1 இலட்சத்து 30 ஆயிரம் குழுக்களுக்கு –grading– தரமதிப்பீட்டிற்காவது, அந்தக் குழு தகுதி பெற்றிருக்கிறதா என்று கேட்டால், அதுவும் கிடையாது. அதனால்தான், இந்தக் குளறுபடிகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்பதற்காகத்தான், இன்றைக்குக் கழக ஆட்சியிலே, கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே இந்த மகளிர் சுய உதவிக் குழுவிற்காக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரக்கூடிய ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை ஒரு கோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நடப்பாண்டில், 25,000 சுய உதவிக் குழுக்கள் புதிதாய் அமைக்கப்படவிருக்கின்றன. 10,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சி மற்றும் கடன் உதவிக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சித் தொகையை மீண்டும் பழைய நிலையிலே, 45 ரூபாய் வழங்க ஏற்கெனவே அரசு உத்தரவிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டு நிறுவனத்திற்குப் பயிற்சித் தொகையாக ரூ.100/–லிருந்து, ரூ.350/–ஆக உயர்த்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சி நாட்கள், ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 4 நாட்கள் என இருந்தன. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு, அதை இரண்டு நாட்களாக மாற்றினார்கள். மீண்டும் இப்பொழுது 4 நாட்களாக அது மாற்றி நடத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சென்னை மாநகராட்சிக்காக, ஏதோ பல திட்டங்களையெல்லாம் தீட்டியதாக அ.தி.மு.க.–வைச் சேர்ந்த உறுப்பினர் பேசுகிறபோது, இங்கே பெருமையோடு பேசிக் கொண்டார். ஆனால், சென்னை மாநகராட்சிக்கு எந்தத் திட்டங்களும், முறையாக அவர்களால் தீட்டப்படவில்லை. ஒரே நோக்கம், எப்படியாவது பழிவாங்கவேண்டும் என்பதிலேதான், கண்ணுங்கருத்துமாக இருந்தார்களே தவிர, அவர்களால் எந்தத் திட்டங்களும் தீட்டப்படவில்லை. அதற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1996–2001 ஆம் ஆண்டிலே, நான் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபொழுது, அப்பொழுது சாலைகள் அமைக்கப்பட்டன. அந்தச் சாலைகள் அமைக்கப்பட்டதிலே ஏதோ குளறுபடிகள் இருக்கின்றன, முறைகேடுகள் இருக்கின்றன என்று சொல்லி, தார் பகுதியைப் பிரித்தெடுப்பதற்குப் பயன்படுத்துகிற இரசாயனப் பொருளை வாங்குவதிலே முறைகேடுகள் நடந்துவிட்டன என்று சொல்லி, அவர்கள் ஒரு குற்றச்சாட்டை என்மீது, நம்முடைய மாநகராட்சிமீது அன்றைக்கு வைத்தார்கள்.

அதனால், விஜிலென்ஸ் துறையினரால் இது குறித்து விசாரணையும் நடத்தப்பட்டது. அவர்கள் வைத்த அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலே, விஜிலென்ஸ் துறை இதுகுறித்து விசாரித்தது. டெண்டர் கோரி வழங்கப்பட்டதிலும், இரசாயனப் பொருள் வாங்கி வழங்கியதிலும், எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்று விஜிலென்ஸ் துறையினரால் முடிவு செய்யப்பட்டது.

மேயராக இருந்த என்மீதோ, மற்ற மாநகராட்சி அதிகாரிகள்மீதோ எந்த வகையிலும் தவறு செய்தார்கள் என்பதற்கான எந்தவிதமான ஆதாரங்களோ, சாட்சியங்களோ கிடையாது என்று விஜிலென்ஸ் துறையினர் விரிவான விசாரணை நடத்தி, இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்தவித அடிப்படை ஆதாரங்களும் கிடையாது என்று தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

விஜிலென்ஸ் துறையின் இந்த அறிக்கையை விஜிலென்ஸ் ஆணையமும் ஏற்றுக்கொண்டு, என்மீதான மேல் நடவடிக்கையைக் கைவிடலாம் என்று பரிந்துரைக்கிறது. அப்படி பரிந்துரைக்கப்பட்ட கோப்பு எங்கே போகிறது? அந்தப் பரிந்துரை கோப்பு பொதுப் பணித் துறை அமைச்சருக்குச் செல்கிறது. பொதுப் பணித் துறை அமைச்சருக்குச் சென்று, அதற்குப் பிறகு முதலமைச்சருக்கும், தலைமைச் செயலாளருக்கும் செல்கிறது. எப்போது? 14–9–2004 அன்று அந்தக் கோப்பு செல்கிறது. 2004 ஆம் ஆண்டு சென்ற அந்தக் கோப்பு, இதுவரையில் அதிலே அமைச்சரும் கையெழுத்துப் போடவில்லை, முதலமைச்சரும் கையெழுத்துப் போடவில்லை. இதுதான், 24 மணி நேரத்திலே 20 மணி நேரம் உழைக்கக்கூடிய பொருள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். ஆகவே, இந்தக் கோப்புகள் எல்லாம் கையிலேயே இருக்கின்றன. ஆனால், கையெழுத்துப்

போடவில்லை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், பழிவாங்கவேண்டும் என்ற ஒரே நோக்கம் என்பதற்காகத்தான். அதுமட்டுமல்ல, நான் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புவது, ஏற்கெனவே எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அ.தி.மு.க. நடந்துகொண்டது என்பதற்கு ஒரு சான்றுதான் இந்தக் கோப்பு.

அதேநேரத்தில், இந்தக் கோப்பிலே இன்னொரு பக்கத்திலே படித்துப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. அதிலே என்னவென்று கேட்டால், அந்தப் பக்கத்திலே இருக்கக்கூடிய விவரம் என்னவென்று கேட்டால், சென்னை மாநகராட்சியினுடைய ஆணையர் திடீரென்று தமிழக அரசுக்கு ஓர் அறிக்கை தாக்கல் செய்கிறார். எப்படிப்பட்ட அறிக்கை என்று கேட்டால், அதிலே சென்னை மாநகராட்சி மன்றம், தான் பெற்றுள்ள பெரும்பான்மையை துஷ்பிரயோகம் செய்து சர்வாதிகாரமாக நடப்பதாகவும், மேயர் தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும் அந்தக் கோப்பிலே எழுதியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சட்ட விதிமுறைகளின்படி, மாநகராட்சி, தன்னுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளவில்லை. மாநகராட்சியைக் கலைத்துவிடலாமா என்று ஆணை கோரி, மாநகராட்சி ஆணையர் அரசுக்கு அந்த அறிக்கையைத் தெரிவிக்கிறார். அப்படித் தெரிவித்த அந்தக் கோப்பு, அந்த அறிக்கை, எங்கே போகிறது என்று கேட்டால், அது அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அனுப்பி வைக்கப்படக்கூடிய தேதி என்ன தெரியுமா? 29–6–2001. அன்றைக்கு ஆணையராக இருந்தவர் திரு. ஆச்சாரியலு அவர்கள். அவர்தான் கையெழுத்துப்போட்டு அனுப்பி வைக்கிறார். தேதி ' 29–6–2001. இதைத்தான் நீங்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்தக் கோப்பு, உள்ளாட்சித் துறை அமைச்சர், அதைப்போல சட்டம் மற்றும் நிதித் துறை அமைச்சர் ஆகியோர்மூலமாக முதலமைச்சருக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. மாநகராட்சி ஆணையர் அறிக்கையை அரசுக்குக் கொடுத்த தேதி என்ன தெரியுமா? அதே 29–6–2001.

அதற்குப் பிறகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாநகராட்சியினுடைய ஆணையரின் அறிக்கையின்மீது கோப்பு தயாரித்து சுற்றுக்கு அனுப்பப்படுகிறது. அது என்றைக்குத் தெரியுமா? மாநகராட்சி ஆணையர் அறிக்கை கொடுத்த அதே நாளிலே, அவசர அவசரமாகக் கோப்பு தயாரிக்கப்பட்டு, சுற்றுக்கு 29–6–2001 அன்றே அனுப்பப்படுகிறது.

அதே 29–6–2001–லே, அந்தக் கோப்பிலே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய செயலாளர் கையொப்பமிடுகிறார். அதே 29–6–2001–லே தலைமைச் செயலாளரும் கையெழுத்து போடுகிறார். பின்னர் கோப்பு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அனுப்பப்படுகிறது. அது எப்போது தெரியுமா, அதுவும் 29–6–2001, அதே

நாளில் கையொப்பம் போடுகிறார். பின்னர் கோப்பு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சருக்கு செல்கிறது. அதுவும் 29–6–2001. பின்னர் கோப்பு, முதலமைச்சர் ஜெயலலிதாவிற்குச் செல்கிறது. ஆக, முதலமைச்சர் கையெழுத்து போடுகிறார். அது என்றைக்குத் தெரியுமா, அதுவும் 29–6–2001. ஆக, 29 ஆம் தேதி அன்று அறிக்கை அனுப்பப்பட்டு அதிலே அத்தனை அதிகாரிகளும் கையெழுத்திட்டு, அமைச்சர்களும் கையெழுத்திட்டு, முதலமைச்சரும் கையெழுத்திட்டு, அது அனுப்பிவைக்கப்படுகிறது என்று சொன்னால், இதைத்தான் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, எந்த நோக்கத்தோடு கடந்த கால ஆட்சி நடந்திருக்கிறது என்பதற்கு இதை ஒரு sample ஆகத்தான் நான் சொல்லியிருக்கின்றேனேதவிர, வேறல்ல.

அதுமட்டுமல்ல, சென்னை மாநகரத்திலே, 9 மேம்பாலங்கள் கட்டியதிலே முறைகேடுகள் நடந்ததாக ஒரு தவறான குற்றச்சாட்டை சொல்லி, அதற்கு வழக்கு போட்டார்கள். வழக்கைச் சந்திப்பதற்கு நாங்கள் எந்த நேரத்திலும் காத்திருக்கிறோம். நான் பல நேரங்களில், பல பொதுக்கூட்டங்களில் பேசியது உண்டு. எங்கள்மீது, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், ஆதாரத்தோடு நிரூபித்துவிட்டால் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம் என்று நான் பல நேரங்களில் சொன்னது உண்டு.

அதைப்போல நம்முடைய முதல்வர் அவர்கள்மீது, இங்கே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர், அன்றைக்கு அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி. மணி அவர்கள்மீது, பொன்முடி அவர்கள்மீது, என்மீது, சில அதிகாரிகள் மீது எல்லாம் வழக்கு போட்டார்கள். ஆனால், என்னவாயிற்று வழக்கு? வழக்கு இதுவரையில் நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு வரவில்லை. ஆனால், அந்த வழக்கு போட்டதும் அதே 29 ஆம் தேதிதான், அதுதான் முக்கியம். அதே 29 ஆம் தேதி இரவுதான், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வீடு தேடி வந்து, வீட்டை உடைத்து, கதவை உடைத்து, பூட்டை உடைத்து, படுக்கையிலே தூங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்த ஆட்சிதான் கடந்தகால அ.தி.மு.க. ஆட்சி என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

ஆக, பழிவாங்கக்கூடிய ஒரு நோக்கத்தோடு செயல்பட்ட ஆட்சியை இன்றைக்கு மக்கள் அடையாளம் தெரிந்துகொண்டு, ஒரு நல்ல தீர்ப்பை தந்திருக்கிறார்கள். ஆக, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இந்த ஆட்சி அமைந்திருக்கிறது என்று சொன்னால், அந்த ஆட்சியின் சார்பிலே இன்றைக்கு பல திட்டங்கள், பல சாதனைகள் எல்லாம், இந்தத் துறையின்மூலமாக இன்றைக்கு நிறைவேற்றக்கூடிய அறிவிப்புகளையெல்லாம், நீங்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்து காத்திருக்கக்கூடிய அந்த அறிவிப்புகளையெல்லாம் இப்போது உங்கள்முன் எடுத்து படிக்க விரும்புகிறேன்.

முதலில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய அறிவிப்புகள்:

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டு குறித்த காலத்திற்குள் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் தேர்தலில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவி இடங்களுக்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேர்தல் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றி அமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட, இந்த அரசு ஒரு நிபுணர் குழு அமைக்க முடிவு செய்துள்ளது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நடப்பு ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யும்வகையில் ஒரு புதிய திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளும், வரும் 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 2,500 கோடி அளவிற்கு மாநில அரசின் நேரடி நிதி உதவிபெறும். இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநிலத் திட்டங்களில் இந்தப் புதிய திட்டமே மிகப்பெரிய திட்டமாகும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்– இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 1998 ஆம் ஆண்டு முதல், கான்கிரீட் கூரை அமைப்பதற்கு, 12 ஆயிரம் ரூபாய் மாநில அரசு வழங்கி வந்ததை, முந்தைய அரசு 2004 ஆம் ஆண்டில், அதை 9 ஆயிரம் ரூபாயாக குறைத்தது. ஆனால், இந்த ஆண்டு கட்டப்படவிருக்கும் 49,850 வீடுகளுக்கு, கான்கிரீட் கூரை அமைப்பதற்கு, இந்தத் தொகை 9 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாநில அரசு கூடுதலாக, 15 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம். ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிறீர்கள். ஏற்கெனவே ஒவ்வொரு கிராமத்திற்கும், 20 இலட்சம் ரூபாய் இந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, நாங்கள்கூட, முதல்வர் அவர்களுடன் இதுபற்றி கலந்து பேசுகின்றபோது, அதிகம் உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கைக்கூட வைக்கவில்லை.

இருந்தாலும், முதல்வர் அவர்கள் கொஞ்சம் உயர்த்தித் தர வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் மாநில அரசிற்கு ஆண்டிற்கு 47 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கணினி, Printer மற்றும் Broadband Internet connection ஆகியவற்றை அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் வாங்கிக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறந்த ஊராட்சிகளுக்கான விருது. சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளைச் செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினைக் கௌரவிக்கக்கூடிய வகையிலே உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும். இவ்விருதிற்காக ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பேருந்துகள் செல்லும் 1,543 கிலோ மீட்டர் நீளம் உள்ள 889 சாலைகள் நபார்டு வங்கி உதவியுடன் 107 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்பு. 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற புகார்கள் காரணமாக, தற்போதுள்ள பட்டியலில் இடம் பெற்றவர்களின் பெயர்கள் மறு ஆய்வுக்காக அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஆட்சேபணைகள் இருப்பின் மறு ஆய்வு செய்து, இறுதிப் பட்டியல் மீண்டும் கிராம ஊராட்சிகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அத்துடன் இறுதிப் பட்டியல் இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

நகரப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி. ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 10,000/– பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று நகரப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள, தர மதிப்பீட்டில் தேர்வுபெற்ற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி தலா 10,000/– ரூபாய் மானியமாக இந்த ஆண்டு மாநில அரசு

நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்க விருதுகள். சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலும் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக மணிமேகலை விருது வழங்கப்படும். இதற்காக 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பிணை வைப்புத் தொகை விலக்கு. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசு ஒப்பந்தப்புள்ளிகளில் போட்டியிட ஏதுவாக, சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிப்பதுபோல் சுய உதவிக் குழுக்களுக்கும் பிணை வைப்புத் தொகை கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்க பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல். ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுவான மக்கள் அமைப்புகளாக உருவாக்குவது இந்த அரசினுடைய மிக முக்கியமான குறிக்கோளாகும். இதற்கு ஏதுவாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இவ்வாண்டு 4,000 கூட்டமைப்புகளுக்கு தொடக்க நிதியாக 10,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். மேலும் இக்கூட்டமைப்புகளுக்குக் கூடுதலாக அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்படும்.

உலக வங்கி நிதி உதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம் திட்டம்'. ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். 'வாழ்ந்து காட்டுவோம்' என்ற பெயரில் இத்திட்டம் 15 மாவட்டங்களிலுள்ள, 70 ஒன்றியங்களில், 2,432 கிராம ஊராட்சிகளில், 717 கோடி ரூபாய் செலவில், 6 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விற்பனை மற்றும் கண்காட்சி மையம். தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சுய உதவிக் குழு பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி மையம் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிறுவப்படும்.

சுனாமி வாழ்வாதார மேம்பாட்டிற்குப் பொருளாதார உதவிகள். சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்மூலம், வங்கிக் கடன்பெற சிரமப்படும் உடல் ஊனமுற்றோருக்கு, பொருளாதார

மேம்பாட்டிற்காக 10,000/–ரூபாய் முழு மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிட இத்திட்டத்தில் 30,000/– ரூபாய் மானியமாகவும், 15,000/– ரூபாய் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும். பொருளாதாரக் கடனுதவிக்கு 4 சதவிகிதம் வட்டி மானியமாக வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவிக்கு 133 கோடி ரூபாயும், திறன் வளர் பயிற்சிக்காக 19 கோடி ரூபாயும், பொருளாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய உள் கட்டமைப்பு வசதிகளுக்காக 38 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த பணியாளர்கள் நலன். முந்தைய ஆட்சியில், ஊரக வளர்ச்சித் துறையில் பணியாளர்களுக்கு எந்தவித நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. அரசு அலுவலர் போராட்டத்தின்போது, இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். ஆட்குறைப்பு, காலிப் பணியிடம் நிரப்பப்படாத நிலை காரணமாக இத்துறையின் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்தத் துறை பணியாளர்களின் சிரமங்களைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளின் தொடக்கமாக கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

தற்போது தகுதியுள்ள ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் எழுத்தர்களை இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு 10 சதவீதம் ஒதுக்கீடு உள்ளது. இதை 20 சதவீதமாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள், தற்பொழுது பெறும் தொகுப்பூதியத்திற்குப் பதிலாக 1–9–2006–லிருந்து, காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முழு நேர ஊராட்சி உதவியாளர்களின் காலமுறை ஊதியம் ரூபாய்1300–20–1500–25–2000 என்றும், பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களின் காலமுறை ஊதியம் ரூபாய் 625–10–725–20–925 என்றும் மாற்றியமைக்கப்படும். இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக சுமார் 3 கோடி ரூபாய் செலவாகும். இதனால் 12,618 கிராம ஊராட்சிகளில் உள்ள உதவியாளர்கள்/பகுதி நேர எழுத்தர்கள் பயன்பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு ஊழியர்களுக்கு வழங்குவதுபோல ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் சிறப்பு சேம நல நிதி ரூபாய் 5,000/–லிருந்து ரூபாய் 10,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற, தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி, விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி விரிவாக்க அலுவலர் நிலையில் ஒரு வருடம் பணிபுரிந்தாலே, பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு

அளிக்கலாம் என உத்தரவிட அரசு பரிசீலித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் 4-5-2000 முதல் 15-5-2000 வரை போராட்டத்தில் ஈடுபட்ட காலம் இதுவரை பணிக்காலமாக வரன்முறை செய்யப்படவில்லை. இந்தப் போராட்டக் காலத்தைப் பணிக் காலமாக வரன்முறை செய்ய அரசு தற்போது முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து நகராட்சி நிர்வாகம். அதனுடைய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

நகராட்சி நிர்வாகம். பெருகி வரும் மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி மற்றும் நகராட்சியின் வருமானத்தைக் கருத்திற்கொண்டு, அரசு, திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்தி உள்ளது. நாடாளுமன்ற, சட்டமன்ற இட எல்லைகளைத் திருத்தியமைக்கும் ஆணையம், தற்போதுள்ள நிர்வாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றி அமைக்க தடை விதித்துள்ளது. ஆகவே, ஆணையத்தின் அனுமதியைப் பெற்று, விரைவில் திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அமைந்துள்ள அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளைப் பெருமளவில் மேம்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, பகுதி 2 (Part II) திட்டங்களின்கீழ் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு பெய்த பெருமழையால் நகரங்களில் பாதிப்பிற்குள்ளான சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள், இம்மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னர் சீர்செய்யப்படும். இதற்கு அரசு 13 கோடியே 32 இலட்சம் ரூபாயை முழு மானியமாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிப் பற்றாக்குறை உள்ள 37 நகராட்சிகளில், நிதியின்மை காரணமாக சரியான பராமரிப்பின்றி இருந்து வரும் குடிநீர்த் திட்டங்கள், 4 கோடி ரூபாய் மானியத்தில் உடனடியாக சீர்செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும், 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய இறைச்சிக்கூடங்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சிகள்மூலம் 50 விழுக்காடு அரசு நிதியோடு கட்டப்படும்.

இதுபோலவே, தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும் பன்னிரெண்டு கோடி ரூபாய் செலவில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின்மூலம் 50 விழுக்காடு அரசு நிதியுதவியுடன் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிப் பற்றாக்குறையால் நிலம் வாங்குவதற்கு இயலாத நிலையில் உள்ள 12 மூன்றாம் நிலை நகராட்சிகள், திடக் கழிவுகளைக் கையாள நிலங்களை வாங்கி, உரக் கிடங்குகளை அமைப்பதற்கு 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் மானியமாக அரசு வழங்கும்.

வாணியம்பாடி நகராட்சியில் ஜின்னா ரோட்டில் பாலாற்றின் குறுக்கே பாலாற்றைக் கடந்து செல்வதற்கென்று பயன்பட்டு வந்த இரும்புப் பாலம் 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், 85 இலட்சம் ரூபாய் மானியத்தில் வாணியம்பாடி நகராட்சிமூலம் புதிதாக ஒரு பாலம் கட்டப்படும்.

இதுவரை அறிவித்த பகுதி 2 (Part II) திட்டங்களைத்தவிர, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், மாநில அரசு, மைய அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் அளிக்கும் கடன் மற்றும் மானிய உதவிகளைக்கொண்டும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள சில முக்கிய திட்டங்களைப்பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தற்போது சுமார் 2,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ள சரளைக்கல் சாலைகளையும், மண் சாலைகளையும் இன்னும் 4 ஆண்டுகளில், 200 கோடி ரூபாய் செலவில் குறுகிய சாலைகள் சிமென்ட் கான்கிரீட் சாலைகளாகவும், பெரிய சாலைகள் தார்ச் சாலைகளாகவும் மாற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் அனைத்து நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றும்வண்ணம் முதற்கட்டமாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், கரூர் மற்றும் காஞ்சிபுரம் நகரங்களிலும் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டு, இந்த ஆண்டே இத்திட்டங்கள் யாவும் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

எஞ்சியுள்ள 23 மாவட்டத் தலைநகரங்களில் வேலூர், கடலூர், நாமக்கல், உதகமண்டலம், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, திருவாரூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 18 மாவட்ட தலைநகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் 801 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 மாவட்ட தலைநகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டங்கள் அமைக்க ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு வரும் நிதியாண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருவொற்றியூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் 28 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, மேட்டூர் நகராட்சி. மேட்டூர் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டு, இந்த நிதியாண்டே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் படிப்படியாக வரும் ஆண்டுகளில் நிறைவேற்ற ஏதுவாக ஆய்வுப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் அனைத்துக் கட்டடங்களும், அதாவது, அலுவலகம், பேருந்து நிலையங்கள், பொதுக் கழிப்பிடங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், பூங்காக்கள், வணிக வளாகங்கள் போன்ற கட்டடங்களை உடல் ஊனமுற்றோரும் பயன்படுத்த ஏதுவாக தக்க மாற்றங்கள் இந்தாண்டிலேயே செய்து முடிக்கப்படும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தெரு நாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்தவும், ரேபிஸ் என்ற கொடிய நோயிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றவும், இந்திய விலங்குகள் பாதுகாப்பு வாரியத்துடன் (Animal Welfare Board of India) இணைந்து ஒரு முன்னோடித் திட்டம் 50 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.

நெல்லிக்குப்பம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளிலும் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.

திருவண்ணாமலை, மணலி, அனகாபுத்தூர், புழுதிவாக்கம், பொள்ளாச்சி மற்றும் பூவிருந்தவல்லி ஆகிய 6 நகராட்சிகளில் தற்போதுள்ள பேருந்து நிலையங்கள் நவீன வசதிகளோடு மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசால் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மதுரை மாநகராட்சிக்கு 1477 கோடியே 40 இலட்சம் ரூபாயிலும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 1311 கோடியே 81 இலட்சம் ரூபாயிலும், தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய அரசால் ஏற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், மதுரை மாநகராட்சிக்குக் கூடுதலாக குடிநீர் வழங்க இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டம்

60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டே செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வராத ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில் 10 நகரங்களில் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளும், 13 நகரங்களில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, பேரூராட்சிகளுக்கான அறிவிப்புகள். பேரூராட்சிப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எந்த ஆண்டும் இல்லாதவண்ணம் இந்த ஆண்டு 17 கோடியே 20 இலட்சம் ரூபாய் பேரூராட்சிகளுக்கு முழு மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதி உதவியைக் கொண்டு 100 பேரூராட்சிப் பகுதிகளில், சாலை, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

புகழ்பெற்ற திருக்கோயில்கள் மற்றும் சுற்றுலாத்தலங்கள் அமைந்துள்ள 40 பேரூராட்சிகளில் 6 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். 20 பேரூராட்சிகளில் 1 கோடி ரூபாய் செலவில் சிறிய மற்றும் மிகச் சிறிய பாலங்கள் அமைக்கப்படும்.

மாமல்லபுரம், திருச்செந்தூர், போரூர் ஆகிய பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் இந்த ஆண்டு 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

பேரூராட்சிகளில் உள்ள சுமார் 663 கிலோ மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலைகளை பேருந்து செல்லும் சாலையின் தரத்திற்கு உயர்த்த 51 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் 393 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும். மேற்படி திட்டங்களைத் தவிர, பேரூராட்சிகள் தங்களுடைய நிதியாதாரங்களைக் கொண்டு செயல்படுத்தவுள்ள சில சிறப்புத் திட்டங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நடப்பு ஆண்டில் புதிய சிமென்ட் கான்கிரீட் சாலைகள் அனைத்து பேரூராட்சிகளிலும் மொத்தம் 500 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும்.

சிறுவர், சிறுமிகள் நலம் பேணிட 100 பேரூராட்சிகளில் சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கிரிக்கெட் தளம் மற்றும் சிறுவர் படிப்பகங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.

இதுவரையில் அலுவலகக் கட்டடம் இல்லாத 4 பேரூராட்சிகளுக்கும், சொந்தக் கட்டடங்கள் இருந்தும், மிக மோசமான நிலையில் பழுதடைந்து, வேறு கட்டடங்களில் இயங்கி வரும் 25

பேரூராட்சிகளுக்கும் இந்த ஆண்டு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சி பற்றிய அறிவிப்புகள். குறைந்த வருமானம் உள்ள மக்கள் அதிகமாக வாழும் வடசென்னைப் பகுதியில் போக்குவரத்து, சாலை, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவிற்கு இல்லையென்று நீண்டகாலமாகவே இருந்து வரும் குறையைப் போக்கும் வகையில் வடசென்னைப் பகுதி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்க 217 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வில்லிவாக்கம் மற்றும் மணியக்காரச் சத்திரச் சாலை ஆகிய இரயில்வே சந்திப்புகளில் வாகனச் சுரங்கப் பாதைகள் அமைக்கப்படும். கத்திவாக்கம்–காக்ரேன்பேசின் சாலை சந்திப்பில் மேம்பாலம், கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திப்பில் சுரங்கப்பாதை, ரங்கராஜபுரம் சந்திப்பில் மேம்பாலம் ஆகிய ஐந்து பணிகள் நடப்பாண்டில் 40 கோடியே 6 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

டர்ன்புல்ஸ் சாலை–பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு, வடக்கு உஸ்மான் சாலை–கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை–துரைசாமி சாலை சந்திப்பு, ஜி.என். சாலை–திருமலை சாலை சந்திப்பு ஆகிய நான்கு இடங்களில் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேம்பாலங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடையாறு ஆற்றின் குறுக்கே சைதாப்பேட்டை–ஆலந்தூர் சாலையில் அமைந்துள்ள தரைமட்டப் பாலத்திற்கு மாற்றாக 5 கோடியே 41 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும்.

பெரம்பூர் மேம்பாலப் பணி மீண்டும் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வடசென்னை மக்களை தென்சென்னையுடன் இணைத்திட முக்கியமான இணைப்பான, பெரம்பூர் மேம்பாலப் பணிகள், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1998 ஆம் ஆண்டு 21 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. 2001 ஆகஸ்ட் மாதம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முந்தைய அரசு விசாரணைக் கமிஷன் நியமித்து, நடைபெற்று வந்த பணிகள் முழுவதையும் முடக்கியது. 5 ஆண்டுகள் எந்தவிதமான பணியும் நடைபெறாமல், மேம்பால வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதியுற்றனர். தி.மு.க. அரசு மீண்டும் பொறுப்பேற்றவுடன் இப்பணியை ஆய்வு செய்து மீண்டும் துவக்கி, ஒரு வருடத்திற்குள் பாலத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் ஏற்பட்ட 5 ஆண்டு கால தாமதத்தால் இப்பொழுது கூடுதல் செலவு 5 முதல் 6 கோடி ரூபாய் வரை ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி 15 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

அடையாறு பகுதியில் அடையாறு கிரீக் எனும் சிற்றோடையில் 58 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பூங்கா அமைப்பது குறித்து 1997 ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. அரசு பரிசீலித்து வந்தது. முந்தைய அரசு, இப்பகுதியை 50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த 2005 நவம்பர் மாதம் ஆணையிட்டது. இதற்கு ஒரு அறக்கட்டளை நிறுவவும் ஆணையிடப்பட்டது. ஆனால் மேற்கொண்டு முன்னேற்றம் இல்லாமல் இருந்து வந்த நிலையில் இத்திட்டத்தை பரிசீலனை செய்த இவ்வரசு அடையாறு கிரீக் பகுதியை மட்டும் மேம்படுத்துவதற்குப் பதிலாக திரு. வி.க. பாலத்திற்கும், கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல் முகம், அதில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் அடையாறு சிற்றோடைப் பகுதி உள்ளிட்ட ஒட்டுமொத்தமான பகுதியையும் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத்தரம் வாய்ந்த ஒரு இயற்கை வளம்மிக்க பகுதியாகவும், சுற்றுலா மையமாகவும், இயற்கைச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையமாகவும் பெரிய அளவில் மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்.

அடுத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் அறிவிப்புகள். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, வாரியத்திற்கும், ஒப்பந்ததாரருக்குமிடையே போடப்பட்டுள்ள நிபந்தனைகளில் அரசுக்கும், வாரியத்திற்கும் சாதகமான திருத்தங்களை செய்து, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோல் மத்திய அரசு, ஏற்கெனவே அறிவித்த நிதியுதவியை பெற்று கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு பெரிய திட்டமும் செயல்படுத்தப்படும்.

தெலுங்கு கங்கைத் திட்ட ஒப்பந்தத்தின்படி அளிக்கப்பட வேண்டிய 12 டி.எம்.சி. தண்ணீரை ஒவ்வோர் ஆண்டும் தடையின்றிப் பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, 5-8-2006 அன்று நானும், மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களும் ஐதராபாத் சென்று ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததன் பலனாக வருகிற 20 ஆம் தேதி அளவில் கண்டலேறு அணையில் இருந்து வரும் தண்ணீர் தமிழக எல்லையை அடையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரில் குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் இல்லாத

அனைத்துத் தெருக்களுக்கும் குழாய்கள் பதிக்கும் பணி நடப்பாண்டில் முடிக்கப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிவடையும்போது, சென்னை மாநகரப் பகுதி முழுவதும் குடிநீர் மற்றும் கழிவு நீரமைப்புகள் முழுமை பெற்றதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்கள் தங்கள் வசதிக்கேற்ப எந்த மையத்தில் வேண்டுமானாலும் குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தவும், புகார்களைப் பதிவு செய்யவும் 9 கோடி ரூபாய் செலவில் வழிவகை செய்யப்படும்.

சென்னை நகரின் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் போதுமான அழுத்தத்தில் சமமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய ஜவஹர்லால் நேரு தேசிய நகர மறுபுனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி உதவியோடு 246 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்ப் பகிர்மான அமைப்புகள் மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, கீழ்ப்பாக்கம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் மண்டலங்களில் இப்பணிகள் 131 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

பழைய மாமல்லபுரம் சாலையில் மென்பொருள் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் அதைச் சார்ந்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள் போன்றவற்றின் வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டு வருவதைக் கருதி, இப்பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 72 கோடி ரூபாய் செலவில் சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும்.

சென்னை நகரைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதி செய்து கொடுப்பதற்காக ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்டத்தினைச் சென்னைக் குடிநீர் வாரியம் தயாரித்து வருகிறது. மணலி, அனகாபுத்தூர், பம்மல், திருவேற்காடு, பூந்தமல்லி ஆகிய ஐந்து நகராட்சிகளும், சின்னசேக்காடு, புழல், நரவாரிக்குப்பம், மீஞ்சூர், நந்தம்பாக்கம், மாங்காடு, குன்றத்தூர், பெருங்குடி, பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, மீனம்பாக்கம், திருநின்றவூர், திருமழிசை ஆகிய 19 பேரூராட்சிகளும், கொட்டிவாக்கம், நெற்குன்றம், முகலிவாக்கம், கீழக்கட்டளை, மடிப்பாக்கம், பொழிச்சலூர், கௌல்பஜார், அயனம்பாக்கம் ஆகிய 8 கிராமப் பஞ்சாயத்துகளும், புனித தோமையார் மலை என்ற ஒரு கன்டோன்மென்ட் பகுதியும் இத்திட்டத்தின்மூலம் பயனடையும். ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான

திட்டம் இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம், கீழக்கரை மற்றும் சிவகங்கை ஆகிய 5 நகராட்சிகள், முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம், திருப்பத்தூர், அபிராமம், இளையான்குடி, நெற்குப்பை, பொன்னமராவதி ஆகிய 11 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வழியோர குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 3163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும். இதன்மூலம் சுமார் 16 இலட்சம் மக்கள் நிரந்தரமாகக் குடிநீர் வசதிகளைப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 1,005 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் தேவைபற்றி மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதை அடுத்து, ஜப்பானிலிருந்து குழு ஒன்று சென்னைக்கு வந்து திட்டத்தினை ஆய்வு செய்து ஜப்பானிய அரசிற்கு அறிக்கை அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் முதுநிலை செயல் இயக்குநரும், குழும உறுப்பினரும் மற்றும் புதுடெல்லியில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதியும் 17–7–2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் என்னையும் சந்தித்தபோதும் இத்திட்டத்தின் தேவை குறித்து அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இத்திட்டத்தை ஜப்பான் நாட்டின் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் செயலுக்கு வரும்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் ஆகிய 3 நகராட்சிகள், காரிமங்கலம், அரூர், கடத்தூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு, பர்கூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட 17 பேரூராட்சிகள் மற்றும் 6,755 குடியிருப்புகள் பயன்பெறும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களை மாவட்ட வாரியாக தெரிவிக்க விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்லடம் நகராட்சி, 29 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கு சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

49 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

30 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 44 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமானூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 636 குடியிருப்புகளுக்கு சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 43 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சேர்ந்த 78 குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 42 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள், அறந்தாங்கி நகராட்சி மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 120 குடியிருப்புகளுக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 79 கடலோர குடியிருப்புகள் மற்றும் 17 பேரூராட்சிகள், 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதுக்கடை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் முஞ்சிறை குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேரன்கோடு ஊராட்சிக்கு 38 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 13 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்தணி மற்றும் அரக்கோணம் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் விரிவாக்கத் திட்டம்.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களைப் பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெற்குன்றம் மற்றும் 48 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழ்பெண்ணாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்க பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாவட்டத்தில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிங்கபுரம் நகராட்சி, 12 பேரூராட்சிகள் மற்றும் ஏழு ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் மாவட்டத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிப்பாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலூர் நகராட்சி, எ. வெள்ளாளப்பட்டி பேரூராட்சி மற்றும் ஏழு ஒன்றியங்களைச் சார்ந்த 1,332 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மேலும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் ஆர்விபட்டி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

விருதுநகர் மாவட்டத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் மற்றும் பெருங்குளம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் தச்சநல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரியானபடி பராமரிக்கப்பட்டால்தான் முழு பயனும் மக்களைச் சென்றடையும். நான் பல்வேறு மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்ய சென்ற போது கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிப்பு பற்றிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளெல்லாம் என்னிடம் தெரிவித்தார்கள்.

அந்த அடிப்படையிலே பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இயங்குவதற்குத் தடையில்லாத மின்சாரம் பெறுவது அவசியமாகும். தற்போது இதுபோன்ற பல பெரிய திட்டங்களில் தனி மின் பாதை இல்லாததும், இதனால் குடிநீர் வழங்கலில் அடிக்கடி தடை ஏற்படுகிறது என்பதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அந்தக் கருத்தின் அடிப்படையிலே, கூட்டுக் குடிநீர் திட்டங்கள், 12 மணி நேரத்திற்கும் அதிகமாக இயங்க வேண்டிய திட்டங்களுக்கும், அதுபோல் ஒன்றுக்கு மேற்பட்ட துணை மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறும் திட்டங்களுக்கும், தங்கு தடையின்றி மின்சாரம் பெற ஏதுவாக தனி மின் பாதை புதிதாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாவட்டங்களில் உள்ள குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்புக் கோட்டங்கள் மற்றும் உப கோட்டங்களை மாவட்ட ஆட்சியரின் நேரடி நிர்வாகக் கண்காணிப்பின்கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதிலே அரசுப் பணியாளர்கள் பெரும் பங்காற்றி வருவது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். முந்தைய அரசு, அரசுப் பணியாளர்களைக் கடுமையாக நடத்தி, அவர்களது உரிமைகளையும், சலுகைகளையும் பறித்ததை நாம் அறிவோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றவுடன் அரசுப் பணியாளர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, இத்துறை சார்ந்த அரசுப் பணியாளர்கள் நலன் குறித்த சில அறிவிப்புக்களை வெளியிட விரும்புகிறேன்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்புக் கையுறைகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியில் மலேரியா துறையில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் 60 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையிலே தற்போது பணிபுரிந்து வரும் 170 சமுதாய அமைப்பாளர்களின் பணியை, வரன்முறைப்படுத்தி அவர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

சென்னை மாநகரில் கழிவுநீர் அமைப்பைப் பராமரிக்கும் பணியாளர்களின் பாதுகாப்புக்காக 3 கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கும் பெல்ட், தலைக் கவசம், துர்நாற்றக் காற்று உட்புகாமல் தடுக்கும் கவசம், துர்நாற்றக் காற்றை கண்டறியும் உபகரணம், கையுறைகள், காலணிகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் C & D பிரிவு பணியாளர்களுக்குக் கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004–2005–க்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படும். இதனால், சுமார் 8,000 பணியாளர்கள் பயன் அடைவார்கள். அரசுக்குக் கூடுதலாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது தொகுப்பூதியப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் 881 பணியாளர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

சென்னை மாநகராட்சியில் மழலையர் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 102 ஆசிரியர்கள், 102 குழந்தை பராமரிப்பு அலுவலர்கள், 30 அலுவலக உதவியாளர்கள்

ஆகிய 234 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

முந்தைய அரசால் அறிவிப்பு செய்தபடி பேரூராட்சிகளில் ஊதிய ஏற்ற முறைக்குக் கொண்டு வரப்படாத 2,923 தொகுப்பூதிய பணியாளர்கள், ஊதிய ஏற்ற முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இந்த ஊதிய ஏற்ற முறையால் ஆண்டுக்கு 13 கோடியே 26 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்குமேல் அறிவிப்புகள் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். இங்கே பல கருத்துகள், பல அறிவுரைகள், பல ஆலோசனைகள் எல்லாம், இந்தத் துறைக்காக உங்கள் மூலமாக வழங்கப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தம் 568 வெட்டுத் தீர்மானங்களை இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் கொடுத்து இருக்கிறீர்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நான் படித்துப் பார்த்து இருக்கிறேன். அதுசம்பந்தமாக அதற்குரிய அரசு அதிகாரிகளோடு அதுபற்றி விவாதித்து இருக்கிறேன், கலந்து பேசிக்கொண்டு இருக்கிறேன். அவையெல்லாம் முறையாக உரிய நேரத்தில், உரிய வகையிலே பரிசீலிக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இம்மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

> "..சீர்மிகு தமிழ்நாட்டை உருவாக்குவோம். இந்தப் பெரும் பொறுப்பை நான் என் தோளில் சுமக்க தயாராகி விட்டேன். நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையோடு எனது பயணத்தை நான் தொடங்குகிறேன். எனது அரசாகத்தான் முதலில் உருவானது. இப்போது நான் சொல்கிறேன்; 'எனது அரசு அல்ல; நமது அரசு.' இதுதான் என்னுடைய கொள்கை. எனவே, 'எமது அரசு'; 'நமது அரசு' என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது".
>
> – மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் துணை முதலமைச்சராக ஆற்றிய முதல் உரை

29-6-2009

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு நல்ல காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பு இந்துக்களின் எண்ணத்தில் எழுந்திடும் ஒரே சொல் 'ஓம்' என்பதாகும். கிறிஸ்தவர்களின் சிந்தனையில் தோன்றிடும் ஒரே சொல் 'ஏசு' என்பதாகும். முஸ்லிம்களின் இதயத்தில் முகிழ்த்திடும் ஒரே சொல் 'அல்லா' என்பதாகும். என்னைப் போன்ற திராவிட இயக்கத்தவர்களின் எண்ணத்தில் என்றைக்கும் உதயமாகும் ஒரே சொல், 'கலைஞர்' என்பதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒரு சொல் சரித்திரமாம் தலைவர் கலைஞர் அவர்களையும், உயர்தனிப் பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

கடந்த 26-6-2009 அன்று, இந்த மானியக் கோரிக்கைமீது விவாதத்திலே பங்குபெற்று உரையாற்றியிருக்கக்கூடிய, ஆளுங்கட்சியாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன், திரு. சிவசங்கர், அ.தி.மு.க.வைச் சார்ந்த திரு. ஆர். சாமி, திரு. வேலுமணி, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த திரு. அமரமூர்த்தி, திரு. ஜெயபால், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த திரு. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சார்ந்த செல்வி பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தைச் சார்ந்த திரு. குணசேகரன், ம.தி.மு.க.வைச் சார்ந்த டாக்டர் சதன் திருமலைக்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த திரு. ரவிக்குமார், தொடர்ந்து இன்று இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த திரு. வேல்முருகன், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த அம்மையார் திருமதி யசோதா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. காந்தி அவர்கள், அ.தி.மு.க.வைச் சார்ந்த திரு. பி. தங்கமணி அவர்கள், சிறப்பான வகையில் தங்களுடைய கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துவைத்து, இந்தத் துறைக்கு சில அறிவுரைகளை, ஆலோசனைகளை, இன்னும் ஊக்கத்தோடு செயல்படவேண்டுமென்ற அந்த உணர்வோடு தங்களுடைய எண்ணங்களை இங்கே பிரதிபலித்திருக்கிறார்கள். அதற்காக நான் முதலில் அவர்களுக்கெல்லாம் இந்தத் துறையின் சார்பிலே நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த 3 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள், நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள்,

வழங்கப்பட்டிருக்கக்கூடிய நலத் திட்ட உதவிகள் அனைத்தும் அணி அணியாய் வந்து என் நினைவுகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. தேர்வுகள் எழுதி முடிவுகள் வெளியானதற்குப் பின்னர், தான் பெற்ற நல்ல மதிப்பெண்கள் பட்டியலைத் தனது பெற்றோரிடமும், உற்றார் உறவினர்களிடத்திலும், நண்பர்களிடத்திலும் காட்டி மகிழ்ந்து இருக்கும் மாணவன் நிலையில் இந்த மாமன்றத்தில் இப்பொழுது நான் நின்று கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்பமைந்த இந்தப் பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிருவாகம், நகராட்சி நிருவாகம்மற்றும்குடிநீர்வழங்கல்துறையினுடைய சார்பில் நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள் சிலவற்றை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழகத்தின் பட்டிதொட்டிகள், குக்கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என அனைத்துப் பகுதிகளினுடைய உள்ளூர் நிருவாகம் அங்கே செயல்படுத்தப்படக்கூடிய மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் வளர்ச்சித் திட்டங்கள், இவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற ஒரு சிறப்பான பொறுப்பு, ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்தத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய மானியக் கோரிக்கையை நான்காவது முறையாக இந்த அவையிலே தாக்கல் செய்து, குறிப்பாக 2009–2010 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைமீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திற்கு இப்போது பதில் தருகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

இந்தியாவில் 28 மாநிலங்கள் உள்ளன. ஒவ்வாரு மாநிலத்திலும் ஊராட்சி நிருவாகம் அமைந்திருக்கிறது. செயல்திறன், வளர்ச்சிப் பணிகள், நிதிப் பகிர்வு, அதிகாரப் பகிர்வு பற்றி தேசிய அளவிலே அமைந்திருக்கக்கூடிய National Council for Applied Economic Research என்கிற பொருளாதார கணிப்பாய்வுக் கழகத்தில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், தமிழ்நாடு தொடர்ந்து 3 வருடங்களாக முதல் 4 மாநிலங்களில் இருந்து கொண்டிருக்கிறது என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 2006–2007 ஆம் ஆண்டில் 4–வது இடத்திலும், 2007–2008 ஆம் ஆண்டிலே முதல் இடத்திலும், 2008–2009 ஆம் ஆண்டிலே 3–வது இடத்திலும் தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்காக மத்திய அரசு இந்தத் துறைக்கு ஒரு கோடியே 50 இலட்ச ரூபாயைப் பரிசாகவும் வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; மத்திய அரசினுடைய 13–வது நிதி ஆணையத்தினுடைய தலைவர் டாக்டர் விஜய் கேல்கர் அவர்கள், உலகளவிலே ஒரு சிறந்த பொருளாதார நிபுணராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர். மத்திய நிதித் துறையினுடைய முன்னாள் செயலராக இருந்து

திறம்படப் பணியாற்றியிருக்கக்கூடியவர். அவர் கடந்த 4-6-2009 அன்று சென்னையிலே நடைபெற்ற 13-வது நிதி ஆணையக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அவர் பேசுகிறபோது, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பாராட்டி இருக்கிறார். குறிப்பாக, மனித வள மேம்பாடு சிறப்பாக உள்ளது; கல்வி அறிவு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது; மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அதிக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது; சிறப்பான நிருவாகத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது என்றும், வளர்ச்சிப் பணியிலே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே செயல்படுத்தப்படக்கூடிய தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பற்றி அவர் குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, "Tamil Nadu has implemented NREGA very successfully. It is commendable that 3 districts from Tamil Nadu were top of the 22 districts selected all over the country to receive the award of excellence in NREGA this year. This reflects the strength and responsiveness of the Gram Panchayats in the State. Tamil Nadu has always been a role model whose action have been replicated all over the country" என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்திய அளவிலே 22 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக தமிழகத்திற்கு மாத்திரம், 3 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, விருதுகளைப் பெற்றிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அதைக் குறிப்பிட்டுச் சொல்லி, அவர் மேலும் குறிப்பிடுகிறார். தமிழக கிராம ஊராட்சிகளின் வலிமையையும், திறமையையும் இது சுட்டிக்காட்டுகிறது. தமிழ்நாடு மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்றப்படவேண்டிய முன்னோடி மாநிலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கிராம ஊராட்சியினுடைய சிறப்பான வெளிப்பாட்டிற்கு, அதனுடைய செயல்பாட்டிற்கு நான் ஒரு சான்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசினுடைய முழு சுகாதாரத் திட்டத்தின்கீழ் தூய்மையான கிராமங்களை, ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்து, அதற்காகத் தொடர்ந்து 'நிர்மல் கிராம புரஸ்கார்' விருது ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 'நிர்மல் கிராம புரஸ்கார்' விருது, 2004-2005 ஆம் ஆண்டு 12 ஊராட்சிகள் பெற்றிருக்கின்றன, 2005-2006 ஆம் ஆண்டு, 119 ஊராட்சிகள் அந்த விருதினைப் பெற்றிருக்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டு, 296 ஊராட்சிகள் அந்த விருதினைப் பெற்றிருக்கின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், 1,474 கிராம ஊராட்சிகள் அந்த விருதினைப்

பெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). இந்திய அளவிலே தமிழ்நாடு இரண்டாவது இடம். முதல் இடம் மகாராஷ்டிரம்; அதைப் பெற்றிருக்கிறது. இந்தியா முழுமைக்கும் அதைக் கணக்கெடுத்துப் பார்த்தால் மொத்தம் 6,930 விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே 1,474 விருதுகளைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், இது ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தச் சாதனையின் தொடர்ச்சியாக இன்னொன்று, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி. இந்த நிதியைப் பொறுத்தவரையில் தமிழகத்திற்கு ஆண்டிற்கு ரூ.114 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது; 114 கோடி ரூபாய். அதாவது. தமிழகத்திலே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 39; ராஜ்ய சபா அதாவது மாநிலங்களவை உறுப்பினர்கள் 18. ஆக, 57 நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்களினுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின் அடிப்படையிலே ஓராண்டிற்கு, ஒவ்வோர் உறுப்பினருக்கும் ரூ.2 கோடி என்று கணக்கிட்டால் ரூ.114 கோடி. இதை ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு ஒதுக்குகிறது. ஆக, இந்த நிதியைத் தொடர்ந்து நாம் பார்ப்போம் என்று சொன்னால், 1993 முதல் இந்த நிதியைப் பயன்படுத்துவதிலே முதல் இடம், இந்தியாவிலே நம்முடைய தமிழ்நாட்டுக்குத்தான் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்தத் துறைதான் காரணம் என்பதையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதாவது 99 சதவிகித நிதியை முழுமையாக இந்தத் திட்டத்திற்காக நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல, பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்டம். இது 2000 ஆம் ஆண்டிலே தொடங்கி வைக்கப்பட்டது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே காஞ்சிபுரம் மாவட்டத்திலேதான் இந்தத் திட்டம் முதன்முதலில் தொடங்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையில் 6 ஆண்டு காலம், இந்தத் திட்டத்திற்காக ரூ.713 கோடியை நாம் பெற்றிருக்கிறோம். 2006–ல் தி.மு.க. ஆட்சி வந்து இந்த மூன்று ஆண்டுக் காலத்தில், 2009 ஆம் ஆண்டு வரையில், இந்தத் திட்டத்திற்காக 1,325 கோடி ரூபாயை நிதியாக நாம் பெற்றிருக்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கக்கூடிய பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம். இந்தத் திட்டம் முதன்முதலில் 1997–ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம், தந்தை பெரியார் கண்ட கனவை நிறைவேற்றிட வேண்டும். ஒருவனைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டால், எத்தனை பேர் தமிழன் என்று சொல்கிறோம்? முதலியார் என்றோ, யாதவர்

என்றோ, பிராமணர் என்றோ, வன்னியர் என்றோ, தேவர் என்றோ, நாயுடு என்றோ, செட்டியார் என்றோதான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும். நாம் ஒவ்வொருவரும் தமிழன் என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இந்த நாட்டிலே வந்தாகவேண்டும். இதுதான் தந்தை பெரியார் கண்ட கனவாகும்.

ஜாதியைப் பற்றிக்கூட நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அடிக்கடி ஒரு மேற்கோளைக் காட்டிக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அதாவது, அத்தி மரத்திலே உச்சியிலோ, கிளையிலோ, அடிமரத்திலோ, காய்கள் காய்க்கும். அப்படிக் காய்க்கக்கூடிய காய்களை அத்திக்காய் என்றுதான் சொல்கிறோம். அடி மரத்தில் காய்ப்பதைப் பரங்கிக் காய் என்றோ, கிளையில் காய்ப்பதைப் புடலங்காய் என்றோ, உச்சியில் காய்ப்பதை வெண்டைக்காய் என்றோ நாம் சொல்வது கிடையாது. ஆக மேல் சாதி, கீழ் சாதி கூடாது. சாதி ஒழிக என்று சொன்னால் மட்டும் போதாது, சாதி என்பது சதியின் காரணமாக, அந்தச் சதிக்குக் கால் முளைத்து அது சாதியாக மாறியது.

அதுமட்டுமல்ல; சாதி என்ற அந்த எழுத்துக்கு கடைசி எழுத்தாக அமைந்துள்ள 'தி' என்ற எழுத்துக்குக் கொம்பு முளைத்து அது 'தீ' ஆக மாறியது. ஆக, அந்தத் தீயை அணைக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவது உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அனைத்து இனத்தைச் சார்ந்தவர்களும், ஒற்றுமை உணர்வோடு, ஒருமித்த கருத்தோடு ஒன்றாக வாழ வேண்டுமென்பதற்காகத்தான் தந்தை பெரியார் பெயரில், 1997 ஆம் ஆண்டு சமத்துவபுரத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு வரையிலே, நாம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலக்கட்டம் வரையிலே, 145 சமத்துவபுரங்கள் அப்பொழுது உருவாக்கப்பட்டன. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், அ.தி.மு.க.–வைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பிலே போட்டுவிட்டார்கள். கிடப்பிலே போட்டது மட்டுமல்ல; அந்தச் சமத்துவபுரத்தைப் பராமரிக்கின்ற, பழுதுபார்க்கின்ற பணியிலேகூட, அவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. அதற்காகத்தான், 2006–லே மீண்டும் கலைஞர், ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, முதல் பணியாக, சமத்துவபுரத்தைப் பராமரிக்கின்ற அந்தப் பணிக்காக 14½ கோடி ரூபாயை, நிதியை ஒதுக்கீடு செய்து அந்தப் பழுதுபார்க்கின்ற பணிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அதைத் தொடர்ந்துதான், கடந்த ஆண்டு, 2008 ஆம் ஆண்டு ஆளுநர் உரை இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டபோது, மீண்டும் தமிழகத்திலே சமத்துவபுரம் உருவாக்கப்படும்; தந்தை பெரியார் வயது 95; ஆக, அவருடைய வயதைக் குறிக்கக்கூடிய வகையில் 95 இடங்களில் சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்து, சமத்துவபுரங்கள் அமைக்கப்படுவது மட்டுமல்ல; அமைக்கப்படக்கூடிய சமத்துவபுரங்கள் அனைத்திலும் தந்தை பெரியார் சிலையும் அமைக்கப்படும் என்று அறிவித்து, இந்த 95 இடங்களில் மட்டுமல்ல; ஏற்கெனவே

இருக்கக்கூடிய 145 இடங்களிலும் தந்தை பெரியார் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்குப்பிறகு 2008–2009 ஆம் ஆண்டிலே 29 சமத்துவபுரங்களை கட்ட முடிவெடுத்துஅதன்முதல்சமத்துவபுரத்தைவீடியோ கான்ஃபரன்சிங்மூலமாக நம்முடைய முதல்வர் அவர்கள் திறந்து வைத்தது உங்களுக்கெல்லாம் தெரியும். திருச்சியிலே, 14–6–2009 அன்று அது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து 28 சமத்துவபுரங்கள் இன்னும் 2 அல்லது 3 மாத காலத்திற்குள் முடிவுபெற்று, அவையும் விரைவிலே திறந்து வைக்கப்பட இருக்கின்றன. வரக்கூடிய நடப்பாண்டில், 2009–2010 ஆம் ஆண்டில் மேலும் 30 சமத்துவபுரங்களைக் கட்டுவதற்கு 75 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்கள்மூலமாக கட்டப்பட்டிருக்கக்கூடிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பார்த்தால் பழுதடைந்த நிலையில்தான், பராமரிப்பு இல்லாத நிலையில்தான் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. ஆக, அதைச் சீரமைக்க வேண்டுமென்று முடிவுசெய்து, இந்தத் துறையின் சார்பிலே கடந்த ஆண்டு, 2007–2008 ஆம் ஆண்டு அதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கி, அதை அறிவித்தோம். நம்முடைய பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக ஒரு கணக்கெடுப்பு நடத்தினோம். அந்த எண்ணிக்கையைக் கணக்கெடுத்தோம். அப்படிக் கணக்கெடுத்தபோது, தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 22,000 பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 4,500 பள்ளிகளும் ஆக மொத்தம் 26,500 பள்ளிகள் பராமரிப்பின்றி, பழுதான நிலையில் இருந்ததைக் கணக்கெடுத்து, அதனுடைய முதல்கட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் எங்கெல்லாம் நிறைவேற்றப்படுகிறதோ, அங்கு முதல்கட்டமாக அந்தப் பணியை எடுத்துக்கொண்டு, அந்தப் பணியிலே ஈடுபட்டோம். 2006–2007, 2007–2008 ஆம் ஆண்டுகளிலே 10,248 பள்ளிகளைச் சீரமைக்க 135 கோடி ரூபாய் அதற்காகச் செலவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு 2008–2009–லே 4,439 பள்ளிகளைச் சீரமைக்க பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய 460 பள்ளிகளையும் சேர்த்து அந்தப் பள்ளிகளைச் சீரமைக்க முடிவு செய்து அதற்காக 69 கோடியே 36 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதிலே 3,935 பள்ளிகளை முழுமையாகச் சீரமைத்திருக்கிறோம். மீதம் இருக்கக்கூடிய பணிகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. நடப்பு ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக மேலும் 85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், பள்ளிகள் தொடங்கப்பட்டு, சீரமைக்கின்ற பணியிலே

இதுவரையில் எந்த ஆட்சியிலும் யாரும் ஈடுபடவில்லை. இப்படிச் சீரமைக்கின்ற பணியில் ஈடுபட்ட ஒரே ஆட்சி, கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த ஆட்சிதான் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம். இது 2006 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்ட திட்டம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் என்று சொன்னால் இங்கேகூட உரையாற்றியவர்கள், அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றீர்கள். தமிழகத்திலே 12,620 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. ஆக, கிராம ஊராட்சிகளிலே இருக்கக்கூடிய அடிப்படை பிரச்சினைகளை முழுமையாகத் தீர்த்து வைக்க வேண்டும், ஐந்தாண்டுக் காலத்தில் அந்தப் பணியை நிறைவேற்றிட வேண்டுமென்று முடிவெடுத்து, ஒரு வருடத்திற்கு 2,500 கிராம ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு என ஒரு வருடத்திற்குச் சராசரியாக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக 2,524 கோடி ரூபாயைச் செலவு செய்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்து, அந்தப் பணிகளில் இறங்கினோம். கடந்த 3 ஆண்டுக் காலத்திலே 7,594 கிராம ஊராட்சிகளுக்கு 1,534 கோடி ரூபாயைச் செலவு செய்து 1,09,567 பணிகளை ஏற்றுக்கொண்டு, அவற்றிலே 1,05,923 பணிகளை நாம் முழுவதுமாகச் செய்து முடித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமிருக்கக்கூடிய சுமார் 3,500 பணிகள் இப்போது செயல்பாட்டிலே, அவற்றையெல்லாம் விரைவாக முடிக்கக்கூடிய சூழ்நிலையிலே அந்தப் பணிகளும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆக, வரக்கூடிய நடப்பாண்டிலேகூட, 2009–2010–லே 2,511 கிராம ஊராட்சிகளுக்காக 507 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் பெருமையோடு தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், கிராம ஊராட்சிகளில் இருக்கக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகள், சாலை வசதிகள், சிமென்ட் சாலைகள், தெரு விளக்குகள், நூல் நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள், மயானங்கள் இதுபோன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு இது சிறப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நான் இங்கே பெருமையோடு மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன், வரக்கூடிய ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகத் தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா கிராம ஊராட்சிகளிலும் இருக்கக்கூடிய எல்லா அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு மாநிலமாக இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடு முதலிடத்தைப் பெறவிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தவிதமான முறைகேடுகளுக்கும்

இடம் தந்துவிடாமல், ஏழையெளிய மக்கள் பயன்படக்கூடிய வகையிலே ஒரு சிறப்பான திட்டமாக மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று, மாநில அரசும் அதனுடைய பங்கைச் செலுத்தி, இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்திய அளவிலே இருக்கக்கூடிய மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய தமிழ்நாடு இதிலே ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதும் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1,958 கோடி ரூபாய் இதுவரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. தினசரி ஊதியமாக 80 ரூபாய்வரை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இங்கே உரையாற்றிய செல்வி பாலபாரதி அவர்கள்கூட பேசுகிறபோது குறிப்பிட்டார். அதேபோல, மற்ற உறுப்பினர்களும் இங்கே பேசுகிறபோது இந்த ஊதியத்தைக் கூடுதலாக உயர்த்திட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இங்கே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் அடிப்படையிலே 80 ரூபாய் என்று வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய அந்த நிலையைக்கூட மாற்றி, 100 ரூபாய் என்று உயர்த்துவதற்குரிய நடவடிக்கையை இந்தத் துறை எடுத்திருக்கிறது என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; 100 நாட்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த வேலைவாய்ப்பைக்கூட, 150 நாட்களாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைகளும் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, இந்தக் கோரிக்கை இங்கு மட்டுமல்ல; நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேகூட அது இடம் பெற்றிருக்கிறது. ஆக, அந்த அடிப்படையிலேதான் கடந்த 23-6-2009 அன்று நம்முடைய முதல்வர் அவர்கள், பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு இதுசம்பந்தமாக ஒரு கடிதத்தைக்கூட எழுதியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மகளிர் சுய உதவிக் குழுக்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுவைப் பொறுத்தவரைக்கும், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்திலேதான் இந்தத் திட்டம் முதன்முதலில் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போதே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சுய உதவிக் குழுத் திட்டம் என்பது, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ்ந்திட வேண்டும்; யாருடைய தயவையும் எதிர்நோக்காமல், அவரவர்கள் தங்களுடைய சொந்தக் காலில் நிற்கக்கூடிய அந்தச் சூழ்நிலையை அவர்கள் பெற்றாக வேண்டும் என்பதே. அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய வட்டாரங்களில் அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப சிறு சிறு தொழில்களை, அவர்கள் செய்துகொண்டு அவர்கள் வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வேண்டும். இதற்கு நிதி தேவை. இந்த

நிதியை வங்கிகளிடமிருந்து, குறைந்த வட்டியில் பெற வேண்டும். அதற்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. 1989–லே தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், படிப்படியாக வளர்ந்து, பரந்து விரிந்து, இன்றைக்கு கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், இதுவரையில் அமைந்திருக்கக்கூடிய மொத்தக் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால், 3,91,972 குழுக்கள். இதிலே இடம் பெற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 63 இலட்சம். 63 இலட்சம் பேர்கள் இதில் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த 2006–லிருந்து, 3 ஆண்டுக் காலத்திலே உருவாகியிருக்கின்ற குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால், 75,493 குழுக்கள் உருவாகியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் இடம்பெற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 12,07,888 மகளிர் இதிலே உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். ஆக, குழுக்கள் அமைப்பது மட்டும் நோக்கமல்ல; அமைக்கப்படக்கூடிய அந்தக் குழுக்களுக்குத் தேவைப்படக்கூடிய கடனை வங்கிகளிலிருந்து பெற்றுத் தருவதற்கான அந்தச் சிறப்பான முயற்சியை இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது. இதற்கு ஓர் உதாரணத்தைக்கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். 1989 முதல் மார்ச் 2008 வரை, அதாவது கடந்த 19 ஆண்டுக்காலத்தில் இந்தச் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடனைப் பொறுத்தவரையில் கணக்கெடுத்துப் பார்த்தால், 3,163 கோடியே 39 இலட்சம் ரூபாய். நான் சொல்வது, 19 ஆண்டுக் கால வரலாற்றில், 3,163 கோடியே 39 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது நான் சொல்லவிருப்பது 2008–2009 ஆம் ஆண்டில் இந்தத் துறையினுடைய முயற்சியின் காரணமாக 2,174 கோடியே 57 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; 2008–2009 ஆம் ஆண்டில் கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற இலக்கு எவ்வளவு என்று கேட்டால், 1,600 கோடி ரூபாய். ஆனால், சாதனை அளவாக வழங்கப்பட்டிருக்கக்கூடிய கடன் 2,174 கோடி ரூபாய். மாவட்ட வாரியாக நானே நேரடியாகச் சென்று எல்லாக் குழுவினருக்கும் வழங்கினேன் என்பது இங்கிருக்கக்கூடிய பல உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அது ஆயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, இரண்டாயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, நான்காயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, ஐந்தாயிரம் குழுக்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு நேரம் அதற்காகத் தாமதம் ஆனாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதை வழங்கினோம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இந்த சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில், ஒரு சிறப்புக்குரிய செய்தி என்னவென்று கேட்டால், இன்றைக்கு வங்கிகளிலிருந்து வாங்கியிருக்கின்ற கடனைக்கூட

வட்டியோடு திருப்பிச் செலுத்தியதிலே முதல் மாநிலமாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு விளங்கிக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏறக்குறைய 99 சதவிகிதம் அளவுக்கு வங்கியிலே திருப்பிச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ மகளிருக்குக் கிடைத்திருக்கின்ற பெருமை மட்டுமல்ல; ஒட்டுமொத்த நம்முடைய தமிழகத்திற்கே கிடைத்திருக்கக்கூடிய பெருமையாகத்தான் நாம் கருதிக்கொண்டிருக்கின்றோம்.

அடுத்து, நகராட்சி நிருவாகத்தைப் பற்றி சில செய்திகளை நான் இந்த அவையிலே உங்களிடத்திலே எடுத்துவைக்க விரும்புகிறேன். நகராட்சி நிருவாகம் என்பது உள்ளாட்சி நிருவாகத்தினுடைய ஒரு கண்ணாக ஊரக வளர்ச்சி விளங்கிக்கொண்டிருக்கின்றது என்று சொன்னால், இன்னொரு கண்ணாக நகராட்சி அமைப்பு விளங்கிக்கொண்டிருக்கின்றது. கிராமங்கள் பேரூராகவும், பேரூர் நகரமாகவும், நகரம் மாநகராட்சிகளாகவும் மேம்படும் என்று சொல்லக்கூடிய அந்த நிலையில்தான் உன்னதமான வளர்ச்சியை நாம் பெற்றிட முடியும். அந்தவகையிலே, கடந்த மூன்று ஆண்டுகளில் ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய நான்கு நகராட்சிகள், மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அனைத்து நகர்ப்புறப் பகுதிகளிலும் வளர்ச்சிப் பணிகள் இன்றைக்குச் சிறப்பாக இந்தத் துறையின்மூலமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சாலைப் பணிகள், தெரு விளக்குகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், சுகாதார வசதிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால், பேருந்து நிலையங்கள், புதிய அலுவலகக் கட்டடங்கள், திடக்கழிவு மேலாண்மை, பூங்காக்கள், மருத்துவமனைகள், வீட்டு வசதித் திட்டங்கள், நவீன இறைச்சிக் கூடங்கள், நவீன எரிவாயு தகன மேடைகள், மின் ஆளுமைத் திட்டங்கள், கல்வி மேம்பாட்டுப் பணிகள். இப்படிப் பல பணிகள், வளர்ச்சிப் பணிகளாகத் தொடர்ந்து இந்தத் துறையின் சார்பில் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அவற்றில் சில குறிப்பிட்ட சாதனைகளை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் இந்தத் துறையில் எத்தனையோ சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருந்தாலும், இன்றைக்கு ஒரு பெருமைக்குரிய சாதனையாக விளங்கிக்கொண்டிருப்பது இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இது பல நூறு ஆண்டுகளாக இருக்கக்கூடிய பிரச்சினை. இராமநாதபுரம் மக்களுடைய தாகத்தையும், ஏக்கத்தையும் தீர்த்துவைக்கக்கூடிய வகையிலே திராவிட முன்னேற்றக் கழகம், 2006 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் தலைமையிலே ஆட்சிப் பொறுப்பேற்று, இதே அவையிலே முதல் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது—22-7-2006 அன்று இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டபோது—

ரூ.616 கோடி மதிப்பீட்டிலே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 30–1–2007 அன்று பரமக்குடியிலே அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது.

நம்முடைய முதல்வர் அவர்களே நேரடியாக வருகை தந்து, அந்த விழாவிலே பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். சிறப்பித்தது மட்டுமல்ல; அந்த விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றுகிறபோது. ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய தாகத்தைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மூன்றாண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படும் என்று அதிகாரிகளால் குறிப்பு தரப்பட்டிருக்கிறது. எனவே, மூன்று ஆண்டுக் காலம் என்பதைவிட, குடிநீர்ப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், இதைக் கொஞ்சம் விரைவுபடுத்தி, துரிதமாக்கி, இதைக் குறைத்து, மூன்று ஆண்டுக் காலம் என்பதைக் குறைத்து, இரண்டாண்டுக் காலத்திலே நிறைவேற்றித் தந்தால், அது சிறப்பாக அமைந்திட முடியும். அப்படி நிறைவேற்றுகிற முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டால், சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு நானே பரிசுகளை வழங்குவேன் என்று அன்றைக்கு அறிவித்தார்கள். அவருடைய அறிவிப்பை இந்தத் துறை ஒரு சவாலாகவே ஏற்றுக்கொண்டு, மூன்று ஆண்டுக் காலத்திலே நிறைவேற்ற வேண்டிய அந்தப் பணியை இரண்டே ஆண்டுகளிலே நிறைவேற்றி முடித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 11–6–2009 அன்று அது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் வீடியோ கான்ஃபரன்சிங் மூலமாக அதைத் தொடங்கி வைத்தார்கள். அதைத் தொடர்ந்து, கடந்த 15–6–2009 அன்று முதல்வர் தந்த அந்த உறுதிமொழியோடு, இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய, இரண்டு ஆண்டுக் காலத்திலே அதை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள், ஏறக்குறைய 234 பேர்களுக்கு விருதுகளையும், சான்றிதழ்களையும், பாராட்டுகளையும் வழங்கி, இந்தத் துறைக்கு பெருமை வந்து சேர்ந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரேபியா பாலைவனத்தில் ஜம்ஜம் என்ற நீரூற்று ஒன்று உண்டு. ஹஜ் யாத்திரை செல்லக்கூடிய இஸ்லாமியப் பெருமக்கள், அதைப் புனித நீராகப் பயன்படுத்துவார்கள். அதேபோல, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒரு புனித நீரூற்றாக வந்து அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டத்தைப்பற்றி பலர் பல கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இங்கேகூட, அ.தி.மு.க.–வைச் சேர்ந்த தங்கமணி அவர்கள் பேசுகிறபோது, இந்தத்

திட்டத்தை நிறுத்தி வைத்துவிடலாம் என்று நம்முடைய முதல்வர் அவர்களே அறிவித்ததாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். அவர் எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்று சொன்னால், அப்போது தேர்தல்—கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் நடந்து கொண்டிருக்கக்கூடிய தேர்தல்—அந்தத் தேர்தல் நடந்த காரணத்தினாலே பல கலவரங்கள், பல சூழ்நிலைகள் இங்கே வந்துவிடக் கூடாது; ஒரு மாநிலத்திற்கு மாநிலம் இருக்கக்கூடிய பிரச்சினைகள் அதிகமாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அந்தச் சூழ்நிலையிலேதான் அந்த வார்த்தை வந்ததே தவிர, ஆனால், கால அட்டவணையின்படிதான் இன்றுவரையிலே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாப் பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே ஃபுளோரைடு கலந்த நிலத்தடி நீர், கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு, fluorosis என்ற கடுமையான நோய் பாதிப்பு. இவற்றால் இந்த இரண்டு மாவட்ட மக்கள் சிக்கி, ஒரு கொடுமையைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். ஆக, அதற்காகத்தான் இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நீண்ட ஆண்டுக் காலமாக அந்த மாவட்டத்திலே ஒரு கோரிக்கை இருந்து வந்தது. அதை நிறைவேற்றுகிற முயற்சியிலே பலர் பல சூழ்நிலைகளிலே ஈடுபட்டிருந்தாலும், பல நேரங்களில், பல சூழ்நிலைகளின் காரணமாக அது தடைப்பட்டுப் போயிருந்தது. ஆனால், 2006 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, ஆட்சிக்கு வந்தவுடனே இதிலே முழு கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று எங்களுக்கு, இந்தத் துறைக்கு உத்தரவிட்டார்கள். ஆக, அதற்குப் பிறகு அந்தப் பணியிலே நாங்களும் ஈடுபட்டோம்.

ஜப்பான் நாட்டுக்கு என்னுடைய தலைமையிலேயே இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளோடு, பயணத்தை மேற்கொண்டோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போய்ச் சந்தித்தோம். அதற்குப் பிறகு மத்திய அரசின் துணையோடு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற இந்த முயற்சியிலே ஈடுபட்டு, அதன் விளைவாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் மூலமாக 1,334 கோடி ரூபாய்க்கான ஒப்புதலைப் பெற்றோம். அதைத் தொடர்ந்துதான் தருமபுரியிலே இதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும், கடந்த 26–2–2008 அன்று நடந்தது. முதல் கட்டப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் இப்பொழுது இறுதி செய்யப்பட்டு, இன்னும் மூன்று அல்லது நான்கு மாத காலத்திற்குள்ளாக பணிகள் எல்லாம் தொடங்கப்பட இருக்கின்றன.

இங்கேகூட, திரு. திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது, நிதிப் பற்றாக்குறை இருந்தால், அரசே அதிலே நிதியைச் செலுத்தி, திட்டத்தை நிறைவேற்றலாமே; விரைவுபடுத்த வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். நிதியைப்பற்றி எந்தப் பிரச்சினையும் கிடையாது. திட்டமிட்டபடி எல்லாப் பணிகளும்

முறையோடு நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும்கூட சொல்ல வேண்டுமென்று சொன்னால், இரண்டாவது கட்டப் பணிக்கான ஒப்பந்தமும், திட்டத்தின் செயல்பாடுகள்கூட திட்டமிட்டபடி காலக்கெடுவின்படிதான் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, வருகிற 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக அனைத்துப் பணிகளும் முடிவுற்று, அந்த இரண்டு மாவட்ட மக்களுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலமாகக் குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும்கூட நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், எப்படி இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 3 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றுவோம் என்று முதலில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், மாண்புமிகு முதல்வருடைய வேண்டுகோளையேற்று, அதை விரைவுபடுத்தி 2 ஆண்டுக் காலத்தில் முடித்து, அதிலே வெற்றி கண்டிருக்கிறோமோ, அதேபோல, இந்தத் திட்டத்தையும் விரைவுபடுத்துவதற்கான முயற்சியிலே இந்தத் துறை நிச்சயமாக ஈடுபடப் போகிறது என்பதையும் நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம்; சென்னையைப் பொறுத்தவரைக்கும், புழல் ஏரி, பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, கிருஷ்ணா நதிநீர், வீராணம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலமாகக் குடிநீரைப் பெறுகின்றோம். இருந்தாலும், தொடர்ந்து பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கிறது. குடிநீரைப் பொறுத்தவரையில், சென்னையிலே பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலேகூட, மீஞ்சூர்–காட்டுப்பள்ளியிலே கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய ஒரு திட்டத்திற்காகத் தனியாரோடு ஒப்பந்தம்கூட போட்டு வைத்திருந்தார்கள்; நான் மறுக்கவில்லை. ஆனால், இது அ.தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவந்த திட்டம் என்பதற்காக, தி.மு.க. ஆட்சி வந்தவுடனே, அதைக் கைவிட்டுவிடவில்லை. இது குடிநீர்; மக்களுக்காகப் பயன்படக்கூடிய திட்டம். ஆகவே, உடனடியாக முழு முயற்சியிலே ஈடுபட்டு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று எங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு, அதற்கான பணியிலே ஈடுபட்டோம். அந்த வகையிலே 25–2–2007 அன்று அதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தி—ஒப்பந்தப்படி ஆகஸ்ட் 2008–லே அந்தப் பணிகள் முழுமையாக முடிந்திருக்க வேண்டும்—ஆனால், நிறுவனத்திலே ஏற்பட்ட சில சங்கடங்கள், பல்வேறு பிரச்சினைகள், பல காரணங்கள்; அதனால் கொஞ்சம் தடைபட்டது. ஆனால், இப்போது இருக்கக்கூடிய நிலவரத்தைக் கணக்கெடுத்துப் பார்த்தால், இன்னும் 5 சதவிகிதப் பணிகள்தான், அந்த நிறுவனம் செய்து முடிக்க வேண்டிய பணியில் மிச்சமிருக்கிறது.

சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் தொடர்புடைய

எல்லாப் பணிகளையும் முழுமையாக முடித்துவிட்டார்கள். நானும், நம்முடைய அதிகாரிகளும் பலமுறை அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று, பல நேரங்களில் ஆய்வும் செய்திருக்கிறோம். எனவே, வரக்கூடிய அக்டோபர் மாத இறுதிக்குள்ளாக அனைத்துப் பணிகளையும் முடித்து, சென்னைக்கு கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலமாகக் குடிநீரையும் வழங்கவிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல், இன்னொரு திட்டம்; மத்திய அரசின் துணையோடு நிறைவேற்றப்படக்கூடிய கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம்; சென்னைக்கு அருகே, கிழக்குக் கடற்கரைச் சாலை, நெம்மேலி கிராமத்திலே இந்தத் திட்டம் உருவாக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு 993 கோடியே 83 இலட்சம் ரூபாய். மத்திய அரசு இதற்கு மானியமாகத் தரக்கூடிய தொகை 871 கோடியே 24 இலட்சம் ரூபாய். அதற்கான ஒப்புதலையும் தந்திருக்கிறது. மத்திய அரசு இதற்காக, முதற்கட்டமாக, இந்தத் துறைக்கு 300 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. எனவே, இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. நடப்பு நிதியாண்டில் இதனுடையபணிகள்தொடங்கப்படவிருக்கின்றன. எனவே, பணிகள் தொடங்கி 24 மாதக் காலத்திற்குள்ளாக இந்தத் திட்டமும் முழுமை பெற்று, குடிநீர் சென்னைக்கு வரவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNURM): இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மத்திய அரசினுடைய மானியத் தொகை, மாநில அரசினுடைய மானியத் தொகை, அதேபோல, உள்ளாட்சி அமைப்பினுடைய பங்கு, இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நிறைவேற்றப்படக்கூடிய ஒரு மிகப் பெரிய திட்டம், இந்தத் திட்டம். சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, 2,032 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, 28 திட்டங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, திட்டங்களுக்குரிய அந்த ஆய்வுப் பணியை நடத்தி, இப்பொழுது அந்தப் பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. அதாவது, குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள், கழிவுநீர் அமைப்பு வசதிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள்; இவையெல்லாம் இப்போது இந்தத் துறையின் சார்பில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகர், ஆலந்தூர், ஆவடி, அம்பத்தூர், திருவொற்றியூர், தாம்பரம், மதுரவாயல், உள்ளகரம், புழுதிவாக்கம் போன்ற நகராட்சிகள் மற்றும் போரூர், பெருங்குடி, திருமழிசை, மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பள்ளிக்கரணை, பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை போன்ற பேரூராட்சிகள் மற்றும் நெற்குன்றத்திலே, இந்தத் திட்டத்தின்மூலமாகப் பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மதுரை மாநகராட்சிக்கு மட்டும், 2,497 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு,

624 கோடி ரூபாய்க்கான அனுமதியும் பெற்று, அதன்மூலமாகப் பல்வேறு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வைகை இரண்டாம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பணிகளை முடித்து, விரைவிலே அதனுடைய தொடக்க விழா நடைபெறவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும், 3,187 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, 587 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே மூன்று பணிகளுக்கு அனுமதியும் தந்து, அந்தப் பணிகள் முடியுந்தருவாய்க்கு வந்திருக்கின்றன.

ஒன்று, 'இரண்டாவது பில்லூர் குடிநீர்த் திட்டம்'—இங்கே நம்முடைய தங்கமணி அவர்கள்கூட கேட்டார்கள். இரண்டாவது பில்லூர் குடிநீர் திட்டம்—பாதாள சாக்கடைத் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், இந்த மூன்று பணிகள்தான்.

அதைப்போல, சென்னை மாநகராட்சியில், அடிக்கடி மழை வருகிறபோது இந்த மாநகரம் பல்வேறு நேரங்களில் பல பாதிப்புகளுக்குள்ளாகிறது. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தின்மூலமாக சிறிய மற்றும் பெரிய மழைநீர் வடிகால் அமைப்பதற்காக, எல்லாப் பகுதிகளிலும் அமைப்பதற்காக 1,448 கோடி ரூபாய் செலவிலே திட்டங்கள் தீட்டப்பட்டு, அதற்கான அனுமதியும் மத்திய அரசு மூலமாக நாம் பெற்றிருக்கிறோம். அந்தப் பணிகளும் விரைவிலே செயல்படவிருக்கின்றன.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்திலே சென்னை மாநகராட்சி மற்றும் அதை ஒட்டியிருக்கக்கூடிய பல்வேறு நகராட்சிகளில், பேரூராட்சிகளில் நகர்ப்புற ஏழைகளுக்கு, குடிசைப் பகுதி மக்களுக்கு 1,26,584 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இந்த அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது எப்படி அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக, நாம் ஐந்தாண்டுக் காலத்திலே அந்தப் பணிகளை நிறைவேற்ற முடிவு செய்து, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமோ, அதைப்போலவே இந்த அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது, நான்காண்டுக் காலத்திலே ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியை இன்றைக்கு நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

அதேபோல, நலிவடைந்திருக்கக்கூடிய நகராட்சிகள், அதற்கும் இந்தத் திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தினோம். 30 நலிவடைந்த நகராட்சிகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு நகராட்சிக்கும் 75 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல பணிகள் இன்றைக்கு நடந்து

கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த நலிவடைந்த நகராட்சிகளைப் பொறுத்தவரைக்கும், பேரூராட்சிகளைப் பொறுத்தவரைக்கும் நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், இப்படிப் பேரூராட்சிகளுக்கும் நலிவடைந்த நகராட்சிகளுக்கும் இவ்வளவு திட்டங்கள் எந்தக் காலத்திலும் வந்ததாக வரலாறு கிடையாது; இவ்வளவு நிதியும் கிடைத்ததாக வரலாறு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் இன்றைக்கு இந்தத் துறை அரசினுடைய ஆணையின்படி தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப் பல திட்டங்களை, பல சாதனைகளை இந்தத் துறைகள் நிறைவேற்றிக்கொண்டிருந்தாலும், இரண்டு நாட்களாக இந்த அவையிலே கலந்து கொண்டு, விவாதத்திலே பங்கேற்று பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். முடிந்தவரையிலே அவ்வப்போது சில பிரச்சினைகளுக்கு, சில கேள்விகளுக்குத் துறையின் சார்பில் நான் பதில் தந்திருக்கிறேன். இல்லையென்று சொன்னாலும் வரக்கூடிய காலக்கட்டங்களில் அவற்றிற்குரிய நடவடிக்கையில் நிச்சயமாக இந்தத் துறை ஈடுபடும். இருந்தாலும் சில உறுப்பினர்கள் சில கோரிக்கைகளை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதற்குச் சில விளக்கங்களை மாத்திரம் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நிதி ஒதுக்கீடைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி அவர்களும், திரு. குணசேகரன் அவர்களும், திரு. வேலுமணி அவர்களும், திரு. சதன் திருமலைக்குமார் அவர்களும் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு மற்ற மாநிலங்களைவிடக் குறைவாக இருக்கிறது, அதை உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி எடுத்துச்சொன்னார்கள். ஒவ்வோர் ஆண்டும் தெரிவிக்கப்படக்கூடிய கருத்துதான் இது. இதை மறக்காமல் நீங்களும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அரசும் இதை மறக்காமல் ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கையிலே இதற்கு விளக்கத்தைத் தந்துகொண்டுதான் இருக்கிறது. அதையும் நாம் மறந்துவிட முடியாது. அதிலே பதில் இருக்கிறது. இருந்தாலும் நான் சிலவற்றை உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

மாநில அரசினுடைய நேரடி வரி வருவாயில், உள்ளாட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டு 9 சதவிகிதம். அதாவது 6,241 கோடி ரூபாய் வழங்கப்பட்டது, கடந்த ஆண்டு. இந்த ஆண்டு 9.5 சதவிகிதம். அது உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது 6,928 கோடி ரூபாய் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஆக, கடந்த ஆண்டைவிட 687 கோடி ரூபாய் கூடுதல். அதை நீங்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதுமட்டுமல்ல; தொடக்கக் கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல் இதுபோன்ற அடிப்படை வசதிகளுக்கு யார் செலவு செய்வது? அரசுதான் செலவு செய்துகொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. உள்ளாட்சி அலுவலர்களுக்கான ஊதியத்தையும் அரசுதான்

இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆக, இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாயிலிருந்து குறைந்தபட்சம் 31 சதவிகிதம் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; நிதிப் பகிர்வு குறித்துகூட, தேசியப் பொருளாதார கணிப்பு ஆய்வுக் கழகத்திலே ஒரு மதிப்பீடு வெளியிட்டிருக்கிறார்கள். அதையும் படித்துப் பாருங்கள். இந்தியாவிலேயே உள்ளாட்சிகளுக்கு அதிக நிதிப் பகிர்வு, தர வரிசையை எடுத்துப்பார்த்தால் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, நிதிப் பகிர்வு குறைவு என்பது, ஏற்புடையதாக அமைந்திட முடியாது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரம். அதையும் சகோதரி செல்வி பாலபாரதி அவர்களும், திரு. குணசேகரன் அவர்களும், மற்றவர்களும் இங்கே பேசுகிறபோது, குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இதற்கான பதில், ஊரக வளர்ச்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 21–லிருந்து 24 வரையில் விரிவாக வந்திருக்கிறது. இருந்தாலும், நான் ஒரு விளக்கத்தைக் குறிப்பிட விரும்புகிறேன் 2006 ஆம் ஆண்டிலே கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று, அமைச்சராக இருக்கக்கூடிய என்னுடைய தலைமையிலே மூன்றாவது உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. இந்த அதிகாரப் பகிர்வைப்பற்றி முடிவெடுப்பதற்காக இந்தக் குழு அமைக்கப்பெற்றது. அது அமைந்ததற்குப் பிறகு, சென்னையிலே நம்முடைய முதல்வர் அவர்களே பங்கேற்கக்கூடிய வகையிலே, கலைவாணர் அரங்கத்திலே கருத்தரங்கு நிகழ்ச்சி ஒன்று நடத்தினோம். பேரூராட்சிகளுடைய தலைவர்கள், நகராட்சிகளுடைய தலைவர்கள், மாநகராட்சிகளுடைய மேயர்கள் எல்லோரையும் அழைத்து, அந்தக் கூட்டத்தை நடத்தினோம். அதிலே சில கருத்துகள் எடுத்துச் சொல்லப்பட்டன. அதைத் தொடர்ந்து ஊராட்சி அளவிலே இருக்கக்கூடிய தலைவர்களையும் சந்திக்க வேண்டுமென்று முடிவெடுத்து, இங்கே அம்மையார் யசோதா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அத்தனை ஊராட்சித் தலைவர்களையும் அழைத்து, ஒரே இடத்திலே பேச முடியாது என்பதற்காக, நான்கு மண்டலங்களாகப் பிரித்து, அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தி, அவர்களின் கருத்துகளையும் கேட்டறிந்தோம். அதற்குப் பிறகு பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் இணைத்து அமைந்த உயர்நிலைக் குழுவையும் பலமுறை கூட்டி, அதிலும் அதுகுறித்து விவாதித்து, அதற்குப் பிறகு உயர்நிலைக் குழுவின் சார்பிலே அறிக்கையை நாங்கள் தயாரித்து, கடந்த 10–12–2007 அன்று நம்முடைய முதல்வரிடத்திலே அதை ஒப்படைத்தோம், வழங்கினோம். அதற்குப் பிறகு, ஊராட்சிகளைப் பொறுத்தவரைக்கும், 99 பரிந்துரைகளை அரசுக்கு நாங்கள் தந்தோம். அதிலே 62 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. நகர்ப்புற உள்ளாட்சிகளைப் பொறுத்தவரைக்கும், 66 பரிந்துரைகளைத்

தந்தோம். அதிலே 47 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்றவை என்னவென்று கேட்டால், அவை பரிசீலனையில் இருக்கின்றன. பல துறைகளைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகளோடு, அமைச்சர்களோடு கலந்துபேசி முடிவெடுக்க வேண்டிய பிரச்சினைகள் பல. அதேபோல, மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டிய பிரச்சினைகள் சில இருக்கின்றன. சட்டம் இயற்ற வேண்டும், சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்ற நிலையிலே பல இருக்கின்றன. ஆக, அதுகுறித்தும் விரைவிலே முடிவெடுத்து, அந்தப் பணியும் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அ.தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் 26 ஆம் தேதி அன்று இங்கே பேசுகிறபோது, சில செய்திகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். என்மூலமாகப் பதில் வேண்டுமென்றுகூட ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதிலே அவர் சொன்னது, "ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம், மூன்றாவது நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி, ஜெர்மென் நாட்டு K.F.W. நிதி, இவையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளன; ஆனால், இப்பொழுது என்ன நிலை?" என்று அவர் ஒரு கேள்வியைக் கேட்டார். நான் அவருக்குத் தெரிவிக்க விரும்புவது, நகராட்சி நிருவாகத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 29–லிருந்து 64 வரையிலே இதற்கான, தெளிவான பதில் இருக்கிறது. நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். இதைப் படித்திருந்தால், இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள். இருந்தாலும், நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, தயவுகூர்ந்து உங்களுக்கு நேரம் கிடைக்கிறபொழுது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை தயவுசெய்து படிக்க வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, இன்னொரு கேள்வியையும் அவர் கேட்டார். "கவுண்டம்பாளையம் நகராட்சி, வடவள்ளி பேரூராட்சிக்குக் குடிநீர்த் திட்டம் அறிவித்தீர்களே, அது என்ன ஆனது?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். அந்தத் திட்டத்திற்காக, 30 கோடியே, 38 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 15 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில், 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முழுமையாகக் கட்டப்பட்டுள்ளன. 31 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் பதிக்கின்ற பணியிலே, 13 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணி முடிவடைந்துள்ளது. 37 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பகிர்மானக் குழாய்கள் பதிக்கின்ற பணியிலே, 15 கிலோ மீட்டர் தூரத்திற்கான பணி முடிவடைந்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் டிசம்பர் 2009–க்குள், நிச்சயமாக மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்

திரு. ரவிக்குமார் அவர்கள், தன்னுடைய தொகுதியிலே சமத்துவபுரம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை எடுத்துவைத்தார்கள். நேரடியாக அதுகுறித்து அவர் என்னிடத்திலே பேசியிருக்கிறார். நானும் அவரிடத்திலே பேசியிருக்கிறேன். எனவே, வரும் நிதியாண்டில் அதுகுறித்து நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குணசேகரன் அவர்கள், "தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நிறைவேற்றப்படக்கூடிய ஊருணி மேம்பாட்டுத் திட்டத்திலே, டெண்டர் விடுவதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன, அவற்றை எப்படிச் சரிசெய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும்தான் இந்தத் திட்டம் நடந்துகொண்டிருக்கிறது என்பது அவருக்கும் தெரியும், எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆக, இராமநாதபுரம் மாவட்டத்திலே 314 பணிகளுக்கும், சிவகங்கை மாவட்டத்திலே 44 பணிகளுக்கும், ஆக மொத்தம் 358 பணிகளை நாம் நிறைவேற்ற முடிவு செய்து, அதிலே 119 பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளன. அதனுடைய பணிகளெல்லாம் தொடங்கியுள்ளன. எஞ்சிய பணிகள்கூட வருகின்ற ஆகஸ்ட், 2009–க்குள் இறுதி செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் முழுமை பெறும் என்பதை நான் இந்த நேரத்திலே அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த செல்வி பாலபாரதி அவர்களும், கொடுங்கையூர், பெருங்குடி குப்பை கொட்டக்கூடிய வளாகம் குறித்து குறிப்பிட்டார்கள். சென்னையைப் பொறுத்தவரைக்கும் குப்பை கொட்டக்கூடிய வளாகங்களான கொடுங்கையூர், பெருங்குடி ஆகிய இரண்டு இடங்களில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் பலருக்கும் தெரியும். ஆகவே, அதுகுறித்து அதிகம் விளக்கம் சொல்ல நான் விரும்பவில்லை. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள்? உடனே அதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

கொடுங்கையூரைப் பொறுத்தவரைக்கும் D-Boot என்ற அடிப்படையில், விஞ்ஞான முறையிலே குப்பையிலேயிருந்து உரம் தயாரிக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதற்காக டெண்டர் விடப்பட்டு மாநகராட்சி, தனியாரோடு 9–4–2008 அன்று ஓர் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு திட்ட அறிக்கை அனுப்பி அனுமதி கேட்டிருக்கிறோம். அதற்குரிய அனுமதி வந்த பிறகு, விரைவிலே அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன.

அதேபோல, பெருங்குடியில், அங்கிருக்கக்கூடிய குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க, உரம் தயாரிக்க அதற்கு ஒரு திட்டம்

வகுக்கப்பட்டு, அதற்கும் D-Boot அடிப்படையில் டெண்டர் விடப்பட்டு மாநகராட்சி, தனியாரோடு ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதற்கும் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி கேட்டு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது கிடைத்த பிறகு, அந்தப் பணிகள் விரைவாக நடைபெறவிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வேல்முருகன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, "இந்த உள்ளாட்சி அமைப்பைப் பொறுத்தவரையில், இரண்டடுக்கு முறையா, மூன்றடுக்கு முறையா, அதை எப்படி நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்கள்? எப்படி வரக்கூடிய காலக்கட்டத்திலே தேர்தல் நடத்தப்போகிறீர்கள்?" என்றெல்லாம் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து விளக்கமாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே பலமுறை குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நான் தெரிவிக்க விரும்புவது, தமிழக அரசினுடைய கொள்கையைப் பொறுத்தவரைக்கும், இரண்டடுக்கு முறையே போதும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தின்படி, மூன்றடுக்கு முறையைத் தமிழ்நாடு அரசு தன்னிச்சையாக மாற்றிவிட முடியாது. அதற்கு அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் நிச்சயம் தேவை என்பது எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். அதனைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய முதல்வர் அவர்களின் இந்த அரசும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டால்தான் இந்த முறையை நாம் மாற்றிட முடியும் என்ற பதிலை நான் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அம்மையார் திருமதி யசோதா அவர்கள் இங்கே பேசுகிறபோது, பணியிடங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பாக, தேசிய வேலை உறுதித் திட்டத்திலே கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். ஆகவே, இந்த திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 2,543 கூடுதல் பணியிடங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில், 2,511 பணியிடங்கள் ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, கோவை மாவட்டங்களில் மட்டும் 132 மேற்பார்வையாளர் பணியிடங்கள் உயர் நீதிமன்றத்தின் தடையாணை காரணமாக தற்சமயம் பூர்த்தி செய்யப்படவில்லை. விரைவில் அந்தத் தடையாணையை இரத்து செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அந்தப் பணியிடங்களும் பூர்த்தி செய்யப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சில அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன். அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன்பு ஒரு விளக்கம்; இப்படி அறிவிப்புகளை வெளியிட்டுவிட்டுப்

போய்விடுவான்; அத்தோடு முடிந்துவிடும் என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது என்பதற்காகத்தான் கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவித்த அறிவிப்புகளை உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் இந்த அவையிலே அறிவித்த அறிவிப்புகள் எவ்வளவு என்று கேட்டால்—கடந்த மூன்று ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக நான் சொல்கிறேன்—அறிவித்த அறிவிப்புகள் 64. அதிலே முழுமையாக இந்தத் துறையின் சார்பில் நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடியவை 58. (மேசையைத் தட்டும் ஒலி) செயல்பாட்டில் இருப்பவை 6.

இப்படி ஒட்டுமொத்தமாகச் சொன்னால், உங்களுக்குக் கொஞ்சம் குழப்பம் ஏற்படலாம். எனவே, ஒவ்வோர் ஆண்டாகக் கணக்கெடுத்து நான் சொல்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரைக்கும், 2006–2007–ல் அறிவித்த அறிவிப்புகள் 23, அவற்றிலே முழுமையாக முடிந்தவை 22, செயல்பாட்டில் இருப்பது 1. அந்த ஒன்று என்னவென்று கேட்டால், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகிலே சுய உதவிக் குழுக்களுக்காகக் கட்டப்படக்கூடிய ஓர் விற்பனை மையம். அதைப் பொறுத்தவரை, டெண்டரிலே பல சிக்கல்கள் ஏற்பட்டு, அதனால் கொஞ்சம் தாமதமாகி இப்பொழுது அது முடிவுற்று அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் செயல்பாட்டில் இருக்கக்கூடிய ஒரு பணி. நான் சொன்னது 2006–2007–ல்.

அடுத்து, 2007–2008–ல் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 24; அவற்றிலே முழுமையாக முடிந்தவை 22, செயல்பாட்டில் இருப்பவை 2. என்ன அந்த இரண்டு என்று கேட்டால், ஒன்று சுய உதவிக் குழுவினருக்கு வழங்கப்படக்கூடிய அடையாள அட்டை. அந்த அடையாள அட்டையைப் பரிசோதனை செய்து பார்த்தோம்.

கிராமப் பகுதிகளிலும், இரண்டு ஊராட்சிப் பகுதிகளிலும் இதனை நாங்கள் சோதித்துப் பார்த்தோம். அதிலே சில மாற்றங்கள் செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை வந்தது. அதனால் கொஞ்சம் தாமதமாகியிருக்கிறது. இருந்தாலும், அவற்றையெல்லாம் உடனடியாகக் களைந்து, அந்தப் பணியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். அதுவொன்று.

அடுத்து, இரண்டாவது என்னவென்று கேட்டால், விழுப்புரம் கைவினைஞர் தொழிற் பூங்கா, மாமல்லபுரத்திலே சிற்பப் பூங்கா. இங்கேகூட, திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போதுகூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆக, அந்த இரண்டிலே, ஒன்று, விழுப்புரம் கைவினைஞர் பூங்காவின் பணி முடிந்தது. விரைவிலே திறக்கப் போகிறோம். மாமல்லபுரம் சிற்பப் பூங்காவைப் பொறுத்தவரைக்கும் என்ன பிரச்சினை என்று கேட்டால், சில சங்கடங்கள், சில பிரச்சினைகள், சில சட்டச் சிக்கல்கள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தால் அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

2008–2009 ஆம் ஆண்டு இந்தத் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்

17. அவற்றிலே, முழுமையாக முடிந்தவை 14, செயல்பாட்டில் இருப்பவை 3. இப்போது நான் சொன்னது ஊராட்சி.

அடுத்து, நகராட்சியைப் பொறுத்தவரைக்கும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மூன்று ஆண்டுக் காலத்திலே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 292. அவற்றிலே முழுமையாக முடிந்தவை 184. செயல்பாட்டில் இருப்பவை 104, நிலுவை 3, இரத்து 1.

இதில் வருடவாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 2006–2007–ல் அறிவித்தவை 97, முழுமையாக முடிந்தவை 68, செயல்பாட்டில் இருப்பவை 26;

2007–2008–ல் அறிவித்தவை 117, முழுமையாக முடிந்தவை 77, செயல்பாட்டில் இருப்பவை 39; 2008–2009–ல் அறிவித்தவை 78; முழுமையாக முடிந்தவை 39; செயல்பாட்டில் இருப்பவை 39. செயல்பாட்டில் இருப்பதைப் பொறுத்தவரையில் அதில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கலாம். அது அதிகமாகவும் உங்களுக்குத் தென்படலாம். உண்மைதான், மறுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், பெரும்பாலான செயல்பாட்டில் இருக்கக்கூடிய பணிகள் என்னவென்று கேட்டால், பாதாள சாக்கடைத் திட்டங்கள். இந்த பாதாள சாக்கடைத் திட்டங்களைப் பொறுத்தவரையில், மூன்று ஆண்டு காலத்திலே நிறைவேற்றப்படும் என்ற அடிப்படையிலே இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது. ஆனால், இதுவரையில் எந்தக் காலத்திலும் மூன்று ஆண்டுக் காலத்திலே அந்தப் பணி முடிந்ததாக வரலாறே கிடையாது. அதிலே, டெண்டர் பிரச்சினை, இடப் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், அதை உடனடியாக முடிக்க முடியாத ஒரு சூழ்நிலை. எனவே, செயல்பாட்டில் இருக்கக்கூடிய பெரும்பாலான பிரச்சினைகள் எதுவென்று கேட்டால், பாதாள சாக்கடைப் பணிகள்தான். தொழில்நுட்பப் பிரச்சினை காரணமாக, டெண்டர் பிரச்சினை காரணமாக, நீதிமன்றப் பிரச்சினை காரணமாக, அந்தப் பணிகள் தடைப்பட்டிருக்கின்றனவேதவிர, வேறு அல்ல. அதையும் சரிசெய்து, உடனடியாக அந்தப் பணிகளை நிறைவேற்றிடும் முயற்சியில் இந்தத் துறை இப்போது ஈடுபட்டிருக்கிறது. ஆக, சொன்னதைத்தான் செய்வோம். செய்வதைத்தான் சொல்வோம் என்று எடுத்துக் காட்டக்கூடிய வகையிலேதான், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புள்ளிவிவரங்களையெல்லாம் நான் இங்கே சொல்ல வேண்டிய அவசியத்திற்கு வந்தேனேதவிர, வேறு அல்ல. ஆக, அந்த உணர்வோடுதான் வரக்கூடிய 2009–2010 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளையும், இங்கே உங்களிடத்திலே புத்தகமாக அச்சிட்டு முழுமையாக வழங்கியிருக்கிறோம். அவற்றை சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டக்கூடியவகையில் இந்த இரண்டு துறைகளின் சார்பில் சில அறிவிப்புகளை மாத்திரம்–என்னதான் இருந்தாலும் அதனைப் புத்தகத்தில் படிப்பதைவிட நான் சொல்கிறபோது, அதை நீங்கள்

கேட்கிறபோது, அடைகிற மகிழ்ச்சி தனியான மகிழ்ச்சியாக அமைந்திட முடியும் என்ற நம்பிக்கையோடு கோடிட்டு, சிலவற்றை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே அறிவிப்புகள். மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த ஆண்டில் புதியதாக, 50 ஆயிரம். அடுத்த ஆண்டில், மேலும் 50 ஆயிரம் அமைக்கப்படும். ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்த நடப்பாண்டில் ஆயிரம் கூட்டமைப்புகளுக்கு, தலா ரூபாய் ஒரு இலட்சம்வீதம், 10 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு 20 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுடன்கூடிய சுழல் நிதி வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தொழில் கூட்டமைப்புகள் ஆகியவை வங்கிகளிடமிருந்து கடன்பெற சமர்ப்பிக்கும் ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வைக்கு முழு விலக்கு அளிக்கப்படும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் செயலாக்கத்தில் ஏற்படும் குறைகளைக் களைந்திட, மாநில அளவிலான இலவச தொலைபேசி சேவை Help Line எண் 1299 ஏற்படுத்தப்படும்.

பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஏறத்தாழ 5,114 கி.மீ. ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும். நபார்டு வங்கியின் நிதி உதவியோடு, 2,822 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் ரூ.400 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

12–வது நிதி ஆணையத்தின் நிதியின்மூலமாகப் பழுதடைந்த ஊரகத் தார்ச் சாலைகள் ரூ.103 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். ஊரகப் பகுதியிலுள்ள கப்பிச் சாலைகளில், ஆயிரம் கிலோ மீட்டர் நீளச் சாலைகள், இந்த ஆண்டு தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 1,35,000 புதிய தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குத் தமிழக அரசு சுமார் 390 கோடி ரூபாய் வழங்கும்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதியன்று, ஊராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, பரிசுகள் வழங்கப்படும். அதற்காக, இந்த ஆண்டு சுமார் 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டைப் போன்றே இந்த ஆண்டும் ரூ.309 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 50 ஆயிரம் புதிய தெரு விளக்குகள், 50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

பழுதடைந்த கிராம ஊராட்சிக் கட்டடங்களுக்குப் பதிலாக 30 கோடி ரூபாய் செலவில் புதியதாக 500 கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். ஒவ்வொரு

மாவட்ட ஊராட்சித் தலைவருக்கும்—29 ஊராட்சித் தலைவர்களுக்கும்—385 ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்களுக்கும் கணினிகள் வழங்கப்படும். ''வாழ்ந்து காட்டுவோம்'' திட்டத்தின்கீழ், 400 கிராம ஊராட்சிகளுக்குச் சுமார் 10 கோடி ரூபாய் ஊக்க நிதியாக வழங்கப்படும். தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராம ஊராட்சிகளைக் கண்காணிக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் புதிய தொலைபேசி வசதி மற்றும் நிகரி வசதிகள் செய்து தரப்படும். தமிழக அரசு சமீபத்தில் அறிவித்த புதிய சீரமைப்பிற்குப்பின், பல உறுப்பினர்கள் வைத்த கோரிக்கை இது. தமிழக அரசு சமீபத்தில் அறிவித்த ஊதிய சீரமைப்பிற்குப்பின், ஊராட்சிகளில் பணியாற்றும் ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகியோருக்கான வெவ்வேறு ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகியோர் ஒரே வகையான பணிகளைச் செய்துவரும் நிலையில், ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி உதவியாளர்களின் நிலை–2 பணியிடங்களை நிலை உயர்த்தி, அனைத்துப் பணியிடங்களையும் 2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500 தர ஊதியத்துடன் (Grade Pay) ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக அறிவிக்கப்படுகிறது. இதனால் ஊராட்சி உதவியாளர்களின் நிலை–2–ல் உள்ள சுமார் 11,000 பேர் பயன்பெறுவார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நகராட்சி நிருவாகத் துறையினுடைய சில புதிய அறிவிப்புகள். மாநகராட்சியிலுள்ள மற்றும் நகராட்சிகளிலுள்ள 500 கிலோ மீட்டர் மண் சாலைகள் 50 கோடி ரூபாய் செலவில், தார்ச் சாலைகள் அல்லது சிமென்ட் சாலைகளாக மேம்படுத்தப்படும். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் என்னிடத்திலே ஒரு கோரிக்கை வைத்தார்கள். தற்போது இயங்கும் சிவகங்கை நகராட்சி அலுவலகம் புதிய வளாகத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட பின்பு, தற்போதைய நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு, தற்போது இயங்கும் சிவகங்கை நகராட்சிப் பேருந்து நிலையம், அனைத்து வசதிகளோடு விரிவுபடுத்தப்படும். 38 பேரூராட்சிகளில், மொத்தம் ரூ.6 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில், புதிய அலுவலகங்கள் கட்டித் தரப்படும்.

இன்னொன்று, இது மிக முக்கியமான அறிவிப்பு. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் அடிப்படையிலே, ஏழையெளிய மக்களுக்கு, குடிசைப் பகுதி மக்களுக்கு, நகரத்தை, மாநகரத்தையொட்டி இருக்கக்கூடிய சில பேரூராட்சிகளில் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அவற்றிலே 43 பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மிச்சம் இருக்கக்கூடிய பேரூராட்சிகளின் நிலையென்ன என்று அவர்கள் தொடர்ந்து கேட்ட காரணத்தினால், அந்த அடிப்படையிலே

இந்தத் திட்டம் அறிவிக்கப்படுகிறது, அறிவிப்பு வெளியிடப்படுகிறது. 518 பேரூராட்சிகளில், மொத்தம் 130 கோடி ரூபாய் செலவிலே, 12,950 குடியிருப்புகள் இரண்டு ஆண்டுகளில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதியாண்டில், 260 பேரூராட்சிகளில், 65 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, 6,500 குடியிருப்புகள் கட்டப்படும்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு விடியல் எஸ். சேகர் வைத்த நீண்ட நாள் கோரிக்கை. காங்கேயம் பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும். வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்காக சென்னை மாநகராட்சிக்கு 1,448 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்துள்ள திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. இது மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்படும். சென்னையில், 186 குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும்பொருட்டு, ரூபாய் 72 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டிலே அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள், 18 மாதங்களில் நிறைவுபெறும். சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியிருக்கக்கூடிய புறநகர்ப் பகுதிகளில், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் திட்டப் பணிகள் 2,032 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நிறைவேற்றப்படும்.

அதற்கடுத்து, 2009–2010 ஆம் ஆண்டில், நிறைவேற்றப்படக்கூடிய குடிநீர்த் திட்டங்களைப்பற்றி இந்தப் புத்தகத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து வரக்கூடிய ஆண்டிலே, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய பணிகள் குறித்தும் நாம் அறிவித்திருக்கிறோம். அதையும் நீங்கள் படித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இன்னொன்று; வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இருக்கக்கூடிய ஒரு தீராத பிரச்சினை. எப்படி இராமநாதபுரம் மாவட்டத்திலே தீராத பிரச்சினை இருந்து வந்ததோ, அதேபோல, வேலூர் மாவட்டத்திலே, ஒரு பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. இந்த அவையிலே தொடர்ந்து, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், பலமுறை குரல் எழுப்பியிருக்கிறார்கள். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தோடு இதனைச் சேர்க்கக் கூடாதா என்றெல்லாம் பலமுறை கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவர் மட்டுமல்ல; அந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து பேசியிருக்கின்றார்கள். இங்கே, இந்த அவையிலே இன்று பேசிய இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காந்தி அவர்கள்கூட, இந்தப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு அண்ணன் திரு. துரைமுருகன்கூட, என்னிடத்தில் மட்டுமல்ல; நம்முடைய தமிழக முதல்வர் அவர்களிடத்திலேகூட, இதுபற்றி பல நேரங்களில் பேசி, இதற்கான நிதியை

எப்படியாவது ஒதுக்கித் தர வேண்டுமென்று அவர் எனக்குத் துணை நின்ற காரணத்தினால், இந்த அறிவிப்பை வெளியிட வேண்டிய ஒரு சூழ்நிலை இன்றைக்கு வந்திருக்கிறது என்று பெருமையோடு நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, அதனை அறிவிக்க விரும்புகிறேன். வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 64 குடியிருப்புகளுக்கு, காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 1400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் இறுதி செய்யப்பட்டு, விரைவிலே திட்டச் செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக, இப்படி உள்ளாட்சித் துறைக்கு எல்லா வகையிலேயும் துணை நின்று, இந்த வளர்ச்சிக்குத் தொடர்ந்து துணை நிற்கக்கூடிய, அறிவுரைகளை, ஆலோசனைகளைத் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அதேபோல நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளுக்கும் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல தலைமைச் செயலாளர், நிதித் துறையினுடைய செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய செயலர், துறையினுடைய தலைவர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய செயலாளர்கள், தலைவர்கள், மாவட்டத்தினுடைய ஆட்சியர்கள், அனைத்து மட்டத்தில் இருக்கக்கூடிய அலுவலர்கள், பணியாளர்களுக்கெல்லாம் இந்த நேரத்திலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிறைவாக நான் சொல்ல விரும்புவது, இப்படிப் பல்வேறு மகத்தான பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி, சாதனைகளைப் படைத்து, மக்கள் வாழ்வில் நலத்தையும், வளத்தையும் சேர்த்திட உறுதி எடுக்கக்கூடிய நிலையிலேதான் இந்த பதிலுரையை நான் உங்களிடத்திலே வழங்கியிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து என் உரையை நிறைவு செய்வதற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

‘‘விண்ணைக் குலுக்கு மனிதா நீ–ஒரு
விண்மீன்கூட உதிராமல்!
மண்ணைப் புரட்டு மனிதா நீ–சிறு
மண்புழுகூட நசுங்காமல்!
நேற்றைய பகைமை இனியெதற்கு? உன்
நிழலின்மீதா வெறுப்புனக்கு?
சோற்றுப் பானையை பொதுவில் வை–இனி
சுதந்திரச் சுடரை நடுவில் வை!
ஒவ்வொரு முகமும் உறவு முகம்–உன்
ஒவ்வொரு மூச்சையும் அன்பாக்கு!
ஒவ்வொரு இதயமும் பகலாக்கு–நம்
உலகின் இருட்டை வெளியேற்று!
வேற்று நாடு என்னாடு–எனும்
வேற்றுமை யாவும் தூக்கி எறி!
காற்றும் உனக்குக் கை கட்டும்–பெருங்
கடலும் உனக்குக் கைகொட்டும்!
பகையில்லாத உள்ளங்கள்;
பசியில்லாத இல்லங்கள்
அகிலம் காணும் அக்காலம்
அதுதான் பூமியின் பொற்காலம்.’’

என்ற கவிதை வரிகளைச் சொல்லி, என்னுடைய பதிலுரையை அன்போடு ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.09.2009 அன்று தமிழக வரலாற்றில் முதல் துணை முதலமைச்சராக நியமிக்கப் பெற்ற ஆணையினை அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெறுகின்ற காட்சி.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பேரவைத் தலைவரையும், துணைத் தலைவரையும் பாராட்டி ஆற்றிய உரை 3–6–2016

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டு இருக்கக்கூடிய தங்களை, பேரவைத் தலைவருக்கான இருக்கையில் அமர வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மிகப் பெரிய பொறுப்பிலே அமர்ந்திருக்கக்கூடிய தங்களுக்கு நான் சார்ந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மனப்பூர்வமான வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திய நாட்டினுடைய வரலாற்றுப் பெருமைமிக்க சட்டமன்றங்களில் நம்முடைய தமிழக சட்டமன்றம் ஒரு மிகப் பெரிய, சிறப்புக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், நிச்சயம் அது மிகையாகாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றப் பேரவை என்ற முறையில் ஏறத்தாழ 5 ஆண்டுகளில் நமது மாநில சட்டமன்றப் பேரவை நூற்றாண்டைக் காணவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சென்னை மாகாணத்தில் திராவிட இயக்கத்தின் தலைமையிலான ஆட்சி 1920 ஆம் ஆண்டு முதல் முறையாக அமைந்தது. அன்று தொடங்கி இந்தியாவுக்கே முன்னோடியான பல்வேறு முக்கியமான சட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிற ஒரு மிகப் பெரிய பொறுப்பைத் தொடர்ந்து இந்த மாமன்றம் வழங்கி வருகிறது.

15–வது சட்டமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் தலைவராக தாங்கள் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த நேரத்தில், புகழ்பெற்ற பேரவைத் தலைவர்களைப் பெற்ற பாக்கியம் இந்த அவைக்கு உண்டு என்பதை நான் நினைவுகூர விரும்புகிறேன். சுதந்திரம் அடைவதற்கு முன்பே பேரவைத் தலைவராக இருந்த புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் காந்தியடிகளைப் பின்பற்றி மேலாடை இல்லாமல், இடையிலே வேட்டியும், மேலே துண்டும் அணிந்து எளிய வகையிலே காட்சி தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1952 ஆம் ஆண்டு, முதல் பொதுத் தேர்தலுக்குப் பிறகு பேரவைத் தலைவராக திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் நடத்தி, ஒரு மிகப் பெரிய அஸ்திவாரத்தை இந்தச் சட்டமன்றத்திற்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறார். சட்டமன்றத்தின் மரபுகளை, விதிகளை வகுத்து கொடுக்கக்கூடிய “May’s Parliamentary Practice” என்ற புத்தகத்தை நன்கு கற்று அறிந்த அறிஞர் என்ற அந்தப் பெயரையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்குப் பிறகு நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாகச் சட்டமன்றத்திற்குள் நுழைந்த நேரத்தில் அன்று பேரவைத் தலைவராக இருந்து பணியாற்றிய டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள் இனிமையான அணுகுமுறை, அன்பான அரவணைப்பு, அற்புதமான அறிவாற்றல் அனைத்தையும் இந்த பேரவைக்கும், பேரவை உறுப்பினர்களுக்கும் தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையிலே அடுத்தடுத்து பல திறமைவாய்ந்த பேரவைத் தலைவர்களை நாம் கண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், புலவர் திரு. கோவிந்தன் அவர்கள், திரு. முனு ஆதி அவர்கள், திரு. க. ராஜாராம் அவர்கள், திரு. சி.ப. ஆதித்தனார் அவர்கள், திரு. செல்லப்பாண்டியன் அவர்கள், திரு. காளிமுத்து அவர்கள், திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள், பண்பாளர் திரு. பி.டி.ஆர். அவர்கள் போன்றவர்களை நாம் என்றைக்கும் மறந்துவிட முடியாது.

மக்களாட்சி தத்துவத்திலே, ஜனநாயகத்தின் இதயம் சட்டமன்றமாக அமைந்திருக்கின்றது. ஜனநாயகத்தின் முக்கியமான மூன்று தூண்களில் ஒன்றாக இந்தச் சட்டமன்றம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த இதயம் சீராகத் துடித்தால்தான் ஜனநாயகத்தில் சட்டமன்ற மரபுகளும், விதிகளும் காப்பாற்றப்படும் என்பதை நாம் நன்கு அறிவோம். என்னைவிட இந்த அவையிலே அமர்ந்திருக்கக்கூடிய மூத்த உறுப்பினர்கள் இதை இன்னும் தெளிவாக உணர்ந்திருப்பார்கள். பெரும்பான்மையுள்ள கட்சியின் விருப்பப்படி, பேரவைத் தலைவரின் தேர்வு நடைபெறுவது வழக்கம் என்று சொன்னாலும், தேர்வு செய்யப்பட்டதற்குப் பிறகு அவர் அனைத்து கட்சிகளுக்கும் பொதுவானவராக இருந்திட வேண்டும். கட்சி சார்பற்றவர் என்பதுதான் இனிவரும் 5 வருடங்களில் கிடைக்கக்கூடிய பெருமையாக அமைந்திட முடியும். இதை சட்டமன்றம் பேணிப் பாதுகாத்து வந்திட வேண்டும். இந்த எதிர்ப்பார்ப்பு, நம்பிக்கை இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய, எஜமான்களாக இருக்கக்கூடிய பொதுமக்களிடமும் அந்த நம்பிக்கைதான் இருந்து கொண்டிருக்கிறது.

இதுவரை இல்லாத அளவிற்கு 89 சட்டமன்ற உறுப்பினர்களுடன் பலம்பொருந்திய எதிர்க்கட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) 15–வது சட்டமன்றத்திலே அமர்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த அவையில் எதிர்க்கட்சியினரே தவிர, அது நிச்சயமாக எதிரிக்கட்சியாக இருக்காது என்பதை நான் முன்கூட்டியே எடுத்துவைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய நலனைக் காப்பாற்றுவதிலே இந்த அவையினுடைய

புகழை, பெருமையைக் காப்பதிலே, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டுக்கும் இரட்டைப் பொறுப்பு, Dual Responsibility என்று சொல்வார்களே, அதைத்தான் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அது இங்கே அமர்ந்திருக்கக்கூடிய ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றாக தெரியும், அதை ஏற்றுக்கொள்வார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. ஏனென்றால், ஒரு சிறந்த எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆளும்கட்சிக்குத்தான் நிச்சயமாக இருந்திட வேண்டும்.

இந்த நேரத்தில், நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் 1957–லே, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூறிய வழிகாட்டுதல்தான் என்னுடைய நினைவுக்கு வருகிறது. அன்றையதினம் அண்ணா சொன்னது; சட்டமன்றத்திற்குச் செல்லும் நம்முடைய தோழர்களுக்கு 3 வகையான பொறுப்புகள் அமைந்திருக்கின்றன. (1) சட்டமன்றத்தில் நடைபெறக்கூடிய விவாதங்களை நாகரிகமானதாக ஆக்குவது; (2) சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி நலனுக்காகச் செய்ய வேண்டிய காரியங்களை ஆற்றுவது; (3) தி.மு.க.வின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வழுவாமல் இருப்பது; ஆகிய இந்த மூன்று கோட்பாடுகளை நிச்சயமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் கடைப்பிடிக்கும், அதைச் செயல்படுத்திக் காட்டுவோம் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில உரிமை சார்ந்த பிரச்சினைகளில் ஆளும்கட்சியோடு இணைந்து போராடும் என்ற அந்த உத்தரவாதத்தையும் நான் இந்த நேரத்திலே அளிக்க விரும்புகிறேன். இதே அவையிலே பேரவைத் தலைவராக ஒருமுறை திரு. முனு ஆதி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, திரு. முனு ஆதி அவர்களைப் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர வைத்து, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அப்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள் "பேரவைத் தலைவர்கள் வயலினைப் போன்று இருக்க வேண்டும். வயலின் கம்பியை இருபுறம் இழுத்தாலும் அது ஒலி எழுப்பும். அதுபோல, பேரவைத் தலைவர் அவர்கள் இரு தரப்புக்கும் பொதுவாக பணியாற்ற வேண்டும்" என்று அன்றைக்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

இந்த அவையில் எங்களையெல்லாம் வழிநடத்த வேண்டியவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். ஆகவே, இன்றையதினம் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீதும், அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடியவர் மீதும் நாங்கள் அளவு கடந்த நம்பிக்கையை வைத்திருக்கிறோம். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின்

சார்பிலும், இன்றையதினம் 63–வது பிறந்த நாளைக் காணக்கூடிய எங்கள் தலைவர் அவர்கள் சார்பிலும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தங்களுக்குத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை முடிக்கின்ற நேரத்திலே தலைவர் கலைஞர் அவர்களுக்கு 63–வது பிறந்த நாள் என்று குறிப்பிட்டுவிட்டேன். 93–வது பிறந்த நாளைக் காணக்கூடிய தலைவர் கலைஞர் என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற ஜனநாயகம்
பேணிப் பாதுகாப்போம் !
மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்

தமிழக முதலமைச்சர் அவர்கள் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைப் பாராட்டி 16–வது பேரவையில் ஆற்றிய முதல் உரை
12–5–2021

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கு இலக்கணமாக விளங்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற்று, ஆட்சி அமைக்க ஆதரவுக் கரம் நீட்டிய தமிழக மக்கள் அனைவருக்கும் தங்கள் மூலமாக எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



“செந்தமிழால் செய்த உடல்!
செங்கோலால் செய்த விரல்!
வெண்கலத்தால் செய்த குரல்!
வெற்றிகளால் செய்த கழல்!
சங்கநூல் செரித்த குடல்!
சரித்திரத்து ஞானக் கடல்!
நெஞ்சமெல்லாம் தமிழ் அன்னை!
நினைப்பதெல்லாம் தமிழன்னை”

என்று கவிஞர் தணிகைச் செல்வனால் போற்றப்பட்ட முத்தமிழ் அறிஞர் நம் நெஞ்சமெல்லாம் அன்றும் இன்றும், என்றும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. மு. அப்பாவு) அவர்களே, தாங்கள் இந்த இருக்கையில் அமர்ந்து இருப்பதைப் பார்க்கும்போது என் நெஞ்சம் அடையும் மகழ்ச்சிக்கு அளவே இல்லை. எந்த அளவுக்குத் தாங்கள் உணர்ச்சிமயமாக இப்போது அமர்ந்திருக்கிறீர்களோ, அதைவிட அதிகமாக நான் உணர்ச்சியும், பெருமையும், பூரிப்பும் அடைந்து கொண்டிருக்கிறேன். இங்கே எல்லோரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அனைத்து தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கம்பீரமாக உட்கார்ந்து, பல்வேறு விவாதங்களில் பங்கெடுத்து, கருத்தோடும், சுவையோடும் பேசக்கூடிய தங்களது விவாதங்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கக்கூடியவன் நான். அந்தவகையில் ஆக்கபூர்வமான விவாதத்திற்குப் புகழ்பெற்ற ஜனநாய மன்றமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராகத் தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிகுந்த பெருமையளிப்பதாக எங்களுக்கெல்லாம் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்றிருக்கும் பேரவைத் தலைவர் பொறுப்பு “நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலையின் சின்னம்” என்று இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள். “அவைத் தலைவர் பேரவையைக் குறிப்பவர். அவையினுடைய கண்ணியம், சுதந்திரத்தன்மை ஆகியவற்றின் அடையாளம் பேரவைத் தலைவர்” என்று நேரு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தச் சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் அடையாளமாகத் தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். கதர் அணிந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். தூய்மையின் அடையாளமாக, வெள்ளை உள்ளத்தின் அடையாளமாக இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கெல்லாம் நீங்கள் இன்றைக்குக் காட்சிதந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த 16–வது சட்டமன்றத்தில் தாங்கள் பேரவைத் தலைவராக அமர்ந்திருப்பது இந்த மாபெரும் மன்றத்திற்குப் பெருமையளிப்பதாக அமைந்திருக்கின்றது.

இந்த மாமன்றத்தில் இருந்த பேரவைத் தலைவர்கள் அனைவரும் இந்த அவைக்குப்

பல்வேறு பெருமைகளைச் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்களே அதிகமாகப் பேரவைத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மாண்புமிகு திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள், மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள், மாண்புமிகு திரு. பி.எச். பாண்டியன் அவர்கள், மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள், மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள், மாண்புமிகு திரு. கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள், தற்போது தாங்கள் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தப் பேரவையை ஜனநாயக மாண்புடன் நடத்திடும் திறமை படைத்தவர்களாகப் பேரவைத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். தாங்களும் இந்தப் பேரவையை ஜனநாயக ரீதியில், அந்த மரபு வழி நின்று நிச்சயம் நடத்துவீர்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை.

இந்திய நாட்டினுடைய விடுதலைக்குப்பிறகு 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட முதல் சட்டமன்றம் கூடிய இடம்தான் இந்த இடம்; மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதற்கு முன்னதாக 375 உறுப்பினர்கள் சென்னை ராஜதானியில் இருந்ததால், அனைவரும் உட்காரக்கூடிய வசதியுடன் புதிய பேரவைக் கட்டடம் அரசினர் தோட்டத்தில் அப்போது கட்டப்பட்டது, அதில்தான் முதல் ஐந்தாண்டு காலம் பேரவை நடந்திருக்கிறது. மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான உறுப்பினர் எண்ணிக்கை குறைந்த பிறகு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சபை நடவடிக்கைகள் நடந்தன. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தாங்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது; மகிழ்ச்சிக்குரியது; பெருமைக்குரியது. உள்ளத்தால், அறிவாற்றலால், செயல் திறத்தால் வளர்ந்த தங்கள் தலைமையிலான இந்த அவையிலே நாங்கள் செயல்படுவதை ஒரு பொற்காலமாகக் கருதிக் கொண்டிருக்கிறோம்.

நெல்லை மாவட்டம், காவல்கிணறு என்ற ஊருக்கு அருகில் இருக்கக்கூடிய லெப்பை குடிகாடு என்ற ஊரில் பிறந்த தாங்கள் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறீர்கள். காவல்கிணறு திரு. இருதய மேல்நிலைப் பள்ளியில் கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியராக இருந்து, அரசியல் ஈடுபாட்டின் காரணமாக ஆசிரியர் வேலையை விட்டு விலகி, அரசியல் பணிக்கு வந்திருக்கிறீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்த தாங்கள் இப்போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும்

ஒலி) மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, நான்காவது முறை வெற்றி பெற்றுள்ள தங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது இந்த மகுடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உங்கள் உத்தரவுகளுக்கு, கட்டளைகளுக்கு, கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு நிச்சயமாகச் செயல்படுவோம். "சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல், சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும்". இதை யார் சொன்னது? தந்தை பெரியார் அவர்கள். எனவே, அவர் வழிவந்திருக்கக்கூடியவர்கள் நாங்கள்! இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்கள். இதில் ஒரு பக்கம் சரியாக இருந்து, மறுபக்கம் சிதைந்து போயிருக்குமென்று சொன்னால், அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்." இதை இதே பேரவையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவருடைய தம்பிமார்கள் தான் நாங்கள்.

"ஒரு மனிதனின் முகத்தில் உள்ள நிறைகளை மட்டுமல்ல, குறைகளையும் காட்டுவதுதான் கண்ணாடி. அதுபோல் ஆளுங்கட்சியினுடைய நிறை குறைகளைக் காட்டுவதுதான் சட்டமன்றம்" என்று சொன்னவர் யார் தெரியுமா? எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு உண்டு. ஆனால், அதில் கர்வமோ, ஆணவமோ இருக்காது. ஜனநாயகம், மரபுகளும் நிச்சயமாக அதிலே இருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆணவம் இருக்காது. கர்வம் இருக்காது. ஜனநாயகம்தான் இருக்கும். மரபுகளும் கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தோல்வியில் துவள்வதும், வெற்றியில் இறுமாப்புக் கொள்வதும் எங்களுடைய வழக்கமல்ல. அப்படி எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை வளர்க்கவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழக மக்கள் அளித்திருக்கக்கூடிய இந்த மாபெரும் வெற்றி, எங்களை மேலும் மேலும் அடக்கமுள்ளவர்களாக ஆக்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்பாட்டோடு இருப்பதோ, அடக்கத்தோடு இருப்பதோ சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றிடவே. அதை எந்தவிதத்திலும் பலவீனமாக யாரும் கருதிடக்கூடாது. இவை அனைத்தையும் அறிந்த தாங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், அனைவருக்கும் பொதுவானவராக இருந்து, பழம்பெருமை வாய்ந்த, மிகத் தொன்மையான இந்த அவையை அதற்குரிய மாண்புடன் நடத்திடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல. இங்கிருக்கக்கூடிய எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, இங்கிருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்

அந்த நம்பிக்கை நிச்சயமாக இருக்கும். அதில், எந்த மாறுபாடும் இருக்க வாய்ப்பே கிடையாது, அதன் சாட்சிதான் மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் தங்களை இந்தப் பெருமைமிகு இருக்கையில் அழைத்து வந்து அமர வைத்தது.

லார்டு வெலிங்டன் அவர்களும், அவரது துணைவியாரும் இணைந்து இப்பேரவைக்குப் பரிசாக வழங்கிய அந்த அழகிய நாற்காலியில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அவையினுடைய மாண்பு கெடாது, எவ்வித விரோத உணர்ச்சிக்கும் இடம் தராமல், ஜனநாயக மரபுகளைக் காக்கக்கூடிய வகையில் ஆளுங்கட்சி செயல்படும் என்ற உறுதியை நான் உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக் கூடிய மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். திருவண்ணாமலை நகர்மன்ற உறுப்பினராக 1986 ஆம் ஆண்டு மக்கள் பணியாற்றியவர். ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். கடந்த சட்டமன்றப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் துணைக் கொறடாவாக அவர் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார். அனைத்து விவாதங்களிலும் முழுமையாகப் பங்கெடுத்த பெருமை அவருக்குண்டு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கருத்துகளையெல்லாம் ஆழமாக உள்வாங்கக் கூடியவர். அவை முன்னவர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பேரவை அலுவல் நேரம் நிறைவுபெறுகிற வரையிலே, ஏன் சில நேரம் மதிய உணவைக்கூட மறந்து இந்தப் பேரவையிலே அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர் நம்முடைய திரு. பிச்சாண்டி அவர்கள். அனைவருடனும் அன்போடு பழகக்கூடியவர்; பாசத்தோடு பழகக்கூடியவர் மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி அவர்கள். எனவே, பேரவைத் துணைத் தலைவராக அவரை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவரையும் மனமார நான் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

பேரவைத் தலைவருக்கு இந்த அவையின் மாண்பைக் காப்பாற்ற நிச்சயமாக துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. பிச்சாண்டி அவர்கள் துணையாக இருப்பார். இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தனிப்பட்ட எனக்குள்ள வருத்தம் அவைத் தலைவர் ஆனதன் மூலமாகத் தங்களது அரசியல் பணிகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழல் இப்போது எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர்

அவர்கள் சொன்னார்கள்; இதே அவையில் திரு. கே.ஏ. மதியழகன் அவர்களைப் பேரவைத் தலைவர் பொறுப்பில் அமர வைத்து, "எங்கள் உடன்பிறப்பாக இருந்து எங்களோடு இந்த மாபெரும் இயக்கத்தை வளர்க்க காரணகர்த்தாவாக இருந்த தாங்கள், இன்று அந்தப் பணியிலிருந்து அறுத்துக் கொண்டீர்கள் என்று சொல்ல மாட்டேன், ஒதுங்கியிருக்கிறீர்கள்" என்று வாழ்த்தியதைத்தான் உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். ஆகவே, கழகப் பணி செய்ய முடியாமல் போகிறதே என்ற வருத்தம் எனது உள்ளத்தில் ஓர் ஓரத்தில் இருந்தாலும், இந்த இடத்துக்குப் பொருத்தமானவர் தாங்கள்தான் என்பதை எண்ணி அந்த வகையிலே தான் மனநிறைவு அடைகிறேன்.

தங்களுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியினர் உட்பட அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுதல்களை, வாழ்த்துக்களை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து, நமக்கும் நாட்டு மக்களுக்குமான நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க இந்தச் சட்டமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்போம்" என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)


மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டோம். அதுவும் ஒரு நாள் அடையாள மறியல்தான் செய்தோம். எங்களைப் பிடித்து காங்கிரஸ்காரர்கள் மூன்று மாதம் ஜெயிலில் போட்டுவிட்டார்கள்.

திருமதி த.ந. அனந்தநாயகி: உங்களை அப்படிச் செய்ததனால்தான் இன்றைக்கு நீங்கள் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதனால்தான் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. சிறைக்கு வந்த அன்றைக்கேகூட விடுதலை செய்து விடுகிறோம். (சிரிப்பு)

[தொகுதி 37, 23-3-1973, பக்கம் 302]

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧



1972 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் சுதந்திரத் திருநாள் வெள்ளி விழாவையொட்டி சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஒன்றிய அரசு தாமிரப் பத்திர விருதுகளை வழங்கியது. தந்தை பெரியார் அவர்களுக்கு உரிய தாமிரப் பத்திர விருதினை முதலமைச்சர் கலைஞர் தந்தை பெரியார் அவர்களிடம் நேரில் சென்று வழங்கிய காட்சி.

புதியதொரு வரலாறு படைத்திடும்
எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர்!

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர் அவர்கள்

பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் ஆற்றிய பதிலுரை
24–6–2021

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடியால் தட்டி தமிழினத்தை எழுப்பிய தந்தை பெரியாரையும், அன்பெனும் உயிராய் ஒருங்கிணைத்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) தனித்தனி ஊரில் பிறந்தவர்களையும் 'உடன்பிறப்பு' என்ற ஒற்றைச் சொல்லால் ஈர்த்த (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் நெஞ்சில் தாங்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த 21–ஆம் தேதி, இந்த மாபெரும் சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசின் நோக்கங்களையும், எண்ணங்களையும் எடுத்துக்காட்டக்கூடிய நல்லதோர் உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு, இந்த அரசின் முதலமைச்சர் என்ற முறையிலும், தனிப்பட்ட நிலையிலும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களது உரைமீதான விவாதத்தில் உரையாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து எனது பதிலுரையைத் தொடங்கும் அதேவேளையில், என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய கொளத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்குக் காரணமான அனைத்துக் கழக உடன்பிறப்புகளுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தோளோடு தோள் நின்று பணியாற்றிய தோழமைக் கட்சியினருக்கும், பெரும் எதிர்பார்ப்புகளுடன் தங்களுக்குச் சேவை செய்வதற்கான பெரும் வாய்ப்பினை எங்கள்மீது நம்பிக்கை வைத்து வழங்கியிருக்கக்கூடிய அருந்தமிழ்நாட்டு மக்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற இந்த அரிய ஆசனத்தைப் பார்க்கும்போதும், அதிலே அமரும்போதும், என்னுடைய எண்ணங்கள், கடந்த ஒரு நூற்றாண்டு வரலாற்று


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
DELL

நிகழ்வுகளையும், முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அந்த வரலாற்றைப் படைத்த தனிப்பெரும் நாயகர்களையும் சுற்றிச் சுழல்கின்றன. அதன் காரணமாக மெய்சிலிர்ப்பும், பிரமிப்பும், வியப்பும் உண்டாகின்றன.

குறிப்பாக, திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி 1920 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டுவரை சுமார் 17 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆட்சி செய்தது. முதன்முதலாக சமூக நீதிக்கான ஆணைகளை வழங்கி, வடமொழி ஆதிக்கத்தைத் தகர்த்து, மகளிருக்கான உரிமைகளை அங்கீகாரம் செய்து, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தந்து, கல்வித் துறையில் சீர்திருத்தங்களைப் புகுத்தி, சமுதாய மாற்றங்களுக்கான விதைகளை விதைத்து, சமூக நீதியை நீரூற்றி வளர்த்த கட்சி, ஆங்கிலேயரின் இரட்டை ஆட்சி முறையில் மிகவும் குறைவான சட்ட அதிகாரங்களை வைத்துக்கொண்டு, தொலை நோக்குத் திட்டங்களையும் அக்காலத்தில் எவரும் சிந்தித்திராத சீர்திருத்தங்களையும் நிறைவேற்றிய கட்சி.

திராவிட இயக்கத்தின் தாய்க்கழகமான நீதிக்கட்சி, இந்தச் சென்னை மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்றைக்கிருந்த மிகக்குறைவான அதிகாரங்களைக் கொண்டே வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டியது நீதிக்கட்சி! பட்டியலின மக்களது நலனைப் பேணியது நீதிக்கட்சி! திருக்கோயில்களைக் காத்தது நீதிக்கட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்து 100 ஆண்டுகளைக் கடந்துவிட்ட இந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.! (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகராயரும், நடேசனாரும், டி.எம். நாயரும் போட்ட சமூகநீதி, சமத்துவ சமுதாயம் காணும் அடித்தளத்தில் அமைந்துள்ள ஆட்சிதான் இன்றைய தி.மு.க. ஆட்சி! 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்தபோது, ‘‘நீதிக்கட்சி ஆட்சியினுடைய தொடர்ச்சிதான் இந்த ஆட்சி’’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்! அதே வழியில் எங்களது ஆட்சியும் நீதிக்கட்சியின் தொடர்ச்சிதான் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்! (மேசையைத் தட்டும் ஒலி)

நீதிக்கட்சியின் தொடர்ச்சி பேரறிஞர் அண்ணா! பேரறிஞர் அண்ணாவின் தொடர்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர்! (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞரின் தொடர்ச்சி நான்! ஏன், இந்த அரசு! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தை நம்மால்தான் வாழ வைக்க முடியும். தமிழினத்தை நம்மால்தான் வளர்ச்சி பெற வைக்க முடியும்! என்ற நம்பிக்கையோடு தி.மு. கழகத்தை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்! இந்த அரசின் கொள்கைகளை தமிழ்நாடு எட்ட வேண்டிய இலக்கை, எமது தொலைநோக்குப் பார்வையைத்தான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அன்று நீதிக் கட்சியின் முதலாவது (First Prime Minister) பிரதம அமைச்சராக இருந்த

கடலூர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் அவர்களையும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், 5 முறை முதலமைச்சர் பொறுப்பேற்று, 19 ஆண்டுகள் ஆட்சி செய்த சாதனைச் செல்வர், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராக இருந்த தகுதிமிக்க ஏனைய சான்றோர்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது என்னுடைய கடமை ஆகும். நமது முன்னோர்களை நினைவுகூர்வது என்பது, தமிழர் பண்பாட்டின் தவிர்க்க முடியாத முக்கியமான கூறு என்பதை மறந்துவிட முடியாது.

கடந்த 2 நாட்களாக இந்த அவையிலே நடந்திருக்கக்கூடிய விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த 22 மாண்புமிகு உறுப்பினர்கள், ஆளுநர் உரையின்மீது தங்களுடைய சீரிய கருத்துகளை மையப்படுத்தி இங்கே உரையாற்றி இருக்கிறார்கள்

உரையாற்றிய உங்கள் அனைவரது கருத்துகளையும் இந்த அரசுக்கு நீங்கள் சொல்லும் ஆரோக்கியமான ஆலோசனைகளாகவே நான் எடுத்துக்கொள்கிறேன். ஏனென்றால், நான் போறிஞர் அண்ணாவினுடைய அரசியல் வாரிசு; (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞருடைய கொள்கை வாரிசு; (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது முன்வைத்த கோரிக்கைகள், தொகுதி சார்ந்த பிரச்சினைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களால் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. துறை அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து நிச்சயமாக உறுதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நோத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்தாண்டு கால ஆட்சி உரிமை கொண்ட அரசு இது. இதில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், கொள்கைகள், கோரிக்கைகள் ஆகிய அனைத்தையும் ஆளுநர் உரையில் மட்டுமே முழுமையாகச் சொல்லிவிட முடியாது. ஆளுநர் உரை என்பது. அரசாங்கத்தின் ஓராண்டுக்கான கொள்கை விளக்கச் சுருக்கம். அதில் அரசாங்கத்தின் ஐந்தாண்டுகளுக்கான நோக்கம், திட்டம், அணுகுமுறை, செயல்பாடுகள் என அனைத்தையும் அடக்கிவிட முடியாது.

ஆளுநர் உரை ஒரு முன்னோட்டம்தான். அனைவருக்கும் எளிதில் புரியும்படிச் சொல்ல வேண்டும் என்றால், இது ஒரு "ட்ரெய்லர்" மாதிரி (மேசையைத் தட்டும் ஒலி)." முழு நீளத் திரைப்படத்தை விரைவில் வெள்ளித்திரையில்

காண்க" என்று முன்பெல்லாம் சொல்லப்பட்டு வந்ததைப்போல, இந்த அரசு வகுத்திருக்கும் பாதை, அதில் மேற்கொள்ள உள்ள பயணம், பயணத்தில் எதிர்கொள்ள இருக்கக்கூடிய இடர்ப்பாடுகள், அந்த இடர்ப்பாடுகளைக் களைந்தெறியும் சூட்சுமங்கள், சவால்கள் அவற்றைச் சந்திப்பதற்கான சாதுர்யங்கள் என அனைத்தும் விரைவில் இந்தப் பேரவையிலே வைக்கப்படவுள்ள நிதிநிலை அறிக்கையில் விரிவாக இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். அதில் எதையும் நிறைவேற்றவில்லை" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்றோடு 49 நாட்கள்தான் ஆகி இருக்கிறது. ஆனாலும், என் மீதும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீதும் இருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக, இப்போதே அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி இருக்கலாமே என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருக்கும்



"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பது பழமொழி. நாங்கள் 10 ஆண்டுகள் பொறுத்திருந்தோம்; (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவோம். அதில் உங்களுக்கு ஒரு துளிகூடச் சந்தேகம் வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதில் எந்தவிதமான சந்தேகமும் யாரும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஆட்சிக்கு வந்த முதல் நாளில் இருந்து நாங்கள் மக்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறோம். அதற்கான பணிகளில்தான் எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறோம்.

பல்வேறு ஊடகங்களில் தி.மு.க. அரசினுடைய முதல் முப்பது நாட்கள் எப்படி இருக்கிறது என்று கேள்வி கேட்டு, அதற்குப் பொதுமக்கள் அளித்த பதில்களை அனைவரும் பார்த்திருப்பீர்கள். தி.மு.க.வுக்கு வாக்களிக்கவில்லையே என்று பலரும் தங்களது வருத்தத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ''எங்களுக்கு வாக்களித்தவர்கள், இவர்களுக்கு வாக்களித்தோமே என்று மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலே, வாக்களிக்கத் தவறியவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று வருத்தப்படக்கூடிய வகையிலும் எனது பணி இருக்கும்'' என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடத்தில் தி.மு.க. வெற்றி பெற்றவுடன் ஊடகங்கள் வாயிலாக நான் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்தேன். அந்த வகையில் நம்முடைய பணிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்று எண்ணி, இன்னும் சிறப்பாகச் செயல்பட உத்வேகம் கொள்கிறேன்.

ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டவுடன் தலைமைச் செயலகத்திற்கு சென்று நான் பொறுப்பேற்றேன். பொறுப்பேற்றவுடனே கொரோனா நிவாரண நிதியாக 4,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் தவணையாக 2,000 ரூபாய் மே மாதத்திலேயே வழங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று மேலும் 2,000 ரூபாய் வழங்கப்பட்டது.



மொத்தம் 8,393 கோடி ரூபாய்ச் செலவில் 2 கோடியே 11 இலட்சம் குடும்பங்கள் இதனால் பயனடைந்திருக்கின்றன.

ஆவின் பால் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது, 16-5-2021 முதலே செயல்பாட்டுக்கு வந்தது. அனைத்து மகளிரும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என உத்தரவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னிடம் தரப்பட்ட மனுக்களை 100 நாட்களில் தீர்த்து வைக்க 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' எனும் திட்டத்தைத் தொடங்கினேன். இன்று காலை வரை ஆதாரத்தோடு, புள்ளி விவரங்களோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், 75 ஆயிரத்து 546 மனுக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை தீர்வு காணப்பட்டிருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கான கட்டணத்தை முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் அரசே செலுத்த உத்தரவிட்டோம். இதனால், 20 ஆயிரத்து 520 பேர் பயனடைந்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) கருப்புப் பூஞ்சை நோய் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கக்கூடிய 330 பேருக்கு, 77 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டளை மையம் "War Room" உருவாக்கப்பட்டது. தடுப்பூசிதான் உயிர்க்கவசம் என்பதால், தடுப்பூசி போடுவது மக்கள் இயக்கமாகவே மாற்றப்பட்டது. இதன் விளைவாக, மக்கள் மத்தியில் மாபெரும் விழிப்புணர்வு ஏற்பட்டு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 47 நாட்களில் 65 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையை விட இது இருமடங்கு அதிகமாகும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், கொரோனாவைப் பற்றி அனைவரும் பேசினார்கள். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது கொரோனா உச்சத்தில் இருந்தது. மே 7-ஆம் நாள், தமிழ்நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை, நாளொன்றுக்கு 26 ஆயிரமாக இருந்தது. அது 36 ஆயிரமாக உயர்ந்து கொண்டிருந்தது. மருத்துவ வல்லுநர்களை விசாரித்தபோது, "இது 50 ஆயிரம் ஆகும்; ஏன் அதைவிட தாண்டிக்கூடப் போகும்" என்றெல்லாம் சொன்னார்கள்.

தொடக்கத்தில் கடும் சவாலாகத் தெரிந்தது. ஆனால், அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக அப்படியே படிப்படியாகக் குறைந்து, 7000-க்கும்கீழ் வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் படிப்படியாகக் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. படுக்கைகள் இல்லை, ஆக்சிஜன் (oxygen) வசதி இல்லை என்ற சூழலில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்.

"இல்லை, இல்லை" என்ற சொல்லை இல்லாமல் ஆக்கியிருக்கிறோம். இந்த ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய படுக்கைகள் உருவாக்கப்பட்டன. ஆக்சிஜன் வசதி கொண்டவையாக, தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளாக உருவாக்கப்பட்டன. கடந்த ஒன்றரை மாத காலத்தில் மட்டும் 89 ஆயிரத்து 618 படுக்கைகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகப் பொது மக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா மூன்றாவது அலை வரக்கூடாது, வந்தாலும், அதனைத் தாங்கி எதிர்கொள்ளும் சக்தி இன்றைய அரசுக்கு இருக்கிறது. அரசு எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான் தொற்று குறைந்தது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தங்கள் ஆட்சியில் அதிகபட்சமாக 7,000 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டதாகவும், தி.மு.க. ஆட்சியில் 26 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டதாகவும் சொல்லி இருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை மனதில் கொண்டு இப்படிச் சொல்கிறார். மே 6 ஆம் தேதி வரைக்கும் முதலமைச்சராக இருந்தவர் அவர்தான்.

கடந்த 22 ஆம் தேதி அவையில் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 26-2-2021 ஆம் தேதியுடன் தனது கடமையும் பொறுப்பும் முடிந்ததைப்போலப் பேசினார்கள். "தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 26-2-2021 அன்று 481 பேருக்குத்தான் கொரோனா பாதிப்பு இருந்தது. அப்போது தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தன. அதனால், அதிகாரிகளுடன் பேச முடியவில்லை; இருந்தாலும், தலைமைச் செயலாளருடன் பேசி, மாவட்ட கலெக்டர்கள், மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தக் கூறினேன். ஆனால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெறவேண்டுமென்று தலைமைச் செயலாளர் கூறினார். இதுகுறித்து தேர்தல் ஆணையத்திற்கு நான் கடிதம் எழுதினேன். ஆனால், தேர்தல் ஆணையத்திலிருந்து பதில் கடிதம் தலைமைச் செயலாளருக்குத்தான் வந்தது. தலைமைச் செயலாளர்தான் ஆலோசனை நடத்தினார். நான் முதலமைச்சராக இருந்தபோது, கொரோனா தடுப்புப் பணியில் தமிழகம் முதலிடத்தில் இருந்தது" என்று பேசினார்கள். 26-2-2021-க்குப் பிறகு, அன்றைய முதலமைச்சர் அவர்கள் எந்த அரசுப் பணிகளையும் பார்க்கவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

12-4-2021 அன்று கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து கோட்டையில் மூத்த அமைச்சர்கள், அரசு அதிகாரிகளோடு அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது தமிழ்நாட்டில் இருந்த பாதிப்பு 6,711. 17-4-2021 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஆலோசனை நடந்தது. இந்த ஆலோசனை அனைத்தும் அன்றைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாக அரசு செய்திக் குறிப்பு கூறுகிறது. அன்றையதினம் கொரோனா பாதிப்பு 9,344. 18-4-2021 அன்று உயர்

அதிகாரிகளை அழைத்து அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தியிருக்கிறார். அதற்கு மறுநாள் தமிழ்நாட்டில் பாதிப்பு 10,941. 26-4-2021 அன்று அதிகளவிலான தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமருக்கு அன்றைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். அன்றையதினம் தமிழ்நாட்டில் பாதிப்பு 15,684 ஆகிவிட்டது. 28-4-2021 அன்று தடுப்பூசி கொள்முதல் குறித்து அன்றைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசின் செய்திக் குறிப்பு சொல்கிறது. அன்றைய பாதிப்பு 16,665. இதுதான் உண்மையான நிலைமை. அதாவது, ஏப்ரல் மாதத்தில் முழுமையாக அன்றைய முதலமைச்சர் மேற்பார்வையில்தான் பணிகள் நடந்துள்ளன. ஆனால், கொரோனா கட்டுப்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. மே 2 ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. அன்றையதினம் ஏற்பட்ட பாதிப்பு 20,768. இவை அனைத்துக்கும் முந்தைய அ.தி.மு.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

மார்ச் 6 ஆம் தேதியில் இருந்தே தமிழ்நாட்டில் கொரோனா ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. மார்ச் 30 ஆம் தேதியே தமிழ்நாட்டில் கொரோனா இரண்டாவது அலை வீசி வருகிறது என்று குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், தமிழ்நாடு கல்வித் துறைக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஏப்ரல் 6 ஆம் தேதி முதல் அதிகமாகப் பரவத் தொடங்கிவிட்டது. பாதிப்பு எண்ணிக்கை 5,000-லிருந்து 19,000 ஆக ஆனது. எனவே, கொரோனாவை அ.தி.மு.க. அரசு கட்டுப்படுத்திவிட்டது என்ற வாதம் மிக, மிகத் தவறானது. (மேசையைத் தட்டும் ஒலி) அவரை யாராவது கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்று அவருடைய கையைக் கட்டிப் போட்டு வைத்திருந்தார்களா எனத் தெரியவில்லை. 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' என்று ஒரு திரைப்படம் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல பிப்ரவரி 26 முதல் மே 6 வரையிலான இரண்டு மாதத்திற்கும் மேலான ஆட்சியை அ.தி.மு.க. மறந்துவிட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு வரப்போவதில்லை என்று தெரிந்ததும், அலட்சியமாக இருந்ததனுடைய விளைவுதான் பாதிப்பு எண்ணிக்கை 26,000 எனக் கூடியது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய மோசமான சூழலைக் கட்டுப்படுத்தியதுதான் தி.மு.க. அரசின் மகத்தான சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொரோனா வந்தபோது, அதுபற்றி எதுவும் தெரியவில்லை; மருத்துவர்களுக்கே தெரியவில்லை; மருந்தும் இல்லை; தடுப்பூசியும் இல்லை என்று இப்போதிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழப்பமான சூழலில்தான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்ட சொன்னேன். பலமுறை நான் சொன்னேன். "ஸ்டாலின் என்ன டாக்டரா"? என்று

இப்போதிருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நான் உள்ளபடியே கோபப்படவில்லை.

உண்மை என்னவென்றால், கொரோனாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் அனைத்துப் பொதுமக்களும் டாக்டர் ஆகிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பாதி டாக்டர்கள், இப்போது அப்படித்தான் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இனிமேல் நாம் யாருமே யாரையுமே, "நீங்கள் டாக்டரா?" என்று கேட்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது.

நான் எதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டச் சொன்னேன் என்றால், அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளையும் கேட்கவேண்டும் என்பதற்காகத்தான். கழக ஆட்சி அமைந்ததும், அனைத்துச் சட்டமன்றக் கட்சித் தலைவர்களை உள்ளடக்கி உட்படுத்தி ஒரு குழுவை நியமித்தோம். அ.தி.மு.க. சார்பிலே முன்னாள் அமைச்சர், மருத்துவர், மாண்புமிகு விஜயபாஸ்கர் அவர்கள்கூட அதில் இடம்பெற்றிருக்கிறார்கள். இந்தக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான், இன்றைய அரசு செயல்படுகிறது. எனவே, கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் தங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூலமாக அரசுக்கு நீங்கள் தொடர்ந்து சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே உரிமையோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அது அரசியல் பிரச்சினை அல்ல; கட்சிப் பிரச்சினையும் அல்ல; ஆட்சியின் பிரச்சினையும் அல்ல; மக்கள் பிரச்சினை. மக்கள் நலன் சார்ந்திருக்கக்கூடிய பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, "நான் தவறாகச் சொல்லவில்லை; அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும்" என்று சொன்னார்கள். அதற்காக அவருக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் சேர்ந்து செயல்பட்டு, அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளையும் பெற்று, கொரோனாவுக்கு முழுமையான முற்றுப்புள்ளியை இந்த அரசு வைக்கும் என்று நான் உறுதிபட இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு செய்துள்ள சாதனைகளைத் தொடர்ந்து சொல்லவேண்டுமானால், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடியவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள், மக்களுக்காகக் குரல் கொடுத்த அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான வழக்குகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகள், அதாவது 17 பேருக்கு அவர்களுடைய கல்வித்

தகுதிக்கேற்ற வேலை வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்டெர்லைட் போராட்டத்தில் தாக்கப்பட்டுக் காயமடைந்த 94 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலட்சம் ரூபாய் நிவாரணம் என அறிவித்து அதையும் செயல்படுத்தியிருக்கிறோம். சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஆக்சிஜன், ரெகுலேட்டர்கள், ஆக்சிஜன் நிரப்ப சிலிண்டர்கள் வாங்கப்பட்டன.



கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க அனைத்துச் சட்டமன்ற கட்சி உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டில் இருக்கும் தடுப்பூசி மையத்தையும், ஊட்டியில் உள்ள ஃபாஸ்டர் நிறுவனத்தையும் செயல்பட வைக்க மாண்புமிகு பிரதமரை வலியுறுத்தியிருக்கிறோம். ஊடகவியலாளர்கள், கொரோனா தொற்றால் இறக்க நேரிட்டால் 10

கொரோனா தொற்றால் பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு, 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி மற்றும் மாதாந்திர உதவித் தொகை ரூ.3,000, பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு உடனடி நிவாரணமாக ரூபாய் 3 இலட்சம், கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என, இப்படி பல்வேறு சலுகைகளை அறிவித்துச் செயல்படுத்தியிருக்கிறோம்.

திருக்கோயில்களில் மாத ஊதியமின்றிப் பணியாற்றக்கூடிய அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு ரூ.4,000/–, மருத்துவ முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை, காவலர் முதல் ஆய்வாளர் வரைக்கும் ரூ.5,000/– ஊக்கத் தொகை, திருநங்கையருக்கு நிவாரண உதவி அளித்திருக்கிறோம். கொரோனா தடுப்புப் பணியின்போது இறந்த மருத்துவர்கள், காவல் துறையினர் குடும்பத்தினருக்கு ரூபாய் 25 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் எழுத்தாளர்களுக்கு "இலக்கிய மாமணி விருது" வழங்கப்படும் என்றும், அவர்கள் வசிப்பதற்கு அரசு சார்பில் வீடு வழங்க, "கனவு இல்லம்" என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் செலவில் நெல் சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.



சென்னையில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னோக்கு மருத்துவமனை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்கப்பட அறிவிப்பு

தமிழின் தலைசிறந்த எழுத்தாளர் திரு.கி.ராஜநாராயணன் அவர்களது நினைவைப் போற்றும் வகையில் கோவில்பட்டியில் சிலை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

NEET தேர்வு தாக்கம் குறித்து ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர்

திரு. ஏ.கே.இராஜன் உயர்நிலைக் குழு, தொழிற்கல்வியில் பள்ளி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் திரு.முருகேசன் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவிற்குப் பேராசிரியர் ஜெயரஞ்சன் உள்ளிட்ட 8 ஆளுமைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பதினான்கு வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 977 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. அரியலூர், கடலூர் மாவட்டங்களில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் அனுமதி கேட்ட 15 எண்ணெய்க் கிணறுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேட்டூர் அணை ஜூன் 12 ஆம் நாள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, 4,001 கிலோ மீட்டர் தொலைவிலான காவிரி கால்வாய்கள் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டுக்குத் தேவையான 25 முக்கியக் கோரிக்கைகளோடு மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, அவற்றை விளக்கமாக எடுத்து வைத்திருக்கிறோம். மேகதாது அணை கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று தெரிவித்து, கர்நாடக அரசுக்குக் கண்டனம் தெரிவித்தோம்.

டவ்–தே புயலில் காணாமல் போன 21 மீனவர்களின் குடும்பங்களுக்கு, தலா 20 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 'மின்னகம்' என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, மூன்று நாட்களுக்கு முன்பு ஆளுநரின் உரையின் மூலமாக ஏராளமான கொள்கை அறிவிப்புகளை செய்திருக்கிறோம். இந்த ஆட்சி, 'எதுவும் செய்யவில்லை' என்று கூறுபவர்களுக்கு இதுதான் என்னுடைய பதில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஐம்பது நாட்களுக்குள் செய்திருக்கக்கூடிய மிக முக்கியமான சில சாதனைகளில் சிலவற்றைத்தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இவற்றை எதிர்க்கட்சிகள் வேண்டுமானால் மறைக்கலாம். ஆனால், மக்களுக்கு நிச்சயமாக நன்கு தெரியும்

நான்கின் பலத்தில் தி.மு.க. நிற்கிறது

ஆளுநர் உரை குறித்துப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பார்கள். இந்த அறிக்கையில் மணியோசையும் இல்லை. யானையும் இல்லை" என்று சொன்னார்கள். யானை என்று சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அடக்கப்பட்ட யானைக்குத்தான் மணி கட்டுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. என்பது யாராலும் அடக்க முடியாத யானை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு கால்கள்தான் யானையினுடைய பலம். சமுக நீதி, சுயமரியாதை, மொழி–இனப்பற்று, மாநில உரிமை (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய

நான்கின் பலத்தில்தான் தி.மு.க.–வும் நிற்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசும் நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையைப் படிப்பவர் கண்களுக்குச் சமூக நீதியும், சுயமரியாதையும், தமிழுக்கும். தமிழர்களுக்கும் நாங்கள் செய்ய இருக்கும் நன்மைகளும், மாநில உரிமைகளுக்கான எங்களது முழக்கங்களும் நிச்சயம் தெரியும்.

தேய்ந்து ஓய்ந்து கிடக்கும் தமிழ்நாட்டின் கருவூலம்

தமிழ்நாட்டின் கருவூலம் எப்படித் திசைமாறி, உருமாறித் தேய்ந்து ஓய்ந்து கிடக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அதைச் சீர்படுத்துவதே எங்களுடைய முதல் வேலை. அதையெல்லாம் மனதில் வைத்துத்தான், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்கள் உள்ளிட்ட பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்திருக்கிறோம். இன்றைய நிதி நிலைமையில், ஏழை எளிய, நடுத்தர மக்களும், பாட்டாளிவர்க்கத்தினரும் வாழ்வாதாரத்தை இழந்து நிற்பதால், அவர்களுக்கு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்து வருகிறோம். இருப்பதை எப்படிப் பெருக்குவது, பெருக்கியதை எப்படிப் பகிர்ந்தளிப்பது, மாநிலத்தின் வளத்தையும் நலத்தையும் எப்படிப் பேணுவது, உயர்த்துவது என்பதை ஆழ்ந்து, ஆராய்ந்து, "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்" செயலாற்றுவோம் என்ற என்னுடைய உறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவசரப்பட்டு ஆளுநர் உரையிலே; அது இல்லையே இது இல்லையே என்றெல்லாம் சொன்னீர்கள். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வாக்குறுதிகள், ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ளன. அவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை

வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை; (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் உழவர் சந்தைகள்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இருக்க வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) சிறு, குறு தொழில்கள் மீட்டெடுப்பு: வட மாவட்டங்களில் தொழில் பெருக்கம், புதிய துணை நகரங்கள்: தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழர்களுக்கு முன்னுரிமை; (மேசையைத் தட்டும் ஒலி) 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்குப் பாதுகாப்பு; (மேசையைத் தட்டும் ஒலி)மேகதாது அணைக்கு எதிர்ப்பு: கச்சத்தீவு மீட்பு: நீட் ரத்து: உள்ளாட்சித் தேர்தல்; பட்டியலினத்தவர் பணியிடம் நிரப்புதல்; சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு, திருக்கோயில்களின் பராமரிப்பைச் செம்மைப்படுத்த ஆலோசனை வழங்க மாநில அளவில் உயர்மட்ட ஆலோசனைக் குழு; பணிபுரியும் மகளிருக்கு மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள்; சச்சார் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு திறம்படச் செயல்படுத்தும், சேவைகள் உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்;

நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை; பொருளாதாரத்தை மீட்க வல்லுநர் குழு; இப்படி எத்தனையோ அறிவிப்புகள் ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் தி.மு.க.–வின் தேர்தல் அறிக்கையில் இருப்பவைதான். ஆளுநர் உரையிலே இருப்பதை எல்லாம் விடுத்து, இது இதெல்லாம் இல்லையே என்று ஆதங்கப்படுபவர்களுக்கு "திருச்சியிலே நின்றுகொண்டு, அங்கே இருக்கும் மலைக்கோட்டையையும் கரைபுரண்டோடும் காவிரியையும், கல்லணையையும் காணாமல், "தில்லை நடராசர் எங்கே?" என்று கேட்பவர்களைப் பற்றி என்ன நினைப்பீர்கள்?" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையே நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களது பழைய கொள்கைகளுக்கு மாறுபாடு இருந்தால் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, 'அதைக் குறிப்பிடவில்லை இதைக் குறிப்பிடவில்லை' என்பது சரியான குற்றச்சாட்டாக இருக்க முடியாது. ஒரு புத்தகத்தில் அனைவருடைய பெயரும் இருக்க வேண்டுமென்று சொன்னால் அது டெலிபோன் டைரக்டரியாகத்தான் இருக்க முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரை என்பது தி.மு.க அரசாங்கம் போகும் பாதையை டைரக்ட் பண்ணும் புத்தகம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உரை மீது கருத்து சொன்ன, ஆலோசனைகள் சொன்ன அத்தனை பேருக்கும், அதேபோல் நன்றி தெரிவித்துப் பாராட்டிய அத்தனை பேருக்கும், ஒருவேளை நன்றி தெரிவிக்க மறந்த அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள முக்கிய கருத்துகளுக்குச் செயல்வடிவம் கொடுத்திடுவதற்கான சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். கொரோனா நோய்த்தொற்று குறைந்துள்ளபோதும், அந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டு, குணமடைந்தவர்களுக்குச் சில பிரச்சினைகள் (Complications) வருவதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்; தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தொடர்ந்து சிகிச்சை பெறுவதற்கு, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சிறப்புச் சிகிச்சை மையங்கள் (Post–Covid Clinics தொடங்கப்படும். தேவைப்படும் உயர் சிகிச்சை மருத்துவர்களோடு (Specialist Doctors) மையங்கள் செயல்படும்.

இளைஞர்களுக்கும் மகளிர்க்கும் வேலைவாய்ப்புகள்

நம் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் தகுந்த வேலைவாய்ப்பு கிடைப்பதே அவர்களின் முன்னேற்றத்திற்கும் நம் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நோக்கத்தோடுதான் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட மாவட்டங்களில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்போம் என்று அறிவித்திருக்கிறோம். இதன் முதற்கட்டமாக,

செய்யாறில் 12,000 பேருக்கும், திண்டிவனத்தில் 10,000 பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பெரும் தொழிற்சாலைகள் அமையவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

வழக்குகள் திரும்பப் பெறப்படும்

கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள்மீது அரசு தொடர்ந்த வழக்குகள், மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீதான வழக்குகள், குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்கள் மீதான வழக்குகள், மீத்தேன்–நியூட்ரினோ, கூடங்குளம் அணு உலை, சேலம் எட்டுவழிச் சாலை ஆகிய திட்டங்களுக்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தைச் சமப்படுத்தப் போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவபுரங்களைக் கட்டினார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சமத்துவபுரங்கள் சரியாகப் பராமரிக்கப்படாத அவல நிலையில் இப்போது இருக்கின்றன! அந்தச் சமத்துவபுரங்கள் உடனடியாகச் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், திருக்கோயில்களின் புனரமைப்புக்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்ற வாக்குறுதி இருந்தது. அதற்கு முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் 100 கோடி ரூபாய் செலவில் திருக்கோயில்களைத் தொன்மைமாறாமல் புதுப்பிக்க, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குளங்களைச் சீரமைத்திட, திருத் தேர்களைப் புதுப்பித்துத் திருவிழாக்கள் நடத்திடத் தேவையான பணிகள் 100 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், ஆளுநர் உரையைப் பலபடப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்தும், ஒரு சிலர்– குறிப்பாக எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறைகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டியும் பேசியிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் எதுவுமே இல்லை என்பதைப் போலப் பேசுவது உண்மையான நிலை என்று ஆகிவிடாது; மக்களும் அப்படிக் கருதிவிட மாட்டார்கள்; அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அதிகாரிகளிடையே நான் பேசும்போது முதல் கூட்டத்திலேயே சொன்னேன். "எனக்குப் புகழுரை வேண்டாம்; உண்மைகளைச் சொல்லுங்கள்" என்று வலியுறுத்தியிருக்கிறேன். அப்படி நான் சொன்னது ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்கிற அந்த நல்லெண்ணத்தில்தான். ஆனால், நிறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இல்லாத குறைகளை உருவாக்கி, ஓங்கி உரைப்பது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு வழிகாட்டுவது ஆகாது. எளினும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் குறைகளைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்லத்தான் செய்வார்கள்; அதனால்தான் அவர்கள் எதிர்க்கட்சி; மாற்றுக் கருத்துகளை,

வேறுபட்ட எண்ணங்களை வெளிப்படுத்த ஜனநாயகம் இடமளித்திருக்கிறது. புகழுக்கு மயங்கவும் மாட்டேன். குறைகூறுவதால் குன்றிவிடவும் மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இரண்டையுமே அதிகளவு எனது வாழ்க்கையில் நான் பார்த்துவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) புகழுரைகள், என்னை அதிகளவு அடக்கமானவனாகவும், புகழ்ந்துரைக்கும்போது அது என்னை மேலும் பக்குவப்படுத்துவதற்கும் நான் பயன்படுத்துவேன். எச்சரிக்கை உள்ளவனாகவும் அது ஆக்கி இருக்கிறது. ஏன், என்மீது இதுவரை சொல்லப்பட்ட பழிகள், அவமானங்கள் ஆகியவை என்னை மேலும்மேலும் உழைக்கவும், உண்மையாக இருக்கவும்தான் தூண்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் நான் பயன்படுத்தப் போகிறேன்.

ஏனெனில், இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட புகழுரை, இகழுரை இரண்டையும் எனக்கான உரமாகவே கொண்டு எனது அரசியல் பயணத்தை நான் தொடர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாபெரும் தலைவரின் மகனாக இருந்தாலும், அந்தப் பகட்டோடு நான் என்றைக்கும் நடந்துகொண்டது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தலைவருக்குக் கடைசித் தொண்டனாகத்தான் நான் நடந்துகொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது எனது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியும்; அந்தத் தலைவருக்கும் தெரியும்.

என்னுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அந்த அன்புத் தலைவர், வங்கக் கடலோரத்தில் அல்ல; கோடிக்கணக்கான மக்களுடைய இதயத்தில் குடி கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பிறகு அவர் இடத்தில் தலைமைத் தொண்டனாகத்தான் நான் உட்கார்ந்திருக்கிறேனே தவிர, பேரறிஞர் அண்ணாவின் இடத்தில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இடத்தில் உட்கார்ந்துவிட்டேன் என்ற கர்வம் எனக்கு ஒரு துளியும் கிடையாது; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றல்ல; அது என்றும் இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தகைய மனநிலை கொண்ட நான் இந்த அவைக்குச் சொல்ல விரும்புவது, அரசியல் எல்லைகளைக் கடந்து, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, தமிழ்நாட்டு மக்களுக்காக நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்வோம் என்பதுதான்!

ஆறாவது முறையாக, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், தமிழ்நாட்டு மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திடும் வகையில் எப்படி நானும், அமைச்சர் பெருமக்களும் ஓயாது, ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோமோ, இதையெல்லாம் இந்த நாடறியும்! நல்லவர்கள் அறிவார்கள்!

நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜி முதல் 'இந்து' என். ராம் வரை; பொருளாதார நிபுணர் கவுசிக் பாசு, ஒன்றிய அரசின் முன்னாள் நிதி அமைச்சரும் பொருளியல் சிந்தனையாளருமான ப. சிதம்பரம் தொடங்கி, நடுநிலை நாளேடுகள் மற்றும் இதழ்கள் வரை, கழக அரசு குறுகிய காலத்தில் நிகழ்த்தியிருக்கக்கூடிய இந்தச் சாதனைகளை

வரவேற்றுப்பாராட்டியிருக்கிறார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) கழக அரசின் சாதனைகளுக்கு அவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் மனமுவந்து வழங்கியிருக்கிறார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எல்லாம் என்னுடைய நன்றிக்குரியவர்கள்!

எங்களைப் பொறுத்தவரையில், தேர்தல் கால வாக்குறுதிகளை வாக்குகளை, ஈர்ப்பதற்கான காந்தம் எனக் கருதாமல், நாட்டின் மேம்பாட்டுக்கு, நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறுதியாகச் செய்தே தீர வேண்டிய செயல்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்; "சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம்" (மேசையைத் தட்டும் ஒலி) என்பது, முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்குத் தந்த ஆரம்பக் கல்வி அது. கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆறாவது முறை ஆட்சி அமைக்கக் காரணமான தமிழ்நாட்டு மக்களை இருகரம் கூப்பி, என்னுடைய தலை தாழ்த்தி, எனது பணிவு அனைத்தையும் ஒருங்கே திரட்டி மீண்டும் வணங்குகிறேன்; மனமும், வாயும் மணக்க மணக்க, பல்லாயிரம் முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றத்தைப் படைத்த தமிழ்நாட்டு மக்களை மறந்துவிட முடியுமா? இராமலிங்க அடிகள் மனம் உருகிச் சொன்னதைப் போல,

"பெற்ற தாய்தனை மக மறந்தாலும்,
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்,
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்,
உயிரை மேவிய உடல் மறந்தாலும்,
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்,
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்"

எங்கள் இதயத்தின் இயங்கு சக்தியாக இருக்கும் தமிழ்நாட்டு மக்களை என்றைக்கும் நாங்கள் மறக்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறாவது முறையாக அமைந்துள்ள கழக ஆட்சியின் முதலாவது ஆளுநர் உரை என்பதால், அரசியல், கட்சி வேறுபாடுகளை எல்லாம் மறந்து, குறை எதுவும் இருப்பின் பொருட்படுத்தாமல், அதையும் மறந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வழிமொழிந்த இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து, புதியதொரு வரலாறு படைத்திடும் எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர் என்று அன்புடன், பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிற அதேநேரத்தில், மக்களுக்குப் பணியாற்ற வேண்டியது ஓர் அரசினுடைய கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்தில் கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த விளக்கங்களுக்குப் பிறகு என்னுடைய விளக்கங்களை ஏற்று நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப்பெற்றுக்கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள்!

மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து நிகழ்த்திய சுதந்திரத் திருநாள் உரை
15–8–2021


தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் –அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் – செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!
கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்!
நம்பற்குரியர் அவ்வீரர் – தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பீர்!

நானூறு ஆண்டுகள் பழைமை கொண்ட பேரவைத் தலைவர் அவர்களே! சென்னை இந்தக் கோட்டையில் இந்திய நாட்டின் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மூவண்ணக் கொடியை ஏற்றி வைக்க தங்களது உயிரையும் இரத்தத்தையும் வாழ்க்கையையும் செயல்பாட்டையும் வழங்கிய இந்த நாட்டின் தியாகிகள் அனைவருக்கும் நான் எனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இந்த மாட்சிமை பொருந்திய கோட்டையில் விண்முட்ட அமைந்துள்ள கம்பத்தில் கொடியேற்றும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்! தமிழ்நாடு சட்டமன்றப் உறுப்பினர்களே! தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே! காவல் துறைத் தலைவர் உள்ளிட்ட காவல் அதிகாரிகளே! சிறப்பு விருந்தினர்களே! சுதந்திரப் போராட்டத் தியாகிகளே! அவர்களது குடும்பத்தினரே! மாணவச் செல்வங்களே! வணக்கம்!

இந்தியா தனது 75–ஆவது சுதந்திர நாளைக் கொண்டாடும் மகத்தான இப்பொழுதில், கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றும்

மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்து மகிழ்கிறேன். சுதந்திர நாளன்று யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அவர்கள்தான் கொடி ஏற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை வாங்கிக்கொடுத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.



ஆகஸ்ட்–15 சுதந்திர நாளன்று முதலமைச்சரும், ஜனவரி–26 குடியரசு நாளன்று ஆளுநரும் கொடியேற்றலாம் என்ற ஆலோசனையை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அதனை ஏற்றுக்கொள்ள வைத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர். 15–8–1974 அன்று முதன்முதலாக இந்தக் கோட்டையில் ஒரு முதலமைச்சராகக் கொடியேற்றினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்பிறகு எத்தனையோ முதலமைச்சர்கள் வந்தாலும், அவர்களுக்கும் கொடியேற்றும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுக் கொடுத்த மாபெரும் சுதந்திரச் சிந்தனையாளார்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவரை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

இன்று, இந்தியச் சுதந்திரத்தின் 75–ஆவது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். இது மட்டுமல்ல, இன்னும் ஏராளமான பெருமைகள் இந்த ஆண்டுக்கு உண்டு. தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவினை மாண்புமிகு

குடியரசுத் தலைவர் அவர்களை அழைத்துச் சில நாட்களுக்கு முன்னால் நடத்தினோம்! திராவிட இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்ததன் நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டுதான்! தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய மகாத்மா காந்தி அவர்கள், மதுரைக்கு



வருகை தந்தபோது ஏழைத் தமிழ் மக்களைப் பார்த்துத் தமது உயர்ரக ஆடையைக் களைந்து அரையாடையை உடுத்தத் தொடங்கியதன் நூற்றாண்டும் இந்த ஆண்டுதான்! செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்றெல்லாம் போற்றப்படும் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு 150-ஆவது பிறந்தநாள் கொண்டாட இருப்பதும் இந்த ஆண்டு தான்! சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதி மறைந்து 100 ஆண்டுகள் ஆகிறது இந்த ஆண்டோடு! இப்படி எவ்வளவோ வரலாற்றுப் புகழ் பெற்ற ஆண்டாக இந்த 2021 அமைந்துள்ளது!

தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்படும் பெருமிதம் என்னவென்றால் நமது அரசு ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து இருக்கிறது. எனது பொது வாழ்க்கையில் அரை நூற்றாண்டு காலம் உழைத்த நான், அப்படி உழைத்த நான் தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன் என்ற மகிழ்ச்சியுடன் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறேன்.

75-வது சுதந்திர நாளை நினைவுகூரும் வகையில் மிகப்பெரிய தூணை இன்று உருவாக்கி இருக்கிறோம். அது வெறும் கல்லாலும், சிமெண்டாலும், செங்கல்லாலும் கட்டப்பட்டது அல்ல. நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களின் இரத்தத்தால், எலும்பால், சதையால் உருவாக்கப்பட்டதுதான் அந்தத் தூண்!

சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே விடுதலைக்காகப் போராடிய மண்தான் நம்முடைய தமிழ் மண்.

பூலித்தேவர், வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், தளபதி சுந்தரலிங்கம், ஊமைத்துரை, தீரன் சின்னமலை, மருது, பெரிய மருது, வ.உ.சி., மகாகவி பாரதி, சுப்பிரமணிய சிவா, டி.எஸ்.எஸ். ராஜன், தில்லையாடி வள்ளியம்மை, தந்தை பெரியார், திரு.வி.க., நாமக்கல் ராமலிங்கம், ம. சிங்காரவேலர், பாரதிதாசன், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், திருப்பூர் குமரன், ராஜாஜி, காமராசர், ஏ.எம்.ஈஸ்வரன், ஓமந்தூர் ராமசாமி, ஜீவா, கேப்டன் லட்சுமி, ம.பொ. சிவஞானம், கே.பி. சுந்தராம்பாள் இத்தகைய தமிழ்நாட்டுத் தியாகிகளின் மூச்சுக்காற்றைக் கொண்டு கட்டப்பட்டதுதான் இந்த நினைவுத் தூண்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் ஒன்றைத் தயாரித்து தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு உறுதியாகச் செய்யும். நான் சொன்ன தியாகிகள், தமிழ்நாட்டுத் தியாகிகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவின் தியாகிகள். விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு



எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அந்த வகையில், மாநில அரசால் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 17 ஆயிரம் ரூபாயில் இருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாய் ஆகவும் உயர்த்தப்படும் என்பதை இந்த வேளையில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு விடுதலைப் போராட்ட தியாகிகளை நினைவுகூர்வதில் நமது அரசு எப்போதும் தவறியது இல்லை.

சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது 1962 ஆம் ஆண்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்து நிதியை திரட்டிக்கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்! 1971 ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானம் போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்! அதோடு நில்லாது, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்!

அப்போது அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி ரூபாய்! அதில் 6 கோடி ரூபாயை வழங்கியது திமுக அரசு!

அந்தப் போரில் வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு கலைஞரின் அரசு! 1999 ஆம் ஆண்டு கார்கில் போரின்போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு முதல்வர் கலைஞரின் அரசு! பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு கோட்டை! பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது! காமராசர் மணிமண்டபம்! இராஜாஜி நினைவாலயம்! தில்லையாடி வள்ளியம்மாள் மணிமண்டபம்! வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னம் ஆனது! விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்து பயணம், தியாகிகள் மணிமண்டபம், சுதந்திரப் பொன் விழா நினைவுச் சின்னம்! பூலித்தேவன் நினைவு மண்டபம்! தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு! மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு! நேதாஜிக்குச் சிலை! கக்கனுக்குச் சிலை! சிப்பாய்க் கலகத்துக்கு நினைவுத்தூண்!

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளை நமது அரசு எப்பொழுதும் போற்றி வருகிறது. அந்த வரிசையில் தியாகத்தின் திருவுருவான வ.உ.சி. அவர்களின் 150 ஆவது பிறந்தநாளை அரசு சார்பில் எழுச்சியோடும் உணர்ச்சியோடும் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம்.

வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் விட்டவர் வ.உ. சிதம்பரனார் அவர்கள். சுதேசி என்பது ஏட்டளவில் மட்டுமல்ல, நம்முடைய சிந்தனையாக, செயலாக மாற வேண்டும் என்று நினைத்தவர்

வ.உ.சி. அவர்கள். அரசியல் விடுதலை மட்டும் போதாது, பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று நினைத்தவர். அனைத்து விதத்திலும் தன்னிறைவு பெற்ற நாடாக நாம் மாற வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் கனவு கண்டார்கள்.

அத்தகைய கனவைக் கொண்ட அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. ''எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கிச் செல்லட்டும் இந்த வையம்'' என்பதைப் போன்ற பொற்காலத்தை உருவாக்க உறுதி கொண்டுள்ளது இந்த அரசு.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலமானது நமக்கு ஏராளமான படிப்பினைகளைக் கொடுத்திருக்கிறது. மருத்துவ நெருக்கடி, மனநல நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, சூழல் நெருக்கடி எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் மக்களைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டது கொரோனா. இதிலிருந்து மக்களை மீட்பதற்கு அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளுக்கு அடித்தளமான மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள், அரசின் நிர்வாகத்தின் அனைத்து அலுவலர்கள் அனைவரையும் இந்த நாளில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்தளவுக்கு மக்கள் மீண்டுவர உங்களது அர்ப்பணிப்புதான் காரணம்.

தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதிலிருந்து இன்று 101 ஆவது நாள். தமிழ்நாடு அரசின் நிதிநிலை தொடர்பான வெள்ளை அறிக்கையையும், 2021–22 ஆம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்த நிலையில், தமிழ்நாட்டின் நிதி நிலையை தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். இத்தகைய நிதிச் சுமையோடு முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்ற இந்த அரசு கொரோனா என்கிற கொடிய நோய்த் தொற்றை மேலாண்மை செய்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில், பல்வேறு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

- கொரோனாவாலும் ஊரடங்காலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் 4 ஆயிரம் ரூபாய் இரு தவணைகளில் வழங்கப்பட்டது, 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பு வழங்கப்பட்டது.
- கொள்முதல் விலையைக் குறைக்காமல், ஆவின் பாலின் விற்பனை விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைப்பு.
- பெட்ரோல் விலை மூன்று ரூபாய் குறைப்பு.
- மகளிர், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகளுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம்.
- தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்களுக்கு ''உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை'' மூலமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.
- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமனம்.

- தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்த "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது உருவாக்கப்பட்டு, இளம் வயது முதல் தற்போது வரை பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பல்வேறு தியாகங்களைச் செய்த மாபெரும் பொதுவுடைமைப் போராளியும், முதுபெரும் தலைவருமான திரு. சங்கரய்யா அவர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டு இருக்கிறது.
- போதிய திரவ ஆக்சிஜன், ஆக்சிஜன் படுக்கைகளைக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்து காட்டியிருக்கிறோம்.
- 3 கோடி மக்களுக்குக் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்கிறோம். தடுப்பூசி வீணடிக்கப்பட்ட நிலையை மாற்றிக் கூடுதல் தடுப்பூசிகள் செலுத்தி, இந்தியாவுக்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியுள்ளோம்.
- உலகத்தரத்தில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கிண்டி கிங் நோய்த் தடுப்பு வளாகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.
- தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், நோய்களுக்கான சிகிச்சைகள், மருந்துகள், இயன்முறைச் சிகிச்சை உள்ளிட்ட மருத்துவச் சேவைகளை நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கும் முன்னோடித் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" தொடங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டமாக இருந்தாலும், அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக் கூட்டமாக இருந்தாலும் ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சமூகம் அரசியல்–பொருளாதாரம் ஆகிய மூன்றிலும் தமிழ்நாடு என்பது ஒருசேர வளர வேண்டும் என்பதுதான் நம்முடைய கனவாக இருக்க வேண்டும். அனைவரின் கனவையும் நிறைவேற்ற நமது அரசு பாடுபட்டு வருகிறது. அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால் பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும். அதைத்தான் நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் விரும்பினார்கள். அதற்காகத்தான் போராடினார்கள். அதற்காகத்தான் தியாகம் செய்தார்கள். சிறை சென்றோர்–செக்கிழுத்தோர் –கல்லுடைத்தோர்–அடி உதைபட்டோர் –அவலங்களைச் சுமந்தோர்–உயிரைக் கொடுத்தோர் ஆகிய அனைவரும் மேன்மைமிகு தமிழ்நாட்டை உருவாக்க நினைத்தார்கள். அத்தகைய தமிழ்நாட்டை உருவாக்க நினைக்கும் தமிழ்நாடு அரசுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; உறுதுணையாக இருக்க வேண்டும்.

மகாத்மா காந்திக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான உறவு ஆழமானது. தென்ஆப்பிரிக்காவில் மகாத்மா காந்தி நடத்திய அந்தனைப் போராட்டங்களிலும் தமிழர்கள் முன்னின்றனர். அங்கு நடைபெற்ற இன வெறியின் உக்கிரத்தைத் தாங்கிய தமிழர்கள் தன் உடன்பிறந்த சகோதரர்கள் என்று மகாத்மா காந்தி அறிவித்தார். தமிழர்கள் மகாத்மா காந்தியை நெஞ்சார நேசித்தார்கள். மகாத்மா காந்தியும் தமிழர்கள் மட்டுமின்றி தமிழ் மொழி மீதும் அளவில்லா அன்பு கொண்டிருந்தார். ஐரோப்பாவிற்கு எப்படி இத்தாலிய மொழியோ அப்படி இந்தியாவிற்குத் தமிழ்மொழி என அறிவித்து, லண்டன் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விருப்பப்பாடமாகச் சேர்க்க வேண்டும் என்றும், இந்தியாவின் பிற பகுதிகளில் வசிப்பவர்கள் நம் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மகாத்மா காந்தி தம் வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். நூறு ஆண்டுகளுக்கு முன் மதுரைக்கு வந்த மகாத்மா காந்தியை, மேலாடை துறந்த மகாத்மாவாகத் தமிழ்நாடு வழியனுப்பி வைத்தது. அதை நினைவுகூரும் வகையில் மகாத்மா குறித்த அரிய கலைப்பொருட்களைக் கொண்ட மதுரை மகாத்மா காந்தி அருங்காட்சியகம் பொதுமக்களையும் தலைமுறையினரையும் ஈர்க்கும் வகையில் ஆறு கோடி ரூபாய்ச் செலவில் நவீன முறையில் புதுப்பிக்கப்படும். சாதி, மதம், இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் என்னும் கருத்தை இளைஞர் மனதில் ஆழப் பதியவைக்க இன்று சூளுரைப்போம்!

அனைவருக்கும் சுதந்திர நாள் நல்வாழ்த்துகள்!

வாழ்க தமிழ்நாடு! வாழ்க இந்தியா!

வணக்கம்!

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (8.1.2024) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024" நிறைவு விழாவில், பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிறுவனங்களின் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், இங்கிலாந்து நாட்டு இணை அமைச்சர் லார்டு தாரிக் அகமது, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் திரு. அருண் ராய், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., மகேந்திரா குழுமத் தலைவர் திரு. ஆனந்த் மகேந்திரா, TAFE நிறுவனத்தின் தலைவர் திருமதி மல்லிகா சீனிவாசன், செயிண்ட் கோபின் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பி. சந்தானம், டாடா பவர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீர் சின்ஹா, Pou Chen சென் நிறுவனத்தின் துணைத் தலைவர் Mr. Qinxue Lee, ராம்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பி.ஆர். வெங்கட்ராம ராஜா, CII தமிழ்நாடு தலைவர் திரு. சங்கர் வானவராயர், அமல்நாட்டுத் தூதரக அதிகாரிகள், பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (25.8.2023) இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும்முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவுவழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான இன்று (15.9.2023) காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. சுந்தர், திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், திரு.கு. செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (18.12.2021) செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூரில் நடைபெற்ற விழாவில், உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான இன்னுயிர் காப்போம் –நம்மைக் காக்கும் 48 திட்டத்தைத் தொடங்கி வைத்தார். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு. க சுந்தர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் / சிறப்புப் பணி அலுவலர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் திட்ட இயக்குநர், ஆதிபராசக்தி அறக்கட்டளை துணைத் தலைவர் திருமதி லட்சுமி பங்காரு அடிகளார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் உள்ளனர்.



இன்று (28.7.2022) சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 44–வது சர்வதேச சதுரங்கப் போட்டி தொடக்க விழாவில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார். உடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி, மாண்புமிகு ஒன்றியத் தகவல் – ஒலிபரப்பு, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் சிங் தாகூர், மாண்புமிகு ஒன்றிய தகவல் – ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் முனைவர் எல்.முருகன், மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் தலைவர் திரு. அர்கடி துவார்கோவிச் ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக ஆற்றிய முதல் உரை 18–8–2021

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மூவரையும் வணங்கி. என்னுடைய கன்னிப் பேச்சை இந்த அவையில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமும், பெருமையும்மிக்க இந்தத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேசுவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ள உங்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை முன்னவர் தொடங்கி மாண்புமிகு அமைச்சர்கள், கழகத்தின் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள், தோழமைக் கட்சியின் உறுப்பினர்கள், இந்த நேரத்தில் நமது கூட்டணியின் வெற்றிக்காக உழைத்த தோழமைக் கட்சியின் தலைவர்கள், நம்முடைய ஆசிரியர் திரு. வீரமணி ஐயா அவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தின் மாநிலத் தலைவர் அண்ணன் திரு. கே.எஸ். அழகிரி அவர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் அண்ணன் ரா. முத்தரசன் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் அண்ணன் பாலகிருஷ்ணன் அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் அண்ணன் திருமாவளவன் அவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தேசிய பொதுச் செயலாளர் பெரியவர் K.M. காதர் மொய்தீன் அவர்கள், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் அண்ணன் வேல்முருகன் அவர்கள் உட்பட கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொங்குநாடு மக்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளர் அண்ணன் ஈஸ்வரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களின் பெயரையெல்லாம் எழுதிவைத்திருந்தேன். ஆனால், அவையிலிருந்து வெளியில் சென்றுவிட்டார்கள்; பெரிய வருத்தம்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்த அவையைச் சிறப்புற வழிநடத்தி வருகிறீர்கள். எங்களுக்கெல்லாம் நீங்கள் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், கடந்த 2016 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலின்போது உங்களுடைய வெற்றி என்பது தடுக்கப்பட்டது. சிலர் அதை திட்டமிட்டு சூழ்ச்சியால்

அபகரித்துக்கொண்டனர். நீங்கள் நடத்திய சட்டப் போராட்டங்களை இந்த நாடே அறியும். உயர் நீதிமன்றம் தொடங்கி உச்ச நீதிமன்றம் வரை நீங்கள் நீதி கேட்டுப் போராடினீர்கள். இதனால் உங்களுக்கு ஏற்பட்ட இழப்பு சாதாரணமானதல்ல. உங்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு மருந்தாக நீங்கள் பார்த்ததெல்லாம் வெறும் இயக்கப் பணிகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கழக நிகழ்ச்சியில் கலந்து கொள்வது, (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்திற்காக விவாத மேடைகளில் பங்கெடுப்பது என்று கொஞ்சமும் தொய்வின்றி உங்கள் மக்கள் பணியை நீங்கள் தொடர்ந்தீர்கள். அதன் பயனாக இன்று ராதாபுரம் மக்கள் மிகப்பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் உங்களை வெல்ல வைத்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெருமைமிகு அவையின் தலைவராக நீங்கள் பாரபட்சமின்றி செயல்படுகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், நீங்கள் எங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த நேரத்தில் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவர் அண்ணன் திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அண்ணன் கோவி. செழியன் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட பேரவையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் என்னுடைய அன்பையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நீதிக் கட்சித் தலைவர்கள், அவர்கள் வழியில் வந்த பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், ஏனைய முன்னோடிகள் பலர் செயலாற்றிய 100 ஆண்டுகள் கண்ட இந்தப் பேரவையில் நானும் பங்கேற்றுக் கொண்டிருக்கிறேன் என்பதை நினைத்து பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலை அருகிலிருந்து கவனித்து, சட்டமன்றப் பேரவை நடைமுறைகளை ஓரளவிற்கு அறிந்து வைத்திருந்தாலும், இதுநாள் வரை ஒரு பார்வையாளனாக மட்டுமே நான் அவையை கவனித்து வந்திருக்கிறேன். முதன்முறையாக ஒரு பங்கேற்பாளனாக உள்ளிருந்து ஒவ்வொரு விஷயத்தையும் உற்றுநோக்கும் வாய்ப்பை தற்போது பெற்றிருக்கிறேன். பேரவையின் உறுப்பினராக இன்னும் நெருங்கி வந்து பார்க்கும்பொழுதுதான் இதன் ஜனநாயகத் தன்மையும், இதன் நடைமுறையும் என்னை பொறுப்புமிக்கவனாகவும், மேலும் எளிமையானவனாகவும் உணரச் செய்யும் வகையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'I belong to the Dravidian stock', 'நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன்' என்ற இந்தக் குரல் எப்போதோ ஒலித்த குரல் அல்ல, எப்போதும் ஒலிக்கின்ற குரல் (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது என்னிடமிருந்து ஒலிக்கின்ற உரிமைக் குரல். திராவிடன் என்ற உணர்வை எங்களுக்கு ஊட்டிய தந்தை பெரியார், அந்த உணர்வை அரசியல் கொள்கையாக்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி, நாடாளுமன்ற. மாநிலங்களவையில் உரக்க முழங்கிய

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய குரல்; திராவிட இனத்தின், இயக்கத்தின் தனிப்பெரும் தலைவராக விளங்கி, இந்திய அரசியலுக்கே வழிகாட்டியாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய குரல்; (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞரின் தோழராக, அண்ணனாக இருந்து இன உணர்வையும், திராவிட இயக்கச் சிந்தனைகளையும் கடைக்கோடி கழகத் தொண்டர்கள் வரை சென்றடையச் செய்த என்னுடைய பேராசிரியர், தாத்தா அவர்களுடைய குரல்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் எண்ணற்ற திராவிட இயக்கத் தலைவர்களுக்கும், இந்த இயக்கத்தைக் கட்டிக் காத்த, காக்கின்ற தொண்டர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவருக்குத் தலைவராய், தொண்டனுக்குத் தொண்டனாய், மக்களில் ஒருவனாய் தமிழ்நாட்டை நோக்கி, ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தையும் திரும்பிப்பார்க்கச் செய்திருக்கும் நம்முடைய திராவிட Model அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பளித்து, எனக்காக தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்களுடைய மறைவிற்குப் பிறகு. கழகத் தலைவர் அவர்கள் நினைத்திருந்தால் என்றோ ஆட்சி அமைத்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஜனநாயக வழியில் மக்களைச் சந்தித்து, மக்களுடைய வாக்குகளைப் பெற்றுதான் ஆட்சி அமைக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் பொறுமை காத்தார்கள். அதேபோன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மறைந்தபோது, அண்ணா நினைவிடத்திற்கு அருகிலேயே தன்னுடைய நினைவிடமும் அமைய வேண்டும் என்ற கலைஞர் அவர்களுடைய கடைசி ஆசையை நிறைவேற்றவிடாமல் கடந்த அ.தி.மு.க. அரசு முட்டுக்கட்டை போட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதிருந்த அசாதாரண சூழ்நிலையை அருகிலிருந்து பார்த்த இலட்சக்கணக்கான தொண்டர்களில் நானும் ஒருவன். நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் அப்போது ஒரு சிறு கண் அசைவைக் காட்டியிருந்தால்கூட அன்று நிலைமை வேறு மாதிரி அமைந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நம் தலைவர் அவர்கள் பொறுப்புமிக்க அரசியல் தலைவராக, சட்டப் போராட்டம் நடத்தி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கடைசி ஆசையை, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொறுமையும், பொறுப்புணர்வும், உழைப்புமே அவரை இந்த இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உழைப்பில், அவருடைய பொறுப்புணர்வில் வெறும் 1 சதவிகிதம் பெற்றுவிட்டால்கூட போதும். நான்

மிகச் சிறந்த சட்டமன்ற உறுப்பினராகக் கண்டிப்பாக ஆகிவிடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடைக்கோடியில் இருக்கிற மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றாலும் சரி, ஒட்டுமொத்த மாநிலத்திற்கே ஒரு பிரச்சினை என்றாலும் சரி, அதற்காகக் குரல் கொடுத்து, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நாமக்கல் பகுதியைச் சேர்ந்த குழந்தை மித்ராவின் அறுவை சிகிச்சைக்கு ரூபாய் 16 கோடி தேவை என்பதை அறிந்ததும், அதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எல்லோரும் உதவ வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மருத்துவ சிகிச்சைக்கான GST வரியை இரத்து செய்ய வேண்டுமென்று ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில் பலரும் நிதி அளித்ததாலும், GST வரி இரத்து செய்யப்பட்டதாலும் தற்போது மித்ராவுக்கு அந்த மருந்து வழங்கப்பட்டு, சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய காலத்திலிருந்து திரு. அன்பில் தர்மலிங்கம் தாத்தா, திரு. அன்பில் பொய்யாமொழி மாமா, அவர்களுக்குப் பிறகு இன்று என்னுடைய நண்பனாக, தேர்தல் பணி, கழகப் பணி ஆகியவற்றில் என் தோளோடு தோளாக நிற்கும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியில், எனக்காகப் பணியாற்றிய மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், மாவட்ட கழகப் பொறுப்பாளர் சகோதரர் சிற்றரசு அவர்களுக்கும், பகுதி கழகச் செயலாளர் அண்ணன் காமராஜ் அவர்களுக்கும், அண்ணன் மதன் மோகன், வட்ட கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்திலுள்ள அத்தனை பேருக்கும் மற்றும் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, மக்கள் பணியாற்றி என்னுடைய பணியை எளிமையாக்கி வைத்திருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பெரியவர் ரகுமான்கான் அவர்கள், மதிப்பிற்குரிய அண்ணன் ஜெ. அன்பழகன் உள்ளிட்டோர்களை இந்தத் தருணத்தில் நான் நினைவுகூர்கிறேன்.

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் நான் வெறும் 4 நாட்கள்தான் பிரச்சாரம் செய்தேன். அப்படியிருந்தும் என்மீது முழு நம்பிக்கை வைத்து 69,355 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த (மேசையைத் தட்டும் ஒலி) என் தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமின்றி.

வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து உழைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு அறிவுறுத்தினார்கள். தேர்தல் வெற்றிக்குப் பிறகு தொகுதி மக்கள் காட்டும் அன்பும், பாசமும் அவர்களில் ஒருவனாகவே என்னை மாற்றிவிட்டது. அவர்களுடைய வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளையாகவே என்னிடம் அன்பை வெளிப்படுத்துகிறார்கள். நான் எப்போதும் அவர்களுக்காக தொடர்ந்து உழைப்பேன் என்று உறுதிமொழி கூறுகிறேன்.

இந்தப் பேரவையில், இங்கு படமாக நிற்கும் நம் கலைஞர் அவர்களின் வழியில், அவர்களது மறு உருவமாக நம் முதலமைச்சர் அவர்கள் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் காட்டிய வழியில் நம் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான அரசு, இந்த 100 நாட்களுக்குள்ளாகவே எண்ணற்ற சாதனைகளைச் செய்து முடித்துள்ளது. தேர்தல் அறிக்கையில் சொல்லாத விஷயங்களையும்கூட செய்து காட்டியுள்ளார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். கொரோனா நிவாரண நிதியாக குடும்ப அட்டைக்கு ரூ.4,000/– வழங்கும் திட்டம்: ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3/– குறைப்பு, மகளிருக்கு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணத் திட்டம்: மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகளுக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டம்; உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்களைக் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழு, மாநில வளர்ச்சிக் குழுவின் துணைத் தலைவராக பொருளாதார நிபுணர் திரு. ஜெயரஞ்சன் அவர்கள் நியமனம்; தனியார் மருத்துவமனைகளில் கொரோனாவுக்கு இலவச சிகிச்சைத் திட்டம், 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தை முதலமைச்சர் கண்காணிப்பிலேயே செயல்படுத்தியது; (மேசையைத்தட்டும் ஒலி) கொரோனா காலத்தில் பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டது; கொரோனாவால் பலியான மருத்துவத் துறையினர் குடும்பத்திற்கு தலா ரூ.25 இலட்சம் நிவாரணம், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் 14 வகையான பொருட்கள் கொரோனா கால நிவாரணமாக வழங்கப்பட்டது; மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. டெல்டா விவசாயிகளுடைய குறுவை சாகுபடிக்காக ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சில ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த அ.தி.மு.க. அரசே, ஜூன் 12 அன்று அணையைத் திறக்க வாய்ப்பில்லை என்று கையை விரித்த வரலாறுகள் பல உண்டு. ஆனால், நம்முடைய கழக அரசு டெல்டா விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டு, மேட்டூர் அணையை இந்த ஆண்டு ஜூன் 12 ஆம் தேதியன்றே உரிய நேரத்தில் திறந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

தென் சென்னைக்கென்று தனி உயர் சிறப்பு மருத்துவமனை அறிவிப்பு, மதுரையில் கலைஞர் நினைவு நூலகம், இலக்கிய மாமணி விருது, தகைசால் தமிழர் விருது அறிவிப்பு, தமிழ் எழுத்தாளர்களுக்கு இலவச வீடு

வழங்கும் திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் வளர்ந்த திருவாரூர் மாவட்டத்தில் உணவு தானிய சேமிப்புக் கிடங்கு. covid–19 தொற்றினால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் வைப்பு நிதி (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் அவர்களுடைய படிப்புச் செலவை அரசே முழுவதுமாக ஏற்கும் என்ற உத்தரவு, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடியவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் அத்தனையும் வாபஸ், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த அப்பாவி மக்களுடைய குடும்பத்தாருக்கு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை; பத்திரிகையாளர்கள்மீது அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வழக்குகள் வாபஸ்; Vision Tamil Nadu திட்டத்தின்மூலம் 20 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க ஏற்பாடு. 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி–தமிழ்நாடு' என்ற திட்டத்தின்மூலம் 28,664 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள், முக்கியமாக நாடெங்கும் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும்வண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சட்டப் போராட்டம் நடத்தப்பட்டு, OBC பிரிவினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை உறுதி செய்தது; (மேசையைத் தட்டும் ஒலி) கோயில் சொத்துகளை இணையத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை, நம்முடைய பிள்ளைகளின் மருத்துவராகும் கனவைச் சிதைக்கும் NEET தேர்வால் ஏற்படும் பாதிப்பை அறிய, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்களுடைய தலைமையில் சிறப்புக் கருத்துக் கேட்புக் குழு அமைத்தது; இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக நாட்டுக்கே முன்மாதிரியாக பெட்ரோல் மீதான மாநில அரசின் வரி லிட்டருக்கு ரூ.3/–ஐ குறைத்தது; (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் வகையில், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின வகுப்பினர் 58 பேரை அர்ச்சகராக நியமித்தது: (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி பல திட்டங்களை இந்த அரசு இந்த 100 நாட்களுக்குள்ளாகவே செயல்படுத்தி, மாநிலத்தின் நீடித்த, நிலைத்த வளர்ச்சிக்கு அடித்தளமிட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் தாக்கல் செய்துள்ள முதல் e–budget மாநிலத்தை வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்லவுள்ளது.

நம்முடைய கழக அரசு இந்த பட்ஜெட்டில் பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து 32,599.54 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த கொரோனா காலத்தில் கற்றல் இழப்பைத் தவிர்க்கவும், இளம் வயதிலேயே மாணவர்களுக்கு கணினித் திறனை அளிக்கவும், 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் ரூ.114.18 கோடி செலவில் உயர் ஆய்வகங்கள் அமைப்பது, 865 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.20.76

கோடி செலவில் smart வகுப்பறைகள் அமைப்பது, நம் மாணவ, மாணவியரின் எதிர்காலத்திற்கு மிகப் பெரிய அளவில் உதவிகரமாக அமையும். மேலும், இந்த அரசு தொலைநோக்குமிக்க அரசு என்பதை உணர்த்துகிற வகையில் 2025 ஆம் ஆண்டுக்குள் 8 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அந்தந்த வகுப்பளவில் படிக்கவும், எழுதவும் அடிப்படை கணக்குகளைச் செய்யவும் முடியும் என்பதை உறுதி செய்ய 66.70 கோடி ரூபாய் செலவில் 'எண்ணும் எழுத்தும் இயக்கம்' தொடங்கப்படுவது போற்றத்தக்கது.

மேலும், உயர் கல்வியைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏதோ பெயரளவிற்குச் செய்கிறோம் என்றில்லாமல், அவற்றின் தரத்தை உறுதி செய்ய தேசிய மதிப்பீடு மற்றும் தரச் சான்றுக் குழுவின் தர நிலையை எட்டுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பது, இந்த அரசு எதையும் வெறும் எண்களாக மட்டுமல்ல, செயலாகச் செய்கின்றது என்பதை உணர்த்துகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கொரோனா காலத்தில் இணை நோய்களுக்காக மருத்துவமனைகளுக்குச் செல்வது என்பது ஒரு சவாலாக உள்ளது. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டே சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சூழலில் அனைத்து மக்களையும் மனதில் வைத்து, 'மக்களைத் தேடி மருத்துவம்' என்னும் மகத்தான திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) 257.10 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள் நோயாளிகளின் வீட்டிற்கே சென்று மருத்துவம் அளிப்பதன்மூலம் தமிழ்நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு இன்னும் வலுவாகி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழும். விபத்தால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த 108 ஆம்புலன்ஸ் சேவையை இன்னும் அதிகப்படுத்தும் வகையில் 1,303 ஆம்புலன்ஸ் வாகனங்கள் கூடுதலாக இயக்கப்படும் என்ற அறிவிப்பு (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலன்மீது கழக அரசு கொண்டுள்ள அக்கறைக்குச் சாட்சியாகும்.

இன்றைய சூழலில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது மிகப் பெரிய விஷயமாக உள்ளது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்ய, திறன் பயிற்சி என்பது அவசியமானது என்பதன் அடிப்படையில் கழக அரசு ரூ.60 கோடி செலவில், 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் திறன் மேம்பாட்டு மையங்களை அமைக்கவுள்ளது வரவேற்கத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கே பெரும் நிறுவனங்கள் அஞ்சின. ஏனென்றால், அந்தளவுக்கு இலஞ்சமும், commission–னும் தலைவிரித்தாடின. இங்கு இலஞ்சம் கொடுத்த காரணத்தினால். ஒரு பெரிய நிறுவனம் அமெரிக்காவில் அபராதம் கட்டிய நிகழ்வு உங்களுக்கெல்லாம் தெரிந்ததே. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நமது அரசு முறைகேடுகள் ஏதுமின்றி புதிய தொழில்

தொடங்குவதற்கு ஏதுவாக ஒற்றைச் சாளர முறையைப் பின்பற்றவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் 2000–வது ஆண்டில் 'டைடல் பூங்கா' அமைத்தார். இந்நிலையில் நம்முடைய அரசு, நிலை 1 மற்றும் நிலை 2 ஆகிய நகரங்களில் மீண்டும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கவுள்ளது. இதன்மூலம் கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் அவரவர்களுக்கு அருகில் உள்ள நகரங்களில் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வாய்ப்பைப் பெறுவர். மேலும், வேலைவாய்ப்பு என்பது ஒற்றை நகரத்தில் குவியாமல், மாநிலமெங்கும் பரவலாகச் செய்யப்படும் என்பதும் வரவேற்கத்தக்கது. கடந்த பத்து ஆண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை மாநகரை மேம்படுத்த வேண்டுமென்ற எந்தத் திட்டத்தையும் அவர்கள் செயல்படுத்தவில்லை. இந்தச் சூழலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேயராக இருந்தபோது அறிமுகப்படுத்திய 'சிங்காரச் சென்னை திட்டம், இப்போது 'சிங்காரச் சென்னை 2.0 திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையை இது மிகவும் எழில்மிகு மாநகரமாக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமட்டுமின்றி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதன்முறையாக வேளாண் துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் இடம் பெற்றுள்ள ஒவ்வோர் அறிவிப்பும், திட்டமும் விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது என்று வேளாண் பெருங்குடி மக்களும், விவசாய இயக்கத்தினர்களும், நம் கழக அரசுக்குப் பாராட்டைத் தெரிவித்துள்ளார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சிறப்பான திட்டம். இந்நிலையில் அந்தத் திட்டம் இன்னும் ஆற்றலுடன் தொடர்வதற்கு ஏதுவாக வேளாண்பட்ஜெட்டில் ரூ.4,508.2 கோடி செலவில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கரும்புக்கான கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கரும்பு விவசாயிகள் பல ஆண்டுகளாக வலியுறுத்திவரும் நிலையில், அவர்களுடைய கோரிக்கையை ஏற்கும்வண்ணம், கழக அரசு கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூ.2,900/– ஆக உயர்த்தி வழங்கவிருப்பது வரவேற்கத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

பனை என்பது நம் பண்பாட்டில் பிரிக்க முடியாத ஒன்று. அந்தவகையில் பனைத் தொழிலை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக பனை வெல்லத்தை அரசு நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பனை மரங்களைப் பாதுகாக்கும் திட்டம் கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பும், பனை சார்ந்த தொழில்களை மேலும் ஊக்கப்படுத்தும்.

காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுவரும் இன்றைய சூழலில், மண்ணோடு இணைந்த இயற்கை விவசாயத்தை மீட்டெடுப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். அதற்காக நம்மாழ்வார் பெயரில் இயற்கை விவசாய ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கவுள்ளதை வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், நம்முடைய பாரம்பரிய நெல் விதைகளைக் காப்பாற்ற வேண்டிய தேவையும் இன்றைய சூழலில் உள்ளதை நம்முடைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. ஆகையினால்தான், தன் வாழ்நாளில் பாரம்பரிய நெல் விதைகளைப் பெருக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் தன்னை அர்ப்பணித்து மறைந்த திரு. நெல் ஜெயராமன் அவர்களுடைய பெயரில் பாரம்பரிய நெல் வகைகளைப் பாதுகாக்கும் இயக்கம் தொடங்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி விவசாயத்தை இலாபகரமான தொழிலாக்கவும். இளைஞர்களும். அடுத்த தலைமுறையினர்களும் விவசாயத்தை நோக்கி வருவதற்குத் தேவையான அறிவிப்புகள் வேளாண் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்நாடு முழுவதும் தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் மேற்கொண்டபோது, என்னிடம் சொல்லப்பட்ட மிக மிக முக்கியமான ஒரு விஷயம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தகுதியான பயனாளிகளை அடையாளம் கண்டு, முறையாக வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை. அ.தி.மு.க. ஆட்சியில் பலருக்கு நீக்கப்பட்டுள்ளது என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு இருந்தும் வருவாய் இன்றி, பிள்ளைகள் இருந்தும் கைவிடப்பட்ட நிலையில் தவிக்கும் முதியோர்களுக்கு மீண்டும் முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் தலையாய பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பது நீட் தேர்வு. தங்கை அனிதாவில் தொடங்கி 14 மாணவ, மாணவிகள் நீட் தேர்வால் தற்கொலை செய்துகொண்டனர். அவர்களுடைய பெயரை இங்கே நான் நினைவுகூர விரும்புகிறேன். தங்கை அனிதா தொடங்கி, செஞ்சி பிரதீபா, ஏஞ்சலின் ஸ்ருதி, திருச்சி சுபஸ்ரீ, அரியலூரைச் சேர்ந்த விக்னேஷ், கோவை சுபஸ்ரீ, திருச்செங்கோடு மோதிலால், தருமபுரி ஆதித்யா, மதுரை ஜோதிஸ்ரீ துர்கா, தேனி ரிதுஸ்ரீ, பட்டுக்கோட்டை வைசியா, பெரம்பலூர் கீர்த்தனா, நெல்லை தனலட்சுமி மற்றும் விழுப்புரம் மோனிசா என 14 மாணவ, மாணவியர்கள் நீட் தேர்வால் தற்கொலை செய்துகொண்டனர். உயிரிழந்த தங்கை அனிதா, ஆதித்யா, விக்னேஷ், மோதிலால், ஜோதிஸ்ரீதுர்கா ஆகியோரின் வீடுகளுக்கு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இன்றையமாண்புமிகுமுதலமைச்சர்அவர்களின் வழிகாட்டுதலின்படி, நானே நேரடியாகச் சென்று அந்த மாணவ, மாணவிகளுடைய பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தேன். பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்கள் என்னிடம் சொன்ன ஒரே விஷயம், 'நீட் தேர்வு

வேண்டாம்' என்பதுதான். முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலம்வரை வராத நீட் தேர்வு, மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா ஆட்சியின்போது வராத நீட் தேர்வு, கடந்த ஆட்சியில்தான் திணிக்கப்பட்டது. நீட் தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்று ஆரம்பம் முதலே நம்முடைய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். நீட் தேர்வை இரத்து செய்ய வலியுறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் நம்முடைய கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, கழக இளைஞரணியின் சார்பாக நானும், மாணவரணியின் சார்பாக, அதன் செயலாளர் அண்ணன் திரு. எழிலரசன் அவர்களும் பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தினோம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் எண்ணமும் நீட் தேர்வு வேண்டாம் என்பதுதான். மக்களின் இந்த உணர்வைப் பிரதிபலிக்கும் விதமாகத்தான் "நீட் தேர்வை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கழகத் தலைவரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி தந்திருந்தார்கள். தற்போது இதை மையப்படுத்தி, ஆட்சி அமைந்து 100 நாட்கள் ஆகிவிட்டனவே உங்கள் தேர்தல் வாக்குறுதி என்னவானது, என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றன. எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல; சில பத்திரிகைகளும், ஊடகங்களும் இதே கேள்வியைத்தான் எழுப்புகின்றன. இதற்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன்.

கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு நீட் தேர்வைத் தடுத்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் எதையும் கண்டுகொள்ளவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தின் நிருவாகச் சீர்கேட்டால் அரசு என்று ஒன்று இயங்குகின்றதா, இல்லையா என்றே தெரியாத நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்கள் போராட வலுவற்று சோர்வடைந்தனர். ஒட்டுமொத்த மாநிலமே மந்த நிலையில் இருந்தது. இதைப் பயன்படுத்தி கடந்த ஆட்சியாளர்கள் இன்னும் பல்வேறு முறைகேடான செயல்களில் ஈடுபட்டனர். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீட் ஒழிப்பின் முதல் படியாக ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் கருத்துக்கேட்புக் குழு ஒன்றை நியமித்து, அந்தக் குழு தமிழ்நாட்டு மக்களின் கருத்துகளைக் கேட்டறிந்துள்ளது. இப்படி பணிகள் சென்று கொண்டிருக்கும்போதே, நீட் தேர்வை ஏன் இரத்து செய்யவில்லை என்ற கேள்விகள் வருகின்றன. நீட் தேர்வு என்பது தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் பாதிக்கின்றது. இதில் கட்சி பேதமெல்லாம் எதுவும் கிடையாது. நீட் தேர்வால் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமல்ல. அ.இ.அ.தி.மு.க., பா.ம.க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஏன் பா.ஜ.க.–வினரின் வீட்டுப் பிள்ளைகளும்கூட பாதிக்கப்படுகின்றனர். கட்சி சாராத, நடுநிலையானவர்களின் வீட்டுப் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர். எனவே. நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, நீட் தேர்வை இரத்து செய்வதற்கான பணிகளை தயவுசெய்து மேற்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

நீட் தேர்வு இரத்து என்பதை ஓர் இயக்கமாக முன்னெடுக்க வேண்டுமென்று உங்கள் வாயிலாக அனைவரையும்

கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டதைப்போல, நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயணம் அறிவிக்கப்பட்டது. கலைஞர் தொலைக்காட்சி கொடுத்தார் என்று சொல்வார்கள். கலைஞர் டி.வி., கலைஞர் தொலைக்காட்சி என்று சொல்வார்கள். அதேமாதிரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் அறிவித்த பிறகு, இன்றைக்கு அனைவரும் நகரப் பேருந்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரைச் சொல்லி. அதாவது. 'ஸ்டாலின் பஸ்' என்றே கூப்பிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பற்றியெல்லாம் இங்கு யாரும் பேசவில்லை.

பெட்ரோல் விலையைக் குறைத்தது உள்ளிட்ட நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகளைப் பற்றி பேசாதவர்கள், நீட் தேர்வை மட்டும் குறி வைப்பது ஏன்? நீட் தேர்வு தவறானது என்பதை உணர்ந்துள்ள பத்திரிகைகளும், ஊடகங்களும் அவற்றின் உரிமையாளர்களும் நீட் தேர்வுக்கு எதிரான தங்களுடைய குரலைப் பதிவு செய்ய வேண்டுமென்று நான் உங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசை 'எனது அரசு' என்று சொல்லவில்லை. மாறாக 'நமது அரசு' என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நீட் தேர்வை ஒழிக்க குரல் கொடுப்போம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் உங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் இரண்டு கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். முதல் கோரிக்கை, நீட் ஒழிப்புப் போராளி, தங்கை அனிதாவின் பெயரை, அரியலூரில் கட்டப்பட்டுவரும் அரசு மருத்துவக் கல்லூரிக்குச் சூட்ட வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) தங்கை அனிதாவின் சகோதரர் மணிரத்தினம் உள்ளிட்ட அவர்களுடைய குடும்பத்தார் என்னிடம் வலியுறுத்தி வருகிறார்கள். அப்படி அனிதாவின் பெயரைச் சூட்ட வேண்டுமென்பது என்னுடைய விருப்பமும்கூட. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்புகிறேன். இரண்டாவது கோரிக்கை, நம்முடைய அரசு அமைந்ததும் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடியவர்கள்மீது கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு போட்டிருந்த அத்தனை உண்மைக்குப் புறம்பான வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. மேலும், நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த மாணவர்கள்மீது கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் பதியப்பட்ட அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்மீது வழக்கு இருக்கிறது, மாணவர் அணிமீது வழக்கு இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த அ.தி.மு.க. அரசு ஒருபுறம் மாநிலத்தைச்

சீரழித்தது என்றால், இன்னொருபுறம் ஒன்றிய அரசும் தமிழ்நாட்டை வஞ்சித்தது. 2014 மற்றும் 2019 மக்களவைத். தேர்தல்களில் பா.ஜ.க. அசுர பலத்துடன், அதாவது மிகப்பெரிய, பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது. அப்படியென்றால், அந்த அரசு எவ்வளவு பெருந்தன்மையாக நடந்துகொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அப்படி நடக்கிறதா என்றால், இல்லை என்பதுதான் நம் அனைவருடைய பதிலும். பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏழை மக்களுடைய வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோனது. இன்றுவரை அது சரியாகவில்லை. GST–ஐ அமல்படுத்தியதால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் விழுந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு ரூபாய் 15 ஆயிரத்து 475 கோடி அளவில் GST வரி பாக்கி ஒன்றிய அரசிடமிருந்து வரவேண்டியுள்ளது. இது இப்படி என்றால், நமது மாநிலத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட மதுரை AIIMS மருத்துவமனைக்காக ஒற்றை செங்கல் நட்டு வைத்ததோடு அப்படியே உள்ளது. (மணியடிக்கப்பெற்றது) இதனைப் பிரச்சாரத்தின்போது நான் சுட்டிக்காட்டிப் பேசியது உங்கள் அனைவருக்கும் தெரியும். இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டின் சாமானிய மக்களுக்கும் புரிந்திருக்கிறது. இன்று அதனால்தான் திருச்சியில் உள்ள செங்கல் சூளை ஒன்றிற்கு AIIMS Bricks என்று பெயர் வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) AIIMS பிரச்சினை இங்கு மட்டும் இல்லை. நாடு முழுவதும் இருக்கிறது என்பதற்கு பீகாரில் ஒரு பிரச்சினை உருவாகியிருக்கிறது. பிரச்சாரத்தின்போது AIIMS மதுரைக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் எப்படி ஒற்றைச் செங்கல்லை காட்டினேனோ. அதேபோல பீகாரிலும் அங்கு அறிவிக்கப்பட்ட AIIMS–ஐக் கட்டக்கோரி செங்கல்லைக் காண்பித்து பீகார் பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

கொரோனாவை அறிவியல்பூர்வமாகக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை எடுக்காமல், 'கையைத் தட்டுங்கள் மணி அடியுங்கள். விளக்கு ஏற்றுங்கள்' என மூட நம்பிக்கை வழியே அணுகியதன் காரணத்தினால்தான் கொரோனா பேரழிவு ஏற்பட்டது.

ஒன்றிய அரசு எதைச் சொன்னாலும், அதை அப்படியே பின்பற்றும் அடிமை அ.தி.மு.க.வினர் மணியடித்து, விளக்கேற்றி, கைதட்டியதன் விளைவே தமிழ்நாட்டில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வராமல் போனதற்குக் காரணமாக அமைந்தது.

அதுமட்டுமல்லாமல் ஒன்றிய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ள பாரம்பரியமிக்க நிறுவனங்கள் அனைத்தையும் தனியாருக்குத் தாரை வார்ப்பது தொடர்கிறது. விமான நிலையம், இரயில்வே, பெட்ரோலியம், ஏன் இராணுவத்தில்கூட தனியார் முதலீடுகளும், தனியார்மயமும் தொடர்கின்றன.

விமான நிலையம், இரயில்வே சேவையெல்லாம் தனியார்வசம் உள்ளதுபோல் ஒரு திரைப்படத்தில் நகைச்சுவைக் காட்சி

வைக்கப்பட்டிருக்கும். ஆனால், அந்த நகைச்சுவைக் காட்சியை இன்று நம் கண்முன்னே ஒன்றிய அரசு நடத்திக் காட்டிக்கொண்டிருக்கிறது. மத்திய, மாநில அரசுகள் இவ்வாறு செயல்பட்டதால் ஏற்பட்ட இழப்புகள் ஏராளம்.

குறிப்பாக, கொரோனா காலத்தில் மருத்துவர்கள் மரணத்தைக்கூட கடந்த அ.தி.மு.க. அரசு மறைத்தது. எனக்குக் கிடைத்த தகவலின்படி தமிழ்நாட்டில் 43 மருத்துவர்கள் கொரோனா நோயால் மறைந்தார்கள் என்று கடந்த 3-8-2020 அன்று நான் கூறியிருந்தேன். ஆனால் அதை ஏற்காத அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜய பாஸ்கர் அவர்கள், நான் வதந்தியைப் பரப்புவதாகவும் என்மீது வழக்குத் தொடரப்போவதாகவும் கூறினார்கள். ஆனால், கடைசிவரை எந்த வழக்கும் தொடரவே இல்லை. மேலும், நான் சொன்ன தகவல் உண்மை என்று இந்திய மருத்துவக் கூட்டமைப்பு அறிவித்தது. அதற்குப் பிறகு அப்போதைய அமைச்சர் அமைதியாகி விட்டார். கொரோனாவினால் உயிரிழந்த மருத்துவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதைத் தவிர்ப்பதற்காகவே அப்போதைய அரசு அப்படிச் செய்ததாக மருத்துவர்கள் குற்றஞ்சாட்டினர்.

ஆனால், தற்போது அமைந்துள்ள கழக ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொரோனாவில் பலியான மருத்துவர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 25 இலட்சம் நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல். கொரோனா காலத்தில் பொது மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறுகின்ற அறைக்கே, இந்தியாவிலேயே முதல் முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், PPE kit அணிந்து உள்ளே சென்றார்கள்.

குளறுபடிகளால் மாநிலத்தின் நிதி நிலைமை எந்த அளவில் சீர்குலைந்துள்ளது என்பதை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் வெளியிட்ட வெள்ளை அறிக்கை தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறது. ஒன்றிய அரசின்மீது எங்களுக்கு எந்தக் காழ்ப்புணர்வும் கிடையாது. அவர்கள் நல்லது செய்தால் ஏற்கவும், பாராட்டவும் நாங்கள் தயாராகவுள்ளோம். ஆனால், தவறு இழைக்கும்பட்சத்தில் முன்பைவிட, இன்னும் வேகமாக அதனைச் சுட்டிக்காட்டுவோம், விமர்சிப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களைக் கண்ணியமாகத்தான் நடந்துகொள்ளச் சொல்லியிருக்கிறாரே தவிர, அடிமையாக இருக்கச் சொல்லவில்லை என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கொரோனா இரண்டாவது அலையைக் கடந்துவிட்டோம். மூன்றாவது அலை எழுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. நம்முடைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு ஒரு செய்தியைச்

சொன்னார்கள். இதுவரைக்கும் தமிழ்நாட்டில் 2 கோடியே 70 இலட்சத்து 30 ஆயிரத்து 337 கோவிட் தடுப்பூசிகள் போடப்பட்டு இருக்கின்றன. அதில் சென்னை மாநகராட்சியில் மட்டும் 44 இலட்சத்து 51 ஆயிரத்து 728 தடுப்பூசிகள் போட்டிருக்கிறார்கள். இதில் என்னுடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் முதல் dose ஆக 85 ஆயிரத்து 108 தடுப்பூசிகளும் இரண்டாவது dose ஆக 32 ஆயிரத்து 394 தடுப்பூசிகளும் போடப்பட்டிருக்கின்றன.

இதற்கு முழுவதுமாக ஒத்துழைத்த, இதனைச் செயல்படுத்த உதவிய அண்ணன் மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றிய அரசிடமிருந்து போராடித்தான் நமக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெற்று மக்களுக்கு தடுப்பூசிகளைப் போடும் பணிகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இன்னொரு அலை நிச்சயம் வரக்கூடாது. அப்படி வந்தாலும் தற்காத்துக்கொள்ள பொது மக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். முக்கியமாக முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், கிருமிநாசினி, சோப்பின்மூலம் கையைச் சுத்தப்படுத்துதல் போன்ற அரசு காட்டிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் பொறுப்புடன் செயல்பட்டு மூன்றாவது அலையைத் தடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நூறு நாட்களாக என்னுடைய தொகுதியில் பல்வேறு இடங்களில் நான் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளேன். தொகுதி மக்களின் கருத்துகளை அறிந்தேன். அதன் அடிப்படையில் தொகுதியிலுள்ள பிரதான கோரிக்கைகளில் ஒரு சிலவற்றை இங்கே இந்த மாமன்றத்தின் முன்னே வைக்கின்றேன். எனது தொகுதியிலுள்ள கொய்யாதோப்பு, காக்ஸ் காலனி, நாவலர் நெடுஞ்செழியன் நகர், சிந்தாதிரிப்பேட்டை ஆகிய நான்கு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் பழுதடைந்த காரணத்தினால், அவற்றிற்குப் பதிலாக புதிய குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும் என்று தொகுதி மக்கள் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கைகளை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றோம். தற்போது நான்கு இடங்களிலும் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கியுள்ளன. இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும். இந்தப் பணிகளை ஒருங்கிணைக்கும் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த நான்கு குடிசை மாற்றுக் குடியிருப்பு வீடுகளுக்கும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெயர்களைச் சூட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும்

ஒலி) மேலும், இந்த நான்கு தலைவர்களின் பொது வாழ்வை விளக்கும் வண்ணம் அந்தக் குடியிருப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் தங்கள் வாயிலாக மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மாட்டான்குப்பம் பகுதியில் 800–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனி மின் இணைப்பு இல்லாமல் இருந்தனர். 40 ஆண்டு கால போராட்டம். பிறரிடம் மின் இணைப்பு பெற்று, அதிக மின் கட்டணம் செலுத்தி வந்துள்ளனர். கழக அரசு அமைந்த பிறகு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்றபிறகு மேற்சொன்ன வீடுகளுக்கு தனித் தனி மின் இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அயோத்திக்குப்பம், நடுக்குப்பம், மாட்டான் குப்பம் போன்ற பின்தங்கிய பகுதிகள் உள்ளன. இந்தப் பகுதிகளிலுள்ள பெண்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில், பெண்களுக்காக பெண்களே இயக்கும் பிரத்யேகக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை தங்கள் வாயிலாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசியாவிலேயே மிக நீளமான மெரினா கடற்கரையின் ஒரு பகுதி எனது தொகுதியில் உள்ளது. சென்னை 2.0 திட்டத்தின்கீழ். மெரினா கடற்கரையைத் தூய்மைப்படுத்தி, மேலும் அழகுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள சென்னை பள்ளிகள், அரசுப் பள்ளிகள் உள்ளன. அவற்றின் பல பள்ளிகளின் கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோரைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள கழிவுநீர்க் குழாய்கள் 70 ஆண்டுகளுக்கு முன்பு, அப்போதிருந்த மக்கள்தொகையைக் கணக்கில் கொண்டு அமைக்கப்பட்டவை. அதனால் அடிக்கடி கழிவுநீர்க் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, மக்கள் அவதிப்படுகின்றனர். இப்போதுள்ள மக்கள்தொகைக்கேற்ப அவற்றை மாற்றித் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இவை தவிர, மேலும் பல கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் எழுத்துபூர்வமாகச் சமர்ப்பிக்கின்றேன். அவற்றையும் நான் பேசியதாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஓர் எளியவனாக இந்தக் கோரிக்கைகளை தங்கள்முன் வைத்திருக்கின்றேன். இவை நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு முழுவதுமாக இருக்கிறது. இப்படித்தான் காட்சிக்கு எளியவரான ஒருவர் என் வயதினும் இளையவராக ஏறத்தாழ

65 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பேரவையில் தனது கன்னிப்பேச்சைத் தொடங்கினார். அது வெறும் பேச்சல்ல; விவசாயிகளுக்கான உரிமைக் குரல். (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குவளை என்னும் சிற்றூரில் பிறந்து, திருவாரூர் எனும் சிறு நகரத்தில் வளர்ந்து, திராவிடமே தனது இயக்கமாகவும் தமிழே தனது மூச்சாகவும் கொண்டு, இளம் வயதில் பொது வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு. மொழி காக்க சிறை சென்று, கலை, இலக்கியம், நாடகம், திரைப்படம் என அனைத்திலும் தனித்துவமான தமிழால் திராவிடக் கொள்கையை எடுத்துரைத்து, மக்களுடைய பேராதரவுடன் 1957 ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியில் வென்று முதன்முதலாக இந்தப் பேரவைக்குள் வந்த, அந்த எளிய மனிதர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 13 முறை தேர்தல் களத்தில் தோல்வியே காணாத வீரராக, சட்டமன்றத்தை 60 ஆண்டுகள் அலங்கரித்து சாதனை படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அதிக காலம் இந்த மாநிலத்தை ஆட்சி செய்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை வழங்கியவர். மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றியவர். அவரை இந்திய அரசியல் திரும்பிப் பார்த்தது. டெல்லி அவர் சொல் கேட்டது. 13 வயதில் தமிழ்க் கொடியை ஏந்திய அவரது கைகள், இந்திய சுதந்திரத்தின் 25 ஆம் ஆண்டு விழாவின்போது தேசிய கொடியை கோட்டை கொத்தளத்தில் ஏற்றின. இந்தியாவில் உள்ள அனைத்து முதல்வர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுத் தந்தவரும் அவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய சுதந்திரத்தின் 50 ஆம் ஆண்டு விழாவில் முதல்வராக அவர்தான் கோட்டையில் கொடியை ஏற்றினார். முத்தமிழறிஞர் கலைஞர் எனும் மகத்தான அந்தத் தலைவர் பெற்றுத் தந்த இந்த உரிமையை இந்திய சுதந்திரத்தின் 75–வது ஆண்டு விழாவில் கொடியேற்றி நிலைநாட்டினார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத் தலைவரின் அரை நூற்றாண்டு அரசியல் அனுபவத்திற்கு தமிழ்நாட்டின் மக்கள் தந்த வெகுமதிதான் முதலமைச்சர் எனும் அந்தப் பெரும் பொறுப்பு.

இந்திய ஒன்றியத்திலேயே 'முதல்வர்களின் முதல்வர்' என்ற பாராட்டு அவரது ஓயாத உழைப்புக்குக் கிடைத்த தனிச் சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) நான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய மடியில் தவழ்ந்தவன்; மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழியில் நடப்பவன்; என் தொகுதி மக்களின் உரிமைக்குக் குரல் கொடுப்பேன். தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கிட அயராது பாடுபடும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் துணையாக நின்று உழைப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று தங்கள் வாயிலாக உறுதியளிக்கிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சராக ஆற்றிய முதல் உரை 30–3–2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஜார்ஜ் கோட்டை இன்று தமிழ்நாட்டின் திராவிட கோட்டையாக உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெருமைமிகு தமிழ்நாடு சட்டப் பேரவை, பல வரலாற்று நிகழ்வுகளின் சாட்சி. மாநிலத்தின் வளர்ச்சிக்கான கருவறை. இத்தகைய மாமன்றத்தில் முதன்முறையாக வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறை அமைச்சராக மானியக் கோரிக்கை மீதான பதிலுரை வழங்குகிற வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டப் பேரவை தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கி, பிறகு அப்பகுதி மக்களின் நற்பெயரை பெறுகிற அளவிற்கு உழைப்பதற்கு உந்துதலாய் இருந்து, என்னை இந்த தாய்த் தமிழ்நாட்டிற்கு அமைச்சராக கடமையாற்றும் பெரும் பொறுப்பைத் தந்து, எந்நாளும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையைத் தொடங்கும் முன், தமிழ்நாட்டின் திசைவழியை மாற்றி, தமிழர்களை ஏற்றம்பெறச் செய்த திராவிட இயக்கத் தலைவர்களை இந்நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்கின்றேன். எல்லா கோட்டைகளும் அஸ்திவாரத்தின் மீது தான் கட்டப்படும். திராவிட இயக்கம் எனும் கோட்டை, ஒரு வலுவான அஸ்திவாரத்தின் மீதுதான் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. ஆனால், இந்த அஸ்திவாரம் செங்கற்களால் கட்டப்பட்டது அல்ல. இது ஈரோட்டுக் கைத்தடியால் கட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், எங்களின் அஸ்திவாரம் தந்தை பெரியார். இந்த நேரத்தில் தந்தை பெரியாரை நான் வணங்குகின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று சொற்களின் கொள்கை முழக்கத்தை தன் கோடானுகோடி தம்பிகளுக்கு தந்தவர் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரையும் நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அறிஞர் அண்ணாவை இந்த அவையில் இருந்து நம்மால் பார்க்க முடியவில்லையே என நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு ஓர் ஏக்கம் இருக்கும். ஆனால், கடந்த ஜனவரி மாதம் நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உருவில் பேரறிஞர் அண்ணா நம்மோடுதான் அமர்ந்திருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) "தமிழ்நாட்டின் பெயர் தமிழ்நாடு தான்" என்று நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் உரக்க உறுதிப்படுத்திக் காட்டியபோது, நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அவர்களின் உணர்வாக, உயிராக, மறு உருவமாக இந்த அவையில் நிறைந்திருந்தார், பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரையும் இந்த நேரத்தில் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'திராவிட மாடல்' என்றால் என்னவென்று புரியாமல் இன்னமும் பலர் பேசுகிறார்கள், விமர்சிக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இறுதி இலட்சியம் என்பது சமுதாயத் துறையில் சமத்துவம்–பகுத்தறிவு; பொருளாதாரத் துறையில் சமதர்மம்; அரசியலில் ஜனநாயகம் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். முத்தமிழறிஞரின் இந்தக் கருத்துதான் திராவிட மாடல் என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்கான அரிச்சுவடி. திராவிட மாடல் அரசின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை இந்த நேரத்தில் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெரியாரின் பேரன்பையும், அண்ணாவின் பிரியத்தையும், கலைஞரின் நட்பையும் பெற்று நம்முடைய கொள்கை தீபத்தை அணையாமல் ஏந்தி வந்து, அடுத்தடுத்த தலைமுறையிடம் கொண்டு வந்து சேர்த்த இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களையும் இந்த நேரத்தில் வணங்குகின்றேன்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின் ஆற்றும் முதல் உரை இது. இந்த நேரத்தில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், 1967 ஆம் ஆண்டு ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டதை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன்:

"எனக்குப் பொதுப் பணித் துறை ஒதுக்கப்பட்டிருக்கிறது; நாவலருக்கு கல்வித் துறை, மதியழகனுக்கு உணவுத் துறை, எந்தத் துறை ஒதுக்கப்பட்டாலும் அதை நாங்கள் சரிவர நிருவகிப்போம் என்ற தெம்பு ஏற்படக் காரணம், அண்ணாதுரைதான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துரையை நம்பித்தான் இந்தத் துறைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்," என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்ன அதே கருத்தை, இப்போது நான் மீண்டும் சொல்கின்றேன். நாங்கள் எல்லாம் எந்தத் துறை அமைச்சர்களாக இருந்தாலும், அத்தனைப் பேரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் என்னும் ஒற்றை ஆளுமையின் ஆற்றலில்தான் இந்தத் துறைகளை ஏற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டப் பேரவையின் அவை முன்னவர்–மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் மாமா அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சர் அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், அரசுத் தலைமை கொறடா அண்ணன் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேரவைச் செயலாளர், ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இங்கு அமைச்சராக இருக்கக் காரணம், என்னுடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி மக்கள்; அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில், 'உங்களுக்காக தொடர்ந்து உழைப்பேன்' என்று உறுதியளிக்கின்றேன்.

குறிப்பாக, கழகத்தின் வெற்றிக்காக எந்தவித எதிர்பார்ப்புமின்றி உழைத்த முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அத்தனைபேருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), தோழமைக் கட்சியினருக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர்–அன்பில் தர்மலிங்கம் தாத்தா, தலைவர்–பொய்யாமொழி மாமா, இந்த நட்புச் சங்கிலியை இன்னும் இறுக்கமாகப்பற்றி என்னுடன் எப்போதும் தோளோடு தோள் நிற்கும்

எனது நண்பன் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"I belong to the Dravidian Stock" என சட்டமன்ற உறுப்பினராக எனது கன்னிப்பேச்சை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி அன்று இதே அவையில் தொடங்கினேன். 'ஓர் அரசியல் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், அரசு நடவடிக்கைகளை ஒரு பார்வையாளனாக பார்த்த நான், சட்டமன்ற உறுப்பினராக, ஒரு பங்கேற்பாளனாக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றேன்' என அப்போது என்னுடைய உரையிலே குறிப்பிட்டிருந்தேன். அந்தப் பங்கேற்பின் அடர்த்தி என்பது, அமைச்சர் எனும் பொறுப்புடன் இன்னும் அதிகமாகியுள்ளது. இன்று "I am a representative of our Tamil Nadu Chief Minister's Dravidian Model of Government" என்று சொல்வதில் நான் பெருமை கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றதும், என்னுடைய முதல் கன்னிப்பேச்சில், 'நீட்' ஒழிப்பு போராளி தங்கை அனிதாவின் பெயர், அரியலூர் மருத்துவக் கல்லூரியில் ஒலிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன். எனது கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், அரியலூர் மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூட்ட அரங்கிற்கு "அனிதா நினைவு அரங்கம்" எனப் பெயர் சூட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அதனை நான் அமைச்சராகச் சென்று திறந்து வைக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக, உடனுக்குடன் செய்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், அரியலூர் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் உரிமைத் தொகை, இல்லம் தேடிக் கல்வி. மக்களைத் தேடி மருத்துவம், காலை சிற்றுண்டித் திட்டம் என இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் அளவில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஆற்றலாகவும், என்ஜினாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சகோதரிகள் உள்ளார்கள் என்று கூறுவதில் நான் பெருமைகொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதன்முதலாக

கையொப்பமிட்ட கோப்புகளில் மிக முக்கியமானது, நகரப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாப் பயணம் என்ற திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், கையொப்பமிட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி பெருமையாகக் கருதினார்களோ, அதேபோல், அமைச்சராக முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடர்பான மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கேற்றுப் பேசுவதில் நானும் பெருமைகொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், வரலாற்றிலேயே முதன்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கான அறிவிப்பு, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது.

அதன்படி 94 ஆயிரத்து 194 மகளிர் சுய உதவிக் குழுக்களின் 2 ஆயிரத்து 88 கோடியே 75 இலட்சம் ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வதற்கான சான்று இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளோருக்கும் கடன் தள்ளுபடிக்கான சான்று விரைவில் வழங்கப்படும் இதற்காக. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



"பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்" என்பதைக் கருத்தில் கொண்டு, பெண்கள் பொருளாதாரத்தில் சுயசார்பு பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு இயக்கம் உதயமாகி, இன்று, 'ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி' உயர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிற்கே முன்னுதாரணமாக இந்த சுய உதவிக் குழு இயக்கத்தின் வெற்றியானது, பிற மாநிலங்களையும் ஈர்த்து, அங்கும் சுய உதவிக் குழுக்கள் அமைய வழி வகுத்தது. 1996 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் மகளிர் திட்டம் என்ற ஓர் இயக்கம் தொடங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டு, தற்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்மூலம் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் வசிக்கும் ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம், ஒன்றிய மாநில நிதியுதவி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் என தற்போது நான்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களின் வாயிலாக, ஏழையெளிய மக்களின் வறுமையை நீக்க, எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மேற்கொண்டுள்ள செயல்பாடுகள், அவற்றில் அடைந்துள்ள இலக்குகள் மற்றும் சாதனைகள் குறித்த விவரங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை மட்டும் இந்த அவையில் உங்கள் முன் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊரக மற்றும் நகர்ப்புர மகளிரின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைய, அவர்கள் பொருளாதார சுய சார்பு பெற, மகளிரை குழுக்களாக இணைத்து, அவர்களுக்கு சுழல் நிதி, வங்கிக் கடன் இணைப்பு பெற்று, பல்வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைச் சந்தைப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

சென்ற கழக ஆட்சிக் காலத்தில், 2006 முதல் 2011 வரை 5 ஆண்டுகளில் 1 இலட்சத்து 75 ஆயிரத்து 484 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுக் கால முந்தைய ஆட்சியின்போது, 2 இலட்சத்து 36 ஆயிரத்து 607 சுய உதவிக் குழுக்கள் மட்டுமே உருவாக்கப்பட்டன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், அப்போதைய 5 ஆண்டுக் கால ஆட்சியின்போது, ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 35 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த பத்தாண்டுக் கால ஆட்சியில், ஆண்டு

ஒன்றிற்கான சராசரி 25 ஆயிரமாகக் குறைந்தது. மீண்டும் நமது ஆட்சி அமைந்தவுடன், இந்த இரண்டே ஆண்டுகளில், 86 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு மேல் அமைத்து சாதனை புரிந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது முந்தைய 10 ஆண்டுக் கால ஆட்சியினரின் ஓராண்டு சராசரியைவிட இரு மடங்கு அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் சுய உதவிக் குழுக்களின் நிதி ஆதாரத்தை மேம்படுத்தி, அவர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், தகுதியுள்ள குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் 90–க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற அரசு விழாக்களில் 100 மணி நேரத்திற்கும் மேலாக நின்று பல்லாயிரக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக் கடனுதவிகளை தனது பொற்கரங்களால் வழங்கினார்கள் என்பதை இந்த மன்றத்திலே நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியின்போது, சுய உதவிக் குழுக்களுக்கு 357 கோடியே 9 இலட்சம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டது. ஆனால், முந்தைய ஆட்சியினரின் பத்தாண்டு காலத்தில், இது 230 கோடியே 75 இலட்சம் ரூபாயாக குறைந்தது. மீண்டும், நமது ஆட்சி அமைந்தவுடன், இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், ஊரக மற்றும் நகர்ப்புரத்தைச் சேர்ந்த 70 ஆயிரத்து 879 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 87 கோடியே 37 இலட்சம் ரூபாய் சுழல் நிதி வழங்கி சாதனை புரிந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவையை ஈடு செய்திடவும், அவர்களின் சுய சார்பினை மேம்படுத்திடவும், குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தருவதில் நமது அரசு என்றுமே முன்னோடியாக விளங்குகின்றது. முந்தைய ஆட்சியினரின் 10 ஆண்டுகளில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 84 ஆயிரத்து 815 கோடி ரூபாய் மட்டுமே வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டது. கணக்கிற்காக எதையும் செய்பவர்களுக்கு மத்தியில், மக்கள் சிறக்க வேண்டும், மகளிர் செழிக்க வேண்டும் என திட்டங்களைத் தீட்டி செயல்படும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான ஆட்சியில், 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரை வங்கிக் கடன் இணைப்பு வழங்க நிர்ணயிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபாய் என்ற இலக்கையும் தாண்டி 46 ஆயிரத்து 414 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, அந்த இலக்கை அடைந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) சராசரியாக ஆண்டு ஒன்றிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம்முடைய ஆட்சியில், வங்கிக் கடன் இணைப்பாக 23 ஆயிரத்து 307 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை எங்கள் துறையின் சாதனையாக இந்த சபையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து, அதாவது மூன்று மாதங்களுக்குள்ளாகவே பல்வேறு மாவட்டங்களில் மகளிர் திட்டங்களின் செயல்பாடுகளைத் தொடர் ஆய்வு செய்ததன் பயனாக, 1 இலட்சத்து 78 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு. சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கியுள்ளேன் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னதான் வங்கிக் கணக்கிலிருந்து அந்தக் கடன் தொகையை எடுத்துக்கொள்ளலாம் என்றாலும், நான் செல்லும் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் ஆயிரக்கணக்கில் வருகை தந்து, அந்தத் தொகையை அன்போடு பெற்றுச் செல்லும் நம் மகளிரின் வாழ்த்தும், அவர்களின் தன்னிறைவான சிரிப்பொலியும், இன்னும் உழைப்பதற்கான பொறுப்பை நமக்கு உணர்த்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Community Investment Fund என்பது 6 மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரச் செயல்பாட்டிற்காக, ஒரு சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்சமாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின்மூலம் குறைந்த வட்டியில் கடனாக வழங்கப்படுகிறது. நமது ஆட்சி அமைந்த இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு, 483 கோடியே 92 இலட்சம் ரூபாய் அளவுக்கு Community Investment Fund வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியாளர்களின் 10 வருட காலத்தைவிட, இது 5 மடங்கு அதிகமாகும் என்பதைப் பெருமிதத்துடன் இம்மாமன்றத்தில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான கடன்கள், வங்கிகள்மூலம் வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களுடைய நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்யும்விதமாக பெருங்கடன்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின்மூலம் வழங்கப்படுகின்றது. இந்த அரசு அமைவதற்கு முன்பான, 10 ஆண்டுக்கால ஆட்சியில், 940 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.298 கோடியே 35 இலட்சம் ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டிருந்தது. ஆனால், நம்முடைய ஆட்சி வந்த பிறகு, தற்போது வரை 2 ஆயிரத்து 907 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 1,282 கோடியே 37 இலட்சம் ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது முந்தைய அரசு வழங்கிய சராசரி தொகையைவிட 20 மடங்கு அதிகமாகும் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்; பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த டிசம்பர் மாதம் 2022 ஆம் ஆண்டு. திருச்சிராப்பள்ளியில் பல்லாயிரக்கணக்கான மகளிர் கலந்து கொண்ட அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன், நானும் இணைந்து, ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 42,000 சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர்

பயன்பெறும் வகையில், 2 ஆயிரத்து 548 கோடியே 4 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கியுள்ளோம் என்பதை இங்கு தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் எக்காரணம் கொண்டும் முடங்கிவிடக் கூடாது என்பதற்காக, ஊரகப் பகுதிகளிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்தகால ஆட்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் தொகையாக 93 கோடியே 14 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், நமது அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5 இலட்சத்து 79 ஆயிரத்து 107 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியமாக 93 கோடியே 73 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட குழுக்களின் எண்ணிக்கை மற்றும் கடன் தொகைகளைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, முந்தைய ஆட்சியாளர்களின் பத்தாண்டு காலத்தில் செய்யப்பட்ட பணிகள், நம்முடைய கழக அரசு அமைந்ததும், இரண்டே ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டுள்ளதை நீங்கள் உணரலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில், கிராமப்புற மக்களின், குறிப்பாக பெண்களின் பங்கு மிகவும் முக்கியம். பல சுய உதவிக் குழு மகளிர், பண்ணை மற்றும் பண்ணை சாராத தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். நமது அரசு, பண்ணை சார்ந்த பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இதற்காக பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, அதன்மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், 11 ஆயிரத்து 597 உற்பத்தியாளர் குழுக்கள், 190 இயற்கை வேளாண் தொகுப்புகள், 171 ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள், கால்நடை வளர்ப்பிற்காக 250 ஏக்கர் பசுந்தாள் பயிர் சாகுபடி, வேளாண் மகளிர் பண்ணை வேலைகள் செய்வதை ஊக்குவிப்பதற்காக 736 கருவி வங்கிகள் (Tool Banks), 500 மகளிரைக் கொண்டு 94 காளான் வளர்ப்பு அலகுகள், 2 ஆயிரத்து 350 மகளிர் பயன்பெறும் வகையில் தேனீ வளர்ப்பு தொகுப்புகள் மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்ந்து காட்டுவோம் திட்டம், 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்டதுதான். வாழ்ந்து காட்டுவோம் 1.0 என்ற பெயரில்தான் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதன் பின்னர், 2011 ஆம் ஆண்டு முந்தைய அரசு இந்தத் திட்டத்தை புது வாழ்வுத் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்தது. எனவே, பெயர் மாற்றம் செய்தது நம்முடைய ஆட்சியில் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்தான் பெயர் மாற்றம் நடைபெற்றது,

2016 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தியது. இத்திட்டம் நிறைவடைந்த பின், 2017 ஆம் ஆண்டு உலக வங்கியுடன் இணைந்து, 910 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு புத்தாக்கத் திட்டம் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு 'மே' மாதம் வரை எந்தத் திட்ட நடவடிக்கையும் கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்படவில்லை. வெறும் Covid Assistance Package மட்டும்தான் வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு 'மே' மாதத்திற்குப் பிறகுதான் வாழ்ந்து காட்டுவோம் 2.0 திட்டக் கூறுகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டன.

இதுமட்டுமல்லாமல், 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின்மூலம் 5,000 உற்பத்தியாளர் குழுக்கள் தொடங்க 50 கோடி ரூபாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட 53 உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கு 7 கோடி ரூபாயும் தொடக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் மட்டுமல்லாமல், நகர்ப்புர பகுதிகளிலும் சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிரின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற, நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அனைத்து நகரவாசிகளுக்கும் முறைசாரா துறைகளில் தேவையான சேவைகளை வழங்குவதற்கும், நகர்ப்புர ஏழைகளின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தைப்படுத்துவதற்கும் தேவையான தகவல்களை வழங்கும் மையமாக நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் செயல்படுகின்றன. மேலும், இது ஓரிட வணிக மையமாகவும் (one-stop shop) செயல்படுகிறது. இதுவரை 80 நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் 8 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை நகர்ப்புரங்களில் விற்பனை செய்ய ஏதுவாக, மாவட்டத் தலைமையகங்களில் வணிக வளாகங்களை நிறுவி, அதற்கு 'பூமாலை வணிக வளாகம்' என்று பெயரிட்டார்கள். சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மையமாக இந்தப் பூமாலை வணிக வளாகங்கள் செயல்படுவதுடன், சந்தை நுண்ணறிவைப் பெறுவதற்கும் இம்மையங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த காலங்களில் பராமரிப்பின்றி இருந்த பூமாலை வணிக வளாகங்கள், நமது ஆட்சி அமைந்தவுடன், 29 மாவட்ட பூமாலை வணிக வளாகங்கள், 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் renovation செய்யப்பட்டு, புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, இக்கட்டடங்கள் அனைத்துக்கும் ஒரே மாதிரியான வண்ணம் பூசப்பட்டுள்ளது. மாநிலத்தில் எங்கு சென்றாலும் அந்தக் கட்டடத்தைப் பார்த்தாலே பூமாலை வணிக வளாகம் என Brand ஆக தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே மாதிரியான வண்ணம் பூசப்பட்டு, அவை தனித்துவமாக காட்சியளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்மூலம் இவ்வணிக வளாகங்களில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்வதற்கான அரங்குகளாக மாறி, தனித்துவமிக்க அடையாளத்தை சுய உதவிக் குழுக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சேகர் அவர்கள் பரமத்தி–வேலூர் தொகுதியில் உள்ள சுய உதவிக் குழுக் கட்டடம் பற்றி வெட்டுத் தீர்மானம் ஒன்றை அளித்துள்ளார். அந்தத் தொகுதியில் இரண்டு கட்டடப் பணிகள் தலா 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. இப்பணிகள், இந்தாண்டு அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டில், 124 கண்காட்சிகளில், 3 ஆயிரத்து 511 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று, 3 கோடியே 64 இலட்சம் ரூபாய் அளவிலான பொருட்களை விற்பனை செய்து பயனடைந்துள்ளன என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனை பரிவர்த்தனைகள் மின்னணுமயமாக்கப்படும். இதற்காக ஒரு மின்னணு வர்த்தக வலைதளம் (e–commerce online portal) வடிவமைக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்ற நல்ல செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் வீட்டுக்கே சென்று மருத்துவ வசதி வழங்கும் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற மகத்தான திட்டத்தில், நம்முடைய சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 8 ஆயிரத்து 713 மகளிர், கிராமப்புறங்களிலும், (மேசையைத் தட்டும் ஒலி) 2 ஆயிரத்து 256 மகளிர், நகர்ப்புரங்களிலும் ஆக மொத்தம் சுமார் 11 ஆயிரம் பேர், மகளிர் சுகாதார தன்னார்வலர்களாக (Women Health Volunteers) தங்களது உன்னதப் பணியைச் சிறப்புடன் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டமானது. 16 மாவட்டங்களில் உள்ள 17 வட்டாரங்களுக்குட்பட்ட கிராமப்புறங்களிலுள்ள 963 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சுவையான, தரமான காலை உணவை வழங்குவதன்மூலம் அவர்களின் கல்வி மற்றும் உடல்நலம் பேணிக்காக்கப்படுவதோடு, சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதாரமும் மேம்பாடு அடையும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் தாய்மார்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களில் இடம்பெற்றிருந்தால், கிராம அளவிலான மையக் குழுவால், அவர்கள் தேர்வு செய்யப்பட்டு, உரிய சமையல் பயிற்சிகள்

வழங்கப்பட்டு, அவர்களைக் கொண்டு, சம்பந்தப்பட்ட பள்ளியிலேயே காலை உணவு தயாரிக்கப்பட்டு, சூடாகவும், சுவையாகவும் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

நான் எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றாலும், காலையில் tiffin சாப்பிடுவது இந்த காலை உணவுத் திட்டத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காலை உணவுத் திட்டத்தில் நானும் ஒரு பயனாளி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 30 ஆயிரத்து 122 பள்ளிகளில் பயிலும் சுமார் 18 இலட்சம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதை உறுதி செய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறன் பயிற்சி என்பது மிகவும் அவசியமான ஒன்று. திறன் பயிற்சி, கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி, வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இதற்காக பல்வேறு திட்டங்களை நமது துறையின் மூலமாகச் செயல்படுத்தி வருகிறோம். திறன் பயிற்சிமூலம் ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்பை உறுதி செய்ய தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம், சுய வேலைவாய்ப்பை ஊக்குவிக்க ஊரக சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களின் வேலைவாய்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நம்முடைய தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. சின்னதுரை அவர்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், வேலைவாய்ப்புத் திட்டங்கள் தொடர்பாக அளித்துள்ள வெட்டுத் தீர்மானத்துக்கு பதிலளிக்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீட்டித்தந்த திட்டங்களால், இந்திய ஒன்றியத்திலேயே தமிழ்நாடு வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், நம்பர் 1 மாநிலம் எனும் நிலையிலும் உயர்ந்து நிற்கிறது.(மேசையைத் தட்டும் ஒலி) எனினும், துளியும் வறுமை நிலைமை இல்லையென்ற நிலையை உறுதிப்படுத்தவும், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கடைசி மனிதனை மீட்டு கரை சேர்க்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாகவே இந்தத் திட்டங்கள் காலத்துக்கு ஏற்ப தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக நம் மாநில மகளிர் அனைவரும் சுயசார்புடன் செயல்படுவதை உறுதி செய்ய இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இளைஞர் ஆற்றல் அதிகம் கொண்ட நம் மாநிலத்தில், வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன் குழுமங்கள் மற்றும் திறன் தொழில் பிரிவுகளில் பணிபுரிவதற்கான தங்களது திறன்களை மேம்படுத்திக்கொள்ள போதிய விழிப்புணர்வு அவசியமாகிறது.

இதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து வட்டாரங்களிலும், இளைஞர் திறன் திருவிழா நடத்திட அறிவித்தது மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே முதன்முறையாக சென்னையில் நடந்த இத்திருவிழாவில் நேரடியாகக் கலந்துகொண்டு, இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திட எங்களுக்கு எல்லாம் ஊக்கம் அளித்தார்கள்.

பல சாதனைகளைப் படைத்து வரும் சுய உதவிக் குழுக்களுக்கு அங்கீகாரம் அளிப்பதுபோல், 2006 ஆம் ஆண்டு முதல் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவை சார்ந்த அமைப்புகளுக்கு 'மணிமேகலை விருதுகளை' அறிவித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சுய உதவிக் குழுக்களைச் சிறப்பித்தார்கள். இதன்மூலம், சுய உதவிக் குழுக்களின் இயக்கத்திற்கு ஊக்கமும், உத்வேகமும் அளிக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் மென்மேலும் ஓங்கி உயர வழிவகுக்கப்பட்டது.

ஆனால், முந்தைய ஆட்சியாளர்களால் 10 வருட காலமாக இது நிறுத்தப்பட்டு, இவ்விருதுகள் வழங்கப்படவில்லை. மீண்டும் நமது ஆட்சி பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மணிமேகலை விருதுகள் மீண்டும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 2021–2022 ஆம் ஆண்டிற்கான விருதுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அவருடைய திருக்கரங்களால் திருச்சியில் நடந்த மாபெரும் அரசு விழாவில் சுமார் 20 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில், 33 அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதியாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 30 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பை, 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்படி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் அறிவித்துள்ளதற்கு என் சார்பாகவும், எனது துறையின் சார்பாகவும், இலட்சக்கணக்கான சுய உதவிக் குழுக்களின் மகளிர் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில், இலக்கைவிட அதிகமாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், நம்முடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தக் கடன் இணைப்பு அனைத்தையும், அவர் கடன்

தொகையாக பார்க்கவில்லை. மாறாக சுய உதவிக் குழு சகோதரிகளின் உழைப்பின்மீது வைத்துள்ள நம்பிக்கைத் தொகையாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னைப் பார்க்க வரும் நண்பர்களிடம், அவர்கள் தரும் பரிசுப் பொருட்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களாகத்தான் இருக்க வேண்டுமென்று அன்புக் கட்டளையிட்டுள்ளேன். அதை இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் தரமானவை, அழகானவை மற்றும் பாரம்பரியமானவை. எனவே, நீங்கள் ஒவ்வொருவரும், பிறருக்கு பரிசளிக்கும்போதோ அல்லது உங்களுக்கு மற்றவர் பரிசளிக்கும்போதோ தயவுசெய்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை மட்டுமே பரிசளிக்க வேண்டும் என்று நீங்கள் ஒரு கோரிக்கை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது மகளிர் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களைப் பிரபலப்படுத்துவதற்கு வழிவகை செய்யும்.

இந்தப் பேரவையில், இன்றையதினம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிரியதர்சினி மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகள் தயாரித்த மஞ்சப்பையினை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் துறையின் சார்பாக வழங்கியுள்ளோம்.

மேலும், சில மகளிர் சுய உதவிக் குழு தயாரிப்புப் பொருட்களை உங்களுக்கு இன்றையதினம் வழங்கவுள்ளோம். அனைவரும் அந்தப் பொருட்களை அவை முடிந்ததும் நூலகப் பிரிவு வளாகத்தில் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் தொடர்பாகவும், அவற்றை மேம்படுத்தவும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கும் ஆலோசனைகளுக்குச் செவிசாய்த்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் தயாராகவுள்ளோம் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறு ஆண்டு கண்ட இந்த மாமன்றத்தில், எனது கருத்துகளையும், என் துறை சார்ந்த செயல்பாடுகளையும் அமைச்சராக முதன்முறையாக இம்மாமன்றத்தில் இந்த மாணியக் கோரிக்கையில் பதிலுரையாக வழங்குவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மிகுந்த அறிவும், அனுபவமும் வாய்ந்த மூத்த அமைச்சர்கள், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் வழிகாட்டுதலும் நான் அமைச்சராக எனது பணியினைச் சிறப்பாகச் செய்திட மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். கள ஆய்வு செய்வது மட்டுமல்லாமல், ஏதேனும் பணிகளில் தொய்வு ஏற்பட்டால், அங்கேயே, immediate action எடுக்கின்றார்கள்.

நானும் கடந்த மூன்று மாதங்களில் திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தஞ்சாவூர், திருவாரூர், கரூர் உள்ளிட்ட பல மாவட்டங்களுக்குச் சென்று அமைச்சர் என்ற முறையில் மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களோடு, மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியுள்ளேன். என்னென்ன திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன அவை எந்த நிலையில் உள்ளன என ஆய்வு செய்கிறோம். அதில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களோடு கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில், அவையில் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு கோரிக்கை வைக்கின்றேன். தயவுசெய்து அந்தக் கூட்டங்களுக்கு முறையாக அழைப்பு வைக்கப்படும்போது, நீங்கள் அத்தனைபேரும், கலந்துகொள்ள வேண்டுமென்றும், மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும், அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும் நீங்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் ஒன்றாக சேர்ந்து மக்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குங்கள் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்; ஒற்றுமையில் மகளிர் வளர்ச்சியைக் காண்போம்; மகளிரின் வளர்ச்சியில் மனநிறைவை அடைவோம்; மகளிரின் மனநிறைவே நமது அரசின் வெற்றி என்பதை ஓங்கிச் சொல்வோம்" என்றுரைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது துறை சார்பாக, எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ். திவ்யதர்ஷினி, I.A.S. அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் பிரியங்கா, I.A.S. மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயலாக்க அலுவலர் பத்மஜா, I.A.S.

அவர்களுக்கும், துறைசார்ந்த அனைத்து உயர் அலுவலர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும் என அன்போடு கேட்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நிகழ்வு.



வரவு–செலவுத் திட்டம் – மானியக் கோரிக்கைகள்மீது விவாதம்

பேரவை	நாள்	வரவு–செலவுத் திட்டம் அளித்தவர்	பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்	பொது விவாதம் நடைபெற்ற தேதிகள்	மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்	விவாத காலம்
1	27–6–1952	திரு. சி. சுப்பிரமணியம்	5	ஜூலை 4, 5, 7, 9 மற்றும் 10	14	ஜூலை 12 முதல் 28 வரை
	14–3–1953	"	5	மார்ச் 17, 18, 19, 20 மற்றும் 21	2	மார்ச் 23 மற்றும் 24
	14–12–1953	"	3	டிசம்பர் 17, 18 மற்றும் 19	4	டிசம்பர் 21 முதல் 24 வரை
	26–2–1954	"	5	மார்ச் 1, 2, 4, 5 மற்றும் 6	13	மார்ச் 12 முதல் 26 வரை
	26–2–1955	"	6	பிப்ரவரி 28, மார்ச் 1, 2, 3, 4 மற்றும் 5	15	மார்ச் 7 முதல் 23 வரை
	27–2–1956	"	5	பிப்ரவரி 28, 29, மார்ச் 1, 2 மற்றும் 3	16	மார்ச் 5 முதல் 23 வரை
	17–12–1956 (இடைக்கால வ.செ.தி.)	"	2	டிசம்பர் 18 மற்றும் 19	2	டிசம்பர் 21 மற்றும் 22
2	29–6–1957	"	5	ஜூலை 1, 2, 3, 4 மற்றும் 5	15	ஜூலை 6 முதல் 24 வரை

	1-3-1958	"	6	மார்ச் 3, 4, 5, 6, 7 மற்றும் 8	16	மார்ச் 17 முதல் ஏப்ரல் 8 வரை
	2-3-1959	"	6	மார்ச் 3, 4, 5, 6, 9 மற்றும் 10	15	மார்ச் 11 முதல் 28 வரை
	10-3-1960	"	6	மார்ச் 11, 12, 14, 15, 16 மற்றும் 17	17	மார்ச் 18 முதல் ஏப்ரல் 29 வரை
	25-2-1961	"	6	மார்ச் 2, 3, 4, 6, 7 மற்றும் 8	16	மார்ச் 8 முதல் 27 வரை
	9-12-1961 (இடைக்கால வ.செ.தி.)	"	3	டிசம்பர் 11, 12 மற்றும் 13	1	டிசம்பர் 14
3	30-6-1962	திரு. எம். பக்தவத்சலம்	6	ஜூலை 2, 3, 4, 5, 6 மற்றும் 7	17	ஜூலை 9 முதல் 27 வரை
	1-3-1963	"	6	மார்ச் 2, 4, 5, 6, 7 மற்றும் 8	16	மார்ச் 9 முதல் 28 வரை
	29-2-1964	"	6	மார்ச் 2, 3, 4, 5, 6 மற்றும் 7	16	மார்ச் 9 முதல் 26 வரை
	1-3-1965	"	6	மார்ச் 2, 3, 4, 5, 6 மற்றும் 8	17	மார்ச் 9 முதல் 27 வரை
	26-2-1966	"	6	பிப்ரவரி 28, மார்ச் 1, 2, 3, 4 மற்றும் 5	17	மார்ச் 7 முதல் 26 வரை
4	20-3-1967	திரு. சி.என். அண்ணாதுரை	1	மார்ச் 21	1	மார்ச் 23

	17-6-1967	"	7	ஜூன் 19, 20, 22, 23, 24, 26 மற்றும் 27	15	ஜூன் 28 முதல் ஜூலை 14 வரை
	28-2-1968	"	6	பிப்ரவரி 29, மார்ச் 1, 2, 4, 5 மற்றும் 6	16	மார்ச் 7 முதல் 26 வரை
	1-3-1969	திரு. கே.ஏ. மதியழகன்	6	மார்ச் 3, 4, 5, 6, 7 மற்றும் 8	14	மார்ச் 10 முதல் 26 வரை
	26-2-1970	"	7	பிப்ரவரி 28, மார்ச் 2, 3, 4, 5, 6 மற்றும் 7	19	மார்ச் 10 முதல் ஏப்ரல் 3 வரை
5	25-3-1971	திரு. மு. கருணாநிதி	2	மார்ச் 26 மற்றும் 29	1	மார்ச் 29
	19-6-1971	"	7	ஜூன் 21, 22, 23, 24, 25, 26 மற்றும் 29	21	ஜூன் 30 முதல் ஜூலை 27 வரை
	1-3-1972	"	7	மார்ச் 3, 4, 6, 7, 8, 9 மற்றும் 10	14	மார்ச் 11 முதல் 28 வரை
	26-2-1973	"	7	பிப்ரவரி 28, மார்ச் 1, 2, 3, 5, 6 மற்றும் 7	17	மார்ச் 8 முதல் 27 வரை
	4-3-1974	"	7	மார்ச் 6, 7, 8, 11, 12, 13 மற்றும் 14	19	மார்ச் 15 முதல் ஏப்ரல் 8 வரை
	1-3-1975 (இடைக்கால வ.செ.தி.)	"	7	மார்ச் 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 10	25	மார்ச் 11 முதல் ஏப்ரல் 10 வரை
6	25-7-1977	திரு. நாஞ்சில் கி. மனோகரன்	7	ஜூலை 27, 28, 29, 30, ஆகஸ்ட் 1, 2 மற்றும் 3	17	ஆகஸ்ட் 4 முதல் 24 வரை
	20-2-1978	"	8	பிப்ரவரி 22, 23, 24, 25, 27, 28, மார்ச் 1 மற்றும் 2	23	மார்ச் 2 முதல் 29 வரை

	3-3-1979	"	8	மார்ச் 5, 7, 8, 19, 20, 21, 22 மற்றும் 23	22	மார்ச் 23 முதல் ஏப்ரல் 23 வரை
7	2-7-1980	டாக்டர் இரா. நெடுஞ்செழியன்	5	ஜூலை 4, 5, 7, 8 மற்றும் 9	17	ஜூலை 10 முதல் 29 வரை
	21-3-1981	"	7	மார்ச் 23, 24, 25, 26, 27, 28 மற்றும் 30	25	மார்ச் 31 முதல் மே 9 வரை
	26-2-1982	"	7	மார்ச் 1, 2, 3, 4, 5, 6 மற்றும் 8	18	மார்ச் 8 முதல் 29 வரை
	5-3-1983	"	6	மார்ச் 8, 9, 10, 11, 12 மற்றும் 14	28	மார்ச் 15 முதல் ஏப்ரல் 20 வரை
	3-3-1984	"	6	மார்ச் 8, 9, 10, 12, 13 மற்றும் 14	25	மார்ச் 15 முதல் ஏப்ரல் 26 வரை
8	26-3-1985	"	7	மார்ச் 28, 29, 30, ஏப்ரல் 1, 2, 4 மற்றும் 8	29	ஏப்ரல் 9 முதல் ஜூலை 12 வரை
	17-3-1986	"	8	மார்ச் 19, 20, 21, 24, 25, 26, 27 மற்றும் 31	25	ஏப்ரல் 1 முதல் மே 8 வரை
	20-3-1987	"	7	மார்ச் 23, 24, 25, 26, 27, 28 மற்றும் 31	24	ஏப்ரல் 1 முதல் மே 7 வரை
9	25-3-1989	திரு. மு. கருணாநிதி	7	மார்ச் 27, 28, 29, 30, 31, ஏப்ரல் 1 மற்றும் 3	21	ஏப்ரல 4 முதல் மே 4 வரை
	17-3-1990	"	7	மார்ச் 19, 20, 21, 22, 23, 24 மற்றும் 28	24	மார்ச் 31 முதல் மே 5 வரை
10	4-9-1991	டாக்டர் இரா. நெடுஞ்செழியன்	5	செப்டம்பர் 6, 7, 9, 10 மற்றும் 11	12	செப்டம்பர் 13 முதல் 27 வரை

	6-3-1992	"	6	மார்ச் 9, 10, 11, 12, 13 மற்றும் 16	22	மார்ச் 17 முதல் ஏப்ரல் 23 வரை
	12-3-1993	"	6	மார்ச் 15, 16, 17, 18, 19 மற்றும் 22	21	மார்ச் 22 முதல் ஏப்ரல் 27 வரை
	23-3-1994	"	5	மார்ச் 25, 28, 29, 30 மற்றும் 31	19	ஏப்ரல் 4 முதல் மே 2 வரை
	22-3-1995	"	6	மார்ச் 24, 27, 28, 29, 30 மற்றும் 31	19	ஏப்ரல் 3 முதல் மே 5 வரை
	20-2-1996	"	4	பிப்ரவரி 22, 23, 26 மற்றும் 27	–	–
11	17-7-1996	திரு. மு. கருணாநிதி	6	ஜூலை 19, 20, 22, 23, 24 மற்றும் 25	25	ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 27 வரை
	5-3-1997	"	6	மார்ச் 7, 10, 11, 12, 13 மற்றும் 14	25	மார்ச் 15 முதல் ஏப்ரல் 26 வரை
	27-3-1998	"	6	மார்ச் 30, 31, ஏப்ரல் 1, 2, 3 மற்றும் 6	28	ஏப்ரல் 7 முதல் மே 27 வரை
	17-3-1999	"	6	மார்ச் 20, 22, 23, 25, 26 மற்றும் 27	28	மார்ச் 31 முதல் மே 13 வரை
	24-3-2000	"	7	மார்ச் 27, 28, 29, 30, 31, ஏப்ரல் 3 மற்றும் 4	25	ஏப்ரல் 6 முதல் மே 16 வரை
	29-1-2001	"	4	ஜனவரி 30, 31, பிப்ரவரி 1 மற்றும் 2	–	–

12	18–8–2001	திரு. சி. பொன்னையன்	5	ஆகஸ்ட் 20, 21, 23, 24 மற்றும் 25	16	ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 13 வரை
	27–3–2002	"	7	ஏப்ரல் 1, 2, 3, 4, 5, 8 மற்றும் 9	20	ஏப்ரல் 9 முதல் மே 8 வரை
	21–3–2003	"	7	மார்ச் 24, 25, 26, 27, 28, 31 மற்றும் ஏப்ரல் 1	20	ஏப்ரல் 3 முதல் மே 9 வரை
	11–2–2004	"	1	ஜூலை 23	6	ஜூலை 26 முதல் 31 வரை
	2–3–2005	"	6	மார்ச் 4, 7, 8, 9, 10 மற்றும் 11	21	மார்ச் 14 முதல் ஏப்ரல் 12 வரை
	20–1–2006	"	4	ஜனவரி 21, 23, 24 மற்றும் 25	–	–
13	22–7–2006	பேராசிரியர் க. அன்பழகன்	6	ஜூலை 24, 25, 26, 27, 28 மற்றும் 31	23	ஆகஸ்ட் 1 முதல் செப்டம்பர் 1 வரை
	23–3–2007	"	5	மார்ச் 26, 27, 28, 29 மற்றும் 30	26	ஏப்ரல் 2 முதல் மே 9 வரை
	20–3–2008	"	6	மார்ச் 26, 27, 28, 31, ஏப்ரல் 1 மற்றும் 2	25	ஏப்ரல் 3 முதல் மே 14 வரை
	17–2–2009	"	5	பிப்ரவரி 19, 20, 23, 24 மற்றும் 25	25	ஜூன் 17 முதல் ஜூலை 21 வரை
	19–3–2010	"	5	ஏப்ரல் 5, 6, 7, 8 மற்றும் 9	24	ஏப்ரல் 12 முதல் மே 14 வரை
	5–2–2011 (இடைக்கால வ.செ.தி)	"	5	பிப்ரவரி 5,7,8,9 மற்றும் 10	–	–
14	4–8–2011	திரு. ஓ. பன்னீர்செல்வம்	5	ஆகஸ்ட் 8, 9, 10, 11 மற்றும் 12	19	ஆகஸ்ட் 16 முதல் செப்டம்பர் 14 வரை

	26-3-2012	திரு. ஓ. பன்னீர்செல்வம்	5	மார்ச் 28, 29, 30, ஏப்ரல் 3 மற்றும் 4	24	ஏப்ரல் 9 முதல் மே 15 வரை
	21-3-2013	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	மார்ச் 25, 26, 27 மற்றும் 28	29	ஏப்ரல் 1 முதல் மே 15 வரை
	13-2-2014	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	பிப்ரவரி 17, 18, 19 மற்றும் 20	22	ஜூலை 10 முதல் ஆகஸ்ட் 12 வரை
	25-3-2015	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	மார்ச் 27, 30, 31 மற்றும் ஏப்ரல் 1	18	ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 29 வரை
	16-2-2016	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	பிப்ரவரி 17, 18, 19 மற்றும் 20	–	–
15	21-7-2016	திரு. ஓ. பன்னீர்செல்வம்	5	ஜூலை 25, 26, 27, 28 மற்றும் 29	22	ஆகஸ்ட் 1 முதல் செப்டம்பர் 2 வரை
	16-3-2017	திரு. டி. ஜெயக்குமார்	5	மார்ச் 20, 21, 22, 23 மற்றும் 24	24	ஜூன் 14 முதல் ஜூலை 19 வரை
	15-3-2018	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	மார்ச் 19, 20, 21 மற்றும் 22	23	மே 29 முதல் ஜூலை 9 வரை
	8-2-2019	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	பிப்ரவரி 11, 12, 13 மற்றும் 14	16	ஜூலை 1 முதல் 20 வரை
	14-2-2020	திரு. ஓ. பன்னீர்செல்வம்	4	பிப்ரவரி 17, 18, 19 மற்றும் 20	11	மார்ச் 11 முதல் 24 வரை
	23-2-2021	திரு. ஓ. பன்னீர்செல்வம்	3	பிப்ரவரி 25, 26 மற்றும் 27	–	–

16	13-8-2021 (நிதிநிலை)	முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	4	ஆகஸ்ட் 16, 17, 18 மற்றும் 19	16	ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 13 வரை
	14-8-2021 (வேளாண் நிதிநிலை)	திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்				
	18-3-2022 (நிதிநிலை)	முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	4	மார்ச் 21, 22, 23 மற்றும் 24	22	ஏப்ரல் 6 முதல் மே 10 வரை
	19-3-2022 (வேளாண் நிதிநிலை)	திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்				
	20-3-2023 (நிதிநிலை)	முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	4	மார்ச் 23, 24, 27 மற்றும் 28	15	மார்ச் 29 முதல் ஏப்ரல் 21 வரை
	21-3-2023 (வேளாண் நிதிநிலை	திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்				
	19-2-2024 (நிதிநிலை)	திரு. தங்கம் தென்னரசு	2	பிப்ரவரி 21 மற்றும் 22	8	ஜூன் 21 முதல் ஜூன் 29 வரை
	20-2-2024 (வேளாண் நிதிநிலை)	திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்				

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

டிஜிட்டல் தமிழ்நாடு சட்டமன்றம்

காகிதமில்லா சட்டமன்றம் (Paperless Assembly)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயல்பாடுகளை முழுவதுமாக "காகிதமில்லா சட்டமன்றமாக" மாற்றிடும் வகையில் தொடர்ந்து எடுத்து வந்த நடவடிக்கைகளின் பயனாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதல் முறையாக 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் முதன்முறையாக சமர்ப்பிக்கப்பட்ட வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை முறையே 13–8–2021 மற்றும் 14–8–2021 ஆகிய தேதிகளில் **இ–பட்ஜெட் (e–Budget) மின் நிதிநிலை அறிக்கைகளாக** பேரவைக்கு அளிக்கப்பட்டன.

மின் நிதிநிலை அறிக்கைகள் (e–Budget) பேரவையில் அளிக்கப்படும்போது, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக ஒவ்வோர் உறுப்பினரின் மேசைகளிலும் All–in–One PC–க்களும், கையடக்க கணினியும் பொருத்தப்பட்டு நிதிநிலை அறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

பேரவையில் பத்திரிகையாளர்களின் வசதிக்காக பெரிய திரை கொண்ட Display Panels நிறுவப்பட்டு உரிய பகுதிகள் காட்சிப்படுத்தப்பட்டன. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொடுதிரை கையடக்க கணினியில் PDF வடிவிலும் நிதிநிலை உரைகளைக் காணும் வகையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

"காகிதமில்லா சட்டமன்றம்" திட்டத்தினைச் செயல்படுத்திடும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கையடக்க தொடுதிரை கணினி (Samsung S7+ Tablet) மற்றும் அதில் பொருத்தக்கூடிய சிம் கார்டுகள் வழங்கப்பட்டன. கையடக்கக் கணினியின் செயல்பாடு மற்றும் ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்வது குறித்த கணினிப் பயிற்சி 7–9–2021 மற்றும் 9–9–2021 ஆகிய நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டது.

"காகிதமில்லா சட்டமன்ற"–த்தின் ஒரு பகுதியாக மத்திய அரசின், தேசிய இ–விதான் செயலி (National e–Vidhan Application–NeVA) திட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் செயல்படுத்தப்பட்டு, Live Digital House என்ற செயல்பாடு 12–4–2023 முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, நான்கு கூட்டத் தொடர்கள் Live Digital House முறையில் நடத்தப்பட்டன.

Live Digital House முறை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, மாண்புமிகு உறுப்பினர்களின் மேசைகளின்மேல் பொருத்தப்பட்டுள்ள தொடுதிரை சிறு கணினிகளில் மின்–புத்தகம் (e–Book) என்ற Module–செயலி உருவாக்கப்பட்டு, இதனைப் பயன்படுத்துவதற்கான பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியன அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உருவாக்கப்பட்டு உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. பாராளுமன்ற அமைச்சகத்தின் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இச்செயலக அலுவலர்கள்மூலம் பேரவை மண்டபத்தில் மின்–புத்தக செயலி பயன்படுத்தும் விதம் குறித்து உறுப்பினர்களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பெற்றது. பேரவையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், House Controller Module மற்றும் Display Unit Module ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் உரையாற்றும் உறுப்பினர் பெயர், புகைப்படம், பேசும் பொருள், துறை, உரையாற்றும் நேரம் உள்ளிட்டவற்றை பேரவை மண்டபத்தில் பொருத்தப்பட்டுள்ள ஆறு பெரிய திரைகளில் காண வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தேசிய இ–விதான் செயலி (National e–Vidhan Application–NeVA) திட்டம்மூலம் Live Digital House முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதற்கு மத்திய அரசின் பாராளுமன்ற அமைச்சகம் தனது பாராட்டினைத் தெரிவித்துள்ளது.



தேசிய இ–விதான் திட்டத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறந்த முறையில் விரைந்து செயல்படுத்தியமைக்காக பாராட்டுச் சான்றிதழ்

அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களுக்கு நவீன மேசை கணினிகள் வழங்குதல்

தமிழ்நாட்டின் அனைத்து 234 சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகங்களில் இ–சேவை மையங்களைத் தொடங்கி வைத்து, அம்மையங்களுக்கான நவீன மேசை கணினிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20–10–2022 அன்று தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென நவீன மேசை கணினிகள் வழங்கப்பட்டன.

இ–விதான் இணைய முகப்பில் பேரவை நடவடிக்கைகளின் நிகழ்நேர ஒளிபரப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2023–2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை அளித்தல் ஆகியவை தேசிய இ–விதான் திட்ட செயலியின் இணைய முகப்பில் (NeVA Portal) நிகழ்நேர ஒளிபரப்பு (Live streaming) செய்யப்பட்டது. மேலும், வினாக்கள்–விடைகள் நேரமும் Live streaming முறையில் நாள்தோறும் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.





தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் டிஜிட்டல் ஹவுஸ் (Digital House) முறையின் செயல்பாடு





தேசிய இ–விதான் செயலி – இ–புத்தகம் பயன்பாடு குறித்த செயல் விளக்கம்



தேசிய இ–விதான் திட்டத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
சிறந்த முறையில் விரைந்து செயல்படுத்தியமைக்காக
ஒன்றிய அரசின் பாராட்டுச் சான்றிதழ்

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்றப் பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதன்முறையாக, 6-1-2022 மற்றும் 7-1-2022 ஆகிய இரண்டு நாட்களிலும் வினாக்கள்-விடைகள் நேரம் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதல் சேனல் (Landing Channel) மற்றும் தூர்தர்ஷன்மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

மேலும், 7-1-2022 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. Youtube, Twitter, Facebook போன்ற சமூக ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலமாக வீடியோ தொகுப்பும் வழங்கப்பட்டது.

8-2-2022 அன்று நடைபெற்ற NEET தேர்வு விலக்கு தொடர்பான சிறப்புக் கூட்ட நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

மேலும், 18-3-2022 முதல் 24-3-2022 வரை, 6-4-2022 முதல் 10-5-2022 வரை, 17-10-2022 முதல் 19-10-2022 வரை, 9-1-2023 முதல் 13-1-2023 வரை, 20-3-2023 முதல் 21-4-2023 வரை, 9-10-2023 முதல் 11-10-2023 வரை மற்றும் 13-2-2024 முதல் 22-2-2024 வரையிலான கூட்டத் தொடர்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைப்படி அனுமதிக்கப்பட்ட பேரவை நிகழ்வுகளும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

18-11-2023 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத் தொடரில் ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட சட்டமுன்வடிவுகளை மறு ஆய்வு செய்தல் தொடர்பான பேரவை நிகழ்வுகள் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கென பிரத்யேகமாகத் தொடங்கப்பட்ட Youtube Channel-லிலும் 4-5-2022 முதல் பேரவை நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு பேரவை நிகழ்வுகளின் தொகுப்பு

அன்றாட சட்டமன்ற நிகழ்வுகளின் தொகுப்பினை செவித்திறன் பாதிக்கப்பட்டவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் (Sign Language Interpreters) மூலமாக சைகை மொழியில் பத்து நிமிடங்கள் கொண்டதாக செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலமாக ஒளிப்பதிவு செய்து, ஊடகங்கள் ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு 28-3-2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட ஒளிப்பதிவு செய்யும் நிகழ்வு, 17-4-2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறையில், மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையில் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 18-4-2023 முதல் 21-4-2023 வரை, 9-10-2023 முதல் 11-10-2023 வரை மற்றும் 18-11-2023 மற்றும் 13-2-2024 முதல் 22-2-2024 வரை ஆகிய நாட்களில் தகுதி வாய்ந்த சைகை மொழிபெயர்ப்பாளர், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் மூலமாக அனுப்பப்பட்டு ஒவ்வொரு நாளும் நடைபெற்ற கூட்ட நிகழ்வு 10 நிமிடங்கள் கொண்டதாக சைகை மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, You Tube Channel மூலமாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.



✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சட்டமன்ற ஆவணங்களின் மின்னுருவாக்கம்

தமிழக சட்டமன்றம் நூறாண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து பல்வேறு வரலாற்று சாதனைகளைப் படைத்து இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இத்தகைய பாரம்பரியப் புகழ்மிக்க சட்டமன்றத்தில் நவீன கால தொழில்நுட்பங்களைப் புகுத்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய சட்டமன்றக் கடமையினை மிகவும் எளிதாகவும், திறமையாகவும் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த அடிப்படையில் சட்டமன்ற நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு, 'காகிதமில்லா சட்டமன்றம்' உருவாக்க சட்டமன்ற உறுப்பினர்களது மேசைகளில் சிறு கணினிகள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கையடக்கக் கணினிகள் மற்றும் தொகுதி அலுவலகங்களில் செயல்படும் இ–சேவை மையத்தின்மூலம் மக்களுக்குச் சேவையாற்ற All–in–one PCs, மின்–நிதிநிலை அறிக்கை, மின்–வேளாண்மை நிதிநிலை அறிக்கைகள் அளித்தல் ஆகிய பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு பகுதியாக, 1921 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையிலான தமிழக சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் தொடர்பான விவாத நடவடிக்கைக் குறிப்புகள் உட்பட வரலாற்று நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்ற முக்கியமான சட்டமன்ற ஆவணங்கள் அனைத்தையும் மின்னுருவாக்கம் செய்வதென 13–8–2021 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அப்பணிகள் ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் மேற்கொள்ளப்பட்டு, முடிவுறும் கட்டத்தில் உள்ளன. விரைவில் இப்பணிகள் முடிவுற்று, அனைவருக்கும் பயனளிக்கின்ற வகையில் சட்டப் பேரவை வலைதளத்தில் ஆவணங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்படும்.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

சென்னை அரசு மைய அச்சகத்திற்கு வாழ்த்துகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களது தலைமையில் அமைக்கப்பட்ட '**சட்டமன்ற நாயகர்–கலைஞர்**' விழாக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட முக்கிய பிரமுகர்களின் வாழ்த்துகள், கட்டுரைகள் மற்றும் சட்டமன்றச் செயலக நிருபர் பிரிவினால் தொகுத்து வழங்கப்பட்ட இதர முக்கிய ஆவணங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை மிகவும் அழகிய முறையில் வடிவமைப்பு செய்து, அதனை நூற்றாண்டு விழா மலராக அச்சிட்டு, மிகக் குறுகிய காலத்தில் இப்பேரவைச் செயலகத்திற்கு வழங்கிய அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் மற்றும் அச்சகப் பணியாளர்கள் அனைவரையும் 'சட்டமன்ற நாயகர்–கலைஞர்' விழாக் குழு மனதாரப் பாராட்டுகிறது.

சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடர்பான பணிகள், நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பணிகள், தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளினால் வழங்கப்பட்ட பணிகள் ஆகிய பல்வேறு பணிச் சுமைகளுக்குமிடையிலும், பகலிலும், இரவிலும் பணியாளர்களை நியமித்து, அச்சுப் பணிகளைத் திறம்படக் கையாண்டு இம்மலர் சிறப்பாக வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்து சேவையாற்றிய அரசு மைய அச்சக உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் சட்டப் பேரவைச் செயலகம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இம்மலர் சிறப்பாக வெளிவர முழுமையான ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் அவர்களுக்கும், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் ஆணையர் அவர்களுக்கும், செய்தித் துறையின் இயக்குநர் மற்றும் இதர அலுவலர்களுக்கும் சட்டப் பேரவைச் செயலகம் மனமார்ந்த நன்றியினைப் பதிவு செய்கிறது.

✧ ✧ ✧ ✧ ✧ ✧ ✧

நன்றி !!!

சட்டமன்ற நாயகர்–கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிடப்படும் இச்சிறப்பு மலர் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் சிறப்பாக உருவாக்கப்பெற்றுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்தும், கிடைக்கப்பெற்ற இதர ஆவணங்களிலிருந்தும் திரட்டப்பெற்ற தகவல்கள், புள்ளிவிவரங்கள், புகைப்படங்கள் இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன.

விழாக் குழுவின் கோரிக்கையை ஏற்று கட்டுரைகளை உவந்தளித்த கட்டுரையாளர் பெருமக்களுக்கு குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

இச்சிறப்பு மலர் செவ்வனே அமைந்திட பல்வேறு யோசனைகள் வழங்கி சிறப்பாக மலர் அமைந்திட உதவிய மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு நன்றிகள் பலப்பல. விழா மலர் வரலாற்று ஆவணமாகத் திகழும் வகையில் வடிவமைத்திட்ட குழு உறுப்பினர்களுக்கும், விழா மலரினை சிறப்பாகத் தொகுத்து, குறுகிய காலத்தில் அச்சிட்டுப் பெற்ற திரு. ந. இரவிசந்திரன், கூடுதல் செயலாளர் (விவாதப் பதிப்பாளர்) அவர்களுக்கும் நன்றி.

இம்மலருக்குத் தேவையான புகைப்படங்களை அளித்து உதவிய செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறைக்கு நன்றி.

மலரினை அழகுற வடிவமைத்து அச்சிட்டு வழங்கிய அரசு மைய அச்சகத்திற்கு விழா குழுவின் சார்பாக நன்றி.



சட்டமன்றப் பேரவைச் செயலகம் சார்பில்
மலர் ஆக்கம்–தொகுப்பு

முனைவர் கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்,

மற்றும்

நிருபர் பிரிவு அலுவலர்கள்,
நிருபர்கள்
சட்டமன்றப் பேரவைச் செயலகம்

அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.